பல்வேறு கோரிக்கைகளைக்கொடுத்திருக்கிறார்.துறைரீதியாகஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுப்பதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று செயல்படுத்தப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அதேநேரத்தில், இங்கிருக்கிற மாண்புமிகு உறுப்பினர்களுடைய அதிகப்படியான கேள்வி என்னவென்றால், நான் கூட்டுறவுத் துறை அமைச்சர் என்ற அடிப்படையில் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களுடைய வளர்ச்சி மற்றும் அவற்றின் செயல்பாடுகள் இவற்றையெல்லாம் விட்டு விட்டு, பகுதிநேரக் கடைகள் அமைக்க வேண்டும் என்றுதான் அதிகமான கேள்விகள் வருகின்றன. எனவே, மாண்புமிகு முதலமைச்சரிடத்திலே நான் இதை எடுத்துச்சொல்லி, எங்கள் துறையின் மூத்த அதிகாரிகளை அழைத்து பேசுகின்றபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எந்தெந்தப் பகுதிகளிலெல்லாம் 50 கார்டுகள், 60 கார்டுகள், 100 கார்டுகள் இருக்கின்றனவோ, கிராமங்கள் தாண்டி, 2 கிலோ மீட்டர், 3 கிலோ மீட்டர் தூரம் வந்து பொருட்களை வாங்குகிறார்கள் என்றால், அதையெல்லாம் consider செய்து நகரும் கடைகளாகக் கொண்டுவருவதற்கு ஆய்வு செய்யுங்கள் என்று சொல்லியிருக்கிறார். எனவே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை அரசு தீவிரமாகப் பரிசீலித்து, நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது. அதிவிரைவிலே நல்ல பதில் இந்த மாமன்றத்திலே மாண்புமிகு முதலமைச்சருடைய அனுமதியைப் பெற்று நிச்சயமாக அறிவிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 108, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

108—

மின்மாற்றியைத் தரம் உயர்த்துதல்

***27280—திரு. எஸ்.ஆர். இராஜா:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, சிட்லப்பாக்கம் பேரூராட்சி, 15–வது

வார்டு, சுந்தரம் காலனியில் உள்ள மின்மாற்றியைத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதி, சிட்லப்பாக்கம் பேரூராட்சி, 15–வது வார்டு, சுந்தரம் காலனிக்கு ஏற்கெனவே, Station Border Road–ல் உள்ள 500 KVA மின்மாற்றி வழியாக மின் விநியோகம் செய்யப்பட்டு வந்துகொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுள்ளவாறு, சுந்தரம் காலனியில் மேலும் ஒரு புதிய 100 KVA மின்மாற்றி 15–11–2018 அன்று நிறுவப்பட்டு அதன்மூலம் மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அது தற்போது அந்தப் பகுதியில் நிலவிடும் மின் தேவையைப் பூர்த்தி செய்யப் போதுமானதாக உள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா அவர்கள்.

திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்தக் கேள்வி கேட்கப்பட்டதாலே அந்தப் பகுதியிலே இந்தப் பணிகளெல்லாம் நடைபெற்றன. முன்னாள் நகர மன்ற உறுப்பினர் திரு. சுரேஷ் அவர்களும், நலச் சங்கத்தின் நிருவாகிகளும் வைத்த கோரிக்கையை ஏற்று, மின் துறை அந்தப் பணியைச் செய்து முடித்திருக்கிறார்கள். இன்னும் அந்தப் பகுதியிலே மின் துறை சார்பாக பல மின்மாற்றிகள் அமைக்கும் பணி வேகமாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இன்னும், விரைவாக அந்தப் பணியெல்லாம் நடைபெற்றால், தாம்பரம் தொகுதி, சிட்லப்பாக்கம் பகுதி மக்களுக்கு ஒரு நல்ல வாய்ப்பாக இருக்கும். பழைய பெருங்களத்தூர் பகுதியிலே 33/11 KV துணை மின் நிலையம் அமைக்கும் பணிக்கு நிலம் எடுக்கப்பட்டது. அந்தப் பணி இன்னும் தொடங்கப்படாத ஒரு நிலை இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். அதுபோல, விதி 110–ன்கீழான மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பில், தாம்பரம் மற்றும் பல்லாவரம் செயற்பொறியாளர்

அலுவலகத்தைப் பிரிப்பது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலே அறிவித்தார்கள். இன்றைக்கு வேகமாக வளர்ந்து வருகின்ற பகுதிகளிலே தாம்பரமும் ஒன்று. நீங்கள் எதிர்பார்ப்பதற்கும் மேலாக, 40 சதவீதத்திற்கு மேல் growth இன்றைக்கு இருக்கிறது. எனவே, அதிகமான மின் தேவை இருக்கிறது.

ஆகவே, தாம்பரம் மற்றும் பல்லாவரம் செயற்பொறியாளர் அலுவலகத்தைப் பிரித்து, தனியாக பல்லாவரத்திற்கு ஒரு செயற்பொறியாளர் அலுவலகம் தொடங்கிவிட்டால், தாம்பரத்திற்கு போதுமான அலுவலர்கள், போதுமான அதிகாரிகள் இருப்பதால் பணி சிறப்பாக நடைபெறுவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, அமைச்சர் அவர்கள் செய்து கொடுப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல, சென்னை மாநகரம் முழுவதிலுமே, அதிகமான மின்தடங்களில் உள்ள மின்மாற்றிகளை மாற்றிக் கொண்டிருக்கிறோம். தாம்பரம் பகுதியில் மட்டும் கிட்டத்தட்ட, 100 மின்மாற்றிகள் மாற்றப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரண்டு கேள்விகளை வைத்திருக்கிறார்கள். 33/11 kv துணை மின் நிலையம் அமைப்பதை வேகப்படுத்த வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதை நாங்கள் உடனடியாக ஆய்வு செய்து அந்தப் பணிகளை வேகப்படுத்துகின்றோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த பல்லாவரம் மற்றும் தாம்பரம் செயற்பொறியாளர் அலுவலகங்களைப் பிரிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பணியையும் நாங்கள் உடனே தொடங்கவிருக்கிறோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா அவர்கள்.

முற்பகல் 10–20

திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, underground cable அமைக்க வேண்டும் என்று நீண்டகாலமாக

நாங்கள் கோரிக்கையாக வைத்துக்கொண்டிருக்கிறோம். இப்போது தாம்பரம் தொகுதியில், தாம்பரம் நகராட்சிப் பகுதி, செம்பாக்கம் நகராட்சிப் பகுதி, சிட்லபாக்கம் நகராட்சிப் பகுதிகளிலே அந்தப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இவற்றைவிட வேகமாக வளர்ந்து வருகிற பகுதி பெருங்களத்தூர் மற்றும் பீர்க்கன்கரணை பகுதிகளாகும். அந்த இரண்டு பகுதிகளும் விடுபட்டிருக்கின்றன. அவற்றையும் உடனடியாக சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தாம்பரத்தில் இப்போது விபத்துகள் அதிகமாக நடைபெறுகின்றன. கம்பங்கள் சரியில்லை, Cables எல்லாம் மிகவும் low ஆக இருக்கின்றன, பல உயிர்ச் சேதங்கள் நடந்தன என்பதும் உங்களுக்குத் தெரியும். ஆடு மாடுகளும் இறக்கக்கூடிய நிலை இருக்கிறது. அதிகமாக விபத்துகள் நடக்கின்றன. எனவே, உடனடியாக பழுதுபட்ட அந்த மின் கம்பங்களையெல்லாம் மாற்றி, எங்கெல்லாம் low ஆக wires செல்கின்றனவோ அவற்றையெல்லாம் உடனடியாக மாற்றித் தருவதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்து கொடுப்பார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்த தாம்பரம் பகுதியில் மட்டும் 1,230 கிலோ மீட்டர் தூரத்திற்கு புதைவடத்தடமாக மாற்றுவதற்குண்டான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. கிட்டத்தட்ட 353 கோடி ரூபாய் estimate—ல் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. விரைந்து அந்தப் பணிகளை முடிப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய பெருங்களத்தூர் பகுதியிலும், வரும் காலத்திலே—ஏனென்று சொன்னால், இப்பொழுது சென்னை மாநகரம் முழுவதுமே நாங்கள் அதை அமைக்க வேண்டுமென்பதற்காக பெரம்பூர் கோட்டத்தையும், தாம்பரம் கோட்டத்தையும் எடுத்திருக்கின்றோம். அடுத்தகட்டமாக அந்தப் பணிகளை மேற்கொள்ளவிருக்கின்றோம்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கம்பங்கள் சேதமடைந்திருக்கின்றன, மின் கம்பிகள் தாழ்வாகச் செல்கின்றன என்று சொன்னார்கள். நான் மானியக் கோரிக்கையிலேயே சொன்னேன். கிட்டத்தட்ட 6,500 கிலோ மீட்டர் தூரத்திற்கு புதிய

மின் கம்பிகள் மாற்றப்பட்டிருக்கின்றன. கிட்டத்தட்ட 35,000 மின் கம்பங்கள் மாற்றப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற அந்தப் பகுதியில் தாழ்வழுத்தக் கம்பிகள் இருந்தனவென்று சொன்னால், உடனடியாக ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள்.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2017 ஆம் ஆண்டு நான் கேட்ட கேள்வி குறித்த கோரிக்கை. RMU எனப்படுகின்ற Ring Main Units அமைக்கும் புதிய திட்டம் இரண்டாண்டு காலமாக தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி 110–ன்கீழ் அறிவித்த அறிக்கையிலேயே, ஒட்டுமொத்தமாக சென்னையிலே இருக்கின்ற pillars பொருத்தப்பட்ட உயர் மின்னழுத்த மாற்றிகளை மாற்றி, RMU அமைக்கப்படும் என்று அறிவித்திருந்தார்கள். துறைமுகம் தொகுதியில் 300 மின்மாற்றிகள் இருக்கின்றன. அவை காலப்போக்கில் மாற்றப்படும் என்று அறிவித்து 2 ஆண்டுகள் முடிவடைந்துவிட்டன. ஆகவே, மீண்டும் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அந்த மின்மாற்றிகளை மாற்றி, RMU–Ring Main Unit என்கின்ற அந்த latest technology கொண்ட மின்மாற்றிகளை அமைத்துத் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டுக் கொள்கிறேன். இது 2017 ஆம் ஆண்டு கேட்ட கேள்வி என்பதை நினைவுபடுத்தி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியது உண்மை. 2017–ல் tender–ஒப்பந்தம் கோரப்பட்டு, சிலர் நீதிமன்றம் சென்ற காரணத்தினால் அது இப்பொழுதுதான் முடிந்து, ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் ஒரு மாத காலத்திற்குள் ஒப்பந்தப் பணிகள் முடிந்து, பணிகள் துவங்கும். விரைந்து அந்தப் பணிகளை முடிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2020 மார்ச் 17]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 109, மாண்புமிகு உறுப்பினர் திரு. சே. கருணாஸ், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

109—

சமுதாயக் கூடம்

***5769—திரு. சே. கருணாஸ்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாடனை தொகுதி, ஆர்.எஸ். மங்கலம் ஊராட்சி ஒன்றியம், சனவேலி கிராமத்தில் சமுதாயக் கூடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவாடனை தொகுதி, ஆர்.எஸ். மங்கலம் ஊராட்சி ஒன்றியம், சனவேலி ஊராட்சியில் சமுதாயக் கூடம் அமைப்பது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச்செல்லப்பட்டு தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சே. கருணாஸ் அவர்கள்.

திரு. சே. கருணாஸ்: தெய்வத்திருமகன் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களையும், தெய்வத் திருமகள் புரட்சித் தலைவி அம்மா அவர்களையும் நன்றியோடு நினைவுகூர்ந்து,

"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்"

என்ற வள்ளுவனின் வாக்கிற்கிணங்க, ஒரு நோய் உருவாவதற்கு முன்பாக அதைக் கண்டுபிடித்தலும், அதற்கு அடுத்தாற்போல், அந்த நோய் பரவாமல் இருத்தலும்தான் உண்மையான ஒரு மருத்துவம் என்பதை உலகுக்கு உணர்த்திய அந்த வரிகளுக்கு ஏற்ப, முதல்முறையாக இந்தியாவிலேயே 11 மருத்துவக் கல்லூரிகளைப் பெற்றுத் தந்து, (மேசையைத் தட்டும் ஒலி) அத்தனை கல்லூரிகளுக்குமான நிதிகளை ஒதுக்கி, ஒரு புரட்சிகரமான திட்டத்தை உருவாக்கிய தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு என் முக்குலத்தோர் புலிப்படை சார்பாக நெஞ்சார்ந்த நன்றிகளையும் வாழ்த்துகளையும் தெரிவிப்பதோடு, அதில் என்னுடைய திருவாடனை தொகுதியிலே ஒரு கல்லூரியைத் துவங்கி வைத்ததற்காக மீண்டும் ஒரு முறை என் தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பிலும், மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே தருணத்திலே அன்றைய காங்கிரஸ் கட்சியின் ஆட்சிக் காலத்தில், மத்தியிலே காங்கிரசும், மாநிலத்திலே திராவிட முன்னேற்றக் கழகமும் ஆட்சி செய்த அந்தத் தருணத்திலே ** தொடர்ந்து புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (குறுக்கீடுகள்) . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கருணாஸ், கேள்வியைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. நீங்கள் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரிடம் கேள்வியைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்)

முற்பகல் 10–25

திரு. சே. கருணாஸ்: கச்சத் தீவை மீட்டெடுப்பதற்காக சட்டம் நிறைவேற்றி, (குறுக்கீடுகள்) அதை மீட்டெடுப்பதற்கான சட்டப் போராட்டத்தையும் முன்மொழிவேன் என்று முடிவெடுத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு (குறுக்கீடுகள்) அதன் உரிமையாளர்களுடைய வம்சாவழி என்ற அடிப்படையிலே (குறுக்கீடுகள்) சேது சமஸ்தானத்தினுடைய மன்னர்கள் சார்பாகவும், (குறுக்கீடுகள்) எஸ்.எம். ஷெரீப் அவர்களின் சார்பாகவும் நன்றி கூறி (குறுக்கீடுகள்) எனது திருவாடனை (குறுக்கீடுகள்) (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள்

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2020 மார்ச் 17]

ஏதோ சொல்ல வருகிறார். (குறுக்கீடுகள்) என்னவென்று கேட்போம், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களுக்கு (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜேஷ் குமார், சத்தம் போடாதீர்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார், என்னவென்று கேட்கலாம், இருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார் அல்லவா! என்னவென்று கேளுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் திரு. ரங்கநாதன். (குறுக்கீடுகள்) திரு. ரங்கநாதன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இருங்கள், இருங்கள். (குறுக்கீடுகள்) கேள்வி நேரத்திலே (குறுக்கீடுகள்) திரு. கருணாஸ் (குறுக்கீடுகள்) திரு. கருணாஸ் (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள், (குறுக்கீடுகள்) உட்காருங்கள் நீங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் நீங்கள். (குறுக்கீடுகள்) திரு. கருணாஸ் (குறுக்கீடுகள்) திரு. கருணாஸ் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. கருணாஸ், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இருங்கள், இருங்கள். (குறுக்கீடுகள்) இருங்கள், இருங்கள். (குறுக்கீடுகள்) இருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

[2020 மார்ச் 17

மாண்புமிகு உறுப்பினர் திரு. கிரி, உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) திரு. கிரி, உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள், அமைதியாக அமரும்படி கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) திரு. தென்னரசு, உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள் அமருங்கள், அமருங்கள். (குறுக்கீடுகள்) அமருங்கள், அமருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் அமருங்கள். (குறுக்கீடுகள்) அமருங்கள். (குறுக்கீடுகள்) பொதுவாகவே (குறுக்கீடுகள்) இருங்கள். (குறுக்கீடுகள்) பொதுவாக (குறுக்கீடுகள்) பொதுவாக, (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. (குறுக்கீடுகள்) சொல்வதைக் கேளுங்கள், இருங்கள். (குறுக்கீடுகள்) பிறகு, எனக்கே சொல்லிக் கொண்டிருந்தால், நான் என்ன செய்ய முடியும்? மாண்புமிகு உறுப்பினர்கள் கேள்வி நேரத்திலே பேசுகின்றபோது, அவர்களின் தலைவர்களை விளித்துப் பேசுவதை நாம் அனுமதித்திருக்கிறோம். அது சாதாரணமாக நடந்து கொண்டிருக்கிறது. ஆகவே, அதுமாதிரி திரு. கருணாஸ் அவர்களும், தேவையில்லாமல், கேள்வி நேரத்திலே, கேள்விக்கான பிரச்சினைகளைத்தான் பேசியிருக்க வேண்டும். ஆகவே, அப்படி பேசாதது, முறையற்ற செயல். இனி கேள்வியை மட்டும் கேட்கும்படி கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) அதேபோல, (குறுக்கீடுகள்) இருங்கள், இருங்கள். (குறுக்கீடுகள்) இருங்கள். (குறுக்கீடுகள்) திரு. மதிவாணன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. மதிவாணன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அதேமாதிரி, திரு. கருணாஸ் பேசியதுபோன்ற செயலையே, திரு. கிருஷ்ணசாமியும் முறையற்ற முறையிலே (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, இருங்கள், இருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள், (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதி காக்க வேண்டும். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. (குறுக்கீடுகள்) கிருஷ்ணசாமி, (குறுக்கீடுகள்) நீங்கள் பேசுவது முறையில்லை. (குறுக்கீடுகள்)

முற்பகல் 10–30

நீங்கள் ஏதாவது பேசுவதாக இருந்தால், அவர் பேசியதற்கு எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டுமென்றால், நீங்கள் என்னிடம்

2020 மார்ச் 17]

அனுமதி கேட்கவேண்டும். என்னுடைய அனுமதியைப் பெற்ற பின்னர்தான், நீங்கள் பேச வேண்டும். (குறுக்கீடுகள்) இருங்கள், இருங்கள். (குறுக்கீடுகள்) அதை விடுத்து நேரடியாக நீங்கள் அவரிடத்திலே பேசுவதும், அவர் உங்களிடத்திலே பேசுவதும் முறையற்ற செயல். இது உறுப்பினர்களுக்கு அழகல்ல. இது ஒரு தேவையற்ற செயல். ஆகவே, இந்த மாதிரி நடப்பதை நான் அனுமதிக்க முடியாது. திரு. ஆ. கிருஷ்ணசாமி, உங்களுக்கு நான் தெளிவாகத் தெரிவித்துக்கொள்கிறேன். உறுப்பினர்களை ஒருமையில் பேசுவதும் நேரடியாக (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை (குறுக்கீடு) இல்லை, இல்லை. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின், உட்காருங்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கிருஷ்ணசாமி, (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கிருஷ்ணசாமி, நீங்கள் நடந்துகொண்ட முறை சரியில்லை. நேரடியாக உறுப்பினர்களிடம் பேசுவது முறையற்ற செயல். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சே. கருணாஸ், நீங்கள் அந்த பிரச்சினைகளையெல்லாம் விட்டுவிட்டு, நேரடியாகக் கேள்வி கேளுங்கள். (குறுக்கீடுகள்) இருங்கள், இருங்கள் (குறுக்கீடு) உங்கள் ஒருவருக்காக இந்த சபையை நடத்த முடியாது. பொதுவாகத்தான் சபையை நடத்த முடியும். உட்காருங்கள். திரு. எஸ். ஆஸ்டின், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. தங்கம் தென்னரசு, உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. ப. ரங்கநாதன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். குற்றச்சாட்டு இல்லை. பொதுவாகத்தான் அவர் பேசினார். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா, உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் இருங்கள். குற்றச்சாட்டு என்று சொன்னால், அதன்மீது நான் நிச்சயமாக நடவடிக்கை எடுப்பேன். (குறுக்கீடுகள்)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்று கொண்டிருந்தனர்.)

உட்காருங்கள், உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். இல்லை, உட்காருங்கள். திரு. எஸ். ஆஸ்டின், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. நான் இதுசம்பந்தமாக உறுப்பினருக்கு உரிய அறிவுரைகளை வழங்கியிருக்கிறேன். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. (குறுக்கீடுகள்) நீங்கள் நினைக்கின்ற மாதிரியெல்லாம் நான் செய்ய முடியாது, (குறுக்கீடுகள்)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தொடர்ந்து நின்று கொண்டிருந்தனர்.)

நீங்கள் நினைக்கின்ற மாதிரியெல்லாம் நான் செய்ய முடியாது (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. அதுவெல்லாம் முறையல்ல. உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு, நீங்கள் என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) இருங்கள், இருங்கள். அவர் பேசட்டும்.

திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் காலங்காலமாக காப்பற்றப்படக்கூடிய மரபு, கேள்வி நேரத்தில் யாரையும் குறிப்பிட்டு, ஒரு குற்றச்சாட்டைச் சொல்லக் கூடாது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் திரு. சே. கருணாஸ் அவர்கள், கழகத்தினுடைய பெயரைக் குறிப்பிட்டு, இங்கே கச்சத்தீவு பற்றிய பிரச்சினையில் ஒரு குற்றச்சாட்டு சொல்லியிருக்கிறார்கள். நேரடியாக அவர் பெயரைக் குறிப்பிட்டு இங்கே சொன்னதனால், அவருக்கு நாங்கள் எதிர்ப்பு தெரிவித்தோம். நீங்கள் சொன்ன அறிவுரைகளை, எல்லாத் தரப்பும் ஏற்றுக்கொள்வதிலே எங்களுக்கு மகிழ்ச்சி. நல்ல அறிவுரைகளை வழங்கியிருக்கிறீர்கள். ஆனால், அவர் குறிப்பிட்டதையும், நீங்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்பதுதான் எங்களுடைய கோரிக்கை. அதை தாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. நான் கேட்ட வரை, அவர் ஒரு குற்றச்சாட்டு போன்று அதைச் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. இருங்கள், இருங்கள். (குறுக்கீடுகள்) இருங்கள், இருங்கள். இல்லை. (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். உட்காருங்கள். முதலில் உட்காருங்கள். இல்லை, (குறுக்கீடுகள்) உட்காருங்கள். ஏற்கெனவே இந்த அவையில் பேசப்பட்ட பல்வேறு கருத்துகளின் அடிப்படையில், அவர் ஒரு பாராட்டைத்தான் தெரிவிக்கிற வகையில், (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. (குறுக்கீடுகள்) நான், (குறுக்கீடுகள்) இருங்கள், இருங்கள். வேண்டுமென்றால், அந்த அவைக் குறிப்புகளை நான் வாங்கிப் பார்க்கிறேன். (குறுக்கீடுகள்) இருங்கள், இருங்கள். நீங்கள் சொல்வதையெல்லாம் நான் கேட்டுக்கொண்டு, அப்படியே செய்ய முடியாது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

2020 மார்ச் 17]

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாகவே கேள்வி நேரத்தில் கேள்வி கேட்கப்பட வேண்டும். அதற்குரிய பதிலைத்தான் சொல்ல வேண்டும். தேவையில்லாத விவாதத்திற்குள்ளே போனால், விவாதம் அங்கேயும் இங்கேயும் மாறிமாறி வந்து கொண்டே இருக்கின்ற ஒரு அசாதாரணமான சூழ்நிலை ஏற்படும். அந்தச் சூழ்நிலைதான் இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது. அதனால், கிட்டத்தட்ட 10 நிமிடங்கள் கால விரயம் ஆகிவிட்டன. அதனால், மாண்புமிகு உறுப்பினர்கள் ஆளும் கட்சியில் இருந்தாலும், எதிர்க் கட்சியில் இருந்தாலும் கேள்வி நேரத்தில், என்ன கேள்வியைக் கேட்க வேண்டுமோ, அது தொடர்புடைய கேள்வியைத்தான் கேட்க வேண்டும். அதற்குரிய பதிலைத்தான் சம்பந்தப்பட்ட மாண்புமிகு அமைச்சர்கள் சொல்ல வேண்டுமென்பதுதான் மரபு, விதி. அதை அனைவரும் கடைபிடிக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. கருணாஸ் அவர்கள், கேள்வி நேரத்தில் இதுமாதிரி சொல்வதைத் தவிர்க்க வேண்டும். அதனால் அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. சே. கருணாஸ், நீங்கள் கேள்வியைக் கேளுங்கள்.

திரு. சே. கருணாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாடனை தொகுதி, ஆர்.எஸ். மங்கலம் ஒன்றியம், சனவேலி கிராமத்தில் சமுதாயக் கூடம் கட்டுவதற்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று நான் துறைசார்ந்த அமைச்சர் அவர்களிடத்திலே கோரிக்கை வைத்திருக்கிறேன். அதே நேரத்தில், ஒட்டுமொத்தமான திருவாடனை பகுதி, வறட்சியான ஒரு பகுதி என்பது அனைவரும் அறிந்த ஒன்றாகும். அதிலும், கடந்த சில மாதங்களுக்கு முன்பாக பெய்த மழையால் பாதிக்கப்பட்ட இடங்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய குடிமராமத்துத் திட்டத்தின் மூலமாகப் பாதுகாக்கப்பட்டாலும்கூட, அங்கே விவசாய நிலங்கள் உள்பட அனைத்திலும் கருவேல முட்கள் அதிகமாக இருக்கக்கூடிய காரணத்தால், போர்க்கால அடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்த மாவட்டம் முழுவதும் இருக்கக்கூடிய

கருவேல மரங்களை அப்புறப்படுத்துவதற்கான உத்தரவை இட வேண்டுமென்று ஒட்டுமொத்த இராமநாதபுரம் மாவட்டம், சிவகங்கை மாவட்டம் மற்றும் விருதுநகர் மாவட்டம் ஆகியவற்றின் சார்பாக நான் தாழ்மையோடு கேட்டுக்கொள்கின்றேன். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த சனவேலி கிராமத்தில் சமுதாயக் கூடம் கட்டிக் கொடுப்பதற்கு, உடனடியாக ஆட்சியரிடத்திலே தெரிவித்து, விரைவில் உருவாக்கிக் கொடுப்பதற்கு ஆவன செய்வார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாடனை தொகுதி, ஆர்.எஸ். மங்கலம் ஊராட்சி ஒன்றியம், சனவேலி ஊராட்சியில் 2,455 பேர் வசித்து வருகின்றார்கள். இந்த ஊராட்சியில் 6 குக்கிராமங்கள் இருக்கின்றன. மேற்படி ஊராட்சியில் இதுவரை சமுதாயக் கூடம் கட்டப்படவில்லை. சனவேலி ஊராட்சியில் நான்கு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள கூடலூர் கிராமத்தில் ஒரு சமுதாயக் கூடம் மக்கள் பயன்பாட்டிலுள்ளது. பொதுவாக, ஊராட்சிகளில் சமுதாயக் கூடங்கள், சட்டமன்ற உறுப்பினரின் பரிந்துரையின்பேரில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின்மூலம் கட்டப்படுகின்றன. இருப்பினும், சனவேலி ஊராட்சியில் சமுதாயக் கூடம் கட்டுவதற்கு போதுமான இடவசதி உள்ளதால், அங்கு புதிய சமுதாயக் கூடம் கட்டுவது குறித்த மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை, மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் கனிவான கவனத்திற்குக் கொண்டுசென்று, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மற்ற கோரிக்கைகள் குறித்தும் கண்டிப்பாக சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள்மூலம் ஆய்வு செய்யப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சே. கருணாஸ் அவர்கள்.

திரு. சே. கருணாஸ்: மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என் தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். 1794–ல் இதே மார்ச் மாதம் 31 ஆம் தேதி மறைந்து, கிட்டத்தட்ட 266 ஆண்டுகளுக்கு மேலாக அந்தக் காலத்திலே அந்நியர்களிடத்திலே,

2020 மார்ச் 17]

குறிப்பாக வெள்ளையர்களிடத்திலே எந்தவிதமான உதவிகளையும் பெறாமல், முழுக்க, முழுக்க தனது சொந்த பணத்திலே பச்சையப்பன் அறக்கட்டளை என்கின்ற ஒரு நிறுவனத்தை உருவாக்கி, இன்றைக்கு இந்த மாமன்றத்திலே முதன்முறையாக முதலமைச்சராக வரக்கூடிய பேரறிஞர் அண்ணா அவர்களைக் கண்டெடுத்த அந்தக் கல்லூரியினுடைய தாளாளர் பச்சையப்ப அகமுடைய முதலியார் அவர்களுக்கு இந்த அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அரசு, வரக்கூடிய இந்த 31 ஆம் தேதி அவருடைய கல்விப் பணியையும், அவர் இந்தச் சமூகத்திற்குச் செய்த தெய்வப் பணியையும் போற்றும் வகையிலே, வரக்கூடிய சந்ததியினர்களுக்கு இதுபோன்ற நல்லெண்ணங்களை விதைப்பதற்கு நீங்கள் விதையாக இருக்க, அவருக்கு மணிமண்டபம் அமைத்து அரசு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சே. கருணாஸ், நீங்கள் கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. சே. கருணாஸ்: அரசு மரியாதை அளித்து, அரசு விழாவாக அதை எடுத்து, அவருக்கு, மிகவும் மரியாதைக்குரிய சிவந்தி ஆதித்தனார் அவர்களுக்கு இந்த அரசு எப்படி ஒரு மணிமண்டபம் அமைத்துக் கொடுத்ததோ, அதேபோன்று இந்தக் கல்வியாளர் பச்சைமுத்து அகமுடைய முதலியார் அவர்களுக்கும் அந்த இரு காரியங்களை இந்த அரசு செய்ய வேண்டுமென்று சிரம்தாழ்ந்து கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். நேரு அவர்கள்.

திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நேற்றே நான் இதைப் பற்றிக் கேட்க வேண்டுமென்று நினைத்தேன். நேற்று கொஞ்சம் தாமதமாகிவிட்ட காரணத்தால், இன்று நான் அதை கேட்கிறேன். மூலக் கேள்விக்கு சம்பந்தம் இல்லையென்று தயவுசெய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. நேரு, நீங்கள் ஒத்துழைக்க வேண்டும். இன்றைக்கு நேரமில்லை. நீங்கள் மூலக் கேள்விக்கு சம்பந்தம் இல்லாத கேள்வியைக் கேட்டு நேரத்தை வீணடிக்காதீர்கள்.

முற்பகல் 10–40

திரு. கே.என். நேரு: திருச்சியில் உள்ள பல்வேறு இடங்கள் 'Smart city' என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றன. பல இடங்களில் 'Smart city' சார்பாக மேம்பாலங்கள் கட்டப்படுகின்றன என்று இன்றைக்குக்கூட பத்திரிகைகளிலே வந்திருக்கின்றன. ஆனால், திருச்சியைப் பொறுத்தவரையில் ஓர் இடத்தில்கூட சாலைகளையோ அல்லது மற்ற பணிகளையோ செய்யாமல் அனைத்து இடங்களிலும் பூங்காக்கள் அமைப்பது, gym அமைப்பது, நடைபாதைகள் அமைப்பது என்பதைத் தவிர மற்ற எந்தப் பணிகளுமே செய்யப்படாமல் இருக்கின்றன. நாங்கள் ஆணையரை அணுகி இதை ஏன் செய்யவில்லை, இந்தச் சாலையை ஏன் போடவில்லையென்று கேட்டால், அவர்கள் இதற்கு திட்டத்திலே இடமில்லை என்று சொல்கிறார்கள். ஏற்கெனவே பாதாள சாக்கடைத் திட்டம் 1, 2, 3 என்ற பிரிவுகளிலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. கழிவுநீரகற்றும் பணி அமைப்பதற்கான இடம் தேர்வு செய்வதிலேகூட சிரமங்கள் இருக்கின்றன. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திருச்சியிலே சாலைகளை செப்பனிட்டுத் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் அமைச்சர் மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் அவர்கள் கேட்ட அந்தக் கேள்வி Smart City பற்றியது. இதில் ABD–Area Based Development என்று மத்திய அரசாங்கம் வரையறை செய்திருக்கிறது. ABD area–விற்குள் அந்த வரையறைக்குள் அந்தப் பாலம் வந்தால் நாம் எடுத்துக்கொள்ளலாம். அந்த ABD area–வைத் தாண்டிப் போனால் எடுக்க முடியாது. அதனால் இப்போது அந்த வரையறைக்குள் சாலைகள் வந்தால் நாம் எடுத்துக்கொள்ளலாம். அதிகமாக இதில் பூங்கா அமைப்பது, சாலைகள் அமைப்பது—இன்றைக்கு தி. நகரில் உலகத்தரத்தில் நியூயார்க் மாதிரி அந்த method–ல் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. முதலில் பாதாள சாக்கடைத் திட்டம் எடுத்துக்கொள்ளப்படும் என்று சொல்லியிருக்கிறேன். சுத்திகரிப்பு நிலையம் அமைப்பது குறித்து நீங்களும் ஒத்துழைத்தீர்கள் என்றால், அந்தப் பணியை வேகமாக முடித்துவிடலாம். சாலை அமைப்பதைப் பற்றி மீண்டும் ஒருமுறை

2020 மார்ச் 17]

துறை அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்டு, அங்கு பாலங்களோ, சாலைகளோ அமைப்பதற்கு வழிவகை இருக்கிறதா என்பது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கடம்பூர் ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கருணாஸ் அவர்கள் பச்சையப்ப முதலியார் அவர்களுக்கு அரசு சிறப்பு செய்ய வேண்டுமென்ற கருத்தை இங்கே தெரிவித்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் வழியிலே, இன்றைக்கு நாட்டுக்கு உழைத்த நல்லவர்களை, விடுதலைப் போராட்ட வீரர்களை, நாட்டுக்கு தன் இன்னுயிரை ஈந்த தியாகசீலர்களை, மொழிப்போர் தியாகிகளை சிறப்பிக்கும் வண்ணம், அவர்களுடைய பெயரிலே மணிமண்டபங்கள், அரசு விழாக்கள் அறிவித்து அரசு பெருமை சேர்த்து வருகின்றது. அந்த வகையிலே, பச்சையப்ப முதலியார் அவர்களைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. கருணாஸ் அவர்கள் பேசி, அவருக்கு சிறப்பு செய்ய வேண்டுமென்று கேட்டார்கள்.

1754 ஆம் ஆண்டு பெரியபாளையம் என்ற ஊரில் பிறந்து 1794 ஆம் ஆண்டு வரை வாழ்ந்தவர் பச்சையப்ப முதலியார் அவர்கள். தமிழகத்தின் கல்வி வளர்ச்சிக்காக வழிகோலிய கொடை வள்ளல் என்ற சிறப்பைப் பெற்றவர். இவர் தந்தையார் காஞ்சி விஸ்வநாத முதலியார்; தாயார் பூச்சியம்மாள் ஆவார். ஆங்கிலம் எழுதவும், படிக்கவும், கணக்கு மற்றும் வணிக முறைப் பாடங்களை முறையாகக் கற்றவர். இவர் மொத்த வணிகர்களுக்கு சரக்கு வாங்கி விற்றுக் கொடுக்கும் முகவராகப் பணியாற்றி, தன்னுடைய 16–வது வயதினிலே கொடை வள்ளலானார். அறப்பணிகளுக்குக் கொடை வழங்கினார். வரி வசூல் செயலில் இவர் ஆங்கிலேயர்களின் நன்மதிப்பைப் பெற்றார். குறுகிய காலத்திலேயே சென்னை மாகாணத்தின் சிறந்த மொழிபெயர்ப்பாளராகத் திகழ்ந்தார்.

தனது 28–வது வயதில் ஆங்கிலேயரின் நிறுவனத்தில் முக்கியப் பதவி வகித்தார். ராபர்ட் யோசப்பு சலிவன் என்பவரின் முதன்மை மொழிபெயர்ப்பாளராக ஆங்கில அரசுப் பணியேற்றார். இவர் தம் காலத்தில் அறப்பணிகளுக்கு ஆயிரக்கணக்கில் செலவிட்டவர்.

பச்சையப்பன் அறநிலையக் காப்பாளர்கள் அறப்பணிகளையும், கல்விப் பணிகளையும் நடத்தி வருகின்றனர். பச்சையப்ப முதலியார் மிகுந்த கடவுள் பற்றுடையவர். இவர் செய்த அறப்பணிகள் பல. காஞ்சிபுரத்தில் உள்ள ஏகாம்பரேசுவரர் கோயிலில் திருமண மண்டபத்தைக் கட்டினார். இவர் பல இடங்களில் அன்ன சத்திரங்களைக் கட்டினார். சில இடங்களில் அக்ரஹாரம் கட்டினார். இவ்வாறாக, இவர் பலப் பல அறப்பணிகளையும், கணக்கில் அடங்கா கொடைகளையும் தன் வாழ்நாளில் செய்தவர். பச்சையப்ப முதலியார் தனது சொத்துகள் அனைத்தையும் கல்விக்காகவும், இறைப் பணிக்காகவும், ஏழைகளுக்காகவும் செலவிட்ட வள்ளல் ஆவார். தென் இந்தியாவில் ஆங்கிலேயரின் உதவியின்றி துவங்கப்பட்ட முதல் கல்வி நிறுவனம், பச்சையப்பர் சொத்தில் இருந்தே தொடங்கப்பட்டது.

மேலும், கன்னியாகுமரியிலிருந்து காசி வரை பல்வேறு சத்திரங்கள் செயல்படுகின்றன. தமிழகத்தில் பல்வேறு கோயில்களுக்கு திருப்பணிகளை மேற்கொண்டவர். இன்று பச்சையப்பரின் பெயரில் ஆறு கல்லூரிகளும், ஒரு பாலிடெக்னிக் கல்லூரியும், 16 பள்ளிகளும் இருக்கின்றன. மேலும், 28 கோயில்களில் அவருடைய பெயரில் அறப்பணிகள் நடக்கின்றன. அறப்பணிகளையும், கணக்கிலடங்கா கொடைகளையும் தன் வாழ்நாளில் செய்தவர். பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் படித்ததும் இதே கல்லூரியிலே. 1934–ல் இளங்கலைமானி மேதகைமை(Honours)மற்றும்அதனைத்தொடர்ந்து முதுகலைமானி பொருளியல் மற்றும் அரசியல் பட்டப் படிப்புகளை சென்னை பச்சையப்பன் கல்லூரியில் படித்தவர். அதுமட்டுமல்லாமல், எதிர்க்கட்சித் துணைத் தலைவரும் இதே கல்லூரியிலே பயின்றவர். பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளியில் ஆங்கில ஆசிரியராகப் பேரறிஞர் அண்ணா அவர்கள் பணியாற்றினார்கள். கல்விப் பணிகளையும், கோயில் திருப்பணிகளையும் தமிழகத்தில் பெரும் அறப்பணியாகச் செய்து வழிநடத்திய மாபெரும் கல்வி வள்ளல் பச்சையப்ப முதலியார் அவர்களுக்கு அவரது நினைவைப் போற்றும் வகையிலே தமிழக அரசின் சார்பில் மணிமண்டபமும், அவருக்கு அரசு விழா எடுப்பதற்கு அறிவிப்பதும் குறித்த மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

2020 மார்ச் 17]

முற்பகல் 10–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 110, மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. பரமேஸ்வரி, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

110—

கலைக் கல்லூரி

***41778—திருமதி மு. பரமேஸ்வரி:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மண்ணச்சநல்லூர் தொகுதி, மண்ணச்சநல்லூரில் கலைக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மண்ணச்சநல்லூர் தொகுதி, மண்ணச்சநல்லூரில் கலைக் கல்லூரி துவங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. பரமேஸ்வரி அவர்கள்.

திருமதி மு. பரமேஸ்வரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுதந்திர இந்தியாவில் எவரும் எட்ட முடியாத இடத்தில் கழகத்தின் கொடியை நட்டு, அரசியல் வானத்தின் அதிசயமாய், அகண்ட பாரதத்தின் மூன்றாம் பெரிய கட்சியாய், நம் திராவிட இயக்கத்தை உயர்த்திப் பிடித்த தமிழர்களின் ஒப்பற்ற தலைவர் நம் அம்மா அவர்கள் துயில் கொள்ளும் திசை நோக்கி வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) கொங்கு நாட்டுத் தங்கம், விவசாயிகளின் விடிவெள்ளி, குளங்களையெல்லாம் ஆழப்படுத்திய குடிமராமத்து நாயகன், வேளாண்மை மண்டலம் தந்த விவசாயிகளின் காப்பாளன், ஏழைகளின் எளிமையான முதல்வர், எதிரிக்கு வலிமையான முதல்வர், மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) தென்பாண்டிச் சிங்கம், மனிதநேயப் பண்பாளர், ஜல்லிக்கட்டு நாயகன், மாண்புமிகு

துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களையும் வணங்குகின்றேன். எனக்கு வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய மண்ணச்சநல்லூர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள மக்கள் அனைவரும் ஏழை எளிய குடும்பத்தைச் சார்ந்தவர்கள். இங்குள்ள மாணவிகள் அனைவரும் தங்களது பள்ளிப் படிப்பை முடித்து கல்லூரிக்குச் செல்ல வேண்டுமென்றால் மண்ணச்சநல்லூரில் செயல்படும் தனியார் கல்லூரிக்கோ அல்லது 20 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள திருச்சிக்கோதான் சென்று படிக்க வேண்டும். ஆகையினால் எங்கள் மண்ணச்சநல்லூர் தொகுதியிலேயே ஒர் அரசு கலைக் கல்லூரியை அமைத்துத் தர வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கக்கூடிய திருச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அரசுக் கல்லூரிகள் நான்கும், பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரியாக இயங்கிக்கொண்டிருக்கின்ற 1 கல்லூரியையும் சேர்த்து, ஒட்டுமொத்தமாக 5 கல்லூரிகள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. அதில், அவருடைய மண்ணச்சநல்லூர் தொகுதியின் சுற்றுவட்டாரங்களில் உள்ள அனைத்துக் கல்லூரிகளும் அடங்கியிருக்கின்ற காரணத்தினாலும், அதே நேரத்தில், ஐந்து கல்லூரிகளையும் சேர்த்து ஏற்கெனவே ஒப்பளிக்கப்பட்ட இடங்களில் 738 இடங்கள் இன்றைக்கு பூர்த்தியடையாமல் இந்த 2019–2020 ஆம் கல்வியாண்டில் காலியாக இருக்கின்றன. அதோடுமட்டுமல்லாமல், திருச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், 9 அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. அதில் ஒப்பளிக்கப்பட்ட இடங்களில் 825 இடங்கள் காலியாக இருக்கின்றன. ஆக, ஒட்டுமொத்தமாகப் பார்க்கின்றபோது, 2019–2020 ஆம் கல்வியாண்டில் திருச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், கலை மற்றும் அறிவியல் பாடப் பிரிவுகளுக்காக ஒதுக்கப்பட்ட இடங்களில் 1,563 இடங்கள் இன்றைக்கு காலியாக இருக்கின்ற சூழ்நிலை இருக்கின்றது. அதோடுமட்டுமல்லாமல்,

2020 மார்ச் 17]

சுய நிதிக் கல்லூரிகளில் 4,144 இடங்கள் காலியாக இருக்கின்றன. அதை நாம் கணக்கில் எடுத்துக்கொள்ளாவிட்டாலும்கூட, அரசுக் கல்லூரி மற்றும் அரசு உதவிபெறும் கல்லூரிகளில் 1,563 இடங்கள் இன்றைக்குக் காலியாக இருக்கின்றபட்சத்தில், புதியதாக ஓர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மண்ணச்சநல்லூர் தொகுதிக்கு தற்போதைக்குத் தேவையில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. பரமேஸ்வரி அவர்கள்.

திருமதி மு. பரமேஸ்வரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறி அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 111, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

111—

கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்

***53308—திரு. பி.எம். நரசிம்மன்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டு ஒன்றியம், கோணசமுத்திரம் கிராமத்தில் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டு ஒன்றியம், கோணசமுத்திரம் கிராமத்தில் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என மாண்புமிகு திருத்தணி தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள்

கோரியுள்ளார்கள். புதிய கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்க குறைந்தபட்சம் 25 உறுப்பினர்கள் இருக்க வேண்டும். மேலும் முதன்மை அமைப்பாளரிடமிருந்து உரிய படிவத்தில் உரிய ஆவணங்களுடன் சமர்ப்பிக்கப்படும்பட்சத்தில் 1983 ஆம் வருட தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் மற்றும் 1988 ஆம் வருட தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க விதிகளுக்கு உட்பட்டு புதிய நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்க பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன் அவர்கள்.

திரு. பி.எம். நரசிம்மன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்கு கை கொடுத்து உதவ வேண்டும் என்பதற்காகவும், நெசவாளர்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்க வேண்டும் என்பதற்காகவும் 1983 ஆம் ஆண்டில் இலவச வேட்டி சேலை திட்டத்தைக் கொண்டு வந்து சரித்திர சாதனை படைத்தவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10–50

அதே வழியில், கைத்தறி நெசவாளர்களுக்கு 200 யூனிட் இலவச மின்சாரம், விசைத்தறி நெசவாளர்களுக்கு 750 யூனிட் இலவச மின்சாரம் என அள்ளித் தந்திட்டவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இரு பெரும் தலைவர்களின் வழியில், கைத்தறி மற்றும் விசைத் தறி நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம் வழங்கும் திட்டத்திற்கு மானியமாக சுமார் 360 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து விவசாயியாக மட்டுமல்ல, நெசவாளர்களின் ஏந்தலாக, நண்பனாக, தினம் தினம் அற்புதமான திட்டங்களைத் தீட்டி வருகிறார் சேலத்து தங்கம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் புதியதாக கூட்டுறவுச் சங்கம் தொடங்க பரிசீலிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அனைத்து தகுதிகளும் கோணசமுத்திரம் கிராமத்தில் இருக்கிற நெசவாளர்களுக்கு இருக்கின்றன. சுமார் 100 கைத்தறிகள் அங்கே செயல்பட்டு வருகின்றன. ஒரு கூட்டுறவுச் சங்கம்கூட கோணசமுத்திரம் கிராமத்திலே இல்லை. எனவே, மறு

2020 மார்ச் 17]

பரிசீலனை செய்து கோணசமுத்திரம் கிராமத்தில் விரைவாக ஒரு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தைத் தொடங்க வேண்டும் எனவும், நான் சார்ந்திருக்கிற திருத்தணி தொகுதியில் நெசவாளர்கள் வாழ்கிற பகுதிகளான பொதட்டூர்பேட்டை மற்றும் அம்மையார்குப்பம் ஆகிய பகுதிகளில் அரசு நிலங்கள் இருக்கிற காரணத்தினால், கைத்தறி மற்றும் விசைத்தறி ஜவுளிப் பூங்கா அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியுள்ள சங்கம் தொடங்குவது குறித்து விதிகளின் அடிப்படையில் கனிவுடன் பரிசீலிக்கப்படும் என்கிற விவரத்தை நான் ஏற்கெனவே தெரிவித்திருக்கிறேன். உரிய விண்ணப்பம் வரப்படுமாயின் உரிய முறைப்படி கண்டிப்பாக பரிசீலிக்கப்படும் என்பதை மீண்டும் ஒரு முறை தெரிவித்துக்கொள்கிறேன். ஜவுளிப் பூங்கா ஒன்று வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியுள்ளார்கள். அரசு என்றைக்குமே நெசவாளர் பெருமக்களுடைய கோரிக்கையை கனிவுடன் பரிசீலிப்பதற்குத் தயாராக இருக்கிறது. மத்திய அரசு 40 சதவிகிதம் அல்லது 40 கோடி, மாநில அரசு, மாண்புமிகு அம்மாவினுடைய அரசு 9 சதவிகிதம் அல்லது 9 கோடி, ஆக 49 சதவிகித பங்குகளை நிதியுதவியாக மத்திய மாநில அரசுகள் தரத் தயாராகக் காத்திருக்கின்றன. அங்கே பூங்கா அமைத்துத் தர வேண்டும் என்று விண்ணப்பிக்கிறவர்கள், அதனுடைய பயனீட்டாளர்கள் 51 சதவிகித நிதியை சொந்தமாகவோ அல்லது வங்கிக் கடனாகவோ முதலீடு செய்ய வேண்டும். அதற்கு நீங்கள் முன்வருவீர்கள் என்று சொன்னால், அதற்குரிய விண்ணப்பத்தினை மாவட்ட ஆட்சியர் மூலமாகத் தருவீர்கள் என்று சொன்னால், மாண்புமிகு அம்மாவினுடைய அரசு பரிவோடு, கனிவோடு பரிசீலனை செய்து, ஆவன செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள். (குறுக்கீடு) இன்னொரு கேள்வி இருக்கிறதா? சரி, சொல்லுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன் அவர்கள்.

திரு. பி.எம். நரசிம்மன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சார்ந்திருக்கிற திருத்தணி தொகுதியில், விவசாயத்திற்கு அடுத்தபடியாக நெசவுத் தொழில் இருக்கிறது. எனவே, அரசுக்கு எவ்வித கடன் பாக்கியுமின்றி, பல விசைத்தறி கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இத்தகைய கூட்டுறவுச் சங்கங்களுக்கு உற்பத்தித் திட்டம் வழங்கப்படாமல் உள்ளது. இத்தகைய விசைத்தறி கூட்டுறவுச் சங்கங்களுக்கு உற்பத்தித் திட்டம் வழங்க மாண்புமிகு அம்மாவினுடைய அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விசைத்தறி நெசவாளர்களுக்கு போதிய அளவு உற்பத்தித் திட்டம் வழங்கப்பட வேண்டும் என்று கோரியுள்ளார்கள். கடந்த காலத்தில் திருவள்ளூர் மாவட்டத்தில் விசைத்தறி நெசவாளர் பெருமக்கள், அரசு மூலமாகப் பெற்றிருக்கிற நிதிகளைப் பயன்படுத்தி, உதவிகளைப் பயன்படுத்தி, உரிய முறையில் தொழிலைச் சிறப்பாகச் செய்து, நடைமுறையில் நல்லவிதமாக அவர்கள் நடந்துகொள்ளாத காரணத்தினால், துறை சார்ந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

முற்பகல் 10–55

இதுபோன்ற நிகழ்வுகள் நிகழாமல் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பார்த்துக்கொள்வார் என்றால், அவர் வேண்டியிருக்கிறபடி விசைத்தறி நெசவாளர்களுக்கான அனைத்து உதவிகளும் செய்து தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் நகரத்தைச் சுற்றியிருக்கிற கிராமங்கள் நெசவாளர்கள் நிறைந்திருக்கின்ற பகுதி. குடியாத்தம் முழுக்க முழுக்க நெசவாளர்கள் இருக்கிற ஊர். ஒரு வரலாற்று செய்தியைச் சொல்கிறேன். இன்றைக்கு பறந்துகொண்டிருக்கிற தேசியக்

2020 மார்ச் 17]

கொடியை இதே குடியாத்தத்திலிருக்கிற நெசவாளர்கள் நெய்துதான் புதுதில்லிக்கு அனுப்பினார்கள். அந்தக் கொடிதான், சுதந்திரம் பெற்றபோது செங்கோட்டையில் ஏற்றப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவ்வளவு பெருமை வாய்ந்த நெசவாளர்கள் இருக்கின்ற பகுதி. அந்தப் பகுதியில் ஒரு தொழில்பூங்காஅமைக்கவேண்டுமென்றுநீண்டநெடுநாட்களாகக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு உறுப்பினர் திரு. நரசிம்மன் அவர்களுடைய கேள்விக்கு பதிலளிக்கிறபோது, Matching grant வேண்டுமென்று கேட்டார்கள். அவர்களே நசிந்து போய் இருப்பவர்கள், வாழ்க்கையை ஓட்டிக்கொண்டிருப்பவர்கள். அவர்களிடம் Matching grant வேண்டுமென்று கேட்டால், அவர்களுக்கு எந்த grant–ம் தெரியாது. நாம்தான் அவர்களுக்காக உதவி செய்ய வேண்டும். நசிந்தவர்களுக்கு உதவுவதற்காகதான் அரசாங்கம் இருக்கிறது. ஆகையினால், அரசே அந்த Matching grant–ஐக் கொடுத்து, குடியாத்தத்தில் நெசவுப் பூங்கா ஒன்றை அமைப்பதற்கு முன்வருமா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் நம்முடைய குடியாத்தம் தொகுதியில் ஜவுளிப் பூங்கா ஒன்றை அரசே உருவாக்கித் தருமா என்கிற ஒரு வினாவை எழுப்பியிருக்கிறார்கள். உங்களுடைய ஆட்சிக் காலத்தில் என்ன விதிமுறைகள் பின்பற்றப்பட்டனவோ, அதே விதிமுறைகளின் அடிப்படையில்தான் இப்போதும் ஜவுளிப் பூங்கா அமைப்பதற்கான கொள்கைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. 49 சதவிகித நிதி உதவி நெசவாளர் பெருமக்களுக்காக வழங்கப்படுகிறது. அந்தப் பூங்கா அமைப்பதற்கு உரிய அரசுக்குச் சொந்தமான நிலம் இருக்குமேயானால், அதையும் கொடுப்பதற்கு அரசு முன்வந்திருக்கிறது. பத்திரப் பதிவு இலவசமாக செய்து கொடுப்பதற்கும் அரசு முன் வருகிறது. இதுபோன்ற பல்வேறு சலுகைகள், அணுகு சாலைகள் அமைத்துக் கொடுப்பது, மின் வசதிகள் செய்து கொடுப்பது, குடிநீர் வசதி செய்து கொடுப்பது போன்ற உதவிகளில் என்னென்ன வசதிகள் செய்து கொடுக்க முடியுமோ அனைத்து வசதிகளையும் செய்வதற்கு அரசு முன்வருகிறது. உட்கட்டமைப்பு வசதிகளைச் செய்வதற்கு, மாண்புமிகு உறுப்பினர்களாக இருப்பவர்கள், முதலீட்டாளர்கள்,

முன்வருபவர்கள், 51 சதவிகித பங்குத் தொகை போட்டால்தான், அவர்களுக்கே அது சொந்தமாக அமைந்து, தொழிலை சிறப்பாகச் செய்து, இலாபத்தை ஈட்டுவதோடு, நாட்டுக்கும் உற்பத்தியைத் தருகிற நற்செயல் நடைபெறும் என்பதால், இந்த நிலையில் இந்தக் கொள்கை வகுக்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 112, மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி, மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

112—

அரசு இணையதளத்தில் பதிவேற்றம்

***48612—திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி:**

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவெறும்பூர் தொகுதி, கிளியூர் ஊராட்சி, கிழவிளாங்குளத்தில் வசிக்கும் விவசாயிகளுக்குச் சொந்தமான 100 ஏக்கர் விவசாய நிலத்தை அரசு இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருச்சிமாவட்டம், திருவெறும்பூர்வட்டம்(ஊரகம்) நில ஆவணங்கள் முழுமையாக இணையவழிப்படுத்தப்பட்டுள்ளன. அவை, முழுமையாக இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு, 6–11–2015 ஆம் நாள் முதலே இணையவழிப் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2020 மார்ச் 17]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள்.

திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கழகத் தலைவர் அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் online–ல் அனைத்தும் பதிவேற்றப்பட்டிருக்கிறதென்று சொல்லியிருக்கிறார்கள். பட்டாக்கள் மட்டுமல்ல, அவற்றிற்குரிய சிட்டா அடங்கலும், அதில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும் என்பதுதான் விவசாய மக்களுடைய கோரிக்கையாக இருக்கிறது. அதையும் சேர்த்துச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு கேள்வி கேட்கும்போது பலபேர் என்னிடம் வந்து Server problem அடிக்கடி ஏற்படுகிறது என்று சொன்னார்கள். நாம் ஏன் online–ல் பதிவேற்றம் செய்கிறோம் என்றால், செய்யும் பணிகள் விரைவாக நடைபெறுவதற்காகதான். அதற்குரிய procedure fast ஆக நடைபெற வேண்டும் என்பதற்காகதான் அதனை பதிவேற்றம் செய்கிறோம். அடிக்கடி Server பல இடங்களில் down ஆகின்ற சூழ்நிலை ஏற்படுகின்ற காரணத்தால், நீங்கள் அதிலும் கவனம் செலுத்த வேண்டும். அது மட்டுமல்லாமல், எங்கள் நவல்பட்டு கிராமத்திற்கு 1987 ஆம் ஆண்டில் பட்டா வழங்கப்பட்டிருக்கிறது. நவல்பட்டு கிராம சர்வே எண் 350–ல் உள்ள Ceylon Colony, பாரதியார் நகரிலுள்ள மனைகளுக்கு பட்டா அடங்கல் இன்னும் கிடைக்காமலேயே இருக்கின்றன. அரசு அவற்றிலும் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று நவல்பட்டு, காவேரி நகரில் 1980 ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட 200 குடியிருப்பு வீடுகள் கட்டப்பட்டு மக்கள் வசித்துவருகிறார்கள். 1980 ஆம் ஆண்டில் சர்வே எண் 310/6 என்கின்ற எண்ணில் பத்திரப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், 1990 ஆம் ஆண்டில் அதே சர்வே எண்ணை 344/1 என அறிவித்து, அதற்கும் பத்திரப் பதிவு செய்திருப்பதாக அங்கிருக்கின்ற மக்கள் தெரிவிக்கிறார்கள்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி: தற்போது Revenue Department–ல் என்ன சொல்கிறார்கள் என்றால், இது அரசாங்கத்திற்குச் சொந்தமான இடம், இதை உடனடியாக

காலி செய்ய வேண்டும் என்று சொல்லி ஒரு notice–ஐ அனுப்பியிருக்கிறார்கள். அங்கிருக்கின்ற மக்கள் பீதியில், மன உளைச்சலில் இருந்துகொண்டிருக்கிறார்கள். So, அதற்கும் தீர்வு காணும்விதமாக நடவடிக்கை எடுப்பீர்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நில ஆவணங்களை கணினிப்படுத்தி, அவற்றினை இணையம் மூலமாக பொதுமக்களின் பயன்பாட்டிற்கு வழங்கவும், மாண்புமிகு அம்மாவினுடைய அரசிலேதான் முயற்சி எடுத்து, தமிழ் நிலம் ஊரகம், இணையவழி தமிழ்நிலம், நகர்ப்புறம், இது ஏறத்தாழ நத்தம் நில ஆவணங்கள், நகர நில ஆவணங்கள், இன்றைக்கு முழுமையாக செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள் கூறுவதைப்போல technical fault சில இடங்களிலே இருப்பது, தகவல் தொழில்நுட்பத் துறையின் சார்பாக, உடனுக்குடன் சீர்செய்யப்பட்டு வருகின்றது. ஆனால், ஆவணங்களை கணினிமயப்படுத்தி, முழுமையாக ஏறத்தாழ 305 வட்டங்களிலே 302 வட்டங்களுக்கு கணினிமயமாக்கப்பட்டிருக்கிறது. அதேபோல, manual ஆக இருந்தவற்றையெல்லாம் இப்போது computerised ஆகக் கொண்டுவந்துவிட்டார்கள். A–Register, சிட்டா, அடங்கல் எல்லாமே கொடுக்கப்பட்டு வருகின்றன. ஆகவே, technical fault–ஐ வருகிற காலத்திலே சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அதேபோல, சில இடங்களிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னபடி, மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதிக்குட்பட்ட அந்த வட்டங்களிலே நிலச் சீர்திருத்தச் சட்டத்தின்கீழே சில இடங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதிகமான நிலங்கள் வைத்திருப்பவர்களிடமிருந்து கையகப்படுத்தப்பட்டு, விவசாயிகளுக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதிலே சில அடமான நிலங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதில் என்னவென்றால், 20 ஆண்டு காலம் அவர்களுடைய பயன்பாட்டில் வைத்து, முதல் தவணைத் தொகையை அவர்கள் செலுத்தினார்கள் என்றால், F–patta என்று

2020 மார்ச் 17]

கொடுப்பார்கள். பிறகு அந்த F–patta–ஐ உறுதி செய்து, அவர்களுக்கு பட்டா மாற்றம் கணினியில் கொண்டுவந்து, அதற்குப் பிறகுதான் இணையவழியில் கொண்டுவருவோம். அதில் சில பயனாளிகள்— நீங்கள் சொன்னதற்குப் பிறகு, முழு விவரமும் நாங்கள் எடுத்தோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு வேண்டுமானால் நான் நேரில் தருகிறேன். யார், யார் முதல் தவணைத் தொகை செலுத்தாமல் இருக்கிறார்கள் என்ற விவரம் இதில் இருக்கிறது. அவர்களெல்லாம் அந்த முதல் தவணைத் தொகையை செலுத்தினால், அவர்களுக்கு பட்டா உறுதி செய்து, வீடு கட்டியிருந்தால் அல்லது அவர்கள் என்ன பயன்பாட்டில் வைத்திருந்தாலும் அவர்களுக்குக் கொடுப்பதற்கு மாண்புமிகு அம்மாவினுடைய அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள்.

திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிட்டா, அடங்கல் இந்தப் பிரச்சினை இல்லாமல் துறை சார்ந்த கேள்விதான். நிறைய இடங்களில் பட்டா ஒரு சிலருக்கு மட்டும் வழங்கியிருக்கிறார்கள், ஒரு சிலருக்கு வழங்கப்படாமல் உள்ளது. இதுபோன்று எனது தொகுதியில் பல இடங்களில் இருக்கிறது. உதாரணத்திற்கு மாநகராட்சி 7–வது வார்டில் திருவள்ளுவர் நகர், வண்ணான் படித்துறை, சந்தைப்பேட்டை மலை, அம்மாகுளம், 28–வது வார்டில் சீனிவாச நகர், 30–வது வார்டில் Military colony, தங்கேஸ்வரி நகர், கணேசபுரம், 31–வது வார்டில் பொன்னேரிபுரம், அந்தோணியார்புரம், 36–வது வார்டில் மலையடிவாரம், J.J. Nagar, 61–வது வார்டில் அண்ணா நகர், பாரி நகர், 64–வது வார்டில் வள்ளுவர் நகர், பர்மா காலனி, கூத்தப்பார் பேரூராட்சியில் பாரதிபுரம், கும்பக்குடி ஊராட்சியில் எம்.ஜி.ஆர். நகர், வாளவந்தான்கோட்டையில் குங்குமபுரம், குண்டூர் ஊராட்சியில், பர்மா காலனி, மாரியம்மன் கோவில் தெரு, எழில் நகர் என்ற பகுதியில் கன்னிமார் கோவில் தெருவில் 25 ஆண்டுகளாக வசிக்கின்ற மக்களுக்கு பட்டா வழங்கப்படாமல் உள்ளது. அதேபோன்று துவாக்குடி நகராட்சியில் தெற்கு துவாக்குடி மலை, வடக்கு துவாக்குடி மலை, இராவுத்தான் மேடு, பெல் நகர், இந்திரா நகர், முன்னாள் இராணுவத்தினர் காலனி ஆகிய இடங்களில் முழுமையாக இன்னும் கொடுக்கப்படாமல் உள்ளது. 10 பேருக்கு கொடுத்திருக்கிறார்கள். 30 பேருக்கு கொடுக்கப்படவில்லை. So, இதுமாதிரி பல இடங்களில்

இருக்கின்றது. சில இடங்களில் முழுமையாகக் கொடுக்கப்படாமல் இருக்கின்ற நிலையும் உள்ளது. எனவே, அதையும் அரசு உடனடியாக கவனத்தில் எடுத்துக்கொண்டு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலவச வீட்டுமனைப் பட்டா தொடர்பாக ஒவ்வோர் ஆண்டும் இலக்கு நிர்ணயித்து கொடுத்துக்கொண்டு வருகிறோம். குடியிருப்புகளாக ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருக்கின்ற அரசு நிலங்களில் இருப்பவர்களுக்கு பட்டா வழங்குவதற்குத்தான் நாம் One time special scheme என்று சொல்லி, regularisation– வரன்முறைப்படுத்திக் கொடுக்கிறோம். அதற்கு 318 எண்ணிட்ட அரசாணையை வெளியிட்டிருக்கிறோம். ஊரகப் பகுதிகளில் கொடுப்பதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. நகராட்சி, பேரூராட்சி, மாநகராட்சிப் பகுதிகளில் நிலத்தின் மதிப்பீடு அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் அதை அரசிற்கு அனுப்ப வேண்டுமென்று சொல்லி, அந்த நடைமுறையைப் பின்பற்றுகிறோம். அதையும் தளர்த்தி, நகராட்சி, பேரூராட்சி, மாநகராட்சிப் பகுதிகளிலுமே அரசுக்கு அனுப்ப வேண்டாம், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே, நீர்நிலைப் புறம்போக்கு, ஆட்சேபகரம் அல்லாத புறம்போக்காக இருந்து, 5 ஆண்டுகள் தொடர்ந்து, அந்தக் குடியிருப்புகளில் அவர்கள் இருந்தார்களேயானால் அவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கு அரசாணை எண் 318 வழிவகை செய்கிறது. அந்த அரசாணையில் திருத்தம் செய்து, அதனை வெளியிடுவதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே, திரும்ப அது அரசிடம் வந்து, அதனை ஆய்வுசெய்து, திரும்ப மாவட்டத்திற்கு அனுப்புவதற்கு அதிக கால அவகாசம் தேவைப்படுகிற காரணத்தினால், தற்போது அந்த விதிகளைத் தளர்த்த மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 113, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மூர்த்தி, மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

2020 மார்ச் 17]

113—

பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம்

***54253—திரு. கே.எஸ். மூர்த்தி:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பரமத்தி வேலூர் தொகுதி, மோகனூர் ஊராட்சி ஒன்றியம், மாடகாசம்பட்டி ஊராட்சி, எம். ராசாம்பாளையத்தில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களையும், தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்களையும் வணங்கி, எனது பதிலை அளிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர் தொகுதி, மோகனூர் ஊராட்சி ஒன்றியம், மாடகாசம்பட்டி ஊராட்சி, எம். ராசாம்பாளையத்தில் உள்ள பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான அடிமனை ஏதும் இல்லாத காரணத்தினால், புதிய கட்டடம் கட்ட தற்சமயம் சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மூர்த்தி அவர்கள்.

திரு. கே.எஸ். மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் கழகத் தலைவர் அவர்களை வணங்குகிறேன். பரமத்தி வேலூர் தொகுதிக்குட்பட்ட மோகனூர் ஒன்றியம், மாடகாசம்பட்டி ஊராட்சி, எம். ராசாம்பாளையத்தில் செயல்பட்டு வரும் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் சுமார் 250 உறுப்பினர்களைக் கொண்ட சங்கமாகும். இச்சங்கம், 1974 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, 46 ஆண்டுகளுக்கு மேலாக மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றது. தினமும் காலை, மாலை என இருவேளைகளிலும் 300 லிட்டருக்குமேல்

பாலை supply செய்து வருகின்ற சங்கமாகும். சிறப்பாகச் செயல்பட்டு வரும் இச்சங்கம் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகின்ற காரணத்தினால், இச்சங்கத்திற்கு பால் வளத் துறைமூலம் புதிதாக கட்டடம் கட்ட அரசு முன்வர வேண்டுமென மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்மூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர் தொகுதி, மோகனூர் ஊராட்சி ஒன்றியம், மாடகாசம்பட்டி ஊராட்சிக்குட்பட்ட எம். ராசாம்பாளையத்தில் உள்ள பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கமானது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல், 16–11–1974 முதல் செயல்பட்டு வருகின்றது. இச்சங்கம் தனியார் வாடகைக் கட்டடத்தில் மாதம் ஒன்றுக்கு 500 ரூபாய் வாடகையில் இயங்கி வருகிறது. இச்சங்கத்தில் தற்போது மொத்தம் 251 உறுப்பினர்கள் உள்ளனர். அவர்களில் 40 உறுப்பினர்கள் நாளொன்றுக்கு சராசரியாக 270 லிட்டர் பாலை கொள்முதல் செய்து, நாமக்கல் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்திற்கு அனுப்பி வருகின்றனர். இச்சங்கத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு ஏதுவாக சொந்த காலி மனையோ, நிலமோ இல்லை. இச்சங்கத்தில் 2017–2018 ஆம் ஆண்டின் இறுதி தணிக்கையின்படி 1,20,670 ரூபாய் கட்டட நிதி உள்ளது. மேலும், இச்சங்கம் 50,470 ரூபாய் இலாபத்தில் செயல்பட்டு வருகிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்ட மாவட்ட நிருவாகத்திடமிருந்து நிலம் பெற்றுத்தரும்பட்சத்தில், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் வேண்டுகோளை ஏற்று, பால் வளத் துறையின்மூலம் கட்டடம் கட்டித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மூர்த்தி அவர்கள்.

திரு. கே.எஸ். மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல அங்கு தேவையான இடம் இருக்கிறது. எனவே, அந்த இடத்தில்

2020 மார்ச் 17]

கட்டடம் கட்டித் தரவும், அதேபோன்று தமிழகம் முழுவதும் மிகச் சிறப்பாகவும், நல்ல முறையிலும் செயல்பட்டு வரக்கூடிய பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களைத் தேர்ந்தெடுத்து, விதிமுறைகளை உருவாக்கி, சிறப்புத் தொகையை ஒதுக்கி, பால் வளத் துறையின்மூலம் கட்டடங்கள் கட்டித் தருவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ராசாம்பாளையத்திற்குப் பக்கத்தில் இருக்கின்ற இடத்தைச் சொல்கிறார். அது 20-க்கு 20 உள்ள இடம். அந்த இடம் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கக் கட்டடம் கட்டுவதற்கு உகந்த இடம் அல்ல என நிருவாக ரீதியாக தகவல் வந்திருக்கின்ற காரணத்தினால், அதற்கு மாற்று இடம் பார்த்து, அந்த இடத்தை ஒதுக்கித் தரும்பட்சத்தில், பால் வளத் துறையின் சார்பாகவே அங்கு கட்டடம் கட்டிக் கொடுக்கப்படும் என்ற உறுதியைச் சொல்லி, தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டித் தர வேண்டுமென்ற கருத்து பரவலாகவே இருந்து வருகிறது. அதே கருத்தைத்தான் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் வலியுறுத்தியதன் காரணத்தினால், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று, அவர் மூலமாக அதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. சென்ற ஆண்டு மானியக் கோரிக்கையிலே, 250 புதிய பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கட்டடங்கள் கட்டுவதற்கு அறிவிப்புகள் வெளியிடப்பட்டு, தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, 200 இடங்கள் கையகப்படுத்தப்பட்டு, முதல் கட்டமாக 50 சங்கங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கான பணிகள் நடந்து வருகின்றன. மீதமுள்ள கட்டடங்களைக் கட்டுவதற்குத் தேவையான ஆய்வுப் பணிகள் நடந்து வருகின்றன. சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், எங்கெல்லாம் தனியார் வாடகைக் கட்டடத்திலோ அல்லது அரசு வாடகைக் கட்டடத்திலோ இயங்குகின்ற பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கட்டடங்கள் தேவை என்று தெரிவித்தால், அரசுக்குச் சொந்தமான இடங்கள் இருக்கும்பட்சத்தில், அதை எங்களுக்குத் தெரியப்படுத்தினால், அந்தச் சங்கங்களுக்கு பால் வளத் துறையின் மூலமாக உறுதியாக

கட்டடங்கள் கட்டிக் கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 114, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. முருகன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

114—

பேருந்து வசதி

***40917—திரு. பி. முருகன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேப்பனஹள்ளி தொகுதி, சூளகிரி ஒன்றியம், சூளகிரியிலிருந்து உலகம் கிராமம் வரை இரவு 8–30 மணிக்கு பேருந்து இயக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேப்பனஹள்ளி தொகுதி, சூளகிரி ஒன்றியம், சூளகிரியிலிருந்து உலகம் கிராமத்திற்கு 2 பேருந்துகள்மூலம் நாளொன்றுக்கு 12 நடைகள், பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களின் வசதிக்காக பள்ளி மற்றும் கல்லூரி நேரங்களிலும் மற்றும் பொது மக்களின் வசதிக்காகவும் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், இவ்வழித்தடத்தில் இயக்கப்படும் பேருந்துகளில் பயணம் செய்யும் பயணிகளின் அடர்வு சராசரியாக 50 விழுக்காடே உள்ளதால், தற்போதுள்ள பேருந்து வசதிகளே போதுமானதாகக் கருதப்படுகிறது. எனவே, தற்சமயம் வேப்பனஹள்ளி தொகுதி, சூளகிரி ஒன்றியம், சூளகிரி முதல் உலகம் கிராமம் வரை இரவு 8–30 மணிக்கு பேருந்து இயக்கிட இயலாத நிலையுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

2020 மார்ச் 17]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. முருகன் அவர்கள்.

திரு. பி. முருகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கள் கழகத் தலைவர் அவர்களை வணங்குகிறேன்.

வேப்பனஹள்ளி தொகுதி, சூளகிரியிலிருந்து உலகம் கிராமம் மற்றும் இராயக்கோட்டை வரை மாலை 6 மணிக்குமேல், அரசு பேருந்தோ அல்லது தனியார் பேருந்தோ இயக்கப்படவில்லை. எனவே, அப்பகுதியிலுள்ள சுமார் 30–க்கும் மேற்பட்ட கிராமங்களைச் சார்ந்த பொது மக்களும், விவசாயிகளும், மாணவர்களும், ஓசூர் மற்றும் பெங்களூருவுக்கு வேலைக்குச் சென்றுவரும் தொழிலாளர்களும் பேருந்து வசதி இல்லாமல் பெரிதும் அவதிப்படுகின்றனர். குறிப்பாக, வேலைக்குச் சென்றுவரும் பெண்கள் மிகவும் அவதிக்குள்ளாகிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைக் கருத்தில்கொண்டு, இப்பகுதிக்கு மாலை 6 மணிக்குமேல் இரவு 10 மணி வரை அரசுப் பேருந்துகளை இயக்க முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாலை 5–55 மணிக்கு அரசுப் பேருந்து ஒன்று சூளகிரியிலிருந்து உலகம் கிராமம் வழியாக இராயக்கோட்டை வரை, பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்களின் வசதிக்காக இயக்கப்பட்டு வருகிறது. மேலும், தனியார் பேருந்து ஒன்று மாலை 6–40 மணிக்கு சூளகிரியிலிருந்து உலகம் கிராமம் வழியாக இராயக்கோட்டை வரை பயணிகளின் வசதிக்காக இயக்கப்பட்டு வருகிறது. மேலும், சிற்றுந்து ஒன்று, இரவு 7 மணிக்கு பயணிகளின் வசதிக்காக சூளகிரியிலிருந்து உலகம் கிராமம் வரை இயக்கப்பட்டு வருகிறது. மேலும், இந்த வழித்தடத்தில் பயணிகளின் அடர்வு மிகவும் குறைவாக இருக்கின்ற காரணத்தால், இரவு 8–30 மணிக்கு பேருந்து இயக்கப்படுவது என்பது கேள்விக்குறியாக உள்ளது. இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைப் பரிசீலித்து, அந்த வழித்தடத்தில் பேருந்தை இயக்க முடியுமா என்பதை ஆய்வு செய்து, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. முருகன் அவர்கள்.

திரு. பி. முருகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கள் தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக்காலத்தின்போது, வேப்பனஹள்ளி தொகுதி, வேப்பனஹள்ளியிலிருந்து சென்னைக்கு விரைவுப் பேருந்து ஒன்று இரவு 10 மணிக்கு இயக்கப்பட்டு வந்தது. அப்பகுதி பொது மக்கள் மற்றும் கல்லூரியில் படிக்கும் மாணவர்களின் நலன்கருதி, அப்பேருந்தை மீண்டும் இயக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், சூளகிரியிலிருந்து இராமன்தொட்டிக்கு ஒரு நகரப் பேருந்தும், ஓசூரிலிருந்து பேரிகை வழியாக சின்னாரதொட்டிக்கு ஒரு நகரப் பேருந்தும் இயக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோலவே, ஓசூரிலிருந்து செல்லும் அரசு mofussil பேருந்துகளை வேலைக்குச் சென்றுவரும் தொழிலாளர்கள், பொது மக்கள் மற்றும் மாணவர்களின் நலன்கருதி, சாணமாவு பேருந்து நிறுத்தத்தில் நிறுத்தி, பயணிகளை ஏற்றி, இறக்கிச் செல்வதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

அதேபோன்று, என்னுடைய வேப்பனஹள்ளி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அதிகளவிலான கிராமங்களில், அதிகமான பேருந்து வழித்தடங்களில் பேருந்துப் போக்குவரத்து நிறுத்தப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட வழித்தடங்களைக் கண்டறிந்து, பொது மக்களுடைய நலன்கருதி, அவ்வழித்தடங்களில் பேருந்துகளை மீண்டும் இயக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய வழித்தடங்களை ஆய்வு செய்து, அங்கே பேருந்துகளை இயக்குவதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஓர் இடத்தை குறிப்பிட்டு அந்த இடத்தில் பேருந்துகளை நிறுத்தி, ஆட்களை ஏற்றி, இறக்கிச் செல்ல

வேண்டுமென்று வேண்டுகோள் ஒன்றையும் இங்கே வைத்துள்ளார். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட இடத்தில் பேருந்து நிறுத்தம் இல்லையென்று சொன்னால், புதிதாக பேருந்து நிறுத்தம் உருவாக்கப்பட வேண்டும். எனவே, அங்கே அதிகாரிகளை அனுப்பி, பேருந்து நிறுத்தம் சம்பந்தமாக ஆய்வு செய்து, பேருந்து நின்று செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அம்பேத்குமார் அவர்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

முற்பகல் 11–15

திரு. எஸ். அம்பேத்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் கழகத் தலைவர் வணக்கத்திற்குரிய அன்புத் தளபதி அவர்களை வணங்குகிறேன். வந்தவாசி முதல் சென்னை வரையிலான வழித்தடத்தில் சாதாரணப் பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. அந்த வழித்தடத்தில் பொது மக்களின் நீண்டநாள் கோரிக்கையான A.C. பேருந்து ஒன்றை இயக்க அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், வந்தவாசி to தாம்பரம் கிட்டத்தட்ட 90 கி.மீ. தூரம் உள்ள காரணத்தினால் தினசரி வேலைக்குச் செல்லும் தொழிலாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் பெருகிக்கொண்டிருக்கின்றது. அதுமட்டுமல்ல, வந்தவாசியைச் சுற்றியுள்ள பகுதிகளில் பட்டுத் துணிகள், பட்டு வேஷ்டிகள், பட்டுச் சேலைகள் நெய்யும் வியாபாரிகள் அவற்றை விற்பனைக்காக சென்னைக்கு எடுத்துச் செல்கின்றார்கள். அவர்கள் அவற்றை குளிர்சாதனப் பேருந்தில் எடுத்துச் செல்வதற்காகவும், இது பொது மக்களின் நீண்டநாள் கோரிக்கையாக உள்ளதாலும் இங்கு குளிர்சாதனப் பேருந்தினை இயக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளிர்சாதனப் பேருந்துகள் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தால் 300 கி.மீ. தூரத்திற்குமேல் உள்ள வழித்தடங்களில் மட்டும் முன்பு இயக்கப்பட்டு வந்தன. தற்போது,

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் ஆலோசனையின்பேரில் 3/2 குறைந்த தூரம் செல்லக்கூடிய புறநகரப் பேருந்துகள், குளிர்சாதனப் பேருந்துகளாகப் படிப்படியாக இயக்கப்பட்டு வருகின்றன. தற்போது, கூண்டு கட்டுகின்ற பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அந்தப் பணிகள் முடிவடைந்தபின் பேருந்துகள் வரும்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய வழித்தடத்தில் குளிர்சாதனப் பேருந்துகள் இயக்க பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 115, மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.பி. சக்திவேல், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

115—

குடமுழுக்கு

***47410—திரு. எ.பி. சக்திவேல்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிராமப்புற திருக்கோயில் திருப்பணித் திட்டத்தின்கீழ் கரிய பெருமாள்கரடு பகுதியில் உள்ள அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலைப் புனரமைப்பு செய்து, குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அறம் எனும் தமிழினத்தின் மாண்பை, அகிலத்தில் நிலைநாட்ட ஆலயங்களில் அன்னதானத் திட்டம் தந்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அன்பான வழியில் தமிழ்நாடு மாநிலத்தை மாட்சியுடன் நல்லாட்சி செய்துவரும் காவேரியின் காப்பாளர், உண்மையை மட்டுமே உரக்கப்பேசி ஊருக்கு உழைத்து வருபவர், உழவர் குலத்தின் ஒளிவிளக்கு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் அவர்களை வணங்கி, மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்கி, மாண்புமிகு பேரவைத் தலைவராகிய தங்களையும் வணங்கி, எனது பதிலினைத் தெரிவிக்கிறேன்.

2020 மார்ச் 17]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள சிறு கிராமப்புற திருக்கோயில் புனரமைப்புப் பணிகளுக்கு நிதி உதவி வழங்கிட கிராமப்புற திருக்கோயில் திருப்பணித் திட்டம் என்ற திட்டம் ஏற்படுத்தப்பட்டு, இத்திட்டத்தின்படி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசால் திருக்கோயில்களுக்கு ரூ.1 இலட்சம் நிதி வழங்கப்பட்டு வருகின்றது.

சேலம் மாவட்டம், நெத்திமேடு, கரியபெருமாள்கரடு, அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத சிறிய கிராம திருக்கோயிலாகும். எனவே, இத்திருக்கோயிலுக்கு கிராமப்புற திருக்கோயில் திருப்பணித் திட்டத்தின்கீழ் புனரமைப்பு மற்றும் கும்பாபிஷேகம் செய்ய வழிவகை இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.பி. சக்திவேல் அவர்கள்.

திரு. எ.பி. சக்திவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்கோயில்களில் அன்னதானத் திட்டம் தந்த அன்னபூரணி, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நினைவுகளைப் போற்றி வணங்கி, இதய தெய்வம் அம்மா அவர்களின் வழியில் கிராமப்புற திருக்கோயில் திருப்பணித் திட்டத்தின்கீழ் பயன்பெறும் திருக்கோயில்களின் எண்ணிக்கையை ஆயிரமாக உயர்த்தி, அறநிலையத் துறையில் ஒரு சாதனையைப் படைத்து வருகின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள், ரூ.565 கோடியில் 100 வறண்ட ஏரிகளுக்கு காவேரி உபரி நீர் நிரப்பும் திட்டத்தினைத் துவக்கி வைத்த காவேரி காப்பாளர். அண்ணன் அவர்களுக்கு ஒட்டுமொத்த சேலம் மாவட்ட மக்களின் சார்பாக நன்றியினைத் தெரிவித்து, அம்மா அவர்களின் அரசு அறிவிக்கின்ற திட்டங்களுக்கெல்லாம் துறைதோறும் நிதி ஒதுக்கி துணை நிற்கின்ற கழகத்தினுடைய ஒருங்கிணைப்பாளர் மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களையும், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அண்ணன் அவர்களையும், வாய்ப்பு வழங்கிய தங்களையும் வணங்கி மகிழ்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புற திருக்கோயில் திருப்பணித் திட்டத்தின்கீழ் ஆதி திராவிடர் காலனி பகுதியில் உள்ள திருக்கோயில்கள் மட்டும் பயன்பெற்று வருகின்றன. தற்போது, ஆயிரம் திருக்கோயில்களுக்கு இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளபடியால் ஆதி திராவிடர் காலனி மட்டுமல்லாது, கிராமப்புற எல்லை தெய்வங்களாக இருக்கின்ற செல்லியம்மன், மாரியம்மன், காளியம்மன், 18 ஆம் படி கருப்பு போன்ற சாமிகள் இருக்கின்ற திருக்கோயில்களுக்கும் திருப்பணி செய்ய இத்திட்டத்தின்கீழ் பயன்பெறும்வகையில் சட்டத்திருத்தம் செய்ய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கனிவான பார்வைக்கு மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் எடுத்துச் செல்வதோடு கரியபெருமாள்கரடு பகுதியில் உள்ள அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலுக்கும் திருப்பணி செய்ய இத்திட்டத்தின்கீழ் பயன்பெறும்வகையில் வழிவகை செய்துதர வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், கரிய பெருமாள்கரடு அருள்மிகு ஞானதண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலுக்கு மலைப் பாதை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா என்பதையும் தங்கள்மூலம் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11–20

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய கிராமப்புற திருக்கோயில் மிகவும் பழமைவாய்ந்த திருக்கோயில் என்ற காரணத்தினால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய நெத்திமேட்டில் அமைந்துள்ள அருள்மிகு ஞானதண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் நிதியினைக் கொண்டு மலைப் பாதை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. இருப்பினும், மேற்படி பணியினை மேற்கொள்ள உபயதாரர்கள் முன்வரும்பட்சத்தில் உபய திருப்பணியால் அப்பணி மேற்கொள்ளப்படும். அதற்காக பிற நிதி ஆதாரங்களை ஆராய்ந்து, இத்திருக்கோயிலுக்கு மாண்புமிகு உறுப்பினர் கோரிய மலைப் பாதை அமைக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச்

செல்லப்பட்டு, பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.பி. சக்திவேல் அவர்கள்.

திரு. எ.பி. சக்திவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாநகரம், நெத்திமேடு கரிய பெருமாள்கரடு பகுதியில் அமைந்திருக்கின்ற அருள்மிகு ஞானதண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் மிகவும் பழமையும், பெருமையும் வாய்ந்த திருக்கோயில். இத்திருக்கோயில் கரிய பெருமாள்கரட்டின் மலையின்மேல் அமைந்துள்ளது. இத்திருக்கோயிலில் கருங்கற்களால் திருப்பணி செய்வதற்கு உபயதாரர்களுக்கு அனுமதி வழங்க ஆணை வழங்கப்பட்டு, அங்கே திருப்பணியும் நடைபெற்று வருகின்றது. செவ்வாய்க்கிழமை, வெள்ளிக்கிழமை, சஷ்டி, கிருத்திகை போன்ற நாட்கள் மட்டுமல்லாமல், பங்குனி உத்திரம், சித்ரா பௌர்ணமி போன்ற விசேஷ நாட்களிலும் பக்தர்கள் அங்கே முருகப் பெருமானை தரிசனம் செய்ய ஏராளமாய் வந்து கொண்டிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்லாமல், ஆண்டுதோறும், தமிழர் திருநாளாக இருக்கின்ற தைப் பொங்கல் திருநாளில் கரிநாளுக்கு இலட்சக்கணக்கான பக்தர்கள் மலைமேல் இருக்கின்ற ஞானதண்டாயுதபாணி சுவாமியை தரிசனம் செய்ய வருகை புரிந்தவண்ணம் இருக்கின்றார்கள். ஆகவே, இந்தத் திருக்கோயிலுக்கு மலைப் பாதை என்பது அத்தியாவசியமான, அவசியமான தேவையாக இருக்கின்ற காரணத்தினால் மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் உபயதாரர்களுடைய நிதி மட்டுமல்லாமல், நெடுஞ்சாலைத் துறை நிதி மற்றும் இவற்றுடன் பிற திருக்கோயிலின் உபரி நிதியினையும் பெற்று மலைப் பாதை அமைத்துத் தர மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று எனது கோரிக்கையை நிறைவேற்றித் தருவாரா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பார்வைக்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

(அ) கொரோனா வைரஸ் நோய் பரவுதலைத் தடுப்பதற்கு மருத்துவ வசதிகளை விரிவுபடுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொரோனா நோய் தொடர்பாக அரசு அறிவித்திருக்கக்கூடிய 'வருமுன் காப்போம்' நடவடிக்கைகளை நான் உள்ளபடியே வரவேற்கிறேன். அரசினுடைய அறிவிப்பைத் தொடர்ந்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அனைத்து நிகழ்ச்சிகளும், அது எந்த நிகழ்ச்சியாக இருந்தாலும், 31–3–2020 வரை இரத்து செய்யப்பட்டிருக்கிறது என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழகத்தில் 2,221 பேர் மருத்துவ கண்காணிப்பில் இருப்பதாக சுகாதாரத் துறை அறிவித்திருக்கிறது. இந்தச் சூழ்நிலையில், மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவது மிக மிக அவசியமான ஒன்றாக அமைந்திருக்கிறது. அரசின் சார்பில் அனைத்து வசதிகளும் அரசு மருத்துவமனைகளில் உடனடியாக ஏற்படுத்த வேண்டுமென்பது கட்டாயப்படுத்தப்பட்டிருக்கிறது. நோய் அறிகுறி பற்றி கண்டறியும் ஆய்வகங்களின் எண்ணிக்கையை மேலும் அதிகரிக்க வேண்டும். தனியார் மருத்துவமனைகளிலிருந்து recommendation, பரிந்துரைக்கப்படக்கூடியவர்களின் நோய் அறிகுறிகளையும் King நிறுவன ஆய்வகம் பரிசோதனை செய்தாக வேண்டும். தனியார் ஆய்வகங்களிலும் இந்தப் பரிசோதனை செய்ய அனுமதிக்கக்கூடிய வாய்ப்பையும் அரசு ஏற்படுத்த வேண்டும். ஏழையெளிய மக்களும் இதைப் பயன்படுத்தக்கூடிய வகையில் அதற்குரிய கட்டணத்தை

நீங்களே நிர்ணயிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். விமான நிலையங்களுக்கு அருகிலேயே நோய்க்குள்ளானவர்களை தனிமைப்படுத்தி தங்க வைக்கக்கூடிய மையங்களை அனைத்து மருத்துவ வசதிகளோடு உருவாக்கிட வேண்டும். அதில் நாம் தாமதமாக இருக்கின்றோமோ என்ற ஓர் அச்சம் இன்றைக்கு இருந்துகொண்டிருக்கிறது. அதை அரசு கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாநகர் மற்றும் நகர்ப்புறங்களில் உள்ள மருத்துவமனைகளை இதற்கு பயன்படுத்துவது அவசர காலத்தில் தவிர்க்க முடியாது என்றாலும், இந்த நோய்த் தொற்றைக் கட்டுப்படுத்துவதில் ஒரு மிகப் பெரிய சவாலை நிச்சயமாக ஏற்படுத்திவிடும். ஆகவே மக்கள் நடமாட்டமில்லாத புறநகர்ப் பகுதிகளிலும், ஒவ்வொரு மாவட்டத் தலைநகருக்கு அருகிலும் இடங்களைத் தேர்வு செய்து, இதுபோன்று மருத்துவ வசதிகள் அடங்கிய தனிமைப்படுத்தும் மையத்தை போர்க்கால அடிப்படையில் உருவாக்கிட வேண்டுமென்று நான் அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். அரசு மருத்துவமனைகள், ஆய்வகங்கள் போன்றவற்றிலுள்ள மருத்துவர்கள், செவிலியர்கள் உள்ளிட்ட அனைத்து ஊழியர்களுக்கும் தேவைப்படக்கூடிய அளவிற்கு முகக் கவசங்கள், sanitisers உள்ளிட்ட தற்காப்பு உபகரணங்களை வழங்குவது உறுதி செய்யப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், அவர்கள் உயிரையே பணயம் வைத்து சிகிச்சை அளித்துக்கொண்டிருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

முற்பகல் 11–25

அதேபோல, தமிழகத்தில் இருக்கக்கூடிய சிறைச்சாலைகள், பொது மக்கள் அடிக்கடி செல்லக்கூடிய காவல் நிலையங்கள் ஆகிய இடங்களிலும், போக்குவரத்தைக் கட்டுப்படுத்துவதில் ஈடுபட்டிருக்கக்கூடிய காவலர்கள் ஆகியோருக்கு போதிய அளவிற்கு வருமுன் காக்கக்கூடிய மருத்துவ தற்காப்பு வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும். அரசு ஊழியர்கள், தனியார் நிறுவன ஊழியர்கள் ஆகியோரெல்லாம் அவர்கள் வீட்டிலிருந்தே பணிபுரியக்கூடிய வாய்ப்பையும் மேற்கொள்வதற்கு அரசு எல்லா வகைகளிலும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். தமிழகத்தில் ஒருவர் மட்டும்தான் இந்த கொரோனா நோயினால் பாதிக்கப்பட்டார்;

அவரும் குணமடைந்து வீடு திரும்புகிறார் என்று மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் கூறியிருப்பது உள்ளபடியே மகிழ்ச்சியளிக்கிறது. ஆனால், இத்தாலி போன்ற நாடுகள் கடும் பாதிப்புக்குள்ளாகியிருக்கின்றன. ஆகவே, கொரோனா வைரஸ் வேகமாகப் பரவக்கூடிய நெருக்கடி ஏற்பட்டால், அதைச்சமாளிக்கவும் நம்முடைய அரசு தயாராக இருக்க வேண்டும். அதற்கேற்றாற்போல் தனியார் மருத்துவமனை உரிமையாளர்களுடன் அரசு ஓர் அவசரக் கூட்டத்தை நடத்தி, அவர்களுடன் கலந்தாலோசித்து, தேவையான நிதியை சம்பந்தப்பட்ட மாவட்டங்களுக்கு உடனடியாக ஒதுக்கி, மருத்துவமனைகளையும் தயார்படுத்தி வைக்க வேண்டுமென்று நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இதுவரை வெளிநாடுகள் மற்றும் அண்டை மாநிலங்களிலிருந்து வரக்கூடிய பயணிகள் எவ்வளவு பேருக்கு உள்ளூர் மற்றும் அயல் மாநில மருத்துவமனைகளில் பரிசோதனைசெய்யப்பட்டிருக்கின்றது? இரயில்கள்மூலம் வருவோருக்கு நடத்தப்பட்ட சோதனைகள், அண்டை மாநிலங்களுடனான எல்லைகளில் நடத்தப்பட்ட சோதனைகள், மாநிலம் முழுவதும் அரசு மருத்துவமனைகளில் பாதிக்கப்பட்டிருக்கக்கூடியவர்கள் எத்தனை பேர்? அதில், தனியார் மருத்துவமனைகளிலிருந்து பரிந்துரை செய்யப்பட்டவர்கள் எவ்வளவு பேர் என்பது குறித்த தகவல்களை வெளிப்படையாக இந்த அரசு தெரிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். கொரோனா வைரஸ் நோயைத் தடுப்பதிலே அரசுக்கு வெளிப்படைத் தன்மை நிச்சயமாக இருந்தாக வேண்டும். இன்னும் மாநிலம் முழுவதும் தயார் நிலையும், அதற்கேற்ற மருத்துவ வசதியும் விரிவுபடுத்தப்பட வேண்டும் என்று நான் இந்த அரசை வலியுறுத்தி, வற்புறுத்திக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) ஒரு நிமிடம் இருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.

திரு. கரி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொரோனா வைரஸால் இந்திய நாட்டில் நூற்றுக்கணக்கான பேர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று தகவல்கள் சொல்கின்றன. அதேபோல, நம்முடைய தமிழகத்திலும் சில பாதிப்புகள் இருக்கின்றன. அதற்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நம்முடைய அரசு சில வேலைகளை ஆரம்பித்திருக்கிறது. பள்ளிகள்,

2020 மார்ச் 17] [திரு. கரி. இராமசாமி]

கல்லூரிகளுக்கெல்லாம் விடுமுறை அறிவித்திருக்கிறார்கள். உண்மையிலேயே அது வரவேற்கத்தக்கது. இந்த வைரஸால் தாக்கப்பட்டவர்களுக்கு மருத்துவ வசதிகள் செய்வதற்கு, பொதுவாக நகரத்தின் மையப் பகுதியில் இருக்கக்கூடிய மருத்துவமனையைத் தேர்ந்தெடுக்காமல், நகரத்தினுடைய ஒரு பக்கம், நகரத்தை விட்டு மற்ற பகுதிகளில் இருக்கக்கூடிய இடங்களுக்கு இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்களை அழைத்துச் சென்று, அவர்களுக்கு உரிய மருத்துவத்தை வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இந்த நோய் தமிழகத்தில் எத்தனை பேருக்கு வந்திருக்கிறது? எத்தனை பேர் சரியான மருத்துவ வசதிகள் பெற்று வீட்டிற்குச் சென்றிருக்கிறார்கள் என்பதைத் தெளிவாகச் சொல்ல வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு சிறிய உதாரணத்தைச் சொல்கிறேன். நான் என்னுடைய வீட்டில் இருக்கும்போது, ஒரு பையன் என்னிடம் வந்து பேசிக்கொண்டிருந்தபோது, ‘சரிப்பா, நீ செய்த வேலைக்கு, வேண்டியதைச் செய்கிறேன்’ என்று சொன்னேன். ‘இல்லை ஐயா, நான் சைனாவிலிருந்து வந்து நான்கு நாட்கள்தான் ஆகின்றன.’ (குறுக்கீடு) இல்லை, உண்மைக்கு மாறான தகவலைச் சொல்லவில்லை. (குறுக்கீடு) உண்மைக்கு மாறான தகவலைச் சொல்லவே இல்லை. சரியாகத்தான் சொல்கிறேன். சைனாவிலிருந்து வந்தேன் என்று சொன்னான். நான் உடனே, நீ உன் வீட்டிற்குச் சென்று இருந்துகொள். பிறகு பேசிக்கொள்ளலாம் என்று சொல்லி அனுப்பினேன். இதைப் பற்றி இன்னும் அரசாங்கத்திற்கும் தெரியாது. வெளியிலும் தெரியாது. இதுபோன்ற நிலைமை இருக்கிறது. அதையும் இந்த அரசு கவனித்து, அதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

முற்பகல் 11–30

மற்றொரு முக்கியமான பிரச்சினை. பீகார் மாநிலத்தில் (குறுக்கீடுகள்) எனக்கும் உடல் பரிசோதனை செய்து பார்க்க வேண்டும். பார்த்துக்கொள்கிறேன். மேலும், பீகார், மத்தியப் பிரதேசம் போன்ற மாநிலங்களில் சட்டமன்றத்தையே ஒத்திவைத்துவிட்டார்கள். தமிழகத்திலே, நீங்கள் பார்க்கவில்லை என்றோ கவனிக்கவில்லை என்றோ charge சொல்லவில்லை. அதே சமயத்தில், எல்லோருக்குமே மனதிற்குள் அதுபோன்ற ஓர் உறுத்தல் இருக்கிறது. எனவே, தமிழகத்தில் இந்த நேரத்தில் சட்டமன்றத்தை ஒத்திவைத்தால் என்ன? ஒத்திவையுங்கள். அதை விட்டுவிட்டு நீங்கள் சட்டமன்றத்தை நடத்துகிறோம் என்று சொன்னால் எப்படி?

மற்றொன்று. எனக்கு எதிரிலே உட்கார்ந்திருக்கக்கூடிய மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களைக் கவனித்துக் கொண்டுதான் இருந்தேன். சிறிது நேரத்திற்கு முன்பு திடீரென்று எதையோ பையிலிருந்து எடுத்தார். (சிரிப்பு) அவர் தன்மீதும் அடித்துக்கொண்டார், பக்கத்தில் இருக்கிற மாண்புமிகு அமைச்சர்களுக்கும் அடித்துவிட்டார். அதை இல்லையென்று அவர்கள் சொல்ல முடியாது. அதற்கு என்ன காரணம்? (குறுக்கீடு) அதற்கு என்ன காரணம்? (சிரிப்பு) இவ்வளவு பிரச்சினை இருக்கும்போது இந்தச் சட்டசபையை நடத்த வேண்டுமா என்பது என்னுடைய கேள்வி. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, இதையெல்லாம் யோசித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு நல்ல முடிவை அறிவிப்பார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்களும் அரசினுடைய நடவடிக்கைகளை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்த நடவடிக்கைகளை வரவேற்பதாகக் கூறிய கருத்திற்கு முதற்கண் என்னுடைய நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால், இந்த மாதிரியான crisis time–ல் எதிர்மறை கருத்துகளையெல்லாம் தவிர்த்து, மக்களின் நலன் கருதி, அரசு எடுக்கக்கூடிய அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்கும் அனைவரும் முழு ஒத்துழைப்பு நல்க வேண்டும். எடுக்க வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையெல்லாம் வரவேற்று நீங்கள் கருத்து கூறுவது என்பது நிச்சயமாக ஓர் ஆரோக்கியமான விஷயம் என்பதை நான் முதலிலே அன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

நேற்றைக்குக்கூட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாலை 5.00 மணியளவில் அரசு தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அரசுச் செயலாளர்களையும், மூத்த அமைச்சர் பெருமக்களையும், Railway Authority, Airport Authority உள்ளிட்ட அனைத்து நிபுணர்களையும் நமது தலைமைச் செயலகத்திற்கு அழைத்து ஒரு மணி நேரத்திற்கும் மேலாக நீண்ட நெடிய ஆலோசனை நடத்தினார்கள். அதற்குப் பிறகு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஓர் அறிக்கையின் வாயிலாக உடனடியாக எடுக்கப்பட வேண்டிய

2020 மார்ச் 17] [டாக்டர் சி. விஜய பாஸ்கர்]

முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும், இன்றிலிருந்து effect–க்கு வரக்கூடிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும் தமிழக மக்கள் அத்தனை பேருக்கும் வேண்டுகோளுடன் விரிவாக அறிவித்தார்கள். அது தாங்கள் அனைவரும் அறிந்ததே.

நமது பக்கத்து மாநிலமான கேரளாவில் இன்றைக்கு அதிக எண்ணிக்கையிலான cases இருக்கின்றன. அதேபோன்று, கர்நாடகாவில் 6 cases இருக்கின்றன. மகாராஷ்டிராவில் அதிகமான cases இருக்கின்றன. அதேபோன்று இந்திய அளவில் ஒவ்வொரு நாளும் படிப்படியாக 2, 3 என்ற அளவில் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. இருந்தாலும் தமிழகத்தில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, ஒருவருக்கு positive என ஆய்வு முடிவு வந்து, அவரும் imported case, அதாவது, மஸ்கட்டிலிருந்து வந்தவர். அவரை நாம் குணப்படுத்தி, பிறகு mandatory ஆக 2 sample negative ஆக வந்த பிறகே, அவர் வீடு திரும்பியிருக்கிறார். அவர் வீடு திரும்பிவிட்டார் என்ற செய்தியைச் சொன்னால்கூட உடனே எல்லோருமே அதை track செய்கிறார்கள், trace செய்கிறார்கள் என்பதால் அவற்றை medical ethics அடிப்படையில் confidential ஆக maintain செய்து கொண்டிருக்கிறோம். மற்றபடி அனைத்து விவரங்களையும் அரசு வெளிப்படையாக உடனுக்குடன் தினமும் ஒரு bulletin release செய்து தெரிவித்துக்கொண்டிருக்கிறது. We are very open and transparent.

அவர்கள் பல்வேறு கருத்துகளைச் சொன்னார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் முதலில் lab பற்றி குறிப்பிட்டார்கள். Lab–ஐப் பொறுத்தவரையில், ஒரு lab–ல் ஒரு நாளைக்கு 100 பேருக்கு test செய்யலாம். ஏற்கெனவே, சென்னை King Institute of Preventive Medicine and Research, தேனி, திருவாரூர், திருநெல்வேலி, தற்போது ராஜீவ்காந்தி மருத்துவமனை உள்ளிட்ட 5 இடங்களில் lab set–up செய்துவிட்டோம். ஒரு நாளைக்கு 500 பேருக்கு sample test செய்யக்கூடிய capacity–யுடன் இருக்கிறோம். ஒரு சில தனியார் மருத்துவமனைகள் விருப்பம் தெரிவித்துள்ளன. ஆனால், approval should be given by the Government of India. நம்முடைய lab–க்கும் மத்திய அரசுதான் ஒப்புதல் அளிக்கிறது. எனவே, Virology Department ஒப்புதல் அளிக்கக்கூடிய விஷயத்தை நாம் co–ordinate செய்துகொண்டிருக்கிறோம். தற்போதைக்கு sample test செய்யக்கூடிய well–equipped capacity–யுடன் இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கட்டணம் நிர்ணயிக்க வேண்டுமென்று கூறினார்கள். தற்போது எந்தவித கட்டணமுமில்லாமல்தான் sample test செய்து கொண்டிருக்கிறோம். அதற்கும் மேலாக சிலர், நான் travel history–யுடன் வந்திருக்கிறேன், test செய்ய வேண்டும் என்று வருகிறார்கள். நேற்றிலிருந்து sample எடுப்பதை increase செய்யச் சொல்லியிருக்கிறோம். நேற்று மட்டுமே 38 பேருக்கு ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனையில் sample எடுத்திருக்கிறோம். யாரேனும் travel history–யுடன் வருகிறேன், test செய்ய வேண்டும் என்று வருகிறவர்களைக்கூட அரசு உடனே consider செய்து, அவர்களிடமிருந்தும் sample எடுத்து test செய்து தெரிவித்துக்கொண்டிருக்கிறோம்.

முற்பகல் 11–35

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகின்றபோது Airport screening, பிறகு தனிமைப்படுத்தும் மையங்கள்பற்றி எல்லாம் குறிப்பிட்டார்கள். ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 4 நாட்களுக்கு முன்னதாக நடத்தப்பட்ட முதல் ஆய்வுக் கூட்டத்திலேயே குறிப்பாகச் சொன்னார். Chennai Airport என்றால், விமான நிலையத்திற்குப் பக்கத்தில் இருக்கக்கூடிய பூந்தமல்லி, தாம்பரம் போன்ற இடங்களிலும், மதுரையில் தொப்பூர் போன்ற இடங்களிலும், திருச்சியில் செங்கிப்பட்டி போன்ற இடங்களிலும், கோயம்புத்தூர் போன்ற எல்லா இடங்களிலும் கிட்டத்தட்ட ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையிலே 200–லிருந்து 500 வரை ஒரே நேரத்தில் அந்த தனிமைப்படுத்தப்பட்ட மையங்களை உருவாக்கி இருக்கின்றோம். அதை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நேரடியாக ஆய்வு செய்திருக்கிறார்கள். சுகாதாரத் துறை அதிகாரிகளும் நேரடியாக ஆய்வு செய்திருக்கிறார்கள். எல்லா வசதிகளோடும் உருவாக்கப்பட்டிருக்கிறது என்ற தகவலை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். Mask அதாவது, முகக்கவசம் போன்ற விஷயங்களை நீங்கள் சொன்னீர்கள். Tamil Nadu Medical Services Corporation மூலமாக முகக்கவசம் mask, personal protection equipment இதெல்லாம் சேர்த்து இப்போது கூடுதலாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 60 கோடி ரூபாய் நிதியை உடனடியாக, கொடுத்ததனால், 30 கோடி ரூபாய் நிதி சுகாதாரத் துறைக்கு ஒதுக்கப்பட்டு, 25 இலட்சம் masks நாம் இப்போது கூடுதலாக order செய்து, எல்லாமே supply on the way–ல் இருக்கிறது. அதனால், தமிழகத்திலே போதுமான மருந்துகளும், மாத்திரைகளும் முகக்கவசங்களும் தட்டுப்பாடில்லாத

நிலையை அரசு தொடர்ந்து கண்காணித்துக் கொண்டிருக்கிறது. தனியார்களும் அதிகமான விலைக்கு விற்கக் கூடாது என்று அறிவுறுத்தியிருக்கிறோம். தேவைப்பட்டால் நடவடிக்கையும் எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்திருக்கிறோம். எல்லோரும் mask அணிய வேண்டிய நிலை இல்லை என்பதை ஏற்கெனவே நான் சபையில் சொல்லியிருக்கிறேன்.

அதேபோல, இப்போது எத்தனை மையங்கள், எத்தனை பேர் screen செய்யப்பட்டிருக்கிறார்கள் என்ற விவரங்களை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரும், காங்கிரஸ் கட்சித் தலைவரும் கேட்டார்கள். இதுவரையிலும் தமிழகத்தில் பார்த்தீர்களென்றால் ஒரு இலட்சத்து 80 ஆயிரத்து 62 பேர்களை, daily update செய்கிறோம். ஒரு இலட்சத்து 80 ஆயிரத்து 62 பேரை நாம் screen செய்திருக்கிறோம். தாங்கள் குறிப்பிட்டபடி 2,221 பேரை நாம் home quarantine செய்திருக்கிறோம். தினமும் அவர்களுக்கு, மத்திய அரசு சில instructions–ஐக் கொடுக்கிறது. பிற நாடுகளிலிருந்து இங்கு வரக்கூடியவர்களை, maximum நிறைய பேர்களை, இப்போது நம்முடைய நாட்டவர்களையே, அங்கிருந்து இங்கே வரக்கூடியவர்களுக்கான visa–வை அவர்கள் cancel செய்கிறார்கள். இப்போது உதாரணத்திற்கு European countries கிட்டத்தட்ட 48+2, இந்த 50 நாடுகளில் அங்கிருந்து யாரும் வர முடியாத அளவிற்கு visa–வை cancel செய்துவிட்டார்கள். அதனால் அவர்கள் யாரும் வர முடியாது. அதைத்தாண்டி வந்தாலும் நாம் இரண்டாகப் பிரிக்கிறோம். ஒன்று, வரக்கூடியவர்களுக்கு symptoms, வெளிநாடுகளிலிருந்து வரக்கூடியவர்களுக்கு symptoms இருக்கிறதா என்று பார்க்கிறோம். இருந்தால் அவர்களை அப்படியே isolate செய்து, அதற்கென்று வைத்திருக்கிற ambulance–ல் அவர்களை நேரடியாக isolation ward–க்கு கொண்டு போய்விடுவார்கள். இன்னொன்று வரக்கூடியவர்களுக்கு symptoms இல்லையென்றால், அவர்களை உடனே பூந்தமல்லிக்கு—Airport–க்கு அருகில் இருக்கக்கூடிய—நேற்றிலிருந்து இந்தப் பணியைத் தொடங்கியிருக்கிறோம். பூந்தமல்லியிலிருக்கிற அந்த training centre–க்கு அழைத்துச் சென்று symptom இல்லை, நீங்கள் வீட்டிற்குப் போய் எப்படியெல்லாம் இருக்க வேண்டும், (குறுக்கீடு) Symptoms என்பது 3 symptoms 1. காய்ச்சல், 2. இருமல், 3. மூச்சுத் திணறல், இவை மூன்றும்தான் கொரோனா வைரஸிற்குண்டான 3 symptoms. காய்ச்சல், இருமல் மற்றும் மூச்சுத் திணறல். ஆகையால், இந்த symptoms–க்கு, நாம், thermal screening, காய்ச்சலுக்குச் செய்கிறோம். இருமலுக்கு

அவர்களே சொல்லப் போகிறார்கள். மூச்சுத் திணறலையும் அவர்களே சொல்லப் போகிறார்கள். அங்கேயே examination room இருக்கிறது. நாம் Airport Authority உடன் சேர்ந்து செய்கிறோம். நம்முடைய பொது சுகாதாரத் துறையும், மருத்துவர்களும், உண்மையிலேயே hats off to the doctors, 24 மணி நேரமும் நம்முடைய அரசு மருத்துவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க, நாங்கள் கிட்டத்தட்ட இரண்டரை மணிநேரம் International Airport–க்குப்போய் C.R.A. மற்றும் நம்முடைய மூத்த I.A.S. அதிகாரிகளும்போய் ஆய்வு செய்தோம். Immigration Officer மற்றும் நம்முடைய மருத்துவத் துறையின் மருத்துவர்கள், செவிலியர்கள் எல்லாம் உரிய பாதுகாப்போடு எல்லோரையும் பக்காவாக screen செய்துகொண்டிருக்கிறார்கள். பொது மக்களும் ஒத்துழைப்பு கொடுக்கிறார்கள். வருபவர்களை நாங்கள் interact செய்தோம். International passengers–ஐ நாங்கள் interact செய்தோம். ‘உரிய பாதுகாப்போடு எங்களை correct–ஆக screen செய்கிறார்கள். எங்களுக்கு 10–லிருந்து 15 நிமிடங்களாகின்றன’ என்று தங்களுடைய நன்றிகளைத் தெரிவித்தார்கள். ஆகையால், அதை நன்றாகச் செய்கிறோம். Symptoms இருந்தால் அவர்களை நாம் isolate செய்கிறோம். Symptoms இல்லையென்றால், 14 நாட்களுக்கு அவர்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதையும், home quarantine–ல் இருக்க வேண்டும், தொடர்புகொள்ள வேண்டும், நாங்கள் உங்களை தொடர்புகொள்வோம் என்றும், form–லே நாம் contact number எல்லாம் வாங்கிவிடுகிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்ததோடு, Airport, Railway Station, குறிப்பாக அண்டை மாநிலங்கள் என்பது முக்கியம். இப்போது கேரளாவில் case இருக்கிறது. அண்டை மாநில எல்லையில் இருக்கக்கூடிய இந்த 16 மாவட்டங்களில் screen செய்கிறோம். நேற்றுகூட மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொன்னார்கள். எல்லா இடத்திலும் checkpost போட்டிருக்கிறோம். இப்போது அங்கே வேகமாகக்கூட போய்விடுகிறார்கள், அதனால் barricade போட்டு, காவல் துறை உதவியோடு, காவலர்களை கூடுதலாகப் போட்டு, நம்முடைய சுகாதாரத் துறை அதிகாரிகளைப்போட்டு, கால்நடை பராமரிப்புத் துறையில் 25 team கொடுத்திருக்கிறார்கள். அந்த team உடன் 3 பேரும் கலந்து சாலையில் வாகனங்களில் வரும் ஒவ்வொருவரையும் நாம் வண்டியை slow செய்து நிறுத்தி, request செய்து அவர்களை thermal screening செய்து, அவர்களுக்கு symptoms இருந்தால், அதற்கான அறிவுரைகளை, ஆலோசனைகளை எல்லாமே

2020 மார்ச் 17] [டாக்டர் சி. விஜய பாஸ்கர்]

வழங்கிக்கொண்டிருக்கிறோம். ஒரு நாளைக்கு 49 trains வருகின்றன. ஆகையால், அதிலே நீங்கள் எப்படி effective–ஆக screen செய்ய வேண்டுமென்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இரயில்வே துறை உயரதிகாரிகளிடம் நேரடியாக வலியுறுத்தி இருக்கிறார்கள். அதேபோல, இன்னும் பல துறைகளுக்கும், அனைத்துத் துறை அதிகாரிகளுக்கும், போக்குவரத்துத் துறை என்றால், பஸ்ஸை எப்படி disinfect செய்ய வேண்டும் என்று instructions கொடுத்திருக்கிறோம். 3 விஷயங்கள் 1. Self–hygiene அது மிக மிக முக்கியம். தன்னுடைய சுய சுத்தம். Respiratory hygiene, அது இரண்டாவது, மூன்றாவது surface hygiene. இப்போது மைக் இருக்கிறது, டேபிள் இருக்கிறது. எல்லாவற்றையும் clean செய்யச் சொல்லி நாங்கள் instructions கொடுத்திருக்கிறோம். தேவையான நிதி கொடுத்திருக்கிறோம். Guidelines கொடுத்திருக்கிறோம். அனைத்துத் துறை அதிகாரிகளுக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேரடியாக உத்தரவுகளைப் பிறப்பித்திருக்கிறார்கள். மூத்த அமைச்சர்களுக்கும் அந்த ஆலோசனைகளைச் சொல்லியிருக்கிறார்கள்.

முற்பகல் 11–40

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், காங்கிரஸ் கட்சி சட்டமன்றத் தலைவர் அவர்கள் பேசும்போது, சட்டமன்றம் குறித்து குறிப்பிட்டார்கள். தமிழகத்தில் அந்த மாதிரியான நிலை இல்லை. சட்டமன்றத்தில் நீங்கள் என்றைக்குக் கோரிக்கை வைத்தீர்களோ, உடனே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு சபாநாயகர் அவர்களும் பார்வையாளர்களை முழுமையாக restrict செய்திருக்கிறார்கள். வரக்கூடிய எல்லோருக்குமே கிருமி நாசினி தரப்படுகிறது. முழுமையாக உள்ளாட்சித் துறையில் இருக்கக்கூடிய சென்னை மாநகராட்சி சுகாதாரத் துறை மூலமாக daily செய்யப்படுகிறது. வரக்கூடிய எல்லோரையும் நாம் screen செய்துதான் அனுப்புகிறோம். பார்வையாளர்களை நாம் restrict செய்துவிட்டோம். ஆதலால், essential, non–essential என்றிருக்கிறது. ஆக, Essential என்பது முக்கியமாக நமது அரசு நிருவாகம், பொது மக்களைக் காக்க வேண்டியது; நாம் முழுமையாக இயங்க வேண்டுமென்பதில் எல்லோருக்கும் எந்தவிதமான மாற்றுக் கருத்தும் இருக்க முடியாது. ஆகையினால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி தொடர் கண்காணிப்புகளையும், தொடர் நடவடிக்கைகளையும், தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும், எல்லா நடவடிக்கைகளையும் தொடர்ந்து எடுத்துக்கொண்டிருக்கிறோம். ஒரு positive case. அதையும் treat

செய்துவிட்டோம். அதைத்தவிர, புதிய வைரஸ் தாக்குதல் இல்லை. இன்றைக்கு காலையில்கூட, எம்.ஜி.ஆர். பல்கலைக்கழகத்தில் international level–ல் ஒரு conference நடைபெற்றது. அதாவது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள், இப்போது வெளிநாடுகளில் என்ன மாதிரியான treatment கொடுக்கிறார்கள்; global ஆக என்ன situation; அங்கே புதிய கண்டுபிடிப்புகள் என்ன போன்றவை சம்பந்தமாக இன்றைக்கு ஒரு video conference நடைபெற்றது. அதில், கிட்டத்தட்ட உலக நாடுகளில் இருக்கக்கூடிய அத்துணை வல்லுநர்களுடனும் link–கிட்டத்தட்ட 82 link எடுத்து, அந்த link–ல் நம்முடைய மருத்துவர்களையெல்லாம் அமரவைத்து, இன்றைக்கு காலையில் 9–30 மணிக்கு நடைபெற்றது. ஆகவே, அந்த நாடுகளில் எந்த மாதிரியான நடைமுறைகளை பின்பற்றுகிறார்கள் என்பது குறித்து இன்றைக்கு நம்முடைய மருத்துவர்களோடு ஒரு விரிவான international conference இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. உதாரணத்திற்கு, அமெரிக்காவில் இருக்கக்கூடிய நம்முடைய டாக்டர் சௌமியா சுவாமிநாதன் போன்றவர்களெல்லாம் அதிலே தேவையான நடவடிக்கைகளை அறிவுறுத்துகிறார்கள். ஆகையால், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் multi–dimension–ல் பன்முக நடவடிக்கைகளைத் தொடர்ந்து எடுத்து வருகிறது. ஒருபுறம் விழிப்புணர்வு; இன்னொரு புறம் மருத்துவமனைகளை வலுப்படுத்துதல்; இன்னொரு புறம் தேவையற்ற overcrowding, public gathering, கூடக் கூடாது என்பது போன்ற அறிவிப்புகள். ஆகவே, இதுபோன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அறிவிப்புகளுக்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்கு நாம் அனைவரும் ஒத்துழைப்புக் கொடுக்கின்றபட்சத்தில், தமிழகத்தில் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு, யாருக்கும் பாதிப்பில்லாத நிலையில் தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்களுக்கும் நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

2020 மார்ச் 17]

*திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும் இரண்டு கவன ஈர்ப்பு அறிவிப்புகள் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சொல்லுங்கள்.

திரு. துரைமுருகன்: அதற்குமுன், மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களிடத்தில் இந்த ஒரு கேள்வியைக் கேட்டுவிடுகிறேன். நீங்கள் சொல்வது எல்லாம் சரி, நான் ஒப்புக்கொள்கிறேன். அதை செய்கிறீர்கள்; இதைச் செய்கிறீர்கள் என்று சொல்கிறீர்கள். ஆனால் பயம் இருக்கிறதே! வீட்டிற்குப் போனால் சட்டையை எல்லாம் வெளியே கழற்ற சொல்கிறார்கள். குளித்துவிட்டுத்தான் உள்ளே போக வேண்டும், குழந்தைக் குட்டிகளை வைத்துக்கொண்டு எதற்கு இது வம்பு என்கிறார்கள். ஆகையினால், இன்னும் கொஞ்ச நாள் சென்றால், நீங்கள் வெளியே சுற்றிக்கொண்டு வருகிறீர்கள் என்று சொல்லி, வீட்டிலே எங்களையே தனி ward–ல் வைத்துவிடுவார்கள் போலும். ஆகையினால், நாங்கள் எல்லாம் என்ன சொல்கிறோம் என்றால், சட்டமன்றத்தை நாம் தொடந்து நடத்த வேண்டுமா அல்லது என்ன செய்யலாம் என்பதற்கு, நாளை காலையில் BAC கூட்டம் போடுங்கள். நாம் பேசலாம். நானும் விளக்கமாகத் தெரிந்துகொள்கிறேன். அது ஒன்று.

(ஆ) தமிழகத்தில் வெடிகுண்டு கலாச்சாரம் பரவுவதைத் தடுத்தல்

*திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னொரு முக்கியமான கவன ஈர்ப்பு குறித்து தெரிவிக்க விரும்புகிறேன். வெறுக்கத்தக்க ஆனால் முளையிலேயே கிள்ளியெறியத்தக்க ஒரு கலாச்சாரம் தமிழ்நாட்டில் பரவுகிறது என்பதை நான் இன்றைக்கு பத்திரிகைகளைப் பார்த்துத் தெரிந்துகொண்டேன். வெடிகுண்டு கலாச்சாரம் என்பது தமிழ்நாட்டில் எப்படியோ அரும்பியிருக்கிறது. ஒரே நாளில் இரண்டு இடங்களில் குண்டு வீச்சு நடந்திருக்கிறது. ஒன்று, மதுரையில் முன்னாள் MLA திரு. வேலுசாமி அவர்கள் வீட்டில் குண்டுவீச்சு நடைபெற்றிருக்கிறது. பெரும் சேதாரத்தை ஏற்படுத்தி இருக்கிறது. அது எப்படியெல்லாம் நடைபெற்றது என்பதை நான் விவரிக்க விரும்பவில்லை. அதன் காரணத்தை, நடந்தவற்றை மட்டும் நான் சொல்கிறேன். இன்னொன்று, எங்கள் மாவட்ட மாண்புமிகு அமைச்சர் திரு. வீரமணியார் அவர்கள் வீட்டிலேயே குண்டுவீச்சு சம்பவம் நடைபெற்றிருக்கிறது. இது எவ்வளவு அபாயகரமானது

என்பதை இந்த மன்றம் உணர வேண்டும். நாடு உணர வேண்டும். ஆகையினால், அதை அவர் வேண்டுமானால் சாதாரணமாக எடுத்துக்கொள்ளலாம் அல்லது அவர்களுக்கு ஏதும் பிரச்சினை கிடையாது. ஆனால், நிலைமை மோசமாக இருக்கிறது. இந்தக் கலாச்சாரம் தொடருமானால், அது நல்லதல்ல. வேண்டுமானால், தி.மு.க.வினர் வீட்டிலும் வெடித்தது; அ.தி.மு.க.வினர் வீட்டிலும் வெடித்தது என்று சொல்லலாம். ஆனால், இது வெறுக்கத்தக்கது. எந்தக் கட்சி வித்தியாசமும் இல்லாமல் இந்தக் கலாச்சாரத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தயவு செய்து முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும் என்று மெத்த பணிவன்புடன் நான் கேட்டுக்கொள்கிறேன். இது வளரத்தக்கதல்ல.

முற்பகல் 11–45

இன்னொன்று, கும்பகோணத்தில் நடைபெற்றது எவ்வளவு பயங்கரம். பாவம் வீட்டில் owner மற்றும் அவர் wife உட்கார்ந்திருந்தார். பத்திரிகை வைக்க வந்திருக்கிறேன் என்று சொல்லிவிட்டு, உள்ளே நுழைந்து இரும்பு கம்பியாலே அடித்து அவரை சாகடிக்கிறார்கள். அவர் அதே இடத்தில் சாகின்ற வரையில் அடிக்கிறான். அவர் துணைவியார் கையெடுத்து கும்பிடுகிறார். கடைசியில் அவளை அடிக்கப் போகிறான். அவர் ‘அண்ணா, என்னை விட்டுவிடுங்கள்’ என்று கதறுகிறாள். அந்தக் கொடூர நெஞ்சத்தில்கூட எங்கேயோ ஒரு கருணை பிறந்து, அவளை அடிப்பதற்கு தூக்கிய இரும்பு கம்பியை அடிக்காமல் விட்டுவிட்டு போய்விட்டான். அவள் கதறிக்கொண்டிருக்கிறாள். ஆக வீடு புகுந்து கொலை செய்கிற சம்பவங்களை, வீடுகளிலேபோய் வெடிகுண்டு எறிகிற சம்பவங்களை இந்த நாட்டில் அனுமதிக்க முடியாது. இதில் கட்சி வித்தியாசம் கிடையாது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான் இதைச் செய்ய வேண்டும். எனக்கு என்ன பயம் என்று கேட்டால் தேவர் பெருமகன் சொல்வார், ‘மங்கை சூதகமானால் கங்கையிலே மூழ்கலாம், கங்கையே சூதகமானால் எங்கே மூழ்குவது’ என்று. அதைப்போல மக்களுக்கு ஏதாவது பயமிருந்தால் மந்திரிகளை அணுகலாம். மந்திரி வீட்டிலேயே குண்டு போட்டால் யாரிடம் போய்ப் பேசுவது? விளையாட்டல்ல, மிகவும் serious ஆன விஷயம். உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டிய ஒன்று. இதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது, யார் யார் கைது செய்யப்பட்டார்கள் என்பதை இந்த அவையில் எழுப்பிய காரணத்தால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவைக்கு தொடர் நடவடிக்கைகள் குறித்து தெரிவிக்க வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

2020 மார்ச் 17]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் இப்பொழுதுதான் இந்தப் பிரச்சினையை எழுப்பியிருக்கின்றீர்கள். இதன் முழு விளக்கத்தையும் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளிடம் கேட்டு, நான் விளக்கமளிக்கின்றேன். கிடைக்கப்பெற்ற விளக்கத்தை தற்போது உங்களுக்குத் தெரிவிக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் மாவட்டம், ஜோலார்பேட்டையில் நேற்று, 16–3–2020 அன்று பிற்பகல் ஒரு மணியளவில் சின்னக்கோடியூர் கிராமத்திலுள்ள தங்கவேலு பீடி மண்டி திடீரென தீப்பிடித்து எரிந்ததில், சுமார் 70,000 ரூபாய் மதிப்புள்ள 30 பீடி இலை பண்டல்கள் எரிந்து சேதமடைந்துள்ளன. ஊழியர்கள் தீயை அணைத்தனர். இந்த மண்டியில் 10 தொழிலாளர்கள்தான் பணிபுரிந்து வருகின்றனர். இந்த பீடி மண்டியில் மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் திரு. கே.சி. வீரமணி அவர்களின் சகோதரர் அழகிரி, இராவணன் ஆகியோர் பங்குதாரராக இருந்து நடத்தி வருகின்றனர். திரு. கே.சி. காமராஜ் நிருவாகம் செய்துவருகிறார். இது ஒரு சாதாரண தீ விபத்துதான். ஆனால், ஊடகங்களில் பெட்ரோல் குண்டு வீசப்பட்டதாக ஒரு தவறான செய்தி வெளிவந்திருக்கிறது. அந்தச் செய்தியை வைத்துதான் மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சட்டமன்றத்தில் இதை எழுப்பியிருக்கின்றார். இதுதொடர்பாக, இதுவரை எந்தவொரு புகாரும் காவல் துறையினரால் பெறப்படவில்லை. எவரும் புகார் கொடுக்கவில்லை. இதுசம்பந்தமாக எவரும் கைது செய்யப்படவில்லை என்பதைத் தங்கள் வாயிலாக இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல இப்பொழுதுதான் இதுமாதிரி சம்பவங்கள் நடைபெறுவதாக ஒரு தோற்றத்தை மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் குறிப்பிடுகிறார். உங்களுடைய ஆட்சிக் காலத்திலும், உங்களுடைய Chairman, சிவகங்கையிலே நகராட்சி மன்றத் தலைவராக இருந்தார். அவர் காரிலே சென்றபொழுது remote குண்டு வைத்து தகர்க்கப்பட்ட சம்பவம் நடைபெற்றது. எல்லா ஆட்சிக் காலங்களிலும் இதுமாதிரி சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன. இருந்தாலும் குற்றங்களை குறைப்பதற்காகவும், இப்படிப்பட்ட சம்பவங்கள் நடக்கக் கூடாது என்பதற்காகவும்தான், ஆங்காங்கே CCTV cameras பொருத்தப்பட்டு கண்காணிக்கப்படுகின்றன. ஆகவே, இப்படிப்பட்ட சம்பவங்கள்

நடைபெறாதிருக்க அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, எல்லா ஆட்சிக் காலங்களிலும் அவ்வப்போது இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெறுகின்றன. சொந்தப் பிரச்சினைக்காக இவ்வாறு நடைபெறுகிறதே தவிர, மற்றபடி அல்ல. இருந்தாலும், அதைக் கட்டுப்படுத்தி, இனி அதுமாதிரி சம்பவங்கள் நடைபெறாது பார்த்துக்கொள்வதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எடுப்போம்' என்று அந்த அதிகாரிகளிடம் வாக்குறுதிகளைப் பெற்று வந்த வரலாறுகள் உண்டு. அது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமோ, தெரியாதோ எனக்குத் தெரியாது. ஏனென்று சொன்னால், அவர் ஒரு மீனவக் குடும்பத்தைச் சேர்ந்தவர். இதுவரை 4 வருடங்களாகின்றன. இந்த 4 வருடங்களில் தென்பகுதியில் இருக்கின்ற கடல் பகுதிக்கு என்றைக்காவது சென்று, மீனவர்களைச் சந்தித்து, அந்தப் பகுதி மக்களினுடைய குறைகளைக் கேட்டாரா என்ற கேள்வியை நான் சட்டமன்றத்திலே கேட்க விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) தினந்தோறும் மைக்கைப் பிடிக்கின்றார், மைக்கிலே பேசுகின்றார், இந்தத் துறையைப் பற்றி பேசுகின்றாரா என்று சொன்னால், துறையைப் பற்றிப் பேசுவதில்லை. மீனவர்கள் படுகின்ற பாடு சாதாரண பாடு அல்ல. ஒரு வாரத்திற்கு முன்னால் உவரிக்குச் சென்றேன். உவரியிலுள்ள மீனவர்கள் சொல்கின்றார்கள், 'எங்களுக்கு மூன்று மாதமாக மண்ணெண்ணெய்யே வரவில்லை, எங்கள் தொழிலே கெட்டுப்போய்விட்டது' என்று. சட்டமன்றத்தில் பேசுகிறாரா என்றால், ஏதாவது தவறான தகவலைச் சொல்லிவிட்டு இன்றைக்கு எதற்கெடுத்தாலும் மைக். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மீனவர்களுக்கு எந்த நன்மையும் செய்யவில்லை என்ற ஒரு தவறான கருத்தைச் சொல்லியிருக்கின்றார். அதற்காகத்தான் மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்தினார். உங்களுடைய ஆட்சியில் எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது? இப்பொழுது எவ்வளவு நிதி ஒதுக்கீடு அதிகரித்திருக்கிறது என்ற செய்தியை இங்கே சொல்லியிருக்கின்றார். ஆகவே, அதிகமாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதன் காரணத்தினாலேதான் மீனவர்களுக்கு அதிகமாக நன்மைகள் கிடைக்கின்றன. அதிகமான நிதி ஒதுக்கீடு செய்தால்தான் அதிகமான திட்டங்களை நடைமுறைக்குக் கொண்டுவர முடியும். ஆகவே, மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் இந்தத் துறையிலே அதிக அக்கறை காட்டிய காரணத்தினாலேதான் இந்தத் துறைக்கு, என்றைக்கும் இல்லாத அளவிற்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்த அரசு, எங்களுடைய அரசு என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொல்லிவிட்டார்கள். மீன் வளத் துறைக்கு உங்களுடைய ஆட்சிக் காலத்தில் எந்த அளவிற்கு நிதி ஒதுக்கப்பட்டது, எங்களுடைய ஆட்சிக் காலத்தில் கிட்டத்தட்ட 1,600 கோடி ரூபாய் அளவிற்கு நிதி ஒதுக்கப்பட்டது என்ற விவரங்களையெல்லாம் சொல்லிவிட்டார்கள். ஒரு விஷயம். ஒரு debate–ல் பேசும்போது நீங்கள் கருத்து சொல்லலாம். வெளியில் அரசியல்ரீதியாகப் பேசுவதை உங்களால் தாங்கிக்கொள்ள முடியவில்லை; உங்களால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அதனுடைய வெளிப்பாடுதான், யாருடைய குரலையோ நீங்கள் பிரதிபலிக்கிறீர்கள். ஆனால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அந்த அறிவுரையை ஏற்று, தொடர்ந்து பேசுவேன்; தொடர்ந்து பேசுவேன், அதை யாரும் cut செய்ய முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) O.K. இது ஒன்று. (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள். சரி, நான் ஒரே ஒரு கேள்வி கேட்கிறேன், நீங்கள் இவ்வளவு challenge செய்கிறீர்கள். நான் உங்கள் மாவட்டத்திற்கு என்ன செய்தேன் என்பதற்கான விவரத்தை சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அவர்களிடமே கொடுத்துவிடுகிறேன். ஆனால் 2006–2011 ஆம் ஆண்டுகளில், அந்த 5 வருடங்களில் நீங்கள் என்ன செய்தீர்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடம் கொடுங்கள். ஒப்பீடு—(குறுக்கீடு) அப்போது நீங்கள் A.I.A.D.M.K.–வில்தான் இருந்தீர்கள். (சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி) உங்கள் மாவட்டத்திற்கு, திருச்செந்தூர் தொகுதிக்கு மட்டும், நலத் திட்ட உதவிகளுக்கு அம்மாவினுடைய அரசு செலவு செய்த தொகை மொத்தம் ரூ.72 கோடி. அடிப்படைக் கட்டமைப்பு என்ற வகையில் மட்டும், 60 கோடி ரூபாய் உங்களுடைய தொகுதிக்கு மட்டுமே செலவு செய்யப்பட்டிருக்கிறது. உங்கள் ஆட்சிக்காலத்தில், 2006–2011 ஆம் ஆண்டுகளில், என்ன செலவு செய்யப்பட்டது என்ற விவரங்களை அளியுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்கள்.

திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலுள்ள ஆலந்தலை, அமலிநகர், வீரபாண்டியபட்டணம், அதுபோல என்னுடைய

மாவட்டத்திலுள்ள பெரியதாழை இந்த கிராமங்களில் கடலரிப்பால் மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, தூண்டில் வளைவு அமைத்து, கடலரிப்பைத் தடுத்து, படகுகளை கரையிலே நிறுத்தி, அவர்களுடைய வாழ்வாதாரத்தைக் காப்பதற்கான வழிவகைகளைக் காண வேண்டுமென்ற கோரிக்கையை நான் இந்தச் சபையிலே வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 12–35

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சில அறிவிப்புகளை வெளியிட இருக்கிறார்கள். எனவே, அதுகுறித்து நான் இப்போது சொல்ல முடியாது. ஆனால் ஒன்று மட்டும் சொல்கிறேன், பெரியதாழையில் கிட்டத்தட்ட 30 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு, அரசாணை போடப்பட்டு, விரைவிலே பணிகள் துவங்கப்படவிருக்கின்றன. அதேபோன்று, வீரபாண்டியபட்டணத்தில் 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் கடல் அரிப்பு தடுப்புப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. பெரியதாழையில் 30 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு, அரசாணை போடப்பட்டுள்ளது. அமலிநகர், ஆலந்தலை, வீரபாண்டியபட்டணம், மணப்பாடு, குலசேகரப்பட்டணம், ஏலக்கூடம் ஆகியவற்றிற்கு 2½ கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மணப்பாடில் 79 கோடி ரூபாய் செலவில் மீன் இறங்குதளம் அமைக்கும் கருத்துரு அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்கள்.

திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாமே கருத்துருவில்தான் இருக்கின்றன. மீன்பிடி தடைக்காலங்களில் தமிழக அரசு மீனவர்களுக்கு வழங்குகின்ற நிவாரண நிதியைப்போல், புயல் மற்றும் இயற்கைச் சீற்றங்களினால் ஏற்படும் பாதிப்புகளுக்கும் நிவாரணத் தொகையை அரசு அறிவிக்க வேண்டும். மீன்பிடி தடைக்காலங்களிலும் மீனவர்களுக்கு நிவாரண நிதி வழங்க வேண்டும். கடந்த வருடம் மட்டும், ஏறக்குறைய 19 நாட்கள் அவர்கள் கடல் பகுதிக்கே

செல்லவில்லை. அந்த மீனவர்கள் பட்ட அல்லல்கள், உணவு கிடைக்காமல் தவிக்கின்ற தவிப்பு இதையெல்லாம் உணர்ந்து அவர்களுக்குரிய நிவாரணம் வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை நான் முன்வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இயற்கைச் சீற்றங்கள் மற்றும் புயல் ஆகியவற்றால் உருவாகும் கடல் அலைகளால்,. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, அதற்காகத்தான் எந்த ஒரு மாநிலத்திலும் இல்லாத அளவில், அம்மாவின் அரசு, ஒவ்வொரு மீனவர் குடும்பத்திற்கும், வருடத்திற்கு 19,000 ரூபாய் நிவாரணத் தொகையாக வழங்கி வருகின்றது. வேறு எந்த மாநிலத்திலும் இதுபோன்று நிவாரணத் தொகை வழங்குவது கிடையாது. தமிழ்நாட்டில் மட்டும்தான் 19,000 ரூபாய் மீனவர்களுக்கு நேரடியாகச் சேருகின்ற வகையில், வழிவகை செய்திருக்கிறது. மீன்பிடி தடைக் காலங்களில் 5,000 ரூபாய் நிவாரணம், மீனவ மகளிர் சேமிப்பு நிவாரணம் 4,500 ரூபாய், மீனவர் ஆண்களுக்கான சேமிப்பு நிவாரணம் 4,500 ரூபாய், ஆக, கிட்டத்தட்ட வருடத்திற்கு 19,000 ரூபாய் நிவாரணத் தொகையாக கொடுக்கிற ஒரே அரசு நம்முடைய புரட்சித் தலைவி அம்மாவின் அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்கள்.

திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர்கள் கடலில் மீன் பிடிக்கச் செல்கிறபோது, அவர்கள் படுகின்ற அல்லல்களைப் பற்றி முன்னாள் முதலமைச்சராக இருந்த திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் படகோட்டி என்ற படத்தில் ஒரு பாடலைப் பாடியிருப்பார். அந்தப் பாடல்,

“கடல் நீர் நடுவே பயணம் போனால்,
குடிநீர் தருபவர் யாரோ!
தனியாய் வந்தோர் துணிவைத் தவிர,
துணையாய் வருபவர் யாரோ!
ஒரு நாள் போவார், ஒரு நாள் வருவார்,
ஒவ்வொரு நாளும் துயரம்.
ஒரு சாண் வயிற்றை வளர்ப்பவர் உயிரை
ஊரார் நினைப்பது சுலபம்.”

உங்களைப்போல் நினைப்பது—அவர்கள் படுகிற துயரம் பெரிய துயரம் என்கிற ரீதியில் அவர் பாடியிருப்பார். ஆனால், இப்போது அவர் இருந்திருந்தால், இன்றைக்கு கடற்கரைப் பகுதியில் மீன் பிடிக்க முடியாமல், கடலைப்போல் தவிக்கின்றார்களே! அந்தத் தவிப்பையெல்லாம் பார்த்து, அவர் ஒரு படத்தில் நடித்திருந்தால், என்னபாடலைப்பாடியிருப்பாரோஎன்றுஎண்ணக்கூடியவகையில்—மீனவர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, மீன் வளத் துறையின் அமைச்சர் அவர்கள் தென் பகுதிக்கு வந்து ஒவ்வொரு கடற்கரையாகச் சென்று, பாதிக்கப்பட்ட மீனவர்களின் நிலையை, துயரத்தை அறிய வேண்டும் என்ற கோரிக்கையை நான் இந்தச் சட்டமன்றப் பேரவையில் முன்வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னவோ கடலரிப்பு இப்போதுதான் வந்த மாதிரி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குற்றம் சாட்டிக்கொண்டிருக்கிறார். இது காலம் காலமாக இருந்து கொண்டு வருகின்றது. ஆகவே, இதைத் தடுப்பதற்கு உங்களுடைய ஆட்சிக்காலத்திலும் சில நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றீர்கள். இப்போதும் நாங்கள் பல நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு வருகிறோம். கடலரிப்பு தடுப்புச் சுவர் கட்டுவதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. கன்னியாகுமரி, நாகப்பட்டினம், தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தூண்டில்வளைவும் அமைக்கப்பட்டு வருகிறது.

மீனவர்களுடைய கோரிக்கையை ஏற்று, ஆங்காங்கே மீன்பிடி துறைமுகம் அமைக்கப்பட்டிருக்கிறது. அதிகளவில் மீன்பிடி துறைமுகங்கள் எங்கள் ஆட்சியில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, மீனவர்களுடைய பெரும்பாலான கோரிக்கைகளை நிறைவேற்றிய அரசு, எங்களுடைய அரசுதான் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். 1,076 கிலோ மீட்டர் நீளமுள்ள கடற்கரையைக் கொண்ட மாநிலம், நம்முடைய மாநிலம். கடலரிப்பு ஆங்காங்கே ஏற்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றது. உங்கள் ஆட்சிக்காலத்திலும் ஏற்பட்டுக்கொண்டுதான் இருந்தது. நீங்கள் கவனிக்கவில்லை, இப்போது கவனிக்கப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 2006–2011–ல் சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது, இதே பாடலை, சட்டமன்றப் பேரவையில் பாடிவிட்டு, தி.மு.க.–விற்கு போய்விட்டார். (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய கட்சிக்கு சீக்கிரம் வருவதற்கான நல்ல அறிகுறி இது. அதாவது,

"கடல் நீர் நடுவே பயணம் போனால்,
குடிநீர் தருபவர் யாரோ!
தனியாய் வந்தோர் துணிவைத் தவிர,
துணையாய் வருபவர் யாரோ!"

துணையாய் வருபவர் நம்முடைய புரட்சித் தலைவி அம்மா, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர், எங்களுடைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அம்மாவின் அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) 2021 ஆம் ஆண்டிலும், தமிழ்நாட்டு மக்களுக்கு தொடர்ந்து பணியாற்றுவோம். Stakeholders meeting மீனவர்களைப் பொறுத்தவரையில், கிட்டத்தட்ட பத்து முறை மீனவர்களுடன் கலந்துரையாடி, அவர்களுடைய கருத்துகளையெல்லாம் கேட்டுதான் எல்லா திட்டங்களும் நிறைவேற்றப்படுகின்றன. எனவே, அதில் ஐயம் தேவையில்லை.

பிற்பகல் 12–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்கள்.

திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்னை AIADMK கட்சியிலிருந்து திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வந்தவன் என்று இங்கே குறிப்பிட்டார். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து AIADMK கட்சிக்கு வந்தவர்தானே! அதை இல்லையென்று அவரால் சொல்லமுடியுமா? (குறுக்கீடு) நீங்கள் கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து AIADMK கட்சிக்கு வந்தவர்தானே!

ஆக நான் சொல்வது, தூண்டில்வளைவு, தடுப்புச் சுவர். . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்செந்தூர் சட்டமன்றத் தொகுதியினுடைய உறுப்பினர் அவர்கள், மீனவச் சமுதாயத்தினருக்கு இந்த அரசு என்ன செய்திருக்கிறது என்ற வினாவினை இங்கே எழுப்பினார். நான், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, தமிழக மீனவர்கள் தொடர்ந்து இலங்கை இராணுவத்தால் தாக்கப்பட்டதும், உடைமைகள் பறிக்கப்பட்டதும், துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையாகி, தமிழக மீனவர்கள் உயிர் துறந்த சூழ்நிலை எல்லாம் தமிழகத்திலே, அவர்களுடைய ஆட்சிக் காலத்திலும் நடைபெற்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மறந்திருக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்திய நாட்டினுடைய பிரதமர் அவர்களிடம், நேரிலும், கடிதம் வாயிலாகவும் தொடர்ந்து பேசியதன் விளைவாக, கடந்த 5 ஆண்டுகளாக, 7 ஆண்டுகள் என்றுகூடச் சொல்லலாம். கடந்த 7 ஆண்டுகளாக தமிழக மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்கச் செல்கின்றபோது, ஒருவர்கூட இதுவரை எந்த ஒரு துப்பாக்கிச் சூட்டுக்கும் ஆளாகாமல்...(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லிக்கொண்டிருக்கிறார். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: காப்பாற்றியிருக்கிற அரசு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல, கைது செய்யப்படுகிற மீனவர்கள், இலங்கையில் மரியாதையாக நடத்தப்படுவதும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்த நடவடிக்கையின் காரணமாகத்தான் என்பதையும் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: கைது செய்யப்பட்டிருக்கிற மீனவர்கள் அனைவரும் நீதிமன்ற நடவடிக்கையின் மூலமாக

தாயகத்திற்கு உடனடியாக அழைத்துவரப்படுகின்ற மாநிலமும் நம்முடைய மாநிலம்தான். அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். தற்போதுகூட இலங்கையில் மூன்று மீனவர்கள் மட்டுமே சிறைப்பிடிக்கப்பட்டு இருக்கின்றார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுக்கின்ற நடவடிக்கைகள் மூலமாக அவர்களும் மிக விரைவிலே தாயகம் திரும்புவார்கள். ஆக, எந்த ஒரு மீனவரும் உயிர் துறக்காத அளவிற்கு, காப்பாற்றியிருக்கிற அரசு இந்த அரசு என்பதையும், இதற்குக் காரணம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்திருக்கிற நடவடிக்கை என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கட்சியைச் சார்ந்த உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்கள் பேசுகின்ற நேரத்தில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் சம்பந்தப்பட்ட விவகாரங்களுக்காக பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் எழுந்து பதில் சொல்லிக்கொண்டிருக்கிறார். அதை நாங்கள் மறுக்கவில்லை. அது தவறு என்று நாங்கள் வாதாடவும் இல்லை. குற்றச்சாட்டுகளை எடுத்துச்சொல்கிறபோது, சம்பந்தப்பட்ட மாண்புமிகு அமைச்சருக்கோ அல்லது அமைச்சரவையில் பொறுப்பு வகிக்கின்ற மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கோ பதில் சொல்வதற்கு தகுந்த உரிமைகள் உண்டு. நான் அதை மறுக்கவும் இல்லை. எந்தக் குற்றச்சாட்டையும் எங்களுடைய கட்சியைச் சார்ந்த உறுப்பினர் இங்கே தெரிவிக்கவில்லை. கழக ஆட்சி நடைபெற்றபோது, தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பு வகித்த காலத்தில் செய்திருக்கக்கூடிய சாதனைகளைப் பற்றிதான் அவர் இங்கே வரிசைப்படுத்தி பேசிக்கொண்டிருந்தார். தென் பகுதிகளுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வரவில்லை. அங்கே வரவேண்டுமென்ற கோரிக்கையைத்தான் அவர் இங்கே வைத்தார். அதை ஒரு குற்றச்சாட்டாகக் கருதிக்கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே விளக்கம் சொல்லிக்கொண்டிருந்தால், எங்களுடைய உறுப்பினருக்கு தாங்கள் ஒதுக்கியிருக்கக்கூடிய நேரத்தைப் பார்க்க வேண்டும். எனவே, இது தவிர்க்கப்பட வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து. இதை அவைத் தலைவருடைய கவனத்திற்கு நான் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர், அவர்கள் நான் கம்யூனிஸ்டு கட்சியிலிருந்து வந்தவன் என்று குறிப்பிட்டார். நான் அதை மறுக்கிறேன். என்னுடைய குடும்பமே திராவிடக் குடும்பம்தான். (குறுக்கீடுகள்) ஒரு நிமிடம். என்னைப் பேச விடுங்கள். (குறுக்கீடுகள்) சொல்ல வருகிறேன்.

1949–ல் திராவிட முன்னேற்றக் கழகம் இராயபுரத்தில்தான் ஆரம்பிக்கப்பட்டது. அப்போது இராபின்சன் பூங்கா, தற்போது அது பேரறிஞர் அண்ணா பூங்கா என்று அழைக்கப்படுகிறது. கொட்டும் மழையில் பேரறிஞர் அண்ணா அவர்கள் கட்சியைத் தொடங்கியபோது என்னுடைய தந்தை ஒரு Founder–Member. ஆரம்பகால உறுப்பினர். அவர் உறுப்பினராக இருந்த அடிப்படையில் பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு விஸ்வாசம். பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு விஸ்வாசம். அதை note செய்துகொள்ளுங்கள். பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு விஸ்வாசம். பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு விஸ்வாசமாக இருந்ததன் அடிப்படையில்தான், 1968–ல் அப்போது 120 Division ஆக இருந்தது Council. ஒன்றாவது Division Council–ல் பேரறிஞர் அண்ணா அவர்களால் வேட்பாளராக அறிவிக்கப்பட்டு, கிட்டத்தட்ட 1,000 ஓட்டுகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்று, Education Committee Chairman in Standing Council Corporation. Then, City Council for Child Welfare–ல் Member. Then, Cabinet Minister rank கொடுக்க வேண்டுமென்பதற்காக, பேரறிஞர் அண்ணா அவர்கள் விரும்பிய நேரத்தில், புரட்சித் தலைவர் அவர்கள் அதை விரும்பாததால், சிறுசேமிப்புத் துறையின் துணைத் தலைவராக Cabinet Minister rank–ல் ஒரு பதவியை ஏற்படுத்திக் கொடுத்தார்கள். இந்தி எதிர்ப்புப் போராட்டம், விலைவாசி உயர்வு போராட்டம், எல்லாவற்றிலும் ஜெயிலுக்கு போய்விட்டு வந்து, முழுக்க முழுக்க தி.க.–விலிருந்து, தி.மு.க., அதிலும் அன்றைய தி.மு.க.–விலிருந்து வந்த பாரம்பரியமிக்கவன். எனவே, இதன் மூலமாக நான் இதனை முழுமையாக மறுக்கிறேன்.

பிற்பகல் 12–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்கள்.

திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடல் அரிப்பைத் தடுக்கின்ற வகையிலே தடுப்புச் சுவர்கள், மீன்பிடி வலைக்கூடங்கள், தூண்டில்வளைவுகள் ஆகியவை அமைக்கும்போது கடல் பகுதியில் உள்ள மீனவர்களையும் கொண்ட ஒரு கமிட்டியை அமைத்து, அதற்கான வேலை நடக்கின்றபோது அவர்களையும் கலந்து அந்தத் திட்டத்தினை நிறைவேற்றவேண்டும் என்ற கோரிக்கை இருக்கின்றது. அந்தக் கோரிக்கையை நிறைவேற்றித்தர வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதுபோல் மீன்பிடி தடைக் காலம் 45 நாட்களிலிருந்து 60 நாட்கள் ஆகியுள்ளது. தற்போது ரூ.5,000/– மீனவர்களுக்கு கொடுக்கிறோம். மீனவர்களுக்கு கடுமையான பாதிப்பு ஏற்படுவதால் அவர்களுக்கு ரூ.10,000/– வாங்கிக்கொடுங்கள் என்றும், நீங்கள் சட்டமன்றத்தில் பேசவேண்டும் என்றும் கோரினார்கள். அந்தத் தடைக்காலத்தில் மீனவர்களுக்கு ரூ.10,000/– கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை நான் முன்வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதுபோல் விவசாயிகளுக்கு கடன் கொடுக்கும்போது அவன் சரியான நேரத்தில் கடனைக் கட்டிவிட்டால் அவர்களுக்கு வட்டி இல்லை என்று கடனைக் கொடுப்பதுபோல, மீனவர்களுக்கும் கடனை வழங்கி சரியான நேரத்தில் அவர்கள் பணம் கட்டிவிட்டார்கள் என்று சொன்னால், அவர்களுக்கு அதனை வட்டியில்லாத கடனாக வழங்க வேண்டும் என்ற கோரிக்கையும் இருக்கின்றது. அந்தக் கோரிக்கையையும் இந்த அரசு நிறைவேற்ற வேண்டும் என்று வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இன்றைக்கு, பணியாளர் மற்றும் நிருவாகச்சீர்திருத்தத் துறையில், 2013–லிருந்து 2019 வரை அரசு தேர்வாணையம் நடத்திய பல்வேறு தேர்வுகளில் பெரும் முறைகேடுகள், ** (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுகுறித்து நேற்றைக்கே நாம் சொல்லிவிட்டோம். அதுமாதிரி ஏதேனும் சொல்வதாக இருந்தால் நீங்கள் என்னிடத்தில் அனுமதி பெறவேண்டும். அது நீக்கப்படுகிறது.

திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்: முறைகேடு நடந்திருக்கின்றது என்று திருத்திக்கொள்ளுங்கள். முறைகேடுகள் நடந்திருக்கின்றன. இதனை எடுத்துக்கொண்டால், சிந்துபாத் கதை போல் அவை

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

வரிசையாக வந்துகொண்டே இருக்கின்றன. ஒரு நிருவாகத்தினை நடத்துகின்றோம் என்று சொன்னால், நான் ஒரு தொழில் நடத்துகிறேன் என்று சொன்னால், அந்தத் தொழிலில் ஏதேனும் தவறு நடந்தால் அதற்குப் பொறுப்பு அந்தத் தொழில் நடத்துபவர். அந்தவகையில் அந்த நிருவாகத்தினைப் பார்க்கின்ற அமைச்சராக இருக்கின்ற மரியாதைக்குரிய அமைச்சர் அவர்கள்,—அன்றைக்குச் சொன்னார்கள், அரியலூரில் இரயில் கவிழ்ந்தது. உடனே என்ன சொன்னார்கள் தெரியுமா? “அரியலூர் அழகேசா ஆண்டது போதாதா? மக்கள் மாண்டது போதாதா?” என்றார்கள். அன்றைக்கு சாஸ்திரியாக இருந்த அவரும் உடனே resign செய்தார்கள். அதுபோல் ஓ.வி. அழகேசன் அவர்களும் resign செய்தார்கள். ஆகவே, இந்தத் துறையில் ஏற்பட்ட இந்தக் குறைகளுக்கு பொறுப்பேற்று— அமைச்சர் இராஜினாமா செய்ய வேண்டும், இதனைக் கவனிக்காத முதலமைச்சர் அவர்களும் இதில் கவனம் செலுத்தி இராஜினாமா செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை வைக்க நான் கடமைப்பட்டிருக்கின்றேன். (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் பேசுவீர்கள் என்று நான் எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன். தி.மு.க. ஆட்சியில் என்ன நடந்தது என்று எனது கையில் இருக்கின்றது. வழக்கு நீதிமன்றத்தில் இருக்கின்றது. உங்களது அமைச்சர்களே பரிந்துரை செய்து கடிதம் கொடுத்து கடிதத்தினைக் கைப்பற்றிய நிலை எல்லாம் இருக்கின்றது. எங்களுடையதில் அப்படி இல்லை. General ஆக தவறு நடந்திருக்கின்றது. தவறு நடந்ததை கண்டுபிடித்தது எங்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) உங்களுடையது அப்படி அல்ல. உங்களது Chairman வீட்டிலேயே சோதனை செய்தபோது, உங்களுடைய அமைச்சர் பெயரை சொல்லக் கூடாது என்று கருதுகிறேன். அமைச்சர் தற்போதும் உறுப்பினராக இருக்கின்றார். இப்போதுகூட மேலவை உறுப்பினருக்கு போட்டியிடுவதற்காக இன்றைக்கு nomination செய்திருக்கிறார். இவர்களால் கடிதம் கொடுக்கப்பட்டு, அவர்களின் பரிந்துரையில் அவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுத்திருக்கிறார்கள். அதெல்லாம் இருக்கின்றன. வழக்கும் நீதிமன்றத்தில் இருக்கின்றது. ஏதோ நீங்கள் உண்மையைப் பேசுவதுபோல்பேசவேண்டாம்.எங்களுடைய ஆட்சிக்காலத்தில்தான்

இதுபோன்ற தவறுகள், நடந்தவைகளெல்லாம் கண்டுபிடிக்கப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. தவறு செய்தவர்களைக் கைது செய்து சிறையில் அடைத்த அரசு எங்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டபோது இந்தப் பொருள் குறித்து விவாதிக்கப்பட்டு அதனடிப்படையில் கருத்துகள் சொல்லப்பட்டன. மீண்டும் தற்போது உறுப்பினர் அவர்கள் இந்தக் கருத்தினை சொல்லியிருக்கிறார்கள். CBCID மட்டும் கிட்டத்தட்ட 50–க்கும் மேற்பட்டவர்களை arrest செய்திருக்கின்றது. சரியான பாதையில் செல்லும்போது, முழுமையாக எங்கோ ஒரு centre–ல் நடந்த தவறு. தற்போது Election Commission இருக்கின்றது. கிட்டத்தட்ட 50,000–க்கும் மேற்பட்ட booths இருக்கின்றன. 50,000–க்கும் மேற்பட்ட booths–ல் ஒரு booth–ல் booth rigging, booth capture அதுபோல் false vote அல்லது 100 சதவிகிதத்திற்கு மேல் vote போட்டால் ஒட்டுமொத்தமாக தேர்தலையே இரத்து செய்கிறோமா? எந்த booth–ல் நடந்ததோ அந்த இடத்தில் தேர்தலை இரத்து செய்துவிட்டு மறு தேர்தல் நடத்துகிறோம்.

பிற்பகல் 12–50

அதனால் தகவல் வந்தவுடனே தேர்வர்கள் எல்லோரையும் அழைத்து விசாரணை செய்து, தேர்வையும் இரத்து செய்துவிட்டு முழுமையான அளவுக்கு, transparent–ஆக, வெளிப்படையாக விசாரணை நடந்து கொண்டிருக்கிறது. இப்பொழுது நீதிமன்றத்திலும் வழக்கு இருக்கிறது. உங்கள் கட்சி சார்பிலும் வழக்குகள் தொடுத்திருக்கிறார்கள். மதுரை உயர் நீதிமன்றத்திலும் வழக்கு இருக்கிறது. வழக்கின் முடிவு வரட்டும். அதனால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, எந்த அளவுக்கு தவறு செய்தாலும் உரிய நேரத்தில், உரிய காலத்தில் முடிவுகள் வரும். உங்களைப்போல spectrum ஊழலில் கிட்டத்தட்ட 1,76,000 கோடி ரூபாய் ஊழல் செய்துவிட்டு, (குறுக்கீடுகள்) பூச்சி மருந்து ஊழல், விஞ்ஞான பேர ஊழல், சர்க்கரை பேர ஊழல், இதுமாதிரி எல்லா ஊழலையும் நாங்கள் செய்யவில்லை. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் சில வழக்குகளைப் பற்றியெல்லாம் குறிப்பிட்டார்கள். அந்த வழக்கில் என்ன தீர்ப்பு வந்தது என்பது நாட்டுக்கும் தெரியும்; மக்களுக்கும் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், உரையை முடியுங்கள்.

திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு குற்றத்தைக் கண்டுபிடிப்பதற்கு 6 வருடங்கள் ஆகிவிட்டன. அப்படி கண்டுபிடித்திருக்கிறீர்கள். ஒரு அரசாங்கம் இப்படியிருந்தால், இந்த அரசாங்கத்தை என்ன சொல்வது? நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க.நா. விஜயகுமார் அவர்கள்.

***திரு. க.நா. விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தை முதன்மை மாநிலமாக்க சூளுரைத்து, அதை நடைமுறைக்குக் கொண்டு வந்த அன்னையே! எனக்குப் பின்னாலும் கழகமும், ஆட்சியும் நூறு ஆண்டுகள் தொடரும் என எதிர்காலத்தைக் கணித்துச் சொன்ன அன்னையே! எங்கள் வாழ்வில் எங்கள் உயிரில் கலந்த எங்கள் தாயே! தங்களை வணங்கி என்னுடைய உரையைத் துவங்குகின்றேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியோடு, அவரின் வழியில் அவருடைய எண்ணங்களையெல்லாம் வேதவாக்காய் எடுத்துக்கொண்டு, தமிழகத்தில் எவராலும் செயல்படுத்த முடியாத எண்ணற்ற, பல நல்ல திட்டங்களையெல்லாம்

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

குறுகிய காலத்தில் செய்து காட்டிய எங்களுடைய முதல்வரே! நீண்ட கால திட்டங்களான அவினாசி–அத்திக்கடவு திட்டத்தை அறிவித்து, அதற்கு நிதியொதுக்கி பணிகளைத் துவக்கி வைத்த வரலாற்று நாயகரே! போக்குவரத்து நெரிசல் நிறைந்த எங்கள் திருப்பூர் வடக்குப் பகுதியில் புஷ்பா தியேட்டர் முதல் பாண்டிய நகர் வரையில் 5½ கிலோ மீட்டர் உயர்மட்ட பாலத்தை புதிய மேம்பாலத் திட்டத்தில் அறிவித்து, எங்கள் மாவட்ட மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான மருத்துவக் கல்லூரி அறிவித்து, அதற்கு விரைவில் அடிக்கல் நாட்ட வரும் சாதனை முதல்வரே!

திருப்பூர் வடக்கு தொகுதி மக்களுக்காக இம்மாமன்றத்தில் வைத்த பல கோரிக்கைகளை நிறைவேற்ற உத்தரவிட்ட மக்களின் மறக்க முடியாத முதல்வரே! முத்தாய்ப்பாய் காவேரி டெல்டா பகுதிகளை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவித்த ஒட்டுமொத்த விவசாய மக்களின் காவலரே! காவேரி காப்பாளரே! வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினார் வள்ளலார் என்பது வரலாறு, அதைப்போல் வாடிய ஏழை விவசாயிகளைக் கண்டதும், நம் முதல்வர், விவசாயி நலம் பெற அறிவித்த மற்றுமொரு சிறப்புத் திட்டம்தான் “குடிமராமத்துப் பணிகள் திட்டம்”.

ஒட்டுமொத்த இந்தியாவில் சிறந்த மாநில துறைகளுக்கான விருதுகளில், அதிக விருதுகளைப் பெற்று, அனைத்து மாநிலங்களிலும் முதன்மை மாநிலமாக தமிழகத்தை விளங்கச் செய்யும் நம் மாநில முதல்வர் அவர்களுக்கு வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தன்னடக்கத்தை தன்னகத்தே கொண்டவரே, தமிழனின் வீர விளையாட்டான ஜல்லிக்கட்டை நடத்திக் காட்டியவரே, திருப்பூர் வடக்கு தொகுதியில் ஏழை மக்களுக்காக குடிசை மாற்று வாரியத்தின்மூலம் எண்ணற்ற பசுமை வீடுகளை நெசவாளர்களுக்குக் கட்டித் தந்த எங்கள் தென்பாண்டி சிங்கம் மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுக்கு வணக்கம்.

உள்ளாட்சியில் நல்லாட்சி என சொன்னதோடு மட்டும் நின்றுவிடாமல், மக்கள் மத்தியில் உண்மையாகவே உள்ளாட்சியில் ஒரு நல்லாட்சி நடத்தி, எங்கள் திருப்பூர் வடக்கு தொகுதியில் 10 ஊராட்சிகளின் மக்கள் பயன்பெறும் வகையில், அன்னூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம் அறிவித்து, திருப்பூர் மாநகராட்சிக்கு பாதாள சாக்கடைத் திட்டம் மற்றும் நான்காவது குடிநீர்த் திட்டம் தந்து, திருப்பூர் மக்களின் உள்ளத்தில் தனியிடம் பிடித்த மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் வணக்கம்.

பிற்பகல் 12–55

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை, JICA நிதியுதவியுடன் திருப்பூர் வடக்கு தொகுதியில் 15–வேலம்பாளையம் பகுதியிலுள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை இரண்டாம் தர அரசு மருத்துவமனையாக அறிவித்து, ரூ.27 கோடி நிதியை ஒதுக்கித் தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது தொகுதி மக்கள் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருப்பூர் மாவட்டத்தில் பார்வையாளர் மாடத்துடன்கூடிய ஒரு திறந்தவெளி விளையாட்டரங்கம் கொண்ட புதிய மாவட்ட விளையாட்டு வளாகம் ரூ.18 கோடியில் அமைத்திட விதி 110–ன்கீழ் அறிவிப்பு செய்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் திருப்பூர் மக்களின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் சிறப்பு ஒப்புதலோடு, தமிழக அரசின் சார்பில் திருப்பூர் மாவட்டத்தின் வளர்ச்சிக்கும், திருப்பூர் வடக்கு சட்டமன்றத் தொகுதியின் முன்னேற்றத்திற்கும், தொழில்களின் வளர்ச்சிக்கும், தொழிலாளர்களின் நலனுக்கும் பல்வேறு சிறப்புத் திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அந்த வகையில், திருப்பூர் வடக்கு சட்டமன்றத் தொகுதியின் முன்னேற்றத்திற்கும், திருப்பூரின் பிரதான தொழிலான பனியன் தொழில் வளர்ச்சிக்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு கடந்த காலங்களில் பல்வேறு திட்டங்களை அறிவித்து, நிறைவேற்றியுள்ளது. திருப்பூர் மாவட்டத்தின் வளர்ச்சிக்காக, பனியன் தொழில் முன்னேற்றத்திற்கென, மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சாய சலவைப் பட்டறைகளின் கழிவு நீர் பிரச்சினையைத் தீர்க்க வட்டியில்லா கடனாக ரூ.200 கோடி வழங்கி, அந்தத் தொழிலைப் பாதுகாத்தது, இரண்டாம் குடிநீர்த் திட்டம், மூன்றாம் குடிநீர்த் திட்டம், நான்காம் குடிநீர்த் திட்டம், இரயில்வே மேம்பாலம், வட்டச் சாலை, புதிய பஸ் நிலையம், குமரன் மகளிர் கல்லூரி, புதிய தொழிற்பேட்டைகள், துணை மின் நிலையங்கள், இ.எஸ்.ஐ. மருத்துவமனை, உழைக்கும்

மகளிருக்கு தங்கும் விடுதிகள், உள் விளையாட்டு அரங்கம் என பல்வேறு திட்டங்கள் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாட்சியில் திருப்பூரின் வளர்ச்சிக்காகச் செயல்படுத்தப்பட்டுள்ளன.

Smart City திட்டத்தின்மூலம் உலகத் தரம் வாய்ந்த மாநகரமாக திருப்பூர் மாநகராட்சிப் பகுதியை உருவாக்க மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அனுமதியைப் பெற்றுத் தந்துள்ளது. திருப்பூர் மாவட்டத்திற்கென புதிய மாவட்ட காவல் அலுவலகங்கள், நீதிமன்ற வளாகங்கள் கட்டப்பட்டு வருகின்றன. மாநகரப் பகுதியில் மாநகராட்சி ஆணையர் அலுவலகம் மற்றும் பகுதி காவல் நிலையங்கள் கழக ஆட்சியில் உருவாக்கப்பட்டுள்ளதால் சட்டம்–ஒழுங்கு பாதுகாக்கப்பட்டு, பல்வேறு மாநிலங்களிலிருந்தும், மாவட்டங்களிலிருந்தும் திருப்பூருக்கு வந்து பணியாற்றும் இலட்சக்கணக்கான பனியன் தொழிலாளர்கள் அமைதியுடன் வாழ்ந்து வருகின்றார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் முன்னேற்றத்திற்காகவும், தொழில் வளர்ச்சிக்காகவும் அயராது பணியாற்றிவரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம், திருப்பூர் வடக்கு சட்டமன்றத் தொகுதியின் சார்பில் கீழ்க்கண்ட கோரிக்கைகளை சமர்ப்பிக்க விரும்புகிறேன்:

சிறப்பு வாய்ந்த பின்னலாடைத் தொழிலை மேலும் வளர்ச்சி பெற வைத்திடும் வகையில், பின்னலாடை வாரியம் ஒன்று அமைத்துத் தந்திட வேண்டும். திருப்பூர் மாவட்ட சுற்றுச்சூழல் நல அலுவலகம் புதியதாகக் கட்டி, சொந்தக் கட்டடத்தில் இயங்க அனுமதி அளிக்க வேண்டும். பஞ்சு தவிர்த்த பிற நூல்களைப் பயன்படுத்தி, புதிய கை ஆடைகளைத் தயாரிக்கவும், புதிய தொழில்நுட்பத்துடன் தொழிலை வளர்ச்சி பெற வைக்கவும், திருப்பூரில் பின்னலாடை ஆராய்ச்சி மையம் ஒன்றை உருவாக்கவும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். பனியன் தொழிலாளர்களுக்கு முறையான வழியில் திறன் மேம்பாட்டுப் பயிற்சியினை அளித்து, தொழில் வளர்ச்சியில் ஈடுபட மத்திய அரசிடம் வலியுறுத்தி, தொழிலாளர் திறன் மேம்பாட்டு மையம் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். வெளியூரிலிருந்து திருப்பூருக்கு வந்து குடியேறி, பனியன் தொழிலில் ஈடுபட்டுள்ள இலட்சக்கணக்கான தொழிலாளர்களுக்கு குடியிருக்க ஏதுவாக மத்திய, மாநில அரசுகள் மானியத்துடன்கூடிய தொழிலாளர் குடியிருப்புகள் கட்ட அரசு அனுமதியளிக்க வேண்டும்.

திருப்பூர் மாவட்டம், வடக்கு சட்டமன்றத் தொகுதியில் கடந்த வருடம் பிப்ரவரி 11 ஆம் தேதி மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களும் அடிக்கல் நாட்டிய இ.எஸ்.ஐ. மருத்துவமனையின் கட்டடப் பணிகள் இதுவரை தொடங்கப்படாமல் உள்ளன. வெளி மாவட்டம், வெளி மாநிலங்களைச் சேர்ந்த சுமார் ஆறு இலட்சம் தொழிலாளர்கள் இங்கு பணிபுரிந்து வருகின்றனர். தற்போது வரை தொழிலாளர்கள், சிகிச்சைக்காக சுமார் 60 கி.மீ. தூரம் பயணம் செய்து, கோவை இ.எஸ்.ஐ. மருத்துவமனைக்குச் செல்லும் நிலையே தொடர்கிறது. எனவே, விரைவில் இ.எஸ்.ஐ. மருத்துவமனை கட்டடப் பணிகளைத் தொடங்க. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகின்றபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் யாருடைய பெயரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. அதேபோல, மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்களும் யாருடைய பெயரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அவையில் இல்லாத ** பற்றிச் சொன்னதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று நான் உங்களிடத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–00

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: **குறித்து மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறியதும், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கூறியதும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. க.நா. விஜயகுமார், பேசுங்கள்.

திரு. க.நா. விஜயகுமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனவே, விரைவில் E.S.I. மருத்துவமனைக்கான கட்டடப் பணிகள் தொடங்க ஆவன செய்து உதவிட வேண்டுமாய் மிகவும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். எங்கள் தொகுதி கைத்தறி

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

நெசவாளர்கள் மிகுந்த பகுதி. 2020–2021 ஆம் நிதியாண்டிலும் கைத்தறி நெசவாளர்களுக்கு, கைத்தறி ஆதரவுத் திட்டத்திற்கு 40 கோடி ரூபாய் ஒதுக்கித் தந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு நெசவாளர்களின் சார்பில் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், மாண்புமிகு அம்மா அவர்கள், பேரவையில் விதி 110–ன்கீழ் தமிழகம் முழுவதும் கைத்தறி நெசவாளர்களுக்கு சூரிய மின்சக்தியுடன்கூடிய 10 ஆயிரம் பசுமை வீடுகள் வழங்கும் திட்டத்தை அறிவித்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஒரு வீட்டிற்கு 2.60 இலட்சம் ரூபாய் மானியத்துடன் பசுமை வீடுகள் அமைத்துக் கொடுத்திருக்கிறது. அந்த வகையிலே, நெசவாளர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தியுள்ளார்கள். ஆகவே, கைத்தறி நெசவாளர்களுக்கும் பாதுகாவலராக இருந்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வீடில்லா ஏழை கைத்தறி நெசவாளர்களுக்கு சூரிய மின்சக்தியுடன்கூடிய பசுமை வீடுகளுக்கு 3 இலட்சம் ரூபாயாக மானியத்தை உயர்த்திக் கொடுத்து நெசவாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஒருங்கிணைந்த கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் சட்டமன்றத் தொகுதியில் இயங்கும் 92 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசு வழங்க வேண்டிய தள்ளுபடி மானியத் தொகை ஜனவரி 2020 முடிய வழங்க ஆவன செய்ய வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

திருப்பூர் இந்தியாவின் பின்னலாடை நகர் என்பதால், பலதரப்பட்ட வியாபாரிகளும், வெளிநாட்டினரும் வந்து செல்வதாலும், மருத்துவம், கல்வி, தொழில், வேலைவாய்ப்பு என பலவகைகளிலும் போக்குவரத்து நெரிசல் இல்லாமல் பயணிக்கவும், தொழில் வளர்ச்சிக்கும் மெட்ரோ இரயில் திட்டம் திருப்பூருக்கு மிக மிக அவசியமாகிறது. கோவை, உக்கடம் பகுதியை மையமாக கொண்டது மெட்ரோ இரயில் திட்டம். அவினாசி சாலையில் கனியூர் வரையிலும், திருச்சி சாலையில் காரணம்பேட்டை வரையிலும், மெட்ரோ இரயில் சேவை திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. எனவே, அதை திருப்பூர் வரை நீட்டித்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இத்திட்டம் நிறைவேறி மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவரும்போது, இன்றுபோல் என்றுமே கொங்கு மண்டலத்தில் தங்களது பெயரும் புகழும் எதிர்காலத்திலும் நிலைத்து நிற்கும் என்பதை உறுதிபடக் கூறுகிறேன்.

திருப்பூர் வடக்கு சட்டமன்றத் தொகுதியில் அரசு பொறியியல் கல்லூரியும், அரசு கலைக் கல்லூரியும் துவங்க விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். திருப்பூர் வடக்கு தொகுதியில், பெண்களுக்கென தனி மேல்நிலைப் பள்ளி அமைத்திட மருதாசலபுரம் பகுதியிலுள்ள இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான 2.75 ஏக்கர் நிலத்தினை வாடகைக்கு அனுமதித்து அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியை அமைக்க அரசு ஆணை பிறப்பிக்க வேண்டும்.

திருப்பூர் வடக்கு வட்டாட்சியர் அலுவலகம், திருப்பூர் தெற்கு தொகுதிக்குள் அமைந்துள்ளது. திருப்பூர் வடக்கு தொகுதியில் உள்ள ஒன்றியப் பகுதி மக்கள் சுமார் 23 கி.மீ. வரை கடும் போக்குவரத்து நெரிசலில் சிக்கி, வட்டாட்சியர் அலுவலகத்திற்குச் செல்ல வேண்டிய நிலையுள்ளது. இது போக்குவரத்து நிறைந்த திருப்பூர் சாலைகளில் ஒரு முழு வேலை நாளையும் இழந்து, மக்கள் வேலை செய்ய இயலாத நிலையுள்ளது. எனவே, மக்களின் சிரமத்தைப் போக்கும்பொருட்டு, திருப்பூர் வடக்கு தொகுதியின் மையப் பகுதியில் புதிய வட்டாட்சியர் அலுவலகம் அமைத்துத்தர ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தொட்டிபாளையம் வருவாய் கிராமம் என்பது மிகப் பெரிய கிராமம் ஆகும். இதில் கிராம நிருவாக அலுவலர் திருப்பூர் தெற்கு மற்றும் வடக்கு சட்டமன்ற தொகுதிகளுக்கும் பொதுவாக உள்ளார். கிராம நிருவாக அலுவலர் அலுவலகம் திருப்பூர் தெற்கு தொகுதியில் உள்ளதால், மக்கள் கடும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர். ஆகவே, தொட்டிபாளையம் வருவாய் கிராமத்தை இரண்டாகப் பிரித்து வடக்கு தொகுதியில் ஒரு கிராம நிருவாக அலுவலர் அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்ய வேண்டுகிறேன்.

பிற்பகல் 1–05

திருப்பூர் வடக்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஒன்றியப் பகுதியான பெருமாநல்லூரில் அமைந்திருக்கும் அருள்மிகு கொண்டத்து காளியம்மன் திருக்கோயில் மிகவும் பிரசித்தி பெற்றதாகும். ஆண்டு ஒன்றிற்கு 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் வருமானம் வருவதுடன், பங்குனி மாதத்தில் நடைபெறும் குண்டம் தேர்த் திருவிழா நாட்களில் சுமார் 6 இலட்சத்திற்கும் மேற்பட்ட பக்தர்களும் வந்து செல்கிறார்கள். எனவே, இந்தத் திருக்கோயிலை நிலை உயர்வு செய்து தனி செயல் அலுவலரை நியமித்துத் தருமாறு பொது மக்களின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

திருப்பூர் வடக்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட செட்டிபாளையம் பகுதியில் அருள்மிகு செல்லாண்டியம்மன்

திருக்கோயில் அமைந்துள்ளது. இத்திருக்கோயில் சுமார் 200 ஆண்டுகால பழமையானது. 2014 ஆம் ஆண்டு இக்கோயில் திருப்பணிக்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் விதி 110–ன்கீழ் 35 இலட்சம் ரூபாய் நிதியை ஒதுக்கி, சட்டசபையில் அறிவித்தார்கள். இந்த ஆண்டு இறுதிக்குள் குட முழுக்கு நடைபெற வேண்டுமென உத்தரவிட்டார்கள். ஆனால், போதுமான நிதி வசதி இருந்தும், பணிகள் பாதியில் நிறுத்தப்பட்டுள்ளன. இக்கோயில் திருப்பணிகளை மீண்டும் ஆரம்பித்து, விரைவில் குட முழுக்கு நடைபெற நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திருப்பூர் மாவட்டத்தை தலைமையிடமாகக் கொண்டு தனியாக மத்திய கூட்டுறவு வங்கி ஒன்று இல்லாததால், தற்போது திருப்பூர் மாவட்டத்தில் உள்ள தாராபுரம், காங்கேயம் ஆகிய பகுதிகள் ஈரோடு மாவட்டத்திலுள்ள மத்திய கூட்டுறவு வங்கியுடனும், திருப்பூர், அவினாசி, பல்லடம், உடுமலைப்பேட்டை ஆகிய பகுதிகள் கோவை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியுடனும் இணைந்து செயல்பட்டு வருகின்றன. ஆகவே, திருப்பூர் மாவட்டத்தை தலைமையிடமாகக் கொண்டு புதியதாக ஒரு மத்திய கூட்டுறவு வங்கியை அமைத்துத்தர அரசு ஆவன செய்ய வேண்டும்.

திருப்பூர் வடக்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருப்பூர் மாநகராட்சி பகுதியான அங்கேரிபாளையம் பகுதியில் 2092 செட்டிபாளையம் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கம் செயல்பட்டு வருகிறது. . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் உங்கள் கோரிக்கைகளையெல்லாம் எழுதிக் கொடுங்கள். அவைக் குறிப்பில் பதிவுசெய்துகொள்ளலாம். நன்றிக்கு வாருங்கள். (குறுக்கீடு) நன்றிக்கு வாருங்கள்.

திரு. க.நா. விஜயகுமார்: இன்னும் இரண்டே இரண்டு கோரிக்கைகள்தான். முடித்துவிடுகிறேன். இச்சங்கத்தின் செயல் எல்லைகளாக செட்டிபாளையம், தொட்டிபாளையம், மண்ணரை ஆகிய பகுதிகள் உள்ளன. இச்சங்கத்தில் A வகுப்பு உறுப்பினர்கள் 6,472 மற்றும் B வகுப்பு உறுப்பினர்கள் 6,974 என, 13 ஆயிரத்து 446 உறுப்பினர்கள் உள்ளனர். மேலும், இச்சங்கத்தின்கீழ் 22 ஆயிரத்து 650 குடும்ப அட்டைகளுக்கான 23 அரசு நியாய விலைக் கடைகள் இயங்குகின்றன. எனவே, இந்த நிதியாண்டிலே, இந்த சொசைட்டியை, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தை, நகர கூட்டுறவுச் சங்கமாகத் தரமுயர்த்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திருப்பூர் வடக்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருப்பூர் ஒன்றியம், கணக்கம்பாளையம் ஊராட்சிப் பகுதியில் தாய்–சேய் நல விடுதி செயல்பட்டு வருகிறது. கணக்கம்பாளையம் கிராமமானது திருப்பூர் மாநகராட்சிப் பகுதியை ஒட்டி அமைந்துள்ளது. ஆயிரக்கணக்கான பனியன் தொழிலாளர்கள் மற்றும் நெசவாளர்கள் நிறைந்த இந்த கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று தேவைப்படுகிறது. எனவே, கணக்கம்பாளையம் ஊராட்சியில் செயல்பட்டுவரும் தாய்–சேய் நல விடுதியை ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரமுயர்த்தித் தருவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும்.

மீதி கோரிக்கைகளை எல்லாம் சட்டமன்றத்திலே நான் படித்ததாகப் பதிவுசெய்துகொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கால்நடை பராமரிப்புத் துறையின் சார்பிலே சில கோரிக்கைகளை வைக்கின்றேன். திருப்பூர் வடக்கு தொகுதிக்குட்பட்ட பூலுவபட்டி, வேலம்பாளையம், பெருமாநல்லூர், தொரவலூர், சொக்கனூர் ஆகிய 5 இடங்களில் கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டு வருகின்றன. ராக்கியாபட்டியில் கால்நடை கிளை நிலையம் ஒன்றும் செயல்பட்டு வருகிறது. இதில் பெருமாநல்லூர் கால்நடை மருந்தகத்தை கால்நடை மருத்துவமனையாகத் தரமுயர்த்தித் தருமாறும், தரமுயர்த்தப்படவிருக்கும் கால்நடை மருத்துவமனைக்கு கால்நடை மருத்துவருடன் ஒரு கால்நடை உதவி மருத்துவரையும் பணியமர்த்தித் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், எங்கள் தொகுதியிலுள்ள காளிபாளையம் பஞ்சாயத்தில் வாரணாசிபாளையம் என்ற இடத்திலும், பொங்குபாளையம் பஞ்சாயத்தில் பொங்குபாளையம் என்ற இடத்திலும் புதியதாக கால்நடை கிளை நிலையங்கள் அமைத்துத்தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், எங்கள் பகுதியில் கால்நடை பராமரிப்புத் துறையில் கால்நடை ஆய்வாளர் பணியிடமும், கால்நடை பராமரிப்பு உதவியாளர் பணியிடங்களும் காலியாக உள்ளன. இதனால் இத்துறையில் பணிகள் சுணக்கம் ஏற்படுகிறது. ஆகையால், உடனடியாக இந்தப் பணியிடங்களை நிரப்பிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இக்கூட்டத் தொடரில் கால்நடை பராமரிப்புத் துறை மற்றும் மீன் வளத் துறை

மீதான மானியக் கோரிக்கைகளில் உரையாற்றுவதற்கு நல்வாய்ப்பை வழங்கிய மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

பிற்பகல் 1–10

இன்னும் ஐந்து நிமிடங்களில் எனது உரையை முடித்துவிடுகிறேன். திறமையுள்ளவர்கள் எந்தத் துறையிலும் சாதிக்கலாம் என்பதற்கு எடுத்துக்காட்டாய் விளங்கும், எங்கள் மாவட்ட அமைச்சர் அவர்களே, கால்நடை பராமரிப்புத் துறையை எல்லோரும் வியப்போடு பார்க்கும் வண்ணம், இத்துறையின் சார்பாக, சுமார் 1,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஆசியாவிலேயே மிகப் பெரிய கால்நடைப் பூங்கா ஒன்றை அமைத்திட (மேசையைத் தட்டும் ஒலி) சேலம், தலைவாசல் பகுதியில் அறிவித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டி, கிராமப்புற ஏழை விவசாயப் பெண்களின் வாழ்வாதாரம் உயர்ந்திட ஆடு, மாடு, கோழிக் குஞ்சுகள் என தந்து, அவர்களின் வாழ்க்கைக்கு உதவிய மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையில் 2011 ஆம் ஆண்டு முதல் தமிழகத்தில் நிலமற்ற ஏழை விவசாயப் பெண்களுக்கு கறவை மாடுகள், வெள்ளாடுகள் ஆகியவற்றை கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் விலையில்லாமல் வழங்கி வரும் நம்முடைய மாண்புமிகு அம்மாவின் அரசு, தொடர்ந்து மாண்புமிகு முதல்வர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலும் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. ஆகவே, கறவை மாடுகள், வெள்ளாடுகள் இவையில்லாமல், தற்போது நாட்டுக் கோழி குஞ்சுகளையும் வழங்கி ஏழை பெண்களின் வாழ்வாதாரத்தைக் காக்கும் அரசாக செயல்பட்டு வருகிறது. இத்திட்டங்களின்மூலம் தமிழகம் முழுவதும் கிராமப்புற நிலமில்லாத ஏழை விவசாயப் பெண்களின் வாழ்வாதாரம் உயர்ந்திருக்கிறது. விலையில்லா வெள்ளாடுகள் வழங்கும் திட்டத்தின்மூலம் பயனாளிகள் ஒரு வருடத்திற்கு சுமார் 50,000 ரூபாய் முதல் ஒரு இலட்சம் ரூபாய் வரை வருமானம் பெறுகிறார்கள். இதேபோல், விலையில்லா கோழிக் குஞ்சுகள் வழங்கும் திட்டத்தின்மூலம் பயனாளிகள் தோராயமாக மாத வருமானம் சுமார் ரூ.5,000/–லிருந்து ரூ.6,000/– வரை பெறுகிறார்கள். இதேபோல், விலையில்லா கறவை மாடுகள் வழங்கும் திட்டத்தின்மூலம் பயனாளிகள் தோராயமாக

மாத வருமானமாக ரூ.9,000/– வரை பயன் பெறுகிறார்கள். ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்களின் இத்திட்டங்கள்மூலம் நிலமற்ற ஏழை விவசாயப் பெண்களின் பொருளாதாரம் உயர்ந்து, மிகவும் பயனடைகிறார்கள்.

ஆகவே, இத்திட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியோடு தொடர்ந்து நடைமுறைப்படுத்தி வரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கும், இத்துறை அமைச்சர் அவர்களுக்கும், எங்கள் மாவட்ட அமைச்சரான அண்ணன் திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2018–2019 ஆம் ஆண்டிற்கான கோழி அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் புழக்கடை கோழி வளர்ப்பினை ஊக்குவிக்கும் விதமாக ரூ.50 கோடி நிதி ஒதுக்கீட்டில் ஏழ்மை நிலையிலுள்ள 77 ஆயிரம் கிராமப்புற பெண் பயனாளிகளுக்கு, ஒரு பயனாளிக்கு 50 எண்ணிக்கையிலான 4 வார வயதுடைய அசில் இனக்கோழிகள் வீதம் இரவுக் கூண்டுகள் நிறுவுவதற்கான ஊக்கத் தொகையுடன் வழங்கப்படுகின்றன.

அதுமட்டுமல்லாமல், 2019–2020 ஆம் ஆண்டில் பேரூராட்சிகள் மற்றும் கிராம ஊராட்சிகளில் உள்ள 2.40 இலட்சம் பெண் பயனாளிகள் பயன்பெறும் வகையில் ரூ.50 கோடி செலவில் இது செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை 58,255 பெண் பயனாளிகளுக்கு ஒரு பயனாளிக்கு 25 கோழிக் குஞ்சுகள்வீதம் 14,56,375 அசில் இன 4 வார வயதுடைய கோழிக் குஞ்சுகள் வழங்கப்பட்டுள்ளன.

கால்நடை கிளை நிலையங்களைக் கால்நடை மருந்தகங்களாகத் தரமுயர்த்துவதன் வாயிலாக தொலைதூரங்களில் வசிக்கும் கால்நடை வளர்ப்போருக்கு அவர்களின் இருப்பிடங்களிலோ அல்லது அதற்கு அருகிலோ கால்நடை மருத்துவ சேவைகளை வழங்குவதற்கு இந்த அரசு முனைந்து வருகிறது.

அதுமட்டுமல்லாமல், 2011–2012 முதல் மொத்தம் ரூ.106.04 கோடி செலவில் 1,060 கால்நடை கிளை நிலையங்கள் கால்நடை மருந்தகங்களாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளன. தேவைப்பட்ட இடங்களில் 20 புதிய கால்நடை மருந்தகங்கள் தோற்றுவிக்கப்பட்டிருக்கின்றன. 10 கால்நடை மருந்தகங்கள் கால்நடை மருத்துவமனைகளாகவும் தரமுயர்த்தப்பட்டுள்ளன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் இன்னும் 5 பேர் பேச வேண்டும். நன்றி சொல்லி, உரையை முடியுங்கள்.

திரு. க.நா. விஜயகுமார்: ஒரே நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன். எனவே, அனுபவம் வாய்ந்த நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் தலைமையிலும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களின் துணையோடும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு வருகின்ற 2021 ஆம் ஆண்டில் வரவிருக்கின்ற சட்டமன்றப் பொதுத் தேர்தலிலும் 100 சதவீத வெற்றியைப் பெறுவதும், தமிழகத்தை இந்தியாவில் முதன்மை மாநிலம் ஆக்குவதும் உறுதி. (மேசையைத் தட்டும் ஒலி) தொழில் துறையில் தமிழகம் தொடர்ந்து முன்னேறுவது உறுதி என்று கூறி, இந்த மானியக் கோரிக்கைகளில் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறிக்கொள்கிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வாழ்க, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நாமம் வாழ்க என்று கூறி நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 1–15

தொகுதி கோரிக்கைகள்

திருப்பூர் வடக்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பெருமாநல்லூர் பகுதியில் புதிதாக அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளி அமைத்துக் கொடுத்தமைக்கு திருப்பூர் வடக்கு சட்டமன்றத் தொகுதி பொது மக்களின் சார்பிலும், எனது சார்பிலும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் பள்ளியை இந்தக் கல்வியாண்டில் மேல்நிலைப் பள்ளியாக தரமுயர்த்தித் தந்து உதவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திருப்பூர் மாவட்டம், திருப்பூர் வடக்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 10 கிராம ஊராட்சி பகுதிகளுக்கான ஊராட்சி ஒன்றிய அலுவலகமானது திருப்பூர் தெற்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மாநகராட்சியின் மையப் பகுதியில் அமைந்துள்ளது. திருப்பூர் வடக்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கிராம மக்கள் சுமார் 17 கிலோ மீட்டர் தூரம் பயணம் செய்து ஒன்றிய அலுவலகம் வர வேண்டியுள்ளது. திருப்பூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தை திருப்பூர் வடக்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மையப் பகுதியில் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, மீன் வளத் துறை, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளில் நடைபெறுகின்ற விவாதத்தில் நான் பேசுவதற்கு வாய்ப்பளித்த எங்களுடைய சட்டமன்றக் கட்சித் தலைவர் அவர்களுக்கும், மரியாதைக்குரிய மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் எனது பணிவான வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மேலே கடிகாரத்தில் நேரத்தையும் பார்த்துக்கொள்ளுங்கள்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், கடியப்பட்டணம், ஆரோக்கியபுரம், முட்டம், கன்னியாகுமரி, இராஜாக்கமங்கலம் துறை, இனையம், இராமன்துறை, புத்தன்துறை, குறும்பனை, பூத்துறை, தூத்தூர் ஆகிய மீனவ கிராமங்களைச் சேர்ந்த சுமார் 600–க்கு மேற்பட்ட மீனவர்கள், தமிழகத்தைச் சேர்ந்த மீனவர்கள் உட்பட 721–க்கும் மேற்பட்ட மீனவர்கள் ஈரான் நாட்டில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். இந்நிலையில் தற்போது உலகை அச்சுறுத்திவரும் Corona Virus ஈரான் நாட்டில் வேகமாகப் பரவிவருவதால் மேற்படி மீனவர்கள் தனி விமானம்மூலம் தாயகம் திரும்ப போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் பலபேர் கவன ஈர்ப்புத் தீர்மானமாகக் கொடுத்திருக்கின்றார்கள். கன்னியாகுமரி மாவட்டம், ஆரோக்கியபுரம், இனையம், புத்தன்துறை மற்றும் அருகிலுள்ள மீனவ கிராமங்களைச் சேர்ந்த 300–க்கும் மேற்பட்ட மீனவர்கள் ஒப்பந்த அடிப்படையில் ஈரான் நாட்டில் மீன்பிடித் தொழில் மேற்கொண்டுவருகின்றனர். தற்போது ஈரான் நாட்டில் Corona Virus தாக்கம் அதிகரித்துள்ள

நிலையில், அந்நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்குச் செல்லும் விமான சேவை முற்றிலுமாக நிறுத்தப்பட்டுள்ள நிலையில், அந்நாட்டில் மீன் பிடித் தொழில் மேற்கொண்டுவரும் தமிழக மீனவர்கள் தாயகம் திரும்ப முடியாமல் தவித்துவரும் செய்தியானது, மீனவ அமைப்புகள்மூலம் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. எனவே, இதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடனடியாக மத்திய அரசைத் தொடர்புகொண்டு உடனடியாக அவர்களை தாயகம் அழைத்து வருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வலியுறுத்தியுள்ளார்கள். மேலும், ஈரான் நாட்டிலுள்ள தமிழக மீனவர்களை விரைவில் தமிழகம் அழைத்துவர அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகத்தை கடிதம் மூலமும் தமிழக அரசு வலியுறுத்தியுள்ளது. இதனைத் தொடர்ந்து இந்திய தூதரக அதிகாரிகள் ஈரானில் தங்கியுள்ள மீனவர்களை சென்று சந்தித்து, அம்மீனவர்களுக்கு மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்பட உள்ளதாகவும் செய்திகள் வந்தவண்ணம் இருக்கின்றன. இதனிடையே ஈரானிலுள்ள 58 இந்திய மீனவர்களை இந்திய விமானப்படைமூலம் 11–3–2020 அன்று இந்தியாவிற்கு அழைத்து வரப்படவுள்ளதாக இருந்தது. இருப்பினும் மீனவர்கள் எவரும் இதுவரை இந்தியாவிற்கு அழைத்து வரப்படவில்லை. தமிழக அரசைப் பொறுத்தவரையில் இம்மீனவர்களை போர்க்கால அடிப்படையில் மீட்டுக் கொண்டுவருவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டுவருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில், அந்த மாவட்டத்தைச் சேர்ந்த டெல்லி சிறப்பு பிரதிநிதி திரு. தளவாய்சுந்தரம், TAFCOFED Chairman திரு. சேவியர் மனோகரன் உட்பட நம்முடைய ஆயர்கள், அதாவது பிஷப் உட்பட Father எல்லாம் அங்கே போயிருக்கிறார்கள். மீனவர்களை மீட்டுக் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை தொடர்ந்து அம்மா அவர்கள் அரசு எடுத்துக்கொண்டு வருகிறது. எனவே மீனவர்கள் பத்திரமாக இருக்கிறார்கள், எந்தக் கவலையும் தேவையில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2019 ஆம் ஆண்டு நம்முடைய முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய நூற்றாண்டு விழாவில்,

மரியாதைக்குரிய தமிழக முதல்வர் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு பல்வேறு திட்டங்களை வழங்கினார்கள். அந்தத் திட்டங்கள் ஆய்வு செய்யப்பட்டு, அதனுடைய விரிவான திட்ட அறிக்கை பெறப்பட்டதாகச் சொல்கிறார்கள். என்னுடைய தொகுதியில்கூட, மேல்மிடாலம், இனையம், பூத்துறை இப்படிப்பட்ட கடலோர கிராமங்களில் கடலரிப்புத் தடுப்புச் சுவர், தூண்டில்வளைவு அமைத்துத் தருவதாக அறிவித்தார்கள். அதை உடனடியாக ஆய்வு செய்து அதற்கான பணிகளைத் தொடங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நம்முடைய பொன்மனச் செம்மல், புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய நூற்றாண்டு விழாவின்போது அறிவித்த பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டிருக்கின்றன. சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும், ஏறக்குறைய 116 கோடி ரூபாய் செலவில் கடல் அரிப்பைத் தவிர்க்க வேண்டும் என்பதற்காக எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு, அந்தப் பணிகள்கூட தற்போது நடைபெற்று வருகின்றன. குறிப்பாக, எந்தவொரு ஆட்சியிலும் இல்லாத அளவுக்கு கிள்ளியூர் தொகுதிக்கு மட்டும் நலத் திட்டங்களுக்காகச் செய்யப்பட்ட உதவி, ஏறக்குறைய 220 கோடி ரூபாய். அதேபோன்று அடிப்படை வசதிகளுக்கு உங்கள் தொகுதிக்கு மட்டுமே 316 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 1–20

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ரங்கநாதன் அவர்கள், தயவுசெய்து உங்கள் இருக்கைக்குச் செல்லுங்கள்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ரங்கநாதன், உங்கள் இருக்கைக்குச் செல்லுங்கள்.

திரு. செ. ராஜேஷ் குமார்: நான் பேசிய பிறகு, மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொன்னால் நன்றாக இருக்கும். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் அவை நடவடிக்கையை கவனியுங்கள். நீங்கள் இருக்கை மாறி உட்கார்ந்து அவர்களையும் கவனிக்கவிடாமல் செய்கிறீர்கள், அமைதியாக இருங்கள்.

திரு. செ. ராஜேஷ் குமார்: கன்னியாகுமரி மாவட்டம், கிள்ளியூர் வட்டம், முள்ளூர்துறை மற்றும் அரியந்தோப்பில் உள்ள பழுதடைந்த கடலரிப்புத் தடுப்புச் சுவரை மறுசீரமைப்பு செய்ய வேண்டும். முள்ளூர்துறையில் 300 மீட்டர் நீளத்திலும், அரியந்தோப்பில் 300 மீட்டர் நீளத்திலும் மறுசீரமைப்பு செய்வதற்காக 2019–2020 ஆம் ஆண்டிற்கான விலை விவரப்படி மதிப்பீடுகள் முறையே ரூ.177.00 இலட்சம் மற்றும் ரூ.167.50 இலட்சத்திற்குத் தயாரிக்கப்பட்டு, மேல் நடவடிக்கைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்த விவரம் எனக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், தேங்காய்பட்டணம், அரியந்தோப்பு, முள்ளூர்துறை ஆகிய பகுதிகளிலுள்ள சாலை கிட்டத்தட்ட 15 வருட காலமாக முழுமையாக உடைக்கப்பட்டு, தற்போது போக்குவரத்தே நடைபெறவில்லை. இதுகுறித்து, மீன் வளத் துறையினரிடம் கேட்டால், அவர்கள், கடற்கரையோரத்தை strong செய்து, கடலரிப்புத் தடுப்புச் சுவரை அமைத்தால் மட்டுமே இந்தச் சாலையை சரியாக சீரமைக்க முடியும் என்கிறார்கள். இது, இரண்டு துறைகள் சார்ந்த பணிகள் என்பதால், சம்பந்தப்பட்ட இரண்டு துறைகளும் சேர்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனெனில், நீண்ட காலமாக, கிட்டத்தட்ட 15 வருட காலமாக அந்தச் சாலை முழுமையாக துண்டிக்கப்பட்டுள்ளது; போக்குவரத்தே நடைபெற முடியாத நிலையில் இருக்கிறது. அதேபோன்று, வள்ளவிளை, இடப்பாடு, இரவிபுத்தன்துறை ஆகிய பகுதிகளிலுள்ள சாலைகளும் கடல் சீற்றத்தினால் முழுமையாகத் துண்டிக்கப்பட்டு, பேருந்துகள் போக முடியாத நிலையில் இருக்கின்றன. இங்கும், இந்த நிலை 15 வருடங்களுக்கு மேல் தொடர்ந்து கொண்டிருக்கிறது. நான் சட்டமன்ற உறுப்பினரான பிறகு 2016 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு வருடமும் நான் பேசுகின்றபோது, இதுகுறித்து கூறிக் கொண்டிருக்கிறேன். ஆனால், இதுவரையிலும் அதற்கான பணிகள்

நடைபெறவில்லை. மீன் வளத் துறையிடம் நிதி இருக்கிறது. ஆனால், கடலரிப்புத் தடுப்புத் துறை, Anti Sea Erosion Department–ல் பணமே இல்லை, மீன் வளத் துறைதான் அந்தப் பணிகளைச் செய்ய வேண்டும் என்று சொல்கிறார்கள். அந்த இரண்டு சாலைகளிலும் போக்குவரத்து முற்றிலுமாக இல்லை. கடலரிப்புத் தடுப்புச் சுவரை கட்டினால்தான், போக்குவரத்து வாகனங்கள் செல்வதற்கு ஏதுவாக அந்தச் சாலைகளை சீரமைக்க முடியும். ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களும் அங்கு உடனடியாக ஆய்வு மேற்கொண்டு, அப்பணிகளை தயவுசெய்து செய்து தரும்படி அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேங்காய்பட்டணம் மீன்பிடித் துறைமுகத்தை நவீனமயமாக்க வேண்டுமென்ற கருத்துரு அரசினுடைய தீவிர பரிசீலனையில் இருக்கிறது. எனவே, அதுகுறித்த report எல்லாம் தயாரிக்கப்பட்டு, என்னென்ன வசதிகள் தேவையோ, அவற்றையெல்லாம் செய்ய இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அதைப் பற்றி கவலைப்படத் தேவையில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அதற்கான அறிவிப்பை விரைவில் வெளியிடவுள்ளார்கள்.

அதேபோன்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல்வேறு வசதிகளை செய்து தர வேண்டுமென்றும் கேட்டிருக்கிறார்கள். அதற்காக ஒரு DPR தயார் செய்து, அதிகபட்சமாக என்ன செய்ய முடியுமோ அதைச் செய்து தருகிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள், பேசுங்கள்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாராளுமன்றத்தில், தேசிய கடல் மீன்பிடிப்பு ஒழுங்குமுறை மற்றும் மேலாண்மை மசோதா, 2019 நிறைவேற்றப்படவுள்ளதாகத் தெரிவித்து, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள மீனவ மக்களிடம் கருத்துக் கேட்புக் கூட்டங்களைக்கூட நடத்தினார்கள். ஆனால், இந்த மசோதாவில் இடம் பெறும் விதிமுறைகள் என்னவெனில், கடலில்

12 நாட்டிக்கல் மைல் முதல் 200 நாட்டிக்கல் மைல் வரையிலான தூரம் பிரத்யேக பொருளாதார மண்டலத்தைச் சார்ந்தது. இதிலுள்ள விதிமுறைகள் கடலை நம்பி வாழும் மீனவர்களுக்கு பாதுகாப்பாகவும், உதவிகரமாகவும் இல்லை. மாறாக, இந்தச் சட்டங்கள் மீனவர்களை ஒடுக்கும் முறையில் அமைந்துள்ளன. கடற்கரையிலிருந்து 12 நாட்டிக்கல் மைலுக்கு அப்பால், அதாவது 22 கி.மீ.–க்கு அப்பால் மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்லக் கூடாது. 12 நாட்டிக்கல் மைலுக்கு அப்பால் மீன் பிடித்தால் கடும் தொகை அபராதமாக விதிக்கப்படும். படகுகளில் தொழில் செய்யும் அனைவரும் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்படுவார்கள். ஒவ்வொரு முறையும் தொழிலுக்குச் செல்லும்போது, அரசிடம் அனுமதி வாங்க வேண்டும். அப்படி அனுமதி கோரும்போது, எத்தனை நாட்கள், எத்தனை வாரங்கள், எத்தனை மாதங்கள், எந்த இடத்தில், எந்த வகை மீன்களைப் பிடிக்கப் போகிறோம் என்பதை எழுத்து மூலமாகத் தெரிவிக்க வேண்டும். எழுதிக் கொடுத்ததற்கு மாறாக ஏதாவது நடைபெற்றால், தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்படும். அரசு அதிகாரிகள் படகைச் சோதனை செய்யும்போது, படகு சேதம் அடைந்தாலும், உடைந்து போனாலும், அரசு அதிகாரிகள்மீது குற்றம் சாட்ட முடியாது, இழப்பீடும் கோர முடியாது. படகுகளில் ஆட்களை பணியமர்த்துவது, காப்பீடுகள் உள்ளிட்ட அனைத்தும் வணிகக் கப்பல் சட்டம், 1958–ன்படி, வரையறை செய்யப்படும். சிறு படகுகூட, வணிகக் கப்பல் சட்டம் 1958–ன்படி வரையறை செய்யப்படும். இது எந்தவிதத்திலும் ஏற்புடையது அல்ல. வெளிநாட்டு கப்பல்களுக்கு பெரிய கட்டுப்பாடுகள் எதுவும் இல்லை. மாறாக, பிற நோக்கங்கள் என்னும் பெயரில் அவர்களுக்கு சிறப்பு உரிமங்கள் கொடுப்பதால், வெளிநாட்டுக் கப்பல்கள் ஆழ்கடல் பகுதியில் ஆதிக்கம் செலுத்தும்.

பிற்பகல் 1–25

இம்மசோதா வெளிநாட்டுக் கப்பல்களுக்கு கடலைத் தாரை வார்க்கவும், மத்திய அரசின் அதிகாரத்தைப் பயன்படுத்தி கடல் வளத்தைப் பயன்படுத்தவும் உதவும். அதேவேளையில் மீனவ சமூகத்தை அடக்கி ஒடுக்கும் வகையில் கொண்டு வரப்படுவதே இம்மசோதாவின் நோக்கம் என்பது தெளிவாகத் தெரிகிறது. இந்தச் சட்டத்தை மத்திய அரசு அமல்படுத்தினால், மீனவர்களின் வாழ்க்கை முற்றிலும் அழிக்கப்படும் என்பதை மத்திய அரசிடம் வலியுறுத்தி, அழுத்தம் கொடுத்து, இதை முழுமையாக தமிழக அரசு எதிர்க்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மசோதா இன்னும் செயல்வடிவமே பெறவில்லை. இது ஒரு draft தான். Central Government, இந்தமாதிரி கொண்டு வரலாம் என்று draft கொடுத்திருக்கிறார்கள். அந்த வரைவு குறித்து ஒரு கருத்துக் கேட்புக் கூட்டம்–Stakeholders Meeting–ல் எல்லா மாவட்ட அளவிலும், மீனவர்களுடைய கருத்து கேட்கப்பட்டது. மீனவர்களும் அவர்களுடைய ஆட்சேபணைகளை அந்தக் கருத்துக் கேட்புக் கூட்டத்தில் தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஒரு விஷயம், நம்முடைய அம்மாவினுடைய அரசு, அதிலும் குறிப்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மக்கள் விரும்பாத, அவர்கள் விவசாயிகளாக இருந்தாலும், நெசவாளர்களாக இருந்தாலும், தொழிலாளர்களாக இருந்தாலும், மீனவர்களாக இருந்தாலும், எந்த ஒரு திட்டத்தையும் ஏற்கமாட்டார்கள். மீனவர்கள் விரும்பினால் மட்டுமே எந்த ஒரு திட்டத்தையும் அரசு ஏற்கும். மீனவர்கள் விரும்பாத எந்த ஒரு திட்டத்தையும் அரசு நிச்சயமாக ஏற்காது. அது அரசின் நிலை என்பதை உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜேஷ் குமார் அவர்கள்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் 13 கடலோர மாவட்டங்கள் உள்ளன. கன்னியாகுமரி மாவட்டத்தில் மாதத்தின் கடைசி வெள்ளிக்கிழமை மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் அனைத்துத் துறை அதிகாரிகள் முன்னிலையில் மீனவர்கள் குறை தீர்ப்புக் கூட்டம் நடைபெறுகிறது. ஆனால், மற்ற மாவட்டங்களில் மீனவர் குறை தீர்ப்புக் கூட்டம் நடைபெறுவதில்லை. ஆகையால், அரசு தலையிட்டு, மற்ற 12 மாவட்டங்களிலும் மீனவர் குறை தீர்ப்புக் கூட்டத்தை நடத்த வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி உங்கள் உரையை முடியுங்கள்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மீனவர்களை பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க வேண்டும். இது சம்பந்தமாக கடந்த 1996 ஆம்

ஆண்டு பாண்டிச்சேரி சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு விட்டது. கடந்த 2007 ஆம் ஆண்டு ஆந்திர மாநில சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கடந்த 52 ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட கடலோர மக்கள் சங்கம், மீனவர்களை பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்தது. அதனை மண்டல் ஆணையம் ஏற்றுக்கொண்டது. குறிப்பாக, சுனாமி, ஒகி புயல் போன்ற பேரிடர்கள் வரும்போதுதான் பொருளாதார நிலை, கல்வி நிலை ஆகியவற்றைப் பற்றி அதிகம் கவனம் செலுத்தப்படுகிறது. அரசமைப்புச் சட்டத்தில் எந்த இடத்திலும் பழங்குடியின மக்கள் மலைப் பகுதியில்தான் வாழ வேண்டுமென்று கூறவில்லை. ஆகவே, மீனவர்களை பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க வேண்டும்.

1956 ஆம் ஆண்டில் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் ஆட்சியில் மீன் வளத் துறை அமைச்சராகப் பணியாற்றிய திருமதி லூர்தம்மாள் சைமன் அவர்களுக்கு கன்னியாகுமரி மாவட்டத்தில் மணிமண்டபம் கட்ட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மீன்பிடி தடை காலத்திலும், மீன்பிடி குறைந்த காலத்திலும் மீனவர்களுக்கு வழங்கப்படுகின்ற தலா 5,000 ரூபாயை இன்றைய பொருளாதார விலையேற்றத்தைக் கருத்தில் கொண்டு, 10,000 ரூபாயாக உயர்த்தி வழங்க வேண்டும்.

மீன் வளத் துறையின் சார்பில், சிங்காரவேலர் குடியிருப்புத் திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட வீடுகளுக்கு தற்போது பட்டா வழங்குவதற்கு ஆய்வு செய்து வருகிறார்கள். இதேபோன்று மீன் வளத் துறையின் சார்பில் மீனவர்களுக்கு அன்னை இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட அனைத்து வீடுகளுக்கும் வீட்டு மனைப் பட்டா வழங்க வேண்டும்.

மீனவர்கள் சேமிப்புத் திட்டத்தின்கீழ், மாதம் ரூ.175 வீதம் 8 மாதங்களும், 9–வது மாதம் ரூ.100/–ம் சேர்த்து மொத்தம் ரூ.1,500/– அரசுக்குக் கட்டப்படுகிறது. 10–வது மாதம், மத்திய மாநில அரசுகள் இணைந்து, மானியத்தோடு சேர்த்து, 4,500 ரூபாயை வழங்குகிறார்கள். இத்திட்டம் . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், தயவுசெய்து நன்றியை நோக்கி நகருங்கள்.

திரு. செ. ராஜேஷ் குமார்: இல்லை, இல்லை. எங்களுக்கு மொத்தமே 14 நாட்கள்தான் பேச அனுமதி தந்திருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இல்லை, நீங்கள் நன்றியை நோக்கி நகருங்கள்.

திரு. செ. ராஜேஷ் குமார்: இவ்வளவும் பேசிவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இல்லை, இல்லை. அதிகபட்சம் 2 நிமிடங்கள் பேசுங்கள்.

திரு. செ. ராஜேஷ் குமார்: இத்திட்டம் மீனவர்களின் 60–வது வயதோடு நிறுத்தப்படுகிறது. எனவே, 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கும் மீனவர் உதவித் தொகையை மாதந்தோறும் வழங்க வேண்டும்.

மீன் வளத் துறையின் சார்பில் விவசாயக் கடன் அட்டை Kisan Credit Card திட்டத்தில் மீனவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு மீன் பிடிக்க வள்ளம், engine மற்றும் வலை வாங்குவதற்கு 4 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் மானியத்தோடு கடன் வழங்க மனுக்கள் பெறப்பட்டன. தற்போது அந்தத் தொகை ரூபாய் 2 இலட்சமாகக் குறைக்கப்பட்டுள்ளது. இந்த 2 இலட்சம் ரூபாயை வைத்து வள்ளம், engine, வலை வாங்க முடியாது. எனவே, முழுத் தொகையான 4 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாயை அரசு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பேரிடர் மேலாண்மைச் சட்டத்தின்படி, பேரிடர் என்பது மனிதனால் உருவாக்கப்பட்டதாகவும் இருக்கலாம்; இயற்கைச் சீற்றத்தால் உருவாக்கப்பட்டதாகவும் இருக்கலாம். பெரிய அளவிலுள்ள இயற்கைச் சீற்றங்கள் மட்டுமல்ல, சிறிய அளவிலுள்ள மீனவர்களின் அன்றாட மீன்பிடித் தொழிலில் ஏற்படும் சீற்றங்களும் பேரிடரில் அடங்கும். எனவே, மீனவர்கள் அடையாள அட்டை வைத்திருக்கும் ஒரு மீனவர் கடலில் மீன்பிடிக்கும்போது இறந்தால், அதைப் பேரிடராகக் கருத வேண்டும். ஏனென்றால், ஒரு மீனவர் மீன் பிடிக்கும்போது அவரைக் காணவில்லை என்றால், அவருடைய இறப்புச் சான்றிதழ் கிடைப்பதற்கு 7 வருடங்கள் ஆகின்றன. ஏனென்றால், 7 வருடங்கள் என்றால்கூட அவர்கள் நீதிமன்றத்தில் வழக்கு பதிவு செய்து, affidavit போட்டு, அதிலே அந்த Judgement–ஐ வைத்துத்தான் இறந்ததற்கான இறப்புச் சான்றிதழ் பெற முடியும் என்று Revenue Department side–ல் சொல்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், இங்கே கவனியுங்கள், உங்கள் உரையை ஒரு நிமிடத்தில் முடித்துவிடுங்கள். நீங்கள் பேச ஆரம்பித்து 15 நிமிடங்கள் ஆகிவிட்டன.

திரு. செ. ராஜேஷ் குமார்: காங்கிரஸ் கட்சிக்கு பேசுவதற்கே அனுமதி தரவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இல்லை, அவ்வளவுதான். 7 பேருக்கு 16 நாட்கள் வாய்ப்பு. எங்களுக்கெல்லாம் வருடம் ஒருமுறைதான் வாய்ப்பு கிடைக்கிறது. உங்கள் உரையை முடியுங்கள்.

திரு. செ. ராஜேஷ் குமார்: உரையை முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உங்களுக்கு உரையாற்ற இன்னும் ஒரு நிமிடம்தான். எது முக்கியமோ அதைச் சொல்லுங்கள்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிள்ளியூர் சட்டமன்றத் தொகுதி, ஏழுதேசம் பேரூராட்சி, ஏழுதேசம் கிராமம், Sea village, Survey number 246/4–ல் உள்ள அரசு புறம்போக்கு நிலத்தில், 7 ஆண்டுகளுக்கு முன்னால் ஏற்பட்ட கடல் அரிப்பால் வீடுகளை இழந்து சுமார் 31–க்கும் மேற்பட்ட மீனவ மக்கள் வீடு கட்டி குடியேறி உள்ளனர். இவர்களுக்கு நீண்டகாலமாக குடிமனைப் பட்டா வழங்கப்படவில்லை. மின் இணைப்பும், குடிநீர் வசதியும் இல்லாமல் அவதிப்படுகிறார்கள். இவர்களுடைய சிரமத்தைக் கருத்தில் கொண்டு, வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டும்.

பிற்பகல் 1–30

மீன் வளத் துறையின் சார்பில் கன்னியாகுமரி மாவட்டம், தேங்காய்பட்டணம் மீன்பிடித்துறைமுகத்தின் அருகில் இரயுமன்துறை பகுதியில் ரூபாய் 1 கோடியே 74 இலட்சம் செலவில் அணுகுசாலை சீரமைக்கப்படும் என்று கடந்த 6–7–2019 அன்று அறிவிக்கப்பட்டது. ஆனால், இதுவரையில் அந்தச் சாலை செப்பனிடப்படாமல் மிகவும் மோசமாக உள்ளது. இந்தச் சாலையை சீரமைத்துத் தரும்படி அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், தயவுசெய்து நீங்கள் நன்றி சொல்லுங்கள்.

திரு. செ. ராஜேஷ் குமார்: இல்லை, முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 15 நிமிடங்கள் தாண்டியாகிவிட்டது. நன்றி சொல்லுங்கள்.

திரு. செ. ராஜேஷ் குமார்: முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நன்றி சொல்லுங்கள்.

திரு. செ. ராஜேஷ் குமார்: முடித்துவிடுகிறேன். ஒரே ஒரு point. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த 2019 ஆம் ஆண்டு, ஜூலை மாதத்தில், தேங்காய்பட்டணம் மீன்பிடித் துறைமுகத்தை விரிவாக்கம் செய்து, நவீன வசதிகளுடன்கூடிய ஒருங்கிணைந்த மீன்பிடித் துறைமுகமாக அறிவித்தீர்கள். ஐ.ஐ.டி. மூலம் ஆய்வுப் பணிகளைச் செய்வதற்கு நிதியும் ஒதுக்கப்பட்டது. இதற்கான விரிவான திட்ட அறிக்கை பெற்று, விரிவாக்கம் செய்து, எல்லா வசதிகளுடன்கூடிய நவீன ஒருங்கிணைந்த மீன்பிடித் துறைமுகமாக மாற்றுவதற்கு போதுமான நிதியொதுக்கி விரிவுபடுத்துமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், தேங்காய்பட்டணம் மீன்பிடித் துறைமுகத்தின் முகப்புப் பகுதியிலே இருக்கக்கூடிய mouth–லே மணல் திட்டு இருப்பதனால், அடிக்கடி படகுகள் சேதமடைந்து. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மற்ற தொகுதிக் கோரிக்கைகளையெல்லாம் நாங்கள் பதிவு செய்து கொள்கின்றோம். நீங்கள் பேச ஆரம்பித்து 16 நிமிடங்கள் தாண்டியாகிவிட்டன. இன்னும் 4 உறுப்பினர்கள் பேசி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரை வழங்க வேண்டும்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு முதல்வர் அவர்களை நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்வது, இதில் அடிக்கடி விபத்துகள் ஏற்படுவதனால், நிரந்தரமாக அந்த மணலை அள்ளுவதற்கு உடனடியாக ஒரு dredging machine–ஐ வழங்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, என்னுடைய தொகுதியில் உள்ள கோரிக்கைகளை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களிடம் கொடுத்துவிடுகிறேன். அதை அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று கேட்டு, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நன்றி. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. இரத்தினசபாபதி அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல்வேறு கருத்துகளையெல்லாம் இங்கே எடுத்து வைத்தார்கள். அவற்றை, நிச்சயமாக கவனத்தில் கொண்டு, அவற்றில் எதைச் செய்ய முடியுமோ, அவற்றையெல்லாம் நிச்சயமாக செய்வதற்கு அரசு கடமைப்பட்டிருக்கிறது. குறிப்பாக, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கே தெரியும். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, அவருடைய தொகுதிக்கு அதிகமாகச் செய்திருப்பதை அவர் நிச்சயமாக ஒத்துக்கொள்வார். எனவே, சில பிரச்சினைகளை, DPR, study இதையெல்லாம் செய்த பின்புதான் நாம் செய்ய வேண்டும். அந்த Report வருகின்ற நேரத்தில், கண்டிப்பாக தொடர்ச்சியாக செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். Scheduled Tribe–அதாவது பழங்குடியினர் பட்டியலில் நம்முடைய மீனவ இனத்தைச் சேர்க்க வேண்டுமென்ற கருத்து, அது உண்மையிலேயே நியாயம் என்று கருதிதான் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அதை அறிவித்தார்கள். ஏனென்றால், மீன்பிடித் தொழில் என்பதும் ஒரு வேட்டைதான். எப்படி மலையில் வேட்டையாடுகிறார்களோ, அதேபோல மீனவர்கள் கடலில் வேட்டையாடுகிறார்கள். அதை பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க வேண்டியது ஒரு விஷயம். எனவே, அதுகுறித்து உடனடியாக நாம் மத்திய அரசிடம் தெரிவித்திருக்கிறோம். மத்திய அரசாங்கத்தில், ஆதி திராவிடர் ஆணையம் இருக்கிறது. அந்த ஆணையம்தான் அதை முடிவு செய்ய வேண்டும். தேவையான விவரங்களையெல்லாம் கேட்டிருக்கிறார்கள். எனவே, ஆதி திராவிடர் நலத் துறை அந்த விஷயத்தை முன்னிலைப்படுத்தி, டெல்லியில் கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அழுத்தம் கொடுத்திருக்கிறார்கள். எனவே, உரிய நேரத்தில் மத்திய அரசு, மீனவர்களை பழங்குடியினர் பட்டியலில் சேர்ப்பதற்குரிய நடவடிக்கையை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தேங்காய்பட்டணம் துறைமுகத்தைப் பொறுத்தவரையில், DPR போடப்பட்டு, study செய்யப்பட்டு, report வந்திருக்கிறது. அந்தத் துறைமுகத்தில் இன்னும் என்னென்ன அடிப்படை வசதிகளெல்லாம் செய்யப்பட வேண்டுமென்பது குறித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நல்ல அறிவிப்புகளையெல்லாம் விரைவில் வெளியிடுவார்கள். நீங்கள், கவலைப்படத் தேவையில்லை. இது ஒரு விஷயம்.

இரண்டாவது, முகத்துவாரத்தை ஆழப்படுத்துவது, நிலைப்படுத்துவது மற்றும் அகலப்படுத்துவது என்பது நல்ல விஷயம். ஏனென்று சொன்னால், பொதுவாக மீன் குஞ்சுகள் அதிகம் உற்பத்தியாவது முகத்துவாரத்தில்தான். இந்த முகத்துவாரத்தை நாம் ஆழப்படுத்தி, நிலைப்படுத்தி, அகலப்படுத்தினாலே அதிகபட்சமான மீன் இனவிருத்தி நடைபெறும். அதாவது, சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால், estuaries அதாவது முகத்துவாரங்கள் என்று சொன்னால், ஒரு பிரசவ மருத்துவமனை என்று சொல்லலாம். அந்த அளவிற்கு அதை உணர்ந்ததனால்தான் இன்றைக்கு அதற்கு முக்கியத்துவம் கொடுத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முழுமையாக எல்லா முகத்துவாரங்களையும் ஆழப்படுத்தி, நிலைப்படுத்தி, அகலப்படுத்த வேண்டுமென்று சொன்னதால், எல்லாவற்றையும் செய்து கொண்டிருக்கின்றோம். பல முகத்துவாரங்கள் இருக்கின்றன. ஒரே நாளில் அனைத்து முகத்துவாரங்களையும் செய்வதற்கு கிட்டத்தட்ட 5 ஆயிரம் கோடி ரூபாய் வேண்டும். 5 ஆயிரம் கோடி ரூபாய்க்கான பணிகளை ஒரே வருடத்தில் செய்ய முடியாது. படிப்படியாக நிச்சயமாக மணல் திட்டு ஏற்படாமல், அதன்மூலம் மீனவர்களுடைய வாழ்வாதாரம் பாதிக்கப்படாமல், கடலுக்குச் சென்று தொழில் செய்கின்ற வகையிலே எங்கே மிகவும் chronic ஆக, serious ஆக இருக்கின்றதோ அதையெல்லாம் கண்டறிந்து, உடனடியாக ஆழப்படுத்துவதற்குண்டான நடவடிக்கைகளை அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. இரத்தினசபாபதி அவர்கள்.

பிற்பகல் 1–35

திரு. ஏ. இரத்தினசபாபதி: பேராண்மைமிக்க மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடையேழு வள்ளல்களைப்பற்றி படித்திருக்கிறோம், பார்த்தது, கிடையாது. நம்

கண் முன்னே பார்த்து பழகிய எட்டாவது வள்ளல் புரட்சித் தலைவர், பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர். அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர் வாரி வழங்கிய கொடைகளிலெல்லாம் தலையாய கொடை, போற்றுதலுக்குரிய புரட்சித் தலைவி அம்மா அவர்களை நமக்குத் தந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த இருபெரும் தலைவர்களும் தந்த பொக்கிஷம்தான் ஆட்சியையும், கட்சியையும் போற்றிப் பாதுகாத்து வருகின்ற நம் இனமானம் காத்த இரட்டையர்கள் அண்ணன் ஈ.பி.எஸ். அவர்களும், அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களும். (மேசையைத் தட்டும் ஒலி) அண்ணாவின் ஆட்சிக் காலம் தமிழுக்கு பொற்காலம். புரட்சித் தலைவரின் ஆட்சிக் காலம் அடித்தட்டு மக்களுக்கு பொற்காலம். புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலம் மகளிர், மாணவர்களுக்கு பொற்காலம். இன்றைய இரட்டையர்களின் ஆட்சியோ விவசாயிகளின் பொற்காலம். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைய ஆட்சியைப் பற்றி அன்றைய தனது நாடோடி மன்னன் திரைப்படத்திலே,

“சும்மா கிடந்த நிலத்த கொத்தி
சோம்பல் இல்லாம ஏர் நடத்தி
கம்மா கரையை ஒசத்தி கட்டி
கரும்பு கொல்லையில் வாய்க்கா வெட்டி
சம்பா பயிரை பறிச்சு நட்டு
தகுந்த முறையில் தண்ணீர் விட்டு
நெல்லு விளஞ்சிருக்கு, வரப்பும் உள்ள மறஞ்சிருக்கு”

என்று பாடிவிட்டு, அடுத்த வரிகளைத்தான் வேதனையோடு வெளிப்படுத்துவார்கள்.

“அட காடு விளஞ்சென்ன மச்சான்
நமக்கு கையும் காலும் தானே மிச்சம்
கையும் காலும் தானே மிச்சம்”

என்று பாடுவார். அதற்கு மக்கள் திலகம் அவர்கள், ஏனம்மா வேதனைப்படுகிறாய், ஏன் விரக்தியடைகிறாய் என்று சொல்வார்கள். எனக்குப் பின்னாலும் என்னுடைய தம்பிமார்கள் எடப்பாடியாரும், ஓ.பி.எஸ்.–ம் ஆட்சிக்கு வருவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அன்று அவர்கள் கொண்டுவருகின்ற திட்டங்களாலும், சட்டங்களாலும் விவசாயிகளின் துன்பங்கள் துடைத்தெறியப்படும் என்பதைப்போல் பாடுவார்.

"காடு விளையட்டும் பொண்ணே
நமக்கு காலமிருக்குது பின்னே"

என்று அவர்கள் சொன்ன காலம் இதுதான். (மேசையைத் தட்டும் ஒலி) என்ற புரட்சித் தலைவர் அவர்களின் எண்ணப்படி, விவசாயிகளின் விழிநீரைத் துடைத்தெறிந்த விரல்களுக்குச் சொந்தக்காரர் அண்ணன் எடப்பாடியாருக்கு நாடே நன்றி சொல்லிக் கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) பெட்ரோலிய மண்டலமாக மாற இருந்த சோழ மண்டலத்தை 'பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக' மாற்றிக் காட்டிய வித்தகர் அவர். (மேசையைத் தட்டும் ஒலி)

"உலகம் பிறந்தது எனக்காக
ஓடும் நதிகளும் எனக்காக"

என்று பாடிய தளபதியின் தத்துவத்திற்கிணங்க, எல்லா நதிகளையும் இணைத்து, எல்லா நீர்நிலைகளையும் தூர்வாரி, வளமான பூமியாக மாற்றிக் காட்டிய மன்னன் நீ! (மேசையைத் தட்டும் ஒலி)

பாலைவனமாக மாறிக் கொண்டிருந்த எங்களுடைய புதுக்கோட்டை, இராமநாதபுரம், சிவகங்கை மற்றும் விருதுநகர் மாவட்டங்களை, காவேரி–குண்டாறு இணைப்புத் திட்டத்தின் மூலமாக ரூ.7,677 கோடி நிதி ஒதுக்கி, சோலை வனமாக மாற்றயிருக்கின்றது இந்த அரசு. காவேரி–வெள்ளாறு இணைப்பிற்காக முதற்கட்டமாக புதுக்கோட்டை மாவட்டத்திற்கு 700 கோடி ரூபாயை ஒதுக்கித் தந்ததற்கு உங்களைத் தென் தமிழகமே தெய்வமாக வணங்குகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) வேறு யாராலும் செய்ய முடியாத இந்தச் சாதனைகளை உங்களால் மட்டுமே நிகழ்த்த முடிகிறது என்று சொன்னால், அடிப்படையில் நீங்கள் ஒரு விவசாயி என்பதனால்தான்.

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்) தலைமை]

ஒரு பெண்ணினுடைய மனம் இன்னொரு பெண்ணுக்குத்தான் தெரியும். ஒரு விவசாயியினுடைய வேதனையை இன்னொரு விவசாயியால்தான் புரிந்துகொள்ள முடியும் என்பதால், நினைத்துப் பார்க்க முடியாத திட்டங்களையெல்லாம் நீங்கள் நிறைவேற்றித் தந்து கொண்டிருக்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நான் ஊரிலிருந்து சட்டமன்றக் கூட்டத்திற்கு வருகின்றபோது, விவசாயக்

குடும்பத்தைச் சேர்ந்த பெரியவர் ஒருவர் வந்து நம்முடைய பகுதிக்கு காவேரி தண்ணீரைக் கொண்டுவந்த மாண்புமிகு முதல்வர் மற்றும் மாண்புமிகு துணை முதல்வர் ஆகிய இருவருக்கும் நமது பகுதி மக்களின் சார்பில் நன்றியைச் சொல்லுங்கள் என்று சொல்லிவிட்டு, மற்றொரு கருத்தை அவர் சொல்லும்போது நான் ஆச்சரியப்பட்டுப் போனேன். 'விவசாயி ஒருவரே தொடர்ந்து முதல்வராக இருக்க வேண்டுமென்று தீர்மானத்தை நிறைவேற்றுங்கள்' என்று, அவர் சொன்னதைக் கேட்டு, நான் மிகவும் வியந்து போனேன்.

இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற கால்நடை பராமரிப்பு மற்றும் மீன் வளத் துறையின் மானியக் கோரிக்கைகளில் என்னைப் பேச அனுமதித்ததற்கு மீண்டும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். கால்நடையைப் பொறுத்தளவுக்கு, அம்மா அவர்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு குறைந்து கொண்டிருந்த கால்நடைகளை, மீண்டும் அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்தபின், ஏழை, எளிய விவசாயிகளுக்கு மாடுகளையும், ஆடுகளையும் இலவசமாக வழங்கி, கால்நடைச் செல்வத்தை அதிகரித்து, பால் வளத்தைப் பெருக்கி, ஏழைகளின் வயிற்றில் பால் வார்த்த தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில், எவ்வளவோ நலத் திட்ட உதவிகளை மனிதர்களுக்கு வழங்கியிருந்தாலும், அதை ஒருசிலர் மறந்துவிட்டார்கள். ஆனால், கால்நடைச் செல்வங்களோ அந்தத் தாயை மறக்காமல் அனுதினமும் 'அம்மா, அம்மா' என்று அழைத்து, நன்றியைத் தெரிவித்துக்கொண்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பிற்பகல் 1–40

தொடரும் அம்மா அவர்களின் ஆட்சியில், கால்நடைப் பண்ணைகளை நவீனமயமாக்குவதற்கு உலக நாடுகளிலுள்ள கால்நடைப் பண்ணைகளை எல்லாம் சுற்றிப் பார்த்து, உலகத் தரத்தில், நமது தமிழகத்தில் சேலம் மாவட்டம், தலைவாசலில் 1,050 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இந்தியாவிலேயே வேறெங்கும் இல்லாத அளவிற்கு மிகப் பெரிய கால்நடைப் பூங்கா அமைப்பதற்கு (மேசையைத் தட்டும் ஒலி) நடப்பு நிதியாண்டில் ரூ.1,678 கோடி நிதி ஒதுக்கீடு செய்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், எனது அறந்தாங்கி தொகுதிக்கு 4 புதிய கால்நடை மருத்துவமனைகளைக் கட்டித் தந்த கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன் அவர்களுக்கும் நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

‘தரைமேல் பிறக்க வைத்தான்
எங்களை தண்ணீரில் பிழைக்க வைத்தான்
கரைமேல் இருக்க வைத்தான்
பெண்களை கண்ணீரில் குளிக்க வைத்தான்’
‘வெள்ளி நிலாவே விளக்காய் எரியும்
கடல்தான் எங்கள் வீடு
முடிந்தால் முடியும், தொடர்ந்தால் தொடரும்
இதுதான் எங்கள் வாழ்க்கை’

என்று கடலிலே தத்தளித்துக் கொண்டிருந்த மீனவர்களை கலங்கரை விளக்கமாய் இருந்து காப்பாற்றியது அம்மா அவர்களின் அரசு. மீனவ சமுதாய மக்களின் வாழ்வு வளம் பெறுவதற்காக இந்த நிதிநிலை அறிக்கையில் ரூ.1,230 கோடி நிதியை ஒதுக்கித் தந்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) மீனவர்களின் பாதுகாவலர், எங்கள் இயக்கத்தின் போர் முரசு மாண்புமிகு அண்ணன் திரு. டி. ஜெயக்குமார் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

புதுக்கோட்டை மாவட்டத்திலே கடற்கரை உள்ள ஒரே தொகுதி, அறந்தாங்கி தொகுதி. மொத்தம் 32 மீனவ கிராமங்களைக் கொண்டது. எங்களின் கோரிக்கைக்கிணங்க, கட்டுமாவடி மற்றும் பொன்னகரத்திற்கு இரண்டு மீன்பிடி இறங்குதளம் அமைத்துக் கொடுத்த அரசு, அம்மா அவர்களின் அரசு. மேலும், மீன் வளத்தைப் பெருக்குவதற்காக ரூ.3 கோடி செலவில் பவளப் பாறை அமைத்துக் கொடுத்தது அம்மா அவர்களின் அரசு. அறந்தாங்கி தொகுதியில் வடக்குமாவட்டினம் மற்றும் புதுக்குடிக்கு இரண்டு மீன்பிடி இறங்குதளங்களை அமைத்துத் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நெடுஞ்சாலைத் துறைமூலம் அதிக நிதிகளை ஒதுக்கி எல்லா சாலைகளும் செப்பனிடப்பட்டு இருமருங்கிலும் இரும்புத் தடுப்பு அமைத்து இருபுறமும் மரங்களை நட்டு, reflection விளக்குகளைப் பொருத்தி, எங்கள் கிராமங்களை எல்லாம் அண்ணா சாலையைப்போல் அழகுறக் காட்சியளிக்க வைத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

பொதுப் பணித் துறை மூலமாக பல ஏரிகளும், கால்வாய்களும் தூர் வாரப்பட்டிருந்தாலும், நான் நீண்ட நாட்களாக வைத்துக் கொண்டிருக்கின்ற கோரிக்கையான பெருமருதூர் மேம்பாலம் மற்றும் பரமந்தூர் மேம்பாலங்களை அமைத்துத்தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அறந்தாங்கி காவல் நிலையத்தில் புறக்காவல் நிலையம் ஒன்றையும், அறந்தாங்கி நகரத்தில் சுற்றுச் சாலையையும் அமைத்துத் தருமாறு முத்தான முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாடுபிடி வீரர்களும், அடக்க முடியாத காளைகளும் தமிழகத்தில் எங்களுடைய புதுக்கோட்டை மாவட்டத்தில்தான் அதிகம். தடை செய்யப்பட்ட வடமாடு ஜல்லிக்கட்டு நிகழ்ச்சிகளை நீதிமன்றத்திலும், மத்திய அரசோடும் போராடி மீட்டு வந்த தென்னாட்டு சிங்கம் எங்கள் அண்ணன் மாண்புமிகு துணை முதல்வர் திரு. ஓ.பி.எஸ். அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றிகளைக் காணிக்கையாக்குகின்றோம்.

எல்லோருக்கும் வழிகாட்டியாக இருந்தவர் எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். ஆனால், அம்மா அவர்களின் சுற்றுப் பயணத்திற்கு வழிகாட்டியாக இருந்து, அவர்களின் சுற்றுப் பயணத்தை வெற்றிப் பயணமாக்கியவர், இந்த இயக்கத்தினுடைய உதயகால தலைவர்களில் ஒருவராகிய கல்விக் காவலர் மாண்புமிகு அண்ணன் திரு. செங்கோட்டையன் அவர்கள். எங்கள் அறந்தாங்கி தொகுதிக்கு கேட்ட அனைத்துக் கல்வித் திட்டங்களையும் செய்து கொடுத்து, கல்விக் காவலராகத் திகழ்ந்து கொண்டிருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு கோடானு கோடி நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாமக்கல்லின் இரண்டாவது மூதறிஞரான மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய தொகுதியில் உள்ள மீமிசல் அல்லது காரக்கோட்டையில் கூடுதல் மின்சாரத் தேவைக்காக துணை மின் நிலையம் அமைத்துத் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரையும் தொகுதிக்குள் தன்மானத்தோடு தலைநிமிர்ந்து நடக்க வைத்த தமிழகத்தின் தாகம் தீர்த்த தலைவர், உள்ளாட்சித் துறையில் நல்லாட்சி செய்து கொண்டிருக்கும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், எங்களுடைய பல கோரிக்கைகளை நிறைவேற்றித் தந்திருக்கிறார்கள். இன்னும் சில கோரிக்கைகளில் ஒன்றாகிய அறந்தாங்கி தொகுதியில் முடிக்கப்படாமல் அரைகுறையாக நிற்கும் பெரிய பூங்காவை அமைத்துத் தருமாறும், தஞ்சாவூர் மாவட்டத்தின் பிடியில் இருக்கும் சந்தைப்பேட்டையை மீட்டுத் தருமாறும், இடநெருக்கடியாக உள்ள அறந்தாங்கி பேருந்து நிலையத்தை விரிவாக்கம் செய்து தருமாறும் மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொன்மனத் தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருக்கரத்தால் ஆவுடையார்கோவிலிலே திறந்து வைக்கப்பட்ட அரசு கலைக் கல்லூரிக்கு அடிப்படை வசதிகளான சுற்றுச் சுவர் மற்றும் கழிப்பிட வசதிகளைச் செய்து தருமாறு மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். மேலும், அதே கல்லூரியில் மாணவ, மாணவியர் விடுதி ஒன்றை அமைத்துத் தருவதாக உறுதி கூறிய மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–45

எங்கள் திருப்பெருந்துறை என்னும் ஆவுடையார்கோவிலில் மிகப் பெரிய கோயில் கட்டி அந்தக் கோயிலில் அமர்ந்து திருவாசகம் என்ற சொற்கோயிலையும் கட்டித் தந்த மணிவாசகப் பெருமான் திருவருள் புரிகின்ற இந்த ஆலயம் மிகவும் பிரசித்திப்பெற்ற ஆலயம். திருப்பணி தொடங்கப்பட்டு பல ஆண்டுகளாகியும் இன்னும் முடிவு பெறாமல் இருக்கின்றது. திருவாவடுதுறைக்குச் சொந்தமான இந்தத் திருக்கோயிலை இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறையின் ஒத்துழைப்புடன் திருப்பணி முடித்து, குடமுழுக்கு நன்னீராட்டு விழா நடத்தித் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். காலடிக்குக் கீழே உள்ள கீழடியில் அகழாய்வு செய்து 2,500 ஆண்டுகளுக்கு முன்னால் உள்ள தமிழர்களின் நாகரிகத்தை வெளிக் கொண்டு வந்த தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் நாட்டுப்புறக் கலைஞர்கள் நிறைந்த மாவட்டம் எங்கள் புதுக்கோட்டை மாவட்டம். இங்கு கரகாட்டம், மயிலாட்டம், ஒயிலாட்டம், கிராமியக் கூத்து போன்ற நிகழ்ச்சிகள் அதிகமாக நடைபெறும். வயது முதிர்ந்த கலைஞர்களுக்கு நமது அரசு ரூ.2,000/– உதவித் தொகையாக வழங்கி வருகிறது. இதனை ரூ.5,000/– ஆக உயர்த்தி, நலிவுற்ற கலைஞர்களின் வாழ்வில் விளக்கேற்றி உதவுமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அறந்தாங்கி தொகுதிக்கு ஒரே சமயத்தில் இரண்டு வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்களையும், 1 கோட்டாட்சியர் அலுவலகக் கட்டடத்தையும் வழங்கி, பெருமை சேர்த்த வாழும் வள்ளலான மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய

நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எங்கள் தொகுதியில் வளர்ந்துவரும் நகரமான ஏம்பலை தனி வட்டமாக அறிவிக்க வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் பல புதிய பேருந்துகளை இயக்கிய மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அறந்தாங்கியிலிருந்து சென்னைக்கு தினமும் குளிர்சாதன வசதி கொண்ட பேருந்தை இயக்கித் தந்து இன்னும் சில குக்கிராமங்களுக்கு பேருந்து வசதிகளை ஏற்படுத்தித் தருவதுடன் மணமேல்குடியில் இயங்காமல் இருக்கும் பணிமனையை மீண்டும் இயக்கித் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

கொரோனா நோய் அச்சுறுத்தலால் அனைத்து மத வழிபாட்டுத் தலங்களும் மூடப்பட்டாலும், திரை அரங்குகள், வணிக வளாகங்கள் ஆகியவற்றுக்கு விடுமுறை விட்டாலும், ஈர இதயம் படைத்த மருத்துவமனைக் கதவுகள் திறந்து வைக்கப்பட்டிருக்கின்றன என்பது, கடவுளே கொரோனா நோய்க்குப் பயந்து கதவினை மூடினாலும் நமது மருத்துவர்களும், செவிலியர்களும் உடல் முழுக்க மூடியிருந்தாலும் உள்ளத்தைத் திறந்து வைத்து, ஆபத்து என்று தெரிந்தும் தங்கள் உயிரையே பணயம் வைத்து பிறர் உயிரைக் காப்பாற்ற மருத்துவம் செய்கின்ற அந்த மகாத்மாக்களையும், மருத்துவத் துறையின் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களையும் மனதாரப் பாராட்டுகின்றேன். மேலும் ஒரே கல்லில் இரண்டு மாங்காய் அடித்ததைத்தான் கேள்விப்பட்டிருக்கின்றோம். ஆனால், ஒரே கல்லில் 11 மருத்துவக் கல்லூரிகளைப் பெற்றுத் தந்த மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களை நான் பாராட்டுகின்றேன். எங்களுக்கு சீன அதிபரை வரவேற்கவும் தெரியும், சீனாவிலிருந்து வரும் கொரோனா என்ற வைரஸ் நோயை விரட்டி அடிக்கவும் தெரியும். எங்கள் மாவட்டத்திற்கு மருத்துவக் கல்லூரியைப் பெற்றுத் தந்த அமைச்சர் அவர்கள், இந்தச் சபையில் அறிவித்தபடி அறந்தாங்கி அரசு மருத்துவமனையை தலைமை மருத்துவமனையாகத் தரமுயர்த்தித் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அறந்தாங்கி தொகுதியில் இன்னும் பல கோரிக்கைகள் இருக்கின்றன. அவற்றை மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்கள் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். அறந்தாங்கி தொகுதியில் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில்தான் பல அரிய திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

எங்கள் கோரிக்கைகளை ஏற்று இந்த அரசு 80 சதவிகிதத் திட்டங்களை நிறைவேற்றித் தந்திருக்கின்றது. இன்னும் 20 சதவிகித கோரிக்கைகளை துறை சார்ந்த அமைச்சர்கள் நிறைவேற்றித் தருவதாக உறுதியளித்துள்ளார்கள்.

தவழும் நிலவாம் தங்க ரதம்
தாரகை பதித்த மணி மகுடம்
குயில்கள் பாடும் கலைக்கூடம்
கொண்டது எனது அரசாங்கம்

என்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இந்த அரசாங்கத்தைப் பற்றி அன்றே பாடினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) பாட்டெல்லாம் கேளுங்கள். இந்த அரசு இந்தப் பாடல் வரிகளுக்கு இலக்கணமாகத் திகழ்கின்றது. (குறுக்கீடு) பாடுகின்றேன் அம்மா. பெண்கள் பாடினால் குரல் நன்றாக இருக்கும். இந்தியாவிற்கு சீன அதிபர் வர வேண்டும் என்று விரும்பியபோது பாதுகாப்பான, அமைதியான, பழமையான நகரம் மாமல்லபுரம்தான் என தேர்வு செய்து நமது வேட்டி கட்டிய பிரதமர் மாண்புமிகு நரேந்திர மோடி அவர்களையும், சீன அதிபரையும் சந்திக்க வைத்து உலகத்தையே மாமல்லபுரத்தைத் திரும்பிப் பார்க்க வைத்த இரண்டாம் மகேந்திரவர்ம பல்லவன் எடப்பாடியார் அவர்களின் ஆட்சி அமைதிப் பூங்காவாக, தெளிந்த நீரோடையாகச் சென்றுகொண்டிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், அண்ணன் தம்பியாக, மாமன் மச்சானாகப் பழகிவரும் சிறுபான்மையின மக்களின் ஓட்டு வங்கியைக் குறி வைத்து, சிறு சிறு குழப்பங்களை ஏற்படுத்தி, தெளிந்த நீரோடையில் போராட்டம் என்னும் சிறு சிறு கற்களை வீசி சலனம் ஏற்படுத்தப் பார்க்கின்றார்கள். இந்த சிறுபான்மையின மக்கள் உண்மையை உணரும்போது தெளிந்த நீரோடையில் வீசிய சிறு சிறு கற்கள் காணாமல் போய்விடும். ** (குறுக்கீடு)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்று கோஷமிட்டனர்.)

பிற்பகல் 1–50

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி உரையை முடியுங்கள். (குறுக்கீடுகள்) நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. ஏ. இரத்தினசபாபதி: **

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது யாருடைய பெயரையும் குறிப்பிடவில்லை. யாருடைய பெயரையாவது குறிப்பிட்டால் மட்டும்தான் நீங்கள் அதனை எழுப்பலாமே தவிர, யாருடைய பெயரையாவது குறிப்பிட்டார்களா? இந்த இயக்கம் என்று குறிப்பிட்டிருக்கிறார்களா?. . . (குறுக்கீடு)

(திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர்கள் தொடர்ந்து எழுந்து நின்று கோஷமிட்டனர்.)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு பி.எம். நரசிம்மன்): மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. இரத்தினசபாபதி அவர்கள்.

திரு. ஏ. இரத்தினசபாபதி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) இருங்கள் முடித்து விடுகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. இரத்தினசபாபதி அவர்கள், நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. ஏ. இரத்தினசபாபதி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இருங்கள் முடித்து விடுகிறேன். யாரையும் தனிப்பட்ட ரீதியாகவோ, பெயரைக் குறிப்பிட்டோ, இல்லை ஒரு இயக்கத்தின் பெயரைக் குறிப்பிட்டோ அல்லது எந்தத் தலைவரின் பெயரைக் குறிப்பிட்டோ நான் பேசவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): படித்துப் பார்த்து முடிவு எடுக்கலாம். மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி முடியுங்கள்.

திரு. ஏ. இரத்தினசபாபதி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ** இனக் கலவரத்திலும், மதக் கலவரத்திலும் ஈடுபடுகிறவர்களை மாண்புமிகு அம்மாவினுடைய அரசு இரும்புக்

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

கரம் கொண்டு அடக்கும் என்பதை நான் இந்த நேரத்தில் தெளிவாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கடலை விட்டு அலையைப் பிரிக்கலாம், கதிரவனை விட்டு ஒளியைப் பிரிக்கலாம், மலரை விட்டு மணத்தைப் பிரிக்கலாம், மக்கள் சக்தியைவிட்டு இந்த ஆட்சியையும், கட்சியையும் பிரிக்க முடியாது என்று உறுதி கூறி, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): மாண்புமிகு உறுப்பினர்களுக்கு, அவைக் குறிப்பைப் பார்த்து முடிவு எடுக்கப்படும்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தொடர்ந்து எழுந்து நின்று கோஷமிட்டனர்.)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): படித்து பார்த்து முடிவு எடுக்கப்படும். (குறுக்கீடுகள்) குறிப்பைப் பார்த்து முடிவு எடுக்கலாம். அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள். (குறுக்கீடு). அதுதான் சொல்லியாகிவிட்டது.

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள், கொஞ்சம் இருங்கள். உறுப்பினர்களுக்கு அவைக் குறிப்பைப் பார்த்து முடிவு எடுக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. குறிப்பைப் பார்த்துவிட்டுச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள், நீங்கள் தொடரலாம். (குறுக்கீடுகள்) நீங்கள் பேசுங்கள்.

(திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் எழுந்து நின்று கோஷமிட்டனர்.)

நான்தான் முடிவைச் சொல்லிவிட்டேனே, எல்லோரும் அமருங்கள். குறிப்பைப் பார்த்து (குறுக்கீடுகள்) குறிப்பைப் பார்க்க வேண்டுமல்லவா? (குறுக்கீடுகள்) குறிப்பைப் பார்த்துவிட்டு நான் சொல்கிறேன் என்று சொல்லிவிட்டேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள் அமருங்கள் (குறுக்கீடுகள்) இல்லை, அனைவரும் அமருங்கள். நான் முன்பே அவைக் குறிப்பைப் பார்த்துவிட்டுச் சொல்கிறேன் என்று சொல்லிவிட்டேன். மாண்புமிகு உறுப்பினர்

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள், நீங்கள் பேசுகிறீர்களா, இல்லையா? (குறுக்கீடு) அவைக் குறிப்பைப் பார்த்துவிட்டுச் சொல்கிறேன்.

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: நான் பேசினால், அண்ணன் பேச முடியாது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): மாண்புமிகு உறுப்பினர்கள் அமருங்கள். திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) அண்ணன் பேச வேண்டும் என்று சொல்கிறார். நான் பேசினால், அவர் பேச முடியாது. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): மாண்புமிகு எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கு (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

பிற்பகல் 1–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள், (குறுக்கீடுகள்) உட்காருங்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள், பேசுங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இருங்கள், சொல்வதைக் கேளுங்கள், (குறுக்கீடுகள்) இல்லை, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கு, உட்காருங்கள், இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசியபோது நான் அவையில் இல்லை. மாற்றுத் தலைவர் அவர்கள் இருந்தார்கள். அவர் நீங்கள் கேட்டவுடனேயே நான் அவைக் குறிப்பைப் பார்த்துவிட்டு முடிவு செய்கிறேன் என்று சொல்லியிருக்கின்றார். எனவே, நானும் அந்தக் குறிப்புகளை வாங்கிப் பார்த்து (குறுக்கீடுகள்) இல்லை, நான் அதற்குள்ளாக வாங்கிப் படித்துப் பார்த்து, அவற்றில் என்ன கூறப்பட்டிருக்கிறதென்று பார்க்கிறேன், தனிப்பட்ட முறையில் என்ன இருக்கிறதென்று பார்க்க வேண்டும். பார்த்துவிட்டு என்னுடைய முடிவை உங்களிடம் சொல்கிறேன்.

* **திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் சொல்வதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். ஆயினும், அதை

வாங்கிப் படியுங்கள், நாங்கள் பொதுவாகச் சொன்னதற்கு என்ன காரணம் என்றால், எங்களைப் பற்றிப் பேசுகிறாரா, யாரைப் பற்றிப் பேசுகிறார் என்பது அல்ல. இந்த அவையில் ஒரு மதத்தைத் தூண்டுகிற அளவிற்கு பேசக் கூடாது என்ற விதி இருப்பது தங்களுக்கே தெரியும். எனவே, மதப் பிரச்சினைகளையோ உணர்வுகளையோ தூண்டக் கூடாது. அது யாராக இருந்தாலும், எந்தக் கட்சியாக இருந்தாலும். நீங்கள் அங்கு இருக்கும்போது நானும் உள்ளேயிருந்து கேட்டுவிட்டு ஓடி வந்தேன். தாங்கள் பார்த்துவிட்டுத் தீர்ப்பு சொல்லுங்கள். நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். அதுவரையில், அதை வெளியிட வேண்டாம் என்று தங்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைப் பத்திரிகைகளில் வெளியிட வேண்டாம் என்றும் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடைப் பராமரிப்பு, மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் சார்பாகப் பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த அவையில் மூத்த உறுப்பினராக இருந்து, சிறப்புற சேவை ஆற்றிய திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொதுச் செயலாளராக இருந்த, நேர்மை, ஒழுக்கம், அறிவாற்றலுக்குத் தனிச் சிறப்பு பெற்று விளங்கிய பேராசிரியப் பெருந்தகை அன்பழகனார் அவர்களுடைய மறைவிற்குப்பின் நடக்கக்கூடிய கூட்டமாகும் இது. மிகச் சிறந்த தலைவராக, எதிர்க்கட்சியினரும் பாராட்டக்கூடிய ஒரு தலைவராக இருந்தவர், பேராசிரியர்களுக்கெல்லாம் பேராசிரியராக, பேராசானாக விளங்கியவர், மறைந்த பெருந்தகை அன்பழகனார் என்பதை எங்களுடைய இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தேசியத் தலைவர் பேராசிரியர் காதர் மொகிதீன் அவர்கள், எப்போதெல்லாம் அவர்களை சந்தித்தார்களோ, மேடையிலே பேசினார்களோ, அப்போதெல்லாம் குறிப்பிடுவார்கள். அத்துடன், இன்று மீன் வளத் துறையின் மானியக் கோரிக்கை. கடந்த 3 ஆண்டுகளாக எப்போதெல்லாம் இந்த மானியக் கோரிக்கை வருகின்றதோ, அப்போதெல்லாம் மிகத் திறமையோடு, வாதங்களை எடுத்துரைக்கக்கூடிய மறைந்திருக்கக்கூடிய உறுப்பினர் திரு. கே.பி.பி. சாமி அவர்களையும் இந்த நல்ல நேரத்தில் நினைவுகூர

வேண்டும். கலைஞர் அவர்களுடைய காலத்தில், அவர் மீன் வளத் துறை அமைச்சராக இருந்தார். அன்று எங்கள் கட்சியின் தேசியத் தலைவர் திரு. ஈ. அகமது அவர்கள் மத்திய அரசின் வெளியுறவுத் துறை இணை அமைச்சராக இருந்தார். அந்த நேரங்களில் தமிழக மீனவர்கள் மீன்பிடிக்கப் போகும்போது, இலங்கை அரசால் கைது செய்யப்படும் சமயங்களில் கோபாலபுரத்திலுள்ள கலைஞர் இல்லத்திற்கு திரு. கே.பி.பி. சாமி அவர்கள் செல்வார்கள். கலைஞர் அவர்கள் உடனடியாக எங்கள் தலைவர் திரு. ஈ. அகமது அவர்களைத் தொடர்பு கொண்டு, விரைவான நடவடிக்கையினை எடுப்பார். கோபாலபுரத்திலிருந்து திரு. கே.பி.பி. சாமி அவர்களது இல்லத்திற்குச் செல்லும் வழியிலேயே அந்தப் பணிகளெல்லாம் நிறைவுபெற்றிருக்கின்றன என்பதை அவர் இந்த அவையில் பதிவு செய்திருக்கின்றார். அதைப்போலவே, குடியாத்தம் சட்டமன்றத் தொகுதியின் உறுப்பினராக இருந்த பேரணாம்பட்டு தொகுதியைச் சார்ந்த திரு. S. காத்தவராயன் அவர்கள், குடிசையில் எளிமையான வாழ்க்கை வாழ்ந்தவர், இஸ்லாமிய சமுதாயத்தினுடைய இனிய நண்பனாக வாழ்ந்தவர். இந்த அளவில் பேராசிரியப் பெருந்தகை அவர்களுக்கும், திரு. கே.பி.பி. சாமி அவர்களுக்கும், திரு. காத்தவராயன் அவர்களுக்கும் என்னுடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து, அவர்களை நினைவுபடுத்துவது என்னுடைய கடமை என்று நான் கருதுகின்றேன்.

பிற்பகல் 2–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை விளக்கக் குறிப்பிலே Lok Ayukta–தூய்மையான நிருவாகத்தைப் பற்றியும் ஊழல் தடுப்பு, கண்காணிப்பு இயக்கத்தைப் பற்றியும், பொது வாழ்க்கையிலே எப்படி தூய்மையாக இருக்க வேண்டும் என்பதைப் பற்றியெல்லாம் இங்கே சொல்லப்பட்டிருக்கின்றது. முன்னாள் பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங் அவர்கள், ‘ஊழல் என்பது, cancer போன்ற ஒரு கொடிய நோயைப் போன்றது, அதை ஆரம்ப நிலையிலேயே களைவது நம் அனைவருடைய கடமை’ என்று சொல்லியிருக்கின்றார். ஊழலுக்குண்டான காரணங்களை நாம் கண்டறிந்து, இந்த நாட்டிலே ஊழல் இல்லாத நேர்மையான ஒரு நிருவாகத்தை உருவாக்குவதற்குண்டான பணிகளைச் செய்ய

வேண்டுமென்பதை இந்த நல்ல நேரத்திலே வலியுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். மீனவர்கள் நலன் பற்றி பல்வேறு அறிவிப்புகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, தமிழகத்தைச் சேர்ந்த மீனவர்கள் அவ்வப்போது இலங்கையிலே பிடிக்கப்பட்டு, அவர்களுடைய படகுகளெல்லாம் முடக்கப்படுகின்ற ஒரு சூழ்நிலை ஏற்படுகின்றது. அதற்கு ஒரு நிரந்தரத் தீர்வாக, India–Srilanka Fisheries Co–operative Corporation என்ற ஒரு நிறுவனத்தை நிறுவ வேண்டுமென்ற ஒரு கருத்தை பலரும் சொல்லியிருக்கின்றார்கள். நாங்கள்கூட சென்ற வருடம் இலங்கைக்குச் சென்றிருந்தபோது அந்நாட்டின் பிரதமர் அவர்களை நல்லெண்ணத்தின் அடிப்படையில் சந்தித்தோம். அப்போது அந்தக் கருத்தைச் சொல்லும்போது, இலங்கை அரசு அதற்குத் தயாராக இருக்கிறது என்று சொன்னார்கள். எனவே, அதுபோன்ற ஒரு Corporation–கூட்டுறவு கழகத்தை, இந்திய–இலங்கை மீனவர் கூட்டுறவுக் கழகத்தை ஏற்படுத்தக்கூடிய முயற்சியிலே இந்த அரசு முனையுமானால் நம்முடைய மீனவர்களுக்கு நிரந்தரத் தீர்வாக இருக்கும். நாட்டுப் படகுகள், அதேபோன்று விசைப் படகுகள் இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) ஏனென்றால் subject வரும்போது சொன்னால்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் புரியும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய அந்த நல்லெண்ணத்தின் அடிப்படையில்தான் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் நம்முடைய மீனவர்களும், இலங்கை மீனவர்களும் நேரடியாக பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்கிற அடிப்படையில் 3 முறை பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. 3 முறை பேச்சுவார்த்தை நடத்தப்பட்டபோது நாம் உடன்பாட்டோடுதான் இருந்தோம். பேச்சுவார்த்தைக்கு வாருங்கள், எதுவாக இருந்தாலும் பேசித் தீர்த்துக்கொள்ளலாம் என்றோம். நம்முடைய மீனவர்கள் வேண்டுமென்றே எல்லை தாண்டுவது கிடையாது. காற்றின் வேகம்; மீன்பிடி தொழில் என்பது ஒரு வேட்டை போன்றது. தண்ணீரில் சென்றால், இங்கு வேலூர், செங்கல்பட்டு என்பது மாதிரி border இருக்குமா? தெரியாது. அந்தவகையில் அவர்கள் எல்லை தெரியாமல் போகிறார்கள். உடனே அந்தப் படகைப் பிடிப்பது, சுடுவது, அடிப்பது, அவமானப்படுத்துவது என்று இதெல்லாம் நடந்தது. இதற்கு ஒரே

தீர்வு கச்சத் தீவை நாம் மீட்பதுதான். So அதனால்தான் அம்மா அவர்களைப் பொறுத்தவரையில், Supreme Court–ல் கச்சத் தீவை நாம் மீட்க வேண்டும் என்பதை முன்வைத்து, வழக்கு தொடுத்து வழக்கு விரைவில் விசாரணைக்கு வரவிருக்கிறது. கச்சத்தீவை மீட்பதற்கு வழக்கைத் தொடுத்து அதை வேகப்படுத்தியிருக்கிறோம். இதைத்தவிர, பேச்சுவார்த்தையின் மூலம் உடன்பாடு கொண்டுவர நம்முடைய மீனவர்கள் ஒத்துக்கொள்கிறார்கள். அதாவது இலங்கை மீனவர்கள் என்ன எதிர்பார்க்கிறார்களென்றால், இழுவலை கூடாது. Okay. அதற்கு ஒரு time கொடுங்கள். 3 வருடங்கள் அல்லது 5 வருடங்கள் கொடுங்கள். Bottom trawling என்று சொல்லக்கூடிய அந்த இழுவலை தேவையில்லை என்கிறார்கள். இழுவலை தேவையில்லை என்று சொல்லிவிட்டோம். 185 நாட்கள் கேட்டோம். அதையும் அவர்கள் கொடுக்கவில்லை. இப்போது மத்திய அரசு என்ன செய்திருக்கிறதென்றால், ஒரு திட்டம்—Hon'ble Prime Minister's Blue Revolution Scheme, இதில் 50 சதவிகித மானியம் Central Government, 20 சதவிகித மானியம் State Government, 20 சதவிகிதம் Bank, மீதி 10 percentage தான் மீனவர்களுடைய மூலதனம். ஒரு படகுக்கு கிட்டத்தட்ட 8 இலட்சம் ரூபாய் போட வேண்டியதிருக்கிறது. ஏறக்குறைய 80 இலட்சம் ரூபாய் boat–க்கு அவர்கள் உரிமையாளராக வரக்கூடிய நிலையிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல boats–ஐ கடலில் வெள்ளோட்டம் விட்டிருக்கிறார்கள். Longliner, Gill net use செய்வதற்கு படகுகள் அனுமதிக்கப்படுகின்றன. Trawl செய்ய முடியாது. So, அதை படிப்படியாக 5 வருடங்களில் மாற்றிவிடலாம் என்றுதான் சொல்லியிருக்கிறோம். ஆனால், இடைப்பட்ட காலத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களைச் சந்திக்கும்போதும், மாண்புமிகு வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களைச் சந்திக்கும்போதும், இதுபோன்ற தாக்குதல் நடைபெறக் கூடாது என்று அம்மா அவர்கள் காலத்திலிருந்து தொடர்ந்து வலியுறுத்தி வந்ததன் காரணமாகத்தான், புள்ளிவிவரங்களைப் பார்க்கும்போது, மிக, மிகக் குறைந்திருக்கிறது. கிட்டத்தட்ட 9 ஆண்டுகளில், நிகழ்வுகள் என்று பார்த்தால், total incidents என்று பார்த்தால் 5, இறப்பு–2, காயம் அடைந்தவர்கள்–3. ஆனால் 2010 ஆம் ஆண்டுக்காலத்தில் நிகழ்வுகள் 31, இறப்பு–9, காயம் அடைந்தவர்களின் எண்ணிக்கை கிட்டத்தட்ட 21. ஆக, ஒட்டுமொத்தமாக 2010 ஆம் ஆண்டிலிருந்து இப்போது வரை அது குறைந்திருக்கிறது. ஆகவே, ஒட்டுமொத்த மீனவர்களுக்கு எந்த இழப்பும் ஏற்படக் கூடாது, அவர்களின் படகுக்கோ, வலைக்கோ

இழப்பு ஏற்படக் கூடாது, அவர்களுக்கு முழுமையான பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்பதுதான் அரசின் எண்ணம். அவர்கள் பேச்சுவார்த்தைக்கு வந்தாலும்கூட, நாங்கள் பேசுவதற்குத் தயாராக இருக்கிறோம். எந்த மீனவரும் பாதிக்கப்படக் கூடாது என்பதுதான் எங்கள் நிலை.

பிற்பகல் 2–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி. நான் பேசிமுடித்த பிறகு, நீங்கள் பதில் கொடுத்தால் நன்றாக இருக்கும். ஏனென்றால், எங்களுக்கு time கிடைப்பது ரொம்ப கஷ்டம்.

நாட்டுப்படகுகள், விசைப்படகுகள். நாட்டுப்படகுகளுக்கு 4,000 லிட்டர் டீசல், மானியமாகக் கொடுக்கிறீர்கள். விசைப்படகுகளுக்கு 18,000 லிட்டர் கொடுக்கிறீர்கள். நாட்டுப் படகுகளை, மிகவும் நலிந்த நிலையில் உள்ளவர்கள்தான் இயக்குகின்றனர். எனவே, அவர்களுக்கும், மீன்பிடித் தடைக்காலங்களில் 60 நாட்கள் இருக்க வேண்டும் என்ற தகவலைச் சொல்கிறார்கள். எனவே, நாட்டுப்படகுகளுக்கு மானிய விலையில் கூடுதலாக டீசலை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

‘இது நம் ஊர் மீன்’ என்று சொல்லியிருக்கிறீர்கள். ஏற்கெனவே நான் இதைப்பற்றி சொல்லியிருக்கிறேன். எங்கு மீன் பிடிக்கப்படுகிறதோ, அந்த ஊர்களில் மீன்கள் கிடைக்காமல் இருக்கிறது. எல்லா மீன்களையும் வெளியே கொண்டு போய்விடுகிறார்கள். எந்த ஊரில் மீன்களைப் பிடிக்கிறார்களோ, அந்த ஊரில் ஒரு குறிப்பிட்ட percentage மீன்களை விற்க வேண்டும் என்ற நடைமுறைகளைக் கொண்டு வந்தீர்கள் என்றால் நன்றாக இருக்கும். எங்கள் காயல்பட்டணத்தில்கூட அதே நிலைமைத்தான் உள்ளது. ஏற்கெனவே இதைப் பற்றி நான் சொல்லியிருக்கிறேன்.

அதேபோன்று, சட்டமன்ற உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்கள் இங்கு இருக்கின்றார். ‘தன்னிகரற்ற மீன்வளம்’ என்ற ஒரு புத்தகத்தைப் போட்டிருக்கிறீர்கள். அதில், தூத்துக்குடி மாவட்டம், கொம்புத்துறை கூட்டு மேலாண்மைக்

குழுவிற்கு வழங்கப்பட்டதாக ஒரு செய்தி உள்ளது. கொம்புத்துறை என்பது காயல்பட்டிணத்தில் இருக்கின்றது. காயல்பட்டிணத்தின் ஒரு பகுதிதான் கொம்புத்துறை. காயல்பட்டிணம் என்பது ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க ஊராகும். அந்த ஊரை நீங்கள் mention செய்யாமல் விட்டுள்ளீர்கள். காயல்பட்டிணம் பற்றி நான் சொன்னால், என்னுடைய ஊர் என்று நினைத்துக்கொள்வீர்கள்.

மறைந்த பாரதப் பிரதமர், பண்டிட் ஜவஹர்லால் நேரு அவர்கள், தன்னுடைய "Discovery of India" என்ற நூலில் எழுதியுள்ளதை நான் படிக்கின்றேன். "டெல்லி ஆதிக்கம் தெற்கே பரவியது. சோழ அரசு வீழ்ந்தது. அதனிடத்தில் கடல் வலிமைமிக்க ஓர் ஆதிக்கம் ஏற்பட்டது. அதுதான் பாண்டிய ஆதிக்கம். மதுரை அதன் தலைநகரம். கிழக்குக் கடற்கரையில் உள்ள காயல்பட்டிணம் அதன் துறைமுக நகரம். சிற்றரசுதான், எனினும் வர்த்தக முக்கியத்துவம் வாய்ந்தது. Marco Polo சீனாவிற்கு போகும் வழியில் கி.பி. 1288–ல் ஒருமுறையும், சீனாவிலிருந்து வரும் வழியில் கி.பி. 1293–ல் மறு முறையும் காயல்பட்டிணத்திற்கு வருகை தந்திருக்கின்றார். அரபு நாடுகளிலிருந்தும், சீனாவிலிருந்தும் கூட்டம் கூட்டமாக கப்பல்கள் வந்துபோகும். பேரும், புகழும், பேரழகும், மாண்பும் பெற்ற மாநகரம் என இதனை Marco Polo வர்ணித்துள்ளார். இந்தியாவிலேயே, கிழக்குக் கடற்கரையோர ஊர்களில் உற்பத்தியாகி, இங்கிருந்து ஏற்றுமதியாகும் சிலந்தி வலைபோன்ற மிக மெல்லிய இரக மஸ்லின் துணியைப் பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார்" என்று அவரே சொல்லியிருக்கிறார். எனவே, ஏற்கெனவே காயல்பட்டிணத்தில் கொம்புத்துறை என்பது ஒரு பகுதி. DCW என்கிற Dharangadhara Chemical Works Limited என்ற ஒரு தொழிற்சாலை அங்கு இருக்கிறது. ஏற்கெனவே தொழிற்சாலைகளினால் ஏற்படும் ஆபத்துகளைப் பற்றி நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தெரிவித்திருக்கிறேன். அந்தப் பகுதி, ஏதோ காயல்பட்டிணத்திற்கு சம்பந்தமே இல்லாத ஒரு பகுதி போன்று, வெறும் சாகுபுரம், வெறும் கொம்புத்துறை என்று குறிப்பிடுகின்றார்கள். அந்த ஊரை நீங்கள் கொம்புத்துறை கூட்டு மேலாண்மைக் குழு என்று குறிப்பிடுகிறீர்கள். ஆகவே, தயவுகூர்ந்து வருங்காலங்களில் காயல்பட்டிணம் என்று சொல்லுங்கள். மற்ற ஊர்களைப் பற்றி சொல்லியிருக்கிறீர்கள். எனவே, அவ்வாறு குறிப்பிட வேண்டுமென்ற வேண்டுகோளையும் நான் இங்கே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஈரானால் சிறைபிடிக்கப்பட்ட மீனவர்களை மீட்கக்கூடிய முயற்சி பற்றி இங்கே சொன்னார்கள். அந்த

முயற்சியை விரைவாக நீங்கள் எடுக்க வேண்டும். கூடங்குளம் அனல் மின் நிலையத்தில், அங்குள்ள மீனவர்கள் பணியாற்றுவதற்கு நீங்கள் ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். குளங்களை ஏலம் எடுக்கிறார்கள். அதில் மீனவர்களுக்கு நீங்கள் முன்னுரிமை கொடுக்க வேண்டும். தனி நபர்கள் ஏலத்தை எடுப்பதால், மீனவர்கள் பயன்பெற முடியாமல் இருக்கிறார்கள். அதனை நீங்கள் சரி செய்ய வேண்டும். மீனவர்கள் கூட்டுறவுச் சங்கம் சிறப்பாகச் செயல்படுவதற்குண்டான நடவடிக்கையை நீங்கள் எடுக்க வேண்டும்.

எங்கள் கடையநல்லூர் தொகுதி அமைந்துள்ள தென்காசி மாவட்டத்திலே, செங்கோட்டை, தென்காசி, கடையநல்லூர் ஆகிய பகுதிகளில் அரசு சார்பில் மீன் விற்பனைக் கூடங்களை ஏற்படுத்த இந்த அரசை வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 2–10

கால்நடை பராமரிப்பு பற்றி இங்கே சொல்லப்பட்டிருக்கின்றது. நாட்டு மாடுகள், கோழிகளை வளர்ப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகின்றீர்கள். மீண்டும் நீங்கள் அதனை உற்சாகப்படுத்த வேண்டும். கொள்கை விளக்கக் குறிப்பில் மாவட்டவாரியாக எத்தனை கால்நடை நிலையங்கள் இருக்கின்றன என்பது பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. பன்முக மருத்துவமனை, பெரு மருத்துவமனை, நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவு என எதுவுமே தென்காசி மாவட்டத்தில் இல்லை என்பது இதன்மூலமாகத் தெரியவருகிறது. தென்காசி புதியதாக உருவாக்கப்பட்டிருக்கக்கூடிய மாவட்டமாகும். எனவே, இந்த நிலையங்களையெல்லாம் தென்காசி மாவட்டத்தில், குறிப்பாக விவசாயம் அதிகமாக இருக்கின்ற கடையநல்லூர் தொகுதியில் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். புதிய மாவட்டமாக தென்காசி அறிவிக்கப்பட்டுள்ளது. தென்காசி, மாவட்டமாக உதயமான நிகழ்ச்சிக்கு நானும் சென்றிருந்தேன். அங்கே பல்வேறு ஊர்களிலிருந்து வருவதற்கு பேருந்து வசதிகள் இல்லை. அங்கே ஐந்து சட்டமன்றத் தொகுதிகள் உள்ளன. எனவே, அங்கேயெல்லாம் பேருந்து வசதியை செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அங்கேயுள்ள தொகுதிகளில் சிகப்பு நிறம் கொண்ட பேருந்துகளை அரசு இயக்கி வருகிறது. அதிலே குறிப்பாக கடையநல்லூர் முதல் செங்கோட்டை வரை அச்சன்புதூர், வடகரை மற்றும் பண்பொழி வழியாக செல்லக்கூடிய சிகப்பு நிறம் கொண்ட

பேருந்தில் அரசு நிர்ணயித்திருக்கக்கூடிய கட்டணம் 31 ரூபாய் ஆகும். ஆனால், அதேநேரத்தில் தனியார் வாகனங்களில் கட்டணமாக 16 ரூபாய்தான் வசூலிக்கப்படுகிறது. விரைவு வாகனங்களில் 20 ரூபாய்தான் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. புறநகர் வழியாகச் செல்லக்கூடிய வாகனங்களில்கூட 25 ரூபாய்தான் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. ஆனால், சிகப்பு நிறம் கொண்டு இயக்கப்படும் அரசுப் பேருந்தில் 31 ரூபாய் கட்டணமாக வசூலிக்கப்படுவதால் விவசாயிகள், கிராம மக்களெல்லாம் சிரமப்படுகிறார்கள். அதையும் இந்த அரசு கனிவோடு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இயற்கை அளித்த கொடையாக சுமார் 80 கிலோ மீட்டர் தூரம் மேற்குத் தொடர்ச்சி மலை தென்காசி மாவட்டத்தில் இருக்கிறது. அங்கே வேளாண்மைத் தொழில் சிறப்பாக நடைபெற்று வருகிறது. யானை, கரடி, சிறுத்தை மற்றும் காட்டுப்பன்றிகள் உள்ளிட்ட காட்டு விலங்குகளால் மிகப் பெரிய அளவில் சேதம் அடிக்கடி அங்கே ஏற்படுகிறது. அதை மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். காட்டு விலங்குகளால் விவசாயமும், விவசாயிகளும் பெரிதும் பாதிப்புக்குள்ளாகக்கூடிய ஒரு சூழ்நிலை அங்கே நிலவுகிறது. எனவே, தென்காசி மாவட்டத்தின், மேற்குத் தொடர்ச்சி மலையடிவார விவசாயத்தைப் பாதுகாக்க உரிய நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ள வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

தெற்கே ஆழ்வார்குறிச்சி பகுதியில் தொடங்கி, வடக்கே தேவிப்பட்டினம் வரையுள்ள மேற்குத் தொடர்ச்சி மலையடிவார பகுதிகளில், சூரிய ஒளி மின்வேலி அமைத்திட வேண்டும். வன விலங்குகள் நடமாட்டத்தைக் கண்காணித்து, வேளாண்மைப் பயிர்கள் சேதமாவதைத் தடுக்க வருவாய்த் துறை, வனத் துறை, வேளாண்மைத் துறை, காவல் துறை மற்றும் விவசாய அமைப்புகள் இணைந்த கூட்டு நடவடிக்கைக் குழு ஒன்றை வருவாய் குறுவட்டம் வாரியாக அமைத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வன விலங்குகளால் வேளாண்மைப் பயிர்கள் சேதமடையும்போது, அதை இயற்கைப் பேரிடராகக் கருதி, இழப்பீட்டை விரைவாக வழங்க வேண்டும். பாதிக்கப்பட்ட விவசாயிகள் மீண்டும் பயிரிட தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மூலமாக வட்டியில்லாக் கடன் உதவிகள் வழங்க வேண்டுமென்பதையும் இங்கே வலியுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போன்று ஏற்கெனவே பழமையாக இருந்த சார் பதிவாளர் அலுவலகத்திற்கான (Sub–Registrar Office) கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு, அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன. அதை விரைவாகத் திறக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போன்று, கடையநல்லூர் தாலுகா அலுவலகம் பற்றி பலமுறை நான் பேசியிருக்கிறேன். அந்தப் பணிகளையும் விரைவுபடுத்த வேண்டுமென்று மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் பல்வேறு ஊர்களில் சுகாதாரத் துறை மூலமாக பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனது தொகுதியிலுள்ள பல்வேறு ஆரம்ப சுகாதார நிலையங்களில் சுற்றுச்சுவர் இல்லை. இரவு நேரங்களில் அங்கே செல்வதற்கு மக்கள் அச்சப்படுகிறார்கள். அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் சுற்றுச்சுவர் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்பதை இங்கே வலியுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக, வடகரை–கீழ்பிடாகை பகுதியில் 30,000–க்கும் மேற்பட்ட மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். அங்கேயுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை, மருத்துவமனையாகத் தரமுயர்த்தித் தர வேண்டுமென்று இங்கே வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. முஹம்மது அபூபக்கர், உரையை முடியுங்கள். (குறுக்கீடு) உரையை முடியுங்கள்.

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: இரண்டு நிமிடங்களில் உரையை முடித்துவிடுகிறேன். கோரிக்கைகள்தான் வைத்துக் கொண்டிருக்கிறேன். வேறு ஒன்றுமில்லை.

அதேபோன்று, பள்ளிக்கூடங்களுக்கு பல்வேறு நிதிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. பள்ளிக் கல்வித் துறைக்கு மிகப் பெரிய அளவில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அனைத்துப் பள்ளிக்கூடங்களிலும் கழிப்பிட வசதி மற்றும் சுகாதாரமான தண்ணீர் வழங்கக்கூடிய சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும்.

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களிடம் பலமுறை இதுகுறித்து தெரிவித்துவிட்டேன். தமிழ்நாடு மாநில உருது கழகம் 9 வருடங்களாகச் செயல்படவில்லை. தயவுசெய்து சிறுபான்மையினமொழிகளைப்பாதுகாக்கக்கூடியநடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 2–15

அதுபோல், நீங்கள் அறிவித்திருக்கக்கூடிய Tamil Nadu Innovation Initiatives (TANII) போன்ற மற்றவைகளுக்கெல்லாம், திறமையை வளர்க்கக்கூடிய அந்தப் பணிகளை எங்களது தொகுதியில் நீங்கள் நிறைவேற்றித் தர வேண்டும். ஏனெனில், எங்களது தொகுதியில் படித்துவிட்டு, language இல்லாமல் பலபேர் வேலைக்குப் போகமுடியாமல் கஷ்டப்படுகிறார்கள், சிரமப்படுகிறார்கள்; அதுபோல் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் ஒரு வருடத்திற்கு முன்பு சொன்னார்கள், சென்னை, அண்ணா சாலையில் இருக்கக்கூடிய மதரஸா ஆசம் பள்ளிக்கூடம்– நூற்றாண்டைக் கடந்திருக்கக்கூடிய பள்ளிக்கூடம். அதில் ஒரு பிரச்சினை ஏற்பட்டு நீங்கள் எல்லாரோடும் பேச்சுவார்த்தை நடத்தி அதை நிறுத்தினீர்கள். (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முடியுங்கள். முடியுங்கள். இன்னும் இரண்டு பேர் பேசவேண்டியுள்ளது. மணியைப் பாருங்கள்.

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டே subjects தான். முடித்துவிடுகிறேன். எனவே, இவ்வளவு நிதியை கல்விக்காக வழங்கியிருக்கிறீர்கள். அங்கே 13 ஏக்கர் நிலம் உள்ளது. அந்தப் பகுதிக்கு சுற்றுச்சுவர் இல்லாமல் உள்ளது. சமூகவிரோதிகள் இரவு நேரத்தில் செல்வதாக complaint செய்கிறார்கள். மதரஸா ஆசம் பள்ளிக்கூடத்தை நீங்கள் தரம் உயர்த்தி, எந்த அளவிற்கு பாதுகாக்க வேண்டுமோ அந்த அளவிற்கு பாதுகாக்க வேண்டும். ஏனென்றால் அண்ணா சாலையில் இவ்வளவு பெரிய இடம் கிடைக்காது. எனவே, அதனை மீண்டும் நீங்கள் செய்ய வேண்டும் என்ற வேண்டுகோளை வைத்து, அதுபோல் இந்தக் கூட்டத்தொடரில் பல்வேறு நிலைகளில் பல கருத்துகள் சொல்லப்பட்டிருக்கின்றன. தமிழ்வழிக் கல்விக்கு நீங்கள் கவனம் செலுத்த வேண்டும். 1991–லிருந்து அவர்கள் அங்கீகாரம் பெறுவதற்குண்டான அந்த சூழ்நிலையில் அவர்கள் அரசுக்குரிய ஊதியம் பெறாமல் இருக்கின்றார்கள். அதையும் நீங்கள் கனிவோடு பரிசீலிக்க வேண்டும் என்று பணிவோடு தெரிவித்துக்கொண்டு, இந்தக் கூட்டத் தொடரில் சிறுபான்மையினர் மற்றும் முஸ்லிம்களின் பாதுகாப்பு குறித்து அதிகமாக இங்கே பேசப்பட்டிருக்கின்றது. நாங்களும் அந்த நிலையிலேயே இருக்கிறோம். இந்த அரசாங்கம் தேசிய மக்கள் தொகை பதிவேடு, தேசிய குடிமக்கள் பதிவேடு NPR,

NRC–யை தமிழகத்திலே நடைமுறைப்படுத்தமாட்டீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கின்றது. எல்லா நிலைகளிலும், குருதி கொடுத்தேனும் குடியரசைக் காப்போம் என்று எங்களுடைய மறைந்த தலைவர் சிராஜுல் மில்லத் அப்துல் சமது அவர்கள் சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் உரையை முடியுங்கள். முடியுங்கள்.

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த நிலையிலே, சிறுபான்மையின சமுதாயத்தினுடைய உரிமைகள் பாதுகாக்கப்படும் என்ற நம்பிக்கை இருக்கின்றது. சிறுபான்மையின சமுதாயத்தினரை யாரும் தூண்டிவிடவில்லை. யாரையும் யாரும் வெறுக்க முடியாது. எல்லா நிலைகளிலும் சிறுபான்மையின சமுதாயத்தினைச் சேர்ந்தவர்கள் அவர்களுடைய உரிமைகளுக்காகத்தான் போராடுகிறார்களேதவிர, எந்த சமுதாயத்திற்கு எதிராகவும் எந்த நிலையிலும் போராட்டம் செய்வதை நாங்கள் அனுமதிக்கவில்லை என்பதையும் இங்கே தெரிவித்துக்கொண்டு, இந்த நாட்டிலே தேசிய ஒருமைப்பாடு, சமய நல்லிணக்கம், அனைத்து சமூகங்களிலும் கலாச்சார தனித்தன்மை நிலைத்திட நாமெல்லாம் இணைந்தே போராடுவோம் என்று தெரிவித்துக்கொண்டு, ஒரே ஒரு கோரிக்கையோடு நிறைவு செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கோரிக்கையை கொடுங்கள் பதிவு செய்துகொள்ளலாம். உட்காருங்கள். (குறுக்கீடு) சொல்லுங்கள்.

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு கோரிக்கைதான். குடியுரிமை சட்டம் சம்பந்தமாக பல்வேறு போராட்டங்கள் நடைபெற்றிருக்கின்றன. இதில் நிறைய cases–எல்லாம் போட்டு அலைக்கழிக்கிறார்கள். இந்தப் போராட்டங்களிலே பல்வேறு வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன; நேற்றுகூட நம்முடைய சட்டமன்ற உறுப்பினராக இருந்த திரு. ரவி அருணன் அவர்களை ஒரு காவல் துறை அதிகாரி ரொம்பப் பேசியிருக்கிறார்கள். காங்கிரஸ் தலைவரிடத்தில்கூட சொன்னார்கள். எனவே, தயவுகூர்ந்து அனைத்து வழக்குகளையும் திரும்பப்பெற வேண்டும் என்ற கோரிக்கையை நம்முடைய முதலமைச்சர் அவர்களிடத்தில் வைத்து, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது ஒரு கருத்தைச் சொன்னார்கள். உள்நாட்டு நீர்நிலைகளில் வளர்க்கப்படுகின்ற மீன்கள், குறிப்பாக, நீர்த்தேக்கங்கள், பெரிய நீர்த்தேக்கங்கள், நமது மீன் வளர்ச்சிக் கழகத்திற்குச் சொந்தமான reservoir என்று சொல்லக்கூடிய நீர்த்தேக்கங்கள் என்று சொன்னால் Tamil Nadu Fisheries Development Corporation (TNFDC) auction விட்டு அதனடிப்படையில் allot செய்கிறார்கள். சின்னச் சின்ன நீர்த்தேக்கங்கள். தமிழகத்தில் மீன் வளத் துறைக்குச் சொந்தமான நீர்த்தேக்கங்கள் அனைத்து மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத்தான் வழங்கப்படுகின்றன. ஏனென்றால், இதுகுறித்து அரசாணை போடப்பட்டு செயல்பாட்டில் உள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களில் இருக்கக்கூடிய மீன்களைக் கொடுக்கிறோம் என்று சொல்கிறீர்கள். கிராமங்களில் என்ன நிலைமை என்று கேட்டீர்களென்று சொன்னால், கிராமங்களில் உள்ள குளங்கள், ஏரிகளில் எல்லாம் நாட்டு மீன்கள், கெளுத்தி, குறவை, விரால், உலக்காட்சி, சுண்டை இதுபோன்ற மீன்கள் எல்லாம் வளரும். ஆனால் கடந்த நான்கு ஆண்டுகளாக Tank Cleaner என்கின்ற ஒரு மீனை விட்டதால், அந்த மீன், மற்ற எல்லா வகை மீன்களையும் சாப்பிட்டுவிடுகின்றது. அந்த Tank Cleaner–ஐ கொண்டுவந்து நீங்கள் விட்டுவிட்டீர்கள். அது மற்ற மீன்களை அழித்துவிடுகிறது. அதனை விடாமல் இருந்தால் என்ன? (குறுக்கீடு) தெரியவில்லையா உங்களுக்கு?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தடை செய்யப்பட்ட மீன் என்று சொன்னால், ஆப்பிரிக்கன் கெளுத்தி என்கின்ற ஒரு மீன் வகைதான். அது

கண்டதையும் சாப்பிடும். கண்டதையும் சாப்பிட்டு கொழுத்து வளரும். அதுபோன்ற மீன்கள் மிகவும் ஆபத்தானது என்று சொல்லி, தடை செய்யப்பட்டு, அதனை வளர்ப்பவர்கள் எங்கெங்கு இருக்கிறார்களோ அவைக் கண்டறியப்பட்டு அழிக்கப்பட்டிருக்கின்றன. தடை செய்யப்பட்ட எந்த மீனையும் Fisheries Department–ஐப் பொறுத்தவரையில் நாங்கள் பொதுவாக allow செய்வதில்லை. Tank cleaner என்கின்ற அந்த மீனை விடுவது கிடையாது. தனிப்பட்ட சிலர் அந்த மாதிரி மீனை விட்டால், அது சட்டத்திற்குப் புறம்பாக இருந்தால் நிச்சயமாக, கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

பிற்பகல் 2–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரபிரபா அவர்கள்.

திருமதி மு. சந்திரபிரபா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலப் படகோட்டி; நம்மை எல்லாம் கரை சேர்த்த மீனவ நண்பன்; அரசியலில் பல அதிசயங்களை, அற்புதங்களை நிகழ்த்திய ஆயிரத்தில் ஒருவன்; நாளும் மக்களுக்காகவே வாழ்ந்து, தமிழக மக்களின் துயர் தீர்த்த மன்னாதி மன்னன்; கழகத்தின் நிறுவனத் தலைவர்; மக்கள் திலகம் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நினைவுகளைப் போற்றி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

“உற்றநோய் நோன்றல் உயிர்க்குஉறுகண் செய்யாமை
அற்றே தவத்திற்கு உரு”

அதாவது எத்தகைய துன்பங்கள் நேர்ந்தாலும் அவற்றைப் பொறுத்துக்கொண்டு மற்றவர்களுக்கு துன்பம் செய்யாமல் இருப்பதே தவம் என்று திருவள்ளுவர் சொல்கிறார்.

வள்ளுவப் பெருந்தகையின் வாய்மொழிக்கிணங்க, இந்த மண்ணில் தவ வாழ்வு வாழ்ந்தவர் நம் தங்கத்தாரகை புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அன்பு, அறிவு, ஆற்றல், தகுதி, திறமை, கனிவு, துணிவு என அத்தனை அணிகலன்களையும் தன்னகத்தே கொண்டு அவை அனைத்தையும் மக்களுக்காகப் பயன்படுத்தி வாழ்ந்திட்ட அற்புதத் தலைவி எங்கள் அம்மா. ஏழையெளிய, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சிறுபான்மையின மக்களின் பாதுகாவலராக

இருந்து, அவர்களின் வாழ்க்கைத்தரம் உயர பல திட்டங்களைத் தந்த தமிழக மக்களின் நம்பிக்கை நட்சத்திரம் எங்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)

மாநில உரிமைகளை மீட்டெடுக்க பல சட்டப் போராட்டங்களை நடத்தி, சரித்திர சாதனைகளைப் படைத்திட்ட சிங்கநிகர் தலைவி மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி எங்கள் அம்மா. காலம் நமக்கு அளித்திட்ட கருணைத் தாய் எங்கள் அம்மா. கழகத் தொண்டர்கள் நித்தம் வணங்கும் எங்கள் குல தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் துயில்கொள்ளும் திசை நோக்கி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “நீ பின்னால் இரு, முன்னால் கொண்டு நிறுத்தப்படுவாய். நீ வெளியே இரு, உள்ளே அழைத்துச் செல்லப்படுவாய்” என்ற மேல்நாட்டு அறிஞன் டாவோ அவர்களின் கருத்துப்படி, இதய தெய்வம் அம்மா அவர்களின் பின்னால் உறுதியுடனும், நம்பிக்கையுடனும் இருந்த எங்கள் அருமை ஐயா மாண்புமிகு எடப்பாடியார் அவர்கள், இன்று மாண்புமிகு முதலமைச்சராக இந்த அமைச்சரவையில் முன்னால் அமர்த்தப்பட்டுள்ளார். (மேசையைத் தட்டும் ஒலி)

“எதற்கும் அஞ்சாதே, எதையும் வெறுக்காதே, யாரையும் ஒதுக்காதே, உன் பணியை தைரியமாகச் செய்” என்ற சுவாமி அரவிந்தரின் கூற்றுப்படி, எதற்கும், எவருக்கும் அஞ்சாமல், என் கடன் பணி செய்து கிடப்பதே என, நாளும் பொழுதும் மக்களுக்காக உழைத்துக் கொண்டிருக்கும் குடிமராமத்து நாயகன், சேலத்து சிங்கம், தமிழர்களின் புதுவிலாசம், எதிரிகளைக் கலங்கடிக்கும் வித்தை கற்ற வேந்தன், வேளாண் மண்டலம் காத்த விவசாயிகளின் விடிவெள்ளி, காவேரியின் பாதுகாவலர் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரும், கழக இணை ஒருங்கிணைப்பாளருமான மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ஐயா அவர்களை முதற்கண் வணங்குகின்றேன்.

“பணிவு என்பது தாழ்மையின் சின்னம் அல்ல, அது உயர்ந்த பண்பின் அறிகுறி” என்கிறான் மேல்நாட்டு அறிஞர் எடிசன். அத்தகைய பண்பும், பணிவும் மிக்க, எப்போதும் எந்நாளும் ஆட்சிக்கும், கட்சிக்கும் துணை நிற்கும் மாண்புமிகு துணை முதலமைச்சர், ஜல்லிக்கட்டு நாயகன், தென்பாண்டி சிங்கம், தேனி தந்த தங்கம், கழக ஒருங்கிணைப்பாளர் அருமை ஐயா ஓ.பி.எஸ். அவர்களை வணங்குகின்றேன்.

மேன்மைக்கும், மரியாதைக்கும் உரிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றிகலந்த வணக்கத்தை அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அம்மாவின் அரசையும், முதலமைச்சரையும், கழகத்தையும் எவர் விமர்சித்தாலும் அதற்கு தக்க பதிலடி கொடுக்கும் விருதுநகர் மாவட்ட வீரமைந்தன், அடிமட்ட தொண்டர்களையும் அடையாளம் கண்டு, அவர்களை கைதூக்கி விடும் ஆற்றல் மறவர், (மேசையைத் தட்டும் ஒலி) எத்தனை சதிகள், சூழ்ச்சிகள் எதிர்வந்தாலும் அவற்றை முறியடித்துவிட்டு, நம் அருமை அண்ணன் முதலமைச்சர் எடப்பாடியாரின் போர்ப்படை தளபதியாக விளங்கிக் கொண்டிருக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் அரசியல் ஆசான், மதிப்பிற்கும், மரியாதைக்குமுரிய விருதுநகர் மாவட்ட கழகச் செயலாளரும், விருதுநகர் மாவட்ட தொண்டர்களின் பாதுகாவலரும், மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சருமான அண்ணன் திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி அவர்களுக்கும் நன்றி கூறி வணங்குகின்றேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இன்று இந்தப் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மீன் வளத் துறை, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, கால்நடை பராமரிப்புத் துறை ஆகிய துறைகளுக்கான மானியக் கோரிக்கைகள்மீது பேசுவதற்குமுன் நம்முடைய தமிழ்நாட்டின் சின்னமாக விளங்கும் கோபுரத்தைக் கொண்ட என்னுடைய ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி வாழ் மக்களின் கோரிக்கைகளின் சிலவற்றை நிறைவேற்றித் தருமாறு அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 2–25

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ‘எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும், இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்’ என்ற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் இலட்சியக் கனவை நனவாக்குகின்ற விதமாக, சிறப்பாக ஆட்சி புரிந்துவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ஐயா எடப்பாடியார் அவர்கள், எங்களுடைய ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான, ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, ஸ்ரீவில்லிபுத்தூரில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஒன்றை அமைத்துத் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

(மேசையைத் தட்டும் ஒலி) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, ஸ்ரீவில்லிபுத்தூர் அரசு பொது மருத்துவமனையில் உள் நோயாளிகள் பிரிவுக்கு கூடுதலாக படுக்கை வசதி கொண்ட கட்டடம் கட்டித் தந்து உதவுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சிப் பகுதிகளில் சுமார் எழுபதாயிரத்திற்கும் அதிகமான மக்கள்தொகை உள்ளதால், கூடுதலாக தாமிரபரணி தண்ணீர் கிடைக்க புதிய திட்டம் ஒன்றை அமல்படுத்தித் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் அமைத்துத் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன். ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி, 20–வது வார்டு, கொளூர்பட்டியில், பள்ளிக் கல்வித் துறையில் சிறந்து விளங்கி, வெற்றி நடை போட்டுக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் அங்கு ஓர் அரசு ஆரம்பப் பள்ளியைத் தொடங்க உதவிடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன். ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, ஸ்ரீவில்லிபுத்தூரில் புதிய வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் கட்டித் தருமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் உள்ள ஸ்ரீ ஆண்டாள் கோயிலுக்கு பாத்தியப்பட்ட திருப்பாற்கடல் தெப்பத்தை பராமரித்து, தெப்பத்தைச் சுற்றி நடைபாதையுடன்கூடிய பூங்கா அமைத்துத் தருமாறு பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன். ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து சென்னைக்கு குளிர்சாதன வசதியுடன்கூடிய பேருந்தை இயக்குமாறு பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன். ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, ஸ்ரீவில்லிபுத்தூர் ஒன்றிய அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்டித் தந்து உதவிடுமாறு பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன். ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, ஸ்ரீவில்லிபுத்தூரில் அரசு தொழிற்பேட்டை அமைத்து உதவிடுமாறு பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

நம் விவசாயிகளின் பாதுகாவலராக விளங்கிக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, ஸ்ரீவில்லிபுத்தூர் மேற்குத் தொடர்ச்சி மலையடிவாரத்தில் பம்பை–பேயனாறு–அழகர் அணைத் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டும். விருதுநகர், இராமநாதபுரம், சிவகங்கை ஆகிய மாவட்டங்களில் உள்ள விவசாயிகள் மற்றும் பொது மக்களின்

குடிநீர்ப் பிரச்சினையை விவசாயிகளின் நலன் காக்கின்ற அரசு தீர்த்து வைக்குமாறு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகப் பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, ஸ்ரீவில்லிபுத்தூர் ஒன்றியம், பிள்ளையார்நத்தம் ஊராட்சி, ரெங்கர்கோயில் ஆற்றில் பெரிய தடுப்பணை ஒன்று அமைத்து உதவிடுமாறு பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன். ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, ஸ்ரீவில்லிபுத்தூர் ஒன்றியம், அப்பையநாயக்கர்பட்டிக்குச் செல்லும் தார்ச் சாலையில் பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான பெரிய ஓடையை பொது மக்களும், மாணவர்களும் கடந்து செல்வதற்கு ஏதுவாக மேம்பாலம் ஒன்று அமைத்துத் தருமாறு பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, கிருஷ்ணன் கோயில் முதல் பாட்டக்குளம் வழியாக மல்லி வரை உள்ள தார்ச் சாலையை இருவழிச் சாலையாக அமைத்துத் தருமாறு பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன். ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, ஸ்ரீவில்லிபுத்தூர் முதல் மம்சாபுரம் வழியாக இராஜபாளையம் வரை உள்ள தார்ச் சாலையை இருவழிச் சாலையாக அமைத்துத் தந்து உதவிடுமாறு பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன். ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பு வட்டம், வத்திராயிருப்பில் சார் கருவூலம் அமைத்துத் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பு பேரூராட்சியில் உள்ள 18 வார்டுகளில் உள்ள பொது மக்கள் பயன்பெறும் வகையில் தாமிரபரணி கூட்டுக் குடிநீரை சேமிக்க 5 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட தரைதள நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து உதவிடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன். ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பு ஒன்றியம், பிளவக்கல் அணையைத் தூர் வாரி, பராமரித்தும், வரத்து கால்வாய்களைத் தூர் வாரித் தருமாறும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன். ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, ஸ்ரீவில்லிபுத்தூரில் கால்நடை மருந்தகத்தை கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தருமாறு பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பு பேரூராட்சியில் புறவழிச்சாலை அமைத்துத் தருமாறு பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன். ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பு அரசு பொது மருத்துவமனையை வட்டார மருத்துவமனையாகத்

தரம் உயர்த்தித் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன். ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, S. கொடிக்குளம் பேரூராட்சி, கூமாப்பட்டியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தருமாறு பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியிலுள்ள அருள்மிகு ஆண்டாள் திருக்கோயிலுக்கு வெளியூரிலிருந்து வரும் பக்தர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் தங்கி, சாமி தரிசனம் செய்வதற்கு வசதியாக அரசு தங்கும் விடுதி அமைத்துத் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன். ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, ஸ்ரீவில்லிபுத்தூர் ஒன்றியம், மீனாட்சிபுரத்தில் புதிய கால்நடைக் கிளை நிலையம் அமைத்துத் தருமாறு பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சிப் பகுதியில் 70 ஆண்டுகளுக்கு முன்பு பதித்த குடிநீர்க் குழாய்களை அகற்றி, புதிய குடிநீர்க் குழாய்கள் அமைத்துத் தருமாறு பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 2–30

ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, ஸ்ரீவில்லிபுத்தூர் ஒன்றியம், வைத்தியலிங்காபுரத்தில் கால்நடைக் கிளை நிலையம் அமைத்துத் தந்திடுமாறு மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களை பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன். ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, ஸ்ரீவில்லிபுத்தூர், மல்லியில் புதிய ஆரம்ப சுகாதார மையம் அமைத்துத் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன். ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பு ஒன்றியத்தில் உள்ள சதுரகிரி சுந்தரமகாலிங்கம் கோயில் அடிவாரத்தில் பக்தர்கள் தங்கிச் செல்வதற்கு வசதியாக யாத்திரிகர் மண்டபம் அமைத்துத் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பு ஒன்றியம், சதுரகிரி சுந்தரமகாலிங்கம் கோயில், தாணிப்பாறையில் புதிய பேருந்து நிலையம் அமைத்துத் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன். ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, ஸ்ரீவில்லிபுத்தூர் நகரில் திருமுக்குளம், திருப்பாற்கடல் தெப்பக்குளம், மடவார்வளாகம் தெப்பக்குளம், சக்கரைகுளம் தெப்பக்குளம் ஆகிய குளங்களின் சுற்றுச்சுவர்களைப் பழுதுபார்த்து உதவிடுமாறு பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, ஸ்ரீவில்லிபுத்தூர் ஒன்றியம், பானாங்குளத்தில் புதிய துணை ஆரம்ப சுகாதார மையம் அமைத்துத் தருமாறு பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து திருமங்கலத்திற்கு புதிய பேருந்து இயக்கி உதவுமாறு பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து ஆயர்தர்மம் வழியாக தேனிக்கு புதிய பேருந்து வழித்தடம் அமைத்துத் தருமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன். ஸ்ரீவில்லிபுத்தூர் குன்னூர் வழியாக காடனேரிக்கு புதிய பேருந்து இயக்க நடவடிக்கை எடுக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,
ஒருநாள் போவார், ஒருநாள் வருவார்,
ஒவ்வொரு நாளும் துயரம்! (மேசையைத் தட்டும் ஒலி)

என்று பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் பாடினார்கள். அந்த மீனவப் பெருமக்களின் துயரம் போக்கவும், அவர்களின் வாழ்க்கைத் தரம் உயரவும் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களும், புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களும் பல நல்ல திட்டங்களைத் தந்தனர். அந்த மாபெரும் இரண்டு தலைவர்களின் வாரிசாகத் திகழும் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களும் மக்கள் நல்வாழ்வுக்காக நல்ல பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆண்களோடு பெண்கள் சரிநிகர் சமமாக உயர வேண்டுமென்று சொன்னால், அவர்கள் பொருளாதாரரீதியில் தமது சொந்தக் காலில் நிற்கும் வலிமையும், தன்னம்பிக்கையும் பெற வேண்டும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் குறிப்பிட்டார்கள். அதனால்தான், மகளிர் சுய உதவிக் குழுக்களைத் தொடங்கி, பல இலட்சக்கணக்கான பெண்களின் பொருளாதார நிலையை உயர்த்தினார். அதுமட்டுமல்லாமல், விலையில்லா கறவைப் பசுக்கள், ஆடுகள் வழங்கும் திட்டத்தை நம் மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டுவந்து, கிராமப்புற ஏழை எளிய தாய்மார்களின் பொருளாதார நிலையை உயர்த்தினார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியிலே மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ஐயா எடப்பாடியார் அவர்களும், கிராமப்புற மக்களுக்கு விலையில்லா பசுக்களையும், ஆடுகளையும் தொடர்ந்து வழங்கி வருகிறார்கள். அதேபோல விவசாயிகளின் நண்பனாக விளங்கிக் கொண்டிருக்கும் நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ஐயா எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான அம்மாவின் அரசு, மீனவ மக்களின் துயர் துடைக்கின்ற அரசாக விளங்கிக் கொண்டிருக்கின்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மீனவப் பெருமக்களுக்கு இன்னும் கூடுதலான நன்மைகளைச் செய்ய வேண்டும் என்பதற்காகத்தான், எப்போதும் இல்லாத அளவிற்கு மீன் வளத் துறைக்கு 1,229 கோடியே 85 இலட்சம் ரூபாய் நிதியினை மாண்புமிகு அம்மாவின் அரசு ஒதுக்கியிருப்பது மிகுந்த பாராட்டுக்குரியதாகும். மீன்பிடி தடைக்காலத்தில் உதவித் தொகை வழங்கிடவும், மீனவர்களின் சேமிப்புத் திட்டத்திற்காகவும், மேலும், அவர்களுக்கு சிறப்பு உதவித் தொகை வழங்குவதற்காகவும் மட்டும் இந்த நிதியாண்டில் 298 கோடியே 12 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திருப்பது மீனவ மக்களுக்கு மகிழ்ச்சி தரும் செய்தியாகும். மேலும், 4,997 மீன்பிடி விசைப் படகுகளில் 18 கோடி ரூபாய் செலவில் transponders பொருத்தப்படுவது வரவேற்கத்தக்கதாகும். அதுமட்டுமல்லாமல், தூத்துக்குடி மாவட்டத்தில் 30 கோடி ரூபாய் செலவில் கடலரிப்புத் தடுப்புச் சுவர் அமைக்கப்படும் என்று அறிவித்தது மீனவ மக்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது.

2019–2020 ஆம் நிதியாண்டில் பல்வேறு கடல் மீனவர் நலத் திட்டங்களுக்காக 296.86 கோடி ரூபாய் நிதியினை மாண்புமிகு அம்மாவின் அரசு வழங்கியுள்ளது மிகவும் பெருமை வாய்ந்ததாகும். 2019–2020 ஆம் ஆண்டில் 13 கடலோர மாவட்டங்களைச் சார்ந்த 1,63,491 மீனவ குடும்பங்களுக்கு மீன்பிடி தடைக்கால நிவாரணத் தொகையாக 81.75 கோடி ரூபாய் பயனாளிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாகச் செலுத்தப்பட்டது, மீனவ மக்களின் வாழ்வில் பால் வார்த்ததைப்போல் இருக்கின்றது. 235 கோடி ரூபாய் செலவில் விழுப்புரம் மாவட்டம், அழகன்குப்பம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டம், ஆலம்பரைக்குப்பத்திலும், 150 கோடி ரூபாய் செலவில் நாகப்பட்டினம், ஆறுகாட்டுத்துறையிலும் மீன்பிடித் துறைமுகங்கள் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் அமைக்கப்பட இருக்கின்றது.

நம் அம்மாவின் அரசில் ஒவ்வொரு துறையும் முதன்மை பெற்று வருவதில் மீன் வளத் துறையும் இடம் பெற்றிருப்பது மிகவும் பாராட்டுக்குரிய ஒன்றாகும். நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசில் தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகம் தர வரிசையில் இந்தியாவிலேயே முதலிடம் பெற்று சாதனை படைத்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆறறிவு படைத்த மக்களுக்கு மட்டுமல்ல, ஐந்தறிவு படைத்த கால்நடைகளுக்கும் பாதுகாப்பளித்து, அவற்றைச் சிறப்பாகப் பராமரிக்கும் பணியினையும் விவசாயிகளின் விடிவெள்ளி, வேளாண் மண்டலம் காத்த இரண்டாம் கரிகாற்சோழன், எங்களின் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ஐயா எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான மாண்புமிகு அம்மாவின் அரசு மேற்கொண்டு வருவதை நாம் அனைவரும் அறிவோம்.

சேலம் மாவட்டம், தலைவாசல் பகுதியில் 564 கோடியே 44 இலட்சம் ரூபாய் செலவில் சர்வதேச தரத்தில் ஒருங்கிணைந்த கால்நடைப் பூங்கா மற்றும் கால்நடை மற்றும் விலங்கின அறிவியலுக்கான உயர் ஆராய்ச்சி நிலையமும், 196 கோடியே 36 இலட்சம் ரூபாய் செலவில் கால்நடை மருத்துவக் கல்லூரியும் அமைய இருப்பது மாண்புமிகு அம்மாவின் அரசு செய்த வரலாற்றுச் சாதனையாகும்.

பிற்பகல் 2–35

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் முன்னோடித் திட்டமான விலையில்லா கறவை மாடுகள், ஆடுகள் மற்றும் செம்மறியாடுகள், கோழிகள் வழங்கும் திட்டம் மற்றும் தீவன அபிவிருத்தித் திட்டம் ஆகிய திட்டங்கள் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இந்தப் பெருமை வாய்ந்த சிறப்புத் திட்டத்தின்மூலம் வேளாண் துறையின் பங்களிப்பைவிட கால்நடை பராமரிப்புத் துறையின் பங்களிப்பு முதன்முறையாக அதிகரித்துள்ளது மிகவும் பெருமை வாய்ந்ததாகும். 1,060 கால்நடை கிளை நிலையங்கள் கால்நடை மருந்தகங்களாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளன. 20 புதிய கால்நடை மருந்தகங்கள் நிறுவப்பட்டுள்ளன. 10 கால்நடை மருந்தகங்கள் கால்நடை மருத்துவமனைகளாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளன. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, 6 பெருமருத்துவமனைகளையும், 2 கால்நடை மருத்துவமனைகளையும் கால்நடை பன்முக மருத்துவமனைகளாக தரமுயர்த்தியுள்ளது பொது மக்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது. அதுமட்டுமல்லாமல், 400 புதிய கால்நடை கிளை நிலையங்களும் நிறுவப்பட்டுள்ளன. நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவுகள் மற்றும் அம்மா அவசர சிகிச்சை ஊர்தி சேவைகள் மூலமாக விவசாயிகளின் இருப்பிடங்களுக்கே சென்று, கால்நடைகளுக்கு மருத்துவ சேவைகள் வழங்கப்படுகின்றன.

2011–2012 ஆம் ஆண்டு முதல் 614.57 கோடி ரூபாய் செலவில் 2,037 புதிய கால்நடை மருத்துவப் பிரிவுக் கட்டடங்கள் மாண்புமிகு அம்மாவின் அரசால் கட்டப்பட்டுள்ளன என்பது மிகவும் பெருமை வாய்ந்த செயலாகும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விலையில்லா நாட்டுக்கோழி வளர்ப்புத் திட்டத்தின்மூலம் ஆதரவற்ற மற்றும் விதவைப் பெண்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தி வருவது மிகவும் பாராட்டுக்குரிய ஒன்றாகும். சென்னையில் 12 இடங்கள் உட்பட தமிழகம் முழுவதிலும் 38 இடங்களில் ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் ஆய்வகங்கள் தொடங்குவது வரவேற்கத்தக்கது. மாண்புமிகு அம்மா அவர்களின் அரசை தமிழக மக்கள் ஒவ்வொருவரும் மனதார வாழ்த்தி பாராட்டுகின்றனர்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ‘‘மக்களால் நான், மக்களுக்காகவே நான்’’ என வாழ்ந்திட்ட மாதரசி, மங்கையர் குல தெய்வம், (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தின் திருவிளக்காய், பெண்ணினத்தின் பெருவிளக்காய் வாழ்ந்திட்ட நம் குல தெய்வம் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள் இந்தப் பேரவையில் தெய்வமாக இருந்து நம்மையெல்லாம் பார்த்து வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள். அந்த ஆற்றலும் ஆளுமையும்மிக்க அம்மா அவர்கள் இதே அவையில், ‘‘எனக்குப் பின்னாலும், இனி எத்தனை நூற்றாண்டுகள் வந்தாலும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்னும் இயக்கம் மக்களுக்காகவே 100 ஆண்டுகள் இயங்கும்’’ என்று இந்த மாமன்றத்திலே சூளுரைத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சூளுரைக்கேற்ப, ஏனென்றால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வாக்கு தெய்வ வாக்கு. என்றைக்குமே நமது அம்மா அவர்களின் தெய்வ வாக்கு நிலைத்திருக்கும். அதனால், மாண்புமிகு அம்மா அவர்கள் கூறியதுபோல, வருகின்ற 2021 சட்டமன்றத் தேர்தலிலும் நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் (மேசையைத் தட்டும் ஒலி) அரசுதான் ஆளும், ஆளும் என்று கூறிக்கொண்டு, இந்தப் பேரவையில் எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைக் கூறி அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினருக்கு நன்றி. மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன் அவர்கள்.

திரு. தா. உதயசூரியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கால்நடை பராமரிப்பு, மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை ஆகிய மானியங்களில் பேசுவதற்கு, வாய்ப்பினை உருவாக்கித் தந்த எங்கள் ஐயா கலைஞர் அவர்களுக்கு எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதே அவையில் 1996 ஆம் ஆண்டு இரண்டாவது முறையாக நான் உறுப்பினராக இருந்து பேசும்போது மனிதனாகப் பிறந்து நோய்வாய்ப்பட்டு மருத்துவமனைக்குச் செல்கின்றபோது, அரசு பொது மருத்துவமனைகளிலும், ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் OP நுழைவுச்சீட்டு வாங்குகின்றபோது 25 பைசா, 50 பைசா, ஒரு ரூபாய் என்று வசூலிக்கப்பட்டதை தமிழக முதல்வர் ஐயா கலைஞர் அவர்களிடம் எடுத்துச் சொன்னபோது, அதை இரத்து செய்தார்கள். இதே இடத்திலே, இதே வரிசையிலே, இரண்டாவது முறை, நான் உறுப்பினராக இருந்து கால்நடை பராமரிப்புத் துறை மானியக் கோரிக்கையில் பேசுகின்றபோது, மாண்புமிகு அண்ணன் பொங்கலூர் பழனிச்சாமி அவர்கள் அப்போது துறையினுடைய அமைச்சராக இருந்தார்கள், ஆறறிவு படைத்த மனிதர்களுக்கு மருத்துவமனையிலே நுழைவுச்சீட்டுக்கு 25 காசு, 50 காசு வாங்குகின்ற நிலையை இரத்து செய்திருக்கின்றீர்கள். வாயில்லாத ஐந்தறிவு படைத்த கன்றுக்குட்டிகளுக்கு குடல் புழுவை நீக்குவதற்கு 1 ரூபாய், 2 ரூபாய் என்று வசூலிக்கப்படுகின்றது. அதை இரத்து செய்ய வேண்டுமென்று நான் கேட்டவுடன், அமைச்சர் அவர்கள் பதிலளிப்பதற்கு முன்பாகவே, முதலமைச்சர் ஐயா கலைஞர் அவர்கள் இதே இடத்தில் உட்கார்ந்து, துருப்புச் சீட்டில் எழுதிக் கொடுத்து, (மேசையைத் தட்டும் ஒலி) அன்று அந்த இடத்திலேயே இரத்து செய்த நிகழ்வை நினைத்துப் பார்க்கிறேன். அப்படிப்பட்ட எங்கள் ஐயா கலைஞர் அவர்களுக்கு புகழ் வணக்கம்.

பிற்பகல் 2–40

கொரோனா வைரஸ் வந்தவுடன் எங்களுடைய கழக நிகழ்ச்சிகள் அனைத்தையும், அதேபோல, தன்னுடைய பிறந்த நாள் நிகழ்ச்சியைக்கூட நடத்தக் கூடாது என்று எங்களைப் போன்ற கழக உடன்பிறப்புகளுக்கு தன்னலம் கருதாமல் உத்தரவிட்டு, மக்களுடைய நலனைக் கருதி, மார்ச் 31 ஆம் தேதி வரை இந்த நிகழ்வுகள் எதுவும்

இருக்கக் கூடாது என்று, நாட்டு மக்களுக்காக, தன்னலம் கருதாமல் இருக்கின்ற ஒரு தலைவர் என்று சொன்னால், அவர் எங்களுடைய தலைவர் தளபதி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவருக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆரம்பப் பள்ளி, நடுநிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி என பல்வேறு நிலைகளை உருவாக்கித் தந்து, எங்களுடைய இயக்கத்தின் பொதுச் செயலாளராக இருந்து மறைந்த ஐயா பேராசிரியர் அவர்களுக்கும் புகழ் வணக்கத்தைச் சொல்லி, (மேசையைத் தட்டும் ஒலி) எங்களின் அருகில் பின் இருக்கையில் உட்கார்ந்து, மீன் வளத் துறை அமைச்சராக இருந்து, அண்மையில் மறைந்த, அண்ணன் சாமி அவர்களையும் நினைவுகூர்ந்து, சகோதரர் காத்தவராயன் அவர்களையும் இந்த நேரத்தில் நினைவு கூர்ந்துகொள்கிறேன். பேரவையில் இந்த நிகழ்வில் பேசுவதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

இந்த மானியத்தில் பேசுவதற்கு முன்பாக என்னுடைய தொகுதி சம்பந்தமான ஒன்றிரண்டு கோரிக்கைகளை வைத்துவிட்டு, அதற்குப் பிறகு இந்தத் துறைகள் குறித்துப் பேசுவதற்கு என்னை நிலைப்படுத்த விரும்புகிறேன்.

சின்ன சேலம் ஏரிக்குத் தண்ணீர் செல்வதற்கு வடக்கனந்தலில் இருக்கின்ற கோமுகி அணையிலிருந்து தண்ணீர் செல்ல வேண்டும். பண்டைய காலத்திலிருந்து old ஆயக்கட்டும், new ஆயக்கட்டும், அணை கட்டுவதற்கு முன்பாகவே 62 ஆண்டுகளுக்கு முன்பாகவே, பழைய ஆயக்கட்டு மூலமாக, கடத்தூர் மார்க்கமாக தெங்கியாநத்தம், செட்டியந்தல், பைத்தந்துறை, வி.பி. அகரம், சின்ன சேலம் செல்ல வேண்டும். அதாவது, கடத்தூரிலிருந்து தண்ணீர் கோமுகி அணையிலிருந்து செல்கின்றபோது, சுமார் 2 கிலோ மீட்டர் வனத் துறைக்குச் சொந்தமான இடம், அந்தக் காலத்தில் வெட்டியிருக்கின்றார்கள். இப்போது அது பாறையாக இருக்கிறது. தண்ணீர் வழிந்தோடுவதற்கு வாய்ப்பில்லாமல் இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதைப் பரிசீலித்து, உடனடியாக எந்த நிதியிலிருந்தாவது ஒரு தொகையை ஒதுக்கி, வனத் துறையின் மூலமாக அதற்கு அனுமதியும் பெற்று, சின்ன சேலம் ஏரிக்கு தண்ணீர் கொடுப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனிக் கவனம் செலுத்த முன்வர வேண்டுமென்று என்னுடைய வேண்டுகோளாக எடுத்து வைக்கின்றேன். ஆகவே, பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான அணையிலிருந்து வருகின்ற நீர், இயற்கையாகப்

பெய்து வருகின்ற நீர் முறையாகச் செல்வதற்கு வாய்ப்பில்லாமல் இருக்கிறது. அதற்கு அனுமதி பெற வேண்டுமென்று வனத் துறையால் சொல்லப்படுகிறது. அது புதிதாக வெட்டப்படுகின்ற வாய்க்கால் அல்ல. அதை செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, சங்கராபுரத்திற்கு கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றமும், சார்பு நீதிமன்றமும் உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது கட்டடம் கட்டப்பட்டுக்கொண்டிருக்கின்ற ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்திற்கு உள்ளே செல்ல வழியில்லை. சுமார் ஆறரை சென்ட் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு சொந்தமான இடத்தில் போகிறது. ஆகவே, துறையே, அந்தத் துறைக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். ஏனென்று சொன்னால் ஒரு துறையினுடைய இடத்தை இன்னொரு துறை எடுத்துக்கொண்டால், அதற்குரிய தொகையைக் கட்ட வேண்டுமென்று சொல்வார்கள். அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பரிசீலித்து அந்த வழியை அமைத்துத்தர ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

இப்போது கோடைக்காலம் நெருங்குகிறது. சின்ன சேலம் பேரூராட்சிக்கும், சங்கராபுரம் பேரூராட்சிக்கும், வடக்கனந்தல் பேரூராட்சிக்கும் குடிநீர்ப் பிரச்சினை இல்லாமல் இருப்பதற்கு இப்போதே அதற்கான வழிவகைகளை, அதிகாரிகளை முடுக்கிவிட்டு, குடிநீர்ப் பஞ்சம் இல்லாத அளவிற்கு உருவாக்கித் தர வேண்டும். அப்படி ஒருவேளை செய்து தருவதற்கு காலதாமதமாகுமேயானால், பேரூராட்சிகளின் மூலமாகவே வாகனங்களை வைத்து குடிதண்ணீர் கொடுக்கின்ற வகையில் ஏற்பாட்டினை இந்த அரசு செய்து தர வேண்டுமென்று இந்தக் கோரிக்கைகளை வைத்துவிட்டு, மீதமுள்ள கோரிக்கைகளை தங்களிடம் கொடுத்துவிடுகின்றேன். அனைத்துத் துறை அமைச்சர்களிடம் எடுத்துச் சொல்லி, நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: முழுவதும் கோரிக்கையாகவே பேசிவிடுங்கள்.

திரு. தா. உதயசூரியன்: பொதுவாக, இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பு புத்தக அட்டவணையில்கூட சொல்லப்பட்டிருக்கிறது. மகாத்மா காந்தி அவர்கள், கால்நடைகளை எப்படிப் பேணிக் காக்கிறோமோ, அதைப் பொறுத்துதான் இந்த நாட்டினுடைய பெருமையும், முன்னேற்றமும் இருக்கும் என்று

சொல்லியிருக்கின்றார்கள். மகாத்மா காந்தி அவர்கள் ஆட்டுப்பாலை அதிகமாக விரும்புவதாகச் சொல்லப்படுகிறது. கடலைப் பயறையும், மல்லாட்டை பயறையும், ஆட்டுப் பாலையும் விரும்புவதாக சொல்லப்படுகிறது. அப்படிப்பட்ட ஆடுகள், மாடுகள், கால்நடைகள், நாட்டின மாடுகளையெல்லாம் உருவாக்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனிக் கவனம் செலுத்தி, உருவாக்கித் தருவதற்கு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். பொதுவாக ஒரு பழமொழி உண்டு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

பிற்பகல் 2–45

திரு. தா. உதயசூரியன்: நான் சொல்லிவிடுகிறேன். பிறகு நீங்கள் பேசுங்கள். இன்னும் ஆரம்பிக்கவே இல்லை. பொதுவாக

"எருது இளைத்தால் எல்லாம் இளைக்கும்.
வீட்டுக்கு செல்வம் மாடு;
தோட்டத்திற்கு செல்வம் முருங்கை.
கறக்கின்ற பசுவையும், கைக்குழந்தையையும்
கண்ணாகப் பார்க்க வேண்டும்.
குளம்பு பட்ட மண்ணுக்கு
குன்றிமணி எருவும் வேண்டாம்"

ஒரு மாட்டினுடைய குளம்பு, அந்த வயகாட்டிலே மேய்ந்தது என்று சொன்னால், அந்தக் குளம்பு வழியாக ஏர் ஓட்டுவதற்கு முன்பாக, லாடம் கட்ட மாட்டார்கள். ஏர் எல்லாம் ஓட்டி முடிந்தபிறகுதான், பயிர் வைக்கின்றபோதுதான், அந்த உழவு முடிந்தபிறகுதான் மாட்டிற்கு லாடம் கட்டுவார்கள்.

"குளம்பு பட்ட மண்ணுக்கு
குன்றிமணி எருவும் வேண்டாம்
அதிர ஓடினால் முதிர விளையும்."

எவ்வளவு ஆடு, மாடுகள் காட்டில் ஓடுகின்றனவோ, அப்பொழுதுதான் எச்சங்கள் விழும், நிலத்திற்கு எரு உருவாகும். அப்போது விளைச்சல் முதிர்ந்துவருவதற்குவாய்ப்பாகஇருக்கின்றன.பழமொழிகளுக்கேற்ப, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தேசிய அளவில் ஒரு பூங்காவை எங்களுடைய சின்னசேலத்திற்கு அருகில் இருக்கின்ற தலைவாசல் என்ற இடத்தில் உருவாக்கித் தந்திருக்கின்றார்கள்.

நான் மகிழ்ச்சியடைகின்றேன். ஆனால் ஆயிரத்துக்கு அதிகமான ஏக்கர் நிலமும், எழுநூற்றுக்கு மேற்பட்ட ஏக்கர் நிலமும் விழுப்புரம் மாவட்டத்திற்கு சொந்தம். அது இப்போது கள்ளக்குறிச்சி மாவட்டம். ஒருங்கிணைந்த விழுப்புரம் மாவட்டத்திற்குச் சொந்தமான ஆட்டுப் பண்ணையில் இருக்கின்ற இந்த இடமும், சேலம் மாவட்டத்திற்குச் சொந்தமான ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கர் நிலமும் ஒரே இடமாக, சின்னசேலம் ஆட்டுப் பண்ணையாகத்தான் இருந்தது. இது விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த கால்நடை பராமரிப்புத் துறையினுடைய J.D. control–ல்தான் இந்நாள் வரை இருந்தது. ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த கால்நடைப் பூங்காவையும், ஆராய்ச்சிப் பண்ணையையும், மருத்துவக் கல்லூரியையும் உருவாக்குவதற்கான நிகழ்வுகளை உருவாக்கித் தந்திருக்கிறார்கள். நான் மகிழ்ச்சியடைகின்றேன். ஒரு கால்நடை முகாமுக்கு இவ்வளவு ஆடம்பரமான பெரிய விழாவை நடத்தியிருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் வரவேற்கிறேன். ஆனால், அவ்வளவு செலவு செய்ததற்குப் பதிலாக, அந்த செலவில் பல பண்ணைகளில் பசுந்தீவனங்களை உருவாக்கியிருக்கலாம் என்பதை என்னுடைய கருத்தாக நான் சொல்ல விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு கால்நடை பூங்காவை உருவாக்கியிருக்கின்றார்கள் என்று சொல்லி, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதற்கு இவ்வளவு பெரிய விழாவா என்று கேட்டார்கள். அந்த விழா என்பது தமிழகத்திலே இதுவரை இல்லாத அளவுக்கு, விவசாயப் பெருங்குடி மக்கள் கலந்துகொள்கிற ஒரு விழாவாக உருவாக்கி, 3 நாட்களில் 5 இலட்சம் விவசாயிகள் அதில் கலந்துகொண்டு பயன்பெற்றுள்ளார்கள் என்பதை முதலிலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது இதற்காக எதற்கு விழா என்று பேசினார்கள். 1,800 ஏக்கர் நிலப்பரப்பிலே 1,050 கோடி ரூபாய் செலவில் தெற்கு ஆசியாவிலேயே இதுவரை இல்லாத அளவில் ஒரு மிகப்பெரிய பிரம்மாண்டமான கால்நடைப் பூங்காவை அங்கு உருவாக்கி, (மேசையைத் தட்டும் ஒலி) உருவாக்கப்படயிருக்கின்ற கால்நடைப் பூங்காவிலே கால்நடை மருத்துவக் கல்லூரியையும் கொடுத்து, அதை இந்த ஆண்டே செயல்படுத்த வேண்டுமென்று

சொல்லி, விவசாயப் பெருங்குடி மக்களுடைய வாழ்க்கையிலே பாலை வார்த்துக்கொண்டிருக்கிற முதலமைச்சர் எங்களுடைய முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் என்பதை இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, நம்முடைய உறுப்பினர் அவர்களைப் பொறுத்தவரையில், இன்றைக்கு நாங்கள் நிறைவேற்றியிருக்கின்ற திட்டங்களுக்கு பாராட்டைச் சொல்லவேண்டும். அதைவிடுத்து நாங்கள் விழா கொண்டாடுகிறோம் என்று சொன்னால், எந்த விழாவாக இருந்தாலும் அது மக்கள் விழாவாகத்தான் இருக்கும் என்பதை இந்த அவையிலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பிரம்மாண்டமான விழா என்று கூறினார்கள். உண்மையிலேயே பிரம்மாண்டமான விழாதான். விவசாயிகளுக்கு யாரும் விழா எடுக்கவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயிகளுக்காக எடுக்கின்ற மிகப்பெரிய விழா. நீங்கள் விழாவில் வந்து பார்த்தீர்களோ என்னவோ தெரியாது. வந்திருந்தால் விழாவின் அம்சங்களை நீங்கள் தெரிந்துகொண்டிருக்கலாம். சிறப்பு அம்சங்களை தெரிந்துகொண்டிருக்கலாம். வேளாண்மைத் துறை சம்பந்தப்பட்ட அத்தனையும் வைத்திருந்தார்கள். வெறுமனே அடிக்கல் நாட்டும் விழா மட்டும் அல்ல; வேளாண் பெருமக்களுக்கு வேளாண் இயந்திரங்களை என்னென்ன முறையில் பயன்படுத்த வேண்டும், எப்படியெல்லாம் வேளாண் தொழிலை மேற்கொள்ள வேண்டும் என்பது போன்ற அத்தனையும் அங்கே காட்சிப்படுத்தப்பட்டன. அதேபோல மருத்துவக் கல்லூரியில் படிக்கின்ற மாணவர்கள், வேளாண் கல்லூரியில் படிக்கின்ற மாணவர்கள் எல்லாம் அங்கே வந்து ஒரு நாள் முழுவதும் பார்த்தார்கள். அங்கேயே அவர்களுக்கு பயிற்சி கொடுக்கப்பட்டது. இதை ஒரு விழாவாக மட்டும் எடுக்கவில்லை. அறிவுபூர்வமாக, விவசாயப் பெருங்குடி மக்களுக்குத் தேவையான நன்மைகள் கிடைக்கின்ற ஒரு விழாவாகத்தான் எடுத்தோம். (மேசையைத் தட்டும் ஒலி) மூன்று நாட்கள் நடந்தது. முதல் நாள்தான் இந்த விழா நடந்தது. இரண்டாவது நாள் அந்த விழாவைப் பார்ப்பதற்கும், வேளாண்மைத் துறையில் இருக்கின்ற சிறப்பு அம்சங்களைப் பார்ப்பதற்கும் ஒரு இலட்சம் பேர் தானாக

முன்வந்தார்கள். அதேபோல இயந்திரங்கள். விவசாயிகள் அப்படிப்பட்ட இயந்திரங்களைப் பார்த்திருக்க மாட்டார்கள். நான்கூட பார்த்ததில்லை. மரியாதைக்குரிய அண்ணன் துணை முதலமைச்சர் அவர்கள்கூட வந்தார்கள். நீங்கள் எல்லாம் போய்ப் பார்த்திருக்க வேண்டும், தவற விட்டுவிட்டீர்கள். உங்கள் மாவட்டத்தில் நடந்தது. பார்த்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன். அவ்வளவு இயந்திரங்கள், கிட்டத்தட்ட 200 stall, முழுக்க முழுக்க வேளாண் பெருமக்கள் பயன்படுத்துகின்ற அந்த இயந்திரங்கள் எல்லாம் வைக்கப்பட்டிருந்தன. (மேசையைத் தட்டும் ஒலி) தேங்காய் பறிப்பது, நடவு செய்வது, களை பறிப்பது, ஏனென்றால் உங்களுக்கு அக்கறை இருக்கின்றதோ இல்லையோ, எங்களுக்கு அக்கறை இருக்கின்ற காரணத்தினால், (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய அரசு விவசாயிகளுக்கு விஞ்ஞானபூர்வமாக அதைத் தெரிவிக்க வேண்டும், இப்படிப்பட்ட இயந்திரங்களையெல்லாம் அவர்கள் பார்த்திருக்க மாட்டார்கள்; இப்படிப்பட்ட பொதுக் கூட்டங்களின் வாயிலாகத்தான் அதைக் கொண்டுவந்து, விவசாயிகளுக்கு காட்சிப்படுத்துகிற அறிவுபூர்வமான திட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். விழுப்புரம் மாவட்டத்திற்கும், சேலம் மாவட்டத்திற்கும் இடையில்தான் இருக்கின்றது. கல்லூரி அமைப்பது சேலம் மாவட்டத்தில். அதற்குண்டான தீவனப் பயிர்களை எல்லாம் நீங்கள் சொல்கிற விழுப்புரம் மாவட்டத்தில் பயிரிடுகிறார்கள். கட்டப்படுகின்ற மருத்துவக் கல்லூரி கட்டடம் மற்றும் மற்றைய கட்டடங்களெல்லாம் சேலம் மாவட்டத்திலுள்ள பகுதிகளில் கட்டப்படுகின்ற காரணத்தால், சேலம் மாவட்டத்தில் நிகழ்ச்சி நடைபெற்றது. அது முழுக்க, முழுக்க உங்களுக்குத்தான் பயன் தருகிறது. கள்ளக்குறிச்சி மாவட்டத்திற்குத்தான் முழுப் பயனை அளிக்கிறது. ஏனென்றால், எடப்பாடியிலிருந்து வர வேண்டுமென்றால், 140 கி.மீ. வர வேண்டும். அது உங்களுடைய பகுதிக்குத்தான் பயன் தருகிறது என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். இது ஆடம்பர விழா அல்ல, விவசாயிகளுக்காக நடத்தப்பட்ட அற்புதமான விழா என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2–50

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், முதலில் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றி சொல்லுங்கள். (குறுக்கீடு)

திரு. தா. உதயசூரியன்: நான் முதலிலேயே மகிழ்ச்சி என்று சொல்லிவிட்டேன். ஆரம்பத்திலேயே மகிழ்ச்சி என்று சொல்லிவிட்டேன். நான் இதைச் சொல்வதற்குக் காரணம், (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: நான் இன்னும் பதிலுரையை ஆரம்பிக்கவில்லையே! மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) இல்லை, இல்லை, அது இல்லை. கிராமங்களுடைய பொருளாதாரமே கால்நடைச் செல்வங்கள்தான். அந்தக் கால்நடைச் செல்வங்களை நாம் வளர்த்தாலே கிராமப் பொருளாதாரம் வளரும், கிராமப் பொருளாதாரம் வளர்ந்தால், தமிழ்நாட்டின் பொருளாதாரம் வளரும். இதுதான் அடிப்படை விஷயம். அதற்காகத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஆசியாவிலேயே இல்லாத அளவிற்கு ஒரு மிகப் பெரிய திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதை உலகமே பாராட்டுகிறது. ஆனால், நீங்கள் செம்மொழி மாநாட்டை கோயம்புத்தூரில் நடத்தினீர்களே! அதற்கு எவ்வளவு பணம் செலவு செய்தீர்கள்? (மேசையைத் தட்டும் ஒலி) அதனால் ஏதாவது பிரயோஜனம் ஏற்பட்டதா? சொல்லுங்கள். யாரையெல்லாம் பின்னுக்குத் தள்ளிவிட்டு, யாரெல்லாம் முன்னுக்கு வந்தார்கள் என்பதையெல்லாம் வரலாறு சொல்கிறது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன் அவர்கள்.

திரு. தா. உதயசூரியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு, அந்தப் பகுதி தண்ணீர் இல்லாமல் வறண்டு போய் இருந்ததனால், பசுந்தீவனமே இல்லை. இதைப் பற்றி விசாரித்துப் பார்த்தால், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிய வரும். முன்பெல்லாம் வைக்கோலை நேரடியாக அடிப்பார்கள், அதனால், அது கொத்து கொத்தாக இருக்கும். தற்போது, இயந்திரங்கள் மூலம் அடிப்பதால், பஞ்சு மிட்டாய் போன்று இருக்கிறது. வைக்கோலை அந்த ஆடுகளுக்குப் போடுகிறோம். தலைச்சேரி ஆடு, சேலம் கருப்பு வெள்ளாடு, சேலம் மேய்ச்சேரி செம்மறியாடு, சென்னை சிவப்பு செம்மறியாடு என நான்கு வகை ஆடுகள் அங்கே இருக்கின்றன. மொத்தம் 1400–க்கும் அதிகமான

ஆடுகள் இருக்கின்றன. நீங்கள் வேண்டுமென்றால் கேட்டுப் பாருங்கள், நான் அதை வைத்துத்தான் பசுந்தீவனங்களுக்கு முதலிடம் அளித்திருக்கலாம் என்று சொன்னேன். நான் முதலில் மகிழ்ச்சி என்று சொல்லிவிட்டுத்தான் சொன்னேன்.

நான் இன்னும் ஒன்றை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கேட்க விரும்புகின்றேன். அந்த ஆட்டுப் பண்ணை 1957 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. முதலில் தலைவாசல் என்றிருந்தது, இப்போது கெங்கவல்லி ஆகிவிட்டது. கெங்கவல்லி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள்கூட, தன்னுடைய தொகுதிக்கு கால்நடை மருத்துவக் கல்லூரி வேண்டும் என்று கேட்கலாம், கால்நடைப் பூங்கா வேண்டும் என்று கேட்கலாம், தவறில்லை. ஆனால், நீங்கள் முதலமைச்சர், அது சேலம், இது சின்ன சேலம். நீங்கள், மருத்துவக் கல்லூரியை 700 ஏக்கருக்கு மேல் இடமுள்ள இந்த இடத்தில் ஏன் கட்டக் கூடாது? உங்கள் மாவட்டத்திலேயே ஏன் கட்டுகிறீர்கள்? ஏன் ஒரு கண்ணில் சுண்ணாம்பையும், ஒரு கண்ணில் வெண்ணெய்யையும் வைக்கிறீர்கள்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஆண்டில் கள்ளக்குறிச்சி மாவட்டத்தை ஏற்படுத்திய அரசு எங்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று, மாவட்டம் உருவாக்கப்பட்ட 6 மாதங்களிலேயே மருத்துவக் கல்லூரியைக் கொண்டு வந்ததும் நாங்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) இவ்வளவு வசதிகளை செய்து கொடுத்த பிறகும், நீங்கள் திருப்தி அடையவில்லையே! ஏன், உங்கள் மாவட்டம், எங்கள் மாவட்டம் என்று சொல்கிறீர்கள். நான் இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், இதனால், உங்களுக்குத்தான் அதிகமான பயன் இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்டுகிறேன்.

அதுமட்டுமல்ல, கால்நடைப் பூங்கா பற்றிச் சொன்னீர்கள். இந்தச் கால்நடைப் பூங்கா என்பது நாட்டின மாடுகளைக் காப்பதற்காக உருவாக்கப்பட்டுள்ளது. நாட்டின பசுக்கள், காளைகள், ஆடுகள், நம்மிடம் பாரம்பரியமாக இருக்கின்ற நாம் வளர்க்கின்ற ஆட்டு இனங்களையும், கால்நடைகளையும் வளர்க்கக்கூடிய பண்ணையாக இது இருக்கும். கலப்பின பசுக்களை உருவாக்கி, நம்முடைய

விவசாயப் பெருமக்களுக்கு கொடுக்கிறபோது, அவர்களுக்கு இரட்டிப்பு வருமானம் கிடைக்கும். ஒரு பசு 10 லிட்டர் பால் கொடுக்கும் என்றால், இந்தக் கலப்பின பசுக்களை நம்முடைய சீதோஷண நிலைக்கு ஏற்றவாறு உருவாக்கித் தருகின்றபோது, விவசாயப் பெருமக்கள் அதனை வாங்கி பயன்படுத்துகின்றபோது, 10 லிட்டர் பால் கறக்கின்ற பசு 25 லிட்டர் பால் கறக்கும். அதற்காகத்தான் இந்தக் கால்நடைப் பூங்கா அமைக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன் அவர்கள்.

திரு. தா. உதயசூரியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பூங்காவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நாட்டு மாடுகள் 200, கலப்பின மாடுகள் 500, மேய்ச்சேரி செம்மறி ஆடுகள் 700, சேலம் கருப்பு ஆடுகள் 300, நாட்டுக் கோழிகள் 50,000, நாட்டு நாய்கள் 50, பன்றிகள் 60 இருக்கின்றன என்பதைச் சொல்லி, இறைச்சி பதப்படுத்தும் கூடம், மருத்துவக் கல்லூரி, திறன் மேம்பாட்டு மையம் ஆகியவற்றைப் பற்றியெல்லாம் சொல்லியிருக்கிறார்கள், நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், நான் முதலிலேயே வைத்த கோரிக்கையைப் போல, இது சின்ன சேலம், அது சேலம். இரண்டையும் சேர்த்து, 'சின்ன சேலம் தலைவாசல் பூங்கா' என்று சொல்லுங்கள். ஏனென்றால், 1957 ஆம் ஆண்டிலிருந்து சின்ன சேலம் ஆட்டுப் பண்ணை என்றுதான் அழைக்கப்படுகிறது. அதனால், அவ்வாறு அழைக்க அறிவிப்பு வெளியிட வேண்டுமென்று உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக, இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு கோழிப் பண்ணை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ், 10 இலட்சம் ரூபாய் செலவில் கோழிப் பண்ணை உருவாக்கப்பட்டது. அவற்றில், 2½ இலட்சம் ரூபாயை மாநில சர்க்காரும், 2 இலட்சம் ரூபாயை நபார்டும், 5½ இலட்சம் ரூபாயை தனியார் கடன் வாங்கியோ அல்லது சொந்தப் பணத்திலிருந்தோ அளிப்பார். 10 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கோழிப் பண்ணை அமைக்கப்பட்டு, கறிக்கோழிகள் உருவாக்கப்பட்டன. அந்தத் திட்டம் 2 ஆண்டுகளாக, அதாவது, 2019 ஆம் ஆண்டிலிருந்து இல்லை. ஒரு மாவட்டத்திற்கு 200 பேரைத் தேர்வு செய்து, அந்த 200 பேருக்கும் கறிக்கோழித் திட்டம் பற்றி தெரிவித்து, கறிக்கோழி அபிவிருத்திப்

பண்ணை உருவாக்கப்பட்டது தற்போது நிறுத்தப்பட்டு, அதற்குப் பதிலாக, தற்போது Aseel என்ற கிட்டத்தட்ட 150 கிராம் எடையுள்ள நாட்டுக் கோழிக்குஞ்சை ஒருவருக்கு 50 குஞ்சுகள் என, அதுவும் பெண்களுக்குத்தான் கொடுக்க வேண்டுமென்று சொல்லி, PIP–ஏழ்மையிலும் ஏழ்மை. அது ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் கிராமத்திலே கொடுக்கின்ற அந்த நிகழ்வை உருவாக்கிக் காட்டினீர்கள். அவர்களுக்கு 50 கோழிக் குஞ்சைக் கொடுத்து, அதை வளர்க்கிற கூண்டையும் கொடுத்தீர்கள். இப்போது சென்ற வருடத்திலிருந்து என்ன செய்கிறீர்கள் என்றால், அதை B.P.L. பேரூராட்சிக்கும், சிறப்பு நிலைப் பேரூராட்சி, தேர்வு நிலை பேரூராட்சி என எல்லா பேரூராட்சிகளுக்கும் அது கொடுக்கப்பட வேண்டுமென்பதற்காக அந்த Aseel நாட்டுக் கோழிக் குஞ்சை, 50 குஞ்சுகள் கொடுத்ததை இப்போது 25 ஆக்கியிருக்கிறீர்கள். அந்தக் கூண்டு கொடுப்பதில்லை. ஆகவே, ஏற்கெனவே 50 கொடுத்ததுபோல மேலும் 50 சேர்த்து 100 ஆகக் கொடுங்கள். ஏனென்றால், சாதாரண ஏழையெளிய மக்களுக்கு இந்தக் கால்நடைகள், கோழிகள் இவைதான் பொருளாதாரத்தை ஈட்டுகின்ற நிகழ்வு. ஆகவே, 50 கொடுத்ததை 25 ஆக்கினீர்கள். அப்புறம் ஏன் கூண்டை கொடுக்காமல் விட்டீர்கள்? அதைச் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 2–55

அதேபோல், இப்போது புதிதாக கோழி அபிவிருத்திப் பண்ணை என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்போது இந்தப் பக்கம் 17 மாவட்டங்கள், அந்தப் பக்கம் 17 மாவட்டங்கள் என்று இப்போது 9 மாவட்டங்களைப் பிரித்திருக்கிறீர்கள். அவற்றில் 13 மாவட்டங்களில் நாட்டுக் கோழி இனம் கிரி ராஜா, வன ரோஜா, கிராமப் பிரியா, இவற்றுக்கு 1 இலட்சத்து 12 ஆயிரத்து 500 ரூபாய் முழுக்க முழுக்க மானியமாகவே கொடுக்கிறீர்கள். அதைச் செய்திருக்கிறீர்கள். அதேமாதிரி ஒரு திட்டத்தில் இப்போது என்ன செய்திருக்கிறீர்கள் என்றால், திருவண்ணாமலை மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் 600 கோழிக் குஞ்சுகள் கொடுக்கிறீர்கள். 150 குஞ்சுகள் ஒரு item, 150 குஞ்சுகள் மற்றொரு item என 600 குஞ்சுகளை 4 முறையாகக் கொடுக்கிறீர்கள். திருவண்ணாமலை மாவட்டத்தில் செய்திருப்பது சரியா என்று பார்த்துவிட்டு, இப்போது விழுப்புரம் மாவட்டத்தைத் தேர்வு செய்திருக்கிறீர்கள். அந்தப் பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டிருப்பதாக உங்கள் கொள்கை விளக்கக் குறிப்பில் நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள்.

நான் சொல்வதெல்லாம், வேலையில்லா பட்டதாரி இளைஞர்கள் நிறையபேர் இருக்கிறார்கள். நான் உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், நிறையபேர் தனியாக பண்ணைகள் வைத்திருக்கிறார்கள். இப்போது நீங்கள் loan கொடுப்பதில்லை. இதை நீங்கள் ஒரு scheme–ல்தான் தேர்வு செய்கிறீர்கள். University–யிலிருந்து ஒரு Professor வருகிறார். அவர் ஒரு கால்நடை மருத்துவர். அந்த Bank Manager யாருக்குக் கொடுக்கிறார்களோ இந்தமாதிரி உள்ளவர்களை வைத்துக்கொண்டு, selection செய்கிற வேலைகள் இருக்கின்றன. ஆனால், ஒரு தன்னார்வத்துடன் உள்ளவர்கள், ஏழையெளிய இளைஞர்களுக்கு மானியத்தோடு loan கொடுத்தால்தான் அவர்கள் வாழ்க்கையில் பொருளாதாரத்தை உருவாக்குவதற்கு வாய்ப்பாக இருக்கும். அதை உருவாக்கித் தரவேண்டுமென்று, ஏற்கெனவே இருந்த முறையில் அதை செய்து தர வேண்டுமென்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, 838 ஏக்கர் நிலப்பரப்பிலே அவருடைய பகுதியிலே ஏன் எந்தப் பணிகளும் செய்யப்படவில்லை என்று சொன்னார். எங்களைப் பொறுத்தவரை, இந்தப் பகுதி, அந்தப் பகுதி என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பார்ப்பதில்லை. தமிழகத்தில் இருக்கின்ற நாட்டு இனங்கள் காக்கப்பட வேண்டுமென்பதிலே, இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் ஒவ்வொரு நாட்டினத்திற்கும் தனித் தனியாக நிதியை ஒதுக்கிக் கொடுத்தவர் நம்முடைய முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) காங்கேயம் இனக் காளைகளை புதிதாக உருவாக்க வேண்டும், அந்த நாட்டினங்களைக் காக்க வேண்டுமென்பதற்காக இரண்டரை கோடி ரூபாய் செலவிலே பவானிசாகருக்கு அருகிலே காங்கேயம் ஆராய்ச்சி நிலையம் உருவாக்கப்பட்டு, அங்கே காங்கேயம் காளைகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. அதேபோல, ஆலம்பாடி இனங்கள், பர்கூர் இனங்கள், புலிக்குள இனங்கள். இவற்றுக்கெல்லாம் ஆராய்ச்சி நிலையங்களை உருவாக்கி அந்த இனங்கள் பாதுகாக்கப்பட வேண்டுமென்பதிலே ஒரு விவசாயி இன்று முதலமைச்சராக இருக்கின்ற காரணத்தினாலேதான், விவசாயி என்ற வகையிலே

அனைத்து கால்நடைகளையும் காத்துக் கொண்டிருக்கின்ற ஒரு முதல்வர் நம்முடைய முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோல், எங்களுடைய பகுதியிலே என்ன செய்திருக்கிறீர்கள் என்றெல்லாம் கேட்டார்கள். அங்கே வருகின்ற கால்நடைகளுக்குத் தேவையான உற்பத்தி, அதாவது என்னவென்று சொன்னால், இன்றைக்கு மானாவாரியாக இருக்கின்ற சுமார் 300 ஏக்கர் பரப்பிலே பசுந்தீவனம் உற்பத்தி செய்வதற்காக அங்கே ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. 195 ஏக்கரிலே மரத்தீவனத்துடன்கூடிய மேய்ச்சல் நிலமும், 100 ஏக்கரிலே தீவன விதைப் பண்ணையும், 135 ஏக்கரிலே ஊர்த் தீவன உற்பத்தியும், 100 ஏக்கரிலே ஊடுபுழு உற்பத்தியும் அங்கே மேற்கொள்ளப்படவிருக்கின்றது. அதுபோல, அந்தப் பகுதியில் இருக்கின்ற இந்தப் பண்ணைகளுக்குத் தேவையான தண்ணீரை மேட்டூரிலிருந்து 250 கோடி ரூபாய் செலவிலே கொண்டு வருவதற்கான பணிகளும் அங்கே துவங்கப்பட்டிருக்கின்றன என்பதை இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல, இங்கே பேசும்போது சொன்னார்கள், இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்க வேண்டுமென்று சொன்னால், இன்றைக்கு பண்ணைகளை அமைப்பதற்காக பல்வேறு பணிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று சொன்னார். ஏற்கெனவே எங்களுடைய முதலமைச்சர், அண்ணன் எடப்பாடியார் அவர்கள், அந்தக் கால்நடைப் பூங்காவை அமைக்கின்றபோதே தமிழகத்தில் இருக்கின்ற அனைத்து விவசாயப் பெருங்குடி மக்களும், அவர்கள் இளைஞர்களாக இருந்தாலும் சரி, எப்படியிருந்தாலும் சரி, அவர்களையெல்லாம் வரவழைத்து, அங்கே பல்வேறு திட்டங்களை நாங்கள் செயல்படுத்தவிருக்கின்றோம். மீன் வளர்ச்சியை உருவாக்கவிருக்கின்றோம். நாட்டுக் கோழிகளை உருவாக்கவிருக்கின்றோம். பால் பண்ணைகளை உருவாக்கவிருக்கின்றோம். அந்தப் பண்ணைகளிலே வந்து ஒரு மாத காலம், இரண்டு மாத காலம் பயிற்சி பெற்று அவர்கள் சென்று அந்தப் பணிகளை மேற்கொள்வதற்கு இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பித்திருக்கிறார்கள் என்பதை இங்கே பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 3–00

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்றபோது 50 கோழிக் குஞ்சுகளைக் கொடுத்தீர்கள், இப்போது 25 கோழிக் குஞ்சுகள்தான் கொடுக்கிறீர்கள் என்று சொன்னார்கள். அந்த 25 கோழிக் குஞ்சுகளில், 15 பெட்டைக் கோழி, 10 சேவல். சாதாரணமாக ஒரு கோழி, 20 முட்டைகள் இடும். ஒரு வருடத்தில் பார்த்தீர்களென்றால் நாம் கொடுக்கும் கோழிகளில் 2 கோழிகள் முட்டையிடும். அதை அடைகாத்து வைத்தாலே, அவை குஞ்சு பொரிக்கும். நான், இதை practical ஆக செய்ய வேண்டுமென்பதற்காக சென்னையில், என் வீட்டிலேயே வளர்க்கிறேன், வேண்டுமென்றால் வந்து பாருங்கள். 14 முட்டைகளை வைத்தேன், 14 குஞ்சுகளைப் பொரித்தது. இன்னொரு கோழியை வைத்தேன், அதுவும் 14 குஞ்சுகளைப் பொரித்தது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, ஒரு கோழி, 14 குஞ்சுகளைப் பொரிக்கும்போது, 2 கோழிகள் 28 குஞ்சுகளைப் பொரித்திருக்கின்றன. நான், இப்போது சென்னையில் என்னுடைய வீட்டில் வளர்த்துக் கொண்டிருக்கிறேன். ஆகவேதான், (குறுக்கீடு) நல்ல கோழிதான். கோழியில் என்ன, நல்ல கோழி, கெட்ட கோழி என்று இருக்கிறது. நல்ல கோழி, கெட்ட கோழி என்று நீங்கள் புதிதாகக் கண்டுபிடித்திருக்கிறீர்கள் என்று நினைக்கின்றேன். மனிதர்கள்தான் அப்படியிருக்கிறார்கள். ஆனால், கோழிகள் அப்படியில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, அவற்றை நான் வளர்த்து பயன்பெற்றுக் கொண்டிருக்கின்ற காரணத்தினால்தான், அதிக நபர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில், நாம் கொடுக்கின்ற, ஒதுக்குகின்ற நிதி குறைவாக இருக்கின்ற காரணத்தினாலே, அனைவருக்கும் இந்தக் கோழிக் குஞ்சுகளைக் கொடுத்து வளர்க்க வேண்டுமென்கின்ற அடிப்படையிலேதான் குறைத்துக் கொடுத்திருக்கின்றோமேயொழிய, வேறு ஒன்றும் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இதனை வைத்தே, அவர்கள் அதிகமான கோழிக் குஞ்சுகளை உருவாக்கி, ஒரு பண்ணையையே வைத்துக்கொள்ளலாம். அந்தளவிற்கு உற்பத்தி செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன் அவர்கள்.

திரு. தா. உதயசூரியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புழக்கடைத் திட்டத்தில் நீங்கள் கொடுக்கிறீர்கள். நான் கேட்டது, 50 கோழிக் குஞ்சுகளை ஏன் 25 கோழிக் குஞ்சுகளாகக் குறைத்தீர்கள். அந்த 50 கோழிக் குஞ்சுகளையே கொடுங்கள் என்றுதான் சொன்னேன். அவர்களுக்கு கூண்டு கொடுக்கவில்லை. நிறைய நபர்களுக்குக் கொடுங்கள், தவறு ஒன்றும் இல்லை. அரசு, சாதாரண மக்களுக்குத்தானே கொடுக்க வேண்டும்.

இதேமாதிரி, இப்போது நாட்டு இன மாடுகளையெல்லாம் காப்பாற்ற வேண்டும். ஏன் இப்போது முடியவில்லையென்று சொன்னால், மேய்ப்பதற்கு மேய்ச்சல் இடமில்லை. அதற்கு தீவனத்திற்கு வழியில்லை. நீங்கள், 35 வருடத்திற்கு முன்பெல்லாம் பார்த்தால், வனப் பகுதியிலே, தாழ்தளத்தில்—மலையிலே இல்லை, கீழ் தாழ்தளத்திலே eucalyptus மரம் மற்றும் பல்வேறு செடி கொடிகள் இருக்கும், முட் புதர்கள் இருக்கும். இதில், ஆடு, மாடுகளை மேய்ப்பதற்கு, வெள்ளாட்டைத் தவிர, செம்மறி ஆடுகளை மேய்ப்பதற்கு மாட்டுக்கும், ஆட்டுக்கும் வனத் துறையின் மூலமாக pass கொடுப்பார்கள். அந்த pass–ஐ இப்போது கொடுப்பதில்லை. நீங்கள், மத்திய சர்க்காருடன் இணக்கமாக இருக்கின்ற காரணத்தினால், அவர்களிடம் பேசி; ஏனென்றால், ஆடு, மாடு வனத்தை அழிக்கவே அழிக்காது. வெள்ளாடு வேலியை அழிக்கும் என்று சொல்வார்கள். ஆனால், இந்தச் செம்மறியாடு, சிவப்பு செம்மறியாடாக இருந்தாலும் சரி, திருச்சி கருப்பு செம்மறியாடாக இருந்தாலும் சரி, இராமநாதபுரம் வெள்ளை மாடாக இருந்தாலும் சரி, வேம்பூர் செம்மறியாடாக இருந்தாலும் சரி, இவையெல்லாம் வனத்தையும், காட்டையும், வேலியையும் அழிக்காது. இதுபோன்ற செம்மறியாடுகளும், மாடுகளும் புல்லைத்தான் மேயும். அதனால், வனப் பகுதிகளில் ஆடுகளும், மாடுகளும் மேய்வதற்கு அனுமதி வாங்கிக் கொடுக்க வேண்டும்.

இந்த நாட்டு இன மாடுகளெல்லாம், இப்போது என்ன சொல்கிறார்கள் என்றால், காலையில் 2 லிட்டர் பாலும், மாலையில் ஒன்றரை லிட்டர் பாலும்தான் கறக்கிறது, அந்த மாடுகள் எங்களுக்கு எதற்கு தேவையென்று சொல்கிறார்கள். ஒரு வீட்டில், நல்ல விவசாயக் குடும்பத்தில் 20 பசு மாடுகள், 30 பசு மாடுகள் என்று வைத்திருந்த காலம் உண்டு. ஆனால், இப்போதெல்லாம் அவற்றை யார் மேய்ப்பது? மேய்ப்பதற்கு இடமில்லை என்கின்ற சூழ்நிலை இருக்கின்றது. அதனால், நீங்கள் மத்திய அரசாங்கத்தோடு

இணக்கமாக இருப்பதனால், அங்கு சொல்லி, இதற்கு அனுமதி வாங்கித் தர வேண்டும். வனப் பகுதிகளில், இப்போது எங்கள் பகுதியில் பார்த்தீர்களென்றால், மூங்கில்துறைப்பட்டு இருக்கிறது, திருவண்ணாமலை மாவட்டம் இருக்கிறது, தருமபுரி, சின்ன சேலம், சங்கராபுரம் என்று இருக்கிறது, சேலம் அருகில் ஏற்காடு இருக்கிறது. எங்கெங்கெல்லாம் வனப் பகுதிகள் இருக்கின்றனவோ, தரைத் தளத்தில் ஆடு, மாடுகள் மேய்வதற்கு (குறுக்கீடு) கன்னியாகுமரியுமா? சும்மா இருக்க முடியாதா? (சிரிப்பு) கன்னியாகுமரி போன்ற வனப் பகுதிகள் இருக்கின்ற இடங்களில் ஆடு, மாடுகள் மேய்ப்பதற்கு நீங்கள் pass கொடுத்தால், இந்த நாட்டு இன மாடுகள் அழிவதற்கு வாய்ப்பே கிடையாது. மேய்வதற்கு இடம் இல்லாததால், ஒன்றரை லிட்டர் பால், இரண்டு லிட்டர் பால் கறப்பதனால், என்ன செய்கிறார்கள் என்றால், 5 லிட்டர் அளவிற்கு பால் கறக்கின்ற மாடுகளான, cross இனங்களான Jersey, Holstein, Friesian இந்த மாதிரியான மாடுகளை வளர்த்து விவசாயிகள் பொருளாதாரத்தை ஈட்டுவதற்கு விருப்பப்படுகிறார்கள். ஆகவே, நாட்டு இன மாடுகள் காப்பாற்றப்படுவதற்கு சில திட்டங்களை தங்களிடம் சொல்லிவிடுகிறேன். ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) அண்ணன், சொல்லிவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நாட்டு இன மாடுகளைக் காப்பாற்ற வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இதற்காகத்தான், விந்தணுக்களைப் பிரித்து, நமக்கு எது வேண்டுமோ, காளை வேண்டுமென்றால் காளை, கிடேரி வேண்டுமென்றால் கிடேரி, அதையும் எங்களுடைய அரசு கொண்டு வந்திருக்கின்றது. நவீன முறையிலே, விவசாயப் பெருமக்களுக்கு எந்தக் கன்று வேண்டுமோ, அந்தக் கன்றை அந்தப் பசு ஈனக்கூடிய அளவிற்கு விஞ்ஞான முறைப்படி, இன்றைக்குள்ள தொழில்நுட்பப்படி, இந்தத் திட்டத்தையும் எங்களுடைய அரசு கொண்டு வந்திருக்கின்றது. நீங்கள் சொல்கின்ற கால்நடைப் பூங்காவிலே அதுவும் இணைக்கப்பட்டிருக்கின்றது என்கின்ற தகவலையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன் அவர்கள்.

திரு. தா. உதயசூரியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை Chromosome–லிருந்து பிரித்து xx என்றால் கிடேரி, xy என்றால் ஆண் கன்று என்று சென்ற budget குறிப்பிலேயே நீங்கள் சொல்லியிருந்தீர்கள். இல்லையென்று நான் சொல்லவில்லை. உதகமண்டலத்திலே செய்வதாகச் சொல்கிறீர்கள். நீங்கள் செய்திருக்கிறீர்கள், சரி. நான் கேட்பதெல்லாம் ஒரு பண்ணையில் 100 மாடுகள் வைத்திருக்கிறார்கள் என்று சொன்னால், கிடேரி கன்று என்றால் வைத்துக்கொள்வார்கள். காளை கன்று என்றால், நடக்கின்ற அளவிற்கு வந்தவுடன் வெளியில் கொண்டு விட்டுவிடுவார்கள். இல்லையென்றால், யாராவது வாங்கிக்கொண்டு சென்றுவிடுவார்கள். காளை கன்றுக்கு மரியாதை இருக்காது. இந்தக் கிடேரி கன்றைத்தான் கூண்டில் வைத்துக்கொள்வார்கள். அதனால்தான் xx கிடேரி கன்று, xy ஆண் கன்று. அதை ஒன்றும் நான் மறுத்துப் பேசவில்லை. மாடுகளை மேய்ப்பதற்கு இடம் வேண்டும். அந்த இடங்களைப் பெறுவதற்கு நீங்கள் மத்திய அரசாங்கத்திடம் எடுத்துச் சொல்லி, சிறப்பு அனுமதி வாங்கி, ஏற்கெனவே கொடுத்ததுபோல் pass வாங்கித் தர வேண்டுமென்று உங்களை நான் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 3–05

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நல்ல அற்புதமான கருத்தைச் சொல்லியிருக்கின்றீர்கள். இப்போது 38 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கே அவையிலே இருக்கின்றார்கள். இந்தக் குரலை அங்கே எழுப்புங்கள். (சிரிப்பு) இங்கே ஒலிக்கின்ற குரல் அங்கேயும் ஒலிக்கட்டும். (மேசையைத் தட்டும் ஒலி) நாடாளுமன்றத்திலே ஒலிக்கின்றபோது, அங்கேதான் அனுமதி கொடுக்கின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இருக்கின்றார்கள். ஆகவே, எங்களுடைய தமிழகத்திலே இப்படிப்பட்ட நிலைமை இருக்கின்றது. நாட்டின மாடுகளெல்லாம் அழியக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கின்றது. அவற்றுக்குத் தேவையான மேய்ச்சல் நிலங்கள் வேண்டும். அப்படிப்பட்ட மேய்ச்சல் நிலங்கள் வனப் பகுதியிலே இருக்கின்றன. அந்த வனப் பகுதியிலே மாடுகளை மேய்ப்பதற்கு நீங்கள் அனுமதி கொடுங்கள். அப்படி அனுமதி கொடுத்தால் எங்கள் பகுதியில், அதிகமான நாட்டின மாடுகள் உருவாவதற்கான வாய்ப்பிருக்கும்

என்ற கோரிக்கையை அங்கே வைத்தால், அனுமதி கிடைக்கும். அப்படி அனுமதி கிடைத்தால் இங்கே நீங்கள் கேட்பதைப்போல, தாராளமாக அந்தக் கால்நடைகளை அங்கு மேய விடலாம்.

திரு. தா. உதயசூரியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள், எம்.எல்.ஏ.–க்கள் பேசுவதையெல்லாம் நீங்கள் செய்து கொடுத்து விடுவதில்லை. அதிகாரம் உங்களிடத்தில் இருக்கின்றது. பிரதமரிடத்தில்தான் அதிகாரம் இருக்கின்றது. எங்களுடைய எம்.எல்.ஏ.–க்கள், எங்களுடைய கட்சித் தலைவர்களிடத்தில் சொல்லி, எங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர்களை அங்கு பேசச் சொல்கிறோம். உங்களால் முடியவில்லையென்றால், முடியவில்லையென்று சொல்லுங்கள். வேண்டுமென்றால், நாங்கள் எங்களுடைய MPs–ஐ விட்டு நாடாளுமன்றத்தில் பேசச் சொல்கிறோம். அதில் ஒன்றும் தவறு கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே கருத்தைத்தான் நீங்கள் அப்போதும் சொன்னீர்கள். எங்கள் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவையில் இருந்தபோது, நீங்கள் 37 பேர் சென்று என்ன செய்துகொண்டிருந்தீர்கள் என்று கேள்வி கேட்டீர்கள். இப்போது மட்டும் என்ன? நாங்கள் கூட்டணியில் இல்லை. (குறுக்கீடு) நீங்கள் கூட்டணியில், அமைச்சரவையில் இடம் பெற்றிருந்தும் செய்யவில்லையே? நீங்கள் மத்தியில் 13 ஆண்டுக் காலம் அமைச்சரவையில் இடம் பெற்றிருந்தீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) என்ன கொண்டுவந்து சாதித்திருக்கிறீர்கள்? (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல, நீங்கள் உண்மையிலேயே மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும், விவசாயிகளுக்கு நன்மை செய்ய வேண்டுமென்று சொன்னால், பேசுகின்ற இடம் நாடாளுமன்றம். ஏனென்றால், அதற்காகத்தான் அவர்களை மக்கள் தேர்ந்தெடுத்து, நாடாளுமன்றத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள். ஆகவே, நீங்கள் சொல்வதைப்போல, மாண்புமிகு பிரதமரைச் சந்திக்கிறோம், மாண்புமிகு மத்திய அமைச்சர்களைச் சந்திக்கிறோம், அவர்களிடத்தில் கோரிக்கைகளைக் கொடுக்கின்றோம். ஆனால், இதை நிறைவேற்றுகின்ற இடம் நாடாளுமன்றம்தான். நீங்கள் சட்டமன்றத்தில் பேசிக்

கொண்டிருக்கிறீர்கள். ஆகவே, எதிர்க்கட்சியாக இருந்தாலும், நீங்கள் பேசுவது அவைக் குறிப்பிலே பதிவு செய்யப்படுகிறது. பத்திரிகைகள் வாயிலாகவும் வெளிவருகின்றது. இன்றைக்கு அதிகாரிகளும் கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள். மாண்புமிகு அமைச்சர்களும் கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அதற்குண்டான நடவடிக்கையை எடுப்பதற்காக நீங்கள் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவருகின்றீர்கள். நீங்கள் இங்கே பேசுவதைப்போல, நாடாளுமன்றத்திலும் பேசினால் அங்கே இருக்கின்ற மாண்புமிகு அமைச்சர்களின் கவனத்திற்குச் செல்லும். அப்படி அவர்களுடைய கவனத்திற்குச் சென்றால், தமிழ்நாட்டில் இந்தப் பிரச்சினை இருக்கின்றது, தீர்க்கப்படும் என்ற ஒரு நல்ல முடிவு கிடைக்கும். அதற்குத்தான் இந்தக் கருத்தை நான் சொன்னேன்.

திரு. தா. உதயசூரியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆகவே, இந்த நாட்டின மாடுகளோடு 10 லிட்டர், 15 லிட்டர் பால் கறக்கக்கூடிய, பஞ்சாப் மற்றும் ஹரியானா போன்ற மாநிலங்களிலிருந்து சாஹிவால், கிர் போன்ற மாடுகளையும் இந்தப் பூங்காவிற்கு கொண்டுவர வேண்டும். 13 பண்ணைகள் இருக்கின்றன. பசுந்தீவனம் இருக்கின்ற பண்ணை. அதேபோன்று கோழிப் பண்ணை. காஞ்சிபுரத்தில் இரண்டு பண்ணைகள் இருக்கின்றன. ஒன்று, படப்பை மற்றொன்று இன்னொரு இடத்தில் இருக்கின்றது. அதேமாதிரி, சின்ன சேலம் ஆட்டுப் பண்ணை, சேலம், முகுந்தராயபுரம் போன்ற இடங்களில் இருக்கின்ற எல்லா கால்நடைப் பண்ணைகளிலும் பசுந்தீவனங்களை நீங்கள் உருவாக்கித் தருவதன் மூலமாக 'சமச்சீர் உணவு' கொடுக்கின்றபோது, ஓர் ஆடு 3 குட்டிகளை ஈனுவதற்கு வாய்ப்பிருக்க வேண்டுமென்று சொன்னால், 'சமச்சீர் கல்வியைப்' போல 'சமச்சீர் உணவு' கொடுக்கும்போதுதான் இதுபோன்ற நிலைமைகள் உருவாவதற்கு வாய்ப்புண்டு. (குறுக்கீடு) நான் ஒரேயொரு உதாரணத்தை மட்டும் சொல்லிவிடுகிறேன். பின்னர் பேசுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. உதயசூரியன், நேரமாகிவிட்டது. உரையை முடியுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, 'சமச்சீர் உணவு' கொடுத்தால்தான் 2 குட்டிகள், 3 குட்டிகள் போடும் என்று சொன்னார்கள். ஏற்கெனவே, ஓர் ஆடு 3 குட்டிகளை போட்டுக் கொண்டுதான் இருக்கின்றது. ஓர் ஆடு 4 குட்டிகள் போடுவதற்கான ஏற்பாடுகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள்.

அதேபோல், நாட்டினங்களைக் காக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களே மற்ற இனங்களையும் கொண்டுவந்து, அந்தக் கால்நடைப் பண்ணையிலே வைக்க வேண்டுமென்றும் சொல்கிறார். முதலிலே அந்தக் கால்நடைப் பூங்காவிலே என்னென்ன இருக்கின்றன, என்னென்ன வருகிறது என்பதை அவர் தெளிவாகப் படித்துப் பார்க்க வேண்டும். ஏற்கெனவே, அதை நாங்கள் புத்தகமாகக் கொடுத்திருக்கின்றோம். அந்தப் புத்தகத்திலே பார்க்க வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பொறுத்தவரை, இன்றைக்கு, அமெரிக்காவிலே இருக்கின்ற மாடுகள் எவ்வளவு லிட்டர் பால் கறக்கின்றதோ, அந்தளவுக்கு தமிழகத்தில் இருக்கின்ற மாடுகளும் பால் கறக்க வேண்டும். அதற்கு என்ன தேவையோ அதைச் செய்ய வேண்டுமென்று எங்களுக்கு ஆணை பிறப்பித்திருக்கின்றார்கள். ஆகவே, எங்களுடைய ஆராய்ச்சி நிலையத்தைப் பொறுத்தவரை, விவசாயப் பெருங்குடி மக்களினுடைய வாழ்வாதாரம் எந்த வகையிலே உயர வேண்டுமென்பதைப் பற்றியெல்லாம் சிந்தித்து, சிந்தித்து ஒவ்வொரு கணமும் எங்களுக்கு ஆலோசனை வழங்கி, இன்றைக்கு அந்தத் திட்டங்களையெல்லாம் செயல்படுத்துவதற்குண்டான பணிகளை நாங்கள் மேற்கொண்டிருக்கின்றோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன் அவர்கள்.

திரு. தா. உதயசூரியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலையில்லா பட்டதாரி இளைஞர் ஒருவர் இப்போது, எங்களுடைய விழுப்புரம் மாவட்டம், செஞ்சி சாலையில் ஆயிரம் போயர் இன ஆடுகளை வைத்திருக்கிறார். அவர் physiotherapist படித்தவர். அதற்குத்தான், நீங்கள் மானியம் கொடுங்கள் என்று நான் முதலிலே சொன்னேன். வேலை கிடைக்கவில்லை.

இப்போது வேலை கிடைப்பதே பெரிய விஷயமாக இருக்கிறது. TNPSC–ஐயும் நம்ப முடியவில்லை. இப்போது, எல்லோருமே பாட்டு பாடினார்கள். எல்லா எம்.எல்.ஏ.–க்களும் பாட்டு பாடினார்கள். அருப்புக்கோட்டை எம்.எல்.ஏ., பாடினார்; அந்தச் சகோதரி பாடினார். எல்லோருமே பாடினார்கள். நாங்களும் பாட்டு பாடுவோம். அதே எம். ஜி.ஆர். பாட்டுத்தான். தாய்க்குப்பின் தாரம் என்ற படத்தில்,

"மனுசன மனுஷன் சாப்பிடுறாண்டா தம்பி பயலே,
இது மாறுவதெப்போ தீருவதெப்போ நம்ம கவலே"

என்று பாடுவார். (மேசையைத் தட்டும் ஒலி) M.Sc. படித்தவர்கள் துப்புரவுப் பணிக்குச் செல்கிறார்கள். நம்முடைய நாட்டில் M.Sc. படித்தவர்கள், கணிதம், Physics, Chemistry படித்தவர்கள் எல்லாம் துப்புரவுப் பணியாளர் வேலைக்குச் சென்று கொண்டிருக்கிறார்கள். நான் எதிர்க்கட்சி உறுப்பினராக இருப்பதனால், இங்கே சில கருத்துகளைச் சொல்கிறேன். இப்போது, TNPSC–யை எடுத்துக்கொள்ளுங்கள். தேர்தல் கமிஷன் போலத்தான் இந்த Tamil Nadu Public Service Commission–ம். இது தன்னாட்சி நிறுவனம்–autonomous. அவர்கள்தான் 17A, 17B, 17E போன்ற ஒழுங்கு நடவடிக்கைகளை எல்லாம் எடுக்கிறார்கள். அதேபோல Lok Ayukta உள்ளது. TNPSC–யினால் இந்த அரசாங்கத்தின்மீது படித்த வேலையில்லா இளைஞர்களுக்கு ஒரு நல்ல பெயர் இல்லாமல் இருக்கிறது. அதைப் போக்க வேண்டுமென்று சொன்னால், நீங்கள் . . .

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பிற்பகல் 3–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், உரையை முடியுங்கள்.

திரு. தா. உதயசூரியன்: முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு) முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை குறித்து, காலையிலே மாமன்ற உறுப்பினர்கள் கேள்வி எழுப்பி, அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவாகப் பதில் சொல்லியிருக்கிறார். திரும்பவும் அதுகுறித்து பிரச்சினை செய்தால், நீண்ட விவாதம் எழும். ஏற்கெனவே

Court–ல் issue இருக்கிறது. சென்னை உயர் நீதிமன்றத்திலும் issue இருக்கிறது. மதுரை உயர் நீதிமன்றத்திலும் issue இருக்கிறது. ஒரு centre–ல் நடைபெற்றதை வைத்து ஒட்டுமொத்தமாக TNPSC–ஐ நாம் சந்தேகிக்கக் கூடாது. அது TNPSC–க்கு வெளியில் ஒரு centre–ல் நடந்த விஷயம். அதுகுறித்து எங்களுடைய கவனத்திற்கு வந்தவுடன் 52 பேர் கைது செய்யப்பட்டு, இன்றைக்கு நடவடிக்கை சரியான பாதையில் போய் கொண்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, உங்களுடைய ஆட்சியில் எப்படியெல்லாம் நடந்தது என்பதற்குள் நான் சென்றால், நீங்கள் திரும்பவும் எழுந்துகொள்வீர்கள்.

ஒன்று மட்டும் சொல்கிறேன். உங்களுடைய 5 ஆண்டு கால ஆட்சியிலே மொத்தமாக, கிட்டத்தட்ட 23,000 posts தான் நீங்கள் TNPSC மூலமாக fill up செய்தீர்கள். ஆனால், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே மொத்தம் 9 ஆண்டுகளில், எல்லா துறைகளையும் சேர்த்து, கிட்டத்தட்ட மூன்றரை இலட்சம் அரசுப் பணியிடங்கள் இன்றைக்கு நிரப்பப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. உதயசூரியன், உரையை முடியுங்கள்.

திரு. தா. உதயசூரியன்: இன்னும் மூன்றே நிமிடங்களில் உரையை முடித்துவிடுகிறேன். கோமாரி நோய்த் தடுப்பு குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும். மாடுகளுக்கெல்லாம் கோமாரி நோய்த் தடுப்பூசி போடுவார்கள். மார்ச் மற்றும் செப்டம்பர் மாதங்களில் ஒன்றாம் தேதியிலிருந்து 21 ஆம் தேதிக்குள் ஓரிடத்திற்கு வரவழைப்பார்கள். மாடுகளெல்லாம் வரும். அவற்றுக்குத் தடுப்பூசி போட்டுவிடுவார்கள். இதுதான் நடைமுறையில் இருந்தது. இப்போது தேசிய விலங்குகள் நோய்த் தடுப்புத் திட்டம் என்ற திட்டத்தைக் கொண்டு வந்து, மத்திய சர்க்காரே 100/100 அதற்குப் பணம் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். மாடு வைத்திருக்கிற owner உடைய ஆதார் அட்டை, காதில் tag, online–ல் பதிவு செய்ய வேண்டும், இதுவெல்லாம் எப்போது முடிவடைவது? 1,500 இடைநிலை உதவியாளர்களை எல்லாம் நீங்கள் நியமனம் செய்யாமல் இருக்கிறீர்கள். ஒரு மருந்தகம் இருக்கிறது என்றால், அதில் Doctor மட்டும்தான் இருக்கிறார். ஒரு Doctor ஒரு வீட்டிற்குச் சென்று, ‘என்ன மாடு வைத்திருக்கிறீர்கள்; tag அடிக்க வேண்டும்;

online–ல் பதிவு செய்ய வேண்டும்; ஆதார் அட்டை இருக்கிறதா' என்று கேட்க வேண்டும். Owner ஒரு மாட்டை ஒரு வருடம் வைத்திருப்பார்; 6 மாதங்கள் வரை வைத்திருப்பார்; பொருளாதாரம் இல்லையென்றால், விற்றுவிட்டுப் போய்விடுவார். மாட்டிற்கு ஏன் ஆதார் அட்டை கேட்க வேண்டும்? மத்திய சர்க்கார் சொல்வதையெல்லாம் நீங்கள் கேட்டுக் கொண்டிருக்கக் கூடாது. ஏற்கெனவே நம்முடைய மாநில சர்க்கார் தடுப்பூசி போடுவதுபோல், தடுப்பூசி போட வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது மாடுகளுக்குப் போடப்படுகின்ற கோமாரி நோய்த் தடுப்பூசி பற்றிச் சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களுக்கு ஏற்கெனவே அறிவுறுத்தியதுபோல், இதுவரை இந்தியாவில் வேறெந்த மாநிலத்திலும் இல்லாத வகையிலே, Amma Ambulance என்கின்ற திட்டத்தைக் கொண்டு வந்து, அந்தத் திட்டத்தின் மூலமாக விவசாயப் பெருங்குடி மக்கள் வைத்திருக்கின்ற மாடுகள் இருக்கும் இடத்திற்கு நேரடியாகச் சென்று கோமாரி நோய்த் தடுப்பூசி போடப்படுகிறது. நீங்கள் சொல்வதைப்போல, நாங்கள், ஆதார் அட்டை வேண்டும், அது வேண்டும், இது வேண்டுமென்று கேட்பது இல்லை. நீங்கள் தவறான தகவலைச் சொல்லக் கூடாது. ஏனென்று சொன்னால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 'வருமுன் காப்போம் திட்டத்தின்கீழ்' ஏற்கெனவே எங்களிடத்திலே ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள ஒவ்வொரு பகுதிக்கும் சென்று கோமாரி நோய்த் தடுப்பூசிகளைப் போட வேண்டுமென்று சொல்லி, எங்களுடைய மருத்துவக் குழுவினர் சென்று தடுப்பூசி போட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அதில் ஏதாவது பிரச்சினை இருக்குமாயின், அதைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். பொத்தாம் பொதுவாக எதையும் சொல்லக் கூடாது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன், உரையை முடியுங்கள்.

திரு. தா. உதயசூரியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஆடு, மாடு வைத்திருக்கிறேன். நான் நடுத்தர

விவசாயக் குடும்பத்தில் பிறந்தவன். அது பற்றித் தெரிந்த காரணத்தினால்தான், இந்த விளக்கத்தை நான் சொல்கிறேன். இல்லையென்றால் TNPSC–க்குப் செல்வதை விட்டு விட்டு, இதற்கு நான் சொல்ல வரவில்லை. நாட்டு மக்களுக்குத் தேவையான கருத்து என்பதனால் இதைச் சொன்னேனே தவிர, பொத்தாம் பொதுவாகப் பேசவில்லை. என்னிடம் ஜமுனாபாரி ஆடு இருக்கிறது; கொடி ஆடு இருக்கிறது; கன்னி ஆடு இருக்கிறது; போயர் ஆடு இருக்கிறது; அதேமாதிரி பர்கூர் போன்ற எல்லா மாடுகளையும் நான் வைத்திருக்கிறேன். நீங்கள் வேண்டுமென்றால் check செய்து பார்த்துக்கொள்ளுங்கள். போலீஸ் இலாகாவை வைத்திருக்கும் முதலமைச்சர் அவர்களைக் கேட்டுப் பாருங்கள். எல்லாம் இல்லாமல் இல்லை. அவர் கோழிக்குஞ்சு வளர்க்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், உரையை முடியுங்கள்.

திரு. தா. உதயசூரியன்: முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேரமில்லை, உரையை முடியுங்கள்.

திரு. தா. உதயசூரியன்: முடித்துவிடுகிறேன். ஒரே ஒரு கோரிக்கை. ஓர் அலகு–one unit திட்டத்தின்மூலம் தலைமைச் செயலகத்தில் பணியாற்றுகின்ற பணியாளர்களுக்கு 1994 ஆம் ஆண்டுக்கு முன்பு 100 பணியாளர்களை நியமிக்கிறார்கள் என்றால், அதில் 10 பேர் நிதித் துறைக்கு வந்துவிடுவார்கள். மீதி பேர் Law Department, Legislative Assembly–ஐத் தவிர பல்வேறு துறைகளுக்குப் போய்விடுவார்கள். அவர்களுக்குப் பதவி உயர்வு மற்றும் ஊதிய உயர்வில் முரண்பாடு இருக்கிறது. இது சம்பந்தமாக Court–க்கு போயிருக்கிறார்கள். ஐயா, கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த போது மூன்று முறை, அரசாணை எண் 126, நாள் 29–5–1998–ல் ஓர் ஆணை வெளியிட்டார்; செய்து கொடுத்தார். அதேமாதிரி 2006–ல் அரசாணை எண் 171–ன்மூலம் செய்து கொடுத்தார். அரசாணை எண் 154, நாள் 30–10–2009–ல், எங்களுடைய கழகத் தலைவர் அவர்கள் துணை முதலமைச்சராக இருந்த போது சங்கத்தின் மாநாட்டில் அறிவித்து, இந்த இடர்பாடுகள் இருக்கக் கூடாது, குளறுபடிகள் இருக்கக் கூடாது என்று அவர்களுக்கு ஊதிய உயர்வும், பதவி உயர்வும் Finance Department–க்கும், பல்வேறு துறைகளில் பணியாற்றுகின்றவர்களுக்கும் ஓர் அலகு–one unit திட்டத்தின்மூலம் தலைமைச் செயலகத்தில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், உரையை முடியுங்கள்.

பிற்பகல் 3–15

திரு. தா. உதயசூரியன்: என்னுடைய உரையை முடித்துவிடுகின்றேன். ஆகவே, அந்த 551 பேரில் எல்லோரும் retire ஆகிப் போய்விட்டார்கள். இன்னும் 87 பேர்தான் இருக்கின்றார்கள். திருமதி சரஸ்வதி என்பவர் நீதிமன்றத்திற்குச் சென்றார். அதன்பிறகு இடைநிலைப் பணியாளராக இருந்த திரு. அய்யாவு என்பவருக்கு கிடைத்தது. அவருக்கு மட்டும்தான் Typist Post கொடுத்தார்கள். மற்றவர்களுக்கு அது கொடுக்கப்படாமல் இருக்கின்றது. அவர்களுக்கு அது கிடைப்பதற்கான வழிவகைகளைச் செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொண்டு, 2021–ல் எங்கள் கழகத் தலைவர் தளபதிதான் தமிழ் நாட்டுக்கு முதலமைச்சராக வருவார் என்று சொல்லி, வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

தொகுதி கோரிக்கைகள்:

சங்கராபுரத்தில் புதியதாக மாவட்ட துணைக் கண்காணிப்பாளர் அலுவலகம் மற்றும் அனைத்து மகளிர் காவல் நிலையம் ஏற்படுத்தித் தர வேண்டும்.

சின்னசேலம் வழியாக சேலம், ஈரோடு செல்லும் அனைத்து பேருந்துகளையும் சின்னசேலம் பேருந்து நிலையம் வழியாகச் செல்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

கல்வராயன்மலை, வெள்ளிமலை ஊராட்சி ஒன்றியம், மோட்டாம்பட்டி – கூடலூர் ஆற்றின் குறுக்கே மேம்பாலம் கட்டித் தர வேண்டும்.

வெள்ளிமலை ஊராட்சி ஒன்றியம், கல்படை ஆறு மற்றும் தொரடிப்பட்டு ஆற்றின் குறுக்கே மேம்பாலங்கள் கட்ட வேண்டும்.

சின்னசேலம் ஊராட்சி ஒன்றியம், வெட்டிபெருமாளகரம் ஆற்றின் குறுக்கே அகலமான மேம்பாலம் கட்ட வேண்டும்.

கள்ளக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், பரிகம் ஊராட்சியில் 1 கிலோ மீட்டர் தூரத்திற்கு தார்ச் சாலை அமைக்கப்பட வேண்டும்.

கல்வராயன் மலைப் பகுதியில் கடுக்காய் அதிகமாக விளைவதால், அந்தப் பகுதியில் கடுக்காய் தொழிற்சாலை அமைக்கப்பட வேண்டும்.

கல்வராயன்மலை, கரியாலூர் மற்றும் வெள்ளிமலையில், அரசு பால் கொள்முதல் செய்வதற்காக கட்டி முடிக்கப்பட்டுள்ள கட்டடங்களைப் பயன்பாட்டுக்குக் கொண்டு வர வேண்டும்.

சின்னசேலம், சேலம், சங்கராபுரம் மற்றும் வடக்கனந்தல் பேரூராட்சி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் வளர்ந்துவரும் மக்கள் தொகைப் பெருக்கத்தாலும், இயக்கப்படும் பேருந்துகளின் எண்ணிக்கை அதிகரிப்பதாலும் சின்னசேலம், சங்கராபுரம் மற்றும் வடக்கனந்தல் பேரூராட்சிகளின் பேருந்து நிலையங்களை விரிவுபடுத்தித் தர வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முரண்பாடுகள் எல்லாம் களையப்பட வேண்டும் என்ற அடிப்படையில்தான் வெவ்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அந்தக் குழுக்கள் பரிந்துரைகளை அளித்துள்ளன. அந்தப் பரிந்துரையின்பேரில் முடிவு செய்யப்படும். சில பிரச்சினைகள் நீதிமன்றங்களில் இருப்பதனால், நீதிமன்றத்தின் முடிவினை அரசு எதிர்நோக்கி உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரத்தினசபாபதி அவர்கள் பேசியபோது சில கருத்துகளை இந்த அவையில் கூறினார்கள். அப்போது மாற்றுத் தலைவர் அவர்கள் இருந்தார்கள். அவைக் குறிப்பினை பார்த்தபின் தீர்ப்பு சொல்கின்றேன் என்று அவர் சொல்லியிருந்தார். அதன்பிறகு நான் வந்து, அவைக் குறிப்பினை பார்த்ததற்கு பின்னால் என்னுடைய தீர்ப்பை வழங்குகின்றேன் என்று சொல்லியிருந்தேன். இப்போது அவைக் குறிப்புகளைப் பார்த்துவிட்டேன். ** ஏதாவது கருத்துகள் இருந்தால் அதைப்பற்றி பார்க்கலாம் என்று சொல்லியிருந்தேன். ஆகவே, அந்தவகையில் அவர் பேசியது தேவையில்லை என்று கருதுகின்றேன். ஆகவே, நான் பேசியது உட்பட அவை அனைத்தையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்குகின்றேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுரை. மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா, அம்மா, அம்மா, வர்ணிக்க வார்த்தைகள் இல்லை, இந்த உலகில் அம்மாவைத் தவிர. 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என்ற வார்த்தைக்கு உயிரூட்டி, சிறந்த திட்டங்களை விதைத்து, ஏழை எளிய மக்களின் மனங்களில் நட்சத்திரமாக மின்னுபவர் எங்கள் அம்மா. சிந்தனைகள் பல உதித்து, சிந்தித்தவைக்கு உயிர் கொடுத்து, திட்டங்களாக்கி, அவற்றைச் செயல்படுத்த அயராது உழைத்த ஏழை எளிய மக்களுக்கு பாதைகள் பல வகுத்து மக்கள் ஆழ் மனதில் என்றும் நிலைத்திருப்பவர் எங்கள் அம்மா. இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை முதற்கண் வணங்குகின்றேன். கால்நடைச் செல்வங்களைக் காத்திட எண்ணில்லா திட்டங்கள் தந்து, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவின் வழியில் அணுகளவும் பிசகாமல் நடக்கும் காவேரிக் காப்பாளர், நமது முதல்வர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) காவேரிக் காப்பாளர் என்ற பட்டம் மட்டுமல்ல, கால்நடை காப்பாளர் என்ற பட்டமும் பொருந்தும். காவேரிக் காப்பாளர் என்ற பட்டம் மட்டுமல்ல, கால்நடை காப்பாளர் என்ற பட்டமும் பொருந்தும். ஆடம்பரம் இல்லா அன்புப் பேச்சாலும், ஆரவாரம் இல்லா விரைந்த செயல்பாட்டாலும், ஆர்ப்பாட்டம் இல்லா அணுகுமுறையாலும் தமிழக மக்களை தன்வசம் ஈர்த்துக்கொண்டிருப்பவர் நமது முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தை தலைசிறந்த மாநிலம் ஆக்கிட ஓயாது உழைத்திடும் ஓய்வறியா உழைப்பாளி அண்ணன் எடப்பாடியார் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

கண்ணுக்கு மை அழகு,
கருத்துக்குக் குறள் அழகு,
குறளுக்கு மொழி அழகு,

எங்கள் எடப்பாடியாருக்கு எப்போதும் புன் சிரிப்பே அழகு. (மேசையைத் தட்டும் ஒலி) அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அமைதியின் உருவாய், அன்பின் சிகரமாய், பார்வையில் எளியவராய், குணத்தில் பண்பாளராய், சொல்லில் இனியவராய், செயலில் வல்லவராய், எண்ணத்தில் உயர்வானவராய், நிருவாகத்தில் விவேகமாய், மாண்புமிகு முதல்வர் அவர்களின் கரம் கோர்த்து

எங்களை வழி நடத்தும் எங்கள் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) மதிப்புமிக்க இப்பேரவையை மாட்சியுடன் வழி நடத்தும் மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களுக்கு எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு, கால்நடை பராமரிப்புத் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதங்களுக்கு எனது பதிலுரையைத் தொடங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உழவுக்கும், தொழிலுக்கும் உற்ற துணையாக இருந்து உணவுத் தொழிலைப் பாதுகாத்து வருவது கால்நடை பராமரிப்புத் துறைதான். ஒரு நாடும், மக்களும் செழிப்பாக இருக்க வேண்டுமென்றால், அங்கு விவசாயம் செழிக்க வேண்டும். அந்த விவசாயம் செழிக்க வேண்டுமென்றால், அங்கு கால்நடைகள் அதிகமாக இருக்க வேண்டும். இவ்வாறு நாட்டின் முன்னேற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் கால்நடை பராமரிப்புத் துறை மிகப் பெரிய பங்காற்றி வருகின்றது என்றால் அது மிகையாகாது. கிராமப்புற வளர்ச்சியில் கால்நடைகளின் பங்கு மிக மிக முக்கியமானதாகும்.

பிற்பகல் 3–20

விவசாயிகள் கால்நடைகளை நம்பியே தங்களது வாழ்வாதாரத்தை நடத்திக் கொண்டிருக்கின்றார்கள். அந்த வகையில், தமிழகத்தில், கால்நடை பராமரிப்புத் துறை மிகச் சிறப்பான திட்டங்களை விவசாயிகளுக்கும், கிராமத்தில் வாழும் ஏழையெளிய மக்களுக்கும், தாய்மார்களுக்கும், இளைஞர்களுக்கும் கால்நடை பராமரிப்புத் துறையில் அறிமுகப்படுத்தி, இந்தியாவிற்கே முன்மாதிரி மாநிலமாகத் திகழ்ந்து வருகிறது என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கின்றேன். தமிழக மக்கள் நலன் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு, ‘மக்களால் நான், மக்களுக்காகவே நான்’ என்று மக்கள் நல்வாழ்விற்காக அர்ப்பணிப்பு வாழ்வு வாழ்ந்து, தமிழக மக்களின் நெஞ்சங்களில் குடியிருந்து கொண்டிருக்கும் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்பட்டுக் கொண்டிருக்கும் தமிழக அரசு, மக்களின் நலனில் அக்கறை கொண்டு, வளம், வளர்ச்சி, முன்னேற்றம் என்ற உன்னத கோட்பாடுகளை செயல்படுத்தி வருகிறது. தமிழகத்தின் கடைக்கோடியில் இருக்கும் அனைத்து கிராமங்களும், பொருளாதாரத்தில் மேம்பாடடைய வேண்டும் என்பதற்காக கால்நடை பராமரிப்புத் துறையில் ஒரு புரட்சியையே ஏற்படுத்தியவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். கழனிக்கு

வேலைக்குச் சென்றவர்களுக்கும் ஆடு வளர்ப்பு, மாடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு என விலையில்லா கால்நடைகளை வழங்கி, அவற்றை பராமரிப்பதன்மூலம் வருவாய் ஈட்டச் செய்து, அவர்களுக்கு சுய வேலைவாய்ப்புகளை உருவாக்கி, தனித்துவம் தந்தது நமது அம்மா அவர்களின் அரசு. தமிழர்களின் நல்வாழ்வு சிறக்கவும், தமிழ்நாட்டை இந்தியாவின் முன்னணி மாநிலமாக மாற்றவும், தமிழர்களின் நல்வாழ்விற்காக பல புதுமையான திட்டங்களை அளித்து, தமிழகத்தில் எளிய முதல்வராக நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் வலம் வந்துகொண்டிருக்கின்றார்கள். பாருக்குள்ளே சிறந்த நாடு, நம் பாரத நாடு. அந்த பாரத நாட்டிலே சிறந்தது தமிழ்நாடு என்று சொல்லத்தக்க வகையில், பல்வேறு துறைகளில் இந்தியாவில் முதன்மை மாநிலமாக தமிழ்நாடு விளங்கி வருகிறது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழியில் நல்லாட்சியை வழங்கி வரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் கால்நடை பராமரிப்புத் துறைக்கென, முன்னெப்போதும் இல்லாத வரலாற்றுச் சாதனையாக, 2020–2021 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 1,678 கோடியே 27 இலட்சம் அளித்து, கால்நடைகள் மீதும், கால்நடை வளர்ப்போர் மீதும் கால்நடைகளை வாழ்வாதாரமாகக் கொண்ட ஏழையெளிய மக்களின் மீதும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு எந்தளவிற்கு அக்கறை கொண்டு செயல்பட்டு வருகிறது என்பதை எடுத்துக்காட்டியுள்ளார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புற ஏழைப் பெண்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திடவும், அவர்களை அதிகாரம் மிக்கவர்களாக மாற்றிடவும், சுயசார்பு பொருளாதாரம் உடையவர்களாக உருவாக்கி, அவர்களை தொழில் முனைவோர்களாக மாற்றிடவும், விலையில்லா கறவை மாடுகள் வழங்கப்பட்டன. அதனால்தான் தமிழகத்தில் இரண்டாவது வெண்மைப் புரட்சியை ஏற்படுத்திடும் வகையில் விலையில்லா கறவைப் பசுக்கள் வழங்கும் திட்டத்தை மாண்புமிகு அம்மாவின் அரசு அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தி வருகிறது. “தன்னையே கொடுப்பதில் வாழைக்கு ஈடு, சம்சாரி வாழ்வுக்கு ஒரு பசுமாடு” என்று பாடினார் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். இந்த வரிகளுக்கு இணங்க, மாண்புமிகு அம்மா அவர்கள் விலையில்லா கறவை மாடுகள் வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தினார்கள். இத்திட்டத்தின்கீழ் 2011–2012 ஆம் ஆண்டு முதல் 2019–2020 ஆம் ஆண்டு வரை 99,379 மகளிருக்கு ரூபாய் 430 கோடியே 44 இலட்சம் மதிப்பீட்டில் கறவை மாடுகள் வழங்கப்பட்டுள்ளன. இதன்மூலம் 2011–2012 ஆம்

ஆண்டு 6,968 மெட்ரிக் டன்னாக இருந்த பால் உற்பத்தி, 2018–2019 ஆம் ஆண்டு 8,362 மெட்ரிக் டன் அளவாக உயர்ந்துள்ளது என்பதை இப்பேரவைக்குப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கின்றேன். இத்திட்டத்தில் கொள்முதல் செய்யப்பட்ட கறவைப் பசுக்கள்மூலம் சுமார் 1,99,000 கன்றுகள் பிறந்துள்ளன என்பதையும், இதன் மதிப்பு ரூபாய் 99 கோடியே 50 இலட்சம் என்பதையும் மனதில் கொண்டு, இத்திட்டத்தின் வெற்றியையும், மக்களுக்கு இத்திட்டம் எவ்வளவு பயனுடையது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் எண்ணிப் பார்க்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் வாழ்கின்ற பெண்கள் ஆடு வளர்ப்பை தங்களது தொழிலாக ஏற்று, அவற்றை பெருக்கிட முடியும். அதே நேரம் குடும்பத்தில் பொருளாதார தேவை ஏற்படும்போது, எளிதாக அவற்றை விற்று தங்கள் பொருளாதாரத்தை சீர்படுத்திக்கொள்ளவும் முடியும் என்பதால்தான் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கிராமப்புற ஏழைப் பெண்களுக்கு ஆடுகள் வழங்கும் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். கிராமப்புறங்களில் வசிக்கும் ஏழ்மையிலும் ஏழ்மை நிலையிலுள்ள நிலமற்ற மகளிர், பொருளாதாரத்தில் மேம்பாடடைய தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் விலையில்லா வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 2011–2012 ஆம் ஆண்டு முதல் 2019–2020 ஆம் ஆண்டு வரை 11 இலட்சத்து 67 ஆயிரத்து 674 மகளிருக்கு ரூபாய் 1,656 கோடியே 50 இலட்சம் மதிப்பில் 46 இலட்சத்து 70 ஆயிரத்து 696 வெள்ளாடுகள்/செம்மறியாடுகள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தில் வழங்கப்பட்ட ஆடுகள், ரூபாய் 1,953 கோடியே 25 இலட்சம் மதிப்புள்ள 78 இலட்சத்து 13 ஆயிரம் குட்டிகளை ஈன்றுள்ளன என்பதை இம்மாமன்றத்தில் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கோழியின அபிவிருத்தித் திட்டம்: 2019–2020 ஆம் ஆண்டில் பேரூராட்சிகள் மற்றும் கிராம ஊராட்சிகளில் உள்ள 2 இலட்சத்து 40 ஆயிரம் பெண் பயனாளிகள் பயன்பெறும் வகையில் ரூபாய் 50 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை 58,255 பெண் பயனாளிகளுக்கு, ஒரு பயனாளிக்கு 25 கோழிக் குஞ்சுகள்வீதம், 14,56,375 அசில் இன 4 வார வயதுடைய கோழிக் குஞ்சுகள் வழங்கப்பட்டுள்ளன.

பிற்பகல் 3–25

தீவன அபிவிருத்தி – கால்நடைகளின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதில் பசுந்தீவனம் முக்கிய பங்காற்றுகிறது. பசுந்தீவனத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து கால்நடைகளுக்கு அவற்றை வழங்கும்போது, அவற்றின் உற்பத்தித் திறன் அதிகரிப்பதுடன், தேவையான உயிர் சத்துகளும் கிடைக்கின்றன. நல்ல தரமான பசுந்தீவனத்தை அடர் தீவனத்துடன் கலந்து கொடுப்பதால் பசுக்கள் மற்றும் எருமைகள் காலதாமதமாக கருத்தரிப்பது குறைகிறது. இதனால், கன்று பிறப்புகளுக்கு இடைப்பட்ட காலம் குறைவதால், பண்ணை வருமானம் அதிகரிக்கின்றது. விநியோக அடிப்படையிலும், தரத்தின் அடிப்படையிலும், பசுந்தீவன தேவைக்கும், உற்பத்திக்கும் மிகப்பெரிய இடைவெளி காணப்படுகிறது. உற்பத்தியை அதிகரித்தல் மற்றும் இருக்கும் வளங்களை திறமையாகப் பயன்படுத்திக்கொள்ளுதல் ஆகியவற்றின் வாயிலாக, உலர்தீவனம் மற்றும் பசுந்தீவனத்தின் தேவைக்கும், உற்பத்திக்கும் உள்ள இடைவெளியைக் குறைப்பதற்காக, 2011–2012 ஆம் ஆண்டு முதல் 2019–2020 ஆம் ஆண்டு வரை மாநில தீவன அபிவிருத்தித் திட்டத்தை ரூபாய் 215 கோடி செலவில் அம்மா அவர்களது அரசு செயல்படுத்தி வருகிறது. உற்பத்தியாகும் பசுந்தீவனத்தை சிறப்பாகப் பயன்படுத்திக்கொள்வதற்காக, இதுவரை மின்சாரத்தில் இயங்கும் 14 ஆயிரத்து 203 புல் நறுக்கும் கருவிகள், 75 விழுக்காடு அரசு மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன என்பதை இப்பேரவைக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

கால்நடை மற்றும் விலங்கின அறிவியலுக்கான ஒருங்கிணைந்த உயர் ஆராய்ச்சி நிலையம்–சேலம் மாவட்டம், தலைவாசலில் அமைந்துள்ள கால்நடை பராமரிப்புத் துறைக்குச் சொந்தமாக உள்ள 1,800 ஏக்கர் பரப்பிலான இடத்தில், கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வள நடைமுறைகள் மற்றும் தொழில்நுட்பங்களை உள்ளடக்கிய உலகத் தரம் வாய்ந்த, ஆசியாவிலேயே பெரிய ஒருங்கிணைந்த பல்துறை (மேசையைத் தட்டும் ஒலி) பல்நோக்குடன்கூடிய கால்நடை மற்றும் விலங்கின அறிவியலுக்கான ஒருங்கிணைந்த உயர் ஆராய்ச்சி நிலையத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள், 13–2–2019 அன்று சட்டமன்றப் பேரவையில் சட்டப் பேரவை விதி 110–ன்கீழ் அறிவித்தார்கள். தமிழ்நாட்டில் கால்நடை பொருட்கள் உற்பத்தி, பதப்படுத்துதல் மற்றும் சந்தைப்படுத்துதல் உள்ளிட்ட கால்நடை பராமரிப்பு நடவடிக்கைகளுக்கு உற்சாகத்தை

அளிக்கும் வகையில், உலகத்தரம் வாய்ந்த வசதிகளை உள்ளடக்கிய இவ்வாராய்ச்சி நிலையத்திற்கு சட்டப்பேரவையில் அறிவித்த ஓராண்டுக்குள், 9–2–2020 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது என்பதை இப்பேரவைக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எந்தத் திட்டத்தையும் வெறும் அறிவிப்போடு நிறுத்திவிடும் அரசு அல்ல அம்மாவின் அரசு. மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை புனிதமாக எண்ணி விரைந்து செயலாக்கும் அரசு, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு என்பதை இங்கே சுட்டிக்காட்டுவது எனது கடமையாகும். ஆசியாவிலேயே மிகப்பெரிய கால்நடை மற்றும் விலங்கின அறிவியலுக்கான இந்த ஒருங்கிணைந்த ஆராய்ச்சி நிலையத்தில் 1. கால்நடைப் பண்ணை வளாகம், 2. பால் பதனிடுதல் மற்றும் பால் பொருட்கள் தயாரிப்பு வளாகம், 3. மீன் வள செயல்முறை வளாகம், 4. பட்ட மேற்படிப்பிற்கான வளாகம், 5. விரிவாக்கம் மற்றும் திறன் மேம்பாட்டு வளாகம், 6. ஆராய்ச்சி வளாகம், 7. தொழில் உருவாக்கம் மற்றும் ஒருங்கிணைப்பு வளாகம், 8. இறைச்சிப் பொருட்கள் உற்பத்தி வளாகம், 9. பசுந்தீவன ஆராய்ச்சி வளாகம் மற்றும் 10. பொதுமக்களுக்கான விளக்க மையம் ஆகிய 10 பெரு வளாகங்கள் இடம் பெற்றுள்ளன என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வளாகங்களில் அதற்கேற்ப உரிய தனிச் சிறப்புகளுடன் பல்வேறு செயல்பாடுகளும் மற்றும் வெள்ளாடு, செம்மறியாடு, பன்றியினம் மற்றும் கோழியினங்களுக்கென தனித்தனியே இறைச்சிப் பொருட்கள் உற்பத்தி பிரிவுகளும் அமைக்கப்படவுள்ளன.

அதேபோல், பால் பதப்படுத்துதல் மற்றும் பால் பொருட்கள் தயாரிப்பு வளாகத்தில் கலப்பின கறவை மாட்டுப் பண்ணை, பால் பதப்படுத்துதல் மற்றும் பால் பொருட்கள் தயாரிப்பு, மாட்டுத் தீவனம் மற்றும் தாது உப்புக் கலவை தயாரிப்பு அலகுகள் அமைக்கப்படும். நவீன ஆவின் பாலகம், குழந்தைகள் பூங்கா மற்றும் கால்நடை உற்பத்திப் பொருட்கள் விற்பனை நிலையங்கள் ஆகியவை பொதுமக்களுக்கான வளாக மையத்தில் இடம்பெறும் என்பதை இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக, கால்நடைப் பண்ணை வளாகத்தில் நவீன பண்ணை முறைகளை விவசாயிகளுக்கு எடுத்துக் காட்டும்வகையில், கறவை மாட்டுப் பண்ணை, உள்நாட்டு மாட்டினங்களான காங்கேயம், உம்பளாச்சேரி, ஆலம்பாடி, புலிக்குளம் மற்றும் பர்கூர் ஆகியவற்றின் பாதுகாப்பு

மற்றும் இனப்பெருக்கப் பண்ணை, செம்மறி மற்றும் வெள்ளாட்டினப் பண்ணைகள், வெண்பன்றிகள், கோழியினப் பிரிவுகள் மற்றும் நாட்டின நாய் இனங்களான இராஜபாளையம், சிப்பிப்பாறை, கோம்பை, கன்னி ஆகியவற்றுக்கான இனப்பெருக்கப் பிரிவுகள் இடம்பெறும்.

உலகத்தரம் வாய்ந்த கால்நடை மற்றும் விலங்கின அறிவியலுக்கான ஒருங்கிணைந்த உயர் ஆராய்ச்சி நிலையத்தின்மூலம் தமிழக அரசின் கால்நடை பராமரிப்புத் துறை இந்த உலகுக்கு வழிகாட்டும் முன்னோடி துறையாகவும் அமைந்திடும் என்பதை பெருமையுடன் இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த வளாகத்தில், கால்நடை மருத்துவ அறிவியல், பால் வளம், கோழியினங்கள் மற்றும் உணவுத் தொழில்நுட்பங்கள் ஆகியவற்றில் முதுகலை மற்றும் முனைவர் பட்ட மேற்படிப்பிற்கான வசதிகள் உருவாக்கப்படும். இந்த ஆராய்ச்சி நிலையமானது, மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் களத்தில் உள்ள விவசாயிகளின் தேவைகளை அறிந்து அதற்குத் தகுந்த தீர்வுகளைக் கண்டறியும் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவும் வாய்ப்பினை உருவாக்கும். விவசாயிகள், கால்நடை வளர்ப்போர் மற்றும் தொழில்முனைவோருக்கு தேவைப்படும் பல்துறை சார்ந்த அறிவுரைகளை வழங்குவதற்கும், கால்நடை உற்பத்திப் பொருட்களை முறையாக சந்தைப்படுத்தவும் வாய்ப்பாக அமையும். அனைத்து வசதிகளும், வாய்ப்புகளும் கொண்ட இத்தகைய சிறப்புமிக்க ஆராய்ச்சி மையம் அமைத்தமைக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு தமிழக விவசாயப் பெருமக்கள் நன்றி கூறிக்கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 3–30

நடமாடும் அம்மா அவசர சிகிச்சை ஊர்தி (Amma Ambulance): தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகமும் மற்றும் கால்நடைபராமரிப்புமற்றும்மருத்துவப்பணிகள்துறையும்இணைந்து செயல்படுத்தும் நடமாடும் கால்நடை அவசர சிகிச்சை ஊர்தி சேவை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 5–11–2019 அன்று அனைத்து மாவட்டங்களிலும் துவங்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த சேவையை “1962” என்ற கட்டணமில்லா தொலைபேசி

மூலமாகப் பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. கால்நடை வளர்ப்போரின் இருப்பிடங்களிலேயே அவசர மருத்துவ சேவைகள் வழங்கப்படும். தொடர் சிகிச்சை தேவைப்படும் நிகழ்வுகளில், கால்நடைகள், அருகில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட அவசர சிகிச்சை மையத்திற்கு கொண்டு செல்லப்படும். நடமாடும் கால்நடை அவசர சிகிச்சை ஊர்தியில் இதுவரை 17 ஆயிரத்து 229 கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. மேலும், நடமாடும் கால்நடை அவசர சிகிச்சை ஊர்தி, கால்நடை பராமரிப்புத் துறையின்மூலம் கிராமங்களில் நடத்தப்படும் மருத்துவ முகாம்களுக்குப் பயன்படுவதுடன், ஜல்லிக்கட்டு போட்டியின்போது கால்நடைகளுக்கு ஏற்படும் காயங்களுக்கும் நடமாடும் கால்நடை அவசர சிகிச்சை ஊர்திமூலம் உடனடி சிகிச்சை அளிக்கப்படுகிறது என்பதையும் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

துறையின் பண்ணைகள் மற்றும் செயல்பாடுகள்: இத்துறை, 8 கால்நடை பண்ணைகளையும், 3 செம்மறியாடு, வெள்ளாடு பண்ணைகளையும், ஒரு பசுந்தீவனப் பண்ணையையும் மற்றும் ஒரு கோழிப் பண்ணையையும் நிருவகித்து வருகிறது. குறிப்பிட்ட இன கால்நடைகளை, விஞ்ஞான முறைப்படி அபிவிருத்தி செய்வதற்காகவும், மாதிரி பண்ணையாகவும், பண்ணையாளர்களுக்கு பயிற்சி அளிக்கும் நிலையமாகவும் இவை செயல்படுகின்றன. மேலும், தரமான கால்நடைகளை இனவிருத்திக்கு விவசாயிகளுக்கு வழங்கும் மையங்களாகவும் இவை விளங்குகின்றன.

உறைவிந்து உற்பத்தி: மாட்டினங்களில் பால் உற்பத்தியை உயர்த்தும் நோக்கோடு, மரபணு தரத்தை உயர்த்துவதற்காகவும், தரமான உறைவிந்து கிடைப்பதை உறுதி செய்வதற்காகவும், அயலின கால்நடை பெருக்குப் பண்ணை, ஈச்சங்கோட்டை, மாவட்ட கால்நடைப் பண்ணை, ஓசூர் மற்றும் மாவட்ட கால்நடைப் பண்ணை, உதகமண்டலம் ஆகிய 3 இடங்களில் உறைவிந்து உற்பத்தி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த உறைவிந்து உற்பத்தி நிலையங்களில், தரமான உறைவிந்து உற்பத்தி செய்யும் நோக்குடன், அறிவியல்பூர்வமாக இந்திய அரசு வகுத்துள்ள குறைந்தபட்ச தர நிர்ணய வழிகாட்டுதல்கள் முழுமையாகப் பின்பற்றப்படுகின்றன. மேலும், ஈச்சங்கோட்டை மற்றும் உதகமண்டலம் உறைவிந்து நிலையங்களுக்கு தேசிய தரக் கட்டுப்பாட்டு நிலையத்தால் I.S.O. சான்றிதழும் வழங்கப்பட்டுள்ளன.

உட்கட்டமைப்பு மேம்படுத்துதல்: கால்நடை பராமரிப்புத் துறையின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி, சிறந்த மருத்துவ சேவைகளை வழங்குவதன் வாயிலாக, கால்நடை உற்பத்தித் திறன் அதிகரிப்பதை முதன்மை நோக்கமாகக் கொண்டு, மாநில, மைய அரசுகளின் நிதி மற்றும் நபார்டு வங்கியின் ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்மூலம் துறையின் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. 2011–2012 ஆம் ஆண்டு முதல் 2018–2019 ஆம் ஆண்டு வரையில் 2,037 புதிய கால்நடை மருத்துவமனை கட்டடங்கள் ரூபாய் 614 கோடியே 57 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளன.

2019–2020 ஆம் ஆண்டின் RIDF–XXIII திட்டத்தின்கீழ் 102 கால்நடை மருத்துவமனைகளுக்கு புதிய கட்டடம் கட்ட ரூபாய் 43 கோடியே 30 இலட்சத்திற்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. 2011–2012 ஆம் ஆண்டு முதல் 2019–2020 ஆம் ஆண்டு வரை 9 ஆண்டுகளில் 1,460 கால்நடை மருத்துவமனைகளில் ரூபாய் 87 கோடியே 20 இலட்சம் செலவில், பழுதுபார்ப்பு மற்றும் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஜல்லிக்கட்டு: ஜல்லிக்கட்டு என்பது தமிழர்களின் வீர விளையாட்டு. பொங்கல் திருவிழாவின்போது தமிழ்நாட்டில் கிராம மக்களிடையே நடத்தப்படுகின்ற பாரம்பரியமான நிகழ்ச்சியாகும். ஜல்லிக்கட்டு 5 ஆயிரம் ஆண்டு பழமைவாய்ந்ததுடன், தமிழ்நாட்டின் சமூக பண்பாட்டு பழக்கங்களுடன் வரலாற்றுத் தொடர்பு கொண்டுள்ளதாகும். நமது ஜல்லிக்கட்டு நாயகன் மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் மேற்கொண்ட சீரிய முயற்சியால் தமிழகத்தில் பாரம்பரியம் மற்றும் கலாச்சார நிகழ்வான ஜல்லிக்கட்டிற்கு இருந்த தடை நீக்கப்பட்டு, 2017 ஆம் ஆண்டிலிருந்து அரசால் அறிவிக்கை செய்யப்படும் இடங்களில் சட்டப்படி ஜல்லிக்கட்டு நிகழ்ச்சிகள் ஆண்டுதோறும் ஜனவரி மாதம் முதல் தொடங்கி, மே மாதம் வரை நடைபெற்று வருகின்றது. தமிழ்நாட்டின் கௌரவமாக விளங்கும் ஜல்லிக்கட்டு நிகழ்ச்சிகளை எந்தக் குறையுமின்றி நடத்த வேண்டும் என்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் ஆணைப்படி, கடந்த 2019 ஆம் ஆண்டில் மொத்தம் 304 இடங்களில் ஜல்லிக்கட்டு, வடமாடு, மஞ்சுவிரட்டு, எருது விடும் விழா ஆகிய நிகழ்ச்சிகள் நடத்த அறிவிக்கை செய்யப்பட்டு, 228 இடங்களில் நடைபெற்றது. இந்த ஆண்டு 259 இடங்களில் ஜல்லிக்கட்டு நிகழ்ச்சி நடைபெறுவதற்கு அரசு அறிவிக்கை வெளியிட்டுள்ளது.

பிற்பகல் 3–35

கால்நடை பராமரிப்புத் துறையின் செயல்பாடுகள்: கால்நடைகளின் உற்பத்தித் திறனை அதிகரித்து அவற்றின் எண்ணிக்கையைப் பெருக்கிடவும்; கால்நடைகளின் நலன் காத்திடவும்; தீவன உற்பத்தியை அதிகரிக்கவும்; உட்கட்டமைப்பு வசதியை மேம்படுத்திடவும்; கால்நடை பராமரிப்புத் துறையால் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு, கால்நடை வளர்ப்போருக்கு உதவிடும் வகையில் இத்துறை செயல்பட்டு வருகிறது.

மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்படும் மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் கடந்த மூன்றாண்டுகளில் மட்டும் 200 கால்நடை கிளை நிலையங்கள் புதியதாகத் தோற்றுவித்தும்; 150 கால்நடை கிளை நிலையங்கள் கால்நடை மருந்தகங்களாகவும்; 10 கால்நடை மருந்தகங்கள் கால்நடை மருத்துவமனைகளாகவும்; 8 கால்நடை மருத்துவமனைகள் 24 மணிநேரமும் செயல்படும் பன்முக கால்நடை மருத்துவமனைகளாகவும் தரமுயர்த்தப்பட்டன. இத்துடன் 7 கால்நடை நோய் புலனாய்வு பிரிவுகள் புதியதாகத் தோற்றுவிக்கப்பட்டன. இதன்மூலம் விவசாயிகள், கால்நடைகளுக்கு சிகிச்சை மற்றும் இனப்பெருக்க வசதிகளைப் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது என்பதை இம்மாமன்றத்திற்கு பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள், கடந்த 3 ஆண்டுகளில் புதிய கிளை நிலையங்களை மருந்தகங்களாக; மருத்துவமனைகளாக; பெரு மருத்துவமனைகளாக; பன்முக மருத்துவமனைகளாக தரமுயர்த்தியதால், தற்போது தமிழகத்தில் கீழ்க்காணும் மருத்துவமனைகள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. கால்நடை கிளை நிலையம் 825; கால்நடை மருந்தகம் 2,721; கால்நடை மருத்துவமனை 147; கால்நடை பெரு மருத்துவமனை 16; கால்நடை பன்முக மருத்துவமனை 14; கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவு 31; நடமாடும் கால்நடை மருந்தகம் 56; நடமாடும் கால்நடை ஊர்தி 32. இந்த கால்நடை மருத்துவமனைகள்மூலம் குடற்புழு நீக்கம்; செயற்கைமுறை கருவூட்டல்; ஆண்மை நீக்கம்; மலட்டுத்தன்மை நீக்க சிகிச்சை; அறுவை சிகிச்சை மற்றும் கோழிக்கழிச்சல் தடுப்பூசி ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில்

இயங்கிவரும் கால்நடை மருத்துவமனைக்கு மருந்துகள் மற்றும் உபகரணங்கள் கொள்முதலுக்கென 36 கோடியே 81 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு மருந்துகள் வழங்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு கால்நடை அறிவியல் பல்கலைக்கழகம், கால்நடை பராமரிப்பில் முக்கிய பங்கு வகிக்கிறது. சென்னை, வேப்பேரியில் செயல்பட்டுக் கொண்டிருக்கும் கால்நடை மருத்துவக் கல்லூரி ஆசியாவிலேயே மிகவும் பழைமை வாய்ந்தது. அந்த வகையில் 2019 ஆம் ஆண்டு நடைபெற்ற அனைத்திந்திய நுழைவுத் தேர்வில் முதுநிலை பட்டப்படிப்புகளில் சேர்வதற்கென அதிக இடங்களைப் பெற்றதால் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்திற்கு இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் முதுநிலை விருது வழங்கப்பட்டது. தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின்கீழ், நாமக்கல்லில் இயங்கும் வேளாண் அறிவியல் நிலையத்திற்கு, சிறந்த செயல்பாடுகளுக்காக "பண்டிட் தீனதயாள் உபாத்யாய் ராஷ்டிரா கிருஷி விக்யான் புரோஷஹான் புரஸ்கார்–2018 விருது" 16–7–2019 அன்று வழங்கப்பட்டது.

2019–2020 ஆம் ஆண்டில், மாதவரம் பால் பண்ணையில் உள்ள கோழியின ஆராய்ச்சி நிலையத்தின்மூலம் 2 இலட்சத்து 63 ஆயிரத்து 609 எண்ணிக்கையில் நாட்டினக் கோழி முட்டைகள் மற்றும் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு 2,032 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது. மேலும், 2 இலட்சத்து 91 ஆயிரத்து 388 எண்ணிக்கையில் ஜப்பானியக் காடை குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு 420 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன. 2019 ஆம் ஆண்டு வங்காள தேசத்தின் சிட்டகாங் கால்நடை மருத்துவ மற்றும் விலங்கின அறிவியல் பல்கலைக்கழகத்தின் 59 மாணவர்களுக்கும், அமெரிக்காவில் உள்ள ஒக்லஹாமா மாகாணப் பல்கலைக்கழகம் மற்றும் வாஷிங்டன் மாகாணப் பல்கலைக்கழகத்திலிருந்து முறையே 6 மற்றும் 4 மாணவர்களுக்கும், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தில் சிகிச்சையியலில் பயிற்சி அளிக்கப்பட்டது.

கால்நடை பராமரிப்புத் துறை மேலும் சிறப்பான வளர்ச்சியடைய வேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் ஆணைக்கிணங்க கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சராகிய நானும், கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநர் மற்றும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ

அறிவியல் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் அவர்களும் ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து நாட்டு பல்கலைக்கழகங்களுக்கு நேரில் சென்று அங்குள்ள பல்வேறு துறைகள், மருத்துவமனைகள் மற்றும் ஆய்வகங்களைப் பார்வையிட்டோம். அதனடிப்படையில், அங்கு மேற்கொள்ளப்படும் சிறந்த அணுகுமுறைகளைப் பின்பற்றி, இப்பல்கலைக்கழகத்தின்மூலம் பல்வேறு திட்டங்கள் மற்றும் பயிற்சிகளை செயல்படுத்தி தமிழ்நாட்டில் உள்ள கால்நடைச் செல்வங்களை மேலும் பாதுகாத்து உற்பத்தியைப் பெருக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

ஆலம்பாடி மாட்டினத்தைப் பாதுகாப்பதற்கென "தருமபுரி மாவட்டத்தில் ஆலம்பாடி மாட்டின ஆராய்ச்சி நிலையம் நிறுவுதல்" எனும் திட்டத்திற்கு, தமிழக அரசு மாநில நிதியிலிருந்து ரூபாய் 4 கோடி ஒதுக்கியுள்ளது. ஆலம்பாடி மாட்டின ஆராய்ச்சி மையத்தின் பூமி பூஜை 28–11–2019 அன்று நடத்தி வைக்கப்பட்டது.

மக்கள் நலத் திட்டங்களை ஒரு மாநில அரசு செயல்படுத்துவதில் மூன்று கட்டங்கள் இருக்கின்றன. முன்னோடித்திட்டங்களை, ஏனைய மாநிலங்களும் போற்றி, தாங்களும் செயல்படுத்துகின்ற வகையிலான முற்போக்குத் திட்டங்களை தீட்டுவது முதற்கட்டம். அத்திட்டங்களை வெறும் அறிவிப்போடு நிறுத்திவிடாமல் அரசாணை வெளியிட்டு, நிதி ஒதுக்கீடு செய்து விரைவாக செயலாக்கம் அளிப்பது இரண்டாவது கட்டம். அத்திட்டங்களின் பயன் அனைத்தும், மாநிலத்தின் ஏழையெளிய மக்களுக்கு சென்றடைவதை உறுதி செய்வது மூன்றாவது கட்டம். இந்த மூன்று கட்டங்களிலும் எப்படி சிறப்பாகச் செயல்பட வேண்டும், திட்டங்களை எப்படி சிறப்பாகச் செயல்படுத்த வேண்டும் என்பதை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எங்களுக்கு சிறப்பாகக் கற்றுத் கொடுத்திருக்கிறார்கள். அதைத்தான் இன்றைய மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 3–40

மாண்புமிகு அம்மா அவர்கள் கற்றுத் தந்த பாடத்தின்படி, மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் தலைமையில், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, சிறப்புடன் செயல்படுவதன் காரணமாகத்தான் நாங்கள் செயல்படுத்துகின்ற

ஒவ்வொரு திட்டமும் மக்களிடம் வரவேற்பைப் பெற்று, மக்கள் செல்வாக்கை எங்களுக்கு பெற்றுக் கொடுத்துக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் பல்வேறு திட்டங்களை, தொலைநோக்குப் பார்வையுடன், கொண்டு வருவதால்தான் தமிழகம், ஒவ்வொரு துறையிலும் இன்று தன்னிறைவு மாநிலமாக விளங்கி வருகின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"எண்ணித் துணிக கருமம்; துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு"

என்ற வள்ளுவரின் வாக்கிற்கேற்ப மக்களுக்கு நன்மை பயக்கும் திட்டங்களை எவ்வளவு இடர்பாடுகள் வந்தாலும், முறியடித்து, சோதனைகளை சாதனைகளாக்கிய பெருமை நமது மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களையே சாரும். (மேசையைத் தட்டும் ஒலி)

கால்நடைத் துறையின் மொழியில் சொல்ல வேண்டுமென்றால், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நாளொருமேனி, பொழுதொருவண்ணம் என்று சொல்லும் வண்ணம் ஒவ்வொரு நாளும் புதுமையாக, மக்களுக்குத் தேவையான திட்டங்களை அலசி, ஆராய்ந்து, தேவையான திட்டங்களுக்கு அதிக நிதியினை ஒதுக்கி, அவற்றை செயல்முறைப்படுத்த இரண்டு கால் பாய்ச்சலில் அல்ல, நான்கு கால் பாய்ச்சலில் பாய்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி)

தோற்றத்தில் எளியவராய்; மக்கள் பணியில் வலிமையானவராய்; சொல்லில் உண்மையானவராய்; மக்களுக்கு திட்டங்களை அளிப்பதில் வள்ளலாய்; அரவணைப்பில் அன்னையாய்; விவசாயிகளுக்கு உழவராய்; தமிழக மக்களுக்கு எளிய முதல்வராகத் திகழ்ந்து கொண்டிருப்பவர் நமது சாதனை முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் என்பதை இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த அரசு ஏழைகளின் அரசு; விவசாயிகளின் அரசு; சாமானியர்களின் அரசு; ஏழைப் பெண்களின் முன்னேற்றத்திற்கான அரசு; இந்த அரசு ஒரு விவசாயியை முதல்வராகக் கொண்ட அரசு! (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, 2021–லும் தொடர்ந்து மூன்றாவது முறையாக வெற்றி பெற்று, Hat–trick சாதனை படைக்கும் அரசு என்று கூறி, எனது பதிலுரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (குறுக்கீடு)

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், காவேரி காப்பாளர் மட்டுமல்ல; கால்நடை காப்பாளர் என்று கூறி, மீண்டும் ஒரு முறை என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய ஆணைப்படி, புதிய அறிவிப்புகளை வெளியிடுகிறேன். தலைப்புகளை மட்டும் நான் படிக்கின்றேன். மற்றவற்றை அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ளுமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

கால்நடை பாரமரிப்புத் துறை

1. மாநிலத்தில் பசுந்தீவனம் போதுமான அளவு கிடைப்பதை உறுதி செய்வதற்காக தீவன சோளம், காராமணி, கோ (எப்எஸ்) 29 மற்றும் வேலிமசால் அடங்கிய விலையில்லா தீவன விதைத் தொகுப்புகள் 12 கோடி ரூபாய் செலவில் 3.20 இலட்சம் விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

பசுந்தீவன உற்பத்திக்கான நிலப் பரப்பினை அதிகரித்து, பசுந்தீவன உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கத்தோடு 3.20 இலட்சம் விவசாயிகள் பயன்படும் வகையில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 12 கோடி ரூபாய் செலவில் விலையில்லா தீவன விதைத்தொகுப்புகள் வழங்கப்பட்டு 10,000 ஏக்கர் நிலம் இறவை தீவனப்பயிர் கோ (எப்எஸ்) 29/கோ–4/வேலிமசால் இறவை சாகுபடியின் கீழும், 70,000 ஏக்கர் நிலம் தீவன சோளம்/ மக்காச்சோளம்/காராமணி, மானாவாரி சாகுபடியின் கீழும் கொண்டுவரப்படும்.

2. பசுந்தீவன சாகுபடியில் ஏற்படும் சிரமங்களைக் குறைப்பதற்காக 4.70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 75 சதவிகித மானியத்தில் 2,500 விவசாயிகளுக்கு பசுந்தீவனம் அறுவடை செய்யும் கருவிகள் வழங்கப்படும்.

விவசாயிகளால் தங்கள் நிலங்களில் உற்பத்தி செய்யப்படும் பசுந்தீவனப் பயிர்களை குறுகிய காலத்தில், வேலையாட்கள் உழைப்பைத்தவிர்த்து, அவற்றின் தரம் மாறாமல் மற்றும் வீணாகாமல், பசுந்தீவன அறுவடையை இயந்திரமயமாக்குவதன்மூலம்

அறுவடையில் ஏற்படும் சிரமங்களைக் குறைப்பதற்காக 4.70 கோடி ரூபாய் செலவில் பசுந்தீவனம் அறுவடை செய்யும் கருவிகள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 75 சதவிகித மானியத்தில் 2,500 சிறு விவசாயிகள் மற்றும் குறு விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

3. கால்நடைகளின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்காக 33 மாவட்டங்களில் உள்ள 34 உப வடிநிலங்களில் 9.37 கோடி ரூபாய் செலவில் 40 பால்வள ஆர்வலர் குழுக்கள் அமைக்கப்பட்டு, கால்நடை நலப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

தமிழ்நாடு நீர்ப்பாசன மேலாண்மை நவீனமயமாக்குதல் திட்டத்தின்கீழ் 9.37 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் 33 மாவட்டங்களில் உள்ள 34 உப வடிநிலங்களில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 1,71,050 செயற்கை முறை கருவூட்டல், 3,280 பாலினம் பிரிக்கப்பட்ட உறைவிந்து செயற்கை முறை கருவூட்டல், 9,828 கால்நடைகளில் மடிவீக்க நோய் மேலாண்மை பணிகளும், 6,300 கன்றுகளுக்கு குடற்புழு நீக்கம் மற்றும் தாது உப்பு கட்டிகள் வழங்குதலும், 2,223 ஏக்கரில் பசுந்தீவன சாகுபடி, 1,008 மலடுநீக்க சிகிச்சை முகாம்கள் மற்றும் 10,080 கால்நடைகளுக்கு திட்டமிட்ட இனப்பெருக்கப் பணிகளும் மேற்கொள்ளப்படும்.

4. ஆண்டு முழுவதும் பசுந்தீவனம் கிடைப்பதை உறுதி செய்வதற்காக விருதுநகர் மாவட்டம், சாத்தூர் ஆட்டுப் பண்ணையில் 2.99 கோடி ரூபாய் செலவில் 75 ஏக்கர் நிலப்பரப்பில் பலவகைப் புற்கள், பயறு வகைகள் மற்றும் சிற்றின மரங்களை உள்ளடக்கிய மரத்தீவன மேய்ச்சல் நிலம் ஏற்படுத்தப்படும்.

விருதுநகர் மாவட்டத்தில் அமைந்துள்ள சாத்தூர் ஆட்டுப்பண்ணையில் பராமரிக்கப்படும் ஆட்டினங்களின் உற்பத்தி மற்றும் இனப்பெருக்கத் திறன்களை மேம்படுத்தி, மரபியல் ரீதியான உயர்தர சந்ததிகளை உருவாக்கிட தேவையான அளவு பசுந்தீவனம் தொடர்ந்து வழங்குவதற்காக 2.99 கோடி ரூபாய் செலவில் 75 ஏக்கர் நிலப்பரப்பு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, பலவகைப் புற்கள், பயறு வகைகள் மற்றும் சிற்றின மரங்களை உள்ளடக்கிய மரத்தீவன மேய்ச்சல் நிலமாக (silvipasture) மேம்படுத்தப்படும்.

5. சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் உள்ள கால்நடைகளுக்கு உயர்தர மருத்துவ சேவைகளை வழங்குவதற்காக 3 கோடி ரூபாய் செலவில் சைதாப்பேட்டை, கால்நடை பன்முக மருத்துவமனையின் உட்கட்டமைப்பு மேம்படுத்தப்படும்.

சென்னை, சைதாப்பேட்டையில் சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட கட்டடத்தில் இயங்கிவரும் கால்நடை பன்முக மருத்துவமனை, சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் உள்ள கால்நடைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக 3 கோடி ரூபாய் செலவில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, நவீன கட்டமைப்புடன்கூடிய உள்நோயாளி பிரிவு, செல்லப் பிராணிகளுக்கான பரிசோதனைக் கூடம், நவீன சிகிச்சை அறை, நவீன ஆய்வகம் மற்றும் நுண்ணலை நுண்ணோக்கி ஆய்வுக்கூடம் போன்ற வசதிகளுடன் வலுப்படுத்தப்படும்.

6. துறை நடவடிக்கைகளை நன்முறையில் கண்காணித்து, திட்ட செயலாக்கத்தை உறுதி செய்வதற்காக ஒருங்கிணைந்த மண்டல இணை இயக்குநர் மற்றும் உதவி இயக்குநர் அலுவலகக் கட்டடங்கள் நடப்பாண்டில் 9 கோடி ரூபாய் செலவில் நாமக்கல், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை மற்றும் தேனி மாவட்டங்களில் கட்டப்படும்.

கோட்ட அளவிலும், மாவட்ட அளவிலும் துறை நடவடிக்கைகளை கண்காணித்து துறையின் திட்டங்கள், அலுவலர்கள்மூலம் செம்மையாக செயல்படுத்தப்படுவதை உறுதி செய்வதற்காக ஒருங்கிணைந்த மண்டல இணை இயக்குநர் மற்றும் உதவி இயக்குநர் அலுவலகங்களுக்கு புதிய கட்டடங்கள் ஒவ்வொன்றும் 2.25 கோடி ரூபாய்வீதம் மொத்தம் 9 கோடி ரூபாய் செலவில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, நாமக்கல், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை மற்றும் தேனி மாவட்டங்களில் கட்டப்படும்.

7. இராணிப்பேட்டையில் இயங்கிவரும், கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலையத்தில் நோய்களைக் கண்டறியும் நிர்ணயிப்பான்களை சிறந்த தரத்தில் உற்பத்தி செய்வதற்காக நோய் நிர்ணயிப்பான் உற்பத்திக்கூடம் 8.02 கோடி ரூபாய் செலவில் நல்உற்பத்தி தரத்திற்கு மேம்படுத்தப்படும்.

இராணிப்பேட்டையில் இயங்கிவரும் கால்நடை நோய்களுக்கான தடுப்பு மருந்து உற்பத்தி நிலையத்தில் நுண்ணுயிரி

மற்றும் நச்சுயிரி தடுப்பு மருந்து உற்பத்திக் கூடங்களும் நல்உற்பத்தித் தரத்திற்கு மேம்படுத்தப்படவுள்ள நிலையில், தற்போது கால்நடை நோய் நிர்ணயிப்பான் உற்பத்திக் கூடம் 8.02 கோடி ரூபாய் செலவில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, நல்உற்பத்தித் தரத்திற்கு மேம்படுத்தப்பட்டு கன்றுவீச்சு நோய், மடிவீச்சு நோய் மற்றும் கோழிக்கழிச்சல் போன்ற நோய்களைக் கண்டறியும் நிர்ணயிப்பான்கள் சிறந்த தரத்தில் உற்பத்தி செய்யப்படும்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கேட்ட கேள்வி தொடர்பான அறிவிப்பு இது.

8. பாதிக்கப்பட்ட நாய்கள்மூலம் மனிதர்களுக்கு பரவும் கொடிய வெறிநோய் தாக்குதல்களிலிருந்து மனிதர்களைப் பாதுகாக்கும்பொருட்டு, நடப்பாண்டில் 1.67 கோடி ரூபாய் செலவில், முற்காப்பு நடவடிக்கையாக நகராட்சிகளில் உள்ள 4 இலட்சம் நாய்களுக்கு வெறிநோய் தடுப்பூசி போடப்படும்.

வெறிநோய் என்பது நாய்களின்மூலம் மனிதர்களுக்குப் பரவும் கொடிய நோயாகும். இந்நோயினால் பாதிக்கப்பட்ட மனிதர்களில் 100 விழுக்காடு இறப்பு நேரிடும். இதற்கான சிகிச்சை எதுவும் இல்லாத நிலையில், வெறிநோயினை கட்டுப்படுத்துவதற்காக 1.67 கோடி ரூபாய் செலவில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, நகர்ப்புறங்களில் உள்ள குறிப்பாக ஆதரவற்ற சுமார் நான்கு இலட்சம் நாய்களுக்கு முற்காப்பு நடவடிக்கையாக வெறிநோய் தடுப்பூசிப் பணி மேற்கொள்ளப்படும்.

9. குதிரையினங்களில் ஏற்படும் புரவிக் காய்ச்சல் நோயைக் கண்டறிவதற்காக 50 இலட்சம் ரூபாய் செலவில் புதிய நவீனக் கருவிகள் மற்றும் நோய் கண்டறியும் கலங்கள் கொள்முதல் செய்யப்பட்டு, உதகமண்டலம் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் செயல்பட்டுவரும் கால்நடை நோய் புலனாய்வு பிரிவுகளில் நோய் கண்டறியும் வசதிகள் மேம்படுத்தப்படும்.

பாதிக்கப்பட்ட குதிரையினங்களிலிருந்து மனிதர்களுக்குப் பரவும் புரவிக்காய்ச்சல் நோயினை குதிரையினங்களில் கண்காணித்து, நோய் பரவுவதைத் தடுப்பதற்காக 50 இலட்சம் ரூபாய் மதிப்பில்

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, உதகமண்டலம் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் செயல்பட்டுவரும் கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகளில் புதிய நவீன கருவிகள் மற்றும் உரிய நோய் கண்டறியும் கலங்கள் கொள்முதல் செய்யப்பட்டு, புரவிக்காய்ச்சல் நோய் கண்டறியும் வசதிகள் மேம்படுத்தப்படும்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கேட்ட கேள்வி தொடர்பான அறிவிப்பு இது.

10. மாநிலத்தில் 200 கால்நடை உதவி மருத்துவர்களுக்கு நாய்கள் இனவிருத்தி கட்டுப்பாட்டு அறுவை சிகிச்சை புத்தாக்க பயிற்சியும், 200 கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள் மற்றும் மாநகராட்சியில் நாய் பிடிக்கும் ஊழியர்களுக்கு நாயினங்களை கையாளுதல் தொடர்பான பயிற்சியும் 60 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

ஆதரவற்ற நாய்களால் ஏற்படும் நோய்த்தொற்று மற்றும் பிற இன்னல்களிலிருந்து பொது மக்களையும், கால்நடைகளையும் பாதுகாப்பதற்காக 60 இலட்சம் ரூபாய் மதிப்பில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 200 கால்நடை உதவி மருத்துவர்களுக்கு நாய்கள் இனவிருத்திக் கட்டுப்பாட்டு அறுவை சிகிச்சை புத்தாக்கப் பயிற்சியும், 200 கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள் மற்றும் மாநகராட்சி நாய் பிடிக்கும் ஊழியர்களுக்கு நாயினங்களை கையாளுதல் தொடர்பான பயிற்சியும் அளிக்கப்படும்.

பிற்பகல் 3–45

11. கால்நடை வளர்ப்போர் பயன்பெறும் வகையிலும், திட்டப் பணிகள் கால்நடை வளர்ப்போரை விரைவாக சென்றடையவும் ஏதுவாக ரூ.10 கோடி செலவில் பத்து கள கண்காணிப்பு உதவி இயக்குநர் அலவலகங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டப்படும்.

கால்நடை வளர்ப்போரை ஊக்குவித்து துறை செயல்பாடுகளுடன் ஒருங்கிணைப்பதற்காகவும், களப்பணிகள் விரைவாக சென்றடைவதற்கு ஏதுவாகவும் ரூ.10 கோடி செலவில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, வாடகை கட்டடங்களில் செயல்பட்டு வரும் உடையார்பாளையம், திருக்கோவிலூர், லால்குடி, குளித்தலை, இலுப்பூர், உத்தமபாளையம், கும்பகோணம், ஓசூர், திருச்செந்தூர் மற்றும் அம்பாசமுத்திரம் ஆகிய பத்து கள கண்காணிப்பு கால்நடை பராமரிப்பு உதவி இயக்குநர் அலுவலகங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டப்படும்.

12. மாநிலத்தின் அனைத்து கால்நடை நிலையங்களிலும் உயிர் மருத்துவக் கழிவு மேலாண்மை விதிகள் 2016–ஐ செயல்படுத்தும்பொருட்டு ரூ.7 கோடி மதிப்பில் உயிர் மருத்துவக் கழிவுகள் வரையறுக்கப்பட்ட முறையில் அப்புறப்படுத்தும் பணி மேற்கொள்ளப்படும்.

உயிர் மருத்துவக் கழிவு மேலாண்மை விதிகள் 2016–ஐ அமல்படுத்தும்பொருட்டு கால்நடை நிலையங்களில் நோய் கண்டறிதல் மற்றும் நோய் சிகிச்சைமூலம் சேகரிக்கப்படும் உயிர் மருத்துவக் கழிவுகளான ஊசி, மருந்துக் குப்பிகள், நோய்களைப் பரப்பும் திசுக் கழிவுகள் ஆகியவற்றை வரையறுக்கப்பட்ட முறையில் அப்புறப்படுத்துவதற்காக ரூ.7 கோடி மதிப்பில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, அனைத்து கால்நடை நிலையங்களிலும் உயிர் மருத்துவக் கழிவுகள் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள்மூலம் அப்புறப்படுத்தும் பணி மேற்கொள்ளப்படும்.

13. இலவச கறவைப் பசுக்கள் வழங்கும் திட்டத்தின் 12,000 பயனாளிகள் பயன்பெறும் வகையில் ரூ.4.10 கோடி மதிப்பில் கன்றுகளைப் பராமரிக்கத் தேவையான மருந்துப் பெட்டிகள் வழங்கப்படும்.

‘‘இன்றைய கிடேரிக் கன்று, நாளைய பசு’’ என்ற கூற்றின்படி, கன்றுகளின் சீரான வளர்ச்சியை உறுதி செய்வதற்காகவும், அவற்றின் இறப்பு விகிதத்தை குறைப்பதற்காகவும், தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டுவரும் இலவச கறவைப் பசுக்கள் வழங்கும் திட்டத்தில் பயன்பெற்ற 12,000 பயனாளிகள் ரூ.4.10 கோடி மதிப்பில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, உயிர்ச்சத்துகள்,

தாது உப்புக்கள், ஊட்டச்சத்து மருந்துகள் மற்றும் குடற்புழுநீக்க மருந்துகள் அடங்கிய ‘‘கன்றுகளைப் பராமரிக்கத் தேவையான மருந்துப் பெட்டிகள்’’ வழங்கப்படும்.

14. பசுந்தீவன பயிர் வகைகளை விதைத்து ஒரு ஆண்டிற்கு 10,000 மெட்ரிக் டன் அளவிற்கு பசுந்தீவன இருப்பை அதிகரிப்பதற்காக 20 மாவட்டங்களில் 1000 ஏக்கர் மேய்க்கால் நிலங்கள் ரூ.1.67 கோடி செலவில் மேம்படுத்தப்படும்.

தமிழகத்தில் பசுந்தீவன உற்பத்திக்கும் தேவைக்கும் இடையிலான இடைவெளியைக் குறைத்து, பசுந்தீவன உற்பத்தியைப் பெருக்கும் நோக்கத்தில் மேய்ச்சல் நிலங்களின் உற்பத்தித் திறன், தீவனப் பயிரின் தரம் மற்றும் மண்ணின் வளத்தை மேம்படுத்துவதற்காக கொழுக்கட்டைப்புல் மற்றும் முயல்மசால் போன்ற அந்தந்த பகுதிக்கு ஏற்ற பசுந்தீவன பயிர்களை பயிர் செய்து எல்லை பயிராக மரத் தீவனம் நடுவதற்காக ரூ.1.67 கோடி செலவில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 20 மாவட்டங்களில் 1000 ஏக்கர் மேய்க்கால் நிலங்கள் அபிவிருத்தி செய்யப்படும்.

15. ‘‘வெள்ளாட்டின ஆராய்ச்சி மையம்’’ ரூ.2.70 கோடி நிதி ஒதுக்கீட்டில் புதியதாக உருவாக்கப்பட்டுள்ள தென்காசி மாவட்டத்தில் நிறுவப்படும்.

தமிழ்நாட்டில் வெள்ளாட்டினங்களில் ஆராய்ச்சி மேற்கொள்வதற்காகவும் விருதுநகர், தூத்துக்குடி, தென்காசி மற்றும் திருநெல்வேலி ஆகிய தென் மாவட்டங்களை இருப்பிடமாகக் கொண்ட கன்னி மற்றும் கொடி ஆட்டினங்களைப் பாதுகாக்கவும், மரபியல் திறனை உயர்த்தி, இனவிருத்திக்காக பண்ணையாளர்களுக்கு வழங்கி, நிலைத்த வருமானத்தைப் பெறும்பொருட்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, புதியதாக உருவாக்கப்பட்டுள்ள தென்காசி மாவட்டத்தில் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தால் ரூ.2.70 கோடி நிதி ஒதுக்கீட்டில் ‘‘வெள்ளாட்டின ஆராய்ச்சி மையம்’’ ஏற்படுத்தப்படும்.

16. சென்னை சிவப்பு செம்மறியாடு உள்ளீட்டு மையம் ரூ.2.85 கோடி நிதி ஒதுக்கீட்டில் கால்நடை அறிவியல் முதுகலை ஆராய்ச்சி நிலையம், காட்டுப்பாக்கத்தில் நிறுவப்படும்.

சென்னை சிவப்பு செம்மறியாட்டு இனத்தைப் பாதுகாத்து, மரபியல் திறனை மேம்படுத்தி அவ்வினத்தைப் பிரபலப்படுத்தும்

நோக்குடன், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின்மூலம் கால்நடை அறிவியல் முதுகலை ஆராய்ச்சி நிலையம், காட்டுப்பாக்கத்தில் ரூ.2.85 கோடி நிதி ஒதுக்கீட்டில் ‘‘சென்னை சிவப்பு செம்மறியாடு உள்ளீட்டு மையம்’’ ஏற்படுத்தப்படும். இத்திட்டத்தின்மூலம் செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், திருவண்ணாமலை, வேலூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி ஆகிய வடதமிழகத்தின் ஏழு மாவட்டங்களிலும் உள்ள கால்நடைப் பண்ணையாளர்கள் பயனடைவார்கள்.

17. சேலம் கருப்பு வெள்ளாட்டினப் பண்ணை ரூ.1.48 கோடி நிதி ஒதுக்கீட்டில் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் நாமக்கல்லில் நிறுவப்படும்.

தமிழ்நாட்டில் இறைச்சிக்காக வளர்க்கப்படும் சேலம் கருப்பு வெள்ளாட்டினங்களின் மரபியல் திறனை உயர்த்தி, பாதுகாத்து, பண்ணையாளர்களின் வாழ்வாதாரம் மேம்பட இனவிருத்திக்கென வழங்கும்பொருட்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், நாமக்கல்லில் சேலம் கருப்பு வெள்ளாட்டினப் பண்ணை ரூ.1.48 கோடி நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்படும். இத்திட்டத்தின்மூலம் சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு மற்றும் நாமக்கல் ஆகிய ஐந்து மாவட்டங்களின் ஆட்டுப் பண்ணையாளர்கள் பயனடைவார்கள்.

18. விலங்குவழி பரவும் நோயறி ஆய்வகம் ரூ.2.54 கோடி நிதி ஒதுக்கீட்டில் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், ஒரத்தநாட்டில் நிறுவப்படும்.

விலங்குவழி பரவும் நோய்கள் பொது சுகாதார முக்கியத்துவம் வாய்ந்தவை. கால்நடைகளைத் தாக்கி மனிதனுக்கும் உயிர்சேதம் உண்டாக்கும் எரிக்காய்ச்சல் நோய், கருச்சிதைவு நோய் மற்றும் வெறிநோய் ஆகியவற்றை விரைவில் கண்டுபிடித்து அந்நோய்களைக் கட்டுப்படுத்தும் இலக்குடனும், காவேரி டெல்டா பகுதி பண்ணையாளர்களுக்கு மனிதனைப் பாதிக்கும் இந்நோய்களைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ‘‘தமிழகத்தின் காவேரி டெல்டாவில்

விலங்குவழிப் பரவும் நோயறி ஆய்வகம்'' ரூ.2.54 கோடி நிதி ஒதுக்கீட்டில் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், ஒரத்தநாட்டில் நிறுவப்படும்.

19. தனுவாஸ் கிராண்ட் ஊட்டச்சத்துமூலம் பால் உற்பத்தியை அதிகப்படுத்தும் திட்டம் ரூ.2 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

தனுவாஸ் கிராண்ட் ஊட்டச்சத்து அளித்து மாடுகளின் பால் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்குடன் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ''தனுவாஸ் கிராண்ட் ஊட்டச்சத்துமூலம் கறவை மாடுகளின் பால் உற்பத்தியினைப் பெருக்குதல்'' எனும் திட்டம் ரூ.2 கோடி நிதி ஒதுக்கீட்டில் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் கால்நடை உணவியல் நிலையம், காட்டுப்பாக்கத்தில் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின்மூலம் 21,000 கறவை மாடுகளுக்குத் தனுவாஸ் கிராண்ட் ஊட்டச்சத்து வழங்கப்பட்டு கறவை மாடுகளின் பால் உற்பத்தித் திறன் அதிகரிக்கப்பட்டு பால் உற்பத்தியாளர்கள் உபரி வருவாய் பெற வழிவகை செய்யப்படும்.

20. கால்நடைத் தீவன விதை உற்பத்திப் பிரிவு ரூ.1.49 கோடி நிதி ஒதுக்கீட்டில் நாமக்கல்லில் உள்ள கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நிறுவப்படும்.

கால்நடைகளின் உற்பத்தித் திறன் மற்றும் இனவிருத்தி மேம்பட தீவனம் மிகவும் அவசியம். பெருகிவரும் கால்நடைகளின் தீவனத் தேவையைப் பூர்த்தி செய்யும்பொருட்டு புதிய இன தீவனப் பயிர்களில் ஆராய்ச்சி மேற்கொள்ள 25 ஏக்கர் நிலப்பரப்பளவில் தீவன விதை உற்பத்திப் பிரிவு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, நாமக்கல்லில் உள்ள கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் ரூ.1.49 கோடி செலவில் அமைக்கப்படும்.

21. திருச்சி கருப்பு செம்மறியாட்டின ஆராய்ச்சி நிலையம் ரூ.2.12 கோடி நிதி ஒதுக்கீட்டில் தருமபுரி மாவட்டத்தில் அமைக்கப்படும்.

தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களை இருப்பிடமாகக் கொண்ட திருச்சி கருப்பு செம்மறியாடுகளை அழிவிலிருந்து பாதுகாக்கவும், மரபியல் திறனை உயர்த்தவும் மாண்புமிகு புரட்சித்

தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, திருச்சி கருப்பு செம்மறியாட்டின ஆராய்ச்சி நிலையம் ரூ.2.12 கோடி நிதி ஒதுக்கீட்டில் தருமபுரி மாவட்டம், பாலக்கோடு ஒன்றியத்தில் 200 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்படும். இதன்மூலம் தரம் வாய்ந்த ஆடுகள் பண்ணையாளர்களுக்கு வழங்கப்பட்டு வருமானம் அதிகரிக்க வழிவகை செய்யப்படும்.

22. புதிய கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் ரூ.1.70 கோடி நிதி ஒதுக்கீட்டில் தூத்துக்குடி மாவட்டத்தில் நிறுவப்படும்.

கால்நடை பராமரிப்பில் ஆய்வின்மூலம் பயனுள்ளதாக அறியப்படும் பல்வேறு புதிய தொழில்நுட்பங்களை உடனுக்குடன் பண்ணையாளர்களுக்கு எடுத்துச்செல்லும் வகையில், இவ்வாண்டில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, புதிய கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் ரூ.1.70 கோடி செலவில் தூத்துக்குடி மாவட்டத்தில் அமைக்கப்படும். இதன்மூலம் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள கால்நடைப் பண்ணையாளர்கள் பயனடைவார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களை திரும்பப்பெற்றுக்கொண்டு மானியக் கோரிக்கையினை நிறைவேற்றித் தருமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன? சொல்லுங்கள்.

***திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய வட மாவட்டப் பகுதியில், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பிறந்த கொங்கு மண்டலப் பகுதிகளில் விவசாயிகளின் உபதொழிலாக கோழிப் பண்ணைகள் இருக்கின்றன. இப்போது ஏற்பட்டிருக்கின்ற கொரோனா என்ற கொடிய நோயின் பீதியால் கோழிப் பண்ணைகளினுடைய நிலை பின்னுக்குத் தள்ளப்பட்டிருக்கின்றது. உற்பத்தியாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஒரு முட்டை விலை ரூ.4.35 என்று இருந்தது, தற்போது ரூ.2.90 என்ற நிலைக்கு குறைந்திருக்கின்றது. தீவனம்கூட வாங்க முடியாத நிலையிலே ஆங்காங்குள்ள கோழிப் பண்ணையாளர்கள், ‘சட்டசபை நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.

இதனை முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லுங்கள்' என்று தொடர்ந்து எங்களிடத்தில் தொலைபேசியில் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். எனவே, தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்ள விரும்புவது, கோழிப் பண்ணையாளர்களுக்கு தீவனம்கூட வாங்கமுடியாத நிலையில் இருக்கக்கூடிய இந்தத் தொழில் நலிந்துவிடுமோ என்கிற அச்சம் இருப்பதால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கோழிப் பண்ணையாளர்கள் தீவனம் வாங்குவதற்கு பொருளாதார ரீதியாக மானியம் வழங்க முன்வருவார்களா என தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோழி இறைச்சியில் கொரோனா வைரஸ் என்று பீதியை கிளப்பிய 4 பேர் ஏற்கெனவே கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். கோழிப் பண்ணையாளர்கள் அனைவரும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைச் சொல்லியிருக்கிறார்கள். கொரோனா தொற்று எப்படியெல்லாம் ஏற்படுகின்றது என்றும், அந்த நோய்த்தொற்றை தடுக்க எப்படியெல்லாம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது குறித்தும், தினமும் நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்தில் பலமுறை விவரித்துள்ளார்கள். கொரோனா நச்சு நோய் தாக்கியவர்களிடமிருந்து நேரடியாகவோ, மறைமுகமாகவோ பரவும் தன்மையுடையது, உலகளவில் இதுவரை கொரோனா நச்சு நோய் கோழிகள், விலங்குகள் மூலமாக மனிதர்களுக்கு பரவும் நிகழ்வு ஏற்படவில்லை. நமது உணவுப் பழக்கத்தில் இறைச்சியை அதிக வெப்பத்தில் சமைப்பதால் கோழி இறைச்சிமூலம் இந்நோய் வருவதற்கு சாத்தியம் இல்லை. உணவு உற்பத்தித் தொழிலாளர்கள் அரசின் வழிகாட்டுதல்களின்படி கைகளை சுத்தமாக வைத்திருப்பதன் மூலமாகவும், சுகாதார நடவடிக்கைகளைக் கடைபிடிப்பதன் மூலமாகவும் நோய் தாக்கத்திலிருந்து பாதுகாத்துக்கொள்ளலாம். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்பான வேண்டுகோள், கோழி இறைச்சியை எந்தவித அச்சமும் இல்லாமல் உண்ணலாம் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தக் கோரிக்கை

குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் கலந்துபேசி ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) முட்டை ஆம்லெட்டும் சாப்பிடலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

பிற்பகல் 3–50

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டு மக்களின் நன்மைக்காகவே தன் வாழ்வை அர்ப்பணித்த மனிதகுல மாணிக்கம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் 'மக்கள் சேவையே மகேசன் சேவை' என்று தொண்டாற்றி வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், என்னுடைய வணக்கத்தை நான் மகிழ்ச்சியோடு முதற்கண் தெரிவித்துக்கொள்கின்றேன்.

"உழைப்பவன் உயரணும், அவன் வாழ்வு செழிக்கணும்" என்ற, மறைந்தும் மறையாமல் நம்முடைய உள்ளங்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் கொள்கைகளுக்கு ஏற்ப, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழியைப் பின்பற்றி, அயராது உழைக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெறும் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசில், கடல் நீர், நன்னீர், உவர் நீர் மற்றும் குளிர் நீர் போன்ற பல்வேறு நீர் ஆதாரங்களைக்கொண்ட இந்தத் தமிழ்த்திருநாட்டில் மீன் பிடிப்பு, மீன் வளர்ப்பு மற்றும் மீன்பிடி சார்ந்த தொழில் செய்யும் மீனவர்களின் வாழ்வாதாரம் முன்னேறிடவும், மீன் உற்பத்தி பெருகிடவும் இந்தியாவிற்கே வழிகாட்டும் பல்வேறு முன்னோடி திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது நம்முடைய அம்மாவுடைய அரசு. அவற்றில் சிலவற்றை இத்தருணத்தில் மாமன்ற உறுப்பினர்களுக்கு எடுத்துரைப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் 1,076 கிலோ மீட்டர் நீளமுள்ள கடற்கரையையும், 13 கடலோர மாவட்டங்களையும், 68 மீனவ கிராமங்களையும் கொண்டுள்ளது. கடலோர மீனவ மக்கள் தொகை ஏறக்குறைய 10½ இலட்சம்; உள்நாட்டு மக்கள்

தொகை ஏறக்குறைய 2½ இலட்சம். கிட்டத்தட்ட 9 பெரிய மீன்பிடி துறைமுகங்களையும், 3 நடுத்தர மீன்பிடி துறைமுகங்களையும், 46 மீன் இறங்குதளங்களையும், 254 மீன் இறங்குமையங்களையும் கொண்டுள்ளது நம்முடைய மாநிலம். தமிழ்நாட்டில் கடல் மீன் உற்பத்தி ஆண்டுக்கு கிட்டத்தட்ட 5½ இலட்சம் டன்கள். அதேபோன்று உள்நாட்டு மீன் உற்பத்தி ஆண்டுக்கு கிட்டத்தட்ட 1 இலட்சத்து 67 ஆயிரம் டன்கள். மொத்த மீன் உற்பத்தி, உள்நாட்டு மீன்வளம் மற்றும் கடல் மீன்வளம் சேர்த்தால் கிட்டத்தட்ட 6 இலட்சத்து 88 ஆயிரம் டன்களாக உயர்ந்திருக்கின்றது. 5,809 மீன்பிடி விசைப் படகுகளும், 36,850 இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப் படகுகளும், 5,043 இயந்திரம் பொருத்தப்படாத நாட்டுப் படகுகளும் பதிவு செய்யப்பட்டு இவர்கள் பிடிக்கின்ற மீன்கள்மூலம் அந்நிய செலாவணியாக ஏறக்குறைய 5,591 கோடி ரூபாய், கடல்மீன் உணவுப் பொருள் ஏற்றுமதியின்மூலம் நம்முடைய தமிழ்நாட்டிற்கு, இந்திய திருநாட்டிற்கு அந்நிய செலாவணியாக கிடைக்கப் பெறுகின்றது.

எனவே, நம்முடைய மீனவர் நலன் பாதுகாக்கப்பட வேண்டுமென்ற அடிப்படையில், மீன்பிடி தடைக்கால நிவாரணம், மீன்பிடி குறைவுகால நிவாரணம், கடல் மீனவர் சேமிப்பு நிவாரணம், கடல் மீனவர் மகளிர் சேமிப்பு நிவாரணம் என ஆண்டுதோறும் 19,000 ரூபாய் ஒவ்வொரு குடும்பத்திற்கும் நேரடியாகப் போய்ச் சேருகின்ற நிலைமையை இன்றைக்கு அம்மாவுடைய அரசு ஏற்படுத்தியிருக்கின்றது.

அதேபோன்று, பாக் வளைகுடா பகுதியில் இலங்கை கடற்படை பிரச்சினையால் நம்முடைய மீனவர்களுக்கு பாதிப்பு ஏற்பட்டதன் அடிப்படையில், அவர்களுக்கு வருங்காலத்தில் நீண்ட கால தீர்வையாக ஏறக்குறைய 1,600 கோடி ரூபாயில் Prime Minister's Blue Revolution Scheme என்று ஒரு திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இதில் இந்த வருடம் மட்டும் மொத்தம் 520 படகுகள் கட்டப்பட வேண்டும். படகுகள் கட்டுவதற்கு உத்தரவிடப்பட்டு, கட்டி முடிக்கப்பட்ட படகுகள் 22. கட்டுமானத்தில் உள்ள படகுகள் 22. ஒரு படகு கட்டுவதற்கு 80 இலட்சம் ரூபாய் செலவாகிறது. இதில் மத்திய, மாநில அரசுகளின் நிதியுதவி 70 சதவிகிதம். 10 சதவிகிதம்தான் மீனவர்களின் முதலீடு. எனவே இது முழுமை பெறும்போது, இந்தப் பிரச்சினையைத் தீர்க்கின்ற நிலை நிச்சயமாக இருக்கும். அதேபோல கடலில் மீன் பிடிக்கின்ற மீனவர்கள், ஆபத்து காலத்தில் கரையைத் தொடர்பு கொள்வதற்கான வசதியை ஏற்படுத்துவதற்கு, கம்பியில்லா தொலைத் தொடர்பு கருவிகள், செயற்கைக்கோள், தொலைபேசி, NaVIC, NAVTEX கருவிகள், Transponders, தூண்டில் மற்றும்

கைபேசி செயலிகளை மாநில அளவில் அமைப்பதற்கு மட்டும் கிட்டத்தட்ட 40 கோடி ரூபாய் அளவிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, அவையும் வாங்கித் தரப்பட்டன. அதன் அடிப்படையில்தான் இன்றைக்கு எந்தவொரு இயற்கை இடர்ப்பாடு வருகின்ற நேரத்திலும், எந்தவொரு மீனவனுக்கும் கடலில் பிரச்சினை ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காக, safe–ஆக கரைக்குத் திரும்புகின்ற நிலையை அம்மாவுடைய அரசு ஏற்படுத்தியிருக்கிறது.

பிற்பகல் 3–55

அதேபோன்று மீனவ சமுதாய இனத்தவர்களை ஊக்கப்படுத்த வேண்டுமென்பதற்காக, கடல்சார் கல்வி பயின்றால், அவர்களுக்கு எல்லாவற்றிலும் வேலை கிடைக்கும் என்பதால், இளைஞர்களை ஊக்கப்படுத்த வேண்டுமென்பதற்காக 463 மீனவ இளைஞர்களுக்கு இரண்டு கோடி ரூபாய் உதவித் தொகையில் இதுபோன்ற பயிற்சி அளிக்கப்படுகிறது. இதுபோன்ற பயிற்சிகளைக் கொடுக்கும்போது அவர்கள் seamen ஆகப் போகலாம்; boat–ல் வேலை செய்யலாம்; ship–ல் வேலை செய்யலாம்; இதுபோன்ற பயிற்சிகளுக்காக இந்தத் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. 300 மீனவ இளைஞர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளித்து, அவர்கள் இந்தியக் கடலோர காவல் படை மற்றும் கப்பல் படையில் பணியில் சேர மாண்புமிகு அம்மாவின் அரசு ரூ.1 கோடி வழங்குகிறது. Coast Guard, கடலோரக் காவல் படை இருக்கிறது. இதில் மீனவ இளைஞர்களைப் பணியமர்த்த வேண்டுமென்பதற்காக, இதற்காகவே பிரத்யேகப் பயிற்சி ரூ.1 கோடியே 4 இலட்சம் செலவில் ஒவ்வோர் ஆண்டும் 300 மீனவ இளைஞர்களுக்கு அளிக்கப்பட்டு வருகிறது.

மீனவ சமுதாயத்தில் I.A.S., I.P.S., படித்தவர்கள் கிடையவே கிடையாது. அவர்களை I.A.S., I.P.S., ஆக உருவாக்க வேண்டுமென்பதற்காக அண்ணா மேலாண்மை நிலையத்தின்மூலம் I.A.S., தேர்வு எழுதுவதற்காக ஆறு மாத பயிற்சி அளிப்பதற்கு ஆண்டுதோறும் 20 மீனவர்களுக்கு கிட்டத்தட்ட 12 இலட்சத்து 38 ஆயிரம் ரூபாய் ஒவ்வோர் ஆண்டும் அளிக்கப்படுகிறது. மீனவ இளைஞர்களுக்கு சுய வேலைவாய்ப்பு வழங்கும் பொருட்டு, திறன் மேம்பாட்டுப் பயிற்சி ரூ.30 இலட்சம் செலவில் 2,100 மீனவ இளைஞர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

அடுத்து வருவது முக்கியமான ஒன்று. Marine Enforcement Wing என்பது இந்தியாவில் எங்கேயுமே கிடையாது. கடலில் எல்லை இருக்கிறது. 9 nautical mile; 12 nautical mile; அதற்கும் மேல். 9 nautical mile–க்குக் கீழே விசைப் படகுகள் தொழில் செய்யக்

கூடாது. அந்தப் பகுதி exclusive ஆக நம்முடைய நாட்டுப் படகு வைத்திருப்பவர்கள் தொழில் செய்வதற்காகத்தான். எனவே, இந்தப் பிரச்சினையைக் கண்காணிப்பதற்கு, மீன் வளத் துறையில் 1983–ல் இந்தப் பிரச்சினை ஏற்பட்டபோது, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் கடல் ஒழுங்குமுறைச் சட்டம், 1983 என்ற ஒரு சட்டத்தைக் கொண்டுவந்தார்.

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்) தலைமை]

கடல் ஒழுங்குமுறைச் சட்டம், 1983–ல் இந்தப் பிரச்சினையை ஒழுங்குமுறைப்படுத்தினாலும்கூட, சுருக்குமடி, இரட்டைமடி, ஊசிவலை என்று சொல்லக்கூடிய (குறுக்கீடு) இதுபோன்ற வலைகளால் மீன் பிடிப்பதன்மூலம் கடல் வளம் அழிகின்றது. கடலில் இதைக் கண்காணித்து, உரிய வகையில் கடல் வளத்தையும் நாம் காப்பாற்ற வேண்டும். கடல் வளத்தைக் காப்பாற்றுகின்ற முயற்சியை எடுத்தாலும்கூட, நம்முடைய பாரம்பரிய மீனவர்களின் உரிமைகள் முழுமையாகப் பாதுகாக்கப்பட வேண்டுமென்பதற்காக, பிரத்யேகமாக, இந்தியாவிலேயே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டதுதான் Marine Enforcement Wing, கடல் அமலாக்கப் பிரிவு. இதன் முக்கியப் பணிகள் என்னவென்று பார்த்தால், ஆபத்திலிருந்து மீனவர்களின் உயிரைக் காத்திடவும், அவர்தம் படகினை மீட்க மீட்புப் பணிகளை மேற்கொள்வதும், சட்டத்திற்குப் புறம்பான மீன் பிடித்தல், அழிவு ஏற்படுத்தும் மீன் பிடிப்பு மற்றும் தடை செய்யப்பட்ட வலைகளைத் தடுத்தல், கடலில் ரோந்துப் பணி மேற்கொள்ளுதல், வானிலை எச்சரிக்கை மற்றும் பாதுகாப்பு தொடர்பான எச்சரிக்கைகளை மீனவர்களுக்கு வழங்குதல், கடலில் சட்ட விரோத செயல்களைத் தடுத்தல், பதிவு செய்யப்படாத, உரிமம் இல்லாத படகுகளை முடக்குதல் போன்ற பணிகள் Marine Enforcement Wing–ன் பணிகளாகும்.

உட்கட்டமைப்பு வசதி. நான் ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல, ரூ.5,500 கோடியில் கடல் உணவுப் பொருளை ஏற்றுமதி செய்வதன்மூலம், தமிழ்நாட்டிற்கு அன்னிய செலாவணி கிடைத்து, அதன்மூலம் பொருளாதாரம் உயர்கின்ற நிலை இருக்கிறது என்று சொன்னால், நாம் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த வேண்டும். உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த நாம் என்ன செய்ய வேண்டுமென்றால், முகத்துவாரத்தை ஆழப்படுத்த வேண்டும்; புதிய தங்குதளங்கள் கட்டப்பட வேண்டும்; சிறிய மீன்பிடி துறைமுகங்கள்; பெரிய மீன்பிடி துறைமுகங்கள்; இவற்றையெல்லாம்

கட்டி, உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதன்மூலம்தான் மீன் பிடிப்பு மேலும் அதிகமாகும்; மீனவர்களின் வாழ்வாதாரம் உயரும்; தமிழ்நாட்டின் பொருளாதார நிலையும் உயர்கின்ற நிலை இருக்கும். இந்த அடிப்படையில் உலகத்தரம் வாய்ந்த உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதன்மூலம், மீனவர்கள் மீன்பிடி தொழில் செய்வதுடன், மீனவர்கள் தாங்கள் பிடிக்கும் மீன்களை சுகாதாரமாகக் கையாண்டு, கூடுதல் விலை பெறுவதை உறுதி செய்வதன்பொருட்டு அம்மாவின் அரசு முக்கியத்துவம் அளித்து வருகிறது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தரங்கம்பாடி, வெள்ளப்பள்ளம், திருவொற்றியூர் மற்றும் கடலூர் மாவட்டங்களிலுள்ள முதுநகர் மீன்பிடி துறைமுகங்களைப் புதுப்பிக்க, மொத்தமாக ரூ.520 கோடி நிதி ஒதுக்கீடு செய்து, தற்போது பணிகள் நடைபெற்று வருகின்றன. நாகை மாவட்டம், ஆற்காட்டுத்துறையில் புதிய மீன்பிடி துறைமுகம் அமைக்க ரூ.150 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் தொடங்கப்படவுள்ளன. கழுவேலி ஆற்றின் இரண்டு கரைகளிலும் புதிய மீன்பிடி துறைமுகம் அமைக்க ரூ.235 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் தொடங்கப்படவுள்ளன. அதேபோன்று, நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகாரில் ரூ.178 கோடி செலவில் கட்டப்பட்ட மீன்பிடி துறைமுகம் திறந்து வைக்கப்படவுள்ளது. நீரோடி, மார்த்தாண்டம் துறை, வள்ளவிளை ஆகிய கிராமங்களில் நேர்கல் அலை தடுப்புச் சுவர்கள் ரூ.116 கோடி செலவில் அமைப்பதற்கான பணிகள் நடைபெற்றுவருகின்றன.

பிற்பகல் 4–00

நீங்கள் ஏற்கெனவே சொன்னீர்கள். ராமன்துறையில் 1 கோடியே 74 இலட்சம் ரூபாய் செலவில் சாலை அமைக்கும் பணிக்கு அரசாணை வழங்கப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் தொடங்கப்படவிருக்கின்றன. இராமநாதபுரம், குந்துக்கல்லில் 70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மீன் இறங்குதளம் கட்டப்பட்டு, அது முடிவுறும் தருவாயில் உள்ளது.

மீன் வள தகவல் மையம். இது மிகவும் முக்கியமானது. கடலில் ஓர் ஆபத்து இருக்கிறது என்றால், தகவல் (information) என்பது முக்கியம். அந்தத் தகவலைப் பெறுவதற்கு சென்னை, கடலூர், நாகப்பட்டினம், இராமநாதபுரம், தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் மீன்வள தகவல் மையம் அமைக்கப்பட்டு, தற்போது செயல்பாட்டில் உள்ளது. இது கடல் மீன் வளம் குறித்தது.

அடுத்து, உள்நாட்டு மீன் வளம். உள்நாட்டு மீன் வளத்தில் கட்லா, மிர்கால், ரோகு, காமன்கார், சில்வர்கார், புல் கெண்டை போன்ற நிறைய மீன் வகைகள் இருக்கின்றன. உள்நாட்டு மீன் வகைகளின்மூலம் உள்நாட்டு மீனவர்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்காக நம்பியிருக்கும் உள்நாட்டு மீனவர்கள் மட்டும் சுமார் 2 இலட்சத்து 35 ஆயிரம் பேர். 72 நீர்த்தேக்கங்களில் 62 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் உள்ளது. உள்நாட்டு மீன் உற்பத்தியைப் பொறுத்தளவில் 1 இலட்சத்து 70 ஆயிரம் டன். நீலப் புரட்சித் திட்டத்தின்கீழ் தனியார் மீன் குஞ்சு விற்பனையகங்களை ஊக்குவிக்கும்பொருட்டு, 5 பொரிப்பகங்களுக்கு அலகு ஒன்றுக்கு ரூ.25 இலட்சம் வீதம் 1 கோடியே 25 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இதனால் 200 இலட்சம் தரமான மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்படும். உள்நாட்டு மீனவர்களைப் பொறுத்தவரையில், மீன்பிடித் திறனை மேம்படுத்தும் வகையில், 40 சதவிகித மானிய விலையில் 250 பரிசல்கள் மற்றும் 1,085 மீன்பிடி வலைகள் 1 கோடி ரூபாய் செலவில் வழங்கப்பட்டுள்ளன.

நீர்த்தேக்கங்களை ஏலம் விடும்போது, பொதுவாக பணம் படைத்தவர்கள் ஆதிக்கம் செலுத்தி, அந்த நீர்த்தேக்கங்களை ஏலத்திற்கு எடுத்து விடுகிறார்கள். மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காக, அவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கும் வகையில் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத்தான் முதல் priority கொடுக்க வேண்டுமென்ற அடிப்படையில் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நீர்த்தேக்கங்களை குத்தகைக்கு விடுவதற்கான அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

அதேபோன்று, தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம் 2–ன்கீழ் உள்நாட்டு மீன் வளத் திட்டங்களைச் செயல்படுத்தி, 40 கோடி ரூபாய்க்கு மாண்புமிகு அம்மாவினுடைய அரசால் நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்டு, முதற்கட்டமாக ரூ.15 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. தமிழ்நாட்டிலுள்ள கடல் மற்றும் உள்நாட்டு மீனவர்களுக்கு நீலப் புரட்சித் திட்டத்தின்கீழ் 5 ஆயிரம் வீடுகள் கட்டப்படவுள்ளன. இந்த 5 ஆயிரம் வீடுகளுக்கு சுமார் 53 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அந்தப் பணிகளும் தற்போது நடைபெற்று வருகின்றன. தரமான மீன்களை மக்களுக்கு விநியோகம் செய்கின்ற ஒரு முக்கியமான பணியில் மீன் வளர்ச்சிக் கழகம் ஈடுபட்டிருக்கிறது. இதில் கடந்த காலங்களில்

இலாபமே இல்லை. தற்போது நமது அம்மாவுடைய அரசில் சுமார் 572 கோடி ரூபாய் அளவிற்கு turnover செய்து, 13 கோடி ரூபாய் அளவிற்கு இலாபத்தை ஈட்டியிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அடுத்ததாக, அம்மா பெயரிலான தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம். இந்தியாவில் வேறு எங்கும் இல்லை. அம்மா அவர்கள் 2012 ஆம் ஆண்டு இந்தப் பல்கலைக்கழகத்தைக் கொண்டுவந்தபோது, அதில் ஒரே ஒரு college–தான் இருந்தது. ஆனால், 2012–ல் ஒரு கல்லூரியுடன் தொடங்கப்பட்ட இப்பல்கலைக்கழகம், தற்போது 11 கல்லூரிகள், 4 தொழில்சார் கல்லூரிகள், 4 மீன்வளப் பொறியியல் கல்லூரிகள் என 19 கல்லூரிகளைக் கொண்டதாக உருவெடுத்திருக்கிறது. அதேபோன்று 2012 ஆம் ஆண்டில் 150 ஆக இருந்த மாணவர்களின் எண்ணிக்கை, தற்போது 1,121 ஆக இருக்கிறது. ஆரம்பிக்கும்போது 150 ஆக இருந்த எண்ணிக்கை, தற்போது 1,121 ஆக இருக்கிறதென்றால், அம்மா பெயரிலான அந்தப் பல்கலைக்கழகம் பெரிய அளவிலான வளர்ச்சி பெற்றிருக்கிறது என்பதை நீங்கள் பார்க்க வேண்டும். இந்தப் பல்கலைக்கழகத்திற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 124 கோடி ரூபாய் அளவிற்கு நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மீன் வளத் துறைக்கான பதிலுரை முடிந்தது. (குறுக்கீடு)

பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை

பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையைப் பொறுத்தவரையில், ஒளிவு மறைவற்ற திறமைமிக்க பொறுப்புள்ள நிருவாகத்தை அளிப்பது ஒரு நல்லரசின் இலக்கணமாகும். அரசின் முகமாகவும், மனமாகவும் செயல்படுகிறவர்கள் அரசு அலுவலர்கள்தான். அரசால் தீட்டப்படும் செயல் திட்டங்கள், வகுக்கப்படும் நலத் திட்டங்கள் உரிய முறையில் மக்களைச் சென்றடையச் செய்பவர்கள் அரசு அலுவலர்கள். ஓர் அரசினுடைய செயல் திறனானது அரசு அலுவலர்களின் செயல் திறனைப் பொறுத்தே அமையும். அரசின் அடித்தளமாக, அச்சாணியாக, முதுகெலும்பாக விளங்குபவர்கள் அரசு அலுவலர்கள். இப்படிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த அரசு அலுவலர்கள் நலனில் நம்முடைய புரட்சித் தலைவி அம்மாவுடைய அரசு எப்போதுமே தனி அக்கறை கொண்டு செயல்பட்டு வருகின்றது. எனவே, அரசுப் பணியாளர்களுடைய முக்கியத்துவத்தை உணர்ந்து தெரிவித்த

கருத்துகளின் அடிப்படையில், அவர்கள் நலனில் அக்கறை கொண்டு அம்மாவின் வழியில் செயல்பட்டுவரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து அம்மாவின் வார்த்தைகளை உள்ளத்திலே நிறுத்தி, செயலிலே காட்டி வருகிறார்கள். கடந்த 9 ஆண்டுகளில் TNPSC, TRB, TNUSRB, MSRB, Employment Exchange உள்ளிட்ட பல்வேறு முகமைகளின் வாயிலாக recruitment, அதாவது பணியமர்த்தல் என்று பார்த்தால் சுமார் 3 இலட்சத்து 15 ஆயிரத்து 315 பணியாளர்கள் தெரிவு செய்யப்பட்டு பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

பிற்பகல் 4–05

அடுத்து, அரசு ஊழியர்களுக்கு பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் பயிற்சி வழங்குதல். ஓர் அரசு ஊழியருக்கு அடிப்படைப் பயற்சி அளிப்பது என்பது முக்கியம். அந்த அடிப்படைப் பயிற்சி பெறுவதற்கு அதிக அளவிலான அரசு ஊழியர்கள் நிலுவையில் இருந்து வருவதால், அவர்களுக்குப் பணி வரன்முறை, regularise செய்ய முடிவதில்லை. எனவே, பணியை regularise செய்து பதவி உயர்வு போன்றவை உரிய காலத்தில் கிடைப்பதில்லை. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. தா. உதயசூரியன் அவர்களுக்கான பதில் இது. உரிய காலத்தில் கிடைப்பதில்லை என்ற தகவலை அடுத்து, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு 28 மாவட்டங்களில் ரூபாய் ஒரு கோடியே 23 இலட்சம் செலவில் நிலுவையிலுள்ள அனைத்து அரசு ஊழியர்களுக்கும் பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்துள்ளது. மே 2020–க்குள் அனைத்து ஊழியர்களும் இப்பயிற்சியினைப் பெறுவார்கள். இதனால் அரசு ஊழியர்களுக்கு உரிய காலத்தில் பதவி உயர்வு போன்ற பலன்கள் கிடைக்க அம்மாவின் அரசால் தற்போது வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கை எப்போதும் இல்லாத நடவடிக்கை என்பதோடு, புரட்சித் தலைவி அம்மாவுடைய அரசு அரசு ஊழியர் நலனில் மிகுந்த அக்கறையுள்ள அரசாக உள்ளது என்பதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டாகும்.

அதேபோன்று, பொருளாதாரத்தில் நலிவுற்ற மாணவர்கள் மத்திய, மாநில அரசுப் பணி, இரயில்வே மற்றும் வங்கிப் பணிகளுக்கான போட்டித் தேர்வினை எதிர்கொள்ள அவர்களுக்கு சென்னையில் ஒரு பயிற்சி மையம் அம்மாவின் அரசால் அமைக்கப்பட்டது. மேலும், அதிக மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கும் நோக்கத்துடன் தற்போது கோவை, மதுரை மற்றும் சேலம் ஆகிய இடங்களில் இம்மையத்தைத் தொடங்க அம்மாவின் அரசு ஆணையிட்டுள்ளது. இந்திய குடிமைப் பணியான I.A.S., I.P.S. போன்ற Central Government

exam–ல் training கொடுப்பதற்கு பிரத்யேகமாக ஒரு பயிற்சி மையம் அமைப்பதற்குத்தான் இதில் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது.

அதேபோன்று, Chemotherapy சிகிச்சை பெறும் அரசுப் பணியாளர்களுக்கு ஒவ்வொரு முறை சிகிச்சை பெறும்போதும் 10 நாட்கள் சிறப்பு விடுப்பு அளிக்க மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஆணையிட்டுள்ளது. கருணை அடிப்படையில் நியமிக்கப்பட்ட அரசுப் பணியாளரின் பணியினை வரன்முறைப்படுத்திட தேர்வாணையத்தின் ஒப்புதல் பெறும் நடைமுறையிலிருந்து விலக்களித்து எளிமைப்படுத்தியுள்ளது.

பெண் அரசு ஊழியர்களின் நலனைக் கருதி, இரு குழந்தைப் பேறுக்கு தனித்தனியே 270 நாட்கள் மகப்பேறு விடுப்பு வழங்கப்படுவதுடன், முதல் பிரசவத்திலேயே இரு குழந்தைப் பேற்றினை twin பெற்றவர்களுக்கு இரண்டாவது பிரசவத்திற்கும் மகப்பேறு விடுப்பு வழங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அதாவது twins பிறந்தால் இரண்டு குழந்தைகள் என்று கணக்கெடுக்கக் கூடாது. அடுத்த delivery–க்குக்கூட அவர்களுக்கு அந்த Maternity leave 270 நாள், தாராளமாகக் கொடுக்கலாம்.

அதேபோன்று, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தைப் பொறுத்தவரை, 2011 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டுவரை ஏறத்தாழ 85,000 பணியாளர்களைத் தேர்வு செய்துள்ளது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு தமிழ்நாடு தேர்வாணையத்தின் செயல்பாடுகளில் தலையிடாமல், எப்போதுமே அதனுடைய தன்னாற்றலுடன் செயல்படுவதை உறுதி செய்துள்ளது. அண்மையில் தேர்வாணையத்திற்கு வெளியே நடைபெற்ற முறைகேடுகளுக்குக் காவல் துறை வழக்குப் பதிவு செய்து, உரிய விசாரணை மேற்கொண்டு வருகிறது. முறைகேடுகளில் ஈடுபட்டவர்கள் யாராக இருப்பினும், சட்டப்படி தண்டிக்க தகுந்த நடவடிக்கைகள் எடுத்து வருகின்றோம். TNPSC நடத்தும் போட்டித் தேர்வுகளில் தமிழ் மொழியில் போதிய திறனுள்ளவர்கள் மட்டுமே பங்கேற்கும் வகையில் பாடத்திட்டங்கள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன. இதனால் தமிழ் வழியில் படித்தவர்கள் அதிகம் பேர் பணியில் சேருவதற்கான வாய்ப்பும் ஏற்பட்டிருக்கின்றன. தமிழ் வழியின் மூலமாகப் படித்த நபர்களுக்கு அரசுப் பணியில் 20% முன்னுரிமை வழங்குகின்ற நிலையில், இந்த முன்னுரிமை S.S.L.C., +2 மற்றும் பட்டப்படிப்பு வரை முழுவதுமாக தமிழ் வழியில் பயின்றவர்களுக்கு மட்டுமே வழங்குவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுத்திருக்கின்றது.

தமிழ்நாடு தகவல் ஆணையத்தைப் பொறுத்தவரை, மக்களுக்கு ஒளிவுமறைவற்ற, வெளிப்படையான நிருவாகத்தை அளித்திட மாநிலத் தகவல் ஆணையம் அமைக்கப்பட்டு, நவீன தொழில்நுட்பத்தின் உதவியுடன் அதன் செயல்பாடுகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. ஒளிவுமறைவற்ற நிருவாகம் வழங்கப்படுவதற்கு சான்றாக, 2018 ஆம் ஆண்டு ஏறக்குறைய 3¼ இலட்சம் RTI மனுக்கள் பெறப்பட்டு 2½ இலட்சம் மனுக்களுக்கு தகவல்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. தகவல் கோரும் மனுக்களை கூடியவிரைவில் online மூலமாகக்கூட நீங்கள் apply செய்து, தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

அதேபோன்று, லோக் ஆயுக்தாவைப் பொறுத்தவரையில், அரசுத் துறையில் ஊழலை ஒழிக்க வேண்டும் என்ற அடிப்படையில், பொது ஊழியர்களின் மீதான புகார்களை நடுநிலை தவறாமல் அச்சமின்றி விசாரணை செய்து நடவடிக்கை எடுப்பதற்கு லோக் ஆயுக்தா அமைப்பு உருவாக்கப்பட்டு ஏறக்குறைய 103 மனுக்கள் பெறப்பட்டு, 85 மனுக்கள்மீது விசாரணை முடிக்கப்பட்டிருக்கின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசைக் குறை கூறுபவர்களுக்கு அதன் நற்பணிகள் மறைந்து விடாது. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தனது பாடலில் கூறியுள்ளபடி,

"பொய்மை எப்போதும் ஓங்குவதும் இல்லை
உண்மை எப்போதும் தூங்குவதும் இல்லை."

என்பதை இங்கு நினைவுபடுத்தி, ஒரே ஒரு சிறிய கதையைச் சொல்லி நான் முடித்து விடுகிறேன். நான் நிறைய நேரம் எடுத்துக்கொள்ள மாட்டேன்.

பிற்பகல் 4–10

ஓர் ஊரில் ஒரு முனிவர் இருந்தார். ஒருநாள் அவரைப் பார்ப்பதற்காக ஒருவன் வந்தான். நான் ஒரு பாவி. என் பாவத்திற்கு மன்னிப்பு கிடைக்குமா என்று அவன் முனிவரிடம் கேட்டான். அவன்மீது இரக்கம் கொண்ட முனிவர் நீ என்ன பாவம் செய்தாய் என்று சொல், பிறகு மன்னிப்பைப் பற்றிப் பேசலாம் என்றார். நான் பிறரைப்பற்றி அவதூறு பேசினேன், பலகாலமாக இப்படி அவதூறு பேசிக் கொண்டிருக்கிறேன், எனக்கு மன்னிப்பு கிடைக்குமா என்று கேட்டான். உன் வீட்டில் தலையணை இருக்கிறதா என்று முனிவர் கேட்டார். பாவமன்னிப்பு தேடி வந்தவன் குழம்பிப் போனான்.

பாவ மன்னிப்பு கேட்டால், உன் வீட்டில் தலையணை இருக்கிறதா என்று கேட்கிறாரே முனிவர் என்று அவன் குழப்பமடைந்தான். 'வீட்டிலிருந்து தலையணை எடுத்து வந்து சாலையின் நடுவில் நின்றுகொண்டு தலையணையின் உள்ளே இருக்கும் பஞ்சையெல்லாம் நாலாப்பக்கங்களிலும் பறக்கவிடு. அதற்குப் பின்பு வா' என்றார் முனிவர். (குறுக்கீடு) மிகவும் careful ஆக கேட்கிறீர்கள் போலிருக்கிறது. (சிரிப்பு) மிகவும் duty bound. உங்களுடைய duty bound–ஐ நான் பாராட்டுகிறேன். அவர் கூறியபடி, வீட்டிற்குச் சென்று, தலையணை ஒன்றை எடுத்துவந்து, அதைக் கிழித்து உள்ளே இருந்த பஞ்சையெல்லாம் எடுத்து சாலையின் நடுவில் நின்று கொண்டு நாலாபக்கங்களிலும் பறக்க விட்டான். பின்பு முனிவரிடம் சென்றான். "சாமி, நீங்கள் சொன்னபடி நான் செய்துவிட்டேன். என் பாவத்திற்கு பரிகாரம் செய்துவிட்டேன். இப்போது மன்னிப்பார்களா" என்று கேட்டான். பஞ்சை பறக்கவிட்டால் பாவம் தீரும் என்று நான் எப்போது சொன்னேன். பறக்கவிட்ட பஞ்சையெல்லாம் மீண்டும் எடுத்து வா. அப்போதுதான் உன் பாவம் தீரும் என்று முனிவர் சொன்னார். பதறிப்போன அந்த மனிதன் நாலாப்பக்கங்களிலும் பறந்துபோன பஞ்சை நான் எப்படி சேகரிப்பது;அது எங்கே போய்விட்டது என்று நான் எப்படி கண்டுபிடிப்பேன். பறக்கவிடப்பட்ட பஞ்சை ஒன்று சேர்த்து வருவது என்பது எவராலும் இயலாது. "இது நடக்கிற காரியமா சாமி" என்றான். "பறக்க விடப்பட்ட பஞ்சை எப்படி மறுபடியும் சேகரிக்க முடியாதோ, அப்படித்தான் நீ பரப்பி இருக்கிறாயே அவதூறுகள், அவற்றையும் உன்னால் திரும்பப்பெற இயலாது. இதனால், உனக்கு பாவமன்னிப்பு என்றைக்கும் கிடைக்காது. நீ போகலாம்" என்று சொல்லி முனிவர் அவனை அனுப்பிவிட்டார். (மேசையைத் தட்டும் ஒலி) அதுபோல, நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின்மீது எப்போதும் அவதூறு பேசிக் கொண்டிருப்பவர்களுக்கு பாவமன்னிப்பு என்றைக்குமே கிடைக்காது. (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் இனி என்றைக்குமே ஆட்சிக்கு வரப்போவதில்லை. இது உறுதி. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீன் வளத் துறை சம்பந்தப்பட்ட அறிவிப்புகளை, நேரத்தின் அருமை கருதி, அவற்றின் தலைப்புகளை மட்டும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஒப்புதலோடு வாசிக்கின்றேன். ஏனையவற்றை நான் படித்ததாகக் கருதி அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அறிவிப்புகள்

மீன் வளத் துறை

1. கன்னியாகுமரி மாவட்டம், மிடாலம் மீனவக் கிராமத்தில் மீன் இறங்குதளம் 10 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

கன்னியாகுமரி மாவட்டம், மிடாலம் மீனவக் கிராமத்தின் கடற்கரை, கடல் அரிப்பினால் அதிக அளவு பாதிக்கப்பட்டுள்ளதால் மீனவர்களின் குடியிருப்புப் பகுதிகள் மற்றும் படகு நிறுத்தும் பகுதிகள் பெரிய அளவில் சேதம் அடைந்துள்ளன. கடல் அரிப்பினைத் தடுப்பதற்கும், 290–க்கும் அதிகமான படகுகளைப் பாதுகாப்பாக நிறுத்துவதற்கும் தூண்டில் வளைவுகள், மீன் ஏலக்கூடம், வலை பின்னும் கூடம் போன்ற வசதிகளுடன்கூடிய மீன் இறங்குதளம் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி 10 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த அறிவிப்பு குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆஸ்டின் அவர்கள் திருப்தியடைவார்கள் என்று நினைக்கிறேன்.

2. இராமநாதபுரம் மாவட்டம், ரோச்மாநகர் மற்றும் தங்கச்சிமடம் மீனவக் கிராமங்களில் கடலரிப்பினால் சேதமடைந்த மீன் இறங்குதளங்கள் 19 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்.

கடலரிப்பினால் பாதிக்கப்பட்டுள்ள இராமநாதபுரம் மாவட்டம், ரோச்மாநகர் மற்றும் தங்கச்சிமடம் கிராமங்களிலுள்ள மீன் இறங்குதளங்களை கடலரிப்பிலிருந்து பாதுகாத்திட நேர்கல் சுவர், அலைத் தடுப்பு சுவர், வலை பின்னும் கூடம், மீன் உலர்தளம் மற்றும் சாலை வசதிகள் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி 19 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும். இதன்மூலம் ரோச்மாநகர் மற்றும் தங்கச்சிமடம் மீனவக் கிராமங்களைச் சேர்ந்த படகுகளை மீனவர்கள் பாதுகாப்பாக நிறுத்திட இயலும். (மேசையைத் தட்டும் ஒலி)

3. இராமநாதபுரம் மாவட்டம், கீழமுந்தல் மீனவக் கிராமத்தில் 10 கோடி ரூபாய் செலவில் மீன் இறங்குதளம் அமைக்கப்படும்.

இராமநாதபுரம் மாவட்டம், கீழமுந்தல் மீனவக் கிராம

மீனவர்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, சுமார் 475 மீனவக் குடும்பங்கள் பயன்பெறும் வகையிலும், அவர்களது 125 மீன்பிடி படகுகளை பாதுகாப்பாக நிறுத்திட ஏதுவாக, படகு அணையும் தளம் மற்றும் மீன் ஏலக்கூடம் ஆகிய வசதிகளுடன்கூடிய மீன் இறங்குதளம் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி 10 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும். இவ்வசதிகளினால் மீனவர்கள் பிடிக்கும் மீன்களுக்கு கூடுதல் விலை பெறுவதோடு அவர்களது வாழ்க்கைத் தரமும் உயரும். (மேசையைத் தட்டும் ஒலி)

4. தூத்துக்குடி மாவட்டம், தருவைக்குளம் மீனவக் கிராமத்தில் உள்ள மீன் இறங்குதளத்திலுள்ள படகு அணையும் தளங்கள் 10 கோடி ரூபாய் செலவில் நீட்டிக்கப்படும்.

தூத்துக்குடி மாவட்டம், தருவைக்குளம் மீனவக் கிராமத்தில் ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ள மீன் இறங்குதளத்திலுள்ள படகு அணையும் தளங்களின் நீளம் பற்றாக்குறையின் காரணமாக இங்குள்ள மீன்பிடி படகுகள் ஒன்றன்பின் ஒன்றாக நிறுத்தப்படுவதால், கடல் அலை சீற்றம் அதிகமாக இருக்கும்போது ஒன்றோடொன்று மோதி சேதமடைகின்றன. இதனை தடுத்திடும் வகையில் மீன் இறங்குதளத்திலுள்ள படகு அணையும் தளங்கள் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி 10 கோடி ரூபாய் செலவில் நீட்டிக்கப்படும்.

5. நாகப்பட்டினம் மாவட்டம், சின்னமேடு மற்றும் கூழையார் மீனவக் கிராமங்களில் மீன் இறங்குதளங்கள் மற்றும் நேர்கல் சுவர்கள் 17 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

நாகப்பட்டினம் மாவட்டம், சின்னமேடு மற்றும் கூழையார் மீனவக் கிராமங்களில் சுமார் 350 குடும்பங்கள் வசிக்கின்றன. பருவமழை காலங்களில் இக்கிராமங்களில் கடலரிப்பு ஏற்பட்டு, கடல்நீர் இக்கிராமங்களில் உட்புகுந்துவிடுகிறது. மேலும், இக்கிராமங்களில் மீன் ஏலக்கூடமின்றி மீனவர்கள் சிரமத்திற்குள்ளாகின்றனர். இக்குறைகளை நீக்கி மீனவர்கள் பயன்பெறும் வகையில் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின்நல்லாசியுடன்மாண்புமிகுதமிழ்நாடுமுதலமைச்சர்

அவர்களின் ஆணையின்படி 17 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதியதாக சிறிய நேர்கல் சுவர்கள், மீன் ஏலக்கூடங்கள் மற்றும் அணுகு சாலை வசதிகள் ஏற்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

6. கடலூர் மாவட்டம், தாழங்குடா மீனவக் கிராமத்தில் மீன் இறங்குதளம் 15 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

கடலூர் மாவட்டம், தாழங்குடா மீனவக் கிராமத்தில் கடலரிப்பினால் மீனவர்களின் வீடுகள் மற்றும் படகு நிறுத்துமிடங்கள் பெருமளவில் சேதமடைந்துள்ளன. கடல் அரிப்பிலிருந்து இக்கிராமத்தினை பாதுகாக்கவும், மீனவர்கள் சிரமமின்றி கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லவும், பிடித்த மீன்களை சுகாதாரமான முறையில் கையாண்டு, நல்ல விலைக்கு விற்கவும், இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி 15 கோடி ரூபாய் செலவில் கடலரிப்புத் தடுப்புச் சுவர்களுடன்கூடிய மீன் இறங்குதளம், மீன் ஏலக்கூடங்கள் மற்றும் அணுகு சாலைகள் அமைக்கப்படும்.

7. கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் மீன்பிடித் துறைமுகத்தில் கூடுதலாக படகு அணையும் தளம் 16 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் மீன்பிடித் துறைமுகத்தை குளச்சல், சைமன் காலனி, கோடிமுனை, வாணியக்குடி, குறும்பனை, கொட்டில்பாடு, மண்டைக்காடு புதூர் மற்றும் சின்னவிளை மீனவக் கிராமங்களைச் சார்ந்த மீனவர்கள் பயன்படுத்தி வருகின்றனர். சுமார் 260 விசைப் படகுகளும், 1,850 நாட்டுப் படகுகளும் தங்கும் அளவிற்கு வடிவமைக்கப்பட்டுள்ள இத்துறைமுகத்தில் படகுகளின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகின்றன. எனவே, இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி 16 கோடி ரூபாய் செலவில் கூடுதல் படகு அணையும் தளம் அமைக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரின்ஸ், மகிழ்ச்சிதானே!

8. திருநெல்வேலி மாவட்டம், அருவிக்கரை மற்றும் நாகப்பட்டினம் மாவட்டம், வானகிரி மீனவக் கிராமங்களில் மீன் இறங்குதளங்கள் 18 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டத்திலுள்ள அருவிக்கரை மற்றும் நாகப்பட்டினம் மாவட்டம், வானகிரி மீனவக் கிராமங்களில் மீனவர்கள் படகுகளை நிறுத்துவதற்கும், மீன்களை

சுகாதாரமான முறையில் விற்பனை செய்வதற்கும் போதுமான வசதிகள் இல்லாமல் துயரத்திற்குள்ளாகின்றனர். இக்குறைகளை நீக்கி மீனவர்கள் பயன்பெறும் வகையில் மீனவர்களது படகுகளை பாதுகாப்பாக நிறுத்திட அலைத்தடுப்பு சுவர், மீன் ஏலக்கூடங்கள் மற்றும் படகு அணையும் தளங்கள் ஆகிய வசதிகளுடன் கூடிய மீன் இறங்குதளங்கள் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி 18 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

9. தஞ்சாவூர் மாவட்டம், கீழத்தோட்டம் மீனவக் கிராமத்தில் மீன் இறங்குதளம் 8 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், கீழத்தோட்டம் மீனவக் கிராமத்திலுள்ள மீனவர்கள் படகுகளைப் பாதுகாப்பாக நிறுத்துவதற்கும், மீன்களை சுகாதாரமான முறையில் கையாளுவதற்கும் ஏதுவாக இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி 8 கோடி ரூபாய் செலவில் வலை பின்னும் கூடம், மீன் ஏலக்கூடம் படகு அணையும் சுவர் மற்றும் சாலை வசதிகளுடன்கூடிய புதிய மீன் இறங்குதளம் அமைக்கப்படும்.

10. நாகப்பட்டினம் மீன்பிடித் துறைமுகம் மற்றும் திருவள்ளூர் மாவட்டம், சின்னமாங்கோடு, புதுக்குப்பம் ஆகிய மீன் இறங்குதளங்களில் 9 கோடியே 57 இலட்சம் ரூபாய் செலவில் கூடுதல் வசதிகள் ஏற்படுத்தப்படும்.

நாகப்பட்டினம் மீன்பிடித் துறைமுகத்திலுள்ள மீன் ஏலக்கூடங்கள் மீனவர்களின் பயன்பாட்டிற்குப் போதுமானதாக இல்லை. அதே போன்று, திருவள்ளூர் மாவட்டம் சின்னமாங்கோடு, புதுக்குப்பம் மீனவக் கிராமத்திலுள்ள படகு நிறுத்தும் பகுதி மற்றும் நுழைவுக் கால்வாய்கள் அதிக அளவில் தூர்ந்து உள்ளதாலும் மீனவர்கள் மிகுந்த சிரமப்படுகின்றனர். எனவே, இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி 9 கோடியே 57 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கண்ட இடங்களில் கூடுதல் மீன் ஏலக்கூடம், சாலை சீரமைப்பு, தெரு விளக்குகள் அமைத்தல் மற்றும் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

11. புதுக்கோட்டை மாவட்டம், கோட்டைப்பட்டினம், வடக்கு அம்மாபட்டினம் மற்றும் புதுக்குடி மீனவக் கிராமங்களில் மீன்பிடி உட்கட்டமைப்பு வசதிகள் 6 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள 32 மீனவக் கிராமங்களில் மீனவ மக்களின் வசதிக்காக தற்போது 6 இடங்களில் மீன் இறங்குதள வசதிகள் உள்ளன. அதிக அளவிலான மீனவர்கள் பயன்பெறும் வகையில், இம்மாவட்டத்தில் கோட்டைப்பட்டினம், வடக்கு அம்மாபட்டினம் மற்றும் புதுக்குடி ஆகிய இடங்களில் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி 6 கோடி ரூபாய் செலவில் கூடுதலாக மீன் ஏலக்கூடம், மீன் உலர்களம் மற்றும் கான்கிரீட் சாலை போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும்.

12. மேட்டூர் அணை, ஆத்தூர், வைகை அணை, மஞ்சளாறு அணை மற்றும் செம்பரம்பாக்கம் ஆகிய இடங்களிலுள்ள அரசு மீன் பண்ணைகளில் 13 கோடியே 71 இலட்சம் ரூபாய் செலவில் நவீன வசதிகள் உருவாக்கப்படும்.

மேட்டூர் மீன் பண்ணையில் நிரந்தர தண்ணீர் வசதிகள் ஏற்படுத்தி, கூடுதல் மீன்குஞ்சு வளர்ப்புத் தொட்டிகள் அமைத்திடவும், செங்கல்பட்டு மாவட்டம், ஆத்தூர் மீன் பண்ணையில் கூடுதல் மீன் வளர்ப்புக் குளங்கள் மற்றும் ஆய்வகத்துடன்கூடிய பயிற்சி மையம் அமைத்திடவும், தேனி மாவட்டம், வைகை மற்றும் மஞ்சளாறு மீன் பண்ணைகளில் கூடுதலாக மீன் வளர்ப்புக் குளங்கள் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டம், செம்பரம்பாக்கம் மீன் பண்ணையில் மீன் குஞ்சு வளர்ப்புக் குளங்களை மேம்படுத்தவும் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி 13 கோடியே 71 இலட்சம் ரூபாய் செலவில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

13. திருவள்ளூர் மாவட்டம், பூண்டி மற்றும் ஈரோடு மாவட்டம், பவானிசாகர் அரசு மீன் பண்ணைகளில் 4 கோடியே 77 இலட்சம் ரூபாய் செலவில் கூடுதல் மீன்குஞ்சு வளர்ப்புக் குளங்கள் கட்டப்படும்.

மீன்குஞ்சுகள் தேவையை அதிகரித்திடும் வகையில், திருவள்ளூர் மாவட்டம், பூண்டி மீன் பண்ணையில் புதிய மீன்குஞ்சு உற்பத்திக் குளங்கள் அமைத்திடவும், ஈரோடு மாவட்டம், பவானிசாகர்மீன் பண்ணையில் உள்ள சினைமீன் குளங்களைச் சீரமைத்து, அதிக அளவில் மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்து மீன் வளர்ப்போருக்கு வழங்கிட ஏதுவாக இதய தெய்வம்

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி 4 கோடியே 77 இலட்சம் ரூபாய் செலவில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

14. கடலூர், திருச்சி, மணமேல்குடி மற்றும் இராதாபுரம் ஆகிய இடங்களில் புதிய மீன் துறை அலுவலகக் கட்டடங்கள் 9 கோடியே 85 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும்.

கடலூரில் மீன் வளத் துறை, துணை இயக்குநர், உதவி இயக்குநர் மற்றும் உதவி செயற்பொறியாளர் அலுவலகங்கள், திருச்சியில் மீன் வளத் துறை துணை இயக்குநர், உதவி இயக்குநர் அலுவலகங்களுக்கு புதிதாக பயிற்சி மையங்களுடன்கூடிய ஒருங்கிணைந்த அலுவலகக் கட்டடங்களும், புதுக்கோட்டை மாவட்டம், மணமேல்குடியில் மீன் வளத் துறை ஆய்வாளர் அலுவலகம் மற்றும் திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரத்தில் உதவி இயக்குநர் அலுவலகங்களுக்கு பயிற்சி மையங்களுடன்கூடிய புதிய அலுவலகக் கட்டடங்களும் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி 9 கோடியே 85 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும்.

15. இராமநாதபுரம் மாவட்டம், ஆற்றங்கரை மீனவக் கிராமத்தில் மீன்களைக் கையாளும் வசதிகள் 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

இராமநாதபுரம் மாவட்டம், ஆற்றங்கரை மீனவக் கிராமத்தில் சுமார் 200 மீனவக் குடும்பங்கள் வசித்து வருகின்றன. மீனவர்கள் தாங்கள் பிடித்துவரும் மீன்களை கடற்கரைப் பகுதியில் சுகாதாரமான முறையில் கையாளவும், நல்ல விலைக்கு விற்பனை செய்திடவும் மற்றும் வலைகளை சீரமைப்பதற்கும் ஏதுவாக இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் மீனவர்களின் வாழ்வாதாரம் மேம்பட வலை பின்னும் கூடம் மற்றும் இதர கரையோர வசதிகள் ஏற்படுத்தப்படும்.

16. நாகப்பட்டினம் மாவட்டம், பழையார் மீன்பிடித் துறைமுகத்தில் படகு பழுதுபார்க்கும் தளம் மற்றும் கொடியம்பாளையம் கிராமத்தில் மீன் கையாளும் வசதிகள் 5 கோடியே 90 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

நாகப்பட்டினம் மாவட்டம், பழையார் மீன்பிடித் துறைமுகத்தில் மீன்பிடிப் படகுகளைப் பழுதுநீக்கம் செய்வதற்கான சாய்தள வசதிகள்

மற்றும் கொடியம்பாளையம் மீனவக் கிராமத்தில் மீன்களைக் கையாளத் தேவைப்படும் கரையோர வசதிகள் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி 5 கோடியே 90 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

பிற்பகல் 4–15

17. திருநெல்வேலி மாவட்டம், கூனியூர் அரசு மீன் பண்ணையில் புதிய மீன் குஞ்சு வளர்ப்புத் தொட்டிகள் 3 கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும்.

திருநெல்வேலி மாவட்டம், கூனியூர் அரசு மீன் பண்ணை 1956–ல் அமைக்கப்பட்டது. இந்த மீன் குஞ்சு வளர்ப்புப் பண்ணையினை புனரமைத்து, மீன் குஞ்சு உற்பத்தியினை அதிகரித்திட, அனைத்து வசதிகளுடன்கூடிய புதிய மீன் குஞ்சு வளர்ப்புத் தொட்டிகள் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி 3 கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும்.

18. மீனவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்திட 3 கோடியே 75 இலட்சம் ரூபாய் செலவில் ஆழ்கடல் மீன்பிடி விசைப்படகுகளுக்கு 500 செயற்கைக்கோள் தொலைபேசிகள் வழங்கப்படும்.

புயல் மற்றும் சீரற்ற வானிலையின்போது ஆழ்கடலில் மீன்பிடிக்கும் விசைப்படகுகளின் பாதுகாப்பினை உறுதி செய்திடும் பொருட்டும், மீனவர்கள் ஆபத்து காலங்களில் கரையில் உள்ளவர்களை தொடர்பு கொள்ளும் பொருட்டும், 75 விழுக்காடு மானியத்தில் 500 ஆழ்கடல் மீன்பிடி விசைப்படகுகளுக்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி 3 கோடியே 75 இலட்சம் ரூபாய் செலவில் செயற்கைக்கோள் தொலைபேசிகள் வழங்கப்படும்.

19. மீன்களை சுகாதாரமான முறையில் பதப்படுத்திட பனிக்கட்டி நொறுக்கும் இயந்திரங்கள் 10 மீன்பிடித் துறைமுகங்களில் 2 கோடி ரூபாய் செலவில் நிறுவப்படும்.

ஆழ்கடல் மீன்பிடிப் படகுகளில் மீன்களை சுகாதாரமான முறையில் பதப்படுத்திடத் தேவையான பனிக்கட்டிகள், துகள்களாக

உடைக்கப்பட்டு எடுத்துச் செல்லப்படுகிறது. போதிய பனிக்கட்டி நொறுக்கும் இயந்திரங்கள் இல்லாததால் மீனவர்கள் பிடிக்கும் மீன்களை முறையாக பதப்படுத்த இயலவில்லை. எனவே, தமிழகத்தில் உள்ள 10 மீன்பிடித் துறைமுகங்களில் 40 பனிக்கட்டி நொறுக்கும் இயந்திரங்கள் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி 2 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட மீன்பிடித் துறைமுக மேலாண்மைக் குழுவால் பராமரிக்கப்படும்.

20. மீன் வளத் துறை கடல் மீன்பிடி ஒழுங்குமுறை சட்ட அமலாக்கப் பிரிவிற்கு புதிய அலுவலகக் கட்டடங்கள், அறையணிகள் மற்றும் ரோந்துப் பணி கருவிகள் 3 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.

மீன் வளத் துறை கடல் மீன்பிடி ஒழுங்குமுறை சட்ட அமலாக்கத்திற்கென தனியே ஒரு பிரிவு 112 பதவிகளுடன் உருவாக்கப்பட்டு, சென்னையை தலைமையிடமாகக் கொண்டு 18 அலகுகளுடன் இயங்கிவருகிறது. முதற்கட்டமாக புதுக்கோட்டை, தஞ்சாவூர், இராமநாதபுரம் மற்றும் திருநெல்வேலி மாவட்ட அலகுகளுக்கு புதிய கட்டடங்களும் அனைத்து அமலாக்கப் பிரிவு அலகுகளுக்கும் ரோந்துப் பணிக்கான கருவிகள் மற்றும் அறையணிகள் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி 3 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.

21. பாரம்பரிய மீன்பிடிப் படகுகளை இயந்திரமயமாக்கும் திட்டத்தின்கீழ் 1,000 படகுகளுக்கு உட்பொருத்தும்/ வெளிப்பொருத்தும் இயந்திரங்கள் கொள்முதல் செய்திட 4 கோடியே 80 இலட்சம் ரூபாய் மானியம் வழங்கப்படும்.

சிறு படகுகளில் மீன்பிடிக்கும் பாரம்பரிய மீனவர்களின் மீன்பிடித் திறனை அதிகரித்திடவும், அவர்கள் சிரமமின்றி கடலில் அதிக தூரம் சென்று மீன்பிடித்திடவும், அவர்களின் வருவாயை அதிகரித்து, பொருளாதார ரீதியாக முன்னேற்றம் அடைந்திட ஏதுவாக 1,000 பாரம்பரிய மீன்பிடி படகுகளுக்கு அலகு ஒன்றிற்கு 40 விழுக்காடு அல்லது அதிகபட்சமாக 48,000 ரூபாய் மானியத்தில் வெளிப்பொருத்தும் அல்லது உட்பொருத்தும் இயந்திரங்கள்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி 4 கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

22. மாநிலத்தின் இறால் உற்பத்தியினை அதிகரித்திட 100 இறால் வளர்ப்புப் பண்ணைகளில் நாற்றங்கால்கள் அமைத்திட 2 கோடி ரூபாய் மானியமாக வழங்கப்படும்.

இறால் பண்ணைகளில், நாற்றங்காலில் இறால் குஞ்சுகள் வளர்க்கப்பட்டு, குளங்களில் இருப்புச் செய்வதன்மூலம் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரித்து, பிழைப்புத்திறன் கூடுவதால், உற்பத்தி அதிகரிக்கிறது. நாற்றங்கால் அமைக்க தேவையான 100 டன் கொள்ளளவுள்ள தொட்டிகள், காற்றுப் புகுத்திகள், மின் மோட்டார்கள் ஆகியவற்றிற்கு 40 விழுக்காடு மானியம் அதிகபட்சமாக அலகு ஒன்றிற்கு 2 இலட்சம் ரூபாய் வீதம் 100 அலகுகளுக்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி 2 கோடி ரூபாய் மானியமாக வழங்கப்படும்.

23. இராமநாதபுரம் மாவட்ட மீனவ மகளிர் பயனடையும் வகையில் கடற்பாசி வளர்ப்பிற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கடற்பாசி நாற்றங்கால்கள் 4 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் கடற்பாசி கையாளும் உட்கட்டமைப்பு வசதிகளான கடற்பாசி நாற்றங்கால்கள், கடற்பாசி உலர்த்தும் தளம், கடற்பாசி சாறு பிழியும் கருவிகள், சேமிப்புக் கிடங்கு, அலுவலக அறை மற்றும் கடற்பாசி மிதவை கட்டும் பணிக்கூடம் போன்ற வசதிகளுடன்கூடிய 5 அலகுகள் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி 4 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும். இந்த உட்கட்டமைப்பு வசதிகள் மீனவ மகளிர் தொய்வின்றி தொடர்ந்து கடற்பாசி வளர்ப்பு மேற்கொள்ளவும், அதிக வருவாய் ஈட்டிடவும் வழிவகுக்கும்.

24. தமிழ்நாட்டில் உள்நாட்டு மீன்வள உற்பத்தியினைப் பெருக்கிட புதிய வளர்ப்புப் பண்ணை அமைக்கவும், மீன் குஞ்சு வளர்ப்பிற்கான இடு பொருட்களுக்கும் 10 கோடியே 34 இலட்சம் ரூபாய் மானியம் வழங்கப்படும்.

தமிழ்நாட்டில் மீன் குஞ்சு உற்பத்தி மற்றும் மீன் வளர்ப்பினை அதிகரித்திட, 10 ஹெக்டேரில் மீன் குஞ்சு வளர்ப்பு, 50 ஹெக்டேரில்

மீன் வளர்ப்பு, 285 பண்ணைக் குட்டைகளில் மீன் வளர்ப்பு ஆகியவற்றிற்கும், கூண்டுகளில் மீன் வளர்ப்பு, மாவட்ட மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை மற்றும் ஊராட்சிக் குளங்களில் மீன் வளர்த்திடவும் உள்ளீட்டு மானியம் வழங்கப்படும். மேலும், 16 மாவட்டங்களில் 7,000 ஹெக்டேரில் உள்ள பாசன நீர்நிலைகளில் மீன் குஞ்சுகள் இருப்புச் செய்யப்படும். இத்திட்டங்கள் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி 10 கோடியே 34 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.

25. தஞ்சாவூர், விருதுநகர், கரூர் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் அமைந்துள்ள அரசு மீன் பண்ணைகளில் தீவிர முறையில் மீன் குஞ்சுகள் வளர்த்திட 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கூடுதல் வசதிகள் ஏற்படுத்தப்படும்.

தஞ்சாவூர் மாவட்டம் நெய்தலூர், விருதுநகர் மாவட்டம் பிளவக்கல், கரூர் மாவட்டம் திருக்காம்புலியூர் மற்றும் திருநெல்வேலி மாவட்டம் மணிமுத்தாறு அரசு மீன்குஞ்சு வளர்ப்புப் பண்ணைகளில், காற்றுபுகுத்தி மற்றும் நுண்ணுயிரிகளைப் பயன்படுத்தி மீன்குஞ்சுகளின் பிழைப்புத் திறனை அதிகப்படுத்தி, தரமான மீன்குஞ்சுகளை உற்பத்தி செய்திட மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கூடுதல் வசதிகள் ஏற்படுத்தப்படும். இதனால் ஆண்டிற்கு 200 இலட்சம் மீன்குஞ்சுகள் கூடுதலாக வளர்த்தெடுக்கப்படும்.

26. மீன் வளத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள நீர்த்தேக்கங்களின் மீன்பாசிக் குத்தகையில் உள்நாட்டு மீனவ கூட்டுறவுச் சங்கங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

மீன் வளத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள நீர்த்தேக்கங்களின் மீன் பாசிக் குத்தகை பொது ஏல முறையில் விடப்படுவதால், அதனை வாழ்வாதாரமாகக் கொண்டுள்ள உள்நாட்டு மீனவ கூட்டுறவுச் சங்கங்கள், பெரும் பாதிப்புக்கு உள்ளாவதாகவும், மீன் பாசிக் குத்தகையில் உள்நாட்டு மீனவக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்கிட வேண்டும் என்ற மீனவக்

கூட்டுறவு சங்கங்களின் கோரிக்கைகளை ஏற்று, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மீன் வளத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள நீர்த்தேக்கங்களின் மீன் பாசி குத்தகையில் உள்நாட்டு மீனவக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

27. இறால் மற்றும் சூரை மீன்களின் உள்நாட்டு விற்பனையை மேம்படுத்தும் நோக்கில் 30 இலட்சம் ரூபாய் மதிப்பில் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் மீன் விற்பனை நிலையங்களில் பிரத்தியேக வசதிகள் உருவாக்கப்படும்.

இறால் மற்றும் சூரை மீன் வகைகளின் விற்பனையை உள்ளூரில் மேம்படுத்திடும் பொருட்டு, இறால் மற்றும் சூரை மீன் வகைகளின் மதிப்புக் கூட்டு உணவுப் பொருட்களின் விற்பனைக்காக தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழக மீன் விற்பனை நிலையங்களில் பிரத்தியேக வசதிகள் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 30 இலட்சம் ரூபாய் மதிப்பில் உருவாக்கப்படும்.

28. இராமநாதபுரம் முதல் கன்னியாகுமரி வரையுள்ள கடலோரப் பகுதியில் மீன் பதனிடும் வசதிகள் அமைப்பதற்கான ஆய்வுகள் மேற்கொள்ளும் பணி 20 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.

ஆழ்கடல் மீன் வள ஆதாரங்களை உகந்த அளவில் பயன்படுத்திட ஏதுவாக, அரசு ஆழ்கடல் மீன் பிடிப் படகுகள் கட்டுவதற்கான திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இவ்வாறு, பிடிக்கப்படும் சூரை மற்றும் ஆழ்கடல் மீன்களுக்கு, மீனவர்கள் ஏற்றுமதிச் சந்தையில் கூடுதல் விலை பெற்றிட இராமநாதபுரம் முதல் கன்னியாகுமரி வரை மீன் பதனிடும் வசதிகள் ஏற்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்த ஆய்வுப் பணிகள் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 20 இலட்சம் ரூபாய் செலவில் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தால் மேற்கொள்ளப்படும்.

29. திருவள்ளூர் மாவட்டம், பெரியமாங்கோடு மற்றும் நாகப்பட்டினம் மாவட்டம், செருதூர் கிராமத்தில் டீசல் விற்பனை நிலையங்கள் ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

திருவள்ளூர் மாவட்டம், பெரியமாங்கோடு மீனவ கிராமத்திலுள்ள சுமார் 1000 இயந்திரமயமாக்கப்பட்ட பாரம்பரிய நாட்டுப் படகுகள் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டம், செருதூர் கிராமத்தில் இயக்கப்படும் 400 இயந்திரமயமாக்கப்பட்ட நாட்டுப் படகுகள், வரி விலக்களிக்கப்பட்ட டீசல் எரியெண்ணெயினைப் பெற்று பயன்பெறும் வகையில், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, ஒரு கோடி ரூபாய் செலவில் புதிய டீசல் விற்பனை நிலையங்கள் தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன் வளக் கூட்டுறவு இணைய நிதியிலிருந்து அமைக்கப்படும்.

30. மீன் பிடித் தடைக்காலங்களில் விசைப் படகுகளின் மராமத்து மற்றம் பராமரிப்புச் செலவினங்களுக்காக குறுகிய காலக்கடன் ஏற்பாடு செய்யப்படும்.

மீன் பிடித் தடைக்காலங்களில் விசைப் படகுகளின் பராமரிப்பு மற்றும் பழுது பார்ப்புப் பணிகள் மேற்கொள்வதற்காக, மீன்பிடிப் படகு உரிமையாளர்களுக்கான நிதித் தேவையினை கருத்தில் கொண்டு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மீன்பிடி விசைப்படகு ஒன்றிற்கு அதிகபட்சமாக ஒரு இலட்சம் ரூபாய் வரை குறுகிய காலக் கடன் ஏற்பாடு செய்யப்படும். இத்திட்டம் தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன் வளக் கூட்டுறவு இணையம்மூலம் செயல்படுத்தப்படும்.

31. தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தில் உறுப்பினர்களாக உள்ள மீனவ மகளிருக்கு வேலைவாய்ப்பினை உருவாக்கும்விதமாக திறன் மேம்பாட்டுப் பயிற்சி 20 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

மீனவ மகளிருக்கு அலுவலக மேலாண்மை, கைபேசி, கணினி மற்றும் மின் சாதனங்களை பழுது நீக்கும் பயிற்சிகள், மீன்பொருட்கள் மதிப்புக்கூட்டுப் பயிற்சி, இயற்கை உரங்கள், மூலிகை அழகுசாதனப் பொருட்கள் தயாரித்தல் மற்றும் மரச்செக்கு சமையல் எண்ணெய்கள் தயாரித்தல் ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்படும். இத்திட்டம், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 20 இலட்சம் ரூபாய் செலவில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு கழகத்துடன் இணைந்து செயல்படுத்தப்படும்.

32. பொது மக்களுக்கு மீன் உணவின் முக்கியத்துவத்தை உணர்த்தும் விதமாக சென்னையில் 50 இலட்சம் ரூபாய் செலவில் மீன் திருவிழா நடத்தப்படும்.

தரமான மீன்கள் மற்றும் மீன் உணவின் நன்மைகள் குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாகவும், மதிப்புக்கூட்டிய மீன் உணவுப் பொருட்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்திடவும், வேலைவாய்ப்பற்ற இளைஞர்களை சுயதொழில் செய்ய ஊக்கப்படுத்தும் வகையில், மீன் வளர்ப்புத் தொழில்நுட்பங்கள், அலங்கார மீன் வளர்ப்பு, மதிப்புக்கூட்டிய மீன் உணவுப் பொருட்கள் தயாரித்தல் மற்றும் விற்பனைத் தொழில்நுட்பங்கள் குறித்து காட்சிப்படுத்திடவும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 50 இலட்சம் ரூபாய் செலவில் சென்னையில் மீன் திருவிழா நடத்தப்படும்.

33. நாகப்பட்டினத்திலுள்ள மீன் வளப் பொறியியல் கல்லூரிக்கு கூடுதல் கட்டடங்கள் மற்றும் மாணவ, மாணவியர்களுக்கான விடுதி கட்டடம் 23 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டப்படும்.

நாகப்பட்டினத்திலுள்ள தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா மீன் வளப் பல்கலைக்கழகத்தின்கீழ் இயங்கிவரும் மீன் வளப் பொறியியல் கல்லூரியில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு விடுதிகள் மற்றும் கூடுதல் அலுவலகம் மற்றும் வகுப்பறைக் கட்டடங்கள் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 23 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டப்படும்.

34. தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா மீன் வளப் பல்கலைக்கழகத்தின் மூன்று வளாகங்களில் சுற்றுச்சுவர் 10 கோடியே 35 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும்.

தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா மீன் வளப் பல்கலைக்கழகத்தின் பல்வேறு மையங்கள் தமிழகம் முழுவதும் இயங்கி வருகின்றன. அவற்றுள், நாகப்பட்டினம் மற்றும் சென்னை மாதவரத்திலுள்ள பல்கலைக்கழக வளாகங்கள் மற்றும் கன்னியாகுமரி மாவட்டம், கணபதிபுரத்திலுள்ள வளங்குன்றா நீருயிரி வளர்ப்பு மையம் ஆகிய மூன்று வளாகங்களில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு

முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 10 கோடியே 35 இலட்சம் ரூபாய் செலவில் சுற்றுச்சுவர் கட்டப்படும்.

35. தூத்துக்குடி மீன் வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் மற்றும் பொன்னேரி டாக்டர் எம்.ஜி.ஆர். மீன் வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் ஆகியவற்றில் கூடுதலாக விடுதிகள் 12 கோடியே 35 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டப்படும்.

தூத்துக்குடி மீன் வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய விடுதிக் கட்டடம் தற்போது சிதைவடையும் நிலையில் உள்ளது. இக்கல்லூரியில் மாணவர்களின் தங்கும் வசதிகளை மேம்படுத்திடவும், பொன்னேரியிலுள்ள டாக்டர் எம்.ஜி.ஆர். மீன் வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய விடுதியில் கூடுதல் மாணவர்கள் தங்கும் வகையில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 12 கோடியே 35 இலட்சம் ரூபாய் மதிப்பில் புதிய விடுதிக் கட்டடங்கள் கட்டப்படும்.

36. சென்னை, மாதவரத்திலுள்ள மேம்படுத்தப்பட்ட ஆராய்ச்சிப் பண்ணையில் மீன் வளர்ப்பில் நீர் பயன்பாடு குறித்த பயிற்சி மற்றும் செயல்விளக்க அமைப்பு ஒரு கோடியே 87 இலட்சம் ரூபாய் மதிப்பில் அமைக்கப்படும்.

மீன் வளர்ப்போரிடம் பொறுப்பான நீர் பயன்பாட்டை ஊக்குவிக்கவும், பல்கலைக்கழகம் உருவாக்கிய தீவிர மீன் வளர்ப்பு முறையான நீர் மாற்றிடத் தேவையில்லா தொழில்நுட்பங்களை பண்ணையாளர்களிடம் கொண்டு சேர்க்கவும், சிறந்த நீர் பயன்பாடு குறித்த பயிற்சி மற்றும் செயல்விளக்க அமைப்பு அவசியமாகிறது. இத்திட்டமானது, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, ஒரு கோடியே 87 இலட்சம் ரூபாய் மதிப்பில் சென்னை மாதவரத்திலுள்ள மேம்படுத்தப்பட்ட ஆராய்ச்சிப் பண்ணையில் அமைக்கப்படும்.

37. காஞ்சிபுரம், கன்னியாகுமரி, திருவள்ளூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் 3 கோடி ரூபாய் மதிப்பில் மீன் வளர்ப்பு மற்றும் மீன் பதன தொழில்நுட்ப வர்த்தகக் காப்பகங்கள் (Incubation Centre) அமைக்கப்படும்.

தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா மீன் வளப் பல்கலைக்கழகத்தால் உருவாக்கப்பட்ட மீன் வளர்ப்பு மற்றும்

மதிப்புக்கூட்டிய மீன் பொருட்களை தயாரிக்கும் நவீன தொழில்நுட்பங்களை, தொழில் முனைவோர்கள் சிறந்த முறையில் பயன்படுத்திட ஏதுவாக, காஞ்சிபுரம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் நீர்வாழ் உயிரின வளர்ப்பு தொழில்நுட்பக் காப்பகங்களும், திருவள்ளூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் மீன் பதன தொழில்நுட்பக் காப்பகங்களும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

38. கிருஷ்ணகிரி மாவட்டம், பாரூரில் மீன் வளர்ப்பில் மறுசுழற்சி செய்யப்படும் நீரில் மண்ணில்லா முறையில் காய்கறி வளர்ப்புப் (Aquaponics) பூங்கா ஒரு கோடியே 98 இலட்சம் ரூபாய் மதிப்பில் அமைக்கப்படும்.

மீன் வளர்ப்புக் குளத்திலுள்ள ஊட்டச்சத்து நிறைந்த நீரை, மறுசுழற்சி செய்து காய்கறிகள் வளர்க்கும் தொழில்நுட்பம் உலகெங்கும் பயன்பாட்டில் உள்ளது. இத்தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, கிருஷ்ணகிரி மாவட்டம், பாரூரில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, ஒரு கோடியே 98 இலட்சம் ரூபாய் மதிப்பில் மீன் வளர்ப்பில் மறுசுழற்சி செய்யப்படும் நீரில் மண்ணில்லா முறையில் காய்கறி வளர்ப்புப் பூங்கா அமைக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறைக்கான அறிவிப்பை (குறுக்கீடு) நீங்கள் இந்த உலகத்திலேயே இல்லை என்று நினைக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஒப்புதலோடு பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறைக்கான சில அறிவிப்புகளை அறிவிக்கின்றேன்.

பிற்பகல் 4–20

பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை

1. தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின்கீழ் தகவல் கோரும் விண்ணப்பங்களை இணைய வழியில் சமர்ப்பிக்கும் வசதியை ஏற்படுத்துதல்.

தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின்கீழ் தகவல் கோரும் விண்ணப்பங்கள், பொது மக்கள் நேரிலோ அல்லது தபாலிலோ

அனுப்புகின்ற தற்போதைய நடைமுறையினை எளிமைப்படுத்தும் வகையில், தகவல் கோரும் விண்ணப்பங்களையும் முதலாம் மேல்முறையீட்டு மனுக்களையும் இணைய வழியில் சமர்ப்பிக்கும் வசதி இந்த நிதியாண்டிலிருந்து படிப்படியாக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ஏற்படுத்தப்படும்.

2. சிறப்பு பராமரிப்பு தேவைப்படும் குழந்தைகளைக் கொண்ட அரசு ஊழியர்களுக்கு சிறப்பு தற்செயல் விடுப்பு

சிறப்பு பராமரிப்பு தேவைப்படும் குழந்தைகளைக் (Special Children) கொண்ட அரசு ஊழியர்கள், அக்குழந்தைகளின் நலன்களை பராமரிக்க மேற்கொள்ளும் சிரமத்தைக் குறைக்கும் நோக்கோடு, அத்தகைய குழந்தைகளின் பெற்றோர்களான அரசு ஊழியர்களுக்கு ஆண்டுக்கு 6 நாட்கள் சிறப்பு தற்செயல் விடுப்பு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி வழங்கப்படும்.

3. ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககத்தில் மழலையர் காப்பகம் (Creche) அமைத்தல்.

சென்னையிலுள்ள ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககத்தில் பணிபுரியும் அமைச்சுப் பணியாளர்கள் மற்றும் காவல் துறை பணியாளர்கள் உள்ளிட்ட அனைத்துப் பணியாளர்களுடைய மழலையர்களை அலுவலகப் பணி நேரங்களில் கவனித்துக் கொள்ளும் வசதியை ஏற்படுத்துவதற்காக ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககத்தில் புதிதாக மழலையர் காப்பகம் (creche) ஒன்று ரூ.4.27 இலட்சம் செலவில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி அமைக்கப்படும்.

4. ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககத்திற்கு புதியதாக வாகனங்கள் வழங்கப்படும்.

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககத்தில் கழிவு செய்யப்பட்ட வாகனங்களுக்கு மாற்றாக ரூ.1.43 கோடி செலவில் புதியதாக 15 வாகனங்கள் வாங்குவதற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி நிதி ஒதுக்கப்படும்.

5. ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககத்திற்கு கணினிகள் மற்றும் அதன் துணை மின்னணுப் பொருட்கள் வழங்கப்படும்.

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககத்திற்கு கழிவு செய்யப்படும் நிலையிலுள்ள கணினிகள் மற்றும் அதன் துணை பொருட்களுக்கு மாற்றாக ரூ.1.84 கோடி செலவில் 195 கணினிகள் மற்றும் 50 சிறப்பு வகை அச்சுப்பொறிகள் (Multi–function Printers) 2 தரவுதள சேவையகங்கள் (Database servers) உள்ளிட்ட கருவிகள் வாங்குவதற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி நிதி ஒதுக்கப்படும்.

6. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தேர்வுகளை நடத்தும் வசதியை ஏற்படுத்துதல்.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் போட்டித் தேர்வுகளில் பாதுகாப்பு வசதியினை பலப்படுத்தும்பொருட்டு, விரல் ரேகைப் பதிவு (Bio–metric attendance), GPS, கண்காணிப்பு கேமரா (CCTV) மற்றும் Jammer போன்ற நவீன தொழில்நுட்ப வசதிகளை ஏற்படுத்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூ.5 கோடி நிதி வழங்கப்படும்.

7. அண்ணா மேலாண்மை நிலையத்தின் பயிற்சியாளர்களின் பயன்பாட்டிற்காக 6 சிற்றுந்துகள் வாங்குதல்.

சென்னையில் செயல்பட்டுவரும் அண்ணா மேலாண்மை நிலையத்திற்கு 3 சிற்றுந்துகளும், சேலம், திருச்சி மற்றும் மதுரை ஆகிய மண்டல அலுவலக பயன்பாட்டிற்கென 3 சிற்றுந்துகளும் வழங்கப்படும். இவ்வகையில் மொத்தம் 6 சிற்றுந்துகள் வாங்கிட தேவைப்படும் ரூ.1.02 கோடி செலவினம், மாநில பேரிடர் நிவாரண நிதியில் (State Disaster Response Fund) பயிற்சிக்கென ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி மேற்கொள்ளப்படும்.

8. அண்ணா மேலாண்மை நிலையத்திற்கு உயர் அழுத்த மின் இணைப்பு பெறுதல் மற்றும் 2 மின்னாக்கிகளைப் பெறுதல்

அண்ணா மேலாண்மை நிலைய வளாகத்தில் தற்போது 110 KVA திறனுடன் பயன்பாட்டில் இருந்துவரும் குறைந்தழுத்த மின் விநியோக அமைப்பை, இரண்டு 500 KVA திறன் கொண்ட மின்மாற்றிகளுடன் (Transformers) தரம் உயர்த்துவதற்கும், இரண்டு மின்னாக்கிகள் (Generators) நிறுவுவதற்கும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூ.3.57 கோடி நிதி அளிக்கப்படும்.

9. அண்ணா மேலாண்மை நிலையத்தில் பயிற்சியாளர் தங்கும் விடுதிகளை சீரமைத்தல்.

அண்ணா மேலாண்மை நிலையத்தில் பயிற்சியாளர்கள் தங்கி பயிற்சி பெறுவதற்காக 48 அறைகளைக் கொண்ட விடுதிக் கட்டடம் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூ.2 கோடி செலவில் சீரமைக்கப்படும்.

10. அண்ணா மேலாண்மை நிலையத்தில் கூடுதல் பணியாளர் குடியிருப்புகள் கட்டுதல்.

அண்ணா மேலாண்மை நிலையத்தில் தங்கி பயிற்சி பெறும் பயிற்சியாளர்களின் அத்தியாவசியத் தேவைகளை கவனிக்கும் பணியாளர்களுக்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூ.2 கோடி செலவில் நிலைய வளாகத்தில் உள்ள குடியிருப்புகள் சீரமைக்கப்படுவதுடன் கூடுதலாக புதிய குடியிருப்புகளும் கட்டப்படும்.

11. அண்ணா மேலாண்மை நிலையத்தில் உதவி மையம் அமைத்தல்.

அரசு அலுவலர்களுக்கு அலுவலக நடைமுறைகள் மற்றும் ஒழுங்கு நடவடிக்கை நடைமுறைகள் ஆகிய பொருண்மைகள் சார்ந்த விளக்கங்களையும் தெளிவுரைகளையும் உதவி மையம் (Help Desk) மூலம் வழங்கும் வசதி மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூ.16.40 இலட்சம் செலவில் அண்ணா மேலாண்மை நிலையத்தில் ஏற்படுத்தப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள், இரண்டு துறைகள் சம்பந்தமாக ஏறக்குறைய 167–க்கும் மேற்பட்ட வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கின்றார்கள். அந்த வெட்டுத் தீர்மானங்களைப் படித்துப் பார்த்தேன். அவற்றிற்கு உரிய நேரத்தில் உரிய நடவடிக்கை அரசால் நிச்சயமாக எடுக்கப்படும் என்ற உறுதியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் தாங்கள் அளித்த வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு அன்புடன் கேட்டுக்கொண்டு, அமர்கின்றேன், நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்கள்.

திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கம், மீன் வளத் துறைக்காக 2015 மார்ச் மாதம் 27 ஆம் தேதி சாகர்மாலா என்ற திட்டத்திற்கான ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. அதை தமிழக மீன் வளத் துறை ஏற்கின்றதா? அதில் இருக்கின்ற மீனவர்களுக்கான பல்வேறு பாதிப்புகளைத் தடுப்பதற்காக அரசு என்ன நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது? என்ற கேள்விகளை நான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. ராஜேஷ் குமார் அவர்கள் பேசியபோது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இல்லையென்று நினைக்கிறேன். அவருக்கு நான் ஏற்கெனவே அளித்த பதிலை இப்போது சொல்கிறேன். மீனவர்களானாலும் சரி, விவசாயிகளானாலும், நெசவாளர்களானாலும் சரி, அவர்களுக்கு எந்தவொரு பாதிப்பும் ஏற்படாத வகையில் அவர்களை முழுமையாகக் காப்பாற்றுகின்ற ஓர் அரசு நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு. குறிப்பாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தலைமையிலான அரசு, மீனவர்களுக்கான எந்தவொரு திட்டமும், மீனவர்கள் ஏற்றுக்கொள்கின்ற வகையில்

இருந்தால் மட்டுமே, அதற்கு ஆதரவு கொடுக்கும்; மீனவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லையென்றால் அதற்கு ஆதரவு கொடுக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிள்ளியூர் சட்டமன்றத் தொகுதியில், குறும்பனையிலிருந்து நீரோடிதுறை வரை 16 மீனவக் கிராமங்கள் இருக்கின்றன. இதற்கு இடைப்பட்ட பகுதியில் தேங்காய்பட்டணம் மீன்பிடித் துறைமுகம் அமைந்துள்ளது. அந்தத் துறைமுகத்தையொட்டி, தாமிரபரணி ஆறு பாய்கிறது. ஆகையால், தேங்காய்பட்டணம் துறைமுகத்தையும், பக்கத்தில் இருக்கின்ற 16 கிராமங்களையும் இணைக்கக்கூடிய வகையில், இரயுமன்துறைக்கும்–தேங்காய்பட்டணம் மீன்பிடித் துறைமுகத்திற்கும் இடையே ஓர் உயர்மட்டப் பாலம் அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விசைப் படகுகளுக்கு வழங்குவதைப்போல நாட்டுப் படகுகளுக்கும் கூடுதலாக மானிய விலையில் டீசல் வழங்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருந்தேன். அதை மீண்டும் நினைவுபடுத்துகின்றேன். அதேபோன்று, அரசு சார்பில் மீன் விற்பனை நிலையங்களை கடையநல்லூர் தொகுதியிலே கடையநல்லூர் மற்றும் செங்கோட்டை நகரங்களில் ஏற்படுத்தித் தர வேண்டும் என்ற கோரிக்கையையும் மீண்டும் நினைவுபடுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன் அவர்கள்.

திரு. தா. உதயசூரியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை மருந்தகம் இருக்கிறது. 3 ஊராட்சிகளுக்கு அல்லது 3,000 கால்நடைகள் இருக்கின்ற பகுதிகளில் கால்நடை கிளை நிலையங்களை உருவாக்கவும், தேவை என்று சொல்லப்படுகிற 1,500 உதவியாளர்களை நியமனம் செய்வதற்கும், சங்கராபுரம், சின்ன சேலம் ஆகிய வட்டங்களில் கால்நடை மருத்துவமனைகள் அமைத்துத்

தருவதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை உதவியாளர்கள் பணி நியமனத்தைப் பொறுத்தவரையில், அதுகுறித்த வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கிறது. இருந்தாலும்கூட, நீதிமன்றத்தை அணுகி, கூடிய விரைவில் நீதிமன்றத்தின் அனுமதியைப் பெற்று, அவர்களை நியமனம் செய்வதற்கு பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 4–25

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியவாறு, சங்கராபுரம் பகுதியிலே கால்நடைத் துறையின் இணை இயக்குநர்களை அனுப்பிவைத்து, ஆய்வு செய்து, தேவைப்படுமாயின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டுப் படகுகளுக்கு பொதுவாக மானிய விலையில் மண்ணெண்ணெய், டீசல் எல்லாம் வழங்கப்படுகின்றன. ஏறக்குறைய 3,400 லிட்டர் அவர்களுக்கு வழங்கப்படுகிறது. மண்ணெண்ணெய்யைப் பொறுத்தவரையில், ஒரு லிட்டர் மண்ணெண்ணெய் 25 ரூபாய் என்ற அளவில் மானிய விலையிலேதான் வழங்கப்படுகிறது. அதிலே எந்த மாற்றமும் கிடையாது. அதேபோல், கொம்புத்துறையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறீர்கள். கொம்புத்துறை என்பது ஒரு மீனவக் கிராமம். காயல்பட்டினம் என்பது அதற்குப் பக்கத்து கிராமம். கொம்புத்துறையிலே மேலாண்மைக் குழு அமைக்கும்போது நாம் கொம்புத்துறை மேலாண்மைக் குழு என்றுதான் அழைப்போமேயொழிய, காயல்பட்டினம் மேலாண்மைக்

குழு என்று அழைக்க முடியாது. மீனவக் கிராமங்களில், மேலாண்மைக் குழுக்கள் அமைக்கப்பட்டன. அந்த மீனவக் கிராமத்தின் பெயர் கொம்புத்துறை. எனவே, கொம்புத்துறை மேலாண்மைக் குழு என்றுதான் அது அழைக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண் 7—மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 7– மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை). வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

“மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.558,14,26,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.671,70,57,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்” என்னும் மாண்புமிகு மீன்வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) கோரிக்கை எண் 35—பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 35–பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

“பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.147,52,26,000/–, மூலதனக் கணக்கில் ரூ.42,19,10,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.50,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்” என்னும் மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)
மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

(இ) கோரிக்கை எண் 6—கால்நடை பராமரிப்பு(கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 6–கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை). வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,450,78,82,000/–, மூலதனக் கணக்கில் ரூ.227,23,12,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.25,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (18–3–2020), புதன்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 4–28 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

[2020 மார்ச் 17

5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

–ஏதுமில்லை–

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

129. மானியக் கோரிக்கை எண் 7 – மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2020–2021. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

130. மானியக் கோரிக்கை எண் 35–பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2020–2021. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

131. மானியக் கோரிக்கை எண் 6–கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2020–2021. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

132. நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2020–2021. (தமிழ்)

133. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2020–2021. (தமிழ்)

134. சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2020–2021. (தமிழ்)

....

இணைப்பு-I

(141 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 7-மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)

கொள்கை விளக்கக் குறிப்பு, 2020-2021

முன்னுரை

தமிழ்நாடு உற்பத்தித் திறன் மிக்க கடல், நன்னீர், மற்றும் உவர்நீர் மீன் வள ஆதாரங்களைக் கொண்டுள்ளது. இது மாநிலத்தின் மக்களுக்கு உணவு பாதுகாப்பு வழங்குவதுடன் 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட மீனவர்களின் வாழ்வாதாரமாகவும் விளங்குகின்றது. நாட்டின் பொருளாதாரம், சத்துணவு, ஊரக வேலைவாய்ப்பு மற்றும் ஏற்றுமதி வளர்ச்சிக்கு மீன் வளத் துறை முக்கிய பங்காற்றுகிறது.

தொடர்ந்து அதிகரித்துவரும் மீன் உற்பத்தி, மீன் வள ஆதாரங்களை சரியான அளவில் பயன்படுத்துதல், மீன் வளத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கான புதிய வளர்ச்சி மற்றும் நலத் திட்டங்களை செயல்படுத்துதல் ஆகியவற்றில் தமிழ்நாடு இந்தியாவின் முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது.

மறைந்த முன்னாள் முதலமைச்சர் டாக்டர் ஜெ ஜெயலலிதா அவர்களின் தொலைநோக்குப் பார்வையினை நிறைவேற்றும் விதமாக, தமிழக அரசு மீனவர் நலன் மற்றும் பாதுகாப்பினை உறுதி செய்தல் மற்றும் அவர்களின் நலன்களைக் காப்பதில் உறுதியாக உள்ளது. நமது பாரம்பரிய கடற்பகுதிகளில் மீன் பிடித்து வரும் மீனவர்களின் உயிர் மற்றும் உடைமைகளை பாதுகாப்பதற்கு தமிழக அரசு பல்வேறு துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

ஆழ்கடல் மீன் வள ஆதாரங்களை தகுந்த அளவில் பயன்படுத்திட அரசு ஆழ்கடல் மீன் பிடிப்பினை ஊக்குவித்து வருகிறது. கடலில் மீன் பிடிப்பில் ஈடுபடும் மீனவர்களின் பாதுகாப்பிற்காக அரசு கம்பியில்லா தொலைத்தொடர்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. தமிழ்நாடு கடல் மீன் பிடிப்பு ஒழுங்குபடுத்தும் சட்டம், 1983-ஐ சிறப்பாக செயல்படுத்திடவும், கடல் வளங்களைப் பாதுகாத்திடவும், அரசு கடல் வள சட்ட அமலாக்கப் பிரிவு ஒன்றினை புதிதாக உருவாக்கியுள்ளது.

[2020 மார்ச் 17

மீன் உற்பத்தி மற்றும் தரத்தினை அதிகரித்திட தேவையான உட்கட்டமைப்பு வசதிகளான மீன் பிடி துறைமுகங்கள், மீன் இறங்கு தளங்கள், சந்தைப்படுத்தும் வசதிகள் மற்றும் மீன் பதனிடும் பூங்காக்கள் போன்றவற்றை அரசு நிறுவி வருகிறது. மீன் பிடி படகுகள் கட்டுதல், பாரம்பரிய கலன்களை இயந்திரமயமாக்குதல், மீன் பிடி படகுகளுக்கு மானியத்துடன் கூடிய எரிபொருள் வழங்குதல் போன்ற திட்டங்களை தமிழக அரசு கடல் மீனவர்களின் நலனுக்காக செயல்படுத்தி வருகிறது. மாநிலத்தின் உள்நாட்டு மீன் உற்பத்தியினை பெருக்கும்பொருட்டு மீன் வளர்ப்பு, மீன் குஞ்சு உற்பத்தி, அரசு மற்றும் தனியார் துறைகளில் மீன் குஞ்சு வளர்ப்பு கட்டமைப்புகளை மேம்படுத்துதல் மற்றும் மீன் வளர்ப்பிற்குத் தேவையான மீன் குஞ்சுகள், தீவனம், மீன் பிடி உபகரணங்கள் ஆகிய உள்ளீட்டு பொருட்களுக்கு மானியம் வழங்குதல் போன்ற திட்டங்களை அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது. தீவிர மீன் வளர்ப்பு முறைகளான கூண்டுகளில் மீன் வளர்த்தல், நீர் மறுசுழற்சி மீன் வளர்ப்பு மற்றும் குறுகிய காலத்தில் வளரும் மீன் இனங்களை வளர்த்தல் போன்ற திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது. உவர்நீர் மீன் வளர்ப்பு, கடற்பாசி வளர்ப்பு போன்ற கடல்வாழ் உயிரின வளர்ப்பு தொழில்நுட்பங்களை மாநிலம் முழுவதும் விரிவுபடுத்திட அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

இந்தியா, 2017-2018 ஆம் ஆண்டில் உலகின் மொத்த மீன் உற்பத்தியில் மூன்றாவது இடமும், நீர்வாழ் உயிரின வளர்ப்பு உற்பத்தியில் இரண்டாவது இடமும் வகிக்கின்றது. கடந்த 2018-2019 ஆம் ஆண்டில், இந்தியாவின் மொத்த மீன் உற்பத்தி 13.42 மில்லியன் மெட்ரிக் டன் ஆகும். இந்தியாவின் வேளாண் பொருட்களின் ஏற்றுமதியில் மீன் மற்றும் மீன் பொருட்களின் பங்கு தொடர்ந்து அதிகரித்து வருகிறது. 2017-2018 ஆம் ஆண்டில் மீன் மற்றும் மீன் பொருட்களின் ஏற்றுமதி ரூ.46,589.37 கோடி மதிப்பில், 13.93 இலட்சம் டன்களாக அதிகரித்துள்ளது. இது நாட்டின் மொத்த ஏற்றுமதியில் 10 விழுக்காடும், வேளாண் பொருட்கள் ஏற்றுமதியில் 20 விழுக்காடும் ஆகும். நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மீன் வளத்தின் பங்கு 1 விழுக்காடும், வேளாண் பொருட்கள் உள்நாட்டு உற்பத்தியில் 5 விழுக்காடும் ஆகும்.

நாட்டின் மொத்த கடல் மீன் உற்பத்தியில், 2017-2018 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மூன்றாவது இடத்தினை வகிக்கிறது. 2018-2019 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் மொத்த மீன் உற்பத்தி 6.90 இலட்சம் டன் என மதிப்பிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு, 2018-2019 ஆம் ஆண்டில் 1.29 இலட்சம் டன் கடல் மீன் உணவுப்

2020 மார்ச் 17]

பொருட்களை ஏற்றுமதி செய்ததன்மூலம் ரூ.5,591.49 கோடி அந்நியச் செலவாணி ஈட்டப்பட்டுள்ளது.

மாநிலத்தில் உள்ள அனைத்து நீர்வள ஆதாரங்களிலிருந்து மீன் உற்பத்தியினை கணிசமான அளவிற்கு உயர்த்துவது அரசின் கொள்கையாகும். நவீன தொழில்நுட்பங்களையும், சிறந்த மேலாண்மை முறைகளையும் நிலைத்த மேம்பாட்டிற்கான குறிக்கோள்களுக்கு தகுந்தவாறு பயன்படுத்தி மீன் உற்பத்தியினை அதிகரித்திட அரசு கவனம் செலுத்தி வருகிறது.

2. மீன் வளக் கொள்கை

மீன் உற்பத்தியினைப் பெருக்குதல், மீனவர் மற்றும் மீன் வளர்ப்போரின் வருவாயினைப் பெருக்குதல் மற்றும் மீனவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்தல் ஆகியவை தமிழ்நாடு அரசு மீன் வளக் கொள்கைகளின் முக்கிய நோக்கங்களாகும்.

2.1 தொலைநோக்குப் பார்வை

“மீன் வள ஆதாரங்களை வளங்குன்றாவண்ணம் பேணுதல், பயன்படுத்துதல், மேலாண்மை செய்தல் மற்றும் பாதுகாப்பான மீன் பிடிப்பிற்கு வழிவகுத்தல்மூலம் தமிழ்நாட்டு மீனவர்களின் வளமை மற்றும் பாதுகாப்பினை உறுதிசெய்தல்''.

2.2 செயலாக்கம்

மாநிலத்தின் அனைத்து நீர்வளங்களை மேம்படுத்தி, மேலாண்மை செய்து, பாதுகாத்து, வளங்குன்றாமல் பயன்படுத்தி, மீனவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தி, வேலைவாய்ப்பினை அதிகரித்து, ஊட்டச்சத்து மிக்க உணவுப் பாதுகாப்பு, பொருளாதார வளர்ச்சி மற்றும் மீனவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்தல்.

2.3 முக்கிய கொள்கைகள்

மீன் வளம் சார்ந்த அரசின் முக்கிய கொள்கைகள் பின்வருமாறு:

1. தமிழ்நாடு மீனவர்களின் பாரம்பரிய மீன் பிடி உரிமைகளை நிலைநாட்டுதல் மற்றும் அவர்களின் நலன் பேணுதல்.

2. பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்துவதன் வாயிலாக மீனவர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துதல்.

[2020 மார்ச் 17

3. நன்னீர், உவர்நீர் மற்றும் கடல் வள ஆதாரங்களில் மீன் உற்பத்தியினைப் பெருக்குதல்.

4. அரசு மீன் பண்ணைகள், மீன் பிடி துறைமுகங்கள், மீன் இறங்கு தளங்கள், தொடர் குளிர்காப்பு, மதிப்பு கூட்டுதல் மற்றும் மீன் பிடிப்பிற்கு முன் மற்றும் பின் தேவைப்படும் வணிகரீதியிலான நடவடிக்கைகளை இணைத்திடுவதற்கான உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல் மற்றும் மேம்படுத்துதல்.

5. மீன் வளர்ப்பின்மூலம் ஊரகப் பகுதியில் கூடுதல் வேலைவாய்ப்பினை உருவாக்குதல்.

6. மீனவ மகளிர் குறிப்பாக மீனவ கைம்பெண்களுக்கு புதிய வாழ்வாதாரங்கள் ஏற்படுத்துதல்மூலம் மீனவ மகளிருக்கு அதிகார பகிர்வளித்தல்.

7. உள்நாட்டு மீன் தேவை மற்றும் உற்பத்தி ஆகியவற்றிற்கு இடையிலான இடைவெளியினைக் குறைத்தல்.

8. விலை மதிப்புமிக்க மீன்கள் மற்றும் மீன் உணவுப் பொருட்களின் ஏற்றுமதியினை விரிவுபடுத்துவதற்கான வாய்ப்பினை உருவாக்குதல்.

9. உரிய சட்டம் மற்றும் விதிகளை அமல்படுத்துவதன்மூலம் மீன் வள ஆதாரங்களைப் பாதுகாத்தல், மேலாண்மை செய்தல் மற்றும் மீன் வளங்களை அதிகரித்தல்.

10. மீனவர்கள் மற்றும் மீன் வளத் துறை அலுவலர்களுக்கு திறன் மேம்பாடு மற்றும் மனிதவள மேம்பாடு, ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்பப் பயன்பாட்டின்மூலம் மீன் வளத்தை மேம்படுத்துதல்.

11. தமிழ்நாட்டின் மீன் வள ஆதாரங்கள் மற்றும் அவற்றின் உற்பத்தித் திறனை மறு மதிப்பீடு செய்தல்.

12. மின் ஆளுமைமூலம் வெளிப்படைத் தன்மையுடன் திட்டங்கள் சென்றடைவதை உறுதி செய்தல்.

3. நிருவாக அமைப்பு


மீன் வளத் துறை இயக்குநர் துறையின் தலைவராக உள்ளார். மேலும், மீன் வளத் துறை இயக்குநர், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் மேலாண்மை இயக்குநராகவும், தமிழ்நாடு மாநிலத்

2020 மார்ச் 17]

தலைமை மீன் வள கூட்டுறவு இணையம் உள்பட அனைத்து மீனவ கூட்டுறவு சங்கங்களின் நடைமுறை சார்ந்த பதிவாளராகவும் மற்றும் தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தின் உறுப்பினர் செயலராகவும் உள்ளார்.

[2020 மார்ச் 17

படம்:1 மீன் வளத் துறை-நிருவாக அமைப்பு



2020 மார்ச் 17]

மீன் வளத் துறையின் மொத்தப் பணியாளர்கள் எண்ணிக்கை 1,797 ஆகும். பதவி வாரியாக பணியிடங்களின் விவரம் அட்டவணை 1-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

அட்டவணை: 1

பதவி வாரியாக அலுவலர்கள் விவரம்

வ. எண்	பதவியின் பெயர்	பணியிடங்கள் (ஒப்பளிக்கப்பட்டது + அயற்பணி)
1	மீன் துறை இயக்குநர்	1
2	மீன் துறை கூடுதல் இயக்குநர்	2+2
3	மீன் துறை இணை இயக்குநர்	4+1
4	மீன் துறை துணை இயக்குநர்	11+1
5	துணை இயக்குநர் (பணியாளர்)	1
6	துணை இயக்குநர் (பொறியியல்)	1
7	நிதி ஆலோசகர் மற்றும் தலைமை கணக்கு அலுவலர்	1
8	மீன் துறை உதவி இயக்குநர்/ மீன் துறை உதவி இயக்குநர் (இயந்திரவியல்)	49+7/ 1
9	நேர்முக உதவியாளர்	12
10	துணை பதிவாளர்	1
11	கணக்கு அலுவலர்	1
12	மீன் துறை ஆய்வாளர்	167
13	கூட்டுறவு சார் பதிவாளர்	16
14	கடல் முதல்வர்	13
15	மீன் துறை சார் ஆய்வாளர்	84
16	கூட்டுறவு முதுநிலை ஆய்வாளர்	27
17	மீன் வள உதவியாளர்	168

வ. எண்	பதவியின் பெயர்	பணியிடங்கள் (ஒப்பளிக்கப்பட்டது + அயற்பணி)
18	அமைச்சுப் பணி மற்றும் களப்பணியாளர்கள்	1,028
	மொத்தம்	**1,587**
	பொறியியல் பிரிவு	
1	தலைமைப் பொறியாளர்	1
2	செயற்பொறியாளர்	5
3	உதவி செயற்பொறியாளர்	13
4	உதவி பொறியாளர்	13
5	இளநிலை பொறியாளர்	17
6	முதுநிலை வரைவு அலுவலர்	1
7	வரைவு அலுவலர்	8
8	இளநிலை வரைவு அலுவலர்	4
9	கோட்ட கணக்கு அலுவலர்	4
10	தொழில்நுட்ப உதவியாளர்	23
11	அமைச்சுப்பணி மற்றும் இதர பணியாளர்கள்	9
	மொத்தம்	**98**
	கடல் வள சட்ட அமலாக்கப் பிரிவு	
1.	காவல் துறை கண்காணிப்பாளர்	1
2.	துணை காவல் கண்காணிப்பாளர்	1
3.	காவல் ஆய்வாளர்	10
4.	காவல் சார் ஆய்வாளர்	8

2020 மார்ச் 17]

வ. எண்	பதவியின் பெயர்	பணியிடங்கள் (ஒப்பளிக்கப்பட்டது + அயற்பணி)
5.	தலைமைக் காவலர்/காவலர்	53
6.	காவல் ஊர்தி ஓட்டுநர்	19
7.	கண்காணிப்பாளர்	1
8	உதவியாளர்	2
9.	முகாம் உதவியாளர்	17
	மொத்தம்	**112**
	மொத்தக் கூடுதல்	**1,797+11**

4. தமிழ்நாட்டின் மீன் வளம்-ஒரு கண்ணோட்டம்

தமிழ்நாடு 1,076 கி.மீ. நீளமுள்ள கடற்கரையினையும், 41,412 சதுர கி.மீ. கண்டத்திட்டையும், 1.9 இலட்சம் சதுர கி.மீ. பிரத்யேக பொருளாதார மண்டலத்தையும் தன்னகத்தே கொண்டுள்ளது. தமிழ்நாட்டின் கடல் மீன் உற்பத்தி 5.21 இலட்சம் டன்கள் ஆகும். இம்மீன் உற்பத்தி 10.48 இலட்சம் கடல் மீனவர்களின் வாழ்வாதாரத்திற்கு அடிப்படையாக உள்ளது. 5,806 மீன் பிடி விசைப்படகுகள் மற்றும் 41,652 நாட்டுப்படகுகள் மீன் பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ளன. தமிழ்நாட்டில் நீர்த்தேக்கங்கள், பெரிய, சிறிய மற்றும் குறுகிய பாசன குளங்கள், குட்டைகள், ஆறுகள், கழிமுகங்கள் மற்றும் பிற நீர்நிலைகள் உள்ளடக்கிய 3.83 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவுள்ள உள்நாட்டு நீர் நிலைகள் உள்ளன. சுமார் 56,000 ஹெக்டேர் உவர்நீர் பரப்பில் மீன் பிடிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 6,236 ஹெக்டேர் பரப்பில் கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு குறிப்பாக, இறால் வளர்ப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உள்நாட்டு மீன் வளம் 2.36 இலட்சம் உள்நாட்டு மீனவ மக்களின் வாழ்வாதாரமாக விளங்குகிறது.

4.1 கடல் மீன் வளம்

தமிழ்நாடு 13 கடலோர மாவட்டங்களை உள்ளடக்கி, 1,076 கி.மீ. நீளமுள்ள, இந்தியாவிலேயே இரண்டாவது நீண்ட கடற்கரையைக் கொண்டுள்ளது.

[2020 மார்ச் 17

கடல் மீன் வளம் குறித்த விவரங்கள் அட்டவணை-2-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை: 2

கடல் மீன் வளம் குறித்த புள்ளிவிவரங்கள்-2019-2020

கடற்கரை நீளம்	**1,076 கி.மீ.**
பிரத்யேக பொருளாதார மண்டலம், **(Exclusive Economic Zone-EEZ)**	**1.9 இலட்சம் ச.கி.மீ.**
கண்டத்திட்டு **(Continental shelf)**	**41,412 ச.கி.மீ.**
கடலோர மாவட்டங்கள்	**13**
மீனவ கிராமங்கள்	**608**
கடலோர மீனவ மக்கட்தொகை (உத்தேசமாக)	**10.48 இலட்சம் ***
இணையதளம்மூலம் பதிவு செய்யப்பட்ட மீன் பிடிக் கலன்கள் **29-2-2020** அன்றுள்ளவாறு	
1. மீன் பிடி விசைப்படகுகள்	**5,806**
2. நாட்டுப்படகுகள் (இயந்திரம் பொருத்தப்பட்டவை மற்றும் இயந்திரம் பொருத்தப்படாதவை)	**41,652 (36,645+5,007)**
உட்கட்டமைப்பு வசதிகள்	
பெரிய மீன் பிடி துறைமுகங்கள்	**9** (சென்னை, தூத்துக்குடி, நாகப்பட்டினம், சின்னமுட்டம், குளச்சல், மூக்கையூர், பூம்புகார், முட்டம் **(PPP)** மற்றும் தேங்காப்பட்டினம்)
நடுத்தர மீன் பிடி துறைமுகங்கள்	**3** (பழையாறு, மல்லிப்பட்டினம் மற்றும் கடலூர்)

2020 மார்ச் 17]

கட்டுமானத்தில் உள்ள மீன் பிடி துறைமுகங்கள்	3 (திருவொற்றியூர் குப்பம், வெள்ளப்பள்ளம் மற்றும் தரங்கம்பாடி)
மீன் இறங்கு தளங்கள்/படகு அணையும் தளங்கள்	43
மீன் இறங்கு மையங்கள்	243
கடல் மீன் உற்பத்தி (2018-2019) (உத்தேச மதிப்பீடு)	5.21 இலட்சம் டன் *
கடல் பொருள் ஏற்றுமதி (2018-2019)	1,28,845 மெட்ரிக் டன்** (மதிப்பு ரூ.5,591.49 கோடி)

ஆதாரம்:

* தமிழ்நாடு அரசு மீன் வளத் துறை

**கடல் பொருள் ஏற்றுமதி அபிவிருத்தி ஆணையம் (MPEDA)

4.2 உள்நாட்டு மீன் வளம்

தமிழ்நாட்டில் உள்நாட்டு நீர்வள ஆதாரங்களான, பெரிய நீர்த்தேக்கங்கள், பெரிய மற்றும் சிறிய பாசன குளங்கள், சிறிய ஏரிகள் மற்றும் குளங்கள் உள்ளிட்ட நீர்வள ஆதாரங்கள் மீன் பிடிப்பிற்காகவும், மீன் வளர்ப்பிற்காகவும் பயன்படுத்தப்படுகிறது. மாநிலத்திலுள்ள உள்நாட்டு மீன் வளம் குறித்த விவரங்கள் அட்டவணை 3-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

அட்டவணை: 3

உள்நாட்டு மீன் வள புள்ளிவிவரங்கள்-2019-2020

உள்நாட்டு மீன் வள ஆதாரங்கள்	3.83 இலட்சம் ஹெக்டேர்
நீர்த்தேக்கங்கள் (78*)	62,015 ஹெக்டேர்
பெரிய மற்றும் குறுகிய கால பாசன குளங்கள்	2,65,819 ஹெக்டேர்

உவர்நீர் பரப்பளவு	**56,000** ஹெக்டேர்
உள்நாட்டு மீனவ மக்கட்தொகை (உத்தேசமாக)	**2.36** இலட்சம் *
உள்நாட்டு மீன் வள கட்டமைப்புகள்	
மீன் குஞ்சு உற்பத்தி மையங்கள்	
i) அரசு மீன் பண்ணைகள்	**10**
ii) தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழக மீன் பண்ணைகள்	**01**
III) தனியார் மீன் பண்ணைகள்	**49**
மீன் குஞ்சு வளர்ப்பு மையங்கள்	
i) அரசு மீன் பண்ணைகள்	**37**
ii) தனியார் மீன் பண்ணைகள்	**233**
iii) தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழக மீன் பண்ணைகள்	**5**
உள்நாட்டு மீன் உற்பத்தி **(2018-2019)** (உத்தேசமாக)	**1.67** இலட்சம் டன்

* ஆதாரம்: தமிழ்நாடு அரசு மீன் வளத் துறை

4.3 கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு மற்றும் உவர்நீர் மீன் வளம்

கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு நமது மாநிலத்தின் நீர்வாழ் உயிரின வளர்ப்பின் உற்பத்தியில் முக்கிய பங்காற்றுகிறது. கழிமுகங்கள், உப்பங்கழிகள் மற்றும் சிற்றோடை வடிவிலான உவர்நீர்பரப்பு 56,000 ஹெக்டேர் பரப்பளவில் அமையப்பெற்றிருப்பது சிறப்பம்சமாகும்.

2020 மார்ச் 17]

கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணைய சட்டம், (Coastal Aquaculture Authority Act) 2005, விதிமுறைகள் மற்றும் வழிகாட்டுதல்களின்படி உவர்நீர் வாழ் மீன் வளர்ப்புப் பண்ணைகள் ஒழுங்குபடுத்தப்படுகின்றன. இதன்மூலம் நிலையான மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த இறால் வளர்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அந்தந்த கடலோர மாவட்ட அளவிலான குழு மற்றும் மாநில அளவிலான குழுவின் பரிந்துரையின்படி உவர்நீர் பண்ணைகளை பதிவு செய்யும் பணியை கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையம் மேற்கொள்கிறது.

‘பினேயஸ் வனாமி’ என்ற வெள்ளை இறால் பெருமளவில் வளர்க்கப்படுகிறது. அதற்கான பிரத்யேக அனுமதியினை மாவட்ட அளவிலான குழு மற்றும் மாநில அளவிலான குழு பரிந்துரையின்படி கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையம் வழங்குகிறது. 3,742 ஹெக்டேர் பரப்பளவில் அமைந்துள்ள 1,892 இறால் பண்ணைகள் கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையத்தின்மூலம் பதிவு செய்யப்பட்டுள்ளன. நமது மாநிலத்தில் இயங்கிவரும் 63 இறால் குஞ்சு பொரிப்பகங்கள் நம் மாநிலம் மற்றும் அண்டை மாநிலத்திற்கு தேவையான இறால் குஞ்சுகளை வழங்கி வருகின்றன.

தமிழக அரசு உவர்நீர் மீன் மற்றும் இறால் வளர்ப்பினை மேம்படுத்தும் நோக்கத்துடன் கடலூர், விழுப்புரம், தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை மற்றும் தூத்துக்குடி ஆகிய 6 மாவட்டங்களில் உவர்நீர் வளர்ப்பிற்கு உகந்த இடங்களை க்கண்டறிந்து வரைபடம் தயாரிக்கும் பணிகளை (Resource Mapping) ரூ.50 இலட்சம் செலவில் மேற்கொண்டுள்ளது. இத்திட்டம் மேம்படுத்தப்பட்ட புவியியல் தகவல் அமைப்பு மற்றும் தொலை உணர்வு போன்ற உயர் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி மீன் வளர்ப்பிற்கு உரிய உவர் நிலங்களைக் கண்டறிந்து அவற்றில் கடலோர மீன் வளர்ப்பினை மேற்கொள்ள வழிவகுக்கும்.

மேலும், தமிழக அரசு கடலோர மாவட்டங்களில் உவர்நீர் வாழ் உயிரின வளர்ப்புப் பூங்காக்களை உருவாக்குவதற்கான சாத்தியக்கூறுகளை ரூ.20 இலட்சம் செலவில் ஆய்வு செய்திட நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இந்த ஆய்வு உபயோகமற்ற, பயன்படுத்தப்படாத நிலையில் உள்ள நிலங்களில் உவர்நீர் மீன் உற்பத்தியை மேற்கொள்ளவும், இவற்றில் தொழில்முனைவோரை ஊக்கப்படுத்திடவும், ஈடுபடுத்திடவும் ஒரு சிறந்த வழிகாட்டுதலாக அமைகிறது.

சென்னை நீலாங்கரையில் மீன் வளத் துறைக்கு சொந்தமான இடத்தில் மத்திய கடல் பொருள் ஏற்றுமதி நிறுவனத்தின் ராஜீவ்காந்தி நீர்வாழ் உயிரின வளர்ப்பு மையத்தின்மூலம் நீரியல் நோய் தடுப்புக்காப்பு மையத்தினை (Aquatic Quarantine Facility) நிறுவியுள்ளது. இம்மையத்தின்மூலம் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் தாய் இறால்களில் நோய் தொற்று உள்ளது குறித்து ஆய்வு செய்யப்படும். இது இந்தியாவிலேயே அமையப்பெற்றுள்ள ஒரே நோய்த் தடுப்புக்காப்பு மையமாகும்.

தமிழகத்தில் அமைந்துள்ள மத்திய உவர்நீர் மீன் வளர்ப்பு மையம் (CIBA), ராஜீவ்காந்தி நீர்வாழ் உயிரின வளர்ப்பு மையம் (RGCA) மற்றும் மத்திய கடல் மீன் வள ஆராய்ச்சி மையம் (CMFRI) ஆகிய நிறுவனங்களின்மூலம் கடல்விரால் (Cobia), பாம்பனோ பாறை (Silver Pompano) மற்றும் கொடுவா (Sea bass) மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு, கடல் கூண்டுகள் மற்றும் உவர்நீர் குளங்களில் வளர்ப்பு செய்திட வழங்கப்பட்டு வருகின்றது.

4.3.1 கடல் மீன் வளர்ப்பு முறைகள்

தமிழக அரசு கடலோர மீனவர்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும்பொருட்டு கடல் மீன் வளர்ப்பு முறைகளான கடற்பாசி வளர்ப்பு, கூண்டுகளில் மீன் வளர்ப்பு மற்றும் சிப்பி வளர்ப்பு ஆகியவற்றினை ஊக்கப்படுத்தி வருகிறது. கடல் உயிரின வளர்ப்பு என்பது மீன் பிடிப்பிற்கு மாற்றாக, மீன் குஞ்சுகள் இருப்பு செய்து வளர்க்கும் முறையாகும்.

மேலும், தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா மீன் வள பல்கலைக்கழகம் மற்றும் மீன் வளத் துறையும் கடல் மீன் குஞ்சு வளர்ப்பு மையங்கள் அமைத்துள்ளன. இதன்மூலம் மீன் வளம் பாதுகாக்கப்படுவதுடன் மீன் உற்பத்தியும் மேம்படும்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் மீனவ மகளிரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு தேசிய மீன் வள மேம்பாட்டு வாரியம் மற்றும் மாநில அரசின் நிதி உதவியுடன் 510 மீனவ மகளிருக்கு 6,800 கடற்பாசி மிதவைகள் வழங்கப்பட்டுள்ளன. இராமநாதபுரம் மாவட்டம், மண்டபத்தில் கடற்பாசியிலிருந்து சாறு எடுக்கும் அலகு (Sap Extraction Unit) ரூ.3.96 கோடி செலவில் நிலைத்த வாழ்வாதாரத்திற்கான (FIMSUL II) திட்டத்தின்கீழ் நிறுவப்பட்டு, மீனவ மகளிரால் இலாபகரமாக நடத்தப்பட்டு வருகிறது.

2020 மார்ச் 17]

இந்திய அரசின் பரிசீலனையின்கீழ் உள்ள தேசிய கடல்வாழ் உயிரின வளர்ப்புக் கொள்கையின் அடிப்படையில் மாநிலத்தின் கடல்வாழ் உயிரின வளர்ப்பினை மேம்படுத்திட மாநில அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

தமிழக அரசு, சென்னையில் இந்திய வர்த்தக சபை (ICC) மற்றும் மத்திய உப்பு மற்றும் கடல் வேதியியல் பொருட்கள் ஆராய்ச்சி நிலையம் (CSMCRI) ஆகியவற்றுடன் இணைந்து, மூன்றாவது சர்வதேச அளவிலான கடற்பாசி கண்காட்சி மற்றும் கருத்தரங்கு 2020-ஐ ஜனவரி திங்கள் 30 மற்றும் 31 ஆகிய தேதிகளில் நடத்தியது. இந்த கருத்தரங்கானது கடற்பாசி மற்றும் அதனைச் சார்ந்த தொழில்களை நம் மாநிலத்திற்கு கொண்டுவரும் நோக்கத்துடன் நடத்தப்பட்டது. இக்கருத்தரங்கில் கடற்பாசி வளர்ப்பு மற்றும் அதன் தொடர்புடைய தொழிலில் ஈடுபட்டுள்ள 8 தேசிய மற்றும் சர்வதேச அளவிலான தனியார் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டது.

புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்மூலம் கடற்பாசியை சந்தைப்படுத்துதல், தனியார் தொழில் முனைவோரின்மூலம் மதிப்புக் கூட்டப்பட்ட கடற்பாசி பொருட்களின் உற்பத்தியினை பெருக்குதல் மற்றும் கடலோர மீனவர்களுக்கான வாழ்வாதாரத்தினை மேம்படுத்திட இவ்வொப்பந்தங்கள் வழிவகை செய்யும்.

4.3.2. கூண்டுகளில் மீன் வளர்ப்பு

கடல் கூண்டுகளில் மீன் வளர்ப்பதன்மூலம் விலை மதிப்புமிக்க கடல் மீன்கள் மற்றும் ஓட்டுடலிகளின் உற்பத்தியினை அதிகரிக்க இயலும். கடலோர மீன் பிடிப்பின் அழுத்தத்தினைக் குறைக்கும்பொருட்டு தமிழக அரசு பல முன்னோடி மற்றும் தனித்துவம் வாய்ந்த திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அவற்றுள், கடல் கூண்டுகளில் மீன் வளர்த்தல் போன்ற சிறந்த தொழில்நுட்பத்தின்மூலம் கடலில் அமைக்கப்பட்ட கூண்டுகளில் மீன்களை இருப்புச் செய்து வளர்த்து, உற்பத்தியினைப் பெருக்கிட வழிவகை செய்கிறது. மேலும், இத்தொழில்நுட்பம் மீனவ இளைஞர்களுக்கு சிறந்த சுயதொழில் வாய்ப்பாகவும் அமைகிறது. கடல் கூண்டுகளின்மூலம் மீன் வளர்க்கும் இத்திட்டம் நிலைத்த வாழ்வாதாரத்திற்கான மீன் வள மேலாண்மைத் திட்டம்-II-ன்மூலம் காஞ்சிபுரம், புதுக்கோட்டை, தூத்துக்குடி, இராமநாதபுரம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கடல் கூண்டுகளில் மீன் வளர்ப்பானது குறைந்த செலவில் இயற்கை வளங்களை சிறப்பாகப் பயன்படுத்தி மீன் உற்பத்தியினைப் பெருக்கிட வழிவகை செய்கிறது. நமது மாநிலத்தில் முதன்முறையாக கடல் மீன் குஞ்சு பொரிப்பகம் இராமநாதபுரம் மாவட்டம், மண்டபத்தில் நிறுவப்பட்டுள்ளது. இதில் உற்பத்தி செய்யப்படும் மீன்கள் கடல் கூண்டுகளில் இருப்பு செய்யப்பட்டு வளர்க்கப்படுகிறது.

4.3.3. நீர்வாழ் உயிரின வளர்ப்பில் நுண்ணுயிர்க் கொல்லிகள் (Antibiotics) பயன்பாட்டினைக் கட்டுப்படுத்துதல்

உவர்நீர் பண்ணைகளில் வளர்க்கப்படும் இறால் மீன்கள், கடல் உணவுப் பொருள் ஏற்றுமதியில் மிகப் பெரிய அளவில் அந்நிய செலாவணியை ஈட்டித் தருகிறது. இறால் வளர்ப்பில் தடை செய்யப்பட்ட வேதிப்பொருட்கள் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துகள் பயன்படுத்துவதால் நம் நாட்டின் இறால் ஏற்றுமதியினை நிராகரிக்கும் நிலை ஏற்படுகிறது. இப்பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் மாநிலத்தில் அனைத்து கடலோர மாவட்டங்களில் இருந்து 300 இறால் வளர்ப்போருக்கு விழிப்புணர்வுப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு பயிற்சி பெற்றவர்கள் அந்தந்த பகுதியில் உள்ள பிற இறால் வளர்ப்போருக்கு இவ்விழிப்புணர்வை பரப்புவதற்கு முதன்மைப் பயிற்சியாளராக திகழ்கிறார்கள்.

தடை செய்யப்பட்ட நோய்த்தடுப்பு மருந்துகள் பயன்படுத்துவதால் ஏற்படும் பிரச்சினைகள் குறித்த விழிப்புணர்வு முகாம்கள் ஏற்றுமதி ஆய்வு நிறுவனம் (EIA), கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையம் (CAA), கடல் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் (MPEDA) போன்ற நிறுவனங்களின் தொழில்நுட்ப வல்லுநர்கள்மூலம் வழங்கப்படுகிறது. இந்த விழிப்புணர்வு பயிற்சி முகாம்கள் ஒவ்வோர் ஆண்டும் தொடர்ந்து நடத்தப்படும்.

5. நீடித்த நிலைத்த வளர்ச்சிக்கான இலக்குகள்

நீடித்த வளர்ச்சி இலக்குகள், ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பு நாடுகளால் ஒப்புக்கொள்ளப்பட்ட உறுதிப்பாடாகும். இது ‘எவரும் விடுபடாவண்ணம் வளர்ச்சி’ என்னும் குறிக்கோளுடன் பூமியிலுள்ள அனைத்து உயிர்களுக்கும் சமமான வாழ்க்கை வாய்ப்பை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. 2030 ஆம் ஆண்டில் மத்திய அரசின் கொள்கைகளுக்கு இணங்க 17 நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைவதற்குத் தேவையான நடவடிக்கை எடுப்பதில் தமிழக அரசு தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

2020 மார்ச் 17]

மீன் வளத்தைப் பெருக்குவதற்கான நடவடிக்கைகள்

மீன் வளத் துறை நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கு தீவிரமாக செயல்படுகிறது. மீன் பிடித்தலில் அதிகபட்ச நிலையான நீடித்த மீன் உற்பத்தியினை அடைவதற்கும் (MSY), பாரம்பரிய மீனவர்கள் கடல் மீன் வள ஆதாரங்களைப் பயன்படுத்தவும் மற்றும் சந்தைப்படுத்தவும் வழிவகை செய்தல், பெருங்கடல் மற்றும் அதன் ஆதாரங்களின் பாதுகாப்பினை மேம்படுத்தி நீடித்த வளங்குன்றா பயன்பாட்டினை உறுதி செய்தல், பொறுப்பார்ந்த மீன் பிடிப்பு முறையினை கடைப்பிடித்தல், தமிழ்நாடு கடல் மீன் பிடி ஒழுங்குமுறை சட்டத்தினை செயல்படுத்தல், ஆழ்கடல் மீன் பிடிப்பிற்கு ஏற்றவாறு இழுவலைப் படகுகளை மாற்றுதல், மீன் பிடி தடைக்காலத்தை செயல்படுத்துதல், செயற்கை மீன் உறைவிடங்களை அமைத்தல் மற்றும் மீன் குஞ்சுகளை வளர்த்து கடலில் இருப்பு செய்தல், சுகாதாரமான மீன் வணிகத்திற்கான தொடர் குளிர்காப்பு வசதிகளை மேம்படுத்துதல், நிலைத்த மீன் பிடி முறைகளுக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளை அளித்தல், விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும் மீன் பிடி குறைந்த காலத்தில் கடல் மீனவக் குடும்பங்களுக்கு சிறப்பு நிவாரண உதவித் தொகை வழங்குதல் போன்ற திட்டங்களின்மூலம் 'நிலைத்த வளர்ச்சிக்கான இலக்குகள்-14 (கடல் வளங்கள்)' செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இலக்கு 1.1: 2030-க்குள், அனைத்து இடங்களிலும் உள்ள அனைத்து மக்களின் வறுமையை ஒழிப்பதற்கான திட்டங்கள்

கடல் மீன் வளங்களைப் பாதுகாக்க மீன் பிடி தடைக்காலத்தை அமல்படுத்தும் போது, கடல் மீனவக் குடும்பங்களுக்கு மீன் பிடி தடைக்கால நிவாரணம் வழங்குதல் மற்றும் மீன் பிடி குறைந்த காலத்தில் கடல் மீனவக் குடும்பங்களுக்கு நிவாரண உதவி வழங்குதல்.

இலக்கு 2.3: 2030 ஆம் ஆண்டில் இவ்விலக்கினை அடைய, வேளாண் உற்பத்தி மற்றும் சிறு உணவு உற்பத்தியாளர்களின் வருவாயை இரட்டிப்பாக்குதல்

இத்திட்டத்தின்கீழ் மீனவர்களுக்கு விற்பனை வரி விலக்களிக்கப்பட்ட அதிவேக டீசல் எரி எண்ணெய் அரசால் வழங்கப்படுகிறது.

[2020 மார்ச் 17

இலக்கு 13.1: பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் தீங்குகளை தாங்கும் சக்தியும் அதற்கேற்ப மாற்றிக்கொள்ளும் சக்தியைப் பெறுதல்

இவ்விலக்கினை அடைய உலக வங்கி நிதியளித்த கடலோர பேரிடர் அபாயக் குறைப்புத் திட்டம், நிலைத்த வாழ்வாதாரத்திற்கான மீன் வள மேலாண்மைத் திட்டம்மூலம் 63 வகையான சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றம், மீனவர்களின் பாதுகாப்பிற்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் மற்றும் மாற்று வாழ்வாதாரத்திற்கான கடற்பாசி வளர்ப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இலக்கு 14.2: கடல் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் நிலைத்த மேலாண்மை

2020 ஆம் ஆண்டிற்குள் நிலையான மேலாண்மை மற்றும் கடலோர பகுதியின் கடல் பாதுகாப்பு சூழலியலமைப்பை உறுதிப்படுத்தும்பொருட்டு, மீன் பிடிக் கலன்களை இணையத்தில் பதிவு செய்யும் திட்டம் தமிழக அரசால் அறிமுகம் செய்யப்பட்டு தற்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், மத்திய அரசால் கடல் மீனவர்களுக்கு பயோ மெட்ரிக் அடையாள அட்டைகளை வழங்கும் திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இலக்கு 14.4: 2020 ஆம் ஆண்டில் இவ்விலக்கினை அடைய, அதிகப்படியான மீன் பிடித்தல், சட்ட விரோத, தகவல் இல்லாத, முறைப்படுத்தப்படாத மீன் பிடித்தல் போன்றவற்றை முடிவுக்குக் கொண்டுவருதல்

இலக்கு 14.4.1: கடல் மீன் உற்பத்தி

தமிழக அரசின் கடல் மீன் பிடி ஒழுங்குமுறைச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதன்மூலம் இரட்டை இழுவை முறையில் மீன் பிடித்தல் மற்றும் பிற தடை செய்யப்பட்ட வலைகள்மூலம் ஏற்படும் அழிவைத் தடுத்தல்.

மேலும், மீன் வளத் துறை, இவ்விலக்குகளை அடைவதற்கு சில உத்திகளை வகுத்துள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:

அ) மீன் வள ஆதாரங்களை உயர் தொழில்நுட்பங்கள்மூலம் பாதுகாத்தல், ஆ) செயற்கை மீன் உறைவிடங்கள் அமைத்தல், இ) மீன் குஞ்சுகளை வளர்த்து கடலில் விடுதல், ஈ) மீன் பிடிப்பு

2020 மார்ச் 17]

தொழிலை பன்முகத்தன்மை ஆக்குதல், உ) மீன் பிடித்தலுக்கான அழுத்தத்தைக் குறைக்க மீனவர்களுக்கு மாற்று வாழ்வாதார பயிற்சி அளித்தல் மற்றும் ஊ) மீன் வள மேலாண்மையை பங்களிப்பாளர் அணுகுமுறைமூலம் மீன் வளத்தை மேம்படுத்துதல்.

இலக்கு 14.ஆ. பாரம்பரிய மீனவர்கள் கடல்சார் வளங்களையும், சந்தைகளையும் பயன்படுத்த வழிவகை செய்தல்

உள்நாட்டு மீன் வளம், மீன் வளர்ப்புக் குளங்களை உருவாக்குதல் மற்றும் புதுப்பித்தல், மீன் குஞ்சு பொரிப்பகங்களை நிறுவுதல், தேசிய மீன் வள மேம்பாட்டு வாரியம் மற்றும் மாநில அரசின் நிதி உதவியுடன் 19 மீன் அங்காடிகள் கட்டுதல் மற்றும் நவீனப்படுத்துதல், கண்ணாடி நாரிழை மீன் பிடிப் படகுகள் மானியத்துடன் வழங்கும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளை அடைய அரசாணை நிலை எண் 184, கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன் வளத் (த(ம)ஒ-2) துறை, நாள் 26-12-2019-ன்படி, தனிப் பிரிவு இத்துறையால் அமைக்கப்பட்டுள்ளது. இப்பிரிவு, திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையின்கீழ் செயல்பட்டுவரும் நீடித்த வளர்ச்சி இலக்குகள் பிரிவு, பணிக் குழுக்கள், மாநிலம், மாவட்டம், கள அலுவலர் மற்றும் நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்காக பல நிறுவனங்களுடன் இணைந்து செயல்படும்.

பல்வேறு துறைகளின் திட்டங்களை செயல்படுத்துவதன்மூலம் நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கு இத்துறை தொடர் முயற்சியை மேற்கொண்டுள்ளது.

6. நிலைத்த வளர்ச்சிக்கான முக்கிய இலக்குகள்

மீன் வளத்தின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கான முக்கிய இலக்குகள் முனைப்புடன் திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின் நோக்கமானது அனைத்து நீர் நிலைகளையும் மீன் வளர்ப்பிற்கு பயன்படுத்துவதன்மூலம் உள்நாட்டு மீன் உற்பத்தியை அதிகரித்தல், கடல் வள ஆதாரங்களை உகந்த அளவில் பயன்படுத்துதல், மீன்களை சுகாதாரமாக கையாளுவதற்கான குளிர்காப்பு உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல், திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள்மூலம் மாற்று வாழ்வாதார வாய்ப்புகளை வழங்குதல், உவர்நீர், நீர்வாழ் உயிரின வளர்ப்பு நடவடிக்கைகளை

[2020 மார்ச் 17

ஒழுங்குபடுத்துதல், பேரிடர் காலங்களில் மீனவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்தல், நீடித்த மீன் வள மேம்பாடுமூலம் மீனவர்கள் மற்றும் மீன் வளர்ப்போர் ஆகியோரின் வருவாயை உயர்த்துதல் போன்றவற்றை குறுகிய கால இலக்குகள்மூலம் அடைதல் ஆகும்.

மீன் வளத் துறையின் முக்கிய இலக்குகள் கீழ்க்கண்டவாறு:

1. 2024-2025 ஆம் ஆண்டு வரை ஆண்டுதோறும் உள்நாட்டு மீன் உற்பத்தியை 2 விழுக்காடு அதிகரித்தல்.

2. உவர்நீர் மீன் உற்பத்தியை ஆண்டுதோறும் 4 விழுக்காடு அதிகரித்தல்.

3. தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதன் மூலம் உள்நாட்டுச் சந்தையில் தரமான மீன்கள் கிடைப்பதை உறுதி செய்தல்.

4. ஆழ்கடல் மீன் பிடிப்பில் ஈடுபட்டுள்ள மீனவர்களது வருவாயை இரு மடங்காக உயர்த்துதல்.

5. 2021-2022 ஆம் ஆண்டில் மீன் மற்றும் மீன் உணவுப் பொருட்களின் ஏற்றுமதியை 2 விழுக்காடு மற்றும் அதன் மதிப்பினை 1.5 விழுக்காடு உயர்த்துதல்

6. மீன் உற்பத்தியாகும் இடத்தைக் கண்டறிந்திட மீன் வளர்ப்பிற்கான அனைத்து இடுபொருட்களையும் முறைப்படுத்துதல்.

7. மீன் பிடி கலன்களை மேற்பார்வை செய்தல், கட்டுப்படுத்துதல் மற்றும் கண்காணித்தல் போன்ற பணிக்கான வழிமுறைகளை உருவாக்குதல்.

8. மீனவர்கள் மற்றும் மீனவ மகளிர் கூடுதல் வருவாயைப் பெற்றிட ஏதுவாக மாற்று வாழ்வாதார நடவடிக்கைகளை ஊக்குவித்தல்.

9. மீன் வளத்தில் நிலைத்த வளர்ச்சிக்கான கொள்கைகளை உருவாக்குதல்.

10. மீனவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்திட பேரிடர் மேலாண்மை மையங்களை நிறுவுதல்.

11. கூடுதல் வருவாயைப் பெற்றிட ஏதுவாக கூட்டுப் பண்ணை முறைகள் மற்றும் மீன் வளர்ப்போர் கூட்டமைப்புகளை உருவாக்குதல்.

2020 மார்ச் 17]

12. மீன் வளத்தில் திறன் மேம்பாடு அதிகரிக்கச் செய்தல் மற்றும் தொழில் முனைவோரை உருவாக்குதல்.

13. மீனவர்களுக்கு சிறந்த சேவையளித்தல் மற்றும் மானிய உதவிகளை வெளிப்படைத் தன்மையுடன் வழங்குதல்.

7. துறையின் முக்கிய செயல்பாடுகள்

மீன் வளத் துறையின் முக்கிய செயல்பாடுகள் பின்வருமாறு:-

i. பல்வேறு மீனவர் சமூக நலத் திட்டங்களை செயல்படுத்துதல்.

ii. சட்டம் மற்றும் விதிகளை அமல்படுத்தி மீன் பிடிப்பினை ஒழுங்குபடுத்துதல்.

iii. மீன் வள ஆதாரங்களைப் பாதுகாத்து மேலாண்மை செய்தல்.

iv. இயற்கை பேரிடர் காலங்களில் மீட்பு மற்றும் மறுவாழ்வு நடவடிக்கைகள்.

v. கடல் மீன் பிடிப்பின் போது மீனவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்தல்.

vi. தமிழ்நாடு மீனவர்களின் பாரம்பரிய மீன் பிடி உரிமைகளை நிலைநாட்டுதல்.

vii. உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்.

viii. சுகாதாரமான முறையில் மீன் உணவுப் பொருட்களை குளிர்சாதன வசதிகளுடன் சந்தைப்படுத்துதல்.

ix. உள்நாட்டு மீன் வளம் மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்பினை மேம்படுத்துதல்.

x. மீனவ மகளிருக்கென சிறப்பு வாழ்வாதாரத் திட்டங்கள்.

xi. திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் அளித்தல்.

xii. விரிவாக்கப் பணிகள்மூலம் திட்டங்கள் சென்றடையச் செய்தல்.

xiii. மீனவ கூட்டுறவு சங்கங்களை மேலாண்மை செய்தல்.

[2020 மார்ச் 17

7.1 கடல் மீன் வளத் திட்டங்கள்

கடல் மீனவருக்கான நலத் திட்டங்கள்

மறைந்த முன்னாள் முதலமைச்சர் டாக்டர் ஜெ ஜெயலலிதா அவர்களின் வழிகாட்டுதலின்படி செயல்படும் இந்த அரசு, மாநிலத்திலுள்ள மீனவர்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதில் எப்பொழுதும் அதிக முன்னுரிமை அளித்து, பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

நலத் திட்டங்களின் பயன்கள் வெளிப்படையான முறையில் குறுகிய காலத்திற்குள் பயனாளிகளை சென்றடைவதை உறுதி செய்திடும்பொருட்டு, பயனாளிகளின் வங்கிக் கணக்கில் தேசிய மின்னணு பணப் பரிமாற்றம் (NEFT) வழியாக பணப் பலன்களை நேரடியாக அரசு வழங்கி வருகிறது.

மீனவர்களுக்கு நலத் திட்ட உதவிகள் வெளிப்படைத் தன்மையுடன், எவ்வித இடையூறுமின்றி குறித்த காலத்திற்குள் சென்றடைவதை உறுதி செய்திட, மீனவர்கள் "அரசு பொது சேவை மையங்கள்"மூலம் இணையதளம் வழியாக விண்ணப்பித்து, மீனவரின் பயோமெட்ரிக் அடையாளங்களை சரிபார்த்து எளிய முறையில் நலத் திட்டங்களை பெற்றிட துறை நடவடிக்கை எடுத்துவருகிறது. 2019-2020 ஆம் ஆண்டு முதல் தேசிய மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம், தமிழ்நாடு மீனவ மகளிர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம், மீன் பிடித் தடைக்கால நிவாரணத் திட்டம், மீன் பிடிப்பு குறைந்த கால நிவாரணத் திட்டம் மற்றும் மீனவர் நல வாரியம் வழியாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. அனைத்து உதவிகளும் இணையதள சேவை வாயிலாக செயல்படுத்தப்படும். நேரடி பயன் வழங்கும் திட்டத்தின்கீழ் (DBT) 2020-2021 ஆண்டிலிருந்து மீன் பிடி படகுகளுக்கு மானியத்துடன்கூடிய மண்ணெண்ணெய் மற்றும் உயர்வேக டீசல் வழங்கப்படும்.

2019-2020 ஆம் ஆண்டில் பல்வேறு கடல் மீனவர் நலத் திட்டங்களுக்காக, மொத்தம் ரூ.296.85 கோடி நிதியினை, தமிழக அரசு விடுவித்துள்ளது.

2020 மார்ச் 17]

I. மாநிலத் திட்டங்கள்

7.1.1 மீன் பிடித் தடைக்காலத்தில் கடல் மீனவக் குடும்பங்களுக்கு நிவாரண உதவியாக ரூ.5,000 வழங்குதல்

கடல் மீன் வளத்தைப் பேணிக்காத்திட, 2001 ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் மீன் பிடித் தடைக்காலம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. மீன் பிடித் தடைக்காலம் கிழக்கு கடற்கரைப் பகுதியில் ஏப்ரல் 15 முதல் ஜுன் 14 வரையிலும், மேற்கு கடற்கரைப் பகுதியில் ஜுன் 1 முதல் ஜுலை 31 வரையிலும் அமல்படுத்தப்படுகிறது. மீன் பிடித் தடைக்காலத்தில் இன்னலுறும் கடல் மீனவக் குடும்பங்களின் துயரினை களைந்திடும் விதமாக, ஒவ்வொரு மீனவக் குடும்பத்திற்கும் ரூ.5,000 மீன் பிடித் தடைக்கால நிவாரணமாக வழங்கும் திட்டத்தினை அரசு செயல்படுத்தி வருகிறது.

2019-2020 ஆம் ஆண்டில், 13 கடலோர மாவட்டங்களைச் சார்ந்த 1,63,491 மீனவக் குடும்பங்களுக்கு மீன் பிடி தடைக்கால நிவாரணத் தொகையாக ரூ.81.75 கோடி தேசிய மின்னணு பணப் பரிமாற்றம் (NEFT) வழியாக, பயனாளிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாகச் செலுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டம் 2020-2021 ஆம் ஆண்டும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

7.1.2 மீன் பிடிப்பு குறைவு காலத்தில் கடல் மீனவக் குடும்பங்களுக்கு சிறப்பு நிவாரண உதவித் தொகையாக ரூ.5,000 வழங்குதல்

மீன் பிடி குறைவு காலத்தில் இன்னலுறும் 13 கடலோர மாவட்ட மீனவக் குடும்பங்களின் துயரினைக் களைந்திடும் விதமாக, ஒவ்வொரு மீனவக் குடும்பத்திற்கும், ரூ.5,000 சிறப்பு நிவாரணமாக வழங்கும் திட்டத்தினை அரசு செயல்படுத்தி வருகிறது.

கடல் மீனவக் குடும்பங்களுக்கு சிறப்பு நிவாரண உதவி வழங்கிட 2019-2020 ஆம் ஆண்டில் அரசால் ரூ.88.41 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது. 15-3-2020 வரை, 11 கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த 1,30,133 கடல் மீனவக் குடும்பங்களுக்கு ரூ.65.07 கோடி தேசிய மின்னணு பணப் பரிமாற்றம் (NEFT) வழியாக பயனாளிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்தப்பட்டுள்ளது. தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் நிவாரணத்

தொகை வழங்கும் திட்டம் வரும் ஜூலை 2020 திங்களில் நிறைவுபெறும்.

இத்திட்டம் 2020-2021 ஆம் ஆண்டும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

7.1.3 கடல் மீனவ மகளிர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்

இத்திட்டம், மத்திய, மாநில அரசுகளின் பங்களிப்புடன் கடல் மீனவர்களுக்கு செயல்படுத்தப்படும் திட்ட வழிமுறைகளைப் பின்பற்றி, மாநிலத் திட்டமாக மீனவ மகளிருக்கு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்திற்காக ரூ.61.31 கோடி அரசால் ஒப்பளிக்கப்பட்டு, இதுவரை 10 கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த 1,37,524 பயனாளிகளுக்கு நிவாரணத் தொகையாக ரூ.41.26 கோடி தேசிய மின்னணு பணப்பரிமாற்றம் (NEFT) வழியாக பயனாளிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்தப்பட்டுள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தில் நிவாரண உதவி வழங்கும் பணிகள் மார்ச் 2020-லும் தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் வரும் ஜூலை 2020 திங்களிலும் நிறைவுபெறும்.

இத்திட்டம் 2020-2021 ஆம் ஆண்டும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

7.1.4. மீன் பிடி படகுகளுக்கு விற்பனை வரி விலக்களிக்கப்பட்ட அதிவேக டீசல் எரியெண்ணெய் வழங்குதல்

மீன் வளத் துறையில் பதிவு செய்யப்பட்ட மீன் பிடி விசைப்படகுகளுக்கு ஆண்டொன்றிற்கு 18,000 லிட்டரும் மற்றும் இயந்திரமயமாக்கப்பட்ட நாட்டுப் படகுகளுக்கு, ஆண்டொன்றிற்கு 4,000 லிட்டர் வீதம் விற்பனை வரி விலக்களிக்கப்பட்ட அதிவேக டீசல் எரியெண்ணெய் அரசால் வழங்கப்படுகிறது. 2019-2020 ஆம் ஆண்டில் 83,737 கிலோ லிட்டர் டீசல் ரூ.115.68 கோடி மானியத் தொகையில் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 2020-2021 ஆம் ஆண்டும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

7.1.5 பாரம்பரிய மீன் பிடி கலன்களுக்கு மானிய விலையில் தொழிலக மண்ணெண்ணெய் வழங்குதல்

தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில், மண்ணெண்ணெய்யில் இயங்கக்கூடிய இயந்திரம் பொருத்தப்பட்ட பாரம்பரிய மீன் பிடி கலன்களுக்கு மானிய

2020 மார்ச் 17]

விலையிலான தொழிலக மண்ணெண்ணெய், லிட்டர் ஒன்றிற்கு ரூ.25 வீதம் ஒரு ஆண்டில், கலன் ஒன்றிற்கு 3,400 லிட்டர் அரசால் வழங்கப்படுகிறது.

2019-2020ஆம் ஆண்டில் 11,941 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் ரூ.26.06 கோடி மானியத்தில் வழங்கப்பட்டுள்ளது. 2020-2021 ஆம் ஆண்டிலும், இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

மானியத்துடன் கூடிய அதிவேக டீசல் மற்றும் மண்ணெண்ணெய் வழங்கும் திட்டங்களின் பயன்கள் வெளிப்படையான முறையில் பயனாளிகளை சென்றடைவதை உறுதி செய்திடும்பொருட்டு, பயனாளிகளின் வங்கிக் கணக்கில் தேசிய மின்னணு பணப் பரிமாற்றம் (NEFT) வழியாக பணப் பலன்களை நேரடியாக வழங்கும் வசதி 2020 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்படும்.

7.1.6 பிற நாட்டினரால் சிறை பிடிக்கப்படும் மீனவர்களது குடும்பத்திற்கு தின உதவித் தொகை வழங்குதல்

கடலில் மீன் பிடிக்கும் போது அண்டை நாட்டினரால் சிறை பிடிக்கப்படும் மீனவர்களின் குடும்பத்தினருக்கு உதவிடும் வகையில், நாளொன்றுக்கு ரூ.250 வீதம் (மாதம் ஒன்றிற்கு ரூ.7,500/- வீதம்) தின உதவித் தொகையாக அரசு வழங்கி வருகிறது. தின உதவித் தொகையை உடனடியாக வழங்கிடும் வகையில், இத்திட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் வழியாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2019-2020 ஆம் ஆண்டில், சிறைபிடிக்கப்பட்ட 51 மீனவர்களின் குடும்பத்திற்கு ரூ.5.07 இலட்சம் நிவாரணமாக விடுவிக்கப்பட்டுள்ளது.

2020-2021 ஆம் ஆண்டும், இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

7.1.7 காணாமல் போகும் மீனவர்களது குடும்பத்திற்கு தின உதவித் தொகை வழங்குதல்

கடலில் மீன் பிடிக்கச் சென்று காணாமல் போகும் மீனவர்களது குடும்பத்திற்கு, தின உதவித் தொகையாக ரூ.250 வீதம் (மாதமொன்றுக்கு ரூ.7,500/- வீதம்) மாநில அரசு வழங்கி வருகிறது. 2019-2020 ஆம் ஆண்டில், மீன் பிடிப்பின்போது காணாமல் போன 23 மீனவர்களின் குடும்பத்திற்கு ரூ.11.10 இலட்சம் நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

2020-2021 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

[2020 மார்ச் 17

7.1.8 இலங்கை கடற்படை மற்றும் பிற நாட்டினரின் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழக்கும் மீனவரது குடும்பத்தினருக்கு/ காயமடையும் மீனவருக்கு நிவாரணம் வழங்குதல்

கடலோர மாவட்டங்களிலுள்ள மீனவர்கள், தங்களது பாரம்பரிய மீன் பிடி பகுதியான பாக் வளைகுடா பகுதியில் மீன் பிடித் தொழிலில் ஈடுபட்டிருக்கும் நேரங்களில், இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்படுதல்/ துன்புறுத்தப்படுதல் போன்ற சிரமங்களை எதிர்கொள்வதோடு, சில சமயங்களில் துப்பாக்கிச் சூட்டிற்கும் இலக்காகின்றனர்.

இவ்வாறான நிகழ்வுகளின் போது மரணமடையும் மீனவரது குடும்பத்தினருக்கு, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து கருணைத் தொகையாக ரூ.3 இலட்சம் வழங்கப்படுகிறது. துப்பாக்கிச் சூட்டில் பலியாகும் மீனவர் அவரது குடும்பத்தில் பொருளீட்டக்கூடிய ஒரே நபராக இருக்கும்பட்சத்தில், இந்த கருணைத் தொகை ரூ.5 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படுகிறது. மீனவர் பலத்த காயம் மற்றும் சிறு காயம் அடையும் போது கருணைத் தொகையாக முறையே ரூ.50,000 மற்றும் ரூ.20,000 வழங்கப்படுகிறது.

7.1.9 கடலில் மீன் பிடிக்கச் சென்று காணாமல் போகும் மீனவர்கள்/துப்பாக்கிச் சூட்டில் இறக்கும் மீனவர்களின் பிள்ளைகளின் உயர் கல்வி செலவினங்களுக்காக பிரத்யேக நிதி ஏற்படுத்துதல்

கடலில் மீன் பிடிக்கச் சென்று, காணாமல் போகும் மீனவர்கள்/ இலங்கை கடற்படையினரால் சுடப்பட்டு இறக்க நேரிடும் மீனவர்களின் பிள்ளைகள், தொடர்ந்து உயர் கல்வி கற்பதற்கான முழுச் செலவினத்தையும் மேற்கொள்வதற்காக, தமிழ்நாடு மீனவர் நல வாரியம்மூலம் ரூ.25 இலட்சம் பிரத்யேக நிதியம் உருவாக்கப்பட்டுள்ளது.

7.1.10 மீனவர்கள் புதிய சூரை மீன் பிடி தூண்டில் மற்றும் செவுள் வலை படகுகளை வாங்கிட 50 விழுக்காடு மானியம் வழங்குதல்

நிலைத்த மீன் வளத்திற்காக கடலோர மீன் வள ஆதாரங்களின் மீதான மீன் பிடி அழுத்தத்தை குறைத்திடவும், இதுவரை பிடிக்கப்படாத

2020 மார்ச் 17]

அல்லது குறைவாக பிடிக்கப்பட்ட ஆழ்கடல் சூரை மீன் போன்ற கடல் மீன் வள ஆதாரங்களை மீனவர்கள் பிடித்திடும்பொருட்டு 2014-15 ஆம் ஆண்டு, மறைந்த முன்னாள் முதலமைச்சர் டாக்டர் ஜெ ஜெயலலிதா அவர்களால் "புதிய சூரை மீன் பிடி தூண்டில் மற்றும் செவுள் வலை படகுகளை வாங்கிட மீனவர்களுக்கு 50 விழுக்காடு மானியம் வழங்குதல்" என்ற முன்னோடி திட்டம் நாட்டிலேயே முதல்முறையாக தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டது.

இத்திட்டத்தில் படகு கட்டுவதற்கான உத்தேச மதிப்பான ரூ.60 இலட்சத்தில் 50 விழுக்காடு அல்லது அதிகபட்சமாக ரூ.30 இலட்சம் மானியமாக வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் 171 படகுகள் கட்டுவதற்கு ரூ.51.30 கோடிக்கு நிருவாக ஒப்புதல் பெறப்பட்டுள்ளது; முதல் தவணையாக ரூ.17.10 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 110 பயனாளிகளுக்கு படகு கட்டுவதற்கான பணி ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன; 54 படகுகள் முழுமையாக கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 56 படகுகளின் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்தின்கீழ், இதுவரை ரூ.16.99 கோடி மானியமாக விடுவிக்கப்பட்டுள்ளது. 61 பயனாளிகளுக்கு படகுகள் கட்டுவதற்கான பணி ஆணைகள் விரைவில் வழங்கப்படும்.

II. மத்திய அரசு பங்களிப்பு திட்டங்கள்

7.1.11 கடல் மீனவர்களுக்கான தேசிய மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்

தேசிய கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் நிவாரண உதவித் தொகை ரூ.4,500 ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வரப்படுகிறது. 2019-2020 ஆம் ஆண்டில் ரூ.63.68 கோடி இத்திட்டத்திற்காக ஒப்பளிக்கப்பட்டு, அதனில் 10 கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த 1,42,268 பயனாளிகளுக்கு நிவாரணத் தொகையாக ரூ.42.68 கோடி தேசிய மின்னணு பணப் பரிமாற்றம் (NEFT)மூலம் பயனாளிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்தப்பட்டுள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தில் நிவாரண உதவி வழங்கும் பணிகள் மார்ச் 2020-லும் தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் வரும் ஜூலை 2020 திங்களிலும் நிறைவு பெறும்.

[2020 மார்ச் 17

2020-2021 ஆம் ஆண்டிலும் இத்திட்டம், தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

7.1.12 மீனவர் குழு விபத்துக் காப்புறுதி திட்டம்

மத்திய அரசு, ''பிரதான் மந்திரி சுரக்சா பீமா யோஜனா'' (PMSBY) என்ற திட்டத்தின்கீழ் விபத்தில் மரணம் அடையும்/ காணாமல் போகும்/ நிரந்தர/ பகுதி ஊனம் அடையும் மீனவர்களுக்கான காப்புறுதிப் பயன்கள் தேசிய மீனவர் கூட்டுறவு இணையம் (FISHCOPFED- National Federation of Fishers Cooperatives Ltd., New Delhi)மூலம் வழங்கப்பட்டு வருகின்றன. இதற்கான சந்தா தொகையான ரூ.12 மத்திய மற்றும் மாநில அரசுகளால் சரிபங்காக செலுத்தப்படுகிறது. விபத்தில் மரணம் அடையும்/ காணாமல் போகும்/ நிரந்தர ஊனம் அடையும் நேர்வுகளில், மீனவருக்கு காப்புறுதித் தொகையாக ரூ.2,00,000 வழங்கப்படுகிறது. பகுதி ஊனமடையும் நிகழ்வுகளில் காப்புறுதித் தொகையாக ரூ.1,00,000 வழங்கப்படுகிறது. மேலும், 2019-2020 ஆம் ஆண்டு முதல் சிறப்பு செலவின காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் மருத்துவ செலவினை ஈடுசெய்திட ரூ.10,000 வழங்கப்படுகிறது. இதற்கான கூடுதல் சந்தா தொகை நபருக்கு ரூ.3.54 மத்திய மற்றும் மாநில அரசுகளால் சரிபங்காக செலுத்தப்படுகிறது.

1-6-2019 முதல் 31-5-2020 வரையிலான காலத்திற்கு 5,24,054 மீனவர்களுக்கு தமிழக அரசின் காப்புறுதி சந்தா தொகையாக ரூ.40.72 இலட்சம் புது டில்லி, தேசிய மீனவர் கூட்டுறவு இணையத்திற்கு செலுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டம் இவ்வாண்டும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

7.1.13 பாரம்பரிய மீன் பிடி கலன்களை இயந்திரமயமாக்குதல்

மீனவர்கள் தங்களது பாரம்பரிய மீன் பிடி கலன்களை இயந்திரமயமாக்கும்பொருட்டு வெளிப்பொருத்தும் இயந்திரம்/ உட்பொருத்தும் இயந்திரம் வாங்குவதற்கு அரசு 40 விழுக்காடு மானியமாக, அதிகபட்சமாக அலகு ஒன்றிற்கு ரூ.48,000 வழங்கி வருகிறது. 2019-2020 ஆம் ஆண்டில் நீலப் புரட்சித் திட்டத்தின்கீழ் ரூ.6.35 கோடி நிதியுதவியுடன் 1,300 வெளிப்பொருத்தும் இயந்திரங்கள்/உட்பொருத்தும் இயந்திரங்கள் பாரம்பரிய நாட்டுப்படகு மீனவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

2020 மார்ச் 17]

மேலும், தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ், 500 வெளிப்பொருத்தும்/ உட்பொருத்தும் இயந்திரங்கள் ரூ.2.40 கோடி மானியத்தில் வழங்கப்பட்டுள்ளன.

7.1.14 ஆழ்கடல் மீன் பிடிப்பை அதிகரித்தல்

தமிழகத்தில் 5,806 மீன் பிடி விசைப்படகுகள் மீன் பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ளன. பெரும்பாலான மீன் பிடி விசைப்படகுகள் இழுவலை மீன் பிடிப்பை மேற்கொண்டு வருகின்றன. இழுவலைமூலம் மீன் பிடிப்பது நிலைத்தன்மையற்ற மீன் பிடி முறையாகும். தொடர் இழுவலை மீன் பிடிப்பு மதிப்புமிக்க கடல் மீன் வள ஆதாரத்தை சிதைத்து வருகிறது.

அடிமட்ட இழுவலைகளைக் கொண்டு மீன் பிடிக்கும் நிலைத்தன்மையற்ற மீன் பிடி முறையை முடிவுக்குக் கொண்டுவரும்பொருட்டு, இழுவலை மீன் பிடிப்பை மாற்றிடவும், அதனுடன் அண்மைக் கடல் பகுதியில் மீன் வள ஆதாரத்தை நிருவகித்திடவும் தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இழுவலை மீன் பிடி படகுகளை ஆழ்கடல் மீன் பிடிப்பிற்கு பரவலாக்கிட, தமிழ்நாடு அரசு பல்வேறு தனிச் சிறப்புத் திட்டங்களை செயல்படுத்துவதோடு, சூரை மற்றும் ஆழ்கடல் மீன்களை கையாளுவதற்கான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி வருகிறது.

ரூ.60 இலட்சம் மதிப்புள்ள புதிய தூண்டில் மற்றும் செவுள்வலை மீன் பிடி படகுகளைக் கட்டிட 50 விழுக்காடு அல்லது அதிகபட்சம் ரூ.30 இலட்சம் மானிய உதவி வழங்கும் திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ், 54 படகுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும், 56 படகுகளின் கட்டுமானம் பல்வேறு நிலைகளில் உள்ளன. இதுவரை ரூ.16.99 கோடி மானியமாக விடுவிக்கப்பட்டுள்ளது.

பாக் வளைகுடா பகுதியில் உள்ள இழுவலை படகுகளை ஆழ்கடல் மீன் பிடிப்பிற்கு பரவலாக்கும் திட்டத்தின்கீழ், பாக் வளைகுடா மீனவர்களுக்கு படகின் மொத்த மதிப்பான ரூ.80 இலட்சத்தில் 70 விழுக்காடு அல்லது அதிகபட்சம் ரூ.54 இலட்சம் மானிய உதவி வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், 22 படகுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும், 29 படகுகளின் கட்டுமானம் பல்வேறு நிலைகளில் உள்ளன. இத்திட்டத்தின்கீழ், இதுவரை ரூ.15.78 கோடி மானியமாக விடுவிக்கப்பட்டுள்ளது.

[2020 மார்ச் 17

இழுவலைப் படகுகளை ஆழ்கடல் மீன் பிடி படகுகளாக மாற்றிட 100 விழுக்காடு அல்லது அதிகபட்சம் ரூ.15 இலட்சம் மானிய உதவி வழங்கும் திட்டத்தினை மத்திய அரசு செயல்படுத்தி வருகிறது.

இராமநாதபுரம் மாவட்டம் மூக்கையூரில் ஆழ்கடல் மீன் பிடி படகுகளை நிறுத்திடவும், ஆழ்கடல் மீன்களை கையாளவும் ரூ.113.90 கோடி செலவில் மீன் பிடி துறைமுகம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. சூரை மீன்கள் மற்றும் சூரை மீன்களைப் போன்ற மீன்களை கையாள இராமநாதபுரம் மாவட்டம், குந்துக்கல்லில் மீன் இறங்கு தளம் ஒன்றும் ரூ.74 கோடி செலவில் கட்டப்பட்டு வருகிறது.

மத்திய மீன் துறை கடல்சார் பொறியியல் பயிற்சி நிலையம் (CIFNET) இதுவரை ஆழ்கடல் மீன் பிடிப்பு முறைகளான தூண்டில் மற்றும் செவுள்வலை மீன் பிடிப்பு, ஆழ்கடல் மீன்களை சுகாதாரமான முறையில் கையாளுதல் போன்றவற்றில் இதுவரை 304 மீனவர்களுக்கு 22 அணிகளாக ஆழ்கடலில் பயிற்சி அளித்துள்ளது. இப்பயிற்சி தொடர்ந்து அளிக்கப்படும்.

ஏற்றுமதிக்கான உட்கட்டமைப்பு வசதிகள், தொடர் குளிர்காப்பு வசதிகள் போன்றவற்றை அளித்திட செய்யத்தக்கமைக்கான ஆய்வுகளை அரசு மேற்கொண்டுள்ளது. மேலும், இராமநாதபுரம் முதல் கன்னியாகுமரி வரை மீன் பதனிடும் தொழில் வழித்தடம் அமைத்திடுவதற்கான சாத்தியக்கூறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆழ்கடல் மீன் பிடி படகுகளின் பாதுகாப்பினை உறுதி செய்திட மானிய உதவியில் ஆழ்கடல் மீன்பிடி படகுகளுக்கு தொலைத்தொடர்பு சாதனங்கள் வழங்கப்பட்டுள்ளன. 80 ஆழ்கடல் படகு குழுக்களுக்கு 160 செயற்கைக்கோள் தொலைபேசிகள், 200 நேவிக் மற்றும் 80 நேவ்டெக்ஸ் சாதனங்கள் வழங்கப்பட்டுள்ளன. 2020 ஆம் ஆண்டில் 75 விழுக்காடு மானிய உதவியில் மேலும் 500 செயற்கைக்கோள் தொலைபேசிகள் அளித்திடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

7.1.15 பாக் வளைகுடா மாவட்டங்களில் இழுவலைப் படகுகளை ஆழ்கடல் மீன் பிடிப் படகுகளாக மாற்றுவதற்கு மானியம் வழங்குதல்

பாக் வளைகுடாப் பகுதியில் உள்ள இழுவைப் படகுகளுக்கு மாற்றாக ஆழ்கடல் சூரை மீன் பிடி படகுகளைக் கட்டுவதற்கு, மத்திய மற்றும் மாநில அரசு ஒரு படகின் விலையான ரூ.80 இலட்சம் மதிப்பீட்டில் 70 விழுக்காடு மானியம் வழங்கி செயல்படுத்தி வருகிறது.

2020 மார்ச் 17]

ஒரு படகின் விலையான ரூ.80 இலட்சத்தில், 50 விழுக்காடு மத்திய அரசின் மானியமாக ரூ.40 இலட்சம், 20 விழுக்காடு தமிழ்நாடு அரசின் மானியமாக ரூ.16 இலட்சம், 10 விழுக்காடு பயனாளியின் பங்களிப்பாக ரூ.8 இலட்சம், மீதமுள்ள 20 விழுக்காடு ரூ.16 இலட்சம் வங்கிக் கடனாகவும் வழங்கப்பட்டு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ், முதற்கட்டமாக, 500 படகுகளை ஆழ்கடல் மீன் பிடிப் படகுகளாக மாற்றுவதற்கு, அரசு ரூ.286 கோடி நிதி வழங்கியுள்ளது. ஆழ்கடல் மீன் பிடிப் படகாக மாற்றுவதற்கு 666 விண்ணப்பங்கள் பெறப்பட்டு 91 பயனாளிகள் முத்தரப்பு ஒப்பந்தம் இயற்றியுள்ளனர். 79 படகுகள் கட்டுவதற்கு பணி ஆணைகள் வழங்கப்பட்டு, தற்போது 22 படகுகள் முழுமையாக கட்டி முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய படகுகளுக்கான கட்டுமானப் பணிகள் பல்வேறு நிலையில் முன்னேற்றத்தில் உள்ளன.

7.1.16 பாரம்பரிய நாட்டுப் படகுகளுக்கு மாற்றாக 10 மீ. வரை மொத்த நீளம் கொண்ட கண்ணாடி நாரிழைப் படகு கட்டுவதற்கும், இயந்திரம், வலைகள் மற்றும் குளிர்காப்பு பெட்டிகள் வாங்க மானியம் வழங்குதல்

மத்திய அரசின் நீலப் புரட்சித் திட்டத்தின்கீழ், தமிழ்நாட்டில் ரூ.8.50 கோடி செலவில் 10 மீ. வரை மொத்த நீளம் கொண்ட 200 கண்ணாடி நாரிழைப் படகுகள், இயந்திரம், வலை மற்றும் குளிர்காப்புப் பெட்டிகள் ஆகியவை 40 விழுக்காடு மானியத்தில் வழங்கிட மத்திய அரசு நிருவாக ஒப்புதல் வழங்கியுள்ளது.

இத்திட்டத்தின்கீழ், கண்ணாடி நாரிழைப் படகு, இயந்திரம், வலை மற்றும் குளிர்காப்புப் பெட்டிகள் வாங்குவதற்கு 40 விழுக்காடு மானியம் அல்லது அதிகபட்சமாக ரூ.1.70 இலட்சம் மானியமாக வழங்கப்படும். 2019-2020 ஆம் ஆண்டில் 100 கண்ணாடி நாரிழைப் படகுகள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. மேலும், 2020-2021 ஆம் ஆண்டில் கூடுதலாக 100 படகுகள் கட்டி வழங்கப்படும்.

7.2 ஒழுங்குபடுத்துதல் மற்றும் அமலாக்கம் செய்தல்

7.2.1 மீன் பிடி கலன்களை இணையதளம்மூலம் பதிவு செய்தல்

கடலோர பாதுகாப்பினை உறுதிப்படுத்தும்பொருட்டு, மீன் பிடி கலன்களை இணையதளம்மூலம் பதிவு செய்யும் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டு, ரூ.1.33 கோடி செலவில் இத்திட்டம் தமிழ்நாட்டில்

செயல்படுத்தப்பட்டு வருகிறது. இணையதளத்தில் 15-3-2020 வரை 5,806 மீன் பிடி விசைப்படகுகள், 36,645 இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப் படகுகள் மற்றும் 5,007 இயந்திரம் பொருத்தப்படாத நாட்டுப் படகுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

7.2.2 கடல் மீனவர்களுக்கு "பயோமெட்ரிக்" அடையாள அட்டை (Biometric Identity Card) வழங்குதல்

மும்பையில் 26-11-2008 அன்று நடந்த தீவிரவாதத் தாக்குதலுக்குப் பின்னர், கடலோரப் பாதுகாப்பினை உறுதி செய்திடும்பொருட்டு, கடல் மீனவர்களுக்கு "பயோமெட்ரிக்" அடையாள அட்டைகளை (Biometric Identity Cards) வழங்கிடும் திட்டம், மத்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டு, இதற்கென தமிழகத்திற்கு, ரூ.1.16 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்திட்டத்தின்கீழ், இதுவரை 1,86,523 கடல் மீனவர்களுக்கும், 1,63,221 கடல் மீனவ மகளிருக்கும் பயோமெட்ரிக் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. 222 பயோமெட்ரிக் அடையாள அட்டைகள் ஆய்வு செய்யும் கருவிகள் (Card Readers) துறை அலுவலர்கள் மற்றும் சட்ட அமலாக்க பிரிவிற்கு வழங்கப்பட்டுள்ளன.

7.2.3. கடல் மீன் பிடி ஒழுங்குமுறைபடுத்தும் சட்டத்தை அமல்படுத்திட பிரத்யேக அமலாக்கப் பிரிவு அமைத்தல்

சமீப காலங்களில் மீன் பிடி கலன்களின் எண்ணிக்கை மற்றும்கொள்ளளவு அதிகரிப்பின் காரணமாக அளவுக்கு அதிகமான மீன் பிடிப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தமிழ்நாடு கடல் மீன் பிடித்தலை ஒழுங்குபடுத்தும் சட்டம் செயலில் இருந்தாலும், போதுமான உட்கட்டமைப்பு, ரோந்து கலன்கள் மற்றும் மனித ஆற்றல் ஆகியவற்றில் பற்றாக்குறை காரணமாக, கடலில் சட்டம்-ஒழுங்கை அமல்படுத்தல் மட்டுமின்றி, சட்டத்திற்கு முரணான மீன் பிடிப்பைத் தடுத்தல், மீன் வள ஆதாரத்தை பாதுகாத்தல், மீன் பிடிப்பை முறைப்படுத்துதல் போன்றவற்றை செயல்படுத்துவது பெரும் சவாலாக இருந்து வருகிறது. தற்போது 13 மாவட்டங்களில், 18 அதிகாரம் பெற்ற அலுவலர்கள்/மீன் துறை உதவி இயக்குநர்கள் மற்றும் 7 தீர்ப்பு வழங்கும் அலுவலர்/ மண்டல மீன் துறை இணை/ துணை இயக்குநர்கள் தமிழ்நாடு மீன் பிடி ஒழுங்குமுறை சட்டம் செயல்படுத்தப்படுவதை கண்காணிக்கின்றனர். அனைத்து அலுவலர்களின் மேல்முறையீட்டு அலுவலராக மீன் துறை இயக்குநர் மேற்பார்வையிடுகின்றார்.

2020 மார்ச் 17]

கடலில் மீன் பிடித்தல் தொடர்பாக ஏற்படும் சட்டம் ஒழுங்கு பிரச்சினைகள், மீனவர்களுக்கிடையே ஏற்படும் பிரச்சினைகளைக் கையாளுவதற்கு, பிற துறைகளில் உள்ள நுண்ணறிவுப் பிரிவு போன்று மீன் வளத் துறையில் கடல் மீன் பிடிப்பு ஒழுங்குமுறை சட்டம் மற்றும் விதிகளை அமலாக்கம் செய்திட காவல் துறை அலுவலர்களைக் கொண்ட பிரத்யேக அமலாக்கப் பிரிவினை 112 பணியிடங்களுடன் அமைத்திட அரசு ஆணை வழங்கியுள்ளது. அதன்படி, 13 கடலோர மாவட்டங்களில், கடலில் மீன் பிடித்தலை ஒழுங்குமுறைப்படுத்தும் சட்டத்தினை அமலாக்கம் செய்திட, ஒரு காவல் கண்காணிப்பாளர், ஒரு துணை காவல் கண்காணிப்பாளர், 10 காவல் ஆய்வாளர்கள், 8 காவல் சார் ஆய்வாளர்கள், 53 காவலர்கள், 19 காவல் ஓட்டுநர்கள் (மொத்தம் 112 பதவிகள்) ஆகிய நிரந்தரப் பணியிடங்களைக் கொண்டு இப்பிரிவு செயல்படும்.

மேற்காணும் காவல் துறை அலுவலர் பதவியிடங்கள் மாநில காவல் துறைக்கு கூடுதலாக ஒப்பளிக்கப்பட்டு, அப்பணியாளர்கள் மீன் வளத் துறைக்கு அனுப்பப்படுவர். இவ்வலகின்கீழ் பணியாற்றும் அலுவலர்கள், அவர்தம் பதவித் தரத்திற்கான சீருடையுடன், வலது மேற்கையில் " கடல் மீன் வள சட்ட அமலாக்கப் பிரிவு" என்ற சொல் பொறிக்கப்பட்ட அடையாள வில்லையை அணிந்திருப்பர்.

சட்டத்திற்குப் புறம்பான மீன் பிடித்தல், அழிவை ஏற்படுத்தும் மீன் பிடிப்பு மற்றும் தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்துவதைத் தடுத்தல் மற்றும் மீன் பிடித்தலில் ஒழுங்குமுறையை மேற்கொள்ள கடலில் ரோந்து பணி மேற்கொள்ளுதல், ரோந்துப்பணியின் போது சேகரிக்கப்படும் சமூக விரோத செயல்பாடுகள் மற்றும் நுண்ணறிவுத் தகவல்களை கடலோர பாதுகாப்புப் படை மற்றும் உள்ளூர் காவல் துறையின் கவனத்திற்குக் கொண்டு சென்று நடவடிக்கை எடுத்தல் போன்ற முக்கிய பணிகளை இந்த அமலாக்க பிரிவு மேற்கொள்ளும்.

அமலாக்கப் பிரிவின் செயல்பாடுகளுக்கென ஆண்டொன்றுக்கு தொடரும் செலவினங்களுக்கென மொத்தம் ரூ.8.65 கோடி அரசால் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும், அமலாக்கப் பிரிவின் பயன்பாட்டிற்கென ஊர்திகள் வாங்கிட அரசால் ரூ.1.90 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு, மொத்தம் 19 ஊர்திகள் வாங்கப்பட்டுள்ளன. இந்த அமலாக்கப் பிரிவு 1-12-2019 முதல் செயல்பட்டு வருகிறது.

[2020 மார்ச் 17

7.3 மீன் வள ஆதாரங்களைப் பாதுகாத்தல் மற்றும் மேலாண்மை செய்தல்

மீன் வளத்தினைப் பாதுகாத்திடவும், மீன் வளத்தினை அதிகரித்திடவும், மீன் பிடித் தடைக்காலம் அமலாக்கம் செய்தல், கடலில் மீன் குஞ்சுகளை இருப்பு செய்தல், செயற்கை மீன் உறைவிடங்களை அமைத்தல் மற்றும் பல்வகை மாற்று மீன் பிடி முறைகளை மேற்கொள்ளுதல் போன்ற வழிமுறைகள், மீன் வளத் துறையால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மீன் வளத்தினை திறனுடன் நிருவகிக்க சுற்றுச்சூழலுக்கு உகந்த முறையில் கூட்டு மேலாண்மை தத்துவத்தின் அடிப்படையில் மேலாண்மை செய்யப்பட்டு வருகிறது. மீனவப் பங்களிப்பாளர்களின் ஒத்துழைப்புடன் மீன் வள ஆதாரங்களை திறனுடன் பாதுகாக்க இந்நடவடிக்கை உதவிடும்.

7.3.1 சீரான மீன் பிடித் தடைக்காலம்

கடல் மீன் வளத்தைப் பாதுகாத்திட, 2001 ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் மீன்களின் இனப்பெருக்க காலங்களில் மீன் பிடித் தடைக்காலம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. கிழக்குக் கடற்கரைப் பகுதியில், ஏப்ரல் 15 முதல் ஜுன் 14 வரையிலும், மேற்குக் கடற்கரைப் பகுதியில் ஜுன் 1 முதல் ஜுலை 31 வரையிலும், மொத்தம் 61 நாட்கள் மீன் பிடித் தடைகாலம் அமல்படுத்தப்படுகிறது.

7.3.2 மீன் வளத்திற்கு அழிவு ஏற்படுத்தும் மீன் பிடி வலைகளைத் தடைசெய்தல்

தமிழக கடற்பகுதியில் மீன் வளத்தினைப் பாதுகாத்திடவும், பாரம்பரிய நாட்டுப்படகு மீனவர்களின் வாழ்வாதாரத்தினை பாதுகாத்திடவும், கடலில் மீன் பிடிக்கையில் சட்டம்-ஒழுங்கு பிரச்சினை ஏற்படாதிருக்கவும், சுற்றுச்சூழல் பாதிக்கப்படாத வகையில் அனைத்து மீனவர்களுக்கும் பாகுபாடின்றி மீன்கள் கிடைக்கும்பொருட்டு தமிழகக் கடற்பகுதி முழுவதிலும் அனைத்து வகை சுருக்குமடி வலைகள், இரட்டைமடி வலைகளைப் பயன்படுத்துதல் மற்றும் அவை போன்ற பிற வலைகளைப் பயன்படுத்துதல் மற்றும் இவ்வலைகளைப் பயன்படுத்தும் அனைத்து வகை படகுகளும் தடை செய்யப்பட்டுள்ளன.

2020 மார்ச் 17]

மேலும், கடல் மீன் வளத்தை அழிக்கும் மீன் பிடி வலைகள் மீன் பிடித்தலுக்கு பயன்படுத்தப்படுவதை முற்றிலுமாக ஒழித்திடும்பொருட்டு, இந்திய கப்பற்படை, கடலோர காவல் படை, கடலோர காவல் குழுமம், வருவாய்த் துறை, காவல் துறை, மீன் துறை சட்ட அமலாக்கப் பிரிவு மற்றும் மீன் துறை அலுவலர்களைக் கொண்ட மாவட்ட அளவிலான கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

7.3.3 கடல் ஆமைகளைப் பாதுகாத்தல்

தமிழகக் கடற்பகுதியில் கடல் ஆமைகளை பாதுகாத்திடும்பொருட்டு, மீன் பிடி வலைகளில் கடல் ஆமைகள் சிக்காமல் வெளிச்செல்ல ஏதுவாக வலைகளின் தூர் மடியில் Turtle Excluder Device (TED) கருவிகள் பொருத்திடவும், ஒவ்வோர் ஆண்டும் கடல் ஆமைகளின் இனப்பெருக்கக் காலமான ஜனவரி 1 முதல் ஏப்ரல் 31 முடிய நான்கு மாதங்களுக்கு கடற்கரையில் கடல் ஆமைகள் முட்டையிடும் கடற்பகுதியில் 5 கடல் மைல்களுக்குள் அனைத்துவகை படகுகளின்மூலம் மீன் பிடிக்கத் தடையாணை பிறப்பித்து அரசு அறிவிக்கை வெளியிட்டுள்ளது.

7.4 மீன் மற்றும் மீன் பொருட்களைச் சந்தைப்படுத்துதல்

7.4.1 உள்நாட்டு மீன் விற்பனையை மேம்படுத்துதல்

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் மற்றும் தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன் வள கூட்டுறவு இணையம், உள்ளூரில் பொதுமக்களுக்கு தரமான மீன்களை, குறைந்த விலையில் வழங்குவதற்காக, சில்லறை விற்பனை நிலையங்கள் மற்றும் நடமாடும் மீன் விற்பனை நிலையங்களை செயல்படுத்தி வருகிறது. மேலும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகமானது முன்னோடித் திட்டமாக, சென்னை மாநகரில் இணையதளம் (www.meengal.com) வாயிலாக மீன் விற்பனையைத் தொடங்கியுள்ளது. இதுபோன்ற முன்னோடித் திட்டங்கள் நடப்பாண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

7.4.2 மீன் விற்பனை சந்தைகளை நவீனப்படுத்துதல்

தேசிய மீன் வள மேம்பாட்டு வாரியம் மற்றும் மாநில அரசு நிதியுதவியுடன் மீன்கள் சுகாதாரமான முறையில் கையாளப்பட்டு அவற்றை நுகர்வோருக்கு தரமான நியாயமான விலையில் விற்பனை செய்திட மீன் அங்காடிகள் புதிதாக ஏற்படுத்திடவும், ஏற்கெனவே

[2020 மார்ச் 17

உள்ள மீன் அங்காடிகளின் உட்கட்டமைப்புகளை நவீனப்படுத்திடவும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாநிலத்தில் 495 மீன் அங்காடிகள் உள்ளன.

இத்திட்டத்திற்காக உள்ளாட்சி/நகராட்சி அமைப்புகளுக்கு தேசிய மீன் வள மேம்பாட்டு வாரியம்மூலம் ரூ.5.21 கோடி மற்றும் தமிழக அரசின்மூலம் ரூ.5.08 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளன. 17 நவீன மீன்அங்காடிகளின் கட்டுமான பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மேலும், மீதமுள்ள மீன் அங்காடிகளை நவீனப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளன.

7.4.3. மீன் பொருட்களின் தரக் கட்டுப்பாட்டினை பராமரித்தல்

மீனவர்கள் தாங்கள் பிடிக்கும் மீன்களுக்கு நல்ல விலை கிடைத்திடவும், நுகர்வோர்கள் தரமான மீன்களை பெற்றிடுவதை உறுதி செய்திடவும், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மதிப்பு கூட்டுதல் மற்றும் மீன் விற்பனை சந்தை தொடர்பான பல்வேறு நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது.

மீன் மற்றும் மீன் பொருட்களுக்கான தரக் கட்டுப்பாடு மற்றும் அவற்றின் தரத்தினை கண்டறிந்து, சர்வதேச தரத்திற்கு இணையாக அதன் மதிப்பினை அதிகரித்திடவும், தேசிய மற்றும் சர்வதேச தர நிறுவனங்கள் நிர்ணயிக்கும் உணவுத் தரம்/குறியீடுகளை ஒருங்கிணைப்பதற்கான நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டு வருகிறது.

சுகாதாரமான முறையில் மீன்களை கையாளுதல், மீன் பிடிக் கலன்களை தூய்மையாகப் பராமரித்தல், மீன் இறங்குதளம் மற்றும் மீன் விற்பனை சந்தைகளை பராமரித்தல் மற்றும் இதர நடவடிக்கைகள் தொடர்பாக, விழிப்புணர்வு கூட்டங்கள் மீன் வளத் துறையால் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

7.4.4. மாநிலத்தில் மீன் நுகரும் முறை

2018-2019 ஆம் ஆண்டு மாநிலத்தின் மொத்த மீன் உற்பத்தி 6.9 இலட்சம் டன் ஆகும். இதனில் 4.71 இலட்சம் டன் மீன்கள் நேரடியாகவும், 0.83 இலட்சம் டன் மீன்கள் உலர் நிலையிலும் மற்றும் உப்பிட்ட மீன்களாகவும் மற்றும் 0.14 இலட்சம் டன் மீன்கள் இதர பயன்பாட்டிற்காகவும் தமிழகத்தில் உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன. மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் மீன் வளத்தின் பங்களிப்பு 1% ஆகும். மாநிலத்தின் தனிநபர் மீன் நுகர்வு 9.1 கிலோ

2020 மார்ச் 17]

கிராம் ஆகும். நவீனமயமாக்கப்பட்ட உயர்தரமான மீன் சந்தைகள், மீன் கடைகள், நடமாடும் வண்டிகள் மற்றும் இணைய சந்தைகளின் வழியாக மாநிலத்தில் மீன் நுகர்வு அதிகரித்துள்ளது.

7.4.5. மீன் மற்றும் மீன் உணவுப் பொருட்கள் ஏற்றுமதி

இந்தியாவில் மீன் மற்றும் மீன் உணவுப் பொருட்கள் வேளாண் பொருட்கள் ஏற்றுமதியில் பெரும் பங்கு வகிக்கிறது. இதன்மூலம் 13.93 இலட்சம் டன் ஏற்றுமதி செய்யப்பட்டு, ரூ.46,589.37 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. உலகிலுள்ள 75 நாடுகளுக்கு 50 வகையான மீன் மற்றும் இறால் வகைகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

2018-2019 ஆம் ஆண்டில் மட்டும் தமிழகத்தில் 1.29இலட்சம்டன்கள்அளவிற்குகடல்பொருள்ஏற்றுமதிசெய்யப்பட்டு, அந்நிய செலாவணியாக ரூ.5,591.49 கோடி ஈட்டப்பட்டுள்ளது. இவற்றில் கடல் பொருட்களான உறைந்த இறால், மீன்கள், கணவாய் மீன், கருவாடு, உலர்மீன், உயிர்மீன் மற்றும் குளிரூட்டப்பட்ட மீன் பொருட்கள் அடங்கும். அமெரிக்கா, ஜப்பான், சீனா, தென் கிழக்கு ஆசியா, ஐரோப்பிய கூட்டமைப்பு நாடுகள் மற்றும் மத்திய கிழக்கு நாடுகள் ஆகியவை இந்திய மீன் பொருட்களுக்கான பெரும் மீன் சந்தைகளாகும்.

தமிழகத்தில் அரசால் கட்டப்பட்டுள்ள 9 பெரிய மீன் பிடி துறைமுகங்கள், 3 நடுத்தர மீன் பிடி துறைமுகங்கள் மற்றும் 43 மீன் இறங்கு தளங்களின்மூலம் மீன் மற்றும் மீன் உணவுகளை ஏற்றுமதி செய்வதற்கான கட்டமைப்புகள் உலக தரத்திற்கு நிகராக ஏற்படுத்தப்பட்டு, இதன் வாயிலாக நுகர்வோருக்கு சுகாதாரமான முறையில் தரமாக மீன்கள் வழங்கப்படுகின்றன. சென்னை மற்றும் தூத்துக்குடி ஆகிய நகரங்கள் மீன்களைப் பதப்படுத்தி ஏற்றுமதி செய்வதில் மாநிலத்தில் முதன்மையாகத் திகழ்கிறது. மேலும், தமிழ்நாட்டில் 10 குளிரூட்டப்பட்ட நிலையங்களும், 85 மீன் பதப்படுத்தும் நிலையங்களும் மற்றும் 87 குளிரூட்டப்பட்ட அறை வசதிகளும் உள்ளன.

மாநிலத்தின் ஏற்றுமதியினைப் பெருக்குவதற்காக தமிழக அரசு ஆழ்கடல் மீன் வளத்தினை சரியான முறையில் பயன்படுத்திட, ஆழ்கடல் மீன் பிடிப்பதற்கான முயற்சியினை மேற்கொண்டு வருகிறது. மேலும், கடல் நீர்வாழ் உயிரின வளர்ப்பினை மேம்படுத்தி மீன் உணவின் ஏற்றுமதியினை விரிவுபடுத்திட, தமிழக அரசால் புதிய கொள்கைகள் ஏற்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

[2020 மார்ச் 17

7.5 பேரிடர் தயார் நிலை, மீட்பு மற்றும் மறுவாழ்வு நடவடிக்கைகள்

மோசமான வானிலை மற்றும் இயற்கை பேரிடர் காலங்களில், மீனவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்திட மீன் வளத் துறை கீழ்க்காணும் நடவடிக்கைகளை எடுத்துள்ளது:

அ) மீனவர்களுக்கு வானிலை தகவல்களைப் பகிர்தல்.

ஆ) வானிலைத் தகவல்கள் மற்றும் எச்சரிக்கைகளை மீனவர்களுக்கு 24 மணிநேரமும் வழங்கிடத் தேவையான தொலைத்தொடர்பு வசதிகளுடன் கூடிய மத்திய கட்டுப்பாட்டு அறை மீன் வள இயக்குநரகத்தில் துவக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது. இந்தக் கட்டுப்பாட்டு அறைப் பணிக்காக பிரத்யேக தொலைபேசி எண் 044- 24341757 வழங்கப்பட்டுள்ளது.

இ) தேடுதல் மற்றும் மீட்புப் பணிகளில் இந்திய கப்பல் படை, இந்திய கடலோர காவல் படை மற்றும் கடலோர காவல் குழுமம் ஆகியவற்றுடன் ஒருங்கிணைந்து செயல்படுகிறது.

ஈ) மோசமான வானிலை காலங்களில் மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்ல வேண்டாம் என்றும், தங்களது படகுகளை பத்திரமான இடத்தில் வைத்து பாதுகாத்திடவும் தொடர்ந்து அறிவுறுத்தப்படுகிறார்கள்.

உ) துறையின் மூலம் வெள்ள காலங்களில் உடனடி மீட்புப் பணிகளை மேற்கொள்வதற்கு 30 காற்று நிரப்பிய இரப்பர் மிதவைப் படகுகள் கடலோர மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

ஊ) துறை மேற்கொண்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கை மற்றும் இந்திய கடலோர காவல்படை மற்றும் இந்திய கப்பற்படையுடன் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கை காரணமாக அக்டோபர் 2019-ல் அரபிக் கடலில் அடுத்தடுத்து ஏற்பட்ட மூன்று புயல்களில் 1,300 ஆழ்கடல் படகுகளும், 15,000 மீனவர்களும் பத்திரமாக கரைக்கு கொண்டுவரப்பட்டனர்.

2020 மார்ச் 17]

7.6 கடலில் மீனவர்களின் பாதுகாப்பு மற்றும் தொலைத் தொடர்பிற்கான நடவடிக்கைகள்

7.6.1 கம்பியில்லா தொலைத்தொடர்பு கருவிகள் வழங்குதல்

நிலைத்த வாழ்வாதாரத்திற்கான மீன் வள மேலாண்மைத் திட்டத்தின்கீழ் தமிழக கடலோர மாவட்டங்களில் உள்ள கடல் மீனவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்திடும்பொருட்டு அரசு கம்பியில்லா தொலைத்தொடர்பு வசதிகள் ரூ.66.14 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளன.

இந்த தொலைத்தொடர்பு கருவிகள் சிறந்த முறையில் செயல்பட தமிழகத்தின் 13 கடலோர மாவட்டங்களிலும் தொலைத்தொடர்பு வசதிகள் ஏற்படுத்தும்பொருட்டு, 13 கடலோர மாவட்டங்களையும் உள்ளடக்கி தொலை தொடர்பு கோபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

புதிதாக 100 மீட்டர் உயரமுள்ள 7 தொலைத்தொடர்பு கோபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளன (பழவேற்காடு-திருவள்ளூர் மாவட்டம், நெம்மேலி-செங்கல்பட்டு மாவட்டம், பரங்கிப்பேட்டை-கடலூர் மாவட்டம், கோடியக்கரை-நாகப்பட்டினம் மாவட்டம், கட்டுமாவடி-புதுக்கோட்டை மாவட்டம், வேம்பார்-தூத்துக்குடி மாவட்டம், உவரி-திருநெல்வேலி மாவட்டம்). கூடுதலாக, BSNL நிறுவனத்தினால் ஏற்கெனவே அமைக்கப்பட்ட 6 தொலைத்தொடர்பு கோபுரங்கள் (மரக்காணம்-விழுப்புரம் மாவட்டம், பாண்டிச்சேரியிலுள்ள கோலாஸ் நகர், காத்தான் சாவடி-நாகப்பட்டினம் மாவட்டம், காயல்பட்டினம்-தூத்துக்குடி மாவட்டம், முட்டம் மற்றும் சின்னமுட்டம்-கன்னியாகுமரி மாவட்டம்) மற்றும் காவல் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள 2 கோபுரங்களும் (நாகப்பட்டினம் மற்றும் சென்னை) வாடகை அடிப்படையில் பெறப்பட்டு மீனவர்களின் தகவல் தொடர்பு பரிமாற்றத்திற்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

மீனவர்கள் கடலில் தங்கள் மீன் பிடி கலன்களிலிருந்து கரைப்பகுதியில் தொடர்புகொள்ள ஏதுவாக 15 இடங்களில் கட்டுப்பாட்டு அறைகள் அமைக்கப்பட்டுள்ளன. மீன் வளத் துறையினால் இந்த கட்டுப்பாட்டு அறைகளிலிருந்து மீனவர்களுக்கு வானிலை அறிக்கை மற்றும் முக்கியமான பல்வேறு தகவல்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இவை தவிர, சென்னை மீன் துறை இயக்குநர் அலுவலகத்தில் ஒரு மைய கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டுள்ளது.

[2020 மார்ச் 17

இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப்படகுகளுக்கு 100 விழுக்காடு மானியத்தில் 15,004 எண்ணம் 5 வாட் VHF கைபேசி கருவிகளும் மற்றும் விசைப் படகுகளுக்கு 75 விழுக்காடு மானியத்தில் 2,535 எண்ணம் 25 வாட் VHF கருவிகளும் ஆக மொத்தம் 17539 VHF கருவிகளும் தொலைத்தொடர்பு கருவிகளும் மீனவப் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

அதிக அளவில் VHF கருவிகள் மீனவர்களுக்கு வழங்கப்பட்டு தடையற்ற தொலைத்தொடர்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டன. உலகளவில் இதுவே முதல் முறையாகும். மீனவர்களின் பாதுகாப்பினை உறுதிசெய்வதற்கான தமிழக அரசின் அர்ப்பணிப்பினை இது காண்பிக்கிறது.

7.6.2 விசைப்படகுகளில் ''டிரான்ஸ்பாண்டர்கள்'' (Transponders) பொருத்துதல்

மத்திய அரசானது, 200 கடல் மைல்களுக்கு அப்பால் ஆழ்கடலில் மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்களைக் கண்காணித்திடவும், மீன் பிடிப்பில் இருக்கும் படகுகளுக்கு தகவல் தெரிவித்திடவும், ஆபத்து காலங்களில் உதவிகள் புரிந்திடும்பொருட்டு இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையத்தின்மூலம் "டிரான்ஸ்பாண்டர்களை" உருவாக்கியுள்ளது. சென்னை, கடலூர், நாகப்பட்டினம், தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களைச் சேர்ந்த 507 விசைப்படகுகளில் சோதனை அடிப்படையில் ''டிரான்ஸ்பாண்டர்கள்'' பொருத்தப்பட்டுள்ளன. வரும் ஆண்டுகளில் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து விசைப்படகுகளிலும் டிரான்ஸ்பாண்டர்கள் பொருத்தும் பணி மேற்கொள்ளப்படும்.

7.6.3 செயற்கைக்கோள் தொலைபேசி , ''நேவிக்'' (NAVIC) மற்றும் ''நேவ்டெக்ஸ்'' (NAVTEX) தொலைத்தொடர்பு சாதனங்கள் வழங்குதல்

2018-2019 ஆம் ஆண்டில், ஆழ்கடல் மீன் பிடிப்பில் ஈடுபட்டு வரும் 80 விசைப்படகு குழுக்களுக்கு, 160 செயற்கைக்கோள் தொலைபேசி, 200 நேவிக் மற்றும் 80 நேவ்டெக்ஸ் கருவிகள் 100 விழுக்காடு மானிய உதவியில் ரூ.2.28 கோடி மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளன.

2020 மார்ச் 17]

7.6.4 "தூண்டில்"-கைபேசி செயலியுடன் கூடிய இணையதள சேவை

மீன் பிடிப்பிற்காக கடலுக்குச் செல்லும் மீனவர்கள் மற்றும் மீன் பிடி கலன்களை கண்காணிப்பதின்மூலம் மீனவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்திடவும், மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்களின் விவரங்களை பதிவு செய்திடவும், தமிழ்நாடு மீன் வளத் துறை, மத்திய அரசு புவி அறிவியல் அமைச்சகத்தின் தேசிய கடலோர ஆராய்ச்சி நிலையம் (NCCR), இந்திய தேசிய பெருங்கடல் தகவல் மற்றும் சேவை மையம் (INCOIS) இந்திய வானிலைத் துறையுடன் (IMD) இணைந்து, 15.11.2018 அன்று "தூண்டில்" எனும் கைபேசி செயலியுடன்கூடிய இணையதள சேவை துவக்கி வைக்கப்பட்டது.

இந்தத் "தூண்டில்" எனும் கைபேசி செயலியுடன் கூடிய இணையதள சேவையானது, அரசு நிருவாகத்திற்கு உதவுவதுடன், கடலில் மீனவர்கள் தங்களின் இருப்பிடம், கடற்பயண பதிவுகள், பாதுகாப்பாக செல்ல வழிகாட்டி, மீன் அதிகம் கிடைக்கும் பகுதிகளை கைபேசியில் பதிவு செய்தல், இன்காய்ஸ் (INCOIS) நிறுவனத்திலிருந்து மீன் அதிகம் கிடைக்கும் இட விவரங்களை பெறுதல், மாறி வரும் வானிலை, புயல், அதிக மழை, கடல் அலை உயர்வு போன்ற விவரங்களை உடனடியாக தெரிந்து, அதன்மூலம் மீனவர்கள் தங்களின் பாதுகாப்பினை உறுதி செய்திடவும் உதவுகிறது.

கடலுக்குச் செல்லும் மீனவர்கள் மற்றும் மீன் பிடி கலன்களைக் கண்காணித்திடும்பொருட்டு, அவ்விவரங்கள் தூண்டில் கைபேசி செயலியில் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகின்றன.

7.7. பேரிடரினால் பாதிக்கப்பட்டோர்களுக்கு நிவாரணம் வழங்குதல்

7.7.1 சுழல் நிதியம் ஏற்படுத்துதல்

எதிர்பாரா சூழ்நிலைகளில் சேதமடையும் மீன் பிடி படகுகள்/மீன் பிடி உபகரணங்கள்/வீடுகளுக்கு உடனடி நிவாரணம் வழங்கிடும்பொருட்டு புதிய திட்டமாக ரூ.1.30 கோடி செலவில் சுழல் நிதியம் ஏற்படுத்தப்பட்டு ஒரு கடலோர மாவட்டத்திற்கு ரூ.10 இலட்சம் வீதம் மேற்படி தொகை 13 கடலோர மாவட்ட ஆட்சியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

[2020 மார்ச் 17

2019-2020 ஆம் ஆண்டில் எதிர்பாரா சூழ்நிலைகளால் பாதிக்கப்பட்ட திருவள்ளூர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களைச் சேர்ந்த 31 மீனவக் குடும்பங்களுக்கு மீன் பிடி படகுகளுக்கான சேத நிவாரணத் தொகையாக ரூ.5.78 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

7.7.2. “கஜா” புயல் பாதிப்பு நிவாரணப் பணிகள்

“கஜா” புயலால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு மாநிலப் பேரிடர் நிவாரண நிதி மற்றும் மாநில நிதியிலிருந்து ரூ.53.71 கோடி நிவாரணமாக வழங்கப்பட்டது. கஜா புயலால் முழுமையாக சேதமடைந்த 195 மீன் பிடி விசைப்படகுகள், பகுதி சேதமடைந்த 1,429 மீன் பிடி விசைப்படகுகள், முழுமையாக சேதமடைந்த 1,051 கண்ணாடி நாரிழைப் படகுகள், பகுதி சேதமடைந்த 2,942 கண்ணாடி நாரிழைப் படகுகள், சேதமடைந்த 6,157 இயந்திரங்கள் மற்றும் சேதமடைந்த 10,648 மீன் பிடி வலைகளுக்கு நிவாரண உதவிகள் வழங்கப்பட்டு, மீனவர்கள் தொடர்ந்து மீன் பிடித்தொழில் செய்வதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஆணையிடப்பட்டதன்படி, கஜா புயலினால் பாதிக்கப்பட்ட மீனவர்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும்பொருட்டு, முழுவதும் சேதமடைந்த 1,051 கண்ணாடி நாரிழைப் படகுகள் மற்றும் வலைகளுக்கான நிவாரணம் சிறப்பினமாக ரூ.85,000 லிருந்து ரூ.1,50,000 ஆக உயர்த்தப்பட்டு நிவாரணத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

மேலும், கஜா புயலினால் கடலோரத்தில் தூக்கியெறியப்பட்டு, மண்ணில் புதைந்து மற்றும் புதர்களில் சிக்கி சேதமடைந்த மீன் பிடி படகுகளை மீட்டெடுக்க ரூ. 36.03 இலட்சம் அரசு வழங்கியுள்ளது.

7.7.3. கஜா புயல் மறு கட்டமைப்பு, மறுவாழ்வு மற்றும் புனரமைப்பு திட்டப் பணிகள்

கஜா புயலினால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களைச் சார்ந்த மீனவர்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்திடும்பொருட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த 18-7-2019 அன்று தமிழக சட்டசபையில் வெளியிட்ட அறிவிப்பின்படி, கஜா புயல் மறுகட்டமைப்பு, மறுவாழ்வு மற்றும் புனரமைப்புத் திட்டப் பணிகளுக்காக ரூ.31.15 கோடி ஒப்பளிக்கப்பட்டது. இத்திட்டமானது,

2020 மார்ச் 17]

ஏழு உப திட்டங்களாக செயல்படுத்தப்பட்டு, கஜா புயலால் பாதிக்கப்பட்ட மீனவர்களின் வாழ்வாதாரம் மேம்படுத்தப்படும்.

அதன் விவரம் பின்வருமாறு:

அட்டவணை: 4

(ரூ.இலட்சங்களில்)

வ. எண்	உப திட்டத்தின் பெயர்	அரசு பங்களிப்பு (75%)	பயனாளர் பங்களிப்பு (25%)	மொத்தம்
1	சுகாதாரமான மீன் உலர் தளங்கள் மற்றும் சூரிய உலர்த்திகள் அமைத்தல்	272.28 (100%)	--	272.28
2	மீன் வளர் சூழலை மீள ஏற்படுத்திட செயற்கை உறைவிடங்கள் அமைத்தல்	1850.00 (100%)	--	1850.00
3	கடல்/உவர்நீர் மீன் வளர் குஞ்சு வங்கிகள் அமைத்தல்	593.46	197.82	791.28
4	ஒருங்கிணைந்த கடல் மீன் வளர்ப்பு அலகுகள் அமைத்தல்	156.45	52.15	208.60
5	மீனவ மக்களின் மாற்று வாழ்வாதார திட்டமாக மெல்லுடலிகள் வளர்த்தல்	48.24	16.08	64.32
6	மீனவ இளைஞர்கள்/மீனவ மகளிர்க்கு நடமாடும் மீன் விற்பனை நிலையங்கள் வழங்குதல்	180.00	60.00	240.00
7	கடற்பாசி வளர்ப்பினை ஊக்குவித்தல்	15.00	4.50	19.50
	மொத்தம்	**3115.43**	**330.55**	**3445.98**

1. நாகப்பட்டினம், தஞ்சாவூர், புதுக்கோட்டை, கடலூர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் சுகாதாரமான மீன் உலர் தளங்கள் மற்றும் சூரிய உலர்த்திகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

2. நாகப்பட்டினம், தஞ்சாவூர், புதுக்கோட்டை, கடலூர், திருவாரூர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களின் 60 இடங்களில் செயற்கை உறைவிடங்கள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம் மத்திய கடல் வள ஆராய்ச்சி நிலையத்தின் தொழில்நுட்ப உதவியுடன் செயல்படுத்தப்படும். செயற்கை உறைவிட வடிவமைப்புப் பணியானது இத்துறையின் பொறியியல் பிரிவால் மேற்கொள்ளப்பட்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

3. இப்புயலால் பாதிக்கப்பட்ட மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திடும்பொருட்டு கடல்/உவர்நீர் மீன் வளர் குஞ்சு வங்கி அமைத்தல், ஒருங்கிணைந்த கடல்வாழ் உயிரின வளர்ப்பு அலகுகள் அமைத்தல் மற்றும் மீனவ இளைஞர்களுக்கு நடமாடும் மீன் விற்பனை நிலையங்கள் அமைத்தல் ஆகிய திட்டங்களை ஒருங்கிணைத்து 15 உறுப்பினர்களைக் கொண்ட கூட்டு குழுக்களுக்கு வழங்கப்படவுள்ளது. அதன்படி 27 அலகுகள் நாகப்பட்டினம், தஞ்சாவூர், புதுக்கோட்டை, கடலூர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் செயல்படுத்தப்படும்.

4. பாதிக்கப்பட்ட மீனவ மகளிரின் மாற்று வாழ்வாதாரத் திட்டமாக கடற்பாசி வளர்த்தலை ஊக்குவிக்கும்பொருட்டு, 72 மீனவ மகளிர் குழுக்களுக்கு 1,200 கடற்பாசி வளர்ப்பு மிதவைகள் வழங்கப்படும்.

5. புதுக்கோட்டை மற்றும் கடலூர் மாவட்டங்களின் 6 மீனவ மகளிர் குழுக்களுக்கு மெல்லுடலிகள் வளர்ப்பிற்கென 144 மிதவைகள் வழங்கப்படும்.

7.7.4. "ஒகி" புயலினால் பாதிக்கப்பட்டோருக்கு வழங்கப்பட்ட நிவாரண உதவிகள்

ஒகி புயலின் போது இறந்த 27 மீனவர்களின் குடும்பங்கள் மற்றும் காணாமல் போய் இறந்ததாகக் கருதப்பட்ட 177 மீனவர்களின் குடும்பங்களுக்கு தமிழக அரசால் ரூ.40.08 கோடி நிவாரணத் தொகை வழங்கப்பட்டது. ஒகி புயலினால் சேதமடைந்த மீன் பிடிப் படகுகளுக்கு நிவாரண உதவியாக ரூ.8.44 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது.

2020 மார்ச் 17]

ஒகி புயலினால் உயிரிழந்த/காணாமல் போன மீனவர்களின் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு வாரிசுதாரருக்கு, அவரவர் கல்வித் தகுதியின் அடிப்படையில், 159 மீனவர்களின் வாரிசுதாரர்களுக்கு அரசுப் பணி வழங்கப்பட்டுள்ளது.

ஒகி புயலினால் காணாமல் போன 17 மீன் பிடிப் படகுகளை இழந்த குடும்பங்களுக்கு 50 விழுக்காடு மானியத்தில் ரூ. 60 இலட்சம் மதிப்பிலான சூரை மீன் பிடித் தூண்டில் மற்றும் செவுள் வலை விசைப்படகுகள் கட்டும் திட்டத்தின்கீழ் படகுகள் கட்டுவதற்கு பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

7.7.5. கடலோர பேரிடர் அபாயக் குறைப்புத் திட்டம் (CDRRP)

மீன் பிடி தொழிலும் மீனவ சமுதாயமும் இயற்கை இடர்பாடுகள், பருவகால மாற்றம் மற்றும் அழிந்துவரும் கடல் சுற்றுப்புறச் சூழல் ஆகியவற்றால் அதிக பாதிப்புக்குள்ளாகும் நிலை ஏற்பட்டுள்ளது. கடல் மீன் வளத்தை மேம்படுத்தவும், மீனவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும், "கடலோர பேரிடர் அபாய குறைப்புத் திட்டத்தினை (CDRRP)" செயல்படுத்திட உலக வங்கி ரூ.325.91 கோடி நிதி ஒப்பளித்துள்ளது.

அ. மீன் வளத் துறை உட்கட்டமைப்பு

அவசரகால சுனாமி மறுசீரமைப்பு கட்டமைப்பு பணிகள் முடிவடைந்துள்ளன. புதிதாக மேற்கொள்ளப்பட்ட பணிகளில் ரூ.60 கோடி செலவில் மல்லிப்பட்டினம் மீன் பிடித் துறைமுகம் மற்றும் புன்னக்காயல் மீன் இறங்குதளம் ரூ.18 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

ஆ. நிலைத்த வாழ்வாதாரத்திற்கான மீன் வள மேலாண்மைத் திட்டம்-II (FIMSUL-II)

உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் நிலைத்த வாழ்வாதாரத்திற்கான மீன் வள மேலாண்மை திட்டம்-II மூலம் மீனவர்களின் சமூகப் பொருளாதார முன்னேற்றத்திற்காக தொழில் மேம்பாட்டுப் பயிற்சிகள், திறன் மற்றும் தொழில் மேம்பாட்டுப் பயிற்சிகள், கூண்டுகளில் மீன் வளர்த்தல், ஆளி மற்றும் சிப்பி வளர்ப்பு, கடற்பாசி வளர்த்தல் போன்ற மாற்று வாழ்வாதாரத்திற்கான உதவிகள் வழங்குதல், மீன் பிடிக்கும் போது கடலில் ஏற்படும் ஆபத்துக் காலங்களில் தொடர்புகொள்ள ஏதுவாக பாரம்பரிய மீன்

[2020 மார்ச் 17

பிடிக் கலன்கள் மற்றும் இயந்திரமயமாக்கப்பட்ட படகுகளுக்கு கம்பியில்லா தொலைத்தொடர்பு கருவிகள் வழங்குதல் போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

கடல் மீனவ மகளிரின் சமூக நிலையை மேம்படுத்திடும்பொருட்டு, கடற்பாசி உப பொருட்கள் தயாரிக்கும் திட்டம் ரூ.3.93 கோடி செலவில் மத்திய உப்பு மற்றும் கடல் வேதியியல் ஆராய்ச்சி நிலையத்தின் (CSMCRI) தொழில்நுட்ப உதவியுடன் இராமநாதபுரம் மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் பகுதியில் கடலில் மிதவைக் கூடுகள் அமைத்து மீன் வளர்ப்பில் ஈடுபடும் மீனவர்களுக்கு தொடர்ந்து மீன் குஞ்சுகள் வழங்கிடும்பொருட்டு, ரூ.1.07 கோடி செலவில் கடல் மீன் குஞ்சு வளர்ப்பு நிலையம் நிறுவப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

கடல் மீன் வளத்தை சிறந்த முறையில் நிருவகிக்க கிராம, மாவட்ட மற்றும் மண்டல அளவில் கூட்டு மேலாண்மைக் குழுக்கள் 13 கடலோர மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ளன. மாநில அளவிலும் கூட்டு மேலாண்மைக் குழு அமைக்கப்பட்டுள்ளது. உள்ளூர் மீனவர்களையும் அதன் பங்கு உரிமையாளர்களையும் ஒருங்கிணைத்து, மீன் பிடி துறைமுகங்கள்/மீன் இறங்கு தள மேலாண்மைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அன்றாடம் சுகாதாரமான முறையில் மீன் பிடித் துறைமுகங்கள்/மீன் இறங்கு தளங்களைப் பராமரிக்கத் தேவையான நிதி ஆதாரங்களைப் பெருக்கி பராமரிப்பதன்மூலம் இக்குழுக்கள் சுகாதாரத்தையும், மீனின் தரத்தினையும் உறுதி செய்கிறது.

7.8 தமிழக மீனவர்களின் பாரம்பரிய மீன் பிடி உரிமையைப் பாதுகாத்தல்

7.8.1 கச்சத் தீவினைத் திரும்பப் பெறுதல்-பிரச்சினைகள் மற்றும் தற்போதைய நிலை

கச்சத் தீவினை இந்தியாவிற்கு மீளப்பெறுதல் மற்றும் பாக் வளைகுடா பகுதியில் பாரம்பரிய மீன் பிடிப்பில் ஈடுபடும் தமிழக மீனவர்களின் உரிமையை நிலைநாட்டுதல் ஆகியவற்றை தமிழக அரசு முதன்மையான குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

இவை தவிரவும், மறைந்த முன்னாள் தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ ஜெயலலிதா அவர்களால் தனிப்பட்ட முறையில் 2008 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றத்தில் கச்சத் தீவினை மீட்பது தொடர்பாக

2020 மார்ச் 17]

தொடரப்பட்ட வழக்கு எண் W.P. No. 561/2008 இல், தமிழக அரசின் வருவாய்த் துறையினை ஒரு வாதியாக இணைத்துக்கொள்ள உரிய பிரேரணை சமர்ப்பித்திட, கடந்த 2011 ஆம் ஆண்டு நடைபெற்ற முதல் தமிழக சட்டமன்றக் கூட்டத்தொடரில் ஏகமனதாக தீர்மானம் கொண்டுவரப்பட்டது. இத்தீர்மானத்தின்படி, மேற்காணும் வழக்கில், வருவாய்த் துறையினையும் வாதியாக இணைத்துக்கொள்ள, தமிழக வருவாய்த் துறையினரால் இணைப்பு பிரேரணை ஒன்று உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கச்சத் தீவை திரும்பப் பெற மத்திய அரசினை வலியுறுத்தி 3.5.2013 அன்று தமிழக சட்டமன்றக் கூட்டத் தொடரில் தமிழக அரசு ஒரு தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்றியது. மேலும், கச்சத் தீவினை திரும்பப் பெறவும், பாரம்பரிய மீன் பிடிப் பகுதிகளில் மீன் பிடிக்கும் உரிமையை இலங்கை அரசு தடுக்காமல் இருப்பதற்கும், தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மத்திய அரசு எடுக்க வேண்டும் என்று கடந்த 5.12.2014 அன்று தமிழக சட்டமன்றக் கூட்டத்தில் தமிழக அரசால் மேலும் ஒரு தீர்மானம் ஏகமனதாக இயற்றப்பட்டுள்ளது.

7.8.2 இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் துன்புறுத்தப்படுவதைத் தடுக்கவும், கைது செய்யப்பட்ட மீனவர்கள் மற்றும் அவர்களது மீன் பிடிப் படகுகளை விடுவிக்கவும் அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

தமிழ்நாட்டு மீனவர்கள் தொன்றுதொட்டு பாரம்பரியமாக அனுபவித்து வரும் மீன் பிடி உரிமையை நிலைநாட்டிப் பாதுகாத்திட தமிழ்நாடு அரசு உறுதியுடன் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாட்டு மீனவர்கள் மீதான இலங்கை கடற்படையினரின் தொடர் தாக்குதல் நிகழ்வுகள், துன்புறுத்துதல், சிறைபிடித்தல் மற்றும் நீண்ட நாட்களாக நமது அப்பாவி மீனவர்களை இலங்கையில் சிறைவைத்தல் ஆகிய நிகழ்வுகளை தவிர்ப்பதில் ஆழ்ந்த அக்கறை கொண்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், இதுவரை பலமுறை கடிதங்கள் வாயிலாக இந்நிகழ்வுகளை மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று தூதரக ரீதியிலான நடவடிக்கைகளை மேற்கொள்ள வலியுறுத்தி வருகிறார்கள்.

மேலும், மத்திய அரசு தனது அனைத்துவிதமான தூதரக ரீதியிலான நடவடிக்கைகளை மேற்கொண்டு, கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்களை உடனடியாக விடுவித்திடுவதை உறுதி செய்யவும், மீண்டும் அத்தகைய நிகழ்வுகள் நடப்பதைத் தடுத்திடவும், தீர்க்கமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மத்திய அரசை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள்.

2019-2020 ஆம் ஆண்டில் இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்ட தமிழ்நாட்டைச் சேர்ந்த 215 மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டு, தமிழகம் அழைத்து வரப்பட்டனர். மேலும், மீட்கும் நிலையில் இருந்த 36 மீன் பிடிப் படகுகள் மீட்டு வரப்பட்டன. மீதமுள்ள 14 மீனவர்கள் மற்றும் 59 மீன் பிடிப் படகுகளை விடுவிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

7.8.3 மீனவர் அளவிலான பேச்சுவார்த்தை

பாக் வளைகுடாப் பகுதியில் மீன் பிடிப்பதில் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்க்கும்பொருட்டு, இந்திய மற்றும் இலங்கை மீனவர்களுக்கிடையே கலந்துரையாடலை மேற்கொள்வதென்றும், அச்சமயம் இருதரப்பினரும் ஒப்புக்கொண்ட விடயங்களை மேல் நடவடிக்கைக்காக கூட்டுப் பணிக் குழு முன்பு வைப்பது எனவும், ஜனவரி 2012-ல் நடைபெற்ற இருநாட்டு அமைச்சகங்களுக்கிடையேயான கூட்டம் மற்றும் நான்காவது கூட்டுப் பணிக் குழு கூட்டங்களில் கொள்கை அளவில் ஒப்புக்கொள்ளப்பட்டது. தமிழ்நாட்டு மீனவ சமுதாயத்தின் விருப்பம் மற்றும் உணர்வுகளைக் கருத்திற்கொண்டு, பாக் வளைகுடா பகுதியில் மீன் பிடிக்கும்போது ஒவ்வொரு நாளும் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண இலங்கை மீனவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்திடவும், இருநாட்டு மீனவர் சமுதாயங்களுக்கிடையே நேரடியாக கருத்துகளை பரிமாறுவதற்கான அவசியத்தின் பொருட்டும், தமிழ்நாடு அரசால் மீனவர் அளவிலான நான்கு சுற்று பேச்சுவார்த்தைகள் நடத்த வழிவகை செய்யப்பட்டது.

7.8.4 மீன் வளத்தின் மீதான இந்திய இலங்கை கூட்டுப் பணிக் குழு

இதுவரை 3 சுற்று இந்திய இலங்கை கூட்டுப் பணிக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. இக்கூட்டங்களின் போது இலங்கை

2020 மார்ச் 17]

கடற்படையினரால் கைது செய்யப்பட்ட தமிழ்நாடு மீனவர்களையும், முடக்கி வைக்கப்பட்டுள்ள அவர்களது மீன் பிடிப் படகுகளையும் மீன் பிடி உபகரணங்களோடு விடுவித்திடவும் வலியுறுத்தப்பட்டது.

7.9 மீன் வள உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்

அரசு பல்வேறு நிதி ஆதாரங்களின் உதவி பெற்று உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது. மீன்களை சுகாதாரமான முறையில் கையாண்டு, நுகர்வோருக்கு தரமான மீன்களை வழங்குவதற்கான பல்வேறு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. இதன்மூலம் ஏற்றுமதி மதிப்பு உயர்வதோடு மீனவர்களுக்கு அதிக வருவாய் ஈட்டிடவும் உதவுகிறது.

7.9.1. நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகாரில் மீன் பிடித் துறைமுகம் அமைத்தல்

நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகாரில், மீன் பிடித் துறைமுகம் மத்திய அரசின் பங்களிப்புடன் ரூ.148 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளது. தமிழக அரசு ரூ.178 கோடி மதிப்பீட்டிற்கு திருத்திய நிருவாக ஒப்புதல் வழங்கியதுடன், ரூ. 30 கோடியினை விடுவிக்க உள்ளது. தெற்கு பிரதான அலைதடுப்புச் சுவர் 1100 மீட்டர் நீளத்திலும், வடக்கு அலைதடுப்புச் சுவர் 390 மீட்டர் நீளத்திலும் மற்றும் படகு அணையும் தள கட்டுமானப் பணிகள் உட்பட அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இத்துறைமுகத்தினை 7.3.2020 அன்று மீனவர்களின் பயன்பாட்டிற்காகத் திறந்து வைத்தார்.

7.9.2. இராமநாதபுரம் மாவட்டம், மூக்கையூரில் மீன் பிடித் துறைமுகம் கட்டுதல்

இராமநாதபுரம் மாவட்டம், மூக்கையூர் கிராமத்தில் ரூ.113.90 கோடி மதிப்பீட்டில் மத்திய மற்றும் மாநில அரசின் பங்களிப்புடன் மீன் பிடித் துறைமுகம் கட்டப்பட்டுள்ளது. தமிழக அரசு ரூ.128.70 கோடி மதிப்பீட்டிற்கு திருத்திய நிருவாக ஒப்புதல் வழங்கியதுடன், ரூ.14.80 கோடியினை விடுவித்துள்ளது. பாக் வளைகுடாப் பகுதியில் உள்ள மீன் பிடி படகுகளின் நெருக்கத்தைக் குறைக்கும் நோக்கத்துடன், இந்தத் துறைமுகம் திட்டமிடப்பட்டது.

இத்துறைமுகத்தில், அலைத் தடுப்புச் சுவர், படகு அணையும்

தளம், மீன் ஏலக்கூடம், தடுப்புச் சுவர், மீன் உலர்தளம், வலைபின்னும் கூடம் மற்றும் இதர கட்டுமான வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. மூக்கையூர் மீன் பிடித் துறைமுகம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 4-3-2019 அன்று மீனவர்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டு, தற்போது உபயோகத்தில் உள்ளது.

7.9.3. நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடியில் மீன் பிடித் துறைமுகம் அமைத்தல்

நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடியில் ரூ.120 கோடியில் மீன் பிடித் துறைமுகம் அமைப்பதற்கு மத்திய அரசின், மீன் வளம் மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்பு உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் (FIDF) மாநில அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. வடக்கு அலைத் தடுப்புச் சுவர் 330 மீ. நீளம், தெற்கு அலைத்தடுப்புச் சுவர் 1,060 மீ. நீளம் மற்றும் பிடிக்கப்படும் மீன்களை தரமான முறையில் கையாள்வதற்கான இதர கரையோர வசதிகளும் அமையும் விதத்தில் இம்மீன் பிடித் துறைமுகம் வடிவமைக்கப்பட்டு, பணிகள் முன்னேற்றத்திலுள்ளன.

7.9.4. திருவள்ளூர் மாவட்டம், திருவொற்றியூர் குப்பத்தில் சூரை மீன் பிடித் துறைமுகம் அமைத்தல்

திருவள்ளூர் மாவட்டம், திருவொற்றியூர் குப்பத்தில் சூரை மீன் பிடித் துறைமுகம் ரூ.200 கோடி மதிப்பீட்டில் அமைப்பதற்கான விரிவான திட்டக் கருத்துரு தயாரிக்கப்பட்டு, மத்திய அரசின், மீன் வளம் மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்பு உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் (FIDF) மாநில அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. 510 மீ. நீளம் வடக்கு அலைத் தடுப்புச் சுவர், 849 மீ. நீளம் தெற்கு அலைத்தடுப்புச் சுவர் மற்றும் சூரை மீன்களை சுகாதாரமான முறையில் கையாள்வதற்கான இதர கரையோர வசதிகளும் இம்மீன் பிடி துறைமுகத்தில் ஏற்படுத்தப்பட்டு பணிகள் துவக்கப்பட்டுள்ளன.

7.9.5. நாகப்பட்டினம் மாவட்டம், வெள்ளப்பள்ளத்தில் மீன் பிடித் துறைமுகம் அமைத்தல்

நாகப்பட்டினம் மாவட்டம், வெள்ளப்பள்ளம் கிராமத்தில் மீன் பிடித் துறைமுகம் அமைத்திட தொழில்நுட்ப பொருளாதார சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்து விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டதன் அடிப்படையில், ரூ.100 கோடியில் திட்ட

மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, மத்திய அரசின் மீன் வளம் மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்பு உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் (FIDF) மாநில அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. ஆரம்பகட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

7.9.6. கடலூர் மாவட்டம், முதுநகர் மீன் பிடித் துறைமுகத்தினைப் புனரமைத்தல்

கடலூர் மாவட்டம், முதுநகரில் மீன் பிடித் துறைமுகத்தினைப் புனரமைக்கும் பணிக்காக ரூ.100 கோடி மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, மத்திய அரசின் மீன் வளம் மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்பு உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் (FIDF) மாநில அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

7.9.7. மீன் இறங்குதளங்களை மேம்படுத்துதல் மற்றும் நேர்கல் சுவர்கள் நிலைப்படுத்துதல்

இராமநாதபுரம் மாவட்டம், குந்துக்கல் கிராமத்தில் ரூ.70 கோடி மதிப்பீட்டில், நபார்டு மற்றும் மத்திய அரசு நிதியுதவியுடன் மீன் இறங்குதளம் அமைப்பதற்கு அரசால் நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் 90 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டு, மேற்கொண்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேலும், தூத்துக்குடி மாவட்டம், வேம்பார், நாகப்பட்டினம் மாவட்டம், கோடியக்கரை, சின்னங்குடி, காமேஸ்வரம் மற்றும் புஷ்பவனம், கடலூர் மாவட்டம், தாழங்குடா, செங்கல்பட்டு மாவட்டம், சூலேரிக்காட்டுக்குப்பம், புதுக்கோட்டை மாவட்டம், கட்டுமாவடி, பொன்னகரம் ஆகிய இடங்களில் நபார்டு (NABARD-RIDF) வங்கி நிதியுதவியுடன் மொத்தம் ரூ.29.50 கோடி மதிப்பீட்டில் மீன் இறங்குதளங்கள் அமைக்க அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அனைத்து மீன் பிடி இறங்குதள கட்டுமானப் பணிகளும் முடிவு பெற்றுள்ளன.

மேலும், கன்னியாகுமரி மாவட்டம், குறும்பனையில், ரூ.11 கோடி மதிப்பீட்டில் மீன் இறங்குதளம் அமைப்பதற்கும், கடியப்பட்டினத்தில் ரூ.4 கோடி செலவில் கடலரிப்பு தடுப்புச் சுவர்களை நிலைப்படுத்துவதற்கும், பலப்படுத்துவதற்கும், அரசு நிருவாக ஒப்புதல் வழங்கியுள்ளது. இவ்விரண்டு பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.

[2020 மார்ச் 17

7.9.8. சுனாமி மறுசீரமைப்புத் திட்டத்தின்கீழ் மீன் இறங்குதளங்கள் அமைத்தல்

தமிழகத்தில் பல்வேறு கடலோர கிராமங்களில் பத்து புதிய மீன் இறங்குதளங்கள் அமைக்க, அரசு ரூ.49.97 கோடி ஒப்புதல் அளித்துள்ளது. அவற்றில் 9 இடங்களில் மீன் இறங்குதளங்கள் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. திருவள்ளூர் மாவட்டம், அண்ணாமலைச்சேரி மீன் இறங்குதள கட்டுமானப் பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளன.

7.9.9. கன்னியாகுமரி மாவட்டத்தில் மூன்று மீன் இறங்குதளங்கள் அமைத்தல்

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள பொழிக்கரை, கேசவன்புத்தன்துறை மற்றும் பள்ளம்துறை ஆகிய மூன்று இடங்களில் மீனவர்களின் தேவைகளை பூர்த்தி செய்திடும் விதமாக, தலா ரூ.4 கோடி மதிப்பீட்டில் மொத்தம் ரூ.12 கோடியில் மீன் பிடி இறங்குதளங்கள் அமைப்பதற்கு அரசின் நிருவாக மற்றும் நிதி ஒப்புதல் வழங்கப்பட்டு அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.

7.9.10. கன்னியாகுமரி மாவட்டம், நீரோடி, மார்த்தாண்டம் துறை, வள்ளவிளை ஆகிய இடங்களில் நேர்கல் அலை தடுப்பு சுவர்கள் கட்டுதல்

கன்னியாகுமரி மாவட்டம் நீரோடி, மார்த்தாண்டம்துறை, மற்றும் வள்ளவிளை ஆகிய கடற்கரை கிராமங்களில் கடல் அரிப்பினைத் தடுப்பதற்காக குறைந்த நீள நேர்கல் அலைத் தடுப்பு சுவர்கள் (Short Groynes) கட்டும் பணிக்கு ரூ.116 கோடி தமிழக அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அனைத்து பணிகளும் முன்னேற்றத்தில் உள்ளன.

7.9.11. திருவள்ளூர் மாவட்டம், பழவேற்காடு ஏரி முகத்துவாரத்தினை தற்காலிகமாக தூர்வாரும் இயந்திரம் கொண்டு திறத்தல்

பழவேற்காடு ஏரியை சுற்றியுள்ள 25 மீனவ கிராமங்களை சார்ந்த மீனவர்கள் கடலுக்கு சென்று மீன் பிடிப்பினை மேற்கொள்ள மிகுந்த சிரமத்திற்கு உள்ளாவதை கருத்தில் கொண்டு, பழவேற்காடு ஏரி முகத்துவாரத்தினை தூர்வாரும் இயந்திரம் கொண்டு தற்காலிகமாக ஆழப்படுத்திட அரசால் ரூ.1.5 கோடி நிதி ஒப்பளிக்கப்பட்டு,

2020 மார்ச் 17]

தூர்வாரும் பணிகள் முடிக்கப்பட்டு பாரம்பரிய படகுகள் சென்றுவர ஏதுவாக முகத்துவாரம் திறக்கப்பட்டுள்ளது. மீனவர்கள் கடலுக்குச் சென்று மீன் பிடிக்க மிகவும் உபயோகமாக உள்ளது.

7.9.12. "ஜியோ சிந்தடிக் குழாய்கள்" (Geo Synthetic Tubes) மூலம் கடலரிப்பினைத் தடுக்கும் முன்னோடித் திட்டம்

தேசிய கடல்சார் தொழில்நுட்ப நிறுவனம் (NIOT) கடலரிப்பினைத் தடுப்பதற்கு மணல் நிரப்பப்பட்ட "ஜியோ சிந்தடிக் குழாய்களை" உருவாக்கியுள்ளது. இந்நிறுவனம்மூலம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்ட இத்தொழில்நுட்பத்தினை பயன்படுத்தி விழுப்புரம் மாவட்டம், பொம்மையார்பாளையம் கிராமத்தில் கடல் அரிப்பினைத் தடுத்திட ரூ.19 கோடி மதிப்பீட்டில் நபார்டு வங்கி நிதி உதவியுடன் பணிகள் மேற்கொள்ளப்படும். நபார்டு திட்ட ஒப்புதல் குழு இத்திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.

7.9.13. விழுப்புரம் மாவட்டம், அழகன்குப்பம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டம், ஆலம்பரைகுப்பம் ஆகிய இடங்களில் கழுவேலி ஆற்றின் இரண்டு கரைகளிலும் மீன் பிடித் துறைமுகம் அமைத்தல்

விழுப்புரம் மாவட்டம், அழகன்குப்பம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டம், ஆலம்பரைகுப்பம் ஆகிய இடங்களில் கழுவேலி ஆற்றின் இரண்டு கரைகளிலும் மீன் பிடித் துறைமுகம் அமைப்பதற்காக மத்திய அரசின் மீன் வளம் மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்பு உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் (FIDF) அரசால் ரூ.235 கோடிக்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டது. இத்திட்டத்திற்கான ஒப்பந்த புள்ளிகள் கோரப்பட்டுள்ளன.

7.9.14. நாகப்பட்டினம் மாவட்டம், ஆற்காட்டுத்துறை கிராமத்தில் புதிய மீன் பிடி துறைமுகம் அமைத்தல்

நாகப்பட்டினம் மாவட்டம், ஆற்காட்டுத்துறை கிராமத்தில் புதிய மீன் பிடித் துறைமுகம் அமைப்பதற்காக மத்திய அரசின் மீன் வளம் மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்பு உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் (FIDF) அரசால் ரூ.150 கோடிக்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன.

[2020 மார்ச் 17

7.9.15. நாகப்பட்டினம் மாவட்டம், செருதூர் கிராமத்தில் வெள்ளையாறு ஆற்று முகத்துவாரம் தூர்வாரும் பணிகள்.

நாகப்பட்டினம் மாவட்டம், வெள்ளையாறு ஆற்று முகத்துவாரத்தில் ஒவ்வொரு வருடமும் மணல் திட்டு உண்டாகி முகத்துவாரம் அடைபடுவதால் மீனவர்கள் ஆற்றுமுகத்துவாரத்திலிருந்து கடலுக்குள் படகுகளை இயக்குவதற்கு மிகவும் சிரமம் ஏற்படுகிறது. எனவே, நாகப்பட்டினம் மாவட்டம், செருதூர் கிராமத்தில் வெள்ளையாறு ஆற்று முகத்துவாரத்தினை தூர்வாரும் பணிக்காக மாநில நிதித் திட்டத்தின்கீழ் 2019-2020 ஆம் ஆண்டிற்கு, அரசு ரூ.4 கோடி நிருவாக ஒப்புதல் வழங்கி பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

7.9.16. கன்னியாகுமரி மாவட்டம், சின்னமுட்டம் மீன் பிடித் துறைமுகத்தில் உட்பகுதி மற்றும் முகத்துவாரத்தில் தூர்வாரும் பணிகள்

சின்னமுட்டம் மீன் பிடித் துறைமுகத்தினைப் பயன்படுத்தி ஏறத்தாழ 15,000 மீனவர்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் பயனடைந்து வருகின்றனர்.

ஒகி புயலின் போது கடுமையான அலைகளினால் மணல் சேர்ந்ததன் காரணமாக துறைமுகத்தின் உட்பகுதி மற்றும் துறைமுகத்தின் முகத்துவார நுழைவுப் பகுதியில் ஆழம் குறைந்ததால் படகுகள் துறைமுக பகுதியிலிருந்து கடலுக்குச் சென்று வருவதற்கு சிரமம் ஏற்படுவதுடன், படகுகளுக்கு சேதமும் ஏற்பட்டுள்ளது. எனவே, சின்னமுட்டம் மீன் பிடித் துறைமுகத்தின் உட்பகுதி மற்றும் முகத்துவாரத்தில் துறைமுகத்தின் தூர்வாரும் பணிக்காக மாநில நிதி திட்டத்தின்கீழ் 2019-2020 ஆம் ஆண்டில் ரூ.3.2 கோடி அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

7.9.17. நான்கு மீன் பிடித் துறைமுகங்களில் மீன்களை சுகாதாரமான முறையில் கையாள்வதற்கு மீன் ஏலம் விடும் வசதிகள் மற்றும் மீன் பதப்படுத்தும் மையங்கள் ஏற்படுத்துதல்

வருடம்தோறும் கடல் மீன் உற்பத்தி அதிகரிப்பு மற்றும் கையாளுதல் காரணமாகவும் மற்றும் மீன்வள தேவைகளை கவனத்தில் கொண்டும், மீன்களை ஏற்றுமதி தரத்திற்கேற்ற சுகாதாரமான

முறையில் கையாளுவதற்கும் நாகப்பட்டினம் மீன் பிடி துறைமுகத்தில் ரூ.1.14 கோடி மதிப்பீட்டிலும், மூக்கையூர் மீன் பிடி துறைமுகத்தில் ரூ.1.05 கோடி மதிப்பீட்டிலும், குளச்சல் மீன் பிடி துறைமுகத்தில் ரூ.0.79 கோடி மதிப்பீட்டிலும், சின்னமுட்டம் மீன் பிடி துறைமுகத்தில் ரூ.0.31 கோடி மதிப்பீட்டிலும் குளிரூட்டும் அறைகளுடன்கூடிய முன்பதப்படுத்தும் கூடங்கள் மொத்தம் ரூ.3.29 கோடி மதிப்பீட்டில் மாநில நிதித் திட்டத்தின்கீழ் பணிகள் மேற்கொள்வதற்கு தமிழக அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிகள் விரைவில் துவக்கப்படவுள்ளன.

7.9.18. இராமநாதபுரம் மாவட்டம், ஆற்றங்கரை கிராமத்திலுள்ள முகத்துவாரத்தை ஆழப்படுத்தி திறக்கும் பணி

தற்பொழுதுள்ள வறட்சியாலும் மற்றும் ஆற்றின் நீரோட்டம் இல்லாமையாலும், இராமநாதபுரம் மாவட்டம், ஆற்றங்கரை கிராமத்திலுள்ள மீன் பிடிக் கால்வாய் மண் படிந்து முகத்துவாரம் மூடப்பட்டுள்ளது, அதனால் மீனவர்கள் கடலுக்குள் செல்ல இயலாத நிலை உள்ளது. இந்த நிலையை சரி செய்ய ரூ.72.69 இலட்சத்திற்கு இராமநாதபுரம் மாவட்டம் ஆற்றங்கரை கிராமத்திலுள்ள முகத்துவாரத்தை ஆழப்படுத்தி திறக்கும் பணிக்கு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

7.9.19. தூத்துக்குடி மாவட்டம், பெரியதாழை மீன் இறங்குதளத்தில் கடல் அரிப்பைத் தடுக்க நேர்கல் சுவர் மற்றும் மீன் இறங்குதள வசதிகள் அமைத்தல்

தூத்துக்குடி மாவட்டம், பெரியதாழை மீன் இறங்குதளத்தில் கடல் அரிப்பைத் தடுக்க நேர்கல் சுவர் மற்றும் மீன் இறங்குதள வசதிகள் அமைக்க நபார்டு (NABARD-RIDF) திட்டத்தின்கீழ் ரூ.29.89 கோடிக்கு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

7.9.20. நாகப்பட்டினம் மாவட்டம், நாகூர் கிராமத்தில் மீன் இறங்குதளத்தை மேம்படுத்த வடக்கு அலைத் தடுப்புச் சுவர் அமைத்து முகத்துவாரத்தை ஆழப்படுத்தி, மீன் இறங்குதளத்தை மேம்படுத்துதல்

நாகப்பட்டினம் மாவட்டம், நாகூர் கிராமத்தில் மீன் இறங்குதளத்தை மேம்படுத்தவும், வடக்கு அலைத் தடுப்புச் சுவர்

[2020 மார்ச் 17

அமைக்கவும் மற்றும் முகத்துவாரத்தை ஆழப்படுத்தவும் நபார்டு (NABARD-RIDF) திட்டத்தின்கீழ் ரூ.19.87 கோடிக்கு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

7.9.21. கன்னியாகுமரி மாவட்டம், புத்தன்துறை கிராமத்தில் மீன் இறங்குதளம் அமைத்தல்

கன்னியாகுமரி மாவட்டம், புத்தன்துறை கிராமத்தில் மீன் இறங்குதளம் அமைக்கும் பணிக்கு நபார்டு (NABARD-RIDF) திட்டத்தின்கீழ் ரூ.4.32 கோடிக்கு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

7.9.22. கன்னியாகுமரி மாவட்டம், தேங்காப்பட்டினம் மீன் பிடி துறைமுகத்திலுள்ள இரையுமன்துறை பகுதியில் அணுகுசாலை அமைத்தல்

கன்னியாகுமரி மாவட்டம், தேங்காப்பட்டினம் மீன் பிடித் துறைமுகத்திலுள்ள இரையுமன்துறை பகுதியில் அணுகுசாலை அமைக்கும் பணிக்கு நபார்டு (NABARD-RIDF) திட்டத்தின்கீழ் ரூ.1.71 கோடிக்கு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

7.9.23. இராமநாதபுரம் மாவட்டம், பாம்பன் கிராமத்தில் கடலரிப்பைத் தடுக்க தடுப்புச் சுவர் அமைக்கும் பணி

இராமநாதபுரம் மாவட்டம், பாம்பன் கிராமத்தில் கடலரிப்பைத் தடுக்க தடுப்புச் சுவர் அமைக்கும் பணிக்கு நபார்டு (NABARD-RIDF) திட்டத்தின்கீழ் ரூ.1.87 கோடிக்கு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

7.9.24. விருதுநகர் மாவட்டம், பிளவக்கல் கிராமத்தில் மீன்விதை பண்ணையை மேம்படுத்துதல்

விருதுநகர் மாவட்டம், பிளவக்கல் கிராமத்தில் மீன் விதைப் பண்ணையை மேம்படுத்துதல் பணிக்கு நபார்டு (NABARD-RIDF) திட்டத்தின்கீழ் ரூ.1.81 கோடிக்கு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

7.9.25. காஞ்சிபுரம் மாவட்டம், மணிமங்கலம் கிராமத்தில் உள்ள மீன் பண்ணையை மேம்படுத்துதல் மற்றும் அலங்கார மீன் வளர்ப்புப் பயிற்சி மையம் கட்டுதல்

காஞ்சிபுரம் மாவட்டம், மணிமங்கலம் கிராமத்தில் உள்ள மீன் பண்ணையை மேம்படுத்துதல் மற்றும் அலங்கார மீன் வளர்ப்புப்

பயிற்சி மையம் கட்டுதல் பணிக்கு நபார்டு (NABARD-RIDF) திட்டத்தின்கீழ் ரூ.2.85 கோடிக்கு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

7.9.26. இராமநாதபுரம் மாவட்டம், களிமண்குண்டு கிராமத்தில் உட்கட்டமைப்பு வசதி செய்தல்

இராமநாதபுரம் மாவட்டம், களிமண்குண்டு கிராமத்தில் ஏலக்கூடம், வலைபின்னும் கூடம் மற்றும் சிமெண்ட் சாலைகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் செய்ய ரூ.1.63 கோடிக்கு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதனால் மீனவர்கள் சுகாதாரமான முறையில் மீன்களைக் கையாண்டு எளிதில் எடுத்து சென்று விற்க ஏதுவாகும். இத்திட்டத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

7.9.27. நாகப்பட்டினம் மாவட்டம், பழையாறு மீன் பிடி துறைமுகத்தில் மீன் உலர்தளம் கட்டுதல்

நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள பழையாறு மீன் பிடித் துறைமுகத்தில் சுகாதாரமான முறையில் மீன்களை உலர்த்த ஏதுவாக, மீன் உலர்தளம் கட்ட ரூ.1.17 கோடிக்கு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

7.9.28. மீனவர்களுக்கான வீட்டு வசதி திட்டம்

மத்திய அரசின் நீலப் புரட்சி, “பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா”(PMAY) திட்டத்தின்கீழ் கடல் மற்றும் உள்நாட்டு மீனவர்களுக்கு ரூ.85 கோடியில் 5,000 வீடுகள் கட்டி வழங்கிட அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டத்தின்மூலம் இதுவரை 3098 மீனவர்கள் பயனடைந்துள்ளனர். மீனவர்களுக்கு வீடு கட்டி வழங்கப்படும் இத்திட்டம் 2020-2021 ஆம் ஆண்டும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

7.9.29. இராமநாதபுரம் மாவட்டம், மண்டபத்தில் மீன் துறை உதவிஇயக்குநர் அலுவலகத்திற்காக புதிய அலுவலகக் கட்டடம் கட்டுதல்

இராமநாதபுரம் மாவட்டம், மண்டபத்தில் மீன் துறை உதவி இயக்குநர் அலுவலகத்திற்காக புதிய அலுவலகம் கட்டும் பணிக்கென ரூ.0.78 கோடி மாநில நிதித் திட்டத்தின்கீழ் 2019-2020 ஆம் ஆண்டு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளிகள் இறுதியாக்கம் செய்யப்பட்டு, பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

[2020 மார்ச் 17

7.9.30. மதுரை, மீன் துறை துணை இயக்குநர் மற்றும் மீன் துறை உதவி இயக்குநர் அலுவலகத்திற்காக புதிய ஒருங்கிணைந்த அலுவலகக் கட்டடம் கட்டுதல்

மதுரை, மீன் துறை துணை இயக்குநர் மற்றும் மீன் துறை உதவி இயக்குநர் அலுவலகத்திற்காக புதிய ஒருங்கிணைந்த அலுவலகக் கட்டடம் கட்டும் பணிக்கென ரூ.1.22 கோடி மாநில நிதித் திட்டத்தின்கீழ் 2019-2020 ஆம் ஆண்டு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளிகள் இறுதியாக்கம் செய்யப்பட்டு, பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

7.10. உள்நாட்டு மீன் வள மேம்பாடு

நீர்வாழ் உயிரின வளர்ப்பு வேலைவாய்ப்பினை வழங்குவதோடு, வளர்ந்துவரும் மக்கள் தொகையின் ஊட்டச்சத்து தேவையினைப் பூர்த்தி செய்வதில் முக்கிய பங்கு வகிக்கின்றது. உள்நாட்டு மீன் வளம் மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்பின் முதன்மை நோக்கங்களாவன:

- மாநிலத்தின் உள்நாட்டு மீன் உற்பத்தியினை அதிகரிக்கச் செய்தல்
- மீன் குஞ்சு உற்பத்தியினை அதிகரித்து பெருகிவரும் மீன் குஞ்சுத் தேவையினை பூர்த்தி செய்தல்
- மீன் வளர்ப்போருக்கு தரமான மீன் குஞ்சுகளை விநியோகித்தல்
- மீன் வளர்ப்புப் பரப்பினை அதிகரித்தல்
- உள்நாட்டு நீர்வள ஆதாரங்களின் அளவு மற்றும் தரம் சார்ந்த மதிப்பீட்டினை மேற்கொண்டு அவற்றின் முழு திறனை கண்டறிதல்
- உள்நாட்டு நீர்நிலைகளின் உற்பத்தியினை அதிகரித்தல் மற்றும் மீன் உற்பத்தியினை மும்மடங்காக்குதல்
- வளம் மிகுந்த மற்றும் முறையாக பயன்படுத்தப்படாத வளங்களை முறையாக பயன்படுத்தி உணவு உற்பத்தி மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பினை உறுதிசெய்தல்
- ஊரகப் பகுதிகளில் மீன் மற்றும் மதிப்புகூட்டிய மீன் பொருட்கள் விற்பனை, வணிகம் மற்றும் ஏற்றுமதியினை ஊக்குவித்து கூடுதல் வேலைவாய்ப்பினை உருவாக்குதல்

2020 மார்ச் 17]

- பள்ளிகளில் மீன் வளக் கல்வி தொடர்பான திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளை அளித்தல்
- மீன் வளத்தினைப் பாதுகாத்தல், மேலாண்மை செய்தல் மற்றும் மேம்படுத்திட சட்டம், விதிகள் மற்றும் விதிமுறைகளை முறையாக செயல்படுத்துதல், மீன்பாசி குத்தகை கொள்கையினை ஏற்படுத்துதல் மேலும் வெளிநாட்டு மீன் இனங்களை சட்டவிரோதமாக கொண்டுவருவதைத் தடை செய்தல்
- உணவு மற்றும் ஊட்டசத்து பாதுகாப்பினை ஏற்படுத்தி ஆண்டுக்கு தரமான மீன் உண்ணும் அளவினை அதிகப்படுத்துதல்

7.10.1. உள்நாட்டு மீன் வளக் கொள்கை

ஊரகப் பகுதி மக்களுக்கு புரதச்சத்து மிக்க உணவினை வழங்கிடவும், ஊட்டச் சத்து பாதுகாப்பினை உறுதி செய்திடவும், தமிழ்நாடு உள்நாட்டு மீன் வளக் கொள்கை தயார் செய்யப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது. இதன்மூலம் தமிழ்நாட்டில் உள்நாட்டு நீர்வள ஆதாரங்களை முறையாகப் பராமரித்து, பாதுகாத்து நிலையான வாழ்வாதாரத்தினை வழங்கவும், வேலைவாய்ப்பினை அதிகரிக்கவும், உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பினை உறுதி செய்யவும், பொருளாதார மேம்பாட்டினை ஏற்படுத்தவும் வியூகம் வகுக்கப்பட்டுள்ளது.

7.10.2. உள்நாட்டு மீன் வளத்தில் மேற்கொள்ளப்பட்ட சிறப்பு முயற்சிகள்

தமிழ்நாட்டில் 3.83 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவிலான உள்நாட்டு நீர்நிலைகள் மீன் வளர்ப்பிற்கு உகந்ததாக உள்ளன. உள்நாட்டு நீர்நிலைகள் பெரும்பாலும் பருவ மழையினை நம்பி உள்ளன. மழை குறைபாடு, நீர்நிலைகளில் குறைவான நாட்கள் நீர் இருத்தல், நீர் இருக்கும் காலம் மற்றும் மீன்களின் இனவிருத்தி கால வேறுபாடு, குறைந்த விலையில் மீன் உணவு கிடைக்கப்பெறாமை மற்றும் தரமான மீன் உணவு கிடைக்கப்பெறாமை ஆகியவை மாநிலத்தின் உள்நாட்டு மீன் உற்பத்தியினை பாதிக்கின்றன. எனவே, இக்குறைபாடுகளை களைந்திட தமிழ்நாடு அரசு மீன் வளத் துறையின்மூலம் பின்வரும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:

- உள்நாட்டு மீன் உற்பத்தியினை அதிகரித்திட பாசனக் குளங்களில் மிதவை கூண்டுகளில் மீன் வளர்ப்பு மற்றும் கூண்டுகளில் மீன் குஞ்சு வளர்ப்பு செயல்முறை விளக்கம் செயல்படுத்தப்படுகிறது.

[2020 மார்ச் 17

- தமிழ்நாட்டில் வளம்மிக்க மற்றும் மீன் வளர்ப்பிற்கு உகந்த பல்வேறு துறைகளைச் சார்ந்த நீர் நிலைகள் தேர்வு செய்யப்பட்டு, மீன் வளத் துறையின்மூலம் பல்வேறு திட்டங்களின்கீழ் மீன் குஞ்சுகள் இருப்பு செய்யப்பட்டு வருகிறது.

- மீன் வளர்ப்போருக்கு பல்வேறு நவீன மீன் வளர்ப்புத் தொழில்நுட்பம் குறித்த திறன் மேம்பாட்டு பயிற்சி அளித்தல் மற்றும் மீன் வளத் துறை அலுவலர்களுக்கு உள்நாட்டு மீன் வளம் சம்பந்தமான சமீபத்திய தொழில்நுட்ப முன்னேற்றங்கள் தொடர்பாக உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் பயிற்சி அளித்தல்.

- பண்ணைக்குட்டைகள் மற்றும் பல்நோக்கு பண்ணைக்குட்டைகளில் வேளாண்மை மற்றும் கால்நடை வளர்ப்புடன் கூடிய மீன் வளர்ப்பினை ஒருங்கிணைத்து, அதன்மூலம் விவசாயிகளுக்கு கூடுதல் வருமானம் ஈட்ட வழிவகை செய்தல்.

- வேகமாக வளரும் மீன் இனங்களான அமூர் கெண்டை, ஜெயந்தி ரோகு, மரபு வழி மேம்படுத்தப்பட்ட பண்ணை திலேப்பியா மற்றும் பங்கேஷியஸ் போன்ற மீன் இனங்களை அறிமுகப்படுத்துதல்.

- மீன் குஞ்சு வளர்ப்பு தொகுப்புகள், மீன் வளர்ப்பு மற்றும் அலங்கார மீன் வளர்ப்பினை ஊக்குவித்து வேலைவாய்ப்பினை உருவாக்குதல்.

தமிழக அரசால் உள்நாட்டு மீன் வளத்தினைப் பெருக்கிட பின்வரும் புதிய உத்திகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:

- தமிழ்நாடு அரசு 4 மாவட்டங்களில் நீர்வாழ் உயிரின ஆய்வுக் கூடங்களை நிறுவி செயல்படுத்தி வருகிறது. இந்த நீர்வாழ் உயிரின ஆய்வுக்கூடங்கள் மீன் வளர்ப்பிற்கான நீர்த்தர ஆய்வு, மண் பரிசோதனை மற்றும் நோய் கண்டறிதல் வசதிகளை கொண்டுள்ளது. இதன்மூலம் தமிழ்நாட்டில் 18 மாவட்ட மீன் வளர்ப்போருக்கு சேவைகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இதன் முக்கிய சேவைகளாவன: மீன் பண்ணைகள் தொடர்பான புள்ளிவிவரம், மீன் பண்ணையாளர்களுக்கு மீன் பண்ணை பராமரிப்பு தொடர்பான சேவைகள், நீர்த்தர பரிசோதனை, நோய் கண்டறியும் வசதிகள் மற்றும் மீன் வளர்போருக்கு

2020 மார்ச் 17]

சிறந்த மேலாண்மை மற்றும் நவீன தொழில்நுட்பங்கள் குறித்த தொழில்நுட்ப ஆலோசனைகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

- அரசு மற்றும் தனியார் மீன் பண்ணைகளுக்குத் தரமான மீன் உணவினை வழங்கிட தஞ்சாவூர் மாவட்டத்தில் மீன் உணவு ஆலை நிறுவப்பட்டு, தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழகத்தின்மூலம் நிருவகிக்கப்பட்டு வருகிறது.

- மீன் குஞ்சுகளின் தரத்தினை மேம்படுத்திட தமிழ்நாடு அரசு மேட்டூர் அணை மற்றும் பவானிசாகர் அணை அரசு மீன் பண்ணைகளில் நல்விதை தேர்வு முறை இனப்பெருக்கத்திற்கு சினை மீன்களை தேர்வு செய்தல் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- தமிழ்நாடு அரசு நீர் பற்றாக்குறையை கருத்திற்கொண்டு நீர் மறுசுழற்சி முறையில் மீன் வளர்ப்பு தொழில்நுட்பத்தினை ஊக்குவித்து, நீர் பாதுகாப்பிற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இந்த தொழில்நுட்பத்தின்மூலம் நீரினை குறைவான அளவு உபயோகிக்கவும், நீரினை மறுமுறை உபயோகிக்கவும் செய்வதனால், இது மிகச் சிறந்த தீவிர முறை மீன் வளர்ப்பிற்கு உகந்ததாகும். நீர் மறுசுழற்சி முறையில் மீன் வளர்ப்பினை மேற்கொள்வதை ஊக்குவித்திட தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு விருப்பமுள்ள மீன் வளர்ப்போருக்கு நீர்மறுசுழற்சி மீன் வளர்ப்பு தொடர்பான தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்கி வருகிறது.

7.10.3. மாவட்ட மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள்

தமிழ்நாடு அரசு மீன் வளர்ப்பினை பிரபலப்படுத்தவும் ஊரகப் பகுதிகளில் வேலைவாய்ப்பினை உருவாக்கவும், சென்னை தவிர 31 மாவட்டங்களில் மாவட்ட மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகளை ஏற்படுத்தித் திறம்பட செயல்படுத்தி வருகிறது. இந்த மாவட்ட மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் அந்தந்த மாவட்ட ஆட்சியரின் தலைமையின்கீழ் செயல்பட்டு வருகின்றன.

விவசாயிகளுக்கு மீன் வளர்ப்பு தொடர்பான தொழில்நுட்பப் பயிற்சியளிப்பதுடன், மீன் வளர்ப்பிற்குத் தேவையான

மானியங்களை அளித்து, மீன் வளர்ப்பினை ஊக்குவித்தல் மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்குதல் ஆகியன மாவட்ட மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகளின் முக்கிய செயல்பாடுகளாகும். மாவட்டத்திலுள்ள மீன் குஞ்சு பொரிப்பகங்கள், மீன் குஞ்சு வளர்ப்புப் பண்ணைகள் மற்றும் மீன் பண்ணைகளை பதிவு செய்து பல்வேறு திட்டங்களின்மூலம் மீன் வளர்ப்போருக்கு மானிய உதவிகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

7.10.4 நீர்த்தேக்க மீன் வளம்

தமிழ்நாட்டில் பெரிய, நடுத்தர மற்றும் சிறிய வகை என மொத்தம் 62 நீர்த்தேக்கங்களில் மீன் வள மேலாண்மை மீன் துறையின் கட்டுப்பாட்டிலுள்ளது. அவற்றில் உள்நாட்டு மீன் வளத்தினைப் பெருக்கிட, 54 நீர்த்தேக்கங்கள் தமிழ்நாடு மீன் வளத் துறையின் கட்டுப்பாட்டிலும், 8 நீர்த்தேக்கங்கள் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் கட்டுப்பாட்டிலும் உள்ளன. மேற்படி நீர்தேக்கங்களின் மீன் வள மேலாண்மை மேற்கொள்ளப்பட்டு மாநிலத்தின் உள்நாட்டு மீன் உற்பத்தியினை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- நீர்த்தேக்கங்களில் மீன் உற்பத்தியினை பெருக்குவதும், நீர்த்தேக்கங்களை தங்களது வாழ்வாதாரமாகக் கொண்டுள்ள மீனவர்களின் வருவாயை அதிகரித்தல் ஆகியன நீர் தேக்க மீன் வள மேலாண்மையின் முக்கிய நோக்கமாகும்.
- மீன் வளத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள 54 நீர்த்தேக்கங்களின் மீன் பிடி உரிமை குத்தகைக்கு விடப்படுகிறது.
- 2019-2020 ஆம் ஆண்டில் 12 நீர்த்தேக்கங்கள் மீன்பாசி குத்தகையில் உள்ளன. 2012-2013 முதல் 2019-2020 வரை நீர்த்தேக்கங்களின் மீன்பாசி குத்தகையின்மூலம் ரூ.44.97 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. இதர நீர்த்தேக்கங்களை 2020-2021 ஆம் ஆண்டில் மீன்பாசி குத்தகைக்கு விட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- மீன் வளத் துறையின்மூலம் மீன் வளர்ப்பிற்கு உகந்த இதர நீர்தேக்கங்களிலும் அறிவியல் பூர்வமான மீன் வளர்ப்பினை மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன..

2020 மார்ச் 17]

7.10.5. தூண்டுதல் முறையில் மீன் குஞ்சு உற்பத்தி

தமிழ்நாட்டில் 10 அரசு மீன் குஞ்சு உற்பத்தி நிலையங்கள் மீன் வளத் துறையின் மூலமும், 1 மீன் குஞ்சு உற்பத்தி நிலையம் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் மூலமும் வெற்றிகரமாக செயல்பட்டு வருகின்றன.

அரசு மீன் குஞ்சு உற்பத்தி நிலையங்களின் விவரம் பின்வருமாறு:

அட்டவணை-5

அரசு மீன் குஞ்சு உற்பத்தி நிலையங்கள்

வ. எண்	அரசு மீன் குஞ்சு உற்பத்தி நிலையங்கள்	உற்பத்தி செய்யப்படும் மீன் குஞ்சுகள்	மாவட்டம்
1	மணிமுத்தாறு	கெண்டை	திருநெல்வேலி
2	கரந்தை	கெண்டை	தஞ்சாவூர்
3	தட்டான்குளம்	கெண்டை	தஞ்சாவூர்
4	நல்லிக்கோட்டை	கெண்டை	திருவாரூர்
5	திருக்காம் புலியூர்	கெண்டை	கரூர்
6	பவானிசாகர்	கெண்டை	ஈரோடு
7	மேட்டூர் அணை	கெண்டை	சேலம்
8	கிருஷ்ணகிரி	அமூர் கெண்டை மற்றும் மரபுவழி மேம்படுத்தப்பட்ட திலேப்பியா	கிருஷ்ணகிரி
9	பூண்டி	சாதா கெண்டை	திருவள்ளூர்
10	செம்பரம் பாக்கம்	மகூர்	காஞ்சிபுரம்
11	சாத்தனூர்	கெண்டை	திருவண்ணாமலை

[2020 மார்ச் 17

தமிழ்நாடு அரசு மீன் பண்ணைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை திறம்பட மேம்படுத்திட சமீப காலங்களில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. 2019-2020 ஆம் ஆண்டில் அரசு மீன் குஞ்சு உற்பத்தி நிலையங்களின்மூலம் 53.57 கோடி நுண் மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு அரசு தனியார் மீன் குஞ்சு பொரிப்பகங்கள் அமைத்திட தனியார் பண்ணையாளர்களை ஊக்குவித்து மானிய உதவிகளையும் வழங்கி வருகிறது.

வேகமாக வளரும் மீன்களை குறுகிய கால நீர்நிலைகளில் இருப்பு செய்திடும் நோக்குடன் மாநிலத்திலேயே சிறந்த முறையாக மரபு வழி மேம்படுத்தப்பட்ட திலேப்பியா மீன் குஞ்சு பொரிப்பகத்தினை அமைத்துள்ளது. தமிழ்நாடு, இந்தியாவிலேயே முதன்முறையாக மரபு வழி மேம்படுத்தப்பட்ட திலேப்பியா மீன் குஞ்சு பொரிப்பகத்தினை மீன் வளத் துறையின்மூலம் அமைத்திட மத்திய அரசின் அனுமதியினை பெற்று இராஜீவ்காந்தி மீன் வளர்ப்பு மையத்துடன் தொழில்நுட்ப புரிந்துணர்வு ஒப்பந்தத்தையும் மேற்கொண்டுள்ளது. மரபு வழி மேம்படுத்தப்பட்ட திலேப்பியா மீன் குஞ்சு பொரிப்பகம் கிருஷ்ணகிரி அரசு மீன் பண்ணையில் ஆண்டொன்றிற்கு 15 இலட்சம் மீன் குஞ்சுகள் உற்பத்தி திறனுடன் திறம்பட செயல்பட்டு தரமான மீன் குஞ்சுகளை மாநிலத்திலுள்ள மீன் வளர்ப்போருக்கும் மற்றும் அருகாமையிலுள்ள மாநிலங்களுக்கும் விநியோகித்து வருகிறது. தமிழ்நாடு அரசு மேலும், ஒரு மரபு வழி மேம்படுத்தப்பட்ட திலேப்பியா மீன் குஞ்சு பொரிப்பகத்தினை உலக வங்கி நிதியுதவியுடன் தமிழ்நாடு நீர்வள நிலவள திட்டத்தின்கீழ் தேனி மாவட்டம் மஞ்சளாறு அணை அரசு மீன் பண்ணையில் நிறுவி வருகிறது.

7.10.6. மீன் குஞ்சு வளர்ப்பு நிலையங்கள்

தமிழ்நாட்டில் 37 அரசு மீன் குஞ்சு வளர்ப்பு நிலையங்கள் மீன் வளத் துறையின் மூலமும், 5 மீன் குஞ்சு வளர்ப்பு நிலையங்கள் தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழகத்தின் மூலமும் செயல்பட்டு வருகின்றன. 2018-2019 ஆம் ஆண்டில் மொத்தம் 7.08 கோடி தரமான மீன் விரலிகள் வளர்த்தெடுக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளன. வளர்த்தெடுக்கப்பட்ட மீன் விரலிகள் நீர்த்தேக்கங்களிலும், பாசன குளங்களிலும் மற்றும் தனியார் மீன் பண்ணைகளிலும்

2020 மார்ச் 17]

இருப்பு செய்யப்பட்டு, மாநிலத்தின் உள்நாட்டு மீன் உற்பத்தி அதிகரித்துள்ளது.

அரசு மீன் குஞ்சு வளர்ப்பு நிலையங்களின் விவரம் பின்வருமாறு:

அட்டவணை 6

வ. எண்	அரசு மீன் குஞ்சு வளர்ப்பு நிலையங்கள்	மாவட்டம்
மீன் வளத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள மீன் குஞ்சு வளர்ப்பு நிலையங்கள்		
1.	பேச்சிப்பாறை	கன்னியாகுமரி
2.	சிற்றாறு I	கன்னியாகுமரி
3.	சிற்றாறு II	கன்னியாகுமரி
4.	மணிமுத்தாறு	திருநெல்வேலி
5.	கடானா	தென்காசி
6.	வைகை அணை	தேனி
7.	மஞ்சளாறு அணை	தேனி
8.	மானகிரி	சிவகங்கை
9.	பிரவலூர்	சிவகங்கை
10.	பிளவக்கல்	விருதுநகர்
11.	அணைப்பட்டி	திண்டுக்கல்
12.	சாத்தையாறு	மதுரை
13.	தட்டாமனைப்பட்டி	புதுக்கோட்டை
14.	குருங்களூர்	புதுக்கோட்டை
15.	கருவிடைச்சேரி	புதுக்கோட்டை
16.	நெய்தலூர்	தஞ்சாவூர்
17.	அகரப்பேட்டை	தஞ்சாவூர்
18.	கரந்தை மல்லிசெட்டி தெரு	தஞ்சாவூர்
19.	திருமங்கலக்கோட்டை	தஞ்சாவூர்

வ. எண்	அரசு மீன் குஞ்சு வளர்ப்பு நிலையங்கள்	மாவட்டம்
20.	நல்லிக்கோட்டை	திருவாரூர்
21.	அசூர்	திருச்சி
22.	குளித்தலை	திருச்சி
23.	திருக்காம்புலியூர்	கரூர்
24.	பவானிசாகர்	ஈரோடு
25.	மேட்டூர் அணை	சேலம்
26.	ஆணைமடுவு	சேலம்
27.	ஒகேனக்கல்	தருமபுரி
28.	சின்னாறு	தருமபுரி
29.	கிருஷ்ணகிரி	கிருஷ்ணகிரி
30.	பாம்பார்	கிருஷ்ணகிரி
31.	கெலவரப்பள்ளி	கிருஷ்ணகிரி
32.	மோர்தானா	வேலூர்
33.	வீடூர்	விழுப்புரம்
34.	லால்பேட்டை	கடலூர்
35.	பூண்டி	திருவள்ளூர்
36.	செம்பரம்பாக்கம்	காஞ்சிபுரம்
37.	ஆத்தூர்	செங்கல்பட்டு
தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் கட்டுப்பாட்டிலுள்ள மீன் குஞ்சு வளர்ப்பு நிலையங்கள்		
1.	பாலாறு-பொருந்தலாறு	திண்டுக்கல்
2.	அமராவதி	திருப்பூர்
3.	திருமூர்த்தி	திருப்பூர்
4.	ஆழியாறு	கோயம்புத்தூர்
5.	சாத்தனூர்	திருவண்ணாமலை

2020 மார்ச் 17]

தமிழ்நாடு அரசு மீன் பண்ணையாளர்களை ஊக்குவித்து தனியார் மீன் குஞ்சு வளர்த்தெடுக்கும் நிலையங்களை அமைத்திட மானிய உதவி வழங்கி வருகிறது.

மேலும், தரமான மீன் குஞ்சுகளை உற்பத்தி செய்திடவும், ஓர் அலகு பரப்பிற்கான மீன் குஞ்சு உற்பத்தியினை அதிகரித்திடவும், கடலூர் மாவட்டம் லால்பேட்டை அரசு மீன் குஞ்சு வளர்ப்பு பண்ணையில் காற்று புகுத்திகள் மற்றும் புரோபயாட்டிக் பயன்படுத்தி தீவிர மீன் குஞ்சு உற்பத்தி வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. புதுக்கோட்டை மாவட்டம், தட்டாமனைப்பட்டி, தருமபுரி மாவட்டம், சின்னாறு, சேலம் மாவட்டம், மேட்டூர் அணை, கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி அணை மற்றும் ஈரோடு மாவட்டம், பவானிசாகர் அரசு மீன் குஞ்சு வளர்த்தெடுக்கும் நிலையங்களில் தீவிர முறையில் மீன் குஞ்சு வளர்த்தெடுக்கும் வசதிகள் தற்போது நிறுவப்பட்டு வருகின்றன. இவ்வசதிகளின்மூலம் அரசு மீன் பண்ணைகளில் ஓர் அலகிற்கான மீன் குஞ்சு உற்பத்தியினை அதிகரித்து தரமான மீன் குஞ்சுகளை மீன் வளர்ப்போருக்கு விநியோகித்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

7.10.7 மீன் துறை அலுவலர்களுக்கு நவீன தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சி

தமிழ்நாடு அரசு 2019-2020 ஆம் ஆண்டில் உலக வங்கி நிதியுதவியுடன் கூடிய நீர்வள நிலவளத் திட்டத்தின்கீழ் மீன் துறை அலுவலர்களுக்கு உலகளாவிய முறையில் மேற்கொள்ளப்படும் மீன் வளர்ப்பு தொடர்பான நவீன தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சிகள் 25 அலுவலர்களுக்கு பிலிப்பைன்ஸ் மற்றும் தாய்லாந்து நாடுகளில் வழங்கப்பட்டுள்ளன. இப்பயிற்சியின்மூலம் மீன் துறை அலுவலர்களுக்கு மீன் வளத்தில் முன்னோடிப் பயிற்சிகளை மேற்கொண்டு சர்வதேச மீன் வள நிலையங்களான தெற்காசிய மீன் வள மேம்பாட்டு மையம், தாய்லாந்து அரசு மீன் வளத் துறை மற்றும் பாங்காக்கிலுள்ள ஆசிய தொழில்நுட்ப நிலையம் ஆகியவற்றில் பயிற்சியளிக்கப்பட்டுள்ளன. பிலிப்பைன்ஸ் மற்றும் தாய்லாந்து நாடுகளில் அளிக்கப்பட்ட பயிற்சிகளின்மூலம் மீன் துறை அலுவலர்களுக்கு நவீன முறையிலான மீன் குஞ்சு உற்பத்தி மற்றும் மீன் வளர்ப்பு தொழில்நுட்பங்கள் மற்றும் அறிவுசார் பயிற்சிகள்மூலம் மாநிலத்தின் மீன் வள மேம்பாட்டிற்கான வழிவகை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

7.10.8 அரசு மீன் பண்ணை மேம்பாட்டுப் பணிகள்

அரசு மீன் பண்ணைகளில் மீன் குஞ்சு உற்பத்தியினை அதிகரித்திட ஈரோடு மாவட்டம், பவானிசாகர் அரசு மீன் பண்ணை மற்றும் காஞ்சிபுரம் மாவட்டம், ஆத்தூர் அரசு மீன் பண்ணைகளில் தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் மொத்தம் ரூ.2 கோடி செலவில் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு, அதன்மூலம் மீன் குஞ்சு உற்பத்தி அதிகரித்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

2019-2020 ஆம் ஆண்டில் தருமபுரி மாவட்டம், சின்னாறு அரசு மீன் பண்ணை மற்றும் புதுக்கோட்டை மாவட்டம், தட்டாமணைபட்டி அரசு மீன் பண்ணைகளில் தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் மொத்தம் ரூ. 0.55 கோடி செலவில் கூடுதல் நீராதார வசதிகளை ஏற்படுத்திடவும் மற்றும் தீவிர முறையில் மீன் குஞ்சு உற்பத்தியினை மேற்கொள்ளவும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

2019-2020 ஆம் ஆண்டில் மேட்டூர், கிருஷ்ணகிரி மற்றும் பவானிசாகர் அரசு மீன் பண்ணைகளில் காற்று புகுத்திகள் மற்றும் புரோபயாட்டிக் பயன்படுத்தி நீர்த் தர மேலாண்மையின்மூலம் தீவிர முறையில் மீன் குஞ்சு உற்பத்தி செய்திடும் வசதிகள் தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின்கீழ் ரூ.0.45 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

7.10.9 தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம்-II (TN-IAMP)

உலக வங்கி நிதி உதவியுடன் தமிழ்நாடு நீர்வள நிலவள திட்டம்-II, 66 உப வடிநில பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தை செயல்படுத்துவதன்மூலம் நீரின் பயன்பாடு மற்றும் மீன் உற்பத்தித் திறன் அதிகரிக்கப்பட்டு, விவசாயிகளுக்கு கூடுதல் வருமானம் கிடைத்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், உள்நாட்டு மீன் வளத்தை மேம்படுத்திட உலக வங்கிமூலம் ரூ.39.50 கோடிக்கு ஒப்புதல் பெறப்பட்டு, பல்வேறு கட்டங்களில் செயல்படுத்திட அரசிடமிருந்து நிருவாக அனுமதியும் பெறப்பட்டுள்ளது.

2020 மார்ச் 17]

இத்திட்டத்தின்கீழ் 2018-2019 ஆம் ஆண்டில் முதற்கட்ட உப வடிநிலப் பகுதிகளுக்கு ரூ.15.52 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பவானிசாகர் மற்றும் மேட்டூரில் நல்விதை தேர்வு இனப்பெருக்க மேம்பாடு மற்றும் பராமரிப்பு மையம் அமைக்கவும், மஞ்சளாறு அரசு மீன் பண்ணையில் கிப்ட் திலேப்பியா பொரிப்பகம் அமைப்பதற்கும், கடலூர் மாவட்டம், லால்பேட்டை மற்றும் அகரத்தில் அரசு மீன் பண்ணைகளை மேம்படுத்தவும், 3,830 ஹெக்டேர் நீர் பாசன குளங்களில் மீன் வளர்ப்பு மேற்கொள்ளவும், 170 பண்ணைக் குட்டைகளில் மீன் வளர்ப்பு மேற்கொள்ளவும், 14 அலகு மண் குட்டைகளில் மீன் குஞ்சு வளர்ப்பு மேற்கொள்ளவும், 21 அலகு கூடுகளில் மீன் குஞ்சு வளர்க்கவும், 9 அலகு மிதவை கூடுகளில் மீன் வளர்க்கவும், 170 எண்ணம் மீன் பிடி உபகரணங்கள் வழங்கவும் மற்றும் 2 எண்ணம் நவீன மீன் விற்பனை அங்காடி அமைக்கவும் ரூ.10.06 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நடப்பு ஆண்டு 2019-2020-ல், முதல் மற்றும் இரண்டாம் கட்டத்தில், கீழ்க்காணும் மீன் வள திட்டங்கள் ரூ.16.50 கோடி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன:

அட்டவணை 7

தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம்-II 2019-2020

வ. எண்	திட்டத்தின் பெயர்	எண்ணம்
1.	நீண்ட கால மற்றும் குறுகிய கால நீர் பாசன குளங்களில் மீன் குஞ்சுகள் இருப்புச் செய்தல்	14,625 ஹெக்டேர்
2.	பண்ணைக் குட்டைகளில் மீன் வளர்ப்பு	393 எண்ணம்
3.	மீன் பிடி உபகரணங்கள் வழங்குதல்	270 எண்ணம்
4.	மிதவைக் கூடுகளில் மீன் வளர்த்தல்	6 அலகுகள்
5.	கூடுகளில் மீன் குஞ்சு வளர்த்தல்	41 அலகுகள்

[2020 மார்ச் 17

வ. எண்	திட்டத்தின் பெயர்	எண்ணம்
6.	மீன் குஞ்சு வளர்ப்பு மற்றும் மீன் வளர்ப்பு பண்ணை அமைத்தல்	32 அலகுகள்
7.	நவீன மீன் விற்பனை அங்காடி அமைத்தல்	12 அலகுகள்
8.	மீன் துறை தொழில்நுட்ப அலுவலர்களுக்கு வெளிநாடுகளில் கண்டுணர் பயிற்சி வழங்குதல்	25 அலுவலர்கள்

இத்திட்டத்தின்கீழ், மீன் வளத் துறையின்மூலம் 13 அலுவலர்கள் பிலிப்பைன்ஸ் நாட்டிற்கும் (29.7.2019 - 3.8.2019) மற்றும் 12 அலுவலர்கள் தாய்லாந்து நாட்டிற்கும் (5-8-2019 - 12-8-2019) அனுப்பி வைக்கப்பட்டு, தாய்லாந்திலுள்ள (SEAFDEC) பயிற்சி நிறுவனம்மூலம் நவீன தொழில்நுட்ப முறையில் மீன் உற்பத்தியினை பெருக்கிடும் வகையில் பயிற்சி அளிக்கப்பட்டது. இதன்மூலம் மாநிலத்தின் மீன் வளத்தினை மேம்படுத்திட இப்பயிற்சி உதவியாக இருக்கும். மேலும், மீன் துறை இயக்குநர் மற்றும் மீன் துறை கூடுதல் இயக்குநர் இராமநாதபுரம் அவர்களும் மேற்படி அலுவலர்களுடன் வெளிநாட்டு பயிற்சியின் இடையே பிலிப்பைன்ஸ் மற்றும் தாய்லாந்து நாட்டிற்கு சென்று, (25 அலுவலர்களுடன் சேர்ந்து) அந்நாடுகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் நவீன முறையில் மீன் குஞ்சு வளர்த்தல், மீன் வளர்த்தல் மற்றும் விற்பனை முறைகள் குறித்தான கண்டுணர் பயிற்சியில் கலந்து கொண்டனர்.

7.10.10. வண்ண மீன் வளர்ப்பு முன்னோடித் திட்டமாக செயல்படுத்துதல்

தமிழகத்திலுள்ள மீன் வளர்ப்போரிடையே வண்ண மீன்கள் வளர்ப்பு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தி அவர்தம் வாழ்வாதாரத்தைப் பெருக்கிட ஏதுவாக கொல்லைப்புற வண்ண மீன் வளர்ப்பு, நடுத்தர அளவிலான வண்ண மீன் வளர்ப்பு கட்டமைப்பு, வண்ண மீன் வளர்ப்போருக்கு பயிற்சி, பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு வண்ண மீன் வளர்ப்பில் விழிப்புணர்வு ஏற்படுத்துதல் ஆகிய திட்டங்கள் செயல்படுத்திட தேசிய மீன் வள அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் ரூ.533.19 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டது.

2020 மார்ச் 17]

இத்திட்டத்தின் வாயிலாக தமிழகத்திலுள்ள 5 மாவட்டங்களில் மீனவர்களுக்கு அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்திட திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மேலும், கல்லூரி மற்றும் பள்ளிகளில் 34 பெரிய மற்றும் 37 சிறிய மீன் தொட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன. இதன் வாயிலாக கல்லூரி மற்றும் பள்ளி மாணவர்களுக்கு அலங்கார மீன் வளர்ப்பு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், கொல்லைப்புற வண்ண மீன் வளர்ப்பு, நடுத்தர அளவிலான வண்ண மீன் வளர்ப்பு கட்டமைப்பு, ஒருங்கிணைந்த அலங்கார மீன் வளர்ப்பு கட்டமைப்பு, அலங்கார மீன் வளர்ப்புத் தொட்டிகள் மற்றும் சில்லரை விற்பனை நிலையம் அமைத்தல் போன்ற பணிகள் நடைபெற்று வருகின்றன.

7.11. திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள்

7.11.1 மீனவ இளைஞர்கள் கடற்சார் கல்வி பயில ஊக்குவித்தல்

மீனவ இளைஞர்களின் திறனை மேம்படுத்தவும், வேலைவாய்ப்பினை உருவாக்கிடவும், அரசால் அறிவிக்கப்பட்ட 6 கடற்சார் கல்விப் பாடப் பிரிவுகளைப் பயின்றிட, மீனவக் குடும்பத்தைச் சேர்ந்த இளைஞர்களுக்கு, நபர் ஒருவருக்கு ரூ.50,000 என்ற வீதத்தில் அரசு நிதியுதவி வழங்குகிறது. 2019-2020 ஆம் ஆண்டில் 42 மீனவ இளைஞர்களுக்கு இத்திட்டத்தின்கீழ் ரூ.13.25 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது.

2020-2021 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

7.11.2 மீனவ இளைஞர்களுக்கு சான்றிதழ் படிப்புகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்ற விதி எண் 110-ன்கீழ், மீனவ இளைஞர்களுக்கு இந்திய கப்பற்படை மற்றும் இந்திய கடலோர காவல் படையில் வேலைவாய்ப்பினைப் பெற்றிடத் தேவையான சிறப்புப் பயிற்சி வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டதினைத் தொடர்ந்து, அரசு இப்பயிற்சிக்கென ரூ.1.04 கோடிக்கு நிதி ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

இத்திட்டத்தின்கீழ், கடலோர காவல் படை குழுமத்துடன் ஒருங்கிணைந்து, மீனவ இளைஞர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இதுவரை கடலூர், இராமநாதபுரம், சென்னை, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மண்டலங்களை சார்ந்த 145 மீனவ இளைஞர்களுக்கு சிறப்புப் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன.

2020-2021 ஆம் ஆண்டிலும், 155 மீனவ இளைஞர்கள் பயன்பெறும் வகையில் இப்பயிற்சி திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

மீனவ இளைஞர்களுக்கு கடலில் மீட்பு பணி திறன்களை உயர்த்திட "கடற்கரை உயிர் பாதுகாப்பு" பயிற்சியானது துறையால் அளிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 38 மீனவ இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

7.11.3 அகில இந்திய குடிமைப் பணியில் சேர்வதற்கு மீனவ இளைஞர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளித்தல்

இந்திய குடிமைப் பணி போட்டித் தேர்வுகளை, திறனுடன் எதிர்கொள்ள ஏதுவாக, ஆண்டுதோறும் 20 மீனவ இளைஞர்களுக்கு 6 மாத கால பிரத்யேக பயிற்சி அரசுச் செலவில் வழங்கப்பட்டு வருகிறது. இப்பயிற்சி அண்ணா மேலாண்மை நிலையத்தின்மூலம் (அகில இந்திய குடிமைப் பணிகளுக்கான பயிற்சி நிலையம்) 2017 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை இரண்டு அணிகளுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாண்டும் மீனவ மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இப்பயிற்சிக்கான அனைத்து செலவினங்களும் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் பெருநிறுவன சமூக பொறுப்பு நிதியிலிருந்து வழங்கப்படுகிறது.

7.11.4. முன் கற்றலுக்கான அங்கீகாரம்

தமிழ்நாடு மீன் வளத் துறை 3,000 மீனவர்களுக்கு முன் கற்றலுக்கான அங்கீகாரம் அளிக்கும் பிரிவின்கீழ், இந்திய விவசாயிகளின் திறன் மேம்பாட்டு மன்றத்துடன் இணைந்து, கடல் மற்றும் உள்நாட்டு முதன்மை மீன் பிடிப்பவர்கள் மற்றும் முதன்மை பதனீட்டாளர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், பயிற்சி, மதிப்பீடு மற்றும் சான்று வழங்கிட ரூ.30 இலட்சம் நிதி ஒதுக்கீடு வழங்கி உள்ளது.

இத்திட்டத்தின் வாயிலாக 2,100 மீனவர்களுக்கு "கடல் மற்றும் உள்நாட்டு முதன்மை மீன் பிடிப்பவர்கள் மற்றும் முதன்மை பதனீட்டாளர்கள்" என்ற திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

2020 மார்ச் 17]

7.12. மீனவர் மற்றும் மீன் வளர்ப்போருக்கு வேளாண் கடன் அட்டை வழங்குதல்

மத்திய அரசின் அறிவிப்பினைத் தொடர்ந்து, மீனவர் மற்றும் மீன் வளர்ப்போர்க்கு தேவைப்படும் நடைமுறை மூலதனத்திற்கான நிதியினை வங்கிகளிடமிருந்து பெற்றிட, விவசாய கடன் அட்டை (Kisan Credit Card) வழங்கும் திட்டம் தமிழக அரசால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. மீன் குஞ்சு வளர்ப்பு, இறால் வளர்ப்பு மற்றும் இதர நீர்வாழ் உயிரின வளர்ப்பு மற்றும் மீன் பிடிப்பிற்குத் தேவையான குறுகிய கால கடன் உதவி பெறுவதற்கு இக்கடன் அட்டை பெரிதும் உதவும்.

தகுதியுடைய மீனவர்/மீன் வளர்ப்போர்களுக்கு ரூ.2 இலட்சம் வரை நடைமுறை மூலதனத்திற்கான கடன் உச்சவரம்பு நிர்ணயம் செய்து விவசாயக் கடன் அட்டை (Kisan Credit Card)மூலம் கடன் வழங்கப்படுகிறது.

விவசாயக் கடன் அட்டைத் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு மீனவர்/ மீன் வளர்ப்போர் கடன் பெறும் பொழுது, அவர்கள் ஆண்டொன்றிற்கு செலுத்த வேண்டிய வட்டித் தொகையில் 2 விழுக்காடு குறைக்கப்பட்டு வட்டிச் சலுகை அளிக்கப்படுகிறது. மேலும், முறையாக கடன் தொகையை திரும்ப செலுத்தும் பயனாளிகளுக்கு வட்டித் தொகையில் ஆண்டுக்கு 3 விழுக்காடு குறைக்கப்பட்டு வட்டி சலுகை அளிக்கப்படுகிறது.

மீனவர் மற்றும் மீன் வளர்ப்போர்களுக்கான வேளாண் கடன் அட்டை வழங்குவதற்காக மீன் வளத் துறை சிறப்பு மாவட்ட மற்றும் மாநில அளவிலான தொழில்நுட்பக் குழுக்களை அமைத்து நடைமுறை மூலத்தனத்திற்கான நிதித் தேவை அளவினை நிர்ணயம் செய்துள்ளது. நிர்ணயம் செய்யப்பட்ட அளவினை மாநில தொழில்நுட்ப குழுவின் பரிந்துரையுடன் வங்கிகளுக்கு மாநில அளவிலான வங்கியாளர் குழு வாயிலாக அனுப்பப்பட்டுள்ளது.

இதுவரை, தமிழ்நாட்டில் மீனவர் மற்றும் மீன் வளர்ப்போர்களிடமிருந்து 15,891 விண்ணப்பங்கள் பெறப்பட்டு அவற்றில் 14,369 விண்ணப்பங்கள் வேளாண் கடன் அட்டை பெறுவதற்காக பல்வேறு வங்கிகளுக்கு அனுப்பி கடன் அட்டைகள் வழங்கும் பணி நடை பெற்று வருகிறது.

[2020 மார்ச் 17

7.13. விரிவாக்கப் பணிகள்

மீனவர்கள், மீன் வளர்ப்போர் மற்றும் இதர பங்கீட்டாளர்களுக்கு அரசு நலத் திட்டங்கள் மற்றும் நவீன தொழில்நுட்பங்களை கொண்டு சேர்க்கும் விதமாக, மீன் வளத் துறையின் விரிவாக்கம் மற்றும் பயிற்சிப் பிரிவு செயல்பட்டு வருகிறது.

மீன் வளத் துறையானது, தமிழக அரசால் நடத்தப்படும் பொருட்காட்சிகள், சுற்றுலா மற்றும் தொழிற்பொருட்காட்சியில் பங்கேற்று வருகிறது. மேலும், கடலில் பாதுகாப்பான முறையில் மீன் பிடித்தல், சுகாதாரமான முறையில் மீன்களைக் கையாளுதல், மீன் பிடித் துறைமுகங்கள் மற்றும் மீன் பிடி இறங்குதளங்களை தூய்மையாக பராமரித்தல், மீன் பிடி ஆதாரங்களை பாதுகாத்தல் மற்றும் நெகிழியினால் ஏற்படும் மாசு குறித்தான விழிப்புணர்வு முகாம்கள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன. மீனவர் குறைதீர்க்கும் தினம் மற்றும் மீன் வளர்ப்போர் கூடுகை ஆகியவை தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது. தேசிய மீன் வளர்ப்போர் தினம், உலக மீன் வள தினம், உலகக் கடல்சார் தினம் போன்ற தினங்களில் பள்ளி/ கல்லூரி மாணவர்கள் மற்றும் மீனவர்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. மேலும், மீனவக் கிராமங்களில் விழிப்புணர்வு பேரணி மற்றும் மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. மீனவர்கள் மற்றும் மீன் வளர்ப்போர்கள் பயன்பெறும் வகையில் துறையின் முக்கிய நிகழ்வுகள், திட்டங்கள், வெற்றிக் கதைகள் மற்றும் பல பயனுள்ள செய்திகளை தொகுத்து 'மீன் வள களஞ்சியம்' எனும் காலாண்டு மலர் வெளியிடப்பட்டு வருகிறது.

7.14. தமிழ்நாடு மீனவ மக்கட்தொகை கணக்கெடுப்பு

மீன் வளத் துறை பத்து ஆண்டுகளுக்கு ஒரு முறை மீனவ மக்கட்தொகை கணக்கெடுப்பு மேற்கொண்டு வருகிறது. கடந்த 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடல் மீனவ மக்கட்தொகை கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டது. 2020 ஆம் ஆண்டிற்கான கடல் மீனவ மக்கட்தொகை கணக்கெடுப்பு மேற்கொள்ள அரசால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மீனவ மக்கட்தொகை கணக்கெடுப்பு மேற்கொள்வதன்மூலம் மீன் வளம் மற்றும் மீனவ மக்களின் தற்போதைய நிலை அறியப்பட்டு, அதன் அடிப்படையில் மீன் வளக் கொள்கைகள் மற்றும் நலத் திட்டங்கள் உருவாக்கப்படும்.

2020 மார்ச் 17]

7.15. தமிழக மீனவ சமூதாயத்தின் சமூக பொருளாதார நிலை குறித்து விரிவான ஆய்வுகள்

தமிழக அரசு மீனவ மக்களுக்கு பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்துதல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை தமிழ்நாடு முழுவதும் உருவாக்குவதன் வாயிலாக அவர்களின் சமூக பொருளாதார நிலையை உயர்த்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. பல்வேறு நலத் திட்டங்களினால் மீனவ மக்களின் சமூக பொருளாதார நிலையில் ஏற்பட்ட மாற்றங்களை அறிந்துகொள்ளும்பொருட்டும், கூடுதலாக மேற்கொள்ள வேண்டிய திட்டங்கள் குறித்தும் விரிவான ஆய்வுகள் நடத்திட அரசு ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. அரசின் திட்டப் பணிகளுக்கும், கொள்கை முடிவு உருவாக்கத்திற்கும், திட்டச் செயல்பாட்டிற்கும் உட்கட்டமைப்பு வசதிகள் உருவாக்கத்திற்கும் மற்றும் திறன் மேம்பாட்டிற்கும் இவ்வாய்வுகள் உதவியாக அமையும்.

7.16. மூன்றாவது இந்திய சர்வதேச அளவிலான கடற்பாசி கருத்தரங்கு 2020

மீனவர்களுக்கு புதிய வாழ்வாதார செயல்பாடுகள் வழங்குவதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக விளங்குகிறது. கடலோர மீனவர்களிடையே கடற்பாசி வளர்ப்பினை அறிமுகப்படுத்தியது அவ்வாறான ஒரு முயற்சியாகும். இராமநாதபுரம், புதுக்கோட்டை, தஞ்சாவூர் மற்றும் தூத்துக்குடி கடலோர மாவட்டங்களில் கடற்பாசி வளர்ப்பு முக்கிய வாழ்வாதாரமாக விளங்குகிறது. மீனவர்கள் குறிப்பாக, மீனவ மகளிர் இத்தொழிலில் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றனர். இதனால், மீனவ மகளிர்களுக்கு கூடுதல் உரிமை கிடைக்கப் பெறுகின்றது. தமிழ்நாடு அரசு, இந்திய வர்த்தக சபை மற்றும் மத்திய உப்பு மற்றும் கடல் வேதியியல் பொருட்கள் ஆராய்ச்சி நிலையம் (CSMCRI) இணைந்து சர்வதேச அளவிலான மூன்றாவது இந்திய கடற்பாசி கருத்தரங்கு 2020 ஜனவரி திங்கள் 30 மற்றும் 31 இல் நடத்தியது. இந்த கருத்தரங்கானது கடற்பாசி மற்றும் அதனைச் சார்ந்த தொழில்களை தமிழ்நாட்டில் விரிவடையச் செய்யும் நோக்கத்துடன் நடத்தப்பட்டது. இக்கருத்தரங்கில் கடற்பாசி வளர்ப்பினை மேம்படுத்தும் நோக்கத்துடன் தேசிய மற்றும் சர்வதேச அளவிலான 8 தனியார் நிறுவனங்களுடன் ரூ.57.70 கோடி மதிப்பிலான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன. புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்மூலம் கடற்பாசியை சந்தைப்படுத்துதல், தனியார் தொழில் முனைவோரின்மூலம் மதிப்புக் கூட்டப்பட்ட கடற்பாசி பொருட்களின் உற்பத்தியினை பெருக்குதல் மற்றும்

[2020 மார்ச் 17

கடலோர மீனவர்களுக்கான வாழ்வாதார வாய்ப்பு மேம்படுத்த வழிவகை செய்யும். கடற்பாசி வளர்ப்பு மற்றும் இயற்கை முறையில் கடற்பாசி சேகரணம் செய்வதற்கான தனிக் கொள்கை 2020-2021-ல் உருவாக்கப்படும்.

7.17. மீனவக் கூட்டுறவு சங்கங்களின் மேலாண்மை

தமிழக மீனவர் மற்றும் மீனவ மகளிரது வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதில் மீனவக் கூட்டுறவு சங்கங்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. மீன் வளத் துறையானது மீனவர்/மீனவ மகளிருக்கு கூட்டுறவு சங்கங்கள் வாயிலாக அரசின் பல்வேறு நலத் திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 1,418 தொடக்க மீனவர்/மீனவ மகளிர் கூட்டுறவு சங்கங்கள்/12 மாவட்ட கூட்டுறவு இணையங்கள்/1 மாநிலத் தலைமை கூட்டுறவு இணையம் ஆகியவற்றில் 7.17 இலட்சம் மீனவர்/மீனவ மகளிர் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர். மீனவக் கூட்டுறவு சங்கங்கள் 51 முழு நேர நியாயவிலைக் கடைகள் மற்றும் 15 பகுதி நேர நியாய விலைக் கடைகளை நடத்தி வருகின்றன.

மீனவக் கூட்டுறவு சங்கங்களின் எண்ணிக்கை மற்றும் அதன் உறுப்பினர்கள் விவரம், கீழ்க்காணும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது:

அட்டவணை: 8

மீனவக் கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர்கள் விவரம்

சங்கத்தின் வகை	சங்கங்களின் எண்ணிக்கை	உறுப்பினர்களின் எண்ணிக்கை
தொடக்கக் கூட்டுறவு சங்கங்கள்		
கடல் மீனவர் கூட்டுறவு சங்கங்கள்	558	3,56,992
கடல் மீனவ மகளிர் கூட்டுறவு சங்கங்கள்	461	2,60,732
உள்நாட்டு மீனவர் கூட்டுறவு சங்கங்கள்	300	82,986

2020 மார்ச் 17]

சங்கத்தின் வகை	சங்கங்களின் எண்ணிக்கை	உறுப்பினர்களின் எண்ணிக்கை
உள்நாட்டு மீனவ மகளிர் கூட்டுறவு சங்கங்கள்	72	7,883
இதர வகைச் சங்கங்கள்	27	6,791
மொத்தம்	1,418	7,15,384
மாவட்ட மீனவர் கூட்டுறவு இணையம்	12	998
தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன் வள கூட்டுறவு இணையம்	1	822
மொத்தம்	1,431	7,17,204

8. தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன் வளக் கூட்டுறவு இணையம் (வரையறுக்கப்பட்டது) (TAFCOFED Ltd)

தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன் வளக் கூட்டுறவு இணையம் (வ.து) தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம், 1983-ன்கீழ் பதிவு செய்யப்பட்டு, கடந்த 19-10-1992-லிருந்து சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. தற்போது, இணையத்தில் 484 கடல் மீனவர் கூட்டுறவு சங்கங்கள், 155 உள்நாட்டு மீனவர் கூட்டுறவு சங்கங்கள், 174 மீனவ மகளிர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் 9 மாவட்ட மீனவ கூட்டுறவு இணையங்கள் உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ளன. இவ்வுறுப்பினர் சங்கங்கள், இணையத்திற்கு ரூ.91.80 இலட்சம் பங்குத் தொகையாக செலுத்தியுள்ளன.

இணையத்தின் செயற்பதிவாளராக மீன் துறை இயக்குநர் அவர்களும், மேலாண்மை இயக்குநராக மீன் துறை கூடுதல் இயக்குநரும் இணையத்தை நிருவகித்து வருகின்றனர். இணையத்தின் கட்டுப்பாட்டில் சென்னை, நாகப்பட்டினம், இராமநாதபுரம், தூத்துக்குடி மற்றும் நாகர்கோவில் ஆகிய ஐந்து இடங்களில் திட்ட அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன.

[2020 மார்ச் 17

தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன் வளக் கூட்டுறவு இணையத்தால் செயல்படுத்தப்பட்டுவரும் முக்கிய திட்டங்கள் பின்வருமாறு:

8.1 இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப் படகுகளுக்கு மானிய விலையில் விற்பனை வரி விலக்களிக்கப்பட்ட தொழிலக மண்ணெண்ணெய் வழங்குதல்.

தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களைச் சேர்ந்த மண்ணெண்ணெயில் இயங்கும் வெளிப்பொருத்தும் இயந்திரம் கொண்ட நாட்டுப் படகுகளுக்கு விற்பனை வரி விலக்களிக்கப்பட்ட மானியத்துடன் கூடிய தொழிலக மண்ணெண்ணெயினை 13 தொடக்க மீனவர் கூட்டுறவு சங்கங்கள்மூலம், 2019-2020 ஆம் ஆண்டில் 4,656 கி.லி. விநியோகிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் ரூ.30.57 இலட்சம் வருவாய் ஜனவரி 2020 முடிய ஈட்டப்பட்டுள்ளது.

8.2 மீன் பிடி கலன்களுக்கு விற்பனை வரி விலக்களிக்கப்பட்ட டீசல் வழங்குதல்.

தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன் வள கூட்டுறவு இணையத்தால் நிறுவப்பட்டுள்ள 14 டீசல் விற்பனை நிலையங்கள் வாயிலாக 2019-2020 ஆம் ஆண்டில், 18,193 கிலோ லிட்டர் விற்பனை வரி விலக்களிக்கப்பட்ட டீசல், இயந்திரமயமாக்கப்பட்ட நாட்டுப் படகு மற்றும் விசைப் படகுகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் ரூ.3.99 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. (ஜனவரி 2020 முடிய)

8.3 பாரம்பரிய மீனவர்களுக்கு மானிய விலையில் குளிர்காப்புப் பெட்டிகள் வழங்குதல்.

2019-2020 ஆம் ஆண்டு தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் பாரம்பரிய மீனவர்களுக்கு 50 விழுக்காடு மானிய விலையில் 66 குளிர்காப்புப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

8.4 நவீன மீன் விற்பனை நிலையங்கள்

தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன் வளக் கூட்டுறவு இணையத்தால் பொது மக்களுக்கு தரமான மீன்களை நியாயமான விலையில் வழங்கிடும்பொருட்டு, இராமநாதபுரம், பரமக்குடி, நெய்வேலி, கன்னியாகுமரி, சென்னை மற்றும் மதுரை ஆகிய இடங்களில் நவீன மீன் விற்பனை நிலையங்கள் இயக்கப்பட்டு வருகின்றன. இதன்மூலம் ரூ.6.58 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

2020 மார்ச் 17]

8.5 ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் (ICDP)

இரண்டாம் ஆண்டு

ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தின்கீழ் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திட அரசு தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன் வளக் கூட்டுறவு இணையத்திற்கு ரூ.3.91 கோடி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. தூத்துக்குடி, தேங்காப்பட்டினம் மற்றும் குளச்சல் பனிக்கட்டி உற்பத்தி நிலையம் அமைத்தல், இயந்திரம், டீசல் மற்றும் மண்ணெண்ணெய் கொள்முதல் செய்து விநியோகம் செய்ய சுழல் நிதியாக ரூ.3.35 கோடி பெறப்பட்டு பயன்படுத்தப்பட்டு உள்ளது.

மூன்றாம் ஆண்டு

மூன்றாம் ஆண்டில் தூத்துக்குடி மற்றும் நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் பனிக்கட்டி உற்பத்தி நிலையம் மற்றும் கூட்டுறவு அங்காடிகள் அமைக்க ரூ.2 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளதில், ரூ.1 கோடி பெறப்பட்டு அதற்கான கட்டுமானப் பணி நடைபெற்று வருகிறது.

8.6 பாரம்பரிய நாட்டுப் படகுகளுக்கான மையப்படுத்தப்பட்ட காப்பீட்டுத் திட்டத்தினை செயல்படுத்துதல்

குறைவான சந்தாத் தொகையில் கூடுதல் காப்பீடு பெற்றிட பாரம்பரிய நாட்டுப் படகுகளுக்கு (இயந்திரமயமாக்கப்பட்டவை மற்றும் இயந்திரமயமாக்கப்படாதவை) மையப்படுத்தப்பட்ட காப்பீட்டு திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம், 100 விழுக்காடு பாரம்பரிய படகுகளை குறைவான காப்பீட்டு சந்தாத் தொகையில் காப்பீடு வரம்பிற்குள் கொண்டுவர இயலும். அதிகபட்ச காப்பீட்டு உறுதித் தொகையுடன், தனிநபர் மற்றும் குழு உறுப்பினர்களுக்கு விபத்துக் காப்புறுதியினையும், ஏனைய அபாயங்களான உடற்காயங்களுக்கும் மருத்துவ உதவியினைப் பெறமுடியும். இத்திட்டத்தின்கீழ் ”டாப்கோபெட்” இணையமானது பாரம்பரிய நாட்டுப்படகு உரிமையாளர்களுக்கும் மற்றும் காப்பீட்டு நிறுவனங்களுக்கும் இடையே ஒரு இணைப்புப் பாலமாகச் செயல்பட்டு மீனவர்களுக்கு உரிய நேரத்தில் சரியான இழப்பீட்டு தொகை பெற்று

வழங்கிட உதவும். காப்பீட்டு நிறுவனம், சந்தாத் தொகை மற்றும் காப்பீட்டு முறைகளையும் இணையம் இறுதி செய்துள்ளது. இம்மைய காப்பீட்டு திட்டத்தின்கீழ் அனைத்து வகை நாட்டுப்படகுகள் 2020-2021 ஆண்டிற்குள் காப்பீடு செய்யப்படும்.

8.7 மீனவ மகளிருக்கு கடற்பாசியினை வளர்த்திட குறுந்தொகைக் கடன்கள் வழங்குதல்

இராமநாதபுரம், புதுக்கோட்டை மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களிலுள்ள 2,000 குடும்பங்களைச் சார்ந்த மீனவ மகளிர் தங்களுடைய வாழ்வாதாரத்தினை மேம்படுத்துவதற்கு மாற்று வழி வருவாய் ஈட்டும் தொழிலாக கடற்பாசி வளர்ப்பில் ஈடுபட்டுள்ளனர். தற்போது மீனவ மகளிர் உள்கடன் அளிப்பவர் மற்றும் கடற்பாசி கொள்முதல் செய்பவர்மூலம் அதிக வட்டிக்கு கடன் பெற்று பாசி வளர்ப்பு தொழிலில் ஈடுபட்டு வரும் நிலையில் கடற்பாசி வளர்ப்பில் குறைவான வருவாயை பெறுகின்றனர். மீனவ மகளிருக்கு உதவிடும் வகையில் இணையம் குறைந்தபட்ச வட்டி விகிதத்தில் குறுந்தொகை கடன் வழங்கி, அதன் வாயிலாக கடற்பாசிக்கு கூடுதல் விலை கிடைக்க வழி வகை செய்துள்ளது. இதற்காக மீனவ மகளிர் பயனாளி ஒருவருக்கு ரூ.5,000/- வீதம், மொத்தம் ரூ.50 இலட்சம் குறுந்தொகைக் கடனாக 1,000 மீனவ மகளிர்களுக்கு குறைந்த வட்டி வீதத்தில், எளிதில் திருப்பிச் செலுத்தக்கூடிய தவணைகளில் வழங்கப்படுகிறது. இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

8.8 விரிவாக்கப் பணிகள்

மீன் வளத் துறையில் அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டப் பணிகள் குறித்தும், மீன் உற்பத்தியில் சாதனை படைத்தவர்கள் குறித்தும், சமீபத்திய தொழில்நுட்ப முன்னேற்றங்கள் குறித்த விவரங்கள் அடங்கிய “மீன் வள களஞ்சியம்” எனும் ஒரு காலாண்டு செய்திமடலை டாப்கோபெட் வெளியிட்டு வருகிறது,

8.9 மீன் பிடித் துறைமுகம்/மீன் இறங்கு தளம் ஆகியவற்றில் கூட்டுறவு அங்காடி அமைத்தல்.

தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன் வளக் கூட்டுறவு இணையமானது, மீன் பிடித் துறைமுகம்/ மீன் இறங்கு தளங்கள் ஆகியவற்றில் ரூ.60 இலட்சம் செலவில் கூட்டுறவு பண்டக சாலைகளை, தூத்துக்குடி, தேங்காப்பட்டினம், குளச்சல் மற்றும்

சின்னமுட்டம் ஆகிய மீன் பிடித் துறைமுகங்களில் தலா ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் அமைத்து, எரிபொருள், எரிவாயு, மீன்வலை மற்றும் இதர அத்தியாவசியப் பொருட்களை துறைமுகங்களிலிருந்து மீனவர்கள் இயக்கும் படகுகளுக்கு நியாயமான விலையில் வழங்கி வருகிறது.

8.10 நிதிநிலை

2019-2020 ஆம் ஆண்டில் இணையத்தில் டீசல், மண்ணெண்ணெய் மற்றும் மீன் விற்பனை நிலையங்கள் வாயிலாக ரூ.182.63 கோடி வரவு செலவினம் மேற்கொள்ளப்பட்டு, நிகர இலாபமாக ரூ.2.30 கோடி (தணிக்கை செய்யப்படாதது) ஈட்டப்பட்டுள்ளது.

9. தமிழ்நாடு மீனவர் நல வாரியம் (TNFWB)

மீனவர்கள் மற்றும் மீன் பிடிப்பு சார்ந்த தொழில்களில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களின் சமூகப் பாதுகாப்பினை உறுதி செய்வதற்கும், அவர்களின் நலத்தினை பேணுவதற்கும், 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு மீனவர் நல வாரியம் தொடங்கப்பட்டது. இவ்வாரியமானது மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களை தலைவராகவும், மீன் வளத் துறை இயக்குநர் அவர்களை உறுப்பினர் செயலராகவும் கொண்டு செயல்பட்டு வருகிறது. தமிழக அரசு அவ்வப்போது வாரியத்தின் அலுவல்சாரா உறுப்பினர்களை நியமிக்கும்.

மொத்தம் 4.82 இலட்சம் உறுப்பினர்கள் மீனவர் நல வாரியத்தில் உறுப்பினர்களாக உள்ளனர்.

தமிழ்நாடு மீனவர் நல வாரிய விதிமுறைகளின்படி, தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் மற்றும் தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன் வள கூட்டுறவு இணையம் ஆகியவற்றிற்குச் சொந்தமான டீசல் வழங்கு நிலையங்கள்மூலம் விற்பனை செய்யப்படும் லாபத்தில் வரும் பங்களிப்புத் தொகை, நீர்நிலைகளின் மீன் வள குத்தகையில் 7 விழுக்காடு தொகை, உறுப்பினர் சந்தாத் தொகை ரூ.20/- மற்றும் மேட்டூர் அணை மீன் விற்பனையில் கிலோ ஒன்றுக்கு ரூ.2/- ஆகியவற்றின்மூலம் நிதிப்பங்களிப்பு வசூல் செய்யப்பட்டு வருகிறது. கடந்த 1-4-2008 முதல் 29-2-2020 முடிய ரூ.23.49 கோடி சந்தாத் தொகையாக வசூல் செய்யப்பட்டுள்ளது.

[2020 மார்ச் 17

தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தால் செயல்படுத்தப்படும் நலத் திட்டங்கள் பின்வருமாறு:

அட்டவணை: 9

தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தால் செயல்படுத்தப்படும் நலத் திட்டங்கள்

வ. எண்	நிவாரணம்/உதவி	தொகை (ரூபாயில்)
1.	விபத்து நிவாரணம்	
(அ)	விபத்தினால் மரணம்	2,00,000
(ஆ)	இரண்டு கைகள் இழப்பு	1,00,000
(இ)	இரண்டு கால்கள் இழப்பு	1,00,000
(ஈ)	ஒரு கை மற்றும் ஒரு கால் இழப்பு	1,00,000
(உ)	இரண்டு கண்களிலும் முற்றிலும் பார்வை இழப்பு	1,00,000
(ஊ)	ஒரு கை அல்லது ஒரு கால் இழப்பு	1,00,000
(எ)	மேலே கண்ட இனங்களில் குறிப்பிடாத வேறு கடுமையான காயம் ஏற்பட்டு உடல் உறுப்பு இழப்பு	50,000
2.	விபத்தின் காரணமாக அல்லாமல் மீன் பிடிக்கையில் அல்லது அதற்குப் பின் உடனடியாக இறத்தல்	2,00,000
3.	மீன் பிடிக்கையில் காணாமற்போன மீனவர்	2,00,000
4.	இயற்கை மரணம்	15,000
5.	ஈமச் சடங்கிற்கான உதவித் தொகை	2,500

2020 மார்ச் 17]

வ. எண்	நிவாரணம்/உதவி	தொகை (ரூபாயில்)			
6.	உறுப்பினர்களின் மகன் மற்றும் மகள் கல்வி உதவித் தொகை	விடுதியில் தங்காதோர்		விடுதியில் தங்கி படிப்பவர்கள்	
		மாணவர்	மாணவியர்	மாணவர்	மாணவியர்
	அ) பத்தாம் வகுப்பு தேர்ச்சி	**1,250**	**1,500**	**1,250**	**1,500**
	ஆ) பன்னிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி	**1,750**	**2,000**	**1,750**	**2,000**
	இ)தொழிற்பயிற்சி **(I.T.I)** மற்றும் பல்தொழிற்நுட்ப பயிற்சி **(Polytechnic)**	**1,250**	**1,750**	**1,450**	**1,950**
	ஈ) இளங்கலை பட்டப்படிப்பு	**1,750**	**2,250**	**2,000**	**2,500**
	உ) முதுகலை பட்டப்படிப்பு	**2,250**	**2,750**	**3,250**	**3,750**
	ஊ) தொழிற்- கல்வி, இளங்கலை, சட்டம், பொறியியல், மருத்துவம் போன்ற தொழிற்கல்விகள்	**2,250**	**2,750**	**4,250**	**4,750**
	எ) முதுகலை தொழிற்கல்விகள்	**4,250**	**4,750**	**6,250**	**6,750**
7.	திருமண உதவி			ஆண்	பெண்
	அ) உறுப்பினரின் திருமண உதவி			**3,000**	**5,000**
	ஆ) உறுப்பினரின் மகன் அல்லது மகள் திருமணம்			**3,000**	**5,000**
8.	மகப்பேறு/கருச்சிதைவு/கருக்கலைப்பு உதவித் தொகை				

[2020 மார்ச் 17

வ. எண்	நிவாரணம்/உதவி	தொகை (ரூபாயில்)
	i) மகப்பேறு (மாதம் ஒன்றுக்கு ரூ.1,000/- வீதம் ஆறு மாதங்கள்)	6,000
	ii) கருச்சிதைவு	3,000
	iii)மருத்துவ ரீதியிலான கருக்கலைப்பு	3,000

9.1. இணையதள வழி சேவை

தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தால் செயல்படுத்தப்படும் அனைத்து திட்டங்களும் தற்போது ஒரே குடையின்கீழ் www.tnfwb.tn.gov.in என்ற வலைத்தளத்தின் வாயிலாக வழங்கப்பட்டு வருகிறது. இந்த வலைதளத்தை பயன்படுத்த ஒவ்வொரு மீன் துறை உதவி இயக்குநர் அலுவலகத்திற்கும் பயனாளர் குறியீடு (User ID) தனித்தனியே வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம், மீன் துறை உதவி இயக்குநர் அலுவலகங்களில் இருந்து தமிழ்நாடு மீனவர் நல வாரிய உறுப்பினர்களிடம் இருந்து பெறப்பட்ட விண்ணப்பங்கள் நேரடியாக வலைதளத்தில் பதிவேற்றம் செய்யப்படுகின்றது.

இப்புதிய நடைமுறையினால், பல நகல்களில் படிவங்கள் மற்றும் ஆவணங்கள் சரிபார்ப்பு, பரிசீலனை மற்றும் பரிந்துரைக்கும் பணி போன்ற தினசரி அலுவலக நடைமுறைகள் தவிர்க்கப்பட்டு, துரிதமாக, காலவிரயம் இன்றி மின்னணு முறைமூலம் விண்ணப்பிக்க முடியும். மேலும் மின்னணு பணப்பரிமாற்றம்மூலம் பயனாளிகளின் வங்கிக் கணக்கிற்கு நேரடியாக நிவாரணத் தொகை வழங்கப்படுகிறது. தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தின் திட்டங்களை வலைதளத்தின்மூலம் மின்னணு முறையில் வழங்கப்படுவதால், விண்ணப்பத்தின் பரிசீலனை குறித்த நிலையினை பயனாளர்களே நேரடியாகக் கண்டறியும் வகையில் வெளிப்படைத்தன்மையினை கொண்டுள்ளது. இந்த வலைதளத்தின்மூலம் பெறப்படும் சேவைகள் அனைத்தும் கைப்பேசியின்மூலம் இயக்கிப் பெற்றிடும் அளவிற்கு தமிழ்நாடு மீனவர் நல வாரிய சேவைகள் அனைத்தும், மக்களுக்குச் சேரும் வகையில் மிகவும் எளிமையாக்கப்பட்டுள்ளது.

- 2019-2020 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தின் வாயிலாக பல்வேறு நலத் திட்டங்களின்கீழ் 2863 கேட்பு விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டு, ரூ.3.38 கோடி

நிவாரணம் தேசிய மின்னணு பணப் பரிமாற்றம் (NEFT) வாயிலாக வழங்கப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு மீன் வளப் பல்கலைக்கழகத்தில் பி.எப்.எஸ்.சி/ பி.டெக், (Fisheries Engineering) படிப்பதற்கு மீனவர் நல வாரிய உறுப்பினர்களின் பிள்ளைகள் 9 பேருக்கு தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தின் வாயிலாக கல்விக் கட்டணம் செலுத்தப்பட்டு வருகிறது. 2019-2020 ஆம் ஆண்டு கல்விக் கட்டணமாக ரூ.5,60,125/- தொகை வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 2020-2021 ஆம் நிதியாண்டிலும் செயல்படுத்தப்படும்.

10. தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் (Tamil Nadu Fisheries Development Corporation Limited)

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகமானது பொதுத் துறை நிறுவனமாக நிறுவனங்களின் சட்டத்தின்கீழ் 1974 ஆம் ஆண்டு தமிழக அரசால் பதிவுசெய்யப்பட்டது.

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகமானது, பல்வேறு வணிக ரீதியிலான செயல்பாடுகளான மீன் விற்பனை, கடல் மீன் உணவகங்கள், டீசல் எரியெண்ணெய்/மண்ணெண்ணெய் விற்பனை, நீர்த்தேக்க மேலாண்மை முதலியன வாயிலாக 2020-2021 ஆம் நிதியாண்டில் ரூ.572.41 கோடி மதிப்பிலான மொத்த விற்பனை மற்றும் ரூ.13 கோடி இலாபத்தினை ஈட்டிடும் என எதிர்பார்க்கப்படுகிறது. 2020-2021 ஆம் நிதியாண்டில் எதிர்பார்க்கப்படும் வரவு-செலவு ரூ.580 கோடியாகவும் ரூ.14 கோடியினை இலாபமாக ஈட்டிட இலக்காக கொண்டுள்ளது.

இக்கழகத்தின் மேலாண்மை இயக்குநர் மீன் துறை இயக்குநர் ஆவார். இக்கழகத்தின் களப்பணிகள் பொது மேலாளர், முதுநிலை மேலாளர்கள், மேலாளர்கள், துணை மேலாளர்கள் மற்றும் உதவி மேலாளர்கள் ஆகியோருடன் மொத்தம் 100 நிரந்தர பணியாளர்கள் மற்றும் 270 தனியார் சேவை மையப் பணியாளர்கள் ஆகியோரால் நிருவகிக்கப்படுகிறது. இக்கழகத்தினுடைய பணிகளை விரிவாக்குவதற்கு கூடுதல் பணியாளர்களை நியமனம் செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் 8 நீர்த்தேக்கங்களில் வளர்ந்த மீன் விரலிகளை அறிவியல் ரீதியிலான முறைகளை பின்பற்றி இருப்பு செய்து ஆண்டுதோறும் சுமார் 1000 டன்கள் அளவிற்கு உள்நாட்டு மீன்களை உற்பத்தி செய்கிறது.

[2020 மார்ச் 17

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகமானது சாத்தனூர், ஆழியார், அமராவதி, திருமூர்த்தி மற்றும் பாலாறு-பொருந்தலாறு ஆகிய நீர்த்தேக்கப் பகுதிகளில் 3.83 ஹெக்டேர் பரப்பளவில் 5 மீன் குஞ்சு வளர்ப்புப் பண்ணைகளை கொண்டுள்ளது. தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தால் உற்பத்தி செய்யப்படும் தரம் வாய்ந்த மீன் குஞ்சுகள், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் மேலாண்மையிலுள்ள நீர்த்தேக்கங்களில் இருப்பு செய்யப்படுவதுடன், தனியார் மீன் பண்ணைகளுக்கும் விநியோகிக்கப்படுகின்றன. மேலும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகமானது ஆழியாறு மற்றும் திருமூர்த்தி நகர் ஆகிய இடங்களில் வண்ண மீன் உற்பத்தி நிலையங்களை அமைத்துள்ளது.

மாநிலத்தில் சில்லறை மீன் விற்பனை நிலையங்கள் மற்றும் நடமாடும் மீன் விற்பனை நிலையங்கள் அமைத்து, தரமான மீன்கள் மற்றும் மதிப்புக் கூட்டப்பட்ட கடல் மீன் உணவு பொருட்களை நியாயமான விலையில் பொதுமக்களுக்கு விற்பனை செய்து வருகிறது. மீன் விற்பனையினை விரிவாக்கம் செய்யும் நோக்கத்தில் பல்வேறு நகரங்களில் அதிக எண்ணிக்கையிலான நவீன மற்றும் நடமாடும் மீன் சில்லறை விற்பனை நிலையங்களை அமைப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இக்கழகமானது மாநிலத்தின் கடலோரப் பகுதிகளில் அமைந்துள்ள மீன் பிடித் துறைமுகங்கள் மற்றும் மீன் இறங்கு தளங்களில் 31 டீசல் எரியெண்ணெய் விற்பனை நிலையங்களையும் மற்றும் 10 மண்ணெண்ணெய் விற்பனை நிலையங்களையும் அமைத்து வரி விலக்களிக்கப்பட்ட உயர்வேக டீசல் எரியெண்ணெய் மற்றும் மானிய விலையிலான மண்ணெண்ணையினை மீன் பிடி விசைப்படகுகளுக்கும் மற்றும் இயந்திரமயமாக்கப்பட்ட பாரம்பரிய நாட்டுப் படகுகளுக்கும் விநியோகித்து வருகிறது. புதியதாக அமைந்துள்ள மீன் பிடித் துறைமுகங்கள் மற்றும் மீன் இறங்குதளங்களில் கூடுதல் டீசல் எரியெண்ணெய் விற்பனை நிலையங்களை தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகமானது அமைத்து வருகிறது.

10.1 சேத்துப்பட்டு பசுமைப் பூங்கா மேலாண்மை

சேத்துப்பட்டு பசுமைப் பூங்காவின் பராமரிப்பு மற்றும் செயல்பாட்டினை தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகமானது மேற்கொண்டு வருகிறது. பசுமைப் பூங்காவானது படகுக் குழாம், தூண்டில் மீன் பிடிப்பு, பன்னடுக்கு வாகன நிறுத்தகம், சிறுவர் பூங்கா,

2020 மார்ச் 17]

பொழுதுபோக்கு மையம், உணவகம், நடைபயிற்சிப் பாதைகள், சிறுவர்கள் விளையாட்டுப் பகுதி, முப்பரிமாணத் திரையரங்கு ஆகிய வசதிகளுடன் பெரு அளவிலான பார்வையாளர்களை ஈர்த்து வருகிறது. கூடுதலாக பொது மக்களை கவர்ந்திடும் வகையில் மீன் காட்சியகம் மற்றும் நீர்வாழ் உயிரின மெய்நிகர் காட்சியகம் (Aquarium-cum-Aquatic Virtual Reality Centre) ரூ.6.93 கோடி திட்ட மதிப்பீட்டில் உருவாக்கப்பட்டுள்ளது. ஆண்டொன்றுக்கு சராசரியாக 2 இலட்சம் பார்வையாளர்கள் பசுமைப் பூங்காவிற்கு வருகைபுரிகின்றனர். பசுமைப் பூங்காவில் கூடுதல் பொழுதுபோக்கு வசதிகளை அறிமுகப்படுத்திட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

10.2 கடல் மீன் உணவுப் பொருட்களுக்கான மைய சமையலறைக் கூடம் மற்றும் பயிற்சி நிலையம்

சென்னை, இராயபுரத்தில் ரூ.3.04 கோடி மதிப்பீட்டில் உடனடி உண்பதற்கும், உடனடி சமைப்பதற்கும் ஏதுவான மதிப்பூட்டப்பட்ட மீன் உணவுப் பொருட்களை தயாரித்திடவும் மற்றும் விற்பனை மேற்கொள்வதற்கும் சுய உதவி மகளிர் குழுவிற்கான பயிற்சி வசதிகளுடன்கூடிய மைய சமையலறைக் கூடம் ஒன்றினை தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகமானது அமைத்துள்ளது. மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு மைய சமையற்கூடத்திலுள்ள வசதிகளைப் பயன்படுத்தி மதிப்பூட்டப்பட்ட சுவையான மீன் உணவு வகைகளை தயாரிப்பதில் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

10.3 சென்னையில் இணையதளம்மூலம் மீன் விற்பனை வசதிகளை ஏற்படுத்துதல்

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகமானது கடல் மீன் உணவுப் பொருட்களை உண்பதினால் உடல் நலனுக்கு ஏற்படக்கூடிய நன்மைகள் குறித்த விழிப்புணர்வை பொது மக்கள் உணரும்வகையில் பெருமுயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. சென்னை, மீன் விற்பனைப் பிரிவின் வாடிக்கையாளர்களின் வசதிக்காக இணையதளம் மூலமாக மீன் விற்பனை செய்யும் கட்டமைப்பு வசதியை உருவாக்கியுள்ளது. பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட வரவேற்பினைத் தொடர்ந்து இணையதள விற்பனையை புதுப்பிக்கப்பட்டதுடன், கூடுதல் வசதிகளுடன் கைபேசி செயலியினையும் அறிமுகப்படுத்தியுள்ளது.

[2020 மார்ச் 17

10.4. புதிய திட்டங்கள்

10.4.1 மீன் தீவனம் தயாரிக்கும் ஆலையினை இயக்குதல்

தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் தஞ்சாவூர், அச்சம்பட்டியில் தமிழ்நாடு அரசு மீன் வளத் துறையால் நிர்மாணிக்கப்பட்ட மீன் தீவனத் தயாரிப்பு ஆலையினை தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் பொறுப்பேற்று, 23-8-2018 முதல் மீன் தீவனத் தயாரிக்கும் பணிகளை மேற்கொண்டு வருகிறது. இதுநாள் வரை 170 டன் மீன் தீவனத் தயாரிக்கப்பட்டு துறையின் மீன் பண்ணைகளுக்கும், மற்றும் தனியார் மீன் பண்ணைகளுக்கும் விநியோகிக்கப்பட்டுள்ளது.

10.4.2 தேனாம்பேட்டையில் நவீன கடல் மீன் உணவகம்

சென்னை தேனாம்பேட்டையிலுள்ள கடல் மீன் உணவகமானது அமர்ந்து, உணவருந்தும் வசதிகளுடன் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தால் நவீனப்படுத்தப்பட்டுள்ளது.

10.4.3 தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தினுடைய தயாரிப்புகளை "வணிக அடையாளப்படுத்துதல்"

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகமானது அதனுடைய திட்டங்களையும், செயல்பாடுகளையும் பொதுமக்களிடையே பிரபலபடுத்திடும் பொருட்டு "இது நம்ம ஊரு மீன்கள்" என்ற வாசகத்துடன்கூடிய புதிய வணிக அடையாள சின்னம் மற்றும் நிறுவன விளம்பர படம் ஆகியவற்றை அறிமுகப்படுத்தி சமூக ஊடகங்கள்மூலம் பிரபலப்படுத்தும் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

2018-2019 ஆம் நிதியாண்டில் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகமானது மாநில அரசுக்கு ஈவுத் தொகையாக ரூ.2.57 கோடியும் மற்றும் மாண்புமிகு முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு ரூ.1 கோடியும் வழங்கியுள்ளது.

மேலும், 2018-2019 ஆம் நிதியாண்டில் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் ரூ.1.10 கோடியை தனது பங்களிப்பாக தமிழ்நாடு மீனவ நல வாரியத்திற்கு வழங்கியதுடன், ரூ.24.76 இலட்சத்தினை 2019-2020 ஆம் ஆண்டிற்கு பெரு நிறுவன சமூக பொறுப்பு நிதி பங்களிப்பிற்கு ஒதுக்கீடு செய்துள்ளது.

11. தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா மீன் வளப் பல்கலைக்கழகம் (TNJFU)

தமிழ்நாடு மீன் வளப் பல்கலைக்கழகமானது தமிழ்நாட்டில் தொழில்சார் மீன் வள தொழில் கல்வியை வழங்கிடவும், ஆராய்ச்சி மற்றும் பயிற்சிகளின் வாயிலாக மீன் உற்பத்தியை அதிகரித்து மீன் வளத்தை முன்னேற்றும் நோக்கத்தோடும், மாநில அரசால் மாநில வேளாண்மைப் பல்கலைக்கழக அமைப்பு மற்றும் பாடத் திட்டத்தைத் தழுவி தமிழ்நாடு மீன் வளப் பல்கலைக்கழகச் சட்டம், 2012-ன்படி, 19-6-2012 அன்று நாகப்பட்டினத்தில் நிறுவப்பெற்றது. மேலும், அரசாணை (நிலை) எண் 21, கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன் வளத் துறை நாள் 16-2-2018-ன்படி இப்பல்கலைக்கழகத்தின் பெயர் தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா மீன் வளப் பல்கலைக்கழகம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

11.1 தொலைநோக்குப் பார்வை

“மீன் வள அறிவியலைப் பயன்படுத்தி உணவு, ஊட்டச் சத்து மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல்”.

11.2 கடமைகள்

மீன் வள அறிவியல் சம்பந்தமான கற்பித்தல், ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கம் ஆகியவை இப்பல்கலைக்கழகத்தின் கடமைகளாகும்.

11.3 நோக்கங்கள்

- மீன் வள அறிவியல், மீன் வள பொறியியல், அடிப்படை அறிவியல், உணவு மற்றும் ஊட்டச்சத்து அறிவியல் ஆகிய புலங்களில் திறன் சார்ந்த தொழில்நுட்பக் கல்வியை வழங்குதல்
- மீன் வளப் பட்டதாரிகளுக்கு பல்வேறு துறைகளில் மேற்படிப்பு வாய்ப்புகளை உருவாக்குதல்
- மீன் வள அறிவியலில் ஒழுங்குபடுத்தப்பட்ட ஆராய்ச்சிகளைக் கொண்டு அதிநவீன தொழில்நுட்பங்களை உருவாக்குதல்
- பரவலான மற்றும் மேம்படுத்தப்பட்ட உபகரணங்கள் மற்றும் மாதிரிகளைக் கொண்டு பயனுள்ள விரிவாக்க சேவையினை வழங்குதல்
- தொழில்முனைவோர் மற்றும் கல்வியாளர்களுடன் இணைந்து

[2020 மார்ச் 17

சிறப்பான தொழில் காப்பக சூழலை ஏற்படுத்த, மாறுபட்ட மற்றும் மேம்பட்ட தொழில்நுட்பங்களை உருவாக்குதல்

- மாநிலத்தில் உள்ள மீன் வளர்ப்போர், மீனவர்கள் மற்றும் வேலையில்லா இளைஞர்களுக்கு மீன் வள தொழில்சார் கல்வியைக் கொண்டு தொழில்முனையும் திறனை மேம்படுத்துதல்

11.4 பணி அமைப்பு

தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா மீன் வளப் பல்கலைக்கழகத்தின் பணியமைப்பு அட்டவணை-10-ல் காட்டப்பட்டுள்ளது:

அட்டவணை: 10

வ. எண்	பதவி	எண்ணிக்கை
1.	துணைவேந்தர்	1
2.	பதிவாளர்	1
3.	பல்கலைக்கழக அதிகாரி	13
4.	பேராசிரியர்	7
5.	இணைப் பேராசிரியர்	34
6.	உதவிப் பேராசிரியர்	113
7.	உதவி நூலகர்	3
8.	உடற்கல்வி உதவி இயக்குநர்	1
9.	ஆசிரியரல்லாத பணியாளர்	271
	மொத்தம்	**444**

11.5 கல்வி செயல்பாடுகள்

மறைந்த முதல்வர் டாக்டர் ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையின்படி, 2012 ஆம் ஆண்டில் நாகப்பட்டினத்தில் நிறுவப்பட்ட மீன் வளப் பல்கலைக்கழகமானது, மீன் வளக் கல்வியை வழங்குவதில் தேசிய அளவில் மட்டுமல்லாது உலகளவிலும் பெரும் அங்கீகாரத்தைப்

2020 மார்ச் 17]

பெற்றுள்ளது. மேலும், இப்பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரியான பொன்னேரியிலுள்ள டாக்டர் எம்.ஜி.ஆர் மீன் வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் 2019 ஆம் ஆண்டில் இந்திய வேளாண் ஆராய்ச்சி குழுமத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது.

அ) வேளாண்மை மற்றும் பிற வேளாண்சார் துறைகளை ஒப்பிடும்போது, மீன் வளர்ப்புத் துறையின் ஒட்டுமொத்த ஆண்டு வளர்ச்சி விகிதம் அதிகமாக உள்ளதால், மீன் வளப் பட்டதாரிகளின் தேவை தேசத்தின் மொத்த வேளாண் பட்டதாரிகளின் எண்ணிக்கையில் குறைந்தபட்சம் 10 விழுக்காடாவது இருத்தல் அவசியம். மாநிலம் மற்றும் தேசிய தேவையினைப் பூர்த்தி செய்திட தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா மீன் வளப் பல்கலைகழகம் சரியான இலக்கை நோக்கி செல்கிறது.

ஆ) இந்திய வேளாண் ஆராய்ச்சி குழுமம் நடத்திய அகில இந்திய முதுநிலை நுழைவுத் தேர்வில் இப்பல்கலைக்கழகத்தின் பதினான்கு மாணவர்கள் தர வரிசையில் முதன்மை பெற்றுள்ளனர். தொழில்முறை மீன் வளப் பட்டதாரி மன்றம் நடத்திய தேர்வில் இப்பல்கலைக்கழகத்தின் மாணவர் இந்த ஆண்டிற்கான “இந்தியாவின் தலைசிறந்த மீன் வளப் பட்டதாரி” எனும் விருதினைப் பெற்றுள்ளார். மாணவர்களின் போட்டித் திறனை வளர்க்கும் இத்திட்டத்தை தொடர்ந்து இப்பல்கலைக்கழகம் செயல்படுத்தி வருகிறது.

11.6 கல்வி நிலையங்கள் மற்றும் கல்விக்கான உட்கட்டமைப்பு வசதிகள்

11.6.1 தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா மீன் வளப் பல்கலைக்கழகத்தின் உறுப்பு நிலையங்கள்

தற்போது, இப்பல்கலைக்கழகத்தில் நான்கு புலங்கள் உள்ளன. இப்பல்கலைக்கழகத்தில் பி.எப்.எஸ்.ஸி (இளநிலை மீன் வள அறிவியல்), பி.டெக்., (மீன் வளப் பொறியியல்), பி.டெக்., (ஆற்றல் மற்றும் சுற்றுச்சூழல் பொறியியல்), பி.டெக்., (மீன் வள கடல்சார் தொழில்நுட்பம்) பி.டெக், (இளநிலை உயிர் தொழில்நுட்பம்), பி.பி.ஏ., (இளநிலை மீன் வணிக மேலாண்மை) பி.டெக்., (இளநிலை உணவு தொழில்நுட்பம்) ஆகிய 7 தொழிற் படிப்புகள் வழங்கப்பட்டு வருகிறது. இப்படிப்புகள்

[2020 மார்ச் 17

11 தொழில் கல்லூரிகள்மூலம் வழங்கப்படுகின்றன. மேலும், 4 தொழிற்சார் கல்லூரிகள்மூலம் இளநிலை தொழிற்சார் பட்டப்படிப்புகள்; மீன் பிடித் தொழில், மீன் வளர்ப்பு, மீன் நல மேலண்மை மற்றும் மீன் பதனம் போன்றவற்றில் வழங்கப்படுகிறது. தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா மீன் வளப் பல்கலைக்கழகத்தின் 45 உறுப்பு நிறுவனங்கள் (ஒப்புமை ஆய்வகம் உட்பட) தமிழகம் முழுவதும் செயல்பட்டு வருகின்றன. 2019-2020 ஆம் ஆண்டில் இளநிலைப் படிப்புகளில் 461 மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். 90 மாணவர்கள் பட்டம் பெற்று வெளியேறியுள்ளனர். இப்பல்கலைக்கழகத்தில் 11 எம்.எப்.எஸ்ஸி படிப்பும், இரண்டு எம்.டெக் படிப்பும், ஒரு எம்.பி.ஏ படிப்பும் வழங்கப்படுகின்றது. மேலும், 12 முனைவர் பட்ட படிப்பும் வழங்கப்படுகிறது. இதில், 37 முதுநிலை மாணவர்கள் மற்றும் 13 முனைவர் பட்டப் படிப்பு மாணவர்கள் சேர்ந்துள்ளனர். 2019-2020-ல், முதுநிலை படிப்பு மற்றும் முனைவர் படிப்பை முறையே 30 மற்றும் 5 மாணவர்கள் முடித்து பட்டம் பெற்றுள்ளனர்.

11.6.2. கல்விக்கான புதிய உட்கட்டமைப்பு வசதிகள்

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 2019-2020 ஆண்டில் ரூ.47.5 கோடி மதிப்பில் 7 புதிய கட்டடங்களைத் துவங்கிவைத்தார். அதன் விவரங்கள் வருமாறு:

நாகப்பட்டினத்தில், மீன் வளப் பொறியியல் கல்லூரிக்கான கட்டடங்கள் மற்றும் பல்கலைக்கழக வளாகத்தில் நூலகக் கட்டடம், வகுப்பறைகள் மற்றும் கருத்தரங்கு கூடம், இராமநாதபுரம் மாவட்டம், மண்டபத்தில் உள்ள மீன் வளப் பயிற்சி நிலையத்திற்கு கல்விக்கூடம்; சென்னை மாதவரத்தில் வண்ண மீன் வானவில் விற்பனை வளாகம் மற்றும் காட்சியகம்; சென்னை, வாணியஞ்சாவடியில் உள்ள மீன் வளப் பட்ட மேற்படிப்பு நிலையத்தில் கூடுதல் கல்விக்கூட உட்கட்டமைப்பு மற்றும் நாகப்பட்டினம் மாவட்டம், தலைஞாயிறில் டாக்டர் எம்.ஜி.ஆர். மீன் வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் நிருவாகக் கட்டடங்கள்.

11.6.3. தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா மீன் வளப் பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப இயக்குனரகங்கள்

இப்பல்கலைக்கழகத்தில் 5 தொழில்நுட்ப இயக்குனரகங்கள் முறையே ஆராய்ச்சி இயக்குனரகம், விரிவாக்கக் கல்வி இயக்குனரகம், வளங்குன்றா நீருயிரி வளர்ப்பு இயக்குனரகம் மற்றும் அதன் ஏழு

2020 மார்ச் 17]

உறுப்பு மையங்கள், மீன் வளர்ப்புத் தொழில்நுட்பப் பயிற்சி மற்றும் தொழில் காப்பக இயக்குனரகம் மற்றும் அதன் மூன்று மையங்கள், மீன் பிடி தொழில்நுட்பப் பயிற்சி மற்றும் தொழில் காப்பக இயக்குனரகம் மற்றும் அதன் மூன்று மையங்கள் இயங்கி வருகின்றன.

11.6.4. தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா மீன் வளப் பல்கலைக்கழகத்தின் முக்கிய கல்விச் சாதனைகள்

நாட்டின் பிற மீன் வளப் பல்கலைக்கழகங்கள் மற்றும் மீன் வளக் கல்லூரிகளுடன் ஒப்பிடுகையில் மொத்த மாணவர் சேர்க்கை விகிதாச்சாரத்தை கூடுதலாக எட்டியுள்ளது. பிற மீன் வளப் பல்கலைக்கழகங்களுடன் ஒப்பிடுகையில் அதிகமான பாடத் திட்டங்களை வழங்கும் ஒரே பல்கலைக்கழகம் தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா மீன் வளப் பல்கலைக்கழகம் ஆகும் (11 இளநிலை, 14 முதுநிலை மற்றும் 11 முனைவர் பாடத் திட்டங்கள்). இப்பல்கலைக்கழகம், மீன் வளத்தில் நிபுணத்துவம் பெற்ற பொறியியல் பட்டதாரிகளை உருவாக்குகிறது. மேலும், இப்பல்கலைக்கழகம் பல்வேறு தொழில்நுட்ப பூங்காக்களையும் உருவாக்கியுள்ளது.

11.6.5. பல்கலைக்கழகம் வழங்கும் பாடத் திட்டங்கள்

தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா மீன் வளப் பல்கலைக்கழகமானது தற்போதுள்ள புதிய வளாகத்தில் செப்டம்பர் 2018 முதல் செயல்பட்டு வருகிறது. பல்கலைக்கழகம் தொடர்ந்து விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மானியக் குழுவின் ஒப்புதலோடு, தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா மீன் வளப் பல்கலைக்கழகம் நான்கு தொழில்சார் பாடத் திட்டங்களை மீன் வளம் மற்றும் மீன் வளர்ப்புத் தேவைகளை பூர்த்தி செய்திட அறிமுகப்படுத்தியுள்ளது.

இக்கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை கடந்த இரண்டு ஆண்டுகளில் மும்மடங்கு உயர்ந்து, தற்போது 1,124 மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். இப்பல்கலைக்கழகத்திற்கு ஒப்பளிக்கப்பட்ட 171 ஆசிரியர் பணியிடங்களில், தற்போது 106 ஆசிரியர்கள் பணியாற்றி வருகின்றனர். இப்பல்கலைக்கழகம், தமிழ்நாடு மற்றும் நாட்டின் சிறந்த பல்கலைக்கழகங்களிலிருந்து ஆசிரியர்கள் மற்றும் சிறந்த ஆராய்ச்சியாளர்களை பணியாற்ற ஈர்த்து வருகிறது.

[2020 மார்ச் 17

11.6.6. புதிய அறக்கட்டளை விருதுகள்

பல்வேறு மீன் வளப் பாடத் திட்டத்தில் மாணவர்களை ஊக்குவிக்கவும், அவர்களின் கல்வித்திறனை அங்கீகரிக்கவும் தற்போதுள்ள 40 விருதுகளுடன், கூடுதலாக 10 விருதுகள் வழங்கப்படுகின்றன.

11.7. ஆராய்ச்சி செயல்பாடுகள்

- **ஆராய்ச்சி**

பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சிகள் 4P's Cell (ஆராய்ச்சிக் கட்டுரைகள், ஆராய்ச்சித் திட்டங்கள்; மீன்பொருட்கள் உற்பத்தி மற்றும் காப்புரிமை) வழிகாட்டுதலின்படி செயல்பட்டு வருகிறது. குறிப்பாக, இந்த வருடமும் இவ்வழிகாட்டுதல்கள் நடைமுறையில் உள்ளன. தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா மீன் வளப் பல்கலைக்கழக ஆசிரியர்களால் தரமான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு, முடிவுகள் சிறந்த ஆய்விதழ்களில் வெளியிடப்பட்டுள்ளன. இவ்வாண்டு, பல்கலைக்கழகத்தில் 132 அறிவியல் ஆராய்ச்சிக் கட்டுரைகள் மற்றும் தொழில்நுட்ப அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன. இது கடந்த ஆண்டுகளைவிட அதிகமாகும். இவ்வாறான ஆராய்ச்சி சாதனைகள், பேராசிரியர்களின் பணி முன்னேற்றத்திற்கும், பதவி உயர்வுக்கும் அளவுகோலாக எடுத்துக்கொள்ளப்படுகிறது.

- **தொழில்நுட்பம் மற்றும் காப்புரிமைகள்**

தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா மீன் வளப் பல்கலைக் கழகத்தில் 10 காப்புரிமைகள் (புதிய கண்டுபிடிப்புகள்) பல்வேறு நிலைகளில் அனுமதி பெறத்தக்க நிலையில் உள்ளன. ஏற்கெனவே, பல்கலைக்கழக தொழில்நுட்பங்களுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட 4 காப்புரிமைகள் இன்னும் சில மாதங்களில் அனுமதி பெறும் நிலையில் உள்ளது. இவ்வாண்டு இரண்டு புதிய காப்புரிமைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

- **உருவாக்கப்பட்டுள்ள ஆராய்ச்சி உட்கட்டமைப்புகள்**

மீன் வள முதுநிலை பட்ட மேற்படிப்பு நிலையம், வாணியஞ்சாவடி வளாகத்தில் மீன் உணவு மற்றும் தீவன பகுப்பாய்வு ஒப்புமை ஆய்வுக்கூடம் மற்றும் மாதவரம் வளாகத்தில் நீர்வாழ் உயிரின நல ஒப்புமை ஆய்வுக்கூடம் உருவாக்கப்பட்டுள்ளன.

மாதவரம் வளாகத்திலுள்ள மீன் வளர்ப்பிற்கான நீர் மறுசூழல் அமைப்பு ஒரு தனித்தன்மையான வசதியாகும். மாதவரம் மற்றும் தஞ்சாவூர் மையத்தில் நடமாடும் மீன் நல ஆய்வுக்கூடங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. மாதவரம் வளாகத்தில் உள்ள “வெளி வளாக உயிர்க்கூழ்மத்திரள் தயாரிப்பு பூங்கா” முதலாவதாக உருவாக்கப்பட்டுள்ளது.

- **தற்பொழுது செயல்படுத்தப்படும் திட்டங்கள்**

தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ், பின்வரும் மூன்று புதிய திட்டங்கள் ரூ.5.2 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளன:

i. கடற்பாசி வளர்ப்பு தொழில்நுட்பம் உருவாக்கி, தொழில்நுட்பப் பரிமாற்றம் வாயிலாக இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் கரையோர மீனவர்களுக்கு மாற்று வேலைவாய்ப்பு உருவாக்குதல் (ரூ.2.51 கோடி)

ii. காவேரி டெல்டா பகுதிகளில் மீன் வளர்ப்போருக்கு மீன் வளர்ப்பு சேவை மையம் ஏற்படுத்துதல் (ரூ.1.39 கோடி)

iii. ஈரோடு மாவட்டத்தில் உள்ள உள்நாட்டு மீன் வளர்ப்போருக்கான விவசாயத்துடன் ஒருங்கிணைந்த மீன் வளர்ப்பு மாதிரி அமைப்புகளை ஏற்படுத்துதல். (ரூ.1.30 கோடி)

தேசிய மீன் வள மேம்பாட்டு வாரியத்தின் நிதியுதவியுடன் பின்வரும் மூன்று திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன:

i. தஞ்சாவூர், பறக்கை மற்றும் பவானிசாகர் ஆகிய மூன்று இடங்களில் மீன் வள மையங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன (ரூ.60 இலட்சம்)

ii. உயிர்க்கூழ்மத்திரள் தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதன்மூலம் வனாமி இறால் வளர்ப்பிற்கான சூழலுக்கேற்ற தீவனம் உருவாக்குதல் (ரூ.50 இலட்சம்)

iii. மாதவரத்தில் உள்ள நீர்வாழ் உயிரின வானவில் தொழில்நுட்பப் பூங்காவில் செயல்பட்டுவரும் தொழிற்காப்பகங்களுக்கு நீர் மறுசுழற்சி முறையில் மீன் வளர்ப்பு வசதியைப் பயன்படுத்தி மீன் குஞ்சு பொரிப்பகம், நாற்றங்கால் மற்றும் வளர்ப்புக் குளங்களில் செயல்விளக்க மாதிரிகளை நிறுவுதல் (ரூ.50 இலட்சம்)

[2020 மார்ச் 17

உயிரி தொழில்நுட்பத் துறை, அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை மற்றும் இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தரக் கட்டுப்பாட்டு ஆணையம்மூலம் கீழ்க்கண்ட ஆராய்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன:

i. உயிர்க் கூழ்மத்திரள் முறையில் ஆரோக்கியமான இறால் மற்றும் கிப்ட் திலேப்பியா வளர்ப்பு: நிலையான இயக்கமுறை மற்றும் தொழில்நுட்ப மேம்பாடு (ரூ.57.93 இலட்சம்)

ii. மீன் எலும்புகளிலிருந்து பெறப்பட்ட கொலாஜன் பெப்டைடுகளின் எதிர் எலும்புப்புரை பண்புகளின் உயிரியல்பு ஆய்வு (ரூ.36.07 இலட்சம்)

iii. மீன் பதன கழிவிலிருந்து பெறப்பட்ட பயோபாலிமர் மற்றும் பயோஅட்ராக்டண்ட் கொண்டு தூண்டில் மீன் பிடிப்பிற்கான செயற்கை இரை உருவாக்குதல் (ரூ.44.56 இலட்சம்)

iv. மன்னார் வளைகுடா பகுதியிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட ஃபியோடக்டைலம் ட்ரைக்கார்னுடம் என்னும் கடல் நுண்பாசியிலிருந்து அய்கோசாபெண்டாயினோயிக் அமில உற்பத்தி (ரூ.41.86 இலட்சம்)

v. காலநிலை மாற்றத்தினால் கடல் உணவு பாதுகாப்பில் விப்ரியோ வல்னிஃபிகஸ் பாக்டிரியாவின் மறு எழுச்சி (ரூ.39.67 இலட்சம்)

vi. இந்திய கடலோரங்களில் துடுப்பு மற்றும் ஓடுள்ள மீனினங்களை கண்காணித்தல் மற்றும் சாத்தியமான தடுப்பு நடவடிக்கைகள் (ரூ.9.52 இலட்சம்)

சர்வதேச நிறுவனங்களுடன் இணைந்து பல்கலைக்கழகம் தற்போது இயக்கும் திட்டங்கள் பின்வருமாறு:

i. வெள்ளை இறால்களில் (பினேயஸ் வனாமி) செயல்திறனை அதிகரிப்பதில் லைஸோஃபாஸ்ஃபோலிபிட் சார்ந்த ஊட்டச் சத்து உள்ளிழுக்கும் மேம்படுத்தியின் விளைவு

ii. வெள்ளை இறால்களின் வளர்ச்சித் திறன் மற்றும் நோய் எதிர்ப்பு திறனை மூலப் படிமங்களின் (இம்யுனோமாடுலேட்டர்ஸ்)மூலம் அதிகரிப்பதன் விளைவு

iii. வெள்ளை இறால்களின் வளர்ச்சித் திறனை மேம்படுத்துதலில் குரோத் பிளஸ்® மற்றும் லிப்டோஃப்ரை® ஆகியவற்றின் பங்கு

2020 மார்ச் 17]

iv. நைல் திலேப்பியாவின் (ஓரியோகுரோமிஸ் நைலோடிகஸ்) வளர்ச்சியில் பைடேஸ் நொதிகளை உணவுகளில் கூடுதலாக சேர்ப்பதன் விளைவுகளை ஆராய்தல்

v. இறால்களின் செயல்திறனை அதிகரிப்பதில் BgMOS® மற்றும் ஆக்டிவோ® திரவப் பொருட்களின் பங்கு

11.8 விரிவாக்கக் கல்வி

பல்கலைக்கழகத்தில் மீனவர்கள் மற்றும் மீன் வளர்ப்போரின் தேவைக்கிணங்க 7 மீன் வள ஆய்வகங்கள், 3 மீன் வள கள ஆய்வகங்கள், 4 மூலக்கூறு கண்டறியும் ஆய்வகங்கள், 3 உணவுத் தர ஆய்வகங்கள் மற்றும் 1 மீன் தீவன தர ஆய்வகம் ஏற்படுத்தப்பட்டு சீரிய முறையில் இயங்கி வருகின்றன. இந்த கட்டமைப்புகள்மூலம் இதுவரை 514 மீன் பண்ணையாளர்களும், 16 கடல் உணவு பொருள் ஏற்றுமதியாளர்களும் பயன்பெற்றுள்ளனர்.

அரசின் உதவியுடன் உருவாக்கப்பட்ட வசதிகளுள் சில பின்வருமாறு:

i. காப்பகம்/பங்குதாரர்களுக்கான மாதிரி கட்டமைப்பு சிறப்பு செயலாக்க அலகு

ii. ‘கயலகம்’ என்ற பெயரில் மீன் விற்பனை நிலையம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது

iii. கடலில் மாதிரி கூண்டுகள் அமைத்து மீன் வளர்ப்பு தொடங்கப்பட்டுள்ளது

iv. மீன் வள அறிவியலில் கூட்டு ஆராய்ச்சி மேற்கொள்ளவும் பல்கலைக்கழகங்களுக்கிடையே மாணவர் பரிமாற்றம் மேற்கொள்ளவும் மற்றும் இளங்கலை மாணவர்கள் வெளிநாட்டுப் பயிற்சி பெறுவதை ஊக்குவிப்பதற்காகவும் பன்னாட்டு பல்கலைக்கழகங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளது.

11.9 டிஜிட்டல், பசுமை மற்றும் தூய்மையான பல்கலைக்கழக வளாக முயற்சி

பல்கலைக்கழக வளாகம் நல்ல தரத்துடன் செயல்பட பல்வேறு நடவடிக்கைகள் வருடந்தோறும் எடுக்கப்பட்டு வருகிறது. பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள் மற்றும் வளாகங்களைத் தூய்மையாக மற்றும் பசுமையானதாக மாற்ற புதிய திட்டங்கள்

[2020 மார்ச் 17

ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன. தமிழக அரசின் வழிகாட்டுதலின்படி தரமான வளாக சூழலை மேம்படுத்த பல்கலைக்கழக தலைமையிட கட்டடங்களில் சூரிய ஒளி மின்சக்தி சேமிப்பு அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. பவானிசாகர் வளங்குன்றா நீர்வாழ் உயிரி மையப் பண்ணை, சூரிய ஒளி மின்சக்தி கொண்டு முழுமையாக இயக்கப்படுகிறது. மையத்தின் கட்டடங்களின் பகுதி மின்தேவை சூரிய ஒளி மின் சக்தி கொண்டு பூர்த்தி செய்யப்படுகிறது. இத்தகைய முயற்சி பிற வளாகங்களிலும் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா மீன் வளப் பல்கலைக்கழக வளாகத்தில் காற்றாடி மின் உற்பத்தி நிலையம் விரைவில் ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் மூலமாக ஒரு பசுமையான வளாகம் உருவாகும். மேலும், புதிதாக கட்டப்பட்டுள்ள பல்கலைக்கழக நூலகம் பசுமையான கட்டடமாகும். இக்கட்டடம் இயற்கையான வெளிச்சம் வருமாறும் அதன்மூலம் வாசகர்கள் எளிதாக படிக்கவும் வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

11.10 சர்வதேச மற்றும் தேசிய அளவிலான கூட்டங்கள்

சர்வதேச அளவில் நீர்வாழ் உயிரி வளர்ப்பில், தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா மீன் வளப் பல்கலைக்கழகம் தொடர்ந்து அங்கீகரிக்கப்பட்டு வருகிறது. அரசின் உதவியுடன் 'ஆசிய பசிபிக் நீர்வாழ் உயிரி வளர்ப்பு 2019' என்ற சர்வதேச கருத்தரங்கம் மற்றும் வர்த்தக நிகழ்ச்சியானது உலக நீர்வாழ் உயிரி வளர்ப்புச் சங்கம்-ஆசிய பசிபிக் பிரிவுடன் இணைந்து நடத்தப்பட்டது. இக்கருத்தரங்கின் கருப்பொருள் 'உடல் நலம், சொத்து மற்றும் மகிழ்ச்சியான வாழ்வில் நீர்வாழ் உயிரின வளர்ப்பு' ஆகும். மீன் வளம், பணியாளர் (ம) நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் மற்றும் கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன் வளத் துறை அரசு முதன்மைச் செயலாளர் ஆகியோர் முன்னிலையில், இந்நிகழ்ச்சியை மாண்புமிகு பல்கலைகழக வேந்தர் அவர்கள் துவக்கி வைத்தார்கள். இந்நிகழ்வில் 70-க்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து வந்த 3,500 பேர் கலந்து கொண்டனர்.

11.11. ஆறாவது பட்டமளிப்பு விழா

தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா மீன் வளப் பல்கலைக்கழகத்தின் ஆறாவது பட்டமளிப்பு விழாவில் 111 நபர்களுக்கு பட்டமளிக்கப்பட்டது. அதில், இளநிலை மீன் வள பட்டதாரிகள் 65 பேருக்கும், இளநிலை மீன் வள பொறியியல் பட்டதாரிகள் 19 பேருக்கும், முதுநிலை மீன் வள அறிவியல்

2020 மார்ச் 17]

பட்டதாரிகள் 22 பேருக்கும், முனைவர் பட்டம் 5 பேருக்கும் நேரடியாக வழங்கப்பட்டன. இது தவிர, 22 இளநிலை மற்றும் முதுகலை பட்டதாரிகள் சான்றிதழ்கள் தபால்மூலம் பெற்றுக் கொண்டனர்.

11.12. தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா மீன் வளப் பல்கலைக்கழகம்மூலம் உருவாக்கப்பட்ட தொழில்நுட்பங்கள்

பல்கலைக்கழகம் மீன் வளம் சார்ந்த பல்வேறு தொழில்நுட்பங்களை தொடர்ந்து உருவாக்கி வருகிறது. இப்பல்கலைக்கழகம்மூலம் உருவாக்கப்பட்ட கீழ்க்கண்ட முக்கிய தொழில்நுட்பங்கள் மீன் வளம் சார்ந்தோருக்கு வழங்கப்பட்டு வருகிறது:

அ) இந்திய அரசின் நீலப் புரட்சித் திட்டம்மூலம் இப்பல்கலைக்கழகம் தொழில்நுட்பங்களை 8,152 மீன் வளர்ப்போர், மீனவர், விரிவாக்கப் பணியாளர்கள் மற்றும் மீன் வள அலுவலர்களுக்கு வழங்கியுள்ளது.

ஆ) மீன் வளர்ப்பு, உயிர் உணவு உற்பத்தி, அலங்கார மீன் வளர்ப்பு, உயிர்க்கூழ்மத்திரள் தொழில்நுட்பம், கூண்டு முறை மீன் வளர்ப்பு, இறால் வளர்ப்பு, நீர்வாழ் உயிரி நல மேலாண்மை, ஆழ்கடல் மீன் பிடிப்பு, படகு பராமரிப்பு மற்றும் மதிப்பூட்டிய மீன் உணவு தயாரிப்புகளில் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

இ) 50 மீன் வளர்ப்போருக்கு கடலில் கூண்டு முறையில் மீன் வளர்ப்பு செய்திட கடலில் மீன் வளர்ப்பிற்கான கூண்டுகள் வழங்கப்பட்டுள்ளன.

ஈ) உயிர்க்கூழ்மத்திரள் தொழில்நுட்பம்மூலம் 'பயோ இனோ' என்ற விரைவான உயிர்க்கூழ்மத்திரள் வளர்ச்சிக்கான ஊக்கி, உணவு மற்றும் ஊட்டச் சத்து ஊக்கியான 'பயோசாக்' மற்றும் உயிர்க்கூழ்மத்திரள் சார்ந்த இறால் உணவு 'நியூட்ரிபிளாக்' உருவாக்கப்பட்டுள்ளது.

உ) இந்தியாவிலேயே முதன்முறையாக டானியோ டாங்சிலா, டகான்சியா பிளமண்டோசா, புன்டியஸ் சோஃபோர் போன்ற உள்நாட்டு வண்ண மீன் இனங்களின் தூண்டுமுறை இனப்பெருக்கம் மற்றும் பேரளவு குஞ்சுகள் உற்பத்தி தொழிநுட்பங்கள் உருவாக்கப்பட்டுள்ளது.

ஊ) மீன் செதில் நீக்கும், மீன் முள் நீக்கும், மீன்களைத் துண்டாக்கும், மீன் தலை நீக்கும் இயந்திரங்கள் பல்கலைக்கழக பொறியியல் வல்லுநர்களால் உருவாக்கப்பட்டுள்ளன. உயிர்கூழ்மத்திரள் உற்பத்திக்கான நீர் மறுசுழற்சித் தொட்டி மற்றும் போட்டோ பயோரியாக்டர் உருவாக்கப்பட்டுள்ளன.

எ) பார்மலின் மாசுள்ள மீன்களை ஆய்வு செய்து கண்டறிய FQMC என்ற துரித ஒளிரூட்டு ஆய்வுப் பெட்டி உருவாக்கப்பட்டுள்ளது.

11.13 நிலையான வளர்ச்சி இலக்குகள்

பல்கலைக்கழகத்தின் இளநிலை, முதுநிலை மற்றும் முனைவர் படிப்பின் கல்வித் தரத்தை உயர்த்த தரமான ஆசிரியர்களை நியமித்தல் மற்றும் தகுந்த முறையில் தேர்வு செய்து மாணவர்களைச் சேர்த்தல்; தேவையான திறன்மிகு பட்டதாரிகள், தொழில்சார் மாணவர்களை உருவாக்கத் தகுந்த திறன் மேம்பாடு, தொழில்காப்பகம் மற்றும் தொழில் துவக்க மையங்களை ஏற்படுத்த கவனம் செலுத்துதல்; ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான கட்டமைப்புகளை மேலும் மேம்படுத்துவதில் பல்கலைக்கழகம் உரிய கவனம் செலுத்தி வருகிறது. இதன்மூலம் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் ஆராய்ச்சி மேற்கொண்டு மீனவர்கள் மற்றும் மீன் வளர்ப்போருக்கான தரமான தொழில்நுட்பங்கள் சென்றடைய உதவுதல்; கடலோர பகுதியில் கூண்டு முறையில் மீன் வளர்ப்பு மற்றும் தூரக்கடல் மீன் பிடிப்பை ஊக்குவிப்பதன்மூலம் கடலை முறையாக பயன்படுத்த முயற்சித்தல்; தமிழக மக்களிடம் மீன் உண்ணும் அளவை மேம்படுத்த புதிய தரமான மீன் பொருட்களை பிரபலப்படுத்த முயற்சி மேற்கொள்ளுதல்; நீர் மறுசுழற்சி மீன் வளர்ப்பு மற்றும் ஒருங்கிணைந்த அக்வாபோனிக்ஸ் முறையில் உலகளாவிய கூட்டு ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டு இதன்மூலம் இந்தியச் சூழலுக்கு உகந்த புதிய தொழில்நுட்பம் உருவாக்கப்பட்டு, செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மீன் வள அறிவியலைப் பயன்படுத்தி, தமிழகத்தின் உணவு, ஊட்டச்சத்து மற்றும் வாழ்வாதார பெருக்கத்தை தாரக மந்திரமாகக் கொண்டு இப்பல்கலைக்கழகம் செயல்பட்டு வருகின்றது. இப்பல்கலைக்கழகம் தற்போதைய பொருளாதார போட்டி சூழலுக்கேற்ப, பல்கலைக்கழகத்தின் செயல்திறன் வலுவாக்கப்பட்டு வருகிறது. மேலும், தரமான மீன் வளக் கல்வி அனைவருக்கும் கிடைக்க உறுதி செய்துள்ளது. தமிழக அரசு மற்றும் பல்கலைக்கழக குறிக்கோள்களை கருத்தில் கொண்டு மாணவர்களுக்கு தரமான கல்வி

2020 மார்ச் 17]

அளிக்கவும், ஏழை மற்றும் எளிய மக்களின் வாழ்வாதாரத்தை மீன் வளம் மற்றும் மீன் வளர்ப்பு தொழில்நுட்பம்மூலம் மேம்படுத்தவும் இப்பல்கலைக்கழக பணியாளர்கள் தொடர்ந்து பாடுபட்டு வருகின்றனர். கல்வி மற்றும் பயிற்சிகளின் வாயிலாக மீனவர்களின் தினசரி வருமானம் மற்றும் பொது மக்களுக்கு புரதம் நிறைந்த உணவை வளங்குன்றாமல் முழுமையாக வழங்குவதிலும் இப்பல்கலைகழகம் கவனம் செலுத்தி வருகிறது.

12. 2019-2020 ஆம் ஆண்டில் மீன் வளத் துறையின் முக்கிய சாதனைகள்

12.1 மீனவர் நலன்

- தமிழ்நாடு அரசின் இடைவிடாத முயற்சி மற்றும் உறுதியான நடவடிக்கைகளின் பயனாக 2019-2020 ஆம் ஆண்டில் இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்ட தமிழ்நாட்டைச் சேர்ந்த 215 மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டு, தமிழ்நாட்டிற்கு அழைத்து வரப்பட்டனர். மேலும், மீட்கும் நிலையில் இருந்த 36 மீன் பிடிப் படகுகள் மீட்டு வரப்பட்டன.

- 13 கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த மீனவக் குடும்பங்களுக்கு பல்வேறு நலத் திட்டங்களின்கீழ் மொத்தம் ரூ.296.85 கோடி நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

- மீனவர் நலத் திட்டங்களில் மின்னாளுமையினை செயல்படுத்தி, வெளிப்படைத் தன்மையினை உறுதி செய்திட பல்வேறு நலத் திட்டங்களில் பயனாளிகளை பொதுச்சேவை மையத்தின் இணையதள வசதியின் வாயிலாக சேர்ப்பதற்கான திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.

- 2019-2020 ஆம் ஆண்டில் கடலில் மீன் பிடிக்கையில் காணாமல் போன 23 மீனவர்களின் குடும்பங்களுக்கு தின உதவித் தொகையாக ரூ.11.10 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

- பாக் வளைகுடாப் பகுதியிலுள்ள இழுவலைப் படகுகளை ஆழ்கடல் மீன் பிடிப்பிற்கு மாற்றும் திட்டத்தின்கீழ் ரூ.1,600 கோடி மதிப்பீட்டில், 2,000 ஆழ்கடல் மீன் பிடிப் படகுகள் கட்டப்படவுள்ளன. இத்திட்டத்தின்கீழ், முதற்கட்டமாக 22 ஆழ்கடல் மீன் பிடிப் படகுகள் கட்டப்பட்டு, மீன் பிடித் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

[2020 மார்ச் 17

- ஆழ்கடல் மீன் பிடிப்பில் ஈடுபட்டுள்ள 80 குழுக்களைச் சேர்ந்த மீன் பிடிப் படகுகளுக்கு மொத்தம் 160 செயற்கைக்கோள் தொலைபேசிகள், 200 நேவிக் மற்றும் 40 நேவ்டெக்ஸ் தொலைத்தொடர்புச் சாதனங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவை தவிர, ஆழ்கடல் மீன் பிடிப்பினை மாவட்டம் மற்றும் மாநில அளவில் கண்காணித்திட 21 செயற்கைக்கோள் தொலைபேசிகள் வழங்கப்பட்டுள்ளன.

- கடலில் மீன் பிடிப்பின்போது மீனவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்யும்பொருட்டு, கம்பியில்லா தொலைத்தொடர்பு வசதி வழங்கும் திட்டத்தின்மூலம் 5 வாட் VHF கருவிகள் 15,004 எண்ணம் இயந்திரம் பொருத்தப்பட்ட பாரம்பரிய மீன் பிடி படகுகளுக்கு இலவசமாகவும், 25 வாட் VHF கருவிகள் 2,535 எண்ணம் மீன் பிடி விசைப்படகுகளுக்கு 75 விழுக்காடு மானியத்திலும், ஆக மொத்தம் 17,539 VHF கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

- தமிழ்நாட்டில் சென்னை, கடலூர், நாகப்பட்டினம், தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களைச் சேர்ந்த 507 மீன் பிடி விசைப்படகுகளில், படகுகளின் இயக்கத்தினை கண்காணித்திடவும், ஆழ்கடலில் 200 கடல் மைல்கள் தொலைவு வரை ஆபத்து நேரத்தில் உதவி செய்திடவும், செயற்கைக்கோள் அடிப்படையிலான 'டிரான்ஸ்பாண்டர்கள்' பொருத்தப்பட்டுள்ளன. அனைத்து மீன் பிடி விசைப்படகுகளின் விவரத்தினை டிரான்ஸ்பாண்டர்கள் விவரம் உள்ளடக்கிய "தூண்டில்" கைபேசி செயலியில் பதிவிடும் திட்டத்திற்கு அரசு அனுமதி அளித்துள்ளது.

- மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினைத் தொடர்ந்து, 12 ஆம் வகுப்பு தேர்ச்சிபெற்ற மீனவ இளைஞர்களுக்கு, மாற்று வாழ்வாதாரம் மற்றும் வேலைவாய்ப்பு பெற்றிடும்பொருட்டு, இந்திய கப்பற்படை மற்றும் இந்திய கடலோர காவல் படையில் வேலைவாய்ப்பு பெறுவதற்கான சிறப்புப் பயிற்சிகள் வழங்குவதற்கு அரசு ரூ.1.04 கோடிக்கு நிதி ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. சென்னை, கடலூர், இராமநாதபுரம், தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மண்டலத்தைச் சேர்ந்த 145 மீனவ இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

2020 மார்ச் 17]

- 2019-2020 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தால் ரூ.592.98 கோடி வரவு செலவினம் மேற்கொள்ளப்பட்டு, ரூ.13 கோடியினை இலாபமாக ஈட்டியுள்ளது. 2020-2021-ல் ரூ.14 கோடி இலாபம் ஈட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

- 2019-2020 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன் வளக் கூட்டுறவு இணையத்தால் ரூ.182.63 கோடி வரவு செலவினம் மேற்கொள்ளப்பட்டு, ரூ.2.30 கோடியினை இலாபமாக ஈட்டப்பட்டுள்ளது.

- தமிழக அரசு, இந்திய வர்த்தக சபை மற்றும் மத்திய உப்பு மற்றும் கடல் வேதியியல் பொருட்கள் ஆராய்ச்சி நிலையம் ஆகியவை இணைந்து மூன்றாவது இந்திய சர்வதேச அளவிலான கடற்பாசி கருத்தரங்கு சென்னையில் ஜனவரி 2020 திங்களில் 30 மற்றும் 31 இல் நடத்தியது. இந்தக் கருத்தரங்கானது கடற்பாசி மற்றும் அதனைச் சார்ந்த தொழில்களை நம் மாநிலத்தில் விரிவடையச் செய்யும் நோக்கத்துடன் நடத்தப்பட்டது. இக்கருத்தரங்கில் கடற்பாசி வளர்ப்பினை மேம்படுத்தும் நோக்கத்துடன் 8 தனியார் நிறுவனங்களுடன் ரூ.57.70 கோடி மதிப்பிலான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன.

12.2 உட்கட்டமைப்பு வசதிகள்

- சென்னை மாவட்டம், இராயபுரம் மீன் பிடித் துறைமுகத்தில் படகு அணையும் தளம் அமைக்கும் பணி ரூ.5 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- கன்னியாகுமரி மாவட்டம், குறும்பனையில் மீன் இறங்கு தளம் அமைக்கும் பணி ரூ.11 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- கன்னியாகுமரி மாவட்டம், பள்ளம்துறையில் மீன் இறங்கு தளம் அமைக்கும் பணி ரூ.4 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- நாகப்பட்டினம் மாவட்டம், சின்னாங்குடியில் மீன் இறங்கு தளம் ரூ.5.50 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

- காஞ்சிபுரம் மாவட்டம், சூலேரிகாட்டுக்குப்பத்தில் மீன் இறங்குதள மேம்பாட்டுப் பணிகள் ரூ.4.95 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- திருவள்ளூர் மாவட்டம், பெரியமாங்கோட்டில் மீன் இறங்கு தள கட்டுமானப் பணிகள் ரூ.4.38 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகாரில் மீன் பிடித் துறைமுகம் ரூ.178 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

- கன்னியாகுமரி மாவட்டம், பொழிக்கரையில் மீன் இறங்கு தளம் ரூ.4 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

- கன்னியாகுமரி மாவட்டம், கேசவன்புத்தன்துறையில் மீன் இறங்கு தளம் ரூ.4 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

13. பருவநிலை மாற்றத்தினை எதிர்கொள்ளும் மீன் வளம்

உலக வெப்பமயமாதலின் காரணமாக மீன் வளம் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது. பருவநிலை மாற்றமானது, மீன்களின் உடற்கூறியல், நடத்தை, பரவல் மற்றும் இடம்பெயர்தல், இனப்பெருக்கத் தன்மை, இறப்பு மற்றும் மீனவர்களின் வாழ்வாதாரம் ஆகியவற்றின்மூலம் மீன் வளம் மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்பில் நேரிடையாக பாதிப்பை உண்டாக்குகிறது.

மீன் வளம் மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்பில் தாக்குப் பிடிக்கும் திறனை வலுப்படுத்துவதிலும், தகவமைப்பை மேம்படுத்துவதிலும் அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. மீன் வளத்தினை பெருக்குவதற்கு அண்மைக் கடல் பகுதியில் செயற்கை மீன் உறைவிடங்கள் அமைத்தல் மற்றும் வணிக முக்கியத்துவம் வாய்ந்த மீன் இனங்களை வளர்த்து கடலில் இருப்பு செய்தல் போன்றவை செயல்முறையில் உள்ளன. கடலோர மாவட்டங்களில், கடலரிப்பிலிருந்து கடற்கரையினைப் பாதுகாத்திட கற்சுவர் மற்றும் ஆர்.எம்.எஸ். சுவர்களும், மீன் பிடிக் கலன்களை பாதுகாப்பான முறையில் நிறுத்துவதற்கு மீன் பிடித் துறைமுகங்களும் கட்டப்பட்டு வருகின்றன. பொறுப்பார்ந்த மீன் வள நடத்தை விதிகளும் பின்பற்றப்படுகின்றன. மீன் வள உற்பத்திக் குறைவினை ஈடுசெய்திட, நோய் எதிர்ப்பு சக்தி கொண்ட மற்றும் விரைவாக வளரக்கூடிய மீன் இனங்களை வளர்க்க, மீன் வளர்ப்போர் ஊக்குவிக்கப்படுகிறார்கள். மாநிலம் முழுவதும், பருவநிலை மாற்றத்தின் பாதிப்பு குறித்து பொது மக்களிடம் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

2020 மார்ச் 17]

14. இலக்கினை அடைவதற்கான வழிமுறைகள்

இந்திய பொருளாதாரத்தில் எதிர்காலத்தில் மீன் வளப் பிரிவானது நாட்டின் வளர்ச்சிக்கான முக்கிய ஆதாரமாக விளங்கும். தேசிய கடல் வளக் கொள்கை, தேசிய உள்நாட்டு மீன் வளம் மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்புக் கொள்கை மற்றும் தேசிய கடல்வாழ் உயிரின வளர்ப்புக் கொள்கை போன்ற பல்வேறு புதிய கொள்கைகள் அறிமுகப்படுத்தப்பட்டதன்மூலம் மீன் வளம் தேசிய அளவில் முக்கியத்துவம் பெற்றுள்ளது. தமிழகம் இந்தக் கொள்கைகளை செயல்படுத்தி மீன் வளங்களைப் பாதுகாத்திடவும், நிலைத்த தன்மையுடன் பயன்படுத்திடவும் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

தமிழக அரசு தொலைநோக்குப் பார்வையுடன், புதிதாக தொடங்கப்பட்டுள்ள இந்திய அரசு மீன் வள அமைச்சகத்துடன் ஒருங்கிணைந்து, மீன் வளத்தில் நிலைத்த வளர்ச்சி ஏற்படுத்திட, சீரிய முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. 2022-2023 ஆம் ஆண்டில் மீன் உற்பத்தியை 200 இலட்சம் டன்களாக உயர்த்திடவும், 2024-2025-ல் மீன் பொருள் ஏற்றுமதியை ஒரு இலட்சம் கோடியாக உயர்த்திடவும், இந்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. அவ்வாறே, தமிழகம் தற்போதுள்ள மீன் உற்பத்தியை 6.88 இலட்சம் டன்களில் இருந்து 10 இலட்சம் டன்களாக உயர்த்திடவும், அதன்மூலம், தற்போதுள்ள ஏற்றுமதி அடுத்த 5 ஆண்டுகளில் 1.28 இலட்சம் டன்கள் என்ற அளவிலிருந்து இரண்டு மடங்காக 2.50 இலட்சம் மெட்ரிக் டன்கள் என்ற அளவில் உயர்த்திட இலக்கு நிர்ணயம் செய்து செயல்பட்டு வருகிறது.

நிலைத்த மீன் வள மேலாண்மையை உள் நாடு மற்றும் கடல் மீன் வளர்ப்பிரிவில் அறிமுகப்படுத்திய வெகு சில மாநிலங்களுள் தமிழ்நாடும் ஒன்றாகும். வணிக முக்கியத்துவம் வாய்ந்த, விலை உயர்ந்த மீன்களைப் பிடிப்பதற்காக அறிமுகம் செய்யப்பட்ட ஆழ்கடல் மீன் பிடிப் படகுகள் மீனவர்களின் வருவாயை அதிகரித்திட உதவும் மாற்று மீன் பிடி முறையாக விளங்குகிறது.

உணவு மற்றும் வேளாண்மை அமைப்பினால் கொண்டுவரப்பட்ட பொறுப்பார்ந்த மீன் வளத்திற்கான நன்னடத்தை விதிகளின்படி, தமிழகம் தமிழ்நாடு கடல் மீன் வள ஒழுங்குமுறை சட்டத்தினை (1983) பல புதிய பிரிவுகள் மற்றும் ஒழுங்குமுறைகளுடன் திருத்தியமைத்துள்ளது. இத்துறையில் ஏற்படுத்தப்பட்டுள்ள

[2020 மார்ச் 17

சட்ட அமலாக்கப் பிரிவு, மீன் பிடி ஒழுங்குமுறை சட்டத்தினை செயல்படுத்துவதிலும், தமிழகத்தின் கடல் மீன் வள ஆதாரங்களை பாதுகாப்பதிலும் உதவி புரியும். வேகமாக வளரக்கூடிய மரபணு மேம்படுத்தப்பட்ட திலேப்பியா வகை மீன் குஞ்சுகள் தமிழகத்தில் வெற்றிகரமாக உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. குறுகிய கால நீர்நிலைகள் மற்றும் நீர் பற்றாக்குறை கொண்ட இடங்களில் விவசாயிகள் இத்திலேப்பியா இன மீன்களை வளர்த்து பயனடைந்து வருகின்றனர். கடல் கூண்டுகளில் மீன் குஞ்சு வளர்த்தல், நீர்த்தேக்கங்களில் கூண்டுகளில் மீன் வளர்த்தல் போன்ற நிலம் தேவைப்படாத மீன் வளர்ப்பு முறைகள் குறைவான இடத்தில் அதிக மீன் உற்பத்திக்கு வழி வகுத்துள்ளன. நீர் மறுசுழற்சி முறை நீர்வாழ் உயிரின வளர்ப்பு, ஒருங்கிணைந்த மீன் வளர்ப்பு, கடல் கூண்டுகளில் மீன் வளர்ப்பு மற்றும் தூரக் கடலில் கடற்வாழ் உயிரின வளர்ப்பு போன்றவையும் தமிழகத்தால் செயல்படுத்தப்படும் நவீன தொழில்நுட்பங்களாகும்.

கடல்வாழ் உயிரின வளர்ப்பு உலகளவில் பிரபலமடைந்து வருகிறது. இதன் பலன்களைக் கருதி அரசு கடற்பாசி வளர்ப்பு, ஒருங்கிணைந்த கடல்வாழ் உயிரின வளர்ப்பு, கூண்டுகளில் மீன் வளர்ப்பு போன்றவற்றை பெரிய அளவில் ஊக்குவிக்கிறது. இந்த மீன் வளர்ப்பு முறைகள் இயற்கை வளங்களை காப்பதுடன், கடலோர மீனவர்களுக்கு சிறந்த மாற்று வாழ்வாதாரமாக விளங்குகிறது.

புதிய முயற்சிகளை செயல்படுத்துவதில் அரசு முனைப்புடன் செயல்படுகிறது. ஒருங்கிணைந்த வளர்ச்சியை ஏற்படுத்துதல், மீன் உற்பத்தியை அதிகரித்தல், மீன் பதப்படுத்துதல்மூலம் மதிப்பு கூட்டுதல் மற்றும் சந்தைப்படுத்துதல், நீர்வாழ் உயிரின வளர்ப்பு முறைகளில் புதிய தொழில்நுட்ப வாய்ப்புகளை உருவாக்குதல்மூலம் ஒருங்கிணைந்த வளர்ச்சியை ஏற்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கடலோர மற்றும் கிராமப்புற இளைஞர்களை ஈடுபடுத்தி வேலைவாய்ப்பை உருவாக்கிட நீலப் புரட்சிக்கு வித்திடும் கடல் நண்பர்கள் மற்றும் மீன் வளர்ப்போர் நிறுவனம் போன்றவற்றின்மூலம் மீன் வள மேம்பாடு என்ற கொள்கை, எதிர்வரும் ஆண்டுகளில் முக்கியத்துவம் பெற உள்ளது.

தமிழகத்தில் சிறந்த உள் நாட்டு மீன் வளர்ப்பு முறைகள், கடலில் தொலைத்தொடர்பு சாதனங்களை பயன்படுத்துதல், கடலில் தொலைத்தொடர்பு திறன், பேரிடர் காலங்களில் பாதுகாப்பு உபகரணங்களை பயன்படுத்துவதில் மீனவர்களுக்கு பயிற்சி மற்றும் கடலில் உள்ள மீனவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்திட நவீன கட்டுப்பாட்டு அறைகள் நிறுவுதல் ஆகிய திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

2020 மார்ச் 17]

எதிர்கால உணவு ஆதாரம் முழுமையாக கடல்களை சார்ந்தே அமைவதுடன், தமிழகத்தின் வளர்ச்சியில் நீலப் பொருளாதாரம் முக்கிய பங்காற்றும். வேளாண்மையுடன் நெருங்கிய தொடர்புடைய மீன் பிடிப்பும், மீனவச் சமுதாயமும் தமிழகத்தின் வளர்ச்சிக்கு முக்கியப் பங்கு வகிக்கும். நாம் அருந்தும் ஒவ்வொரு துளி நீரும், ஒவ்வொரு சுவாசமும் நாம் கடலுடன் இணைந்திருப்பதை உணர்த்தும். மீன்கள் முக்கியத்துவம் பெற்று தமிழகத்தின் வளர்ச்சிக்கு மீன் வளப் பிரிவு உறுதுணையாற்ற உள்ளது.

15. 2020-2021 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீடு

2020-2021 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் ரூ.1,229.85 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் ரூ.558.14 கோடி வருவாய் செலவினமாகவும், ரூ.671.70 கோடி மூலதன செலவினமாகவும் இருக்கும்.

கடந்த 10 ஆண்டுகளில் மீன் வளர்ப்பிற்கான நிதி ஒதுக்கீடு கணிசமாக உயர்த்தப்பட்டுள்ளது. கடந்த 10 ஆண்டுகளில் மீன் வளத் துறைக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட விவரம் பின்வருமாறு:

அட்டவணை:11

(ரூ. கோடியில்)

ஆண்டு	திட்ட ஒதுக்கீடு	திட்டமில்லா ஒதுக்கீடு	மொத்த நிதி ஒதுக்கீடு
2010-2011	163.06	30.27	193.33
2011-2012	339.28	60.40	399.68
2012-2013	379.18	38.04	417.22
2013-2014	425.70	41.74	467.44
2014-2015	464.68	47.16	511.84

ஆண்டு	திட்ட ஒதுக்கீடு	திட்டமில்லா ஒதுக்கீடு	மொத்த நிதி ஒதுக்கீடு
2015-2016	**677.17**	**51.51**	**728.68**
2016-2017	**678.72**	**65.07**	**743.79**
2017-2018	**706.52**	**61.80**	**768.32**
2018-2019	**946.65**	**69.88**	**1,016.53**
2019-2020	**867.79**	**60.06**	**927.85**
2020-2021	**1145.98**	**83.80**	**1,229.84**

16. நிறைவுரை

தமிழ்நாடு மீனவர்களின் பாதுகாப்பினையும், சமூகப் பாதுகாப்பினையும் உறுதி செய்திடும்பொருட்டு, பல்வேறு தேவை அடிப்படையிலான மீனவர் நலம் மற்றும் வளர்ச்சித் திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது. மீனவர்களின் பாரம்பரிய மீன் பிடி உரிமைகளை நிலைநாட்டிடவும் அரசு உயர் முக்கியத்துவம் அளித்து வருகிறது. மின்னணு சேவை அறிமுகப்படுத்தியதன்மூலம் மீனவர்கள் அரசின் நலத் திட்ட உதவிகளை வெளிப்படைத் தன்மையுடன் எளிதாகப் பெற இயலுகிறது.


தமிழ்நாட்டில் மீன் வளப் பிரிவானது, நவீன தொழில்நுட்பம் மற்றும் சிறந்த மேலாண்மை முறைகளை அறிமுகம் செய்ததன்மூலம் பாரம்பரிய மீன் பிடித் தொழில் தற்போது நவீன தொழில்நுட்பங்கள் கொண்ட மீன் பிடித் தொழிலாக மாற்றமடைந்துள்ளது. மீன் வளர்ப்பினை வேளாண்மை மற்றும் கால்நடை வளர்ப்புடன் ஒருங்கிணைத்தல், கடற்பாசி வளர்ப்பு, கடலில் கூண்டுகள்மூலம் மீன் வளர்த்தல், சிப்பி வளர்த்தல் மற்றும் நன்னீர் மீன் வளர்ப்பு போன்றவற்றின்மூலம் கிராமப் பொருளாதாரத்தை மேம்படுத்திடவும், மீன் வளக் கட்டமைப்பினை வலுப்படுத்திடவும் அரசு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது.

2020 மார்ச் 17]

மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியினை அடைந்திட ஏதுவாக, மீன் வளம் மற்றும் அதன் தொடர்பான துறையில் ஒட்டுமொத்த மேம்பாட்டினை அடைவதையும், மீனவர்களின் வருமானத்தை அதிகரிப்பதையும் நோக்கமாகக் கொண்டு அரசு பல்வேறு மாற்று வாழ்வாதாரத் திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது.


கடலில் மீன் பிடிப்பதை ஒழுங்குபடுத்தும் சட்டத்தை திறம்பட செயலாக்குதல், கூட்டு மேலாண்மை முயற்சிகள், மீன் பிடி உட்கட்டமைப்புகளை உலகத்தரத்திற்கு மேம்படுத்துதல், அண்மைக் கடல் பகுதியில் செயற்கை மீன் உறைவிடங்கள் அமைத்தல் மற்றும் மீன் குஞ்சுகளை வளர்த்து கடலில் இருப்பு செய்தல் போன்ற மீன் வளத்தை அதிகரிக்கும் திட்டங்கள் போன்றவற்றின்மூலம், மதிப்புமிக்க மீன் வளத்தை பாதுகாத்திடவும், மீன் வகைகளை சட்டபூர்வ நிலைத்த முறையான வழியில் பயன்படுத்திடவும் அரசு உறுதி பூண்டுள்ளது.


ஆழ்கடல் மீன் பிடிப்பு, உட்கட்டமைப்புகளை உலகத்தரத்திற்கு மேம்படுத்துதல், நவீன தொலைத்தொடர்பு வசதிகள், அறுவடைக்கு பின் தேவைப்படும் பதப்படுத்தும் வசதிகள், சுற்றுச்சூழலுக்குகந்த மீன் பிடிப்பு மற்றும் இறால்வகை, வண்ண மீன் போன்ற நீர்வாழ் உயிரின வளர்ப்பு, கடல்சார் சுற்றுலா போன்றவற்றில் அரசின் இடைவிடா முயற்சியின் காரணமாக தமிழ்நாட்டின் மீன் வளப் பிரிவானது தேசிய மற்றும் சர்வதேச அளவில் பெரும் கவனத்தைப் பெற்றுள்ளது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தொலைநோக்குச் சிந்தனையின்படி வழிநடக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, வரும் ஆண்டுகளிலும் மீன் வளப் பிரிவில் அனைத்து மேம்பாடுகளையும் அடைந்திட அரசு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்.


மீன் துறைக்கான நிதி ஒதுக்கீடு 2011–12 முதல் 2020–21 வரை (கோடிகளில்)
1400
1200
1000
800
600
400
200
0
399.68
417.22
467.44
511.84
728.67
743.79
768.32
1016.53
927.85
1229.85
2011-12
2012-13
2013-14
2014-15
2015-16
2016-17
2017-18
2018-19
2019-20
2020-21



மீன்வள உட்கட்டமைப்பு வசதிகளுக்கான நிதி ஒதுக்கீடு
2016–17 முதல் 2019–20 வரை (கோடிகளில்)
400
350
300
250
200
150
100
50
0
235.55
110.27
255.92
346.28
2016-17
2017-18
2018-19
2019-20


2020 மார்ச் 17]


மீன்குஞ்சு உற்பத்தி 2010–11 முதல் 2019–20 வரை (கோடிகளில்)
90
80
70
60
50
40
30
20
10
0
17.05
17.15
18.82
28.08
35.28
61.27
64
55.73
74.72
79.38
2010-11
2011-12
2012-13
2013-14
2014-15
2015-16
2016-17
2017-18
2018-19
2019-20


மீன் உற்பத்தி 2010–11 முதல் 2019–20 வரை (இலட்சம் டன்களில்)
720000
700000
680000
660000
640000
620000
600000
580000
560000
540000
596529
611488
619206
624294
698316
709163
669309
681937
688000
701013
2010-11
2011-12
2012-13
2013-14
2014-15
2015-16
2016-17
2017-18
2018-19
2019-20

[2020 மார்ச் 17


மீன் நுகரப்படும் முறை
உபபொருட்களாக 3%
இதர பயன்பாடு 2%
பதனிடுதல் 12%
உறைவித்தல் 15%
புதிய நிலையில் 68%
புதிய நிலையில்
உறைவித்தல்
பதனிடுதல்
உபபொருட்களாக
இதர பயன்பாடு


மீன்கள் மற்றும் மீன்பொருட்கள் ஏற்றுமதி (தமிழ்நாடு)
2009–10 முதல் 2018–19 வரை
140000
120000
100000
80000
60000
40000
20000
0
73773
2000.46
86182
2860.19
80738
3029.16
86585
3331.78
96429
5316.29
93477
5038.17
85063
4184.06
79336
3914.39
116664
5420.3
128845
5591.49
2009-10
2010-11
2011-12
2012-13
2013-14
2014-15
2015-16
2016-17
2017-18
2018-19
Quantity (in M.T.)
Value (Rs. In Crore)

2020 மார்ச் 17]

இணைப்பு II

(141 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 35-பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2020-2021

முன்னுரை

அரசுப் பணிக்குத் தேவையான மனிதவள மேலாண்மையில் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை முக்கிய பங்காற்றுகிறது. அரசுப் பணியிடங்களுக்கு பணியாளர்களைத் தேர்வு செய்தல், அவர்களின் பதவி உயர்வு, முதுநிலை, பயிற்சி, ஒழுங்கு நடவடிக்கைகள் ஆகியன குறித்த பொதுவான வழிகாட்டுதல்களை இத்துறை வெளியிடுகிறது. பொதுத் துறை நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்து அரசு அலுவலகங்களை உரிய காலமுறையில் ஆய்வு செய்வதன்மூலம் நிருவாகம் செம்மையாக செயல்படுவதை இத்துறை உறுதி செய்கிறது.

இத்துறை, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம் (பயிற்சி) என இரண்டு அலகுகளாக பின்வரும் பணிகளை மேற்கொள்கிறது:-

அ. ஆலோசனை வழங்கும் பணிகள்

தமிழ்நாடு அரசு அலுவல் விதிகள் மற்றும் தலைமைச் செயலக அறிவுறுத்தங்கள் ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளபடி இத்துறை பின்வரும் இனங்களில் தலைமைச் செயலகத் துறைகளுக்கு அறிவுரை வழங்குகிறது:

i. தமிழ்நாடு மாநிலப் பணிகள் மற்றும் தமிழ்நாடு தலைமைச் செயலகப் பணிகளில் அடங்கிய பல்வேறு பணியிடங்களுக்கான காலிப் பணியிட மதிப்பீடு மற்றும் அப்பணியிடங்களுக்கான தேர்ந்தோர் பெயர்ப் பட்டியல் தயாரித்தல்;

ii. அரசுப் பணியாளர்களின் பணி வரன்முறைப்படுத்துதல் மற்றும் தகுதிகாண் பருவம் விளம்புதல் குறித்தான சிறப்பு விதிகள்/ தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி

நிபந்தனைகள்) சட்டம், 2016, ஆகியவற்றின்படி அறிவுரை வழங்குதல்;

iii. அடிப்படை விதிகள் குறித்த தெளிவுரைகள் வழங்குதல்;

iv. பணி முதுநிலையை மாற்றியமைத்தல் குறித்த கருத்துருக்களை விதிக் கூறுகளின்படி ஆய்வு செய்தல்.

ஆ. சட்டரீதியான பணிகள்

1. பல்வேறு துறைகளில் பணிபுரியும் அனைத்து வகை மாநில அரசுப் பணியாளர்களின் (அகில இந்தியப் பணிகள் நீங்கலாக) பணி தொடர்பான பின்வரும் சட்டரீதியான பணி விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளை நிருவகித்தல்:

 i. தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 [தமிழ்நாடு சட்டம் எண் 14/2016];

 ii. தமிழ்நாடு அரசுப் பணியாளர் நடத்தை விதிகள், 1973;

 iii. தமிழ்நாடு அரசு அடிப்படை விதிகள்;

 iv. தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகள், 1955;

 v. தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயம்) விதிகள், 1955;

 vi தமிழ்நாடு அமைச்சுப் பணிக்கான சிறப்பு விதிகள்;

 vii. தமிழ்நாடு அடிப்படைப் பணிக்கான சிறப்பு விதிகள்;

 viii. தமிழ்நாடு பொது சார்நிலைப் பணிக்கான சிறப்பு விதிகள்-இனம் XXII.

2. தலைமைச் செயலகம் தொடர்பான விதிகள்:

 i. தமிழ்நாடு தலைமைச் செயலகப் பணிக்கான சிறப்பு விதிகள்;

 ii. தமிழ்நாடு பொதுப் பணிக்கான சிறப்பு விதிகள் –இனம் XII மற்றும் XII-A;

 iii. தலைமைச் செயலக அலுவலக நடைமுறை நூல்.

2020 மார்ச் 17]

3. அரசமைப்பு மற்றும் சட்டரீதியான அமைப்புகளுக்கான விதிகள்:

 i. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறைகள், 1954;

 ii. தமிழ்நாடு தகவல் பெறும் உரிமை (கட்டணம்) விதிகள், 2005;

 iii. தமிழ்நாடு தகவல் ஆணைய (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள், 2012;

 iv. தமிழ்நாடு தகவல் ஆணையப் பணி விதிகள், 2017;

 v. தமிழ்நாடு லோக் ஆயுக்தா சட்டம், 2018 (தமிழ்நாடு சட்டம் எண் 33/2018);

 vi. தமிழ்நாடு லோக் ஆயுக்தா விதிகள், 2018.

4. அரசின் அலுவல் தொடர்பான விதிகள்;

 i. தமிழ்நாடு அரசு அலுவல் விதிகள் மற்றும் தலைமைச் செயலக அறிவுறுத்தங்கள்;

 ii. மாண்புமிகு முதலமைச்சரின் நிலை ஆணைகள்.

இ. நிருவாகப் பணிகள்

 i. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், தமிழ்நாடு தகவல் ஆணையம், தமிழ்நாடு லோக் ஆயுக்தா போன்ற அரசமைப்பு மற்றும் சட்டரீதியான அமைப்புகளுக்கான அதிகாரம் உள்ளவர்களை நியமனம் செய்வது தொடர்பான பணிகள்;

 ii. கீழ்காணும் அமைப்புகளுக்கான நிருவாகப் பணிகள் மற்றும் கட்டமைப்பு வசதிகள் அளித்தல்: -

 - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்;
 - தமிழ்நாடு தகவல் ஆணையம்;
 - தமிழ்நாடு லோக் ஆயுக்தா;

[2020 மார்ச் 17

- மாநில விழிப்புப் பணி ஆணையம்;
- ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககம்;
- ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயங்கள்;
- பயிற்சித் துறை தலைவர் அலுவலகம்.

iii. தலைமைச் செயலகத்தில் 'ஓர் அலகு முறை'யின் (One Unit) கீழ்வரும் அரசு சார்புச் செயலாளர்கள் பணிநிலை வரையுள்ள அனைத்துப் பணியாளர்களின் பணி அமைப்பு;

iv. பணியாளர் சங்கங்களுக்கு அங்கீகாரம் அளித்தல் மற்றும் அரசுப் பணியாளர்களின் குறைகளை பரிசீலித்தல்;

ஈ. பயிற்சி

கீழ்க்காணும் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன:-

- இளநிலை உதவியாளர்கள் / உதவியாளர்களுக்கு பவானிசாகர் குடிமைப் பணிகள் பயிற்சி நிலையத்தில் அடிப்படை பயிற்சி;
- மாவட்டத் தலைநகரங்களில் பரவலான அடிப்படைப் பயிற்சி;
- புதிதாக பணி நியமனம் செய்யப்பட்ட தலைமைச் செயலகப் பணியாளர்களுக்கான அடிப்படைப் பயிற்சி;
- அண்ணா மேலாண்மை நிலையத்தில் மேலாண்மை மற்றும் ஆதார வளங்கள் குறித்த பயிற்சி;
- தலைமைச் செயலக உதவிப் பிரிவு அலுவலர்கள் மற்றும் பிரிவு அலுவலர்களுக்கான புத்தாக்க/ பணியிடைப் பயிற்சி.

2. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

இந்திய அரசியலமைப்புச் சட்டப் பிரிவுக் கூறு 315 (1)-ன்கீழ் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் அமைக்கப்பட்டுள்ளது. தேர்வாணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பணி நிபந்தனைகள், 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு

2020 மார்ச் 17]

அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளின்படி நிருவகிக்கப்படுகின்றன. தற்போது தேர்வாணையம் தலைவர் மற்றும் மூன்று உறுப்பினர்களைக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் பணியாளர்களைத் தெரிவு செய்யும் பணியை முக்கியப் பணியாக கொண்டுள்ள முகமையாகச் செயல்படுகிறது. அரசுப் பணிகளுக்கு பணியாளர்களை தெரிவு செய்வதுடன், தேர்வாணையம், அரசுப் பணியாளர்களுக்கான துறைத் தேர்வுகளையும், மத்திய அரசின் பாதுகாப்புத் துறை அமைச்சகத்தின் சார்பாக ஆண்டிற்கு இருமுறை டேராடூன் இந்திய இராணுவக் கல்லூரி நுழைவுத் தேர்வுகளையும் நடத்துகிறது.

இதனுடன், பணியாளர்களைத் தெரிவு செய்தல் பற்றிய விதிகளை இயற்றுவது, பணி நியமனம், பதவி உயர்வுகள் அளித்தல் மற்றும் ஒரு பணியிலிருந்து மற்றொரு பணிக்கு மாறுதல் முறையில் நியமனம் செய்தல் ஆகியவற்றில் பின்பற்றப்பட வேண்டிய நெறிமுறைகளை வகுப்பது மற்றும் அரசுப் பணியாளர்களின் ஒழுங்குமுறை நடவடிக்கைகள் மீதான மேல்முறையீடு குறித்த அனைத்து நேர்வுகளிலும் அரசுக்கு ஆலோசனையினை தேர்வாணையம் வழங்குகிறது.

ஒரு முறை பதிவு செய்தலுக்கான தகவல் தொகுப்பு, பயன்பாட்டிற்கு எளிதாக இணையதளம் வழியாக விண்ணப்பங்களைப் பெறுதல், தன்விவர (Personalised OMR) விடைத்தாட்களை உபயோகப்படுத்துவது, தொழில்நுட்ப பதவிகளுக்கான கணினி வழியான தேர்வு, தேர்வு மையங்களை இணையவழியாக கண்காணித்தல்/ ஒளிப்பதிவு செய்தல், பொதுச் சேவை மையங்கள் மூலமாக சான்றிதழ் சரிபார்த்தல் போன்ற நடைமுறைகளை மேற்கொள்வதற்கு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தெரிவுப் பணிகளை தேர்வாணையம் சிறப்பாகச் செய்துவருகிறது.

தேர்வாணையம் தனது தெரிவுப் பணியில், கொள்குறிவகை தேர்வுகளுக்கான விடைகளை தனது இணையதளத்தில் தேர்வு முடிவுற்றவுடன் வெளியிடுவது மற்றும் தேர்வர்கள் தங்களது விரிவானவகை விடைத்தாட்களை தேர்வாணைய அலுவலகத்தில் பார்வையிட அனுமதிக்கப்படுவது போன்ற நடவடிக்கைகள்மூலம் வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புடைமை ஆகியவற்றினை உறுதி செய்கிறது. அலகு/பணி ஒதுக்கீட்டிற்கு கலந்தாய்வு முறை பின்பற்றப்படுகிறது. மேலும், காலிப் பணியிடங்கள் குறித்த விவரங்கள் தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்படுகின்றன.

[2020 மார்ச் 17

மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம் உள்ளிட்ட பிற முகமைகளில் பின்பற்றப்படும் சிறந்த தெரிவு நடைமுறைகளை மாநிலத்தில் செயல்படுத்துவது குறித்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும், புகார்களுக்கு இடமளிக்காதவாறும் தெரிவுப் பணியை செம்மைப்படுத்துமாறும் தேர்வாணையத்திற்கு அரசு ஆலோசனை வழங்கியுள்ளது.

அனைத்துத் தேர்வு மையங்களிலும் மாற்றுத் திறனாளி தேர்வர்கள் தரைத் தளத்திலேயே தேர்வு எழுதுவதற்கு வசதி செய்து கொடுத்துவருவதுடன், தேவைப்படின், அவர்களுக்கு உதவியாளர்களும் தேர்வாணையத்தால் வழங்கப்பட்டு வருகின்றனர். மேலும், எழுதும் திறன் பாதிக்கப்பட்ட மேற்படி நபர்கள் பயன்பெறும் வகையில் அவர்களுக்கு கூடுதல் நேரம் வழங்கப்படுகிறது.

துறை பதவி உயர்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்படும் கருத்துருக்களின்மீது விரைந்து நடவடிக்கை எடுக்க ஒற்றைச்சாளர முறை, தேர்வாணையத்தால் பின்பற்றப்படுகிறது.

தேர்வர்கள் தங்களை முன்கூட்டியே தயார் செய்து கொள்ள ஏதுவாக, தேர்வாணைய போட்டித் தேர்வுகளுக்கான ஆண்டு திட்ட அட்டவணை ஒவ்வோர் ஆண்டும் முன்னதாகவே வெளியிடப்படுகிறது. மேலும், கடந்த இரண்டாண்டுகளில் மாநில மற்றும் சார்நிலைப் பணிகளில் உள்ள பல்வேறு பணியிடங்களுக்கு தேர்வாணையம் 17,719 தேர்வர்களை தெரிவு செய்துள்ளது.

தேர்வாணையத்தின் ஆண்டறிக்கை இத்துறையால் சட்டமன்றப் பேரவையில் வைக்கப்படுகிறது.

3. தமிழ்நாடு தகவல் ஆணையம்

தமிழ்நாடு தகவல் ஆணையம், 7-10-2005 அன்று அமைக்கப்பட்டு, ஒரு தலைமை தகவல் ஆணையர் மற்றும் 6 தகவல் ஆணையர்களைக் கொண்டு இயங்கிவருகிறது. தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005-ன்கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களை செயல்படுத்துவது தகவல் ஆணையத்தின் கடமையாகும்.

பொது அதிகார அமைப்பு எதனாலும் அல்லது அதன் கட்டாள்கையின்கீழ் வைத்து வரப்படும் தகவலை அவை எந்த வடிவத்தில் இருந்தாலும் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின்கீழ் தாளிலோ அல்லது மின்னணுப் பதிவு முறையிலோ அல்லது மாதிரிகளாகவோ உள்ள தகவலைப் பெறவும், மேலும், பணிகள், ஆவணங்கள் மற்றும் பதிவுருக்களை பார்வையிடுவதற்கும் குடிமக்கள்

உரிமை பெற்றுள்ளதன்மூலம் குடியரசின் ஆளுகையில் முனைப்புடன் பங்கேற்பதற்கு இச்சட்டம் வழிவகை செய்துள்ளது.

விண்ணப்பிக்கும்போதும், அதன் பின்னர் ஆவணங்களின் நகல்களைப் பெறுவதற்கும் அல்லது பார்வையிடுவதற்கும் செலுத்தப்பட வேண்டிய கட்டணங்கள் குறித்த நடைமுறைகள் தமிழ்நாடு தகவல் பெறும் உரிமைச் சட்டம் (கட்டணங்கள்) விதிகள், 2005-ல் வகுக்கப்பட்டுள்ளன. தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 7(5)-ன்படி வறுமைக்கோட்டிற்கு கீழுள்ள விண்ணப்பதாரர்களுக்கு கட்டணம் ஏதும் விதிக்கப்படுவதில்லை. மேல்முறையீட்டு அலுவலரிடம் செய்யப்படும் முதல் மேல்முறையீடு மற்றும் ஆணையத்திற்கு செய்யப்படும் இரண்டாம் மேல்முறையீடு ஆகியவற்றிற்கு விண்ணப்பக் கட்டணம் ஏதுமில்லை.

ஆணையத்தின் வலைதளத்தில், (www.tnsic.gov.in) வழக்கு விவரப் பட்டியல் மற்றும் இரண்டாம் மேல்முறையீட்டின்மீதான ஆணையத்தின் முடிவுகள் ஆகியவை பதிவேற்றப்பட்டு வருகின்றன. இந்த இணையதளம் மூலமாக இரண்டாம் மேல்முறையீடு செய்யும் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டு 3.26 இலட்சம் விண்ணப்பங்கள் பொது அதிகார அமைப்புகளால் முறையாகப் பரிசீலிக்கப்பட்டு, 2.46 இலட்சம் விண்ணப்பங்களில் கோரப்பட்ட தகவல்கள் அளிக்கப்பட்டுள்ளன. இணையவழியாக மொத்தம் 123 இரண்டாம் மேல்முறையீட்டு மனுக்கள் 31-12-2019 வரையில் ஆணையத்தால் பெறப்பட்டுள்ளன.

ஆணையத்தின் முடிவுகள்/ஆணைகள், நாட்டிலேயே முதல் முறையாக பிரேய்லி அச்சு எழுத்து வடிவில், பார்வைக் குறைபாடு உடையவர்களிடமிருந்து தனிப்பட்ட வகையில் கோரிக்கை பெறப்படும் நேர்வுகளில், சென்னையில் உள்ள பார்வைக் குறைபாடு உடையவர்களுக்கான தேசிய நிறுவனத்தின் (National Institute for the Visually Handicapped Regional Centre) மண்டல மையத்தின் உதவியுடன் வழங்கப்படுகிறது.

பொதுமக்களுக்கும், பொதுத் தகவல் அலுவலர்களுக்கும் விண்ணப்பங்கள் சமர்ப்பித்தல் மற்றும் தகவல் அளித்தல் தொடர்புடைய பல்வேறு நடைமுறைகள் குறித்து தேவையான உதவிகளை, ஆணையத்தில் இயங்கிவரும் உதவி மையம் (Help Desk) அளித்து வருகிறது.

சென்னை, சைதாப்பேட்டையில் தகவல் ஆணையத்திற்காக கட்டடம் கட்டுவதற்கு ரூ.27.79 கோடி நிதி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

[2020 மார்ச் 17

இவ்வாணையத்தின் ஆண்டறிக்கை இத்துறையால் சட்டமன்றப் பேரவையில் வைக்கப்படுகிறது.

4. லோக் ஆயுக்தா

அரசுப்பணியில், தூய்மையான நிருவாகம், வெளிப்படைத்தன்மை, பொறுப்புடைமை ஆகியவற்றை மேம்படுத்தும் நோக்கில் 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு லோக் ஆயுக்தா சட்டம், 13-11-2018 அன்று முதல் அமல்படுத்தப்பட்டதுடன், 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு லோக் ஆயுக்தா விதிகளும் இயற்றப்பட்டுள்ளன.

இதன்படி, பொது ஊழியர்கள்மீதான ஊழல் குற்றச்சாட்டுகள் மற்றும் அவை சம்பந்தமான விசாரணை செய்வதற்கென 'தமிழ்நாடு லோக் ஆயுக்தா' என்ற அமைப்பு அமைக்கப்பட்டுள்ளது.

லோக் ஆயுக்தா அமைப்பு அதன் தலைவர் மற்றும் 4 உறுப்பினர்களுடன் முழுமையாக செயல்படுவதுடன், இவ்வமைப்பிற்கு பல்வேறு நிலைகளில் 103 பணியிடங்கள் ஒப்பளிக்கப் பட்டுள்ளன.

லோக் ஆயுக்தா, சென்னை, சேப்பாக்கம் விருந்தினர் மாளிகையில் தற்காலிகமாக இயங்கி வருவதற்கு ஏதுவாக ரூ.11.65 கோடி நிதி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

சென்னை, கிண்டி, திரு.வி.க. தொழிற்பேட்டையில் உள்ள சிட்கோ வளாகத்தின் 6 மற்றும் 7-வது தளங்கள் இந்த அமைப்பிற்கான அலுவலகப் பயன்பாட்டிற்காக தேர்ந்தெடுக்கப்பட்டு, அதற்குத் தேவையான உள்கட்டமைப்பு வசதி அளிப்பதற்கு ஏதுவாக ரூ.6.23 கோடி நிதி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

5. விழிப்புப் பணி ஆணையம்

பொதுப் பணிகளில் நிருவாக ரீதியாக ஊழல் தடுப்பு நடவடிக்கைகளில் அரசுக்கு அறிவுரை வழங்குதல், ஊழல் குறித்த ஒவ்வொரு இனங்களிலும் மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை வழங்குதல் ஆகியவை இவ்வாணையத்தின் முதன்மையான நோக்கமாகும். மாநிலத்தின் சட்டபூர்வ அமைப்புகள், பல்கலைக்கழகங்கள், நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்து பொது ஊழியர்கள்மீது விழிப்புப் பணி ஆணையம் தமது வரம்பினைக் கொண்டுள்ளது.

2020 மார்ச் 17]

விழிப்புப் பணி ஆணையத்தின் நோக்கங்கள்:-

(i) பொது ஊழியர் எவரேனும் நாணயமற்ற வகையில் நடந்து கொண்டதாகவோ அல்லது ஊழல் புரிந்துள்ளதாகவோ அல்லது தன்னுடைய அதிகாரத்தை தவறான அல்லது ஊழல் நோக்கத்திற்காகப் பயன்படுத்தியதாகவோ அல்லது தனது அதிகாரத்தை உரிய முறையில் பயன்படுத்தாமை பற்றியோ கூறப்படும் புகார்மீது விசாரணை ஏற்படுத்தும் நடவடிக்கையினை மேற்கொள்ளுதல்;

(ii) இதற்காகத்தேவைப்படும்தகவல்அல்லதுபுள்ளிவிவரங்களை சேகரித்தல்;

(iii) தமது வரம்பிற்குட்பட்ட செயல்பாடுகளில் மற்றும் ஆணையத்தின் பரிந்துரைகளின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய விவரங்களை, எந்தவொரு அரசுத் துறை அல்லது அரசு நிறுவனம் அல்லது பொது ஊழியரிடமிருந்து கேட்டுப் பெறுதல்.

6. ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககம்

விழிப்புப் பணி ஆணையம் அதன் பணிகளை செயல்படுத்துவதற்குத் தேவையான உதவிகளை இயக்ககம் வழங்குகிறது. விழிப்புப் பணி ஆணையம்/ அரசு/லோக் ஆயுக்தா ஆகியவற்றின் உத்தரவின்பேரில் விசாரணை மேற்கொண்டு, விசாரணை அறிக்கையினை சமர்ப்பிக்கிறது. மேலும், இந்த இயக்ககம், புகார்/ குற்றச்சாட்டு மனுக்களின்மீதான விசாரணைகளையும் மேற்கொண்டு அதன் அறிக்கைகளை உரிய அமைப்புகளுக்கு வழங்குகிறது.

இவை தவிர, 1988 ஆம் ஆண்டு ஊழல் தடுப்புச் சட்டத்தின்கீழ் வகைப்படுத்தப்பட்ட லஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான புகார்கள் குறித்த நுண்ணறிவுத் தகவல்களை சேகரித்து இந்த இயக்ககம் புலனாய்வு செய்கிறது.

ஊழல் தொடர்பான வழக்குகளை மட்டும் விசாரிப்பதற்காகவே சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சி, விழுப்புரம், சேலம், சிவகங்கை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் 8 சிறப்பு நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும், மாநிலத்தின் அந்தந்த மாவட்டங்களில் உள்ள சிறப்பு நீதிமன்றங்களில் பணிபுரியும் முதன்மை அமர்வு நீதிபதிகள் மற்றும் சிறப்பு நீதிபதிகள், 1988 ஆம் ஆண்டு ஊழல் தடுப்புச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட

[2020 மார்ச் 17

வழக்குகளை விசாரிக்க அதிகாரம் கொண்டுள்ளனர். இதன்படி, மாநிலத்தில் 39 நீதிமன்றங்கள் மேற்படி சட்டத்தின்கீழான வழக்குகளை விசாரணை செய்கின்றன.

பொது வாழ்வில் தூய்மை குறித்து பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், அனைத்துத் தலைமைச் செயலக துறைகள், துறைத் தலைவர்கள், அரசு நிறுவனங்கள் மற்றும் குழுமங்களுக்கு, ஊழல் தடுப்பு குறித்த வாசகங்களை அனைவரின் பார்வையில்படும் வகையில் அலுவலகங்களில் வைத்திடவும், மேலும் அதனை அரசு வலைதளத்தில் பதிவேற்றும்படியும் உரிய அறிவுறுத்தங்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், அரசு சென்னை வர்த்தக பொருட்காட்சியிலும் இதற்கான ஓர் அரங்கம் அமைக்கப்படுகிறது.

7. ஒழுங்கு நடவடிக்கைத் தீர்ப்பாயங்கள்

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறையினரால் மாநில அரசிலும் நகராட்சி அமைப்புகளிலும் பணிபுரிந்துவரும் அலுவலர்கள்மீது சுமத்தப்படும் சாட்டுரைகளை விசாரணை செய்வதற்காக ஒழுங்கு நடவடிக்கைத் தீர்ப்பாயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. நீதிமுறை சார்புடைய (Quasi Judicial) அதிகாரங்களைக் கொண்டுள்ள மேற்படி தீர்ப்பாயங்கள், சாட்சிகளை விசாரணைக்கு அழைப்பதற்குத் தேவைப்படும் ஆவணங்களைக் கோருவதற்கும் தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயம்) விதிகள் 1955-ன்கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி விசாரணையை மேற்கொள்ளவும் அதிகாரம் கொண்டுள்ளன.

இந்திய ஆட்சிப் பணி அலுவலர்கள்/மாவட்ட வருவாய் அலுவலர்கள் தலைமையில் தற்போது சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி மற்றும் நாகர்கோவில் ஆகிய ஆறு இடங்களில் ஒழுங்கு நடவடிக்கைத் தீர்ப்பாயங்கள் இயங்கி வருகின்றன. இத்தீர்ப்பாய ஆணையருக்கு வழக்கு விசாரணையில், ஒழுங்கு நடவடிக்கை வழக்கறிஞர்கள் (Prosecutors for Disciplinary Proceedings) உதவிபுரிகின்றனர். இத்தீர்ப்பாயங்களின் விசாரணை அறிக்கையினை ஆணையர்கள் உரிய மேல்நடவடிக்கை தொடரும் பொருட்டு தொடர்புடைய அரசு நிருவாகத் துறைக்கு அனுப்பி வைக்கின்றனர். மேற்படி தீர்ப்பாயங்களின் விசாரணை அறிக்கையினை ஆராய்ந்து உரிய இறுதி ஆணையினை அரசு பிறப்பிக்கிறது.

2020 மார்ச் 17]

8. ஆய்வு

நிருவாகத் திறனை மேம்படுத்தவும், தாமதங்களைத் தவிர்க்கவும், தலைமைச் செயலகத் துறைகள், துறைத் தலைமை அலுவலகங்கள், மாநகராட்சி அலுவலகங்கள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்கள் ஆகியவற்றை ஆய்வு அலுவலர்கள் காலமுறையில் ஆய்வு செய்யும் முறையை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.

ஆய்வுப் பிரிவின் 3 ஆய்வுக் குழுக்கள், அரசு துணைச் செயலாளர்/ மாவட்ட வருவாய் அலுவலர் நிலையிலுள்ள அலுவலர்கள் தலைமையில் வருடாந்திர ஆய்வுத் திட்ட கால அட்டவணைப்படி ஆய்வு நடத்தும் பணியை மேற்கொண்டு வருகிறது.

ஆய்வுக்குப் பிறகு, முதனிலை ஆய்வுக் குறிப்புகள் தயார் செய்யப்பட்டு, அதன்மீது குறைகளைவு அறிக்கை அனுப்ப வேண்டி தொடர்புடைய துறைத் தலைமை அலுவலகத்திற்கு வழங்கப்படுகிறது. குறைகளைவு அறிக்கை பெறப்பட்டு மூத்த இந்திய ஆட்சிப் பணி அலுவலர்களால் இறுதி ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, அவரால் அளிக்கப்படும் பொதுக் குறிப்பு, தொடர் நடவடிக்கை எடுப்பதற்காக சம்பந்தப்பட்ட தலைமைச் செயலக நிருவாகத் துறைகளுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

2019-2020 ஆம் ஆண்டு டிசம்பர் 31 வரையிலான காலத்தில், தலைமைச் செயலகத் துறைகள்/துறைத் தலைமையகங்கள்/ வாரியங்கள் / மாநகராட்சி அலுவலகங்களில், 26 முதனிலை மற்றும் 28 இறுதி ஆய்வுகளை இத்துறையின் ஆய்வுக் குழுக்கள் மேற்கொண்டுள்ளன.

துணை ஆட்சியர் நிலையிலுள்ள ஆய்வுக் குழு அலுவலர் தலைமையில் இயங்கும் 11 மாவட்ட ஆய்வுக் குழுக்கள், வட்டாட்சியர் நிலையிலுள்ள துணை ஆய்வுக் குழு அலுவலர் உதவியுடன் மாவட்ட அளவில் உள்ள அலுவலகங்களில் ஆண்டாய்வுகள், திடீர் ஆய்வுகளை மேற்கொள்வதுடன், அந்தந்த மாவட்ட விழிப்புப் பணி மற்றும் ஊழல் தடுப்புக் குழுப் பிரிவுகளுக்கு திடீர் ஆய்வு மேற்கொள்வதில் உதவி புரியும் பணியையும் மேற்கொள்கின்றன.

மாவட்ட ஆய்வுக் குழுக்கள், 2019-2020 ஆம் ஆண்டு, 31 டிசம்பர் 2019 வரையிலான காலத்தில், 76 வருடாந்திர ஆய்வுகளையும், 1,956 திடீர் ஆய்வுகளையும் மேற்கொண்டதுடன் விழிப்புப் பணி மற்றும் ஊழல் தடுப்புக் குழு அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து மாவட்ட ஆட்சித் தலைவர்களின் முன்னிலையில் 71 ஒருங்கிணைப்புக் கூட்டங்களையும் நடத்தியுள்ளன.

9. பயிற்சி

செயற்திறனை மேம்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்ட திட்டமிட்ட செயலே பயிற்சியாகும். இது பணியாளர்கள் குறிப்பிட்ட பணியைச் செய்ய அவர்களுடைய அறிவு, திறன், மனப்பாங்கு, சமூக நடத்தை ஆகியவற்றில் அளவிடத்தக்க மாற்றங்களைக் கொண்டு வருகிறது. சிறந்த பயிற்சியுடனான மனித வளமானது நிறுவனத்திற்கு மேம்பட்ட பங்களிப்பை அளிக்கும்.

I. தலைமைச் செயலகப் பயிற்சி நிலையம்

தலைமைச் செயலகத் துறைகளில் நேரடி நியமனம்மூலம் பணியமர்த்தப்பட்ட உதவிப் பிரிவு அலுவலர்கள், நேர்முக உதவியாளர்கள், உதவியாளர்கள், நேர்முக எழுத்தர் மற்றும் தட்டச்சர்களுக்கு தலைமைச் செயலகப் பயிற்சி நிலையத்தில் அடிப்படைப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சி நிலையம் டிசம்பர் 2019 வரை 98 அணிகளுக்கு அடிப்படை பயிற்சி அளித்துள்ளது.

தலைமைச் செயலகத்திற்கு புதிதாக நியமனம் செய்யப்படும் பணியாளர்களின் பணிசார் திறனை மேம்படுத்தும் வகையில், மிகவும் பொருத்தமான மற்றும் பணிசார்ந்த பாடத்திட்டங்களை இணைத்து அவர்கள் செம்மையாகப் பணியாற்றும் வகையில் தற்போது நடைமுறையிலுள்ள தலைமைச் செயலகப் பணியாளர்களுக்கான அடிப்படைப் பயிற்சியானது, மாற்றியமைக்கப்பட்டுள்ளது. மாற்றியமைக்கப்பட்ட முறையிலான அடிப்படைப் பயிற்சித் திட்டத்தில் புதிதாக தெரிவுசெய்யப்பட்ட தலைமைச் செயலகப் பணியாளர்களின் பணிசார் திறனை மேம்படுத்த வலியுறுத்தப்பட்டுள்ளது. உணர்வுசார் நுண்ணறிவு, சமூக நுண்ணறிவு மற்றும் பணிசார் நெறிமுறை போன்றவை இப்புதிய பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. இப்புதிய முறையிலான அடிப்படைப் பயிற்சி வரும் நிதியாண்டு 2020-2021 முதல் நடத்தப்படும்.

II. பயிற்சித் துறைத் தலைவர்

(i) பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையம், (ii) ‘அ’ மற்றும் ‘ஆ’ பிரிவு அலுவலர்களுக்கான அடிப்படை பயிற்சி நிலையம், (iii) அகில இந்தியக் குடிமைப் பணித் தேர்வுப் பயிற்சி மையம் (iv) போட்டித் தேர்வுகள் பயிற்சி மையம் மற்றும் (v) அண்ணா மேலாண்மை நிலையம் ஆகிய பயிற்சி நிலையங்களின்மீதான

நிருவாகம் மற்றும் நிதிக் கட்டுப்பாடு, இவற்றின் செயல்பாடுகளை ஒருங்கிணைத்தல் மற்றும் கண்காணித்தல் போன்ற பணிகளை பயிற்சித் துறைத் தலைவர் மேற்கொண்டு வருகிறார்.

நல் ஆளுமை விருதிற்கான விண்ணப்பங்களைப் பயிற்சித் துறைத் தலைவர் பெற்று அவற்றை ஆய்வுக் குழு மற்றும் தேர்வுக் குழுக்களின்முன் பரிசீலனைக்காக வைக்கிறார்.


i) அரசு அலுவலர் பயிற்சி நிலையம், பவானிசாகர்

பவானிசாகரில் உள்ள அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் தமிழ்நாடு அமைச்சுப் பணி, தமிழ்நாடு நீதித் துறை அமைச்சுப் பணிகளுக்கு புதிதாக தெரிவுசெய்யப்படும் பணியாளர்களுக்கு அடிப்படைப் பயிற்சி வழங்கப்படுகிறது. இப்பயிற்சி நிலையம் 71.32 ஏக்கர் பரப்பளவில் இயற்கை எழில் நிறைந்த சூழலில் அமைந்துள்ளது. இது புதிதாக பணியில் தெரிந்தெடுக்கப்பட்ட பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்க உகந்த சூழ்நிலையை அளிக்கிறது.

இப்பயிற்சி நிலையம், நவீன வசதிகளுடன்கூடிய வகுப்பறைகள், நூலகம், கலையரங்கம், விடுதி தொகுப்புகள், பணியாளர் குடியிருப்புகள், நவீன சமையல் கூடம், உணவருந்தும் கூடங்கள், உள்விளையாட்டரங்க வளாகம் மற்றும் விருந்தினர் மாளிகை ஆகியவற்றைக் கொண்டுள்ளது. அரசின் நவீனமயமாக்கல் முயற்சியின் காரணமாக, இப்பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெறுவோரின் எண்ணிக்கை ஒரு அணிக்கு 250-லிருந்து 685 ஆக உயர்ந்துள்ளது.

2018-2019 ஆம் ஆண்டில் இப்பயிற்சி நிலையத்தின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக ரூ.5.04 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும், 2019-2020 ஆம் ஆண்டில் இப்பயிற்சி நிலையத்தின் பயிற்சியாளர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக கூடுதல் வகுப்பறைகள், தங்கும் விடுதிகள் கட்டுவதற்காக மேலும் ரூ.10.00 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

இப்பயிற்சி நிலையமானது 2019 ஆம் ஆண்டில் 4,654 பணியாளர்களுக்கு பயிற்சி அளித்துள்ளது. இப்பயிற்சி நிலையம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இந்நாள் வரை 1,24,606 பணியாளர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.



புதிதாக நியமனம் செய்யப்பட்ட இளநிலை உதவியாளர்கள்/ உதவியாளர்களுக்கு உரிய நேரத்தில் பயிற்சியளிக்கும் வகையில் 28 மாவட்டங்களில் பரவலாக்கப்பட்ட தங்கும் வசதியற்ற 37 நாட்கள் கொண்ட அடிப்படைப் பயிற்சியை வழங்க ரூ.1.22 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

(ii) ‘அ’ மற்றும் ‘ஆ’ பிரிவு அடிப்படைப் பயிற்சி நிலையம், சென்னை

சென்னையிலுள்ள ‘அ’ மற்றும் ‘ஆ’ பிரிவு அடிப்படைப் பயிற்சி நிலையம், பல்வேறு அரசுத் துறைகளில் உள்ள குறிப்பிட்ட ‘அ’ மற்றும் ‘ஆ’ பிரிவு அலுவலர்களுக்கு அடிப்படைப் பயிற்சியினை வழங்கி வருகிறது. இப்பயிற்சி நிலையமானது மாவட்ட வருவாய் அலுவலரால் நிருவகிக்கப்பட்டு வருகிறது.

இப்பயிற்சி நிலையத்தில் அலுவலக நிருவாகம், நிதி நிருவாகம், சட்டம், பொது நிதி, மேலாண்மை, திட்டம் மற்றும் வளர்ச்சி, பொருளாதாரம், தகவல் பெறும் உரிமைச் சட்டம், கணினி மற்றும் உடற்பயிற்சி போன்ற பாடங்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது. நிருவாகம் மற்றும் செயல்திறன் பணிகளை அலுவலர்கள் திறம்பட செயல்படுத்த இப்பயிற்சியானது உதவுகிறது.

2020 மார்ச் 17]

2019 ஆம் ஆண்டில் மொத்தம் 374 அலுவலர்கள் இப்பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்றுள்ளனர்.

(iii) அகில இந்திய குடிமைப் பணிகள் பயிற்சி மையம், சென்னை

நாட்டிலுள்ள பழமையான மையங்களில் ஒன்றான சென்னையிலுள்ள அகில இந்திய குடிமைப் பணிகள் பயிற்சி மையமானது, விளிம்பு நிலையிலுள்ள சமுதாயத்தைச் சார்ந்த மாணவர்களை மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் குடிமைப் பணிகளுக்கான தேர்வினை எதிர்கொள்ள பயிற்சியளிக்கிறது. மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் குடிமைப் பணித் தேர்வுக்கான முதல் நிலை, முதன்மை நிலை மற்றும் ஆளுமைத் தேர்வு ஆகிய மூன்று நிலைத் தேர்வுகளுக்கும் தேவையான, கட்டணம் இல்லா முழுமையான பயிற்சிகளை இப்பயிற்சி நிலையம் வழங்கி வருகிறது.

இப்பயிற்சி நிலையமானது, 245 முழுநேர உள்ளுறை தேர்வர்கள் மற்றும் 100 பகுதி நேர தேர்வர்களுக்கு முதல் நிலை தேர்வுக்கான பயிற்சியினையும், 225 முழுநேர உள்ளுறை தேர்வர்களுக்கான 3 மாத கால (ஜூலை முதல் அக்டோபர் வரை) முதன்மைத் தேர்வுக்கான பயிற்சியினையும் வழங்கி வருகிறது. முதன்மைத் தேர்வுக்காக பயிற்சி பெறும் மாணவர்களுக்கு பயிற்சிக் கையேடுகள் வாங்கும் பொருட்டு மாத உதவித் தொகை ரூ.3,000/- வழங்கப்படுகிறது.

இப்பயிற்சி மையத்தில் சிறப்பான வசதிகளைக் கொண்ட நூலகத்திலுள்ள புத்தகங்கள் மற்றும் இதழ்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கும், புதுப்பிப்பதற்கும் ஆண்டுதோறும் ரூ.3 இலட்சம் வழங்கப்பட்டு வருகிறது.

2018 ஆம் ஆண்டில், மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் அகில இந்தியக் குடிமைப் பணிகள் மற்றும் இந்திய வனப் பணிக்கு 47 தேர்வர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

2019 ஆம் ஆண்டில் இப்பயிற்சி நிலையத்தில் பயிற்சி அளிக்கப்பட்ட தேர்வர்களில் 43 தேர்வர்கள் குடிமைப் பணிகள் (முதன்மை) தேர்வு, 2019-ல் தேர்ச்சிபெற்றுள்ளனர். மத்திய அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் ஆளுமைத் தேர்வை எதிர்கொள்ளும் வகையில் இம்மையம் ஒவ்வொரு மாணவருக்கும் சிறப்பான இரண்டு

மாதிரித் தேர்வுகளை நடத்தி, தேவையான பயிற்சி அளித்து வருகிறது. ஆளுமைத் தேர்வில் கலந்துகொள்ளும் மாணவர்களுக்கு புது தில்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தில் சலுகைக் கட்டணத்தில் தங்கும் வசதியும், இடைநிகழ் செலவிற்காக ரூ.2,000/- வழங்கப்பட்டு வருகிறது.

அண்மையில் ரூ.60 இலட்சத்தில் மேற்கொள்ளப்பட்ட பழுது நீக்கம் மற்றும் புதுப்பித்தல் பணிகளால் இம்மையத்தின் வெளிச்சம் மற்றும் காற்றோட்டம் மேம்படுத்தப்பட்டு, பொலிவுடன் திகழ்கிறது.

மாற்றுத் திறனாளி தேர்வர்களுக்கு பிரெய்லி வரைபடம் மற்றும் சிறப்பு மென்பொருள் போன்ற சிறப்பான கற்கும் வசதிகள் இப்பயிற்சி மையத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மாற்றுத் திறனாளிகள் எளிமையாகப் பயன்படுத்தும்வண்ணம் இப்பயிற்சி நிலையக் கட்டடம் அமைந்துள்ளது.

அண்ணா நூற்றாண்டு குடிமைப் பணிகள் பயிற்சி நிறுவனங்கள், குடிமைப் பணிகளுக்கான (முதனிலை தேர்வுகளுக்கு) பயிற்சி அளிப்பதற்காக மதுரையில் உள்ள மதுரை காமராசர் பல்கலைக்கழகம் மற்றும் கோயம்புத்தூரில் உள்ள பாரதியார் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் அரசின் நிதியுதவியுடன் இயங்கி வருகிறது.

(iv) போட்டித் தேர்வுகள் பயிற்சி மையம்

சென்னை, பழைய வண்ணாரப்பேட்டையில் உள்ள போட்டித் தேர்வுகள் பயிற்சி மையம், மத்திய, மாநில மற்றும் வங்கி அமைப்புகளால் வேலைவாய்ப்பிற்காக நடத்தப்பெறும் பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சியினை வழங்கி வருகிறது. இப்பயிற்சி மையத்திற்கான மாணவர்கள் சேர்க்கை, பத்தாம் வகுப்பு இறுதித் தேர்வில் பெற்ற மதிப்பெண் அடிப்படையில் மாநில இடஒதுக்கீடு விதிகளைப் பின்பற்றி மேற்கொள்ளப்படுகிறது.

இப்பயிற்சி மையத்தில் இதுவரையில் 6 அணிகளில் மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு ரூபாய் 1,000 மதிப்பிலான இலவசப் பயிற்சிக் கையேடுகள் வழங்கப்பட்டுள்ளன. போதிய புத்தகங்களைக் கொண்டுள்ள நூலகம் இம்மையத்தில் இயங்கி வருகிறது.

அதிக எண்ணிக்கையிலான வேலை தேடும் இளைஞர்களின் பங்கேற்புடன் அரசால் ஆகஸ்ட் 2019-ல் ஊக்க முகாம் நடத்தப்பட்டது.

2020 மார்ச் 17]

இம்முகாமில் பங்கேற்றவர்களுக்கு இலவச பயிற்சிக் கையேடுகள் வழங்கப்பட்டன.

2019-2020 ஆம் ஆண்டில் சென்னையில் இரண்டாவதாக ஒரு பயிற்சி மையமும் அதனுடன் கோவை, சேலம் மற்றும் மதுரை ஆகிய நகரங்களில் 4 புதிய போட்டித் தேர்வு பயிற்சி மையங்கள் துவங்குவதற்கு அரசு ரூ.4.44 கோடி ஒப்பளிப்பு செய்துள்ளது.

(v) அண்ணா மேலாண்மை நிலையம்

1981-ல் துவங்கப்பட்ட அண்ணா மேலாண்மை நிலையமானது, மாநில நிருவாகப் பயிற்சி நிலையம் எனத் திகழ்கிறது. அகில இந்தியப் பணி அலுவலர்கள் முதல் அமைச்சுப் பணி பணியாளர்கள் வரையிலான அனைத்து அரசுப் பணியாளர்களுக்கும் பயிற்சியளிக்கக்கூடிய பயிற்சி முகமையாக இந்நிலையம் செயல்படுகிறது.

இந்நிலையம், குளிரூட்டப்பட்ட வகுப்பறைகள், கணினி மையம், 200 இருக்கைகள் கொண்ட கலையரங்கம் ஆகியவற்றை அமையப்பெற்றுள்ளது. மின் நுகர்வைக் குறைக்கும் வகையில் கட்டடத்தின் மேற்பரப்பில் சூரிய ஒளி மின் நிலையத்தினை இந்நிலையம் அமைத்துள்ளதோடு, இங்கு நிறுவப்பட்ட பசுமை உரத் தொட்டிகள் ஒரு பசுமை முயற்சியாகும்.

இந்நிறுவனமானது, நடைமுறையிலுள்ள சட்டங்கள் மற்றும் விதிகள், நீதிமன்ற ஆணைகள் மற்றும் பல்வேறு துறைகளின் சிறந்த நடைமுறைகள் குறித்த அலுவலர்களின் அறிவினை மேம்படுத்தும் நோக்கில் பயிற்சி அளித்து வருகிறது.

தகவல் பெறும் உரிமைச் சட்டம், வருமான வரி திட்டமிடல் மற்றும் முதலீடு திட்டமிடல், தலைமைத்துவ பண்புகள், மின் ஆளுகை, பெண்கள் அதிகாரம் பெறுவதற்கான நீடித்த வளர்ச்சி இலக்குகள் மற்றும் பாலின உணர் திறன் போன்ற பாடங்களில் சிறப்பு பயிற்சிகள் இந்நிலையத்தால் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் இந்நிறுவனமானது பல்வேறு அரசுத் துறைகளின் தேவைக்கேற்ப பயிற்சிகளை வழங்கி வருகிறது.

2019-2020 ஆம் நிதியாண்டில், ஜனவரி 2020 வரை 543 பயிற்சிகளை 22,744 பயிற்சியாளர்களுக்கு அண்ணா மேலாண்மை நிலையம் மற்றும் மதுரை, திருச்சி மற்றும் சேலத்தில் உள்ள மண்டல பயிற்சி நிலையங்கள் அளித்துள்ளன.

2019-2020 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட சிறப்புப் பயிற்சிகள்

2017-2019 அணியைச் சேர்ந்த இந்திய வனப் பணி அலுவலர்களுக்கான இரண்டு நாள் பயிற்சி;

[2020 மார்ச் 17

மாவட்டக் கல்வி அலுவலர்கள் மற்றும் முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கான சிறப்புப் பயிற்சி;

தலைமைச் செயலகத்தில் பல்வேறு துறைகளில் பணிபுரியும் பெண் அலுவலர்களுக்கான "இணையத்தை கையாள்வது எப்படி?" என்பது குறித்த ஒரு நாள் பயிற்சி;

பணி ஓய்விற்கு முந்தைய கலந்தாய்வு;

மக்கள்தொகை கணக்கெடுப்புப் பணிகளில் ஈடுபடும் களப் பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கும் நிபுணர்களுக்கான பயிற்சி;

வணிக வரித் துறை அலுவலர்களுக்கான "மனித மூலதன மேம்பாடு" குறித்த பயிற்சி.

முக்கியச் செய்திகள், தகவல்கள், நடப்பு நிகழ்வுகள் போன்றவற்றை உள்ளடக்கிய வாராந்திர "செய்தி மடல்" இந்நிறுவனத்தின் வலைதளமான www.annainstitute.org-ல் வெளியிடப்படுகிறது.

10. முடிவுரை

தகுதிவாய்ந்த மற்றும் பொறுப்புள்ள பணியாளர்கள் கொண்ட அமைப்பை கிடைக்கச் செய்யும் உரிய நெறிமுறைகளை ஏற்படுத்துவது இத்துறையின் நோக்கமாகும். உரிய நேரத்தில் பணியாளர்களைத் தெரிவு செய்வது மற்றும் அதனைத் தொடர்ந்து அவர்களுக்கு பயிற்சி அளிப்பது ஆகியவற்றின்மூலம் இந்த நோக்கம் அடையப் பெறுகிறது.

நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளான ஊழலற்ற வெளிப்படைத் தன்மையுடன்கூடிய நிருவாகத்தை அடையும் வகையில் லோக் ஆயுக்தா, மாநில விழிப்புப் பணி ஆணையம் மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயங்கள் மற்றும் மாநில தகவல் ஆணையம் ஆகிய நிறுவனங்களின் செயல்பாடுகள் அமைந்துள்ளன.

இத்துறையின் பிரிவுகளான பணியாளர், பயிற்சி மற்றும் நிருவாகச் சீர்திருத்தம் ஆகியவை திறமையான மற்றும் பொறுப்பான அரசு நிருவாகத்தினை உறுதி செய்யும் தெளிவான நோக்கத்துடன் செயல்படுகின்றன.

2020 மார்ச் 17]

இணைப்பு III

(141 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 6 - கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)

கொள்கை விளக்கக் குறிப்பு, 2020-2021

1. முன்னுரை

மனித இனம், நாகரிகம் தோன்றிய காலத்திலிருந்தே கால்நடை இனங்களை பால், இறைச்சி, கம்பளி, முட்டை மற்றும் தோல் உற்பத்தி போன்ற பல்வேறு நோக்கங்களுக்காகப் பயன்படுத்தி வருகிறது. இவை தவிர, பல்வேறு கால்நடை இனங்கள் இழுவைத்திறன், தோழமை, பொழுதுபோக்கு, ஆராய்ச்சி, பரிசோதனை, விளையாட்டு மற்றும் பாதுகாப்பு போன்றவற்றுக்கும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. கிராமப்புற பொருளாதாரம் மற்றும் வாழ்வாதாரத்தில் கால்நடைத் துறை முக்கிய பங்கு வகிக்கிறது.

கால்நடைத் துறை என்பது இந்திய விவசாயத்தின் ஒரு முக்கிய துணைப்பிரிவாகும், நாட்டின் சமூக, பொருளாதார வளர்ச்சியில் இத்துறை முக்கியமான இடத்தைப் பிடித்துள்ளது. பெண்களுக்கு, முதன்மை அல்லது துணை அந்தஸ்தில் வாழ்வாதாரமாக இருப்பதோடு, தேசிய பொருளாதாரத்திலும் முக்கியப் பங்கு வகிக்கிறது.

1.1 இந்தியாவில் கால்நடை பராமரிப்பு சூழல்

உலக பொருளாதாரத்தில் இந்தியா 5-வது இடத்தில் உள்ளது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (நடைமுறை செலவில்) ஆண்டு வளர்ச்சி விகிதம் 6.21% ஆகும். இதற்கு தொழில் துறை வளர்ச்சி 6.21%, சேவைத் துறை வளர்ச்சி 8.20%-ம் முக்கிய காரணங்கள் ஆகும். 2004-05-ம் ஆண்டு கணக்கின்படி விவசாயம் மற்றும் தொடர்புடைய துறைகள், 14.1% ஒட்டு மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் பங்களிப்பு செய்கின்றன. அதே சமயம், நாட்டின் மக்கள் தொகையில் 58.2% பேருக்கு வாழ்வாதாரத்தையும் வழங்குகின்றன.

தேசிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் விவசாயத்தின் பங்களிப்பு படிப்படியாக குறைந்து வருகின்ற போதிலும், விவசாய பிரிவின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் கால்நடை துறையின் பங்களிப்பு கடந்த 20 ஆண்டுகளில் வியக்கத்தகு

முறையில் அதிகரித்துள்ளது. அதாவது கடந்த 1970-ஆம் ஆண்டின் பிற்பகுதியில் 15%-க்கும் குறைவாக இருந்து 2009-ல் 33%-க்கும் மேலாக அதிகரித்துள்ளது. (பொருளாதார சர்வே, இந்தியா, 2011-12 பொருளாதாரம் மற்றும் புள்ளியியல் இயக்குநரகம், இந்திய அரசு)

கால்நடைத் துறையானது, சிறு, குறு மற்றும் நிலமற்ற தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கி, பண்ணை வருமானத்தை உறுதிப்படுத்தி வறுமையை ஒழித்து கிராமப்புற மக்களின் ஒட்டுமொத்த நலனுக்காக பலதரப்பட்ட பங்களிப்புகளைச் செய்கிறது.

கால்நடைத் துறையானது வேளாண் தொழிலுக்குத் தேவையான இழுவை சக்தி மற்றும் கரிம உரங்களை வழங்குவதுடன், தொழிற்சாலைகளுக்கு தோல், எலும்புகள், இரத்தம் மற்றும் நாரிழைகளையும் கால்நடைகள்மூலம் அளிக்கிறது. மேலும், சுற்றுச்சூழல் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக வேளாண் கழிவுகள் மற்றும் துணைப் பொருட்களை தீவனம் / பசுந்தீவனமாகப் பயன்படுத்தி எரிசக்தி ஆதாரங்களான சாணம் மற்றும் இழுவை சக்தியாக வழங்குகிறது.

ஆகவே, கால்நடைத் தொழிலானது சத்தான உணவை வழங்கி, குடும்ப வருமானத்தை ஈடுசெய்வதிலும், இலாபகரமான வேலைவாய்ப்பை உருவாக்குவதிலும் கிராமப்புற பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது என்பது தெளிவாகிறது.

30 மில்லியனுக்கும் அதிகமான, ஒன்று அல்லது இரண்டு மாடுகள் அல்லது எருமைகளை வளர்க்கும் சிறு பால் உற்பத்தியாளர்களே நாட்டின் பால் உற்பத்தியில் பெரும் பங்களிக்கின்றனர். இத்துறையால் உற்பத்தி செய்யப்படும் கரிம உரங்கள் பயிர் உற்பத்திக்கு ஒரு முக்கியமான உள்ளீடாகும், அத்துடன் கால்நடைகளின் சாணம் கிராமப்புறங்களில் எரிபொருளாகவும் பரவலாக பயன்படுத்தப்படுகிறது.

ஏழை கிராமப்புற குடும்பங்கள் பொருளாதார நெருக்கடிகளின் போது கால்நடைகளை எளிதாக விற்க முடியும் என்பதால் அவை அவர்கள் வாழ்வில் மாற்று காப்பீடாகவும் விளங்குகின்றன.

2020 மார்ச் 17]

இந்தியா, உலகின் மொத்த பால் உற்பத்தியில் 20.17 விழுக்காடு பங்களிப்பைக் கொண்டு மிகப்பெரிய பால் உற்பத்தியாளராக விளங்குகிறது.

உலகளாவிய முட்டை உற்பத்தியில் இந்தியா சுமார் 5.65 விழுக்காட்டைக் கொண்டுள்ளது. அத்துடன், 110 மில்லியன் எருமைகள், 133 மில்லியன் வெள்ளாடுகள் மற்றும் 63 மில்லியன் செம்மறி ஆடுகளுடன், உலக அளவில் கால்நடைகளின் எண்ணிக்கையையும் மிக அதிக அளவில் கொண்டுள்ளது. மொத்த இறைச்சி உற்பத்தியில் இந்தியாவின் பங்களிப்பு 3 விழுக்காடு ஆகும். (விவசாய மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் - APEDA, 2018).

1.2 கால்நடைகளின் பங்களிப்பு

20-வது கால்நடை கணக்கெடுப்பு, 2019-ன்படி இந்தியாவில் மாட்டினம் 193.46 மில்லியன்களும், எருமையினம் 109.85 மில்லியன்களும், செம்மறி ஆடுகள் 74.26 மில்லியன்களும், வெள்ளாடுகள் 148.88 மில்லியன்களும், பன்றிகள் 9.06 மில்லியன்களும், ஒட்டகங்கள் 2.51 இலட்சங்களும், குதிரைகள் 3.42 இலட்சங்களும் மற்றும் கோழியினங்கள் 851.81 மில்லியன்களும் உள்ளன.

1.3 தமிழ்நாட்டின் சூழ்நிலை

இந்திய கால்நடை எண்ணிக்கையில் சுமார் 4.56 விழுக்காட்டைக் கொண்டுள்ள தமிழகம், நாட்டின் பால் உற்பத்தியில் 4.39 விழுக்காடும் இறைச்சி உற்பத்தியில் 7.88 விழுக்காடும் பங்களிக்கிறது.

இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் மொத்த முட்டைகளில் 18.67 விழுக்காடு உற்பத்தி செய்யும் ஆந்திரப் பிரதேசத்திற்கு அடுத்தபடியாக தமிழ்நாடு 18.29 விழுக்காடு உற்பத்தி செய்கிறது, இதன் விளைவாக, நாட்டில் கால்நடைகளிலிருந்து கிடைக்கும் மொத்த உற்பத்தி மதிப்பில் மாநில அரசு 5.29 விழுக்காட்டினை அளிக்கிறது.

1.4 தேசிய பொருளாதாரத்தில் பங்களிப்பு

மாநில விவசாய பிரிவின் உற்பத்தி மதிப்புக்கு நம் மாநிலத்தில் உள்ள கால்நடைகள் 45.62 விழுக்காடு பங்களிப்பு செய்கின்றன. இந்திய அளவில் இதன் சராசரி மதிப்பு 28.83 விழுக்காடு அளவில் உள்ளது.

[2020 மார்ச் 17

மாநிலத்தில், ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் கால்நடைகளின் பங்களிப்பு 2007-08-ல் 2.88 விழுக்காடாக இருந்தது, 2016-17-ல் 5.47 சதவீதமாக உயர்ந்துள்ள நிலையில், ஒட்டுமொத்த உள்நாட்டு விவசாய உற்பத்தியில் இதன் பங்களிப்பு 25.70 விழுக்காட்டிலிருந்து 45.62 விழுக்காடாக அதிகரித்துள்ளது.

பெரும்பான்மையான விவசாயிகள் தங்கள் வாழ்வாதாரத்திற்காக கால்நடை வளர்ப்பையே பெரிதும் நம்பியுள்ளனர். கால்நடை பொருட்களின் உற்பத்தி அதிகரித்ததன் காரணமாக, கால்நடை வளர்ப்பும் அதிக ஏற்றுமதி திறன் கொண்ட ஒரு தொழிலாகக் கருதப்படுகிறது. நில வளத்துடன் ஒப்பிடும்போது கால்நடைகளின் பகிர்வு சீராக காணப்படுகிறது. எனவே, சமபங்கு மற்றும் வாழ்வாதாரக் கண்ணோட்டத்தில், கால்நடை வளர்ப்பானது வறுமை ஒழிப்பு திட்டங்களில் ஒரு முக்கிய அங்கமாகக் கருதப்படுகிறது.

கால்நடைத் துறையின் பங்களிப்பானது, மொத்த மாநில மதிப்பு கூடுதலுக்கு 5.47 விழுக்காடும் வேளாண்மை மற்றும் அதனுடன் தொடர்புடைய தொழில்களுக்கு 45.62 விழுக்காடும் ஆகும். 2011-12 ஆம் ஆண்டில் மாநிலத்தில் ரூ.26,179.44 கோடியாக இருந்த கால்நடைகளின் மொத்த மதிப்பு கூடுதல் மதிப்பீடு 2018-19 ஆம் ஆண்டில் ரூ.78,744.09 கோடியாக அதிகரித்துள்ளது.

தமிழ்நாட்டில் 2005-06 ஆம் ஆண்டில் 54.74 இலட்சம் மெட்ரிக் டன் ஆக மதிப்பிடப்பட்ட பால் உற்பத்தி 2018-19 ஆம் ஆண்டில் 83.62 இலட்சம் மெட்ரிக் டன்னாக அதிகரித்துள்ளது. அதே போல், 2005-06 ஆம் ஆண்டில் 62,225 இலட்சம் எண்களாக இருந்த மதிப்பிடப்பட்ட முட்டை உற்பத்தி 2018-19 ஆம் ஆண்டில் 1,88,422 இலட்சம் எண்ணிக்கையாக அதிகரித்துள்ளது. மேலும், 2005-06 ஆம் ஆண்டில் 1,18,616 மெட்ரிக் டன் ஆக இருந்த மதிப்பிடப்பட்ட இறைச்சி உற்பத்தி (கோழி இறைச்சி உட்பட) 2018-19 ஆம் ஆண்டில் 6,33,802 மெட்ரிக் டன் ஆக அதிகரித்துள்ளது.

2005-06 முதல் 2018-19 வரையிலான காலகட்டத்தில் நாள் ஒன்றுக்கு தனிநபருக்கு கிடைக்கும் பாலின் அளவு 231 கிராமிலிருந்து 285 கிராம் ஆகவும், ஒரு வருடத்தில் கிடைக்கும் முட்டைகளின் எண்ணிக்கை 97-லிருந்து 265 ஆகவும் அதிகரித்துள்ளது.

2020 மார்ச் 17]

கால்நடை பராமரிப்புத் துறை, நிலையான வளர்ச்சியை அடைவதற்காக ஐக்கிய நாடுகள் பொது சபையால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிலையான வளர்ச்சி இலக்குகளை நிறைவேற்ற உறுதி பூண்டுள்ளது.

“அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி” என்ற கொள்கையின் அடிப்படையில், துறையின் பல்வேறு திட்டங்கள் மற்றும் கொள்கைகளை செயல்படுத்துவதன்மூலம், வறுமையின்மை (இலக்கு 1), பசி துயர் நீக்குதல் (இலக்கு 2) மற்றும் பொறுப்பான நுகர்வு மற்றும் உற்பத்தி (இலக்கு 12) ஆகிய நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவதற்காக முழுமையான அணுகுமுறையை நோக்கி உறுதி பூண்டுள்ளது.

2. துறையின் குறிக்கோள்கள்

துறையின் குறிக்கோள்கள் பின்வருமாறு:

- அயலின மற்றும் கலப்பின உறைவிந்தைப் பயன்படுத்தி செயற்கைமுறை கருவூட்டல் மேற்கொண்டு, உள்ளூர் இன பசுக்களின் தரத்தையும், முர்ரா இன உறைவிந்தைப் பயன்படுத்தி எருமைகளின் தரத்தையும் உயர்த்துவது
- உள்நாட்டின கால்நடைகளை அவற்றின் வாழ்விடங்களிலேயே பாதுகாத்து அவற்றின் எண்ணிக்கையைப் பெருக்குவது
- கால்நடை மற்றும் கோழியினங்களின் உற்பத்தித் திறனைப் பெருக்கி அதன்மூலம் பால், முட்டை மற்றும் இறைச்சி உற்பத்தியை அதிகரிப்பது
- விஞ்ஞான அடிப்படையில் கால்நடை பராமரிப்பில் கால்நடைகளின் உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கான நடைமுறைகளை ஒழுங்கமைத்தல்
- கால்நடைகளுக்கும், கோழியினங்களுக்கும் தேவையான நவீன மருத்துவ சேவையை காலத்தே அளிப்பது
- தடுப்பூசிகள் வாயிலாக, நோய்களைத் தடுத்து அனைத்துக் கால்நடைகளின் உடல்நலனை உறுதிப்படுத்துவது
- கிராமப்புற ஏழைகளின் பொருளாதார நிலையை உயர்த்தும் நோக்குடன், மத்திய மற்றும் மாநில அரசுகளின் பல்வேறு திட்டங்களை செயல்படுத்துவது

[2020 மார்ச் 17

- கால்நடைகள்மூலம் மனிதர்களுக்குப் பரவும் நோய்களைக் கண்டறிந்து கட்டுப்படுத்துவது
- நவீன கால்நடை பராமரிப்பு முறைகள் பற்றி பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவது
- அடிப்படை மற்றும் நவீன கால்நடை பராமரிப்பு முறைகள் பற்றிய பயிற்சியை விவசாயிகளுக்கு அளிப்பது.

3. தமிழகத்தின் கால்நடை வளம்

தமிழகத்தின் கிராமப்புற மக்களின் சமூக பொருளாதார தரத்தை உயர்த்துவதில், மாநிலத்தில் உள்ள கால்நடைகள் மற்றும் கோழியினங்கள் முக்கியப் பங்காற்றுகின்றன. மாநிலத்தில் உள்ள சிறு, குறு மற்றும் நிலமற்ற ஏழை விவசாயிகள், தொடர் வாழ்வாதார வசதிகளை வழங்கும் கால்நடைகள் மற்றும் கோழியினங்களை நம்பியே வாழ்கின்றனர்.

அட்டவணை 1: 20-வது கால்நடை கணக்கெடுப்பின்படி மாநிலத்தில் கால்நடைகளின் எண்ணிக்கை

இனம்	கால்நடைகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்)
பசுவினம்	95.19
எருமையினம்	5.19
செம்மறியாடுகள்	45.00
வெள்ளாடுகள்	98.89
பன்றிகள்	0.67
மற்றவை (குதிரைகள், மட்டக்குதிரைகள், கோவேரி கழுதைகள், கழுதைகள் மற்றும் ஒட்டகம்)	0.07
மொத்த கால்நடைகள்	245.00
கோழிகள் மற்றும் பிற பறவைகள் (பண்ணை மற்றும் புழக்கடை)	1,205.42

2020 மார்ச் 17]

இனம்	கால்நடைகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்)
வாத்துகள் (பண்ணை மற்றும் புழக்கடை)	2.01
வான்கோழிகள் (பண்ணை மற்றும் புழக்கடை)	0.38
மொத்த கோழியினம்	1,207.81

விவசாயிகள் வளர்க்கும் கால்நடைகளில் பெரும்பாலானவை ஜெர்சி, ஹோல்ஸ்டீன் பிரிசியன் போன்ற கலப்பினப் பசுக்களே அதிகம் ஆகும்.

ஜெர்சி கலப்பினப் பசுக்கள் சமவெளிப் பகுதிகளில் வளர்ப்பதற்கு விருப்பத் தேர்வாக உள்ள நிலையில், ஹோல்ஸ்டீன் பிரிசியன் கலப்பினப் பசுக்கள், அவற்றை வளர்ப்பதற்கு சாதகமான காலநிலை நிலவும் மலைப்பிரதேசங்களான கோயம்புத்தூர், தருமபுரி, திண்டுக்கல், ஈரோடு, கரூர், உதகமண்டலம், கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி மற்றும் திருப்பூர் ஆகிய மாவட்டங்களில் வளர்க்கப்படுகின்றன.

இவை மட்டுமின்றி, காங்கேயம், உம்பளாச்சேரி, ஆலம்பாடி, பர்கூர், புலிக்குளம் இன பசுக்கள் மற்றும் தோடா எருமைகள் போன்ற நாட்டின கால்நடைகளும், அவற்றிற்குரிய பாரம்பரிய வாழ்விடங்களிலேயே வளர்க்கப்படுகின்றன.

காங்கேயம் இன மாடுகள் திண்டுக்கல், நாமக்கல், ஈரோடு, கோயம்புத்தூர், திருப்பூர், சேலம் மற்றும் கரூர் ஆகிய மேற்கு மாவட்டங்களிலும், உம்பளாச்சேரி இன மாடுகள் தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய கிழக்கு மாவட்டங்களிலும், ஆலம்பாடி இன மாடுகள் தருமபுரி, ஈரோடு மற்றும் சேலம் ஆகிய மேற்கு மாவட்டங்களிலும், புலிக்குளம் இன மாடுகள் சிவகங்கை, மதுரை மற்றும் விருதுநகர் ஆகிய தென் மாவட்டங்களிலும், பர்கூர் இன மாடுகள் ஈரோடு மாவட்டத்திலும், தோடா எருமைகள் நீலகிரி மாவட்டத்திலும் வளர்க்கப்படுகின்றன.

அதேபோல, உள்நாட்டு செம்மறி ஆடுகளான மேச்சேரி (சேலம் மற்றும் திருப்பூர் மாவட்டங்கள்), இராமநாதபுரம் வெள்ளை

[2020 மார்ச் 17

(இராமநாதபுரம் மாவட்டம்), சென்னை சிவப்பு (சென்னை மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்கள்), கீழக்கரிசல் (இராமநாதபுரம், சிவகங்கை மற்றும் மதுரை மாவட்டங்கள்), வேம்பூர் (தூத்துக்குடி மாவட்டம்), திருச்சி கருப்பு (திருச்சிராப்பள்ளி, சேலம் மற்றும் தருமபுரி மாவட்டங்கள்), கோயம்புத்தூர் (கோயம்புத்தூர் மாவட்டம்), கச்சைக்கட்டி கருப்பு (மதுரை மாவட்டம்), செவ்வாடு (திருநெல்வேலி மாவட்டம்) மற்றும் நீலகிரி (நீலகிரி மாவட்டம்) போன்றவையும், உள்நாட்டு வெள்ளாட்டினங்களான கன்னியாடு (தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்கள்), கொடியாடு (தூத்துக்குடி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்கள்) மற்றும் சேலம் கருப்பு (சேலம் மாவட்டம்) போன்றவையும் தமிழகத்தில் வளர்க்கப்படுகின்றன. (அடைப்பு குறிக்குள் இருப்பவை அந்தந்த இன கால்நடைகளின் பாரம்பரிய வாழ்விடங்களாகும்)

மேலும், பெரும்பாலான வர்த்தக ரீதியிலான கோழிப் பண்ணைத் தொழில் நிறுவனங்கள் தருமபுரி, ஈரோடு, கரூர், நாமக்கல், சேலம் மற்றும் திருப்பூர் ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ளன.

20-வது கால்நடை கணக்கெடுப்பின் அடிப்படையில் தமிழ்நாடு, கோழியின எண்ணிக்கையில் நாட்டிலேயே முதலிடத்திலும், செம்மறியாட்டின எண்ணிக்கையில் ஐந்தாவது இடத்திலும், வெள்ளாட்டின எண்ணிக்கையில் ஏழாவது இடத்திலும், மொத்த மாட்டின எண்ணிக்கையில் 14-வது இடத்திலும் உள்ளது.

3.1 20-வது கால்நடை கணக்கெடுப்பின்படி விவரங்கள்

20-வது கால்நடை கணக்கெடுப்பு பணி 10.06.2019 அன்று முடிவு தேதியாக கொண்டு கணக்கிடப்பட்டது. பின்வருவன கால்நடை கணக்கெடுப்பு முடிவுகளின் முக்கிய அம்சங்களாகும்:

அட்டவணை 2: 19 மற்றும் 20-வது கால்நடை கணக்கெடுப்புகளின் ஒப்பீடு (இலட்சத்தில்)

வ. எண்	இனங்கள்	19-வது கால்நடை கணக்கெடுப்பின் விவரங்கள்	20-வது கால்நடை கணக்கெடுப்பின் விவரங்கள்
1	பசுவினம்	88.14	95.19
2	எருமையினம்	7.81	5.19

2020 மார்ச் 17]

வ. எண்	இனங்கள்	19-வது கால்நடை கணக்கெடுப்பின் விவரங்கள்	20-வது கால்நடை கணக்கெடுப்பின் விவரங்கள்
3	செம்மறியாடு	47.87	45.00
4	வெள்ளாடு	81.43	98.89
5	பன்றிகள்	1.84	0.67
6	கோழிகள்	1173.49	1207.81

20-வது கால்நடை கணக்கெடுப்பின்படி கறவை பசுக்கள் 7.40 சதவிகிதமும் மற்றும் வெள்ளாடுகளின் எண்ணிக்கை 17.65 சதவிகிதமும் அதிகரிப்பதற்கு ஏழ்மை நிலையில் உள்ள பெண்களுக்காக செயல்படுத்தப்பட்ட விலையில்லா கறவைப் பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள் வழங்கும் திட்டங்கள் முக்கிய காரணங்களாகும். இதனால் ஏழை பெண்கள் பொருளாதாரம் ஈட்டித் தரும் அசையும் சொத்துக்களின் உரிமையாளர்களாக மாறியுள்ளனர். இந்த ஆடுகள் பொருளாதார நெருக்கடி ஏற்படும் காலங்களில் பணத்திற்காக விற்கப்பட்டு பணத்தேவையினை உடனடியாக பூர்த்தி செய்ய பயன்படுத்தப்படுகின்றன.

மேய்ச்சல் நிலங்கள் குறைந்து வருவதாலும், மாநிலம் விரைவாக நகரமயமாகி வருவதாலும் செம்மறி ஆடுகளின் எண்ணிக்கை 6.36 சதவிகிதம் வீழ்ச்சி அடைந்துள்ளது.

மேலும், மாநிலத்தில் நடைமுறையில் உள்ள கோழி வளர்ப்பு திட்டங்கள் காரணமாக, சிறு மற்றும் நடுத்தர அளவிலான கோழிப் பண்ணைகள் அமைக்கப்பட்டு கிராமப்புறங்களில் தொழில்முனைவோரின் எண்ணிக்கை உயர்ந்து வருகிறது. இதன் விளைவாக மாநிலத்தில் மொத்த கோழிகள் 2.84 சதவிகிதமும் புழக்கடை கோழிகளின் எண்ணிக்கை 34.54 சதவிகிதமும் அதிகரித்துள்ளது.


பிராணிகள் நலனை காப்பதுடன் அவற்றின்மூலம் மனிதர்களுக்கு பரவும் நோய்களை கட்டுப்படுத்த மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு தொடர் நடவடிக்கைகளின் காரணமாக, 20-வது கால்நடை கணக்கெடுப்பின்படி மாநிலத்தில் 46.82 சதவிகிதம் தெருவில் சுற்றித்திரியும் நாய்களும், 31.49 சதவிகிதம் தெருவில் சுற்றித்திரியும் கால்நடைகளும் குறைந்துள்ளன.

[2020 மார்ச் 17

4. நிருவாக அமைப்பு

கால்நடை பராமரிப்புத் துறை, இந்திய ஆட்சிப் பணி அலுவலர் நிலையிலான கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் இயக்குநரின் தலைமையின்கீழ் நிருவகிக்கப்பட்டு வருகிறது.

துறையின் நிருவாக அமைப்பு



தொழில்நுட்பப் பணிகளில் இயக்குநருக்கு உதவுவதற்காக நான்கு கூடுதல் இயக்குநர்கள், இரண்டு இணை இயக்குநர்கள், ஒரு துணை இயக்குநர் மற்றும் ஒன்பது உதவி இயக்குநர்கள் இயக்குநரகத்தில் பணிபுரிகின்றனர்.

2020 மார்ச் 17]

மேற்கண்ட நான்கு கூடுதல் இயக்குநர்களில் ஒரு கூடுதல் இயக்குநர், ஒரு இணை இயக்குநர், ஒரு துணை இயக்குநர் மற்றும் இரண்டு நிருவாக அலுவலர்கள் துறை நிருவாகம் சம்பந்தமான பணிகளில் இயக்குநருக்கு உதவுகின்றனர்.

நிதி மற்றும் கணக்கு சம்பந்தமான பணிகளில் உதவுவதற்காக நிதித் துறையிலிருந்து அயற்பணியில் நிதி கட்டுப்பாட்டாளர் மற்றும் முதன்மை கணக்கு அலுவலர், கருவூல கணக்குத் துறையிலிருந்து அயற்பணியில் கணக்கு அலுவலர், உதவி கணக்கு அலுவலர், வேளாண்மைத் துறையிலிருந்து வேளாண் உதவி இயக்குநர் மற்றும் கூட்டுறவுத் துறையிலிருந்து துணைப் பதிவாளர் ஆகியோர் இயக்குநரகத்தில் பணியில் உள்ளனர்.

மாவட்ட அளவில் மண்டல இணை இயக்குநர்கள் மற்றும் துணை இயக்குநர்களும், கோட்ட அளவில் உதவி இயக்குநர்களும் கால்நடை பராமரிப்புத் துறையின் பணிகளுக்கு பொறுப்பு வகிக்கின்றனர்.

ராணிப்பேட்டை மாவட்டம், ராணிப்பேட்டையில் உள்ள கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலையம் (IVPM) கால்நடை உயிரியல் காரணிகளை தயாரிக்கிறது. இந்த நிலையம் கூடுதல் இயக்குநர் பதவி நிலையில் உள்ள ஒரு இயக்குநர் தலைமையில் நிருவகிக்கப்படுகிறது.

சென்னை சைதாப்பேட்டை பன்முக மருத்துவமனை வளாகத்தில் செயல்பட்டுவரும் கால்நடை நோய் நிகழ்வியல் பிரிவு, மாவட்டங்களில் உள்ள கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள் மற்றும் கோழியின நோய் கண்டறியும் ஆய்வுக்கூடங்களின் பணிகளை ஒருங்கிணைத்தும் கண்காணித்தும் வருகிறது.

5. கால்நடை மருத்துவ சேவைகள்

கால்நடை பராமரிப்புத் துறை, கால்நடைகள் மற்றும் கோழியினங்களுக்கு குறித்த நேரத்தில் தேவையான மருத்துவ சேவையை வழங்கி, மாநிலத்தில் கால்நடைகளின் உற்பத்தி அளவு மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்கிறது. கால்நடை மருத்துவச் சேவைகள் மாநிலமெங்கிலும், தொலைதூர கிராமங்கள் முதல் மாவட்டத் தலைமையிடங்கள் வரை பரவியுள்ள கால்நடை நிலையங்கள் மூலமாக வழங்கப்படுகின்றன.

5.1 கால்நடை நிலையங்கள்

கால்நடை கிளை நிலையங்கள் (825), தொலைதூர கிராமங்களில் முதலுதவி மற்றும் இனப்பெருக்க சேவைகள் கால்நடை

[2020 மார்ச் 17

ஆய்வாளர்கள்மூலம் வழங்கப்படுகிறது. கிராம ஊராட்சிகளில் அமைந்துள்ள, கால்நடை மருந்தகங்கள் (2721), அவற்றைச் சுற்றிலும் உள்ள கிராம விவசாயிகளால் வளர்க்கப்படும் கால்நடைகளுக்கு மருத்துவ சேவைகள் கால்நடை உதவி மருத்துவர்கள்மூலம் வழங்கப்படுகின்றன.

பெரும்பாலும் ஊராட்சி ஒன்றிய தலைமையிடங்களில் உள்ள, கால்நடை மருத்துவமனைகள் (147)-ல் கால்நடைகளுக்கு கால்நடை பராமரிப்பு உதவி இயக்குநர் தகுதியில் உள்ள மூத்த கால்நடை மருத்துவர்கள்மூலம் இரண்டாம் நிலை சேவைகள் வழங்கப்படுகின்றன.

மாவட்டத் தலைமையிடங்களில் உள்ள, கால்நடை பெருமருத்துவமனைகள் (16) மற்றும் மாநகராட்சிகளில் நாள் முழுவதும் செயல்படும் பன்முக மருத்துவமனைகள் (14)ல் கால்நடைகளுக்கு உதவி இயக்குநர் தகுதியில் உள்ள மூத்த கால்நடை மருத்துவர்கள்மூலம் மூன்றாம் நிலை சேவைகள் வழங்கப்படுகின்றன.

இவை மட்டுமில்லாமல், கால்நடை உதவி மருத்துவர்களை கொண்டு செயல்பட்டுவரும் 56 நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவுகள், விவசாயிகளின் இருப்பிடங்களிலேயே தேவையான கால்நடை மருத்துவ சேவைகளை நேரிடையாக வழங்குகின்றன.

அட்டவணை 3: மாவட்ட வாரியாக கால்நடை நிலையங்களின் விவரம்

வ. எண்	மாவட்டம்	பன்முக மருத்துவமனை	பெரு மருத்துவமனை	மருத்துவமனை	மருந்தகம்	கிளை நிலையம்	நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவு
1	அரியலூர்	0	0	2	44	8	1
2	செங்கல்பட்டு	0	1	1	60	21	0
3	சென்னை	1	0	1	0	0	1

2020 மார்ச் 17]

வ. எண்	மாவட்டம்	பன்முக மருத்துவமனை	பெரு மருத்துவமனை	மருத்துவமனை	மருந்தகம்	கிளை நிலையம்	நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவு
4	கோயம்புத்தூர்	1	1	15	96	21	2
5	கடலூர்	0	1	5	92	56	1
6	தருமபுரி	0	1	3	78	11	2
7	திண்டுக்கல்	1	0	5	105	64	1
8	ஈரோடு	2	0	6	103	25	3
9	கள்ளக்குறிச்சி	0	1	2	55	17	2
10	காஞ்சிபுரம்	0	1	0	45	18	2
11	கன்னியாகுமரி	0	1	2	49	15	2
12	கரூர்	0	1	2	71	13	1
13	கிருஷ்ணகிரி	0	1	2	79	14	1
14	மதுரை	1	0	4	96	53	1
15	நாகப்பட்டினம்	0	2	4	72	20	2
16	நாமக்கல்	0	0	5	105	5	3
17	பெரம்பலூர்	0	0	0	37	4	0
18	புதுக்கோட்டை	0	1	4	101	31	2
19	இராமநாதபுரம்	0	0	4	55	14	0
20	ராணிப்பேட்டை	0	0	2	46	10	1
21	சேலம்	1	0	7	148	9	6

வ. எண்	மாவட்டம்	பன்முக மருத்துவமனை	பெரு மருத்துவமனை	மருத்துவமனை	மருந்தகம்	கிளை நிலையம்	நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவு
22	சிவகங்கை	0	0	2	78	46	0
23	தென்காசி	0	0	3	61	18	0
24	தஞ்சாவூர்	1	1	6	106	28	3
25	நீலகிரி	0	1	2	29	7	3
26	தேனி	0	0	3	53	46	1
27	திருப்பூர்	2	0	6	100	37	1
28	திருவள்ளூர்	0	0	5	88	26	1
29	திருவண்ணாமலை	0	1	5	123	21	3
30	திருவாரூர்	0	1	9	70	32	1
31	தூத்துக்குடி	1	0	2	68	39	1
32	திருச்சிராப்பள்ளி	1	0	8	102	35	2
33	திருநெல்வேலி	1	0	4	52	15	1
34	திருப்பத்தூர்	0	0	2	37	8	2
35	வேலூர்	1	0	4	38	7	1
36	விழுப்புரம்	0	0	5	98	5	2
37	விருதுநகர்	0	0	5	81	26	0
	மொத்தம்	**14**	**16**	**147**	**2721**	**825**	**56**

2020 மார்ச் 17]

அட்டவணை 4: ஆற்றிய பணிகள் விவரம் 2019-20 (இலட்சத்தில்)

இனம்	சிகிச்சை அளிக்கப்பட்டவை	ஆண்மை நீக்கம்	குடற்புழு நீக்கம்
பசுவினம்	109.76	1.03	51.14
எருமையினம்	6.74	0.01	5.07
செம்மறியாட்டினம்	44.05	1.26	89.98
வெள்ளாட்டினம்	92.30	6.46	142.84
நாய் மற்றும் பூனை	19.21	0.08	8.23
கோழியினம்	53.42	0	22.71
மற்றவை	2.66	0.03	1.49
மொத்தம்	**328.14**	**8.87**	**321.46**

இத்துறைக்குத் தேவையான மருந்துகள், உபகரணங்கள் மற்றும் இரசாயனப் பொருட்கள், தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தின் மூலம் கொள்முதல் செய்யப்படுகின்றன.

அட்டவணை 5: மருந்துகளுக்கான நிதி ஒதுக்கீடு விவரம் 2019-20

வ. எண்	திட்டத்தின் பெயர்	ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்)
1	மருந்துகள்	2797.00
2	உபகரணங்கள், ஊசிகள், மற்றும் அறுவை சிகிச்சைக் கருவிகள்	128.79
3	வேதிப் பொருட்கள்	39.72
4	தீவிர சுகாதாரத் திட்டம்	100.00
5	தாது உப்புக் கலவை	365.52
6	மாற்று மருந்துகள்	103.28
7	காப்பு நிதி	147.55
	மொத்தம்	**3,681.86**

[2020 மார்ச் 17

கால்நடை நிலையங்களுக்கு சிகிச்சைக்காக வரும் கால்நடைகளின் எண்ணிக்கை மற்றும் நிலையங்களில் வழங்கும் சிகிச்சைகளுக்கு ஏற்ப பின்வருமாறு மருந்து கொள்முதலுக்கான நிதி ஒதுக்கீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது:

அட்டவணை 6: கால்நடை நிலையங்கள் வாரியாக மருந்துகளுக்கான நிதி ஒதுக்கீடு 2019-20

வ. எண்	நிலையத்தின் வகை	நிதி ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்)
1	கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவு மற்றும் கோழிநோய் கண்டறியும் ஆய்வுக்கூடம்	39.72
2	கால்நடைப் பண்ணைகள்	18.87
3	கால்நடை பன்முக மருத்துவமனைகள்	53.70
4	கால்நடை பெருமருத்துவமனைகள்	42.06
5	கால்நடை மருத்துவமனைகள்	233.11
6	செல்லப் பிராணிகள் சிகிச்சை மையம், அடையார்	1.31
7	கோழிப்பண்ணை, காட்டுப்பாக்கம்	1.08
8	கால்நடை மருந்தகங்கள்	2965.34
9	நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவுகள்	35.95
10	கால்நடை பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்தி அலகுகள்	16.43
11	நாய் வளர்ப்புப் பிரிவு, சைதாப்பேட்டை	0.33
12	கால்நடை கிளை நிலையங்கள்	170.00
13	கோழி விரிவாக்க நிலையங்கள்	0.66
14	பார்வை கிளை நிலையங்கள்	3.30
15	தீவிர சுகாதாரத் திட்டம்	100.00
	மொத்தம்	**3,681.86**

2020 மார்ச் 17]

6. நோய்த் தடுப்புச் சேவைகள்

6.1 நோய் தடுப்பு நிலையங்கள்

6.1.1 கால்நடை நோய்த்தடுப்பு மருந்து நிலையம், இராணிப்பேட்டை (Institute of Veterinary Preventive Medicine - IVPM)

கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையம், முதன்முதலில் 1932-ம் ஆண்டு சென்னையில் "ஊநீர் நிலையம்" என்ற பெயரில் துவக்கப்பட்டது. 1942-ம் ஆண்டு இரண்டாம் உலகப்போரின்போது அவசர நடவடிக்கையாக இந்நிலையம் கோயம்புத்தூர் வேளாண் கல்லூரி வளாகத்திற்கு மாற்றப்பட்டது. பின்னர் 1948-ம் ஆண்டு இந்நிலையம் ராணிப்பேட்டையில், 129.5 ஏக்கர் பரப்பளவுள்ள, தற்போதைய வளாகத்திற்கு மாற்றப்பட்டது. ராணிப்பேட்டை கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையம் பல்வேறு கால்நடை நோய்களுக்கான தடுப்பு மருந்துகள் மற்றும் உயிர் காரணிகள் தயாரிக்கக்கூடிய புகழ்பெற்ற நிலையமாகும்.

அட்டவணை 7: தற்போது உற்பத்தி செய்யப்படும் தடுப்பூசி மருந்துகள்

வ. எண்	இனம்	தயாரிக்கப்படும் தடுப்பு மருந்து
1	நுண்ணுயிரி தடுப்பூசி மருந்துகள்	சப்பை நோய் தடுப்பூசி மருந்து (BQV), தொண்டை அடைப்பான் நோய் (HSV) தடுப்பூசி மருந்து, துள்ளுமாரி நோய் தடுப்பூசி மருந்து (ETV), அடைப்பான் நோய் தடுப்பூசி மருந்து (ASV)
2	நச்சுயிரி தடுப்பூசி மருந்துகள்	இராணிக்கெட் K தடுப்பூசி மருந்து (RDVK), இராணிக்கெட் F தடுப்பூசி மருந்து (RDVF), இராணிக்கெட் லசோட்டா தடுப்பூசி மருந்து (RDV Lasota), வாத்துக் கழிச்சல் நோய் தடுப்பூசி மருந்து (DPV), ஆட்டம்மை நோய் தடுப்பூசி மருந்து (SPV)

[2020 மார்ச் 17

வ. எண்	இனம்	தயாரிக்கப்படும் தடுப்பு மருந்து
3	நோய் நிர்ணயிப்பான்கள்	புருசில்லா அபார்டஸ் பிளைன் ஆன்டிஜன், புருசில்லா அபார்டஸ் கலர்டு ஆன்டிஜன், மில்க் ரிங் டெஸ்டு ஆண்டிஜன் (MRT antigen), சால்மொனெல்லா புல்லோரம் கலர்டு ஆன்டிஜன் (SPCA), கலிபோர்னியா மாஸ்டைடிஸ் ரியேஜண்ட் (CMTR)
4	கரைப்பான்	பாஸ்பேட் பஃப்பர் சலைன் (PBS)

இந்நிலையம், இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் உதவியுடன் நடத்தப்படும் "அகில இந்திய ஒருங்கிணைந்த ஆராய்ச்சித் திட்டத்தில்" கோமாரி நோய்க்கிளர்ச்சி குறித்த புலனாய்வுகளையும், நச்சுயிரி வகைப்படுத்துதலையும், தடுப்பூசி போடப்பட்ட கால்நடைகளை முழுவதுமாக கண்காணித்தலையும் மேற்கொள்கிறது. இந்நிலையம், இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் 2013-ம் ஆண்டுக்கான அகில இந்திய அளவில் சிறந்த செயல்திறனுக்கான "இரண்டாவது பரிசினைப்" பெற்றுள்ளது.

இந்த நிலையமானது, தேசிய பால் அபிவிருத்தி வாரியம் மற்றும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் 'சிறந்த உற்பத்தித் தரத்திற்கு' (GMP) உயர்த்தப்பட்டு வருகிறது.

இந்நிலையத்தில் உள்ள நுண்ணியிரி தடுப்பூசி உற்பத்திக்கூடம் ஏற்கெனவே நல் உற்பத்தித் தரத்திற்கு மேம்படுத்தப்பட்டுள்ளது. இந்த தரம் உயர்த்தப்பட்ட ஆய்வுக்கூடத்திலிருந்து தடுப்பூசி மருந்துகள் உற்பத்தி செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், 'ஆட்டம்மை தடுப்பூசி மருந்து உற்பத்தி ஆய்வுக்கூடம்' மற்றும் 'நோய் கண்டுபிடிப்பான்கள் உற்பத்தி ஆய்வுக்கூடமும் நல் உற்பத்தித் தரத்திற்கு மேம்படுத்தப்படவுள்ளது. மேலும், 'தரக்கட்டுப்பாட்டு ஆய்வுக்கூடத்தை' 'நல்ஆய்வுக்கூட வழிமுறை' தரத்திற்கு உயர்த்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

2020 மார்ச் 17]

அட்டவணை 8: கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையத்தில் உற்பத்தி செய்யப்பட்ட தடுப்பு மருந்துகளின் விவரம் 2019-2020

வ. எண்	தடுப்பு மருந்து	டோஸ்கள்
அ.	நுண்ணியிரி தடுப்பு மருந்துகள் (இலட்சம் டோஸ்களில்)	
1	அடைப்பான்	30.617
2	சப்பை நோய்	5.426
3	துள்ளுமாரி	0.60850
4	தொண்டை அடைப்பான்	2.5915
ஆ.	நச்சுயிரி தடுப்பு மருந்துகள் (இலட்சம் டோஸ்களில்)	
1	ஆட்டம்மை	1.15
2	வாத்துக் கழிச்சல்	194.112
3	கோழிக்கழிச்சல் - F	66.22
4	கோழிக்கழிச்சல் - K	693.872
5	கோழிக்கழிச்சல் - Lasota	71.16
இ.	நோய் கண்டுபிடிப்பான்கள் (மி.லிட்டரில்)	
1	CMT - நோய்க்காரணி	4,03,000
2	கன்று வீச்சு நோய் - நிறமூட்டப்பட்ட நோய்க்காரணி	2190
3	SPC - நோய்க்காரணி	1000
ஈ.	கரைப்பான் (லிட்டரில்)	
1	பாஸ்பேட் பஃப்பர் கரைசல்	1976700

[2020 மார்ச் 17

6.1.2 நோய் கண்காணித்தல், கண்டறிதல் மற்றும் கட்டுப்படுத்துதல்

தடுப்பூசிப் பணிகளை கண்காணிக்கவும், அனைத்து கால்நடை மற்றும் கோழியினங்களுக்கு தடுப்பூசிப் பணிகள் மேற்கொள்ளப்படுவதை உறுதி செய்வதற்காகவும் மாநிலத்தில் ஒரு கால்நடை நோய் நிகழ்வியல் பிரிவு, 28 கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள், இரண்டு கோழியின நோய் கண்டறியும் ஆய்வுக்கூடங்கள் மற்றும் மத்திய தொடர்பு ஆய்வுக்கூடம் ஒன்றும் செயல்பட்டு வருகின்றன.

6.1.3 கால்நடை நோய்ப் புலனாய்வுப் பிரிவுகள் (Animal Disease Intelligence Units - ADIU)

இப்பிரிவுகள் நோய் முன்னெச்சரிக்கைப் பணி, நோய்க் கிளர்ச்சியின்போது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல், விழிப்புணர்வு முகாம் நடத்துதல், தடுப்பு மருந்து விநியோகம் செய்தல், தடுப்பூசிப் பணிகளை மேற்பார்வையிடல், கோமாரி நோய் மற்றும் ஆட்டுக் கொல்லி நோய் ஆகியவற்றில் தடுப்பூசி மற்றும் நோய் எதிர்ப்புத் திறனைக் கண்டறியும் பொருட்டு, ரத்த மாதிரிகளைச் சேகரித்தல் ஆகியவற்றில் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

இவை தடுப்பூசிப் பணிகளின் திறனைக் கண்காணிப்பு செய்தல், தடுப்பூசிப் பணி மேற்கொள்ளப்பட்ட கால்நடைகளில் நோய் எதிர்ப்புத் திறனை மதிப்பீடு செய்தல், ஒட்டுண்ணி நோய், மனிதர்களுக்குப் பரவக்கூடிய கருச்சிதைவு நோய், எலும்புருக்கி நோய், குடல் அழற்சி நோய், பறவைக் காய்ச்சல் நோய், மாட்டின் மூளைச்செல் மிருதுவாகும் நோய் (BSE) போன்ற ஆபத்தான நோய்களின் கண்காணிப்புப் பணிக்கு உதவுதல் ஆகிய பணிகளையும் செய்து வருகின்றன.

இப்பிரிவுகளில், இரத்தம் மற்றும் சிறுநீர் பகுப்பாய்வுக் கருவிகள் மற்றும் உயிர்வேதியியல் பகுப்பாய்வு கருவி போன்ற நவீன கருவிகள் உள்ளன. தடுப்பூசிகள் மற்றும் உயிர்காரணிகள் ஆகியவற்றை பாதுகாத்து வைக்க குளிர்ப்பதன அறைகள் மற்றும் பெட்டிகளும் உள்ளன.

அரியலூர், இராமநாதபுரம், கன்னியாகுமரி, தென்காசி, கள்ளக்குறிச்சி, திருப்பத்தூர், ராணிப்பேட்டை, செங்கல்பட்டு மற்றும் சென்னை நீங்கலாக 28 மாவட்டங்களில் கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. தோற்றுவிக்கப்படாத இந்த

2020 மார்ச் 17]

மாவட்டங்களின் தேவையை முறையே பெரம்பலூர், சிவகங்கை, திருநெல்வேலி, விழுப்புரம், வேலூர் மற்றும் காஞ்சிபுரம் கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள் கவனித்து வருகின்றன.

6.1.4 கோழியின நோய் கண்டறியும் ஆய்வுக் கூடங்கள் (Poultry Disease Diagnostic Laboratory - PDDL)

கோழிப் பண்ணைகள் அதிகம் உள்ள இடங்களில் கோழிப் பண்ணையாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு கோழியின நோய் கண்டறியும் ஆய்வுக்கூடங்கள் நாமக்கல் மாவட்டம் ஆண்டகலூர்கேட் மற்றும் ஈரோட்டில் இயங்கி வருகின்றன. நச்சுயிரி நோய்களான கோழிக்கழிச்சல், பர்சா தொற்றுநோய் (IBD), சுவாச தொற்றுநோய் (IB) மற்றும் பறவையின லூக்கோசிஸ் தொகுப்பு மற்றும் நுண்ணுயிரி நோய்களான சால்மோனெல்லா, இ.கோலி மற்றும் ஒட்டுண்ணி நோய்கள் கோழி எச்சம், இதர மாதிரிகள் பரிசோதித்தல் மற்றும் பிரேதப் பரிசோதனை செய்து கோழியின நோய்களைக் கண்டறிதல் ஆகியவற்றை இவ்வாய்வுக் கூடங்கள் மேற்கொள்கின்றன.

உயிர் பாதுகாப்பு நிலை II (BSL-II) தரத்திலான இந்த ஆய்வுக்கூடங்கள் பறவைக் காய்ச்சலைக் கண்டறிவதற்கான முதற்கட்ட ஆய்வுகளையும் மேற்கொள்கின்றன.

திருப்பூர் மாவட்டம், பல்லடத்தில் தேசிய பால் மேம்பாட்டு வாரியம் (NDDB) மற்றும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் (TANUVAS) இணைந்து நீர் மற்றும் தீவன பரிசோதனை ஆய்வகத்துடன்கூடிய கோழியின நோய்களைக் கண்டறியும் ஆய்வுக்கூடம் அப்பகுதியில் ஏராளமான கறிக்கோழி (பிராய்லர்) விவசாயிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கில் கட்டப்பட்டுள்ளது.

6.1.5 கால்நடை நோய் நிகழ்வியல் பிரிவு (Veterinary Epidemiology Centre - VEC)

கால்நடை நோய் நிகழ்வியல் பிரிவு, சென்னை-35, சைதாப்பேட்டையில் செப்டம்பர் 2017-ல் தோற்றுவிக்கப்பட்டது. இந்தப் பிரிவு கால்நடை மற்றும் கோழியின நோய்களின் கடுங்கண்காணிப்பு மற்றும் நோய் முன்னறிவிப்பு போன்ற பணிகளை மேற்கொள்கிறது. இந்தப் பிரிவுக்கு இணை இயக்குநர் நிலையில் உள்ள முதன்மை நோய் நிகழ்வியல் அலுவலர் தலைமை வகிக்கிறார்.

[2020 மார்ச் 17

ஏப்ரல் 2019 முதல் ஜனவரி 2020 வரை 10 மாவட்டங்களில் கால்நடை நோய் கிளர்ச்சிகள் தொடர்பான ஆய்வுகளும், கோமாரி நோய் தடுப்பூசிப் பணி 16-வது மற்றும் 17-வது சுற்றுக்கான கண்காணிப்பு பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.

6.1.6 மத்திய தொடர்பு ஆய்வுக்கூடம் (Central Referral Laboratory - CRL)

மத்திய தொடர்பு ஆய்வுக் கூடம், மாநிலத்தின் உச்ச நிலை ஆய்வுக்கூடமாகும். இது வேலூர் மாவட்டம், ராணிப்பேட்டை கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலைய வளாகத்தில் செயல்பட்டு வருகிறது.

சர்வதேச கால்நடை சுகாதார அமைப்பினால் (OIE) அங்கீகரிக்கப்பட்ட ஆய்வுக்கூட உத்திகளின்மூலம் நோய்களை உறுதிப்படுத்துவதிலும், நோய்க்கிளர்ச்சியை அறிவிப்பதிலும், நோய்க் கிளர்ச்சியின்போது நோயைக் கட்டுப்படுத்த தொழில்நுட்ப அறிவுரைகளை கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள்/ கோழியின நோய்க் கண்டறியும் ஆய்வுக்கூடங்கள் ஆகியவற்றிற்கு வழங்குவதிலும் முக்கிய பங்கு வகிக்கிறது. மத்திய தொடர்பு ஆய்வுக்கூடம், ராணிப்பேட்டை கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலைய இயக்குநரின் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வருகிறது.

6.2 நோய் தடுப்பு நடவடிக்கைகள்

பல்வேறு நுண்ணுயிரிகளான நச்சுயிரி முதல் பிற உயிரி மற்றும் ஒட்டுண்ணி கிருமிகள், கால்நடைகள் மற்றும் கோழியினங்களைத் தாக்கி விவசாயிகளுக்கு பெரும் பொருளாதார இழப்பினை ஏற்படுத்துகின்றன.

கால்நடை நோய்களை அறவே தடுப்பது மற்றும் ஒழிப்பதன் மூலம் இலாபகரமான கால்நடை உற்பத்தியை மேம்படுத்துவதுடன் நமது கால்நடைகள் மற்றும் கால்நடை பொருட்கள் உலக அளவில் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு ஒரு அடிப்படையான காரணியாக அமையும்.

கால்நடை உற்பத்தித் தொழிலுக்கு கால்நடைகளின் உடல்நலனே முதுகெலும்பு போன்றது. நுண்ணுயிரி மற்றும் ஒட்டுண்ணி தாக்குதல்கள் கால்நடைகளில் பெரும் பாதிப்பையும், இறப்பு மற்றும்

2020 மார்ச் 17]

உற்பத்தி இழப்பையும் ஏற்படுத்துகின்றன.

நோய் தடுப்பு நடவடிக்கைகள் நமது கால்நடைகள் மற்றும் கால்நடைப் பொருட்கள் உலகச் சந்தையில் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கும் உதவி செய்கின்றன. முறையான நோய் தடுப்பு நடவடிக்கைகள் வாயிலாக நோய்கள் கட்டுப்படுத்தப்பட்டு அறவே ஒழிக்கப்படுகின்றன.

கால்நடை நலம் தொடர்பான உலக அமைப்பு (OIE), கால்நடைத் துறையின் சில பிரச்சினைகளை சுட்டிக்காட்டியுள்ளது. முன்னுரிமையை நோக்கி நகர்த்தும் பொருளாதாரத் தரவுகளைப் பயன்படுத்தும் விஷயங்கள், சரியான திட்டமிடல், விலங்குகளின் சுகாதார நிலைமை மற்றும் செயல்திறன் கண்காணிப்பு, தொற்று நோய்களை ஒழித்தல், நுண்ணுயிர்க்கொல்லிக்கான எதிர்ப்பைக் கட்டுப்படுத்துதல், உலகளாவிய ஒரே சுகாதார முயற்சி மற்றும் கால்நடைகளில் நுண்ணுயிர் எதிர்ப்பு காரணிகளின் பயன்பாடு, நிலையான ஆய்வக உயிர் பாதுகாப்பு மற்றும் உயிர் பாதுகாப்பு நடைமுறைகள், பொறுப்புணர்வுடன்கூடிய கால்நடை ஆராய்ச்சி போன்றவை உடனடி கவனம் தேவைப்படும் சமகால பிரச்சினைகள் ஆகும்.

மத்திய மற்றும் மாநில அரசுகள் அவ்வப்போது அறிவிக்கும் நெறிமுறைகளைப் பின்பற்றி நமது உற்பத்திப் பொருட்கள் உலகச் சந்தையில் ஏற்றுக்கொள்ளச் செய்வதற்காக இத்துறை முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இதன்மூலம் விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்கும் இலக்கும் எட்டப்படுகிறது.

அட்டவணை 9: தடுப்பூசிப் பணிகள் மேற்கொள்ளப்பட்ட விவரம் 2019-2020

நோய்	தடுப்பூசி போடப்பட்ட கால்நடை வகை	தடுப்பூசி போடப்பட்ட கால்நடைகள் எண்ணிக்கை (இலட்சத்தில்)
அடைப்பான்	மாட்டினம் மற்றும் ஆட்டினம்	27.34
சப்பை நோய்	மாட்டினம்	4.20
துள்ளுமாரி	செம்மறியாடு	0.60
கால் மற்றும் வாய் கோமாரி	மாட்டினம் மற்றும் ஆட்டினம்	93.59

[2020 மார்ச் 17

நோய்	தடுப்பூசி போடப்பட்ட கால்நடை வகை	தடுப்பூசி போடப்பட்ட கால்நடைகள் எண்ணிக்கை (இலட்சத்தில்)
கோழி அம்மை	கோழியினம்	0.02
தொண்டை அடைப்பான்	மாட்டினம்	1.46
ஆட்டுக்கொல்லி	வெள்ளாடு	0.94
கோழிக்கழிச்சல்	கோழியினம்	238.09
வெறிநோய்	செல்லப்பிராணிகள்	0.498
ஆட்டம்மை	செம்மறியாடு	0.39

மேற்கூறிய தடுப்பூசிப் பணிகள் அனைத்தும் கால்நடை வளர்ப்போரின் இருப்பிடங்களுக்கு அருகிலேயே கால்நடை நிலையங்கள் மூலமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆண்டுதோறும், முந்தைய 5 ஆண்டுகளில் ஏற்பட்ட நோய்த் தாக்கத்தின் அடிப்படையில் நோய் முன்னறிவிப்பு செய்யப்பட்டு, நோய்த் தாக்கம் ஏற்பட வாய்ப்புள்ள காலத்திற்கு முன்பாகவே தடுப்பூசிகள் போடப்பட்டு வருகின்றன.

ஆட்டுக்கொல்லி, நீல நாக்கு ஆகிய நோய்களுக்கான தடுப்பூசிகள் மத்திய அரசின் பல்வேறு திட்டங்கள்மூலம் கொள்முதல் செய்யப்படுகின்றன. பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த நோய்களான அடைப்பான், சப்பை நோய், தொண்டை அடைப்பான் மற்றும் ஆட்டம்மை நோய்களுக்கான தடுப்பூசிகள் ராணிப்பேட்டை, கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையத்தில் உற்பத்தி செய்யப்படுகின்றன.

இதற்கான நிதி ஆதாரம், கால்நடைகளின் நோய்களை கட்டுப்படுத்த மாநிலங்களுக்கு நிதி உதவி வழங்கும் மத்திய அரசு திட்டத்தின் (ASCAD) மூலம் பெறப்பட்டு தடுப்பூசிப் பணிகள் அனைத்தும் இலவசமாக மேற்கொள்ளப்படுகின்றன.

மேற்கூறியவை அல்லாது கோழிக் கழிச்சல், கோழி அம்மை, மற்றும் வாத்துக் கழிச்சல் நோய்களுக்கான தடுப்பூசிகளும் ராணிப்பேட்டை, கால்நடை நோய்த்தடுப்பு மருந்து நிலையத்தில் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஆட்டுக்கொல்லி நோய்க்கான தடுப்பூசி மத்திய அரசின் ஆட்டுக்கொல்லி நோய் தீவிர தடுப்பு திட்டத்தில் பெறப்படுகிறது.

2020 மார்ச் 17]

கோமாரி நோய் என்பது இரட்டைக் குளம்பின கால்நடைகளைத் தாக்கி, கொப்புளங்களை ஏற்படுத்தும் நச்சுயிரி தொற்று நோய் ஆகும். இந்நோய் அதிக அளவில் பொருளாதார இழப்பை ஏற்படுத்துகிறது. இந்நோயைக் கட்டுப்படுத்துவதற்காக, மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதி பங்களிப்புடன் தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் கோமாரி நோய் தடுப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதுவரை, மாநிலத்தில் 17 சுற்றுகள் கோமாரி நோய் தடுப்பூசிப் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. அக்டோபர் 2019-ல் நடைபெற்ற 17-வது சுற்று தடுப்பூசிப் பணியில் 93.59 இலட்சம் பசு மற்றும் எருமையினங்களுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

6.2.1 தேசிய கால்நடை நோய் கட்டுப்பாட்டு திட்டம் (NADCP):

2019-20 ஆம் ஆண்டில், இந்திய அரசு "கால் மற்றும் வாய் நோய் மற்றும் கன்று வீச்சு நோய் / கருச்சிதைவு நோய்க்கான தேசிய நோய் கட்டுப்பாட்டு திட்டம்" (NADCP) என்ற புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன்படி, மத்திய அரசு மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களுக்கு 100% நிதி உதவி வழங்கும். திட்டத்தின் நோக்கம் தடுப்பூசி மூலம் 2025ஆம் ஆண்டுக்குள் கால் மற்றும் வாய் நோயை கட்டுப்படுத்தி 2030-க்குள் அதனை ஒழிப்பதாகும்.

"கால் மற்றும் வாய் நோய் மற்றும் கன்று வீச்சு நோய் / கருச்சிதைவு நோய்க்கான தேசிய கால்நடை நோய் கட்டுப்பாட்டு திட்டம்" (NADCP) "என்ற புதிய திட்டம் மாண்புமிகு இந்திய பிரதமர் அவர்களால் 11.09.2019 அன்று மதுராவில் தொடங்கப்பட்டது. இருப்பினும், ஜனவரி 2020 முதல் அனைத்து மாநிலங்களிலும் இந்திய அரசாங்கத்தால் NADCP திட்டத்தினை செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

மத்திய நிதியுதவி பெற்ற 'கால்நடை சுகாதாரம் மற்றும் நோய் கட்டுப்பாடு (LHDC)' திட்டங்களின்கீழ் கால் மற்றும் வாய் நோய் தடுப்பூசி (FMDCP) மற்றும் கன்று வீச்சு நோய் / கருச்சிதைவு நோய் தடுப்பூசி (Brucellosis CP) ஆகியவற்றின் தொடர்ச்சியான நடவடிக்கைகள் மேலே குறிப்பிட்டபடி 100% மத்திய உதவியுடன் இனி கால்நடை நோய் கட்டுப்பாட்டு திட்டத்தின் (NADCP)-ன்கீழ் மேற்கொள்ளப்படும்.

பசுக்கள், எருமைகள், செம்மறியாடுகள் மற்றும் வெள்ளாடுகளைத் தாக்கும் கருச்சிதைவு நோய் பொருளாதார ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த, விலங்குகள் வழி மனிதர்களுக்குப் பரவும் நோயாகும்.

[2020 மார்ச் 17

தடுப்பூசி போடுவதன் வாயிலாக மட்டுமே இந்நோயைக் கட்டுப்படுத்த முடியும். கால்நடைகளில் கருச்சிதைவு நோய் இருக்கிறதா என்பதை ஆய்வு செய்வதற்காக துறையானது, 2019-20-ஆம் ஆண்டில் கண்காணிப்புப் பணியை மேற்கொள்ளவும், கண்காணிப்புப் பணியின் முடிவுகளுக்கு ஏற்ப தடுப்பூசிப் பணியை மேற்கொள்ளவும் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

6.2.2 கால்நடை நோய் கண்காணிப்பு மற்றும் கடுங்கண்காணிப்பு குறித்த அகில இந்திய ஒருங்கிணைந்த ஆராய்ச்சித் திட்டம் – தேசிய நோய் நிகழ்வியல் மற்றும் நோய் தகவல் நிறுவனம் (நிவேதி)

பெங்களூருவின் இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சில் - நிவேதி, பன்னிரெண்டாம் திட்ட நிதி செலவின குழு (Expenditure Finance Committee- EFC) இல் கால்நடை தொற்றுநோயியல் மையத்தின்கீழ் ஒரு புதிய அட்மாஸ்-நிவேதி கூட்டு அலகு தமிழ்நாட்டிற்காக அங்கீகரிக்கப்பட்டது.

இது இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சில்-நிவேதி, பெங்களூரு மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை இடையே கையெழுத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் அக்டோபர் 2016 முதல் செயல்படத் தொடங்கியது. துறைசார் ஊழியர்கள் மற்றும் உள்கட்டமைப்பு உள்ளிட்ட வசதிகளைப் பயன்படுத்துவதன்மூலம் நமது மாநிலத்தில் விலங்கு நோய் கடுங்கண்காணிப்பு குறித்த அகில இந்திய ஒருங்கிணைந்த ஆராய்ச்சி திட்டத்தை செயல்படுத்துவதற்காக இத்திட்டம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் விவசாயிகளின் நலனுக்காக கால்நடை மற்றும் கோழி நோய் கடுங்கண்காணிப்பு மேற்கொள்ளப்படுகிறது.

இத்திட்டம் 100% மத்திய நிதியைக் கொண்டு செயல்படுத்தப்படுகிறது. நோய் கிளர்ச்சி மற்றும் கண்காணிப்புத் தரவுகள் சேகரிக்கப்பட்டு தொற்றுநோயியல் பகுப்பாய்விற்காக (ICAR-NIVEDI) உடன் பகிரப்படும்.

7. இனப்பெருக்கச் சேவைகள்

இத்துறையானது, அனைத்து கள நிலையங்கள் மூலமாக கால்நடைகளுக்கு இனப்பெருக்க சேவைகளை வழங்கி வருகிறது. பசுக்கள் மற்றும் எருமைகளுக்கு ஒரு கருவூட்டலுக்கு அரசு நிர்ணயித்த ரூ.10 என்ற கட்டணத்தில் செயற்கைமுறை கருவூட்டல் சேவை வழங்கப்பட்டு வருகிறது. 2019-20 ஆம் ஆண்டில் மொத்தமாக 48.88 இலட்சம் செயற்கைமுறை கருவூட்டல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2020 மார்ச் 17]

ஈச்சங்கோட்டை, ஓசூர் மற்றும் உதகமண்டலம் ஆகிய மூன்று பண்ணைகளில் செயல்பட்டு வரும் உறைவிந்து உற்பத்தி நிலையங்களில், செயற்கைமுறை கருவூட்டலுக்குத் தேவையான உறைவிந்துக் குச்சிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

தரமான உறைவிந்துக் குச்சிகளை உற்பத்தி செய்வதற்கு, இந்திய அரசினால் உறைவிந்து உற்பத்தி நிலையங்களுக்கென நிர்ணயிக்கப்பட்டுள்ள தர வழிகாட்டு நெறிமுறைகளின் அடிப்படையில் இந்நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்நிலையங்களில் ஜெர்சி, ஹோல்ஸ்டீன் பிரிசியன், ஜெர்சி கலப்பினம், ஹோல்ஸ்டீன் பிரிசியன் கலப்பினம், சிவப்பு சிந்தி, காங்கேயம், உம்பளாச்சேரி, பர்கூர், புலிக்குளம் மற்றும் முர்ரா ஆகிய இனங்களின் பொலிகாளைகள் பராமரிக்கப்படுகின்றன.

கால்நடை பராமரிப்புத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் உறைவிந்து உற்பத்தி நிலையங்களில் 2019-20-ஆம் ஆண்டில் 18.88 இலட்சம் அயலின, 32.28 இலட்சம் கலப்பின, 3.95 இலட்சம் உள்நாட்டின மற்றும் 2.10 இலட்சம் எருமையின உறைவிந்துக் குச்சிகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

அட்டவணை 10: உறைவிந்துக் குச்சிகள் உற்பத்தி 2019-20

வ. எண்	உறைவிந்து உற்பத்தி நிலையம்	இனம்	உறைவிந்துக் குச்சிகள் உற்பத்தி (இலட்சத்தில்)
1	அயலின கால்நடை பெருக்கப் பண்ணை, ஈச்சங்கோட்டை	ஜெர்சி, ஜெர்சி கலப்பினம், உம்பளாச்சேரி, முர்ரா	34.62
2	மாவட்ட கால்நடைப் பண்ணை, ஓசூர்	ஜெர்சி கலப்பினம், சிந்தி, காங்கேயம், புலிக்குளம், பர்கூர்	9.46
3	மாவட்ட கால்நடைப் பண்ணை, உதகமண்டலம்	ஜெர்சி, ஜெர்சி கலப்பினம், பிரிசியன், பிரிசியன் கலப்பினம்	13.13
	மொத்தம்		**57.21**

[2020 மார்ச் 17

இந்த நிலையங்களில் உற்பத்தி செய்யப்படும் உறைவிந்துக் குச்சிகள் சென்னை நீங்கலாக, இதர மாவட்டங்களில் துணை இயக்குநரின் தலைமையில் செயல்படும் கால்நடை பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்தி நிலையங்கள் வாயிலாக கள இனவிருத்தி நிலையங்களைச் சென்றடைகின்றன. இந்த நிலையங்கள் உறைவிந்துக் குச்சிகளை விநியோகிப்பதுடன் திரவ நைட்ரஜன் உள்ளிட்ட இதர இனப்பெருக்க உள்ளீடுகளையும் வழங்குகின்றன.

அட்டவணை 11: உறைவிந்து குச்சிகள் மாவட்ட வாரியாக விநியோக விவரம்

உறைவிந்து குச்சிகள் விநியோகம்								
வ. எண்	மாவட்டம்	செயற்கை முறை கருவூட்டலுக்கு உறைவிந்து குச்சிகள் உபயோக விவரம்						
1	அரியலூர்	ஜெர்சி கலப்பினம், பிரிசியன் கலப்பினம் மற்றும் சிவப்பு சிந்தி உறைவிந்து குச்சிகள் அனைத்து மாவட்டங்களிலும் உபயோகப்படுத்தப்படும்						முர்ரா இன உறைவிந்து குச்சிகள் அனைத்து மாவட்டங்களிலும் உபயோகப்படுத்தப்படும்
2	சென்னை							
3	கோயம்புத்தூர்		எச்எப்		காங்கேயம்			
4	கடலூர்							
5	தருமபுரி		எச்எப்					
6	திண்டுக்கல்		எச்எப்		காங்கேயம்			
7	ஈரோடு		எச்எப்		காங்கேயம்	பர்கூர்		
8	காஞ்சிபுரம்							
9	கன்னியாகுமரி		எச்எப்					
10	கரூர்		எச்எப்		காங்கேயம்			
11	கிருஷ்ணகிரி		எச்எப்					
12	மதுரை						புலிக் குளம்	
13	நாகப்பட்டினம்			உம்பளாச் சேரி				
14	நாமக்கல்				காங்கேயம்			
15	பெரம்பலூர்							
16	புதுக்கோட்டை							
17	இராமநாதபுரம்							
18	சேலம்				காங்கேயம்			

2020 மார்ச் 17]

உறைவிந்து குச்சிகள் விநியோகம்								
வ. எண்	மாவட்டம்	செயற்கை முறை கருவூட்டலுக்கு உறைவிந்து குச்சிகள் உபயோக விவரம்						
19	சிவகங்கை	ஜெர்சி கலப்பினம், பிரிசியன் கலப்பினம் மற்றும் சிவப்பு சிந்தி உறைவிந்து குச்சிகள் அனைத்து மாவட்டங்களிலும் உபயோகப்படுத்தப்படும்					புலிக் குளம்	முர்ரா இன உறைவிந்து குச்சிகள் அனைத்து மாவட்டங்களிலும் உபயோகப்படுத்தப்படும்
20	தஞ்சாவூர்			உம்பளாச் சேரி				
21	தேனி							
22	நீலகிரி		எச்எப்					
23	திருப்பூர்		எச்எப்		காங்கேயம்			
24	திருவள்ளூர்							
25	திருவண்ணாமலை							
26	திருவாரூர்			உம்பளாச் சேரி				
27	தூத்துக்குடி							
28	திருச்சிராப்பள்ளி							
29	திருநெல்வேலி							
30	வேலூர்							
31	விழுப்புரம்							
32	விருதுநகர்						புலிக் குளம்	

அட்டவணை 12: மாவட்ட வாரியான செயற்கை முறை கருவூட்டல் இலக்கு மற்றும் சாதனை

வ. எண்	மாவட்டம்	2019-20 ஆண்டு இலக்கு	சாதனை (29.02.2020 வரை)
1	அரியலூர்	2600	1815
2	சென்னை	273500	107509
3	கோயம்புத்தூர்	215100	152129
4	கடலூர்	313300	215996
5	தர்மபுரி	340600	243020
6	திண்டுக்கல்	340000	293601

வ. எண்	மாவட்டம்	2019-20 ஆண்டு இலக்கு	சாதனை (29.02.2020 வரை)
7	ஈரோடு	234500	147479
8	காஞ்சிபுரம்	124600	105806
9	கன்னியாகுமரி	156400	131765
10	கரூர்	211500	176126
11	கிருஷ்ணகிரி	254400	132995
12	மதுரை	128300	104030
13	நாகப்பட்டினம்	223100	197846
14	நாமக்கல்	147300	130629
15	பெரம்பலூர்	119000	111803
16	புதுக்கோட்டை	183500	120797
17	இராமநாதபுரம்	52000	43703
18	சேலம்	399400	247292
19	சிவகங்கை	77300	56902
20	தஞ்சாவூர்	322300	215112
21	நீலகிரி	26600	15993
22	தேனி	274800	196998
23	திருச்சிராப்பள்ளி	102400	72862
24	திருநெல்வேலி	285300	230703
25	திருப்பூர்	298100	156475
26	திருவள்ளூர்	132400	134263
27	திருவண்ணாமலை	308900	249717
28	திருவாரூர்	163600	107022
29	தூத்துக்குடி	90700	68638
30	வேலூர்	369500	268456

2020 மார்ச் 17]

வ. எண்	மாவட்டம்	2019-20 ஆண்டு இலக்கு	சாதனை (29.02.2020 வரை)
31	விழுப்புரம்	447900	333748
32	விருதுநகர்	175500	117231
	மொத்தம்	**6794400**	**4888461**

7.1 கால்நடைகளில் உள்நாட்டினங்களைப் பாதுகாத்தல்

தமிழ்நாட்டில் பலதரப்பட்ட தாவரங்களும் விலங்குகளும் உள்ளன. அவை உள்ளூர் வேளாண் அமைப்பு, காலநிலை மற்றும் மக்களின் சமூக பொருளாதார தேவைகளுக்கு ஏற்ப பல்லாண்டு காலமாக வளர்ச்சி பெற்று வந்துள்ளன. தமிழ்நாட்டில் பின்வரும் உள்நாட்டின கால்நடைகள் உள்ளன. அவை (அ) காங்கேயம், (ஆ) உம்பளாச்சேரி, (இ) ஆலம்பாடி, (ஈ) புலிக்குளம், (உ) பர்கூர் (ஊ) தோடா எருமைகள். இவை பலநூற்றாண்டுகளாக இழுவைத் திறன் வேலைகளுக்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

மக்கள்தொகை பெருக்கத்துடன் வேளாண் விளைநிலங்கள் குறைவதனால், கால்நடைகளுக்கான தீவன வளம் குறைகிறது. வேளாண்மை இயந்திரமயமாதல் மற்றும் போக்குவரத்து பயன்பாட்டிற்கு பல்வேறு ஊர்தி வகைகள் வழக்கத்தில் உள்ளதால் நாட்டின கால்நடைகளின் தேவை குறைந்து, அவற்றின் எண்ணிக்கையும் குறைந்துள்ளது. இது வழக்கமான முறைகளில் வளர்க்கப்படும் நாட்டின கால்நடைகளை கடுமையாக பாதித்துள்ளது.

விவசாயிகளின் பொருளாதார விருப்பங்களுடன், அதிக எண்ணிக்கையிலான மக்களுக்கு உணவு அளிக்க வேண்டிய தேவையானது கலப்பின கால்நடைகளை உற்பத்தி செய்ய வேண்டிய அவசியத்தை ஏற்படுத்தியுள்ளது. இது மரபுத்திறன் விரைவாக கலப்பதற்கும் உள்நாட்டின மரபுத்திறன் குறைவதற்கும் வழிவகுக்கும். இவற்றைத் தடுக்கும் பொருட்டு உள்நாட்டு மரபினங்களைப் பாதுகாப்பதும், தரம் உயர்த்துவதும் இன்றியமையாததாகிறது.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் மற்றும் கர்னாலில் அமைந்துள்ள தேசிய கால்நடை மரபின மையம் ஆகியவற்றுடன் இணைந்து அனைத்து கால்நடைகளின் (பசு, எருமை, செம்மறி ஆடு, வெள்ளாடு மற்றும் நாய்) மரபணு மற்றும் மூலக்கூறு தன்மையை அறியும் பணியை துறை மேற்கொண்டு வருகிறது.

[2020 மார்ச் 17

உள்நாட்டினங்களைப் பாதுகாக்கும் முயற்சியின் ஒரு கட்டமாக, அனைத்து துறைப் பண்ணைகளிலும் மற்றும் அவற்றின் பாரம்பரிய வாழ்விடங்களிலும் நாட்டினங்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

மேலும், சிறந்த மரபுத் தன்மைகள் கொண்ட உள்நாட்டினங்களிலிருந்து உறைவிந்துக் குச்சிகள் உற்பத்தி செய்யப்பட்டு, பாரம்பரிய வாழ்விடங்களில் உள்ள நாட்டினங்களுக்கு செயற்கைமுறை கருவூட்டல் மேற்கொள்ளப்படுகிறது.

பண்பாக்கம் செய்யப்பட்டுள்ள அனைத்து நாட்டினங்களின் மரபணுக்கள், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தில் சேமிக்கப்பட்டு பராமரிக்கப்படுகின்றன.

உள்நாட்டினங்களைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல் திட்டத்தின்மூலம் பர்கூர், காங்கேயம் மற்றும் புலிக்குளம் இனங்களுக்கான ஆராய்ச்சி மையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

7.2 இன மேம்பாட்டிற்காக நவீன மரபுசார் உத்திகளை பயன்படுத்துதல்.

7.2.1 பாலினம் பிரிக்கப்பட்ட விந்தணு தொழில்நுட்பம்

கால்நடை பராமரிப்புத் துறை "பாலினம் பிரிக்கப்பட்ட விந்து" என்ற நவீன தொழில்நுட்பத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த தொழில்நுட்பத்தின்மூலம் காளைக் கன்றுகள் பிறப்பதற்கு காரணமான விந்து அணுக்கள் நீக்கப்பட்டு, கிடேரி கன்றுகள் மட்டுமே பிறக்க வழிவகுக்கப்படும். இந்த தொழில்நுட்பத்தை, விவசாயிகளின் கால்நடைகளில், செயற்கை முறை கருவூட்டலில் பயன்படுத்துவதற்காக 2,000 எண்ணிக்கை பாலினம் பிரிக்கப்பட்ட உறைவிந்து குச்சிகளை முன்னோடித் திட்டமாக உபயோகப்படுத்தி வருகிறது.

7.2.2. இறக்குமதி செய்யப்பட்ட உறைந்த கருமுட்டைகளை பயன்படுத்துதல்

உயர் மரபுத்தரம் வாய்ந்த கால்நடைகளை உற்பத்திசெய்யும் பொருட்டு, செயல்திறன் நிரூபிக்கப்பட்ட பசு மற்றும் திறன் சோதிக்கப்பட்ட காளைகள்மூலம் உருவாக்கப்பட்ட, இறக்குமதி செய்யப்பட்ட கருமுட்டைகள் இத்துறையின் பண்ணைகளில்

2020 மார்ச் 17]

உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன. இதன்மூலம் பெறப்படும் காளைக்கன்றுகள் பொலிகாளை உற்பத்தி திட்டத்திற்கு உபயோகப் படுத்தப்படும்.

7.2.3 ஆய்வக கருத்தரித்தல் முறை தொழில்நுட்பம் (Invitro fertilizaton)

தற்போது மாநிலத்தில் உள்ள கால்நடைகளின் மரபணுக்களைத் தரம் உயர்த்துவதற்காக ஆய்வகக் கருத்தரித்தல் முறை தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்த கால்நடை பராமரிப்புத் துறை முயற்சி மேற்கொண்டு வருகிறது.

7.2.4 மாட்டின இனப்பெருக்க சட்டம்

மாட்டின இனப்பெருக்க நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதற்காக காளைகளை விந்து உற்பத்திக்கு பயன்படுத்துதல், உறைவிந்து உற்பத்தி, சேமிப்பு, விற்பனை மற்றும் விநியோகம், மாட்டின உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்காக மாநில இனப்பெருக்கக் கொள்கையின் அடிப்படையில் செயற்கைமுறை கருவூட்டல் சேவைகள் வழங்குதல் ஆகியவற்றை நெறிப்படுத்த மாட்டின இனப்பெருக்க சட்டம் வழிவகுக்கிறது. இச்சட்டம் மாநில அரசிதழில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இச்சட்டத்தின் முக்கிய அம்சங்கள்

- உறைவிந்து உற்பத்திக்கான பொலிகாளைகளை பதிவு செய்தல், சான்றளித்தல் மற்றும் கண்காணித்தல்
- உறைவிந்து உற்பத்தி நிலையங்களை பதிவு செய்தல் மற்றும் கண்காணித்தல்
- செயற்கைமுறை கருவூட்டல் சேவை வழங்குதலை பதிவு செய்தல் மற்றும் அவர்களின் செயல்பாடுகளை கண்காணித்தல்
- செயற்கைமுறை கருவூட்டாளர்களை பதிவு செய்தல் மற்றும் அவர்களின் செயல்பாடுகளை கண்காணித்தல்
- செயற்கைமுறை கருவூட்டல் பயிற்சி நிலையங்களை அங்கீகரித்தல் மற்றும் அவற்றை கண்காணித்தல்

[2020 மார்ச் 17

- உறைவிந்து விற்பனையினை முறைப்படுத்துதல்
- இயற்கைமுறை மாட்டின இனப்பெருக்கத்தை நெறிப்படுத்துதல்.

8. கால்நடை அபிவிருத்தி

கறவை மாடுகளின் எண்ணிக்கையை உயர்த்துதல், இனவிருத்திக்கு உகந்த கால்நடைகளை உயர்மரபுத் திறன் கொண்டவையாக மாற்றிடும்பொருட்டு கருமாற்றத் தொழில்நுட்பத்தைப் பின்பற்றுதல், துறையின் உட்கட்டமைப்பு மற்றும் நோய் கண்டறிவதற்கான கட்டமைப்பை மேம்படுத்துதல், இடர் மேலாண்மை மற்றும் துயர் துடைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், பசுந்தீவன உற்பத்தி, கால்நடை மற்றும் கோழியினங்களில் உள்நாட்டினங்களைப் பாதுக்காத்தல், விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ளுதல், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் மற்றும் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் ஆகியவற்றுடன் ஒருங்கிணைந்து செயலாற்றுதல் வாயிலாக மாநிலத்தில் உள்ள கால்நடைகளின் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை மேம்படுத்த கால்நடை பராமரிப்புத் துறை தொடர்ந்து பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

உயர்மரபுத் திறன் கொண்ட கால்நடைகளின் தேவையைப் பூர்த்தி செய்யும்பொருட்டு துறையில் 13 கால்நடை பண்ணைகள் இயங்கி வருகின்றன. எட்டு கால்நடைப் பண்ணைகள், மூன்று ஆட்டுப் பண்ணைகள், ஒரு கோழிப் பண்ணை மற்றும் ஒரு பசுந்தீவன விதை உற்பத்திப் பண்ணை ஆகியன இவற்றுள் அடங்கும். இப்பண்ணைகள் கால்நடை பராமரிப்பு தொடர்பான பல்வேறு தொழில்நுட்ப உத்திகளை கால்நடை வளர்ப்போர் எளிதில் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் மாதிரி அலகுகளாக செயல்பட்டு வருகின்றன.

8.1 மாட்டின அபிவிருத்தி

மாநிலத்தில் 20-வது கால்நடை கணக்கெடுப்பின்படி, சுமார் 95.19 இலட்சம் பசுவினங்கள் மற்றும் 5.19 இலட்சம் எருமையினங்கள் உள்ளன. இவற்றுள் 81.15 சதவீதம் கலப்பினம் மற்றும் அயலினமாகவும் 18.85 சதவீதம் உள்நாட்டினங்களாகவும் உள்ளன.

உள்நாட்டினங்களை அவற்றின் பாரம்பரிய வாழ்விடங்களிலேயே வளர்க்கவும், கலப்பினங்களை சமவெளிப் பகுதிகளிலும்,

2020 மார்ச் 17]

அயலினங்களை மலைப் பகுதிகளிலும் விவசாயிகள் வளர்க்க, மாநிலத்தின் கால்நடைக் கொள்கை ஊக்குவிக்கிறது. உள்நாட்டு பசுவினங்களை உள்நாட்டு காளைகளின் உறைவிந்துமூலம் இனவிருத்தி செய்வது மற்றும் வரையறுக்கப்படாத பசுவினங்களை கலப்பின மற்றும் அயலின காளைகளின் உறைவிந்தின்மூலம் இனவிருத்தி செய்வது ஆகியவையும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அட்டவணை 13: துறைப் பண்ணைகளில் பராமரிக்கப்படும் மாட்டினங்கள்

வ. எண்	பண்ணையின் பெயர்	கால்நடை வகை	இனங்கள்
1	அயலின கால்நடை பெருக்கப் பண்ணை, ஈச்சங்கோட்டை (தஞ்சாவூர் மாவட்டம்)	பசுவினம்	ஜெர்சி, ஜெர்சி கலப்பினம், உம்பளாச்சேரி
		எருமையினம்	முர்ரா
2	மாவட்ட கால்நடைப் பண்ணை, ஓசூர் (கிருஷ்ணகிரி மாவட்டம்)	பசுவினம்	ஜெர்சி கலப்பினம், ஹோல்ஸ்டீன் பிரிசியன் கலப்பினம், சிவப்பு சிந்தி, காங்கேயம், பர்கூர், புலிக்குளம்
3	மாவட்ட கால்நடைப் பண்ணை, அபிசேகப்பட்டி (திருநெல்வேலி மாவட்டம்)	பசுவினம்	ஜெர்சி கலப்பினம், சாஹிவால்
4	மாவட்ட கால்நடைப் பண்ணை, உதகமண்டலம் (நீலகிரி மாவட்டம்)	பசுவினம்	ஜெர்சி, ஜெர்சி கலப்பினம், ஹோல்ஸ்டீன் பிரிசியன், ஹோல்ஸ்டீன் பிரிசியன் கலப்பினம்

[2020 மார்ச் 17

வ. எண்	பண்ணையின் பெயர்	கால்நடை வகை	இனங்கள்
5	மாவட்ட கால்நடைப் பண்ணை, புதுக்கோட்டை (புதுக்கோட்டை மாவட்டம்)	பசுவினம்	ஜெர்சி கலப்பினம், பிரிசியன் கலப்பினம்
6	மாவட்ட கால்நடைப் பண்ணை, நடுவூர் (தஞ்சாவூர் மாவட்டம்)	பசுவினம்	ஜெர்சி, ஜெர்சி கலப்பினம், ஹோல்ஸ்டீன் பிரிசியன் கலப்பினம்
		எருமையினம்	முர்ரா
7	மாவட்ட கால்நடைப் பண்ணை,செட்டிநாடு (சிவகங்கை மாவட்டம்)	பசுவினம்	ஜெர்சி கலப்பினம், ஹோல்ஸ்டீன் பிரிசியன் கலப்பினம், தார்பார்க்கர், சாஹிவால்
8	கால்நடைப் பண்ணை, கொருக்கை (திருவாரூர் மாவட்டம்)	பசுவினம்	உம்பளாச்சேரி

கால்நடை பராமரிப்புத் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கிவரும் பண்ணைகளில் 2019-20ஆம் ஆண்டு 442 கன்றுகள் பிறந்துள்ளன, 20 கன்றுகள் இனவிருத்திக்காக விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன. 2019-20 ஆம் ஆண்டு பண்ணைகளில் 3.69 இலட்சம் லிட்டர் பால் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

ஆறு பசுக்களையும், கால்நடை கொட்டகை மற்றும் தீவன சாகுபடி போன்ற பிற உள்ளீடுகளையும் கொண்ட சிறு பால் அலகுகள் நிறுவுவதை இத்துறை தீவிரமாக ஊக்குவித்து வருகிறது. இந்த ‘‘மாதிரி சிறு பால் பண்ணைகள்’’ ஆண்டு முழுவதும் தொடர்ச்சியான வருமானத்தை வழங்குகிறது. ஒவ்வொரு ஆண்டும் இந்த சிறு பால் பண்ணைகளின் எண்ணிக்கையும் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. இது வணிக நோக்கிலான பால் உற்பத்திக்கான ஒரு முயற்சியாகும்.

2020 மார்ச் 17]

எதிர்காலத்தில் துறையின் உறைவிந்துக் குச்சிகளின் தேவையை பூர்த்தி செய்யும் நோக்கத்தில் உயர் மரபுத் தன்மை கொண்ட பொலிகாளைகளை உருவாக்கும் நோக்கத்தில் ஓசூர், மாவட்ட கால்நடை பண்ணையினை தலைமையிடமாகக் கொண்டு 12 மாவட்டங்களில் விவசாயிகளால் வளர்க்கப்படும் உயர் உற்பத்தித் திறனுடைய பசுவினங்களில் கருமாற்று தொழில்நுட்பத் திட்டம் செயல்படுத்தப்பட்டு, 145 காளை மற்றும் 141 கிடேரி கன்றுகள் ஆக மொத்தம் 286 கன்றுகள் பிறந்துள்ளன. பண்ணைகளில் உறைவிந்து உற்பத்திக்காக, காளைக் கன்றுகள் விவசாயிகளிடமிருந்து அரசு நிர்ணயித்த விலையில் வாங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் மூலம் பிறந்த உயர் மரபுப் பண்பு கொண்ட கிடேரிக் கன்றுகளை விவசாயிகளே பராமரித்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காளைக் கன்றுகளை உற்பத்தி செய்வதற்குக் காரணமான விந்தணுக்களை அகற்றக்கூடிய விந்து பிரித்தெடுத்தல் தொழில்நுட்பத்தையும் இத்துறை அறிமுகப்படுத்தவுள்ளது. இதன் விளைவாக கிடேரி கன்றுகள் மட்டுமே உற்பத்தி செய்யப்படும். இந்த நவீன தொழில்நுட்பம் பால் பண்ணை விவசாயிகளின் நலனுக்காக ஏற்றுக்கொள்ளப்படும் ஒரு தொழில்நுட்பமாகும். இதன்மூலம் பற்றாக்குறையுடன் இருக்கும் தீவன வளங்களுக்கு ஆண் கன்றுகள் போட்டியிடும் பிரச்சினைகள் தீர்க்கப்படும்.

கருமாற்றுத் தொழில்நுட்பம், ஆய்வுக்கூட கருவூட்டல் (In Vitro Fertilization) போன்ற நவீன தொழில்நுட்ப உத்திகள்மூலம் உள்நாட்டின கால்நடைகளை பாதுகாத்திடவும், மேம்படுத்திடவும், தொடர்ந்து தரமான கன்றுகளை இத்தொழில்நுட்பங்களின்மூலம் உற்பத்தி செய்து பொதுமக்களுக்கு வழங்கவும் இத்துறை தொடர்ந்து பாடுபடும்.

8.1.1 விலையில்லா கறவைப் பசுக்கள் வழங்கும் திட்டம்

தமிழ்நாட்டில் இரண்டாம் வெண்மைப் புரட்சியை உருவாக்கும் வகையில், கிராமப்புற பொருளாதாரத்தை மேம்படுத்தவும், கிராமப்புற பெண்களை ஊக்குவிக்கவும், மாநிலத்தில் கலப்பினப் பசுக்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், அரசு விலையில்லா கறவைப் பசுக்கள் வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தியது.

இத்திட்டத்தைச் செயல்படுத்துவதன்மூலம் துறையின் நடவடிக்கைகள், உற்பத்தி மேலாண்மை அணுகுமுறையை பின்பற்றத் தொடங்கின. ஒரு கிராம ஊராட்சியில் 50 பயனாளிகளுக்கு வருவாய்

[2020 மார்ச் 17

உருவாக்கும் சொத்துகளை வழங்கி பயனாளிகளை ஒருங்கிணைக்க இத்திட்டம் முக்கியத்துவம் அளிக்கிறது.

இத்திட்டத்தின் மூலம்வழங்கப்பட்டகறவைப்பசுக்களின்நலத்தை உறுதி செய்வதற்காக நடத்தப்படும் முகாம்களில் கால்நடைகளை பராமரிப்பதற்கான மேலாண்மை உள்ளீடுகள் வழங்கப்படுவதால், அவ்வூராட்சிகளில் உள்ள பிற கால்நடைகளும் பயனடைகின்றன. இத்திட்டப் பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட திறன் மேம்பாட்டுப் பயிற்சியின் விளைவாக அவர்களால் கடைபிடிக்கப்படும் மேம்பட்ட கால்நடை மேலாண்மை பராமரிப்பு முறைகளை பிற விவசாயிகளும் பின்பற்றுவதால் அவர்களும் பயனடைய வழி வகுக்கப்படுகிறது.

8.1.1.1 முக்கிய அம்சங்கள்

- இத்திட்டம் 2011-12 முதல் 2017-18 வரை 21 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இது 2018-19-ஆம் ஆண்டிலிருந்து, பிற 9 மாவட்டங்களுக்கு நீட்டிக்கப்பட்டது.

- முதன்மையாக பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் இல்லாத கிராம ஊராட்சிகளும், சில மாவட்டங்களில் ஏற்கெனவே பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் தொடங்கப்பட்டு தற்போது செயல்பாட்டில் இல்லாத கிராம ஊராட்சிகளிலும் தேர்ந்தெடுக்கப்பட்டு விலையில்லா கறவைப் பசுக்கள் வழங்கப்பட்டு வருகின்றன. கறவைப் பசுக்கள் வழங்கப்படுவதையடுத்து இந்த கிராமங்களில் புதிய பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் அமைக்கப்பட்டு, பயனாளிகளிடமிருந்து பால் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

- இத்திட்டத்தில் பெண்கள் மட்டுமே பயனாளியாக இருத்தல் வேண்டும்.

- முதல் அல்லது இரண்டாம் ஈற்றில் உள்ள கறவைப் பசுக்களை உள்ளூர் / அண்டை மாநிலங்களிலிருந்து பயனாளிகளே தேர்வு செய்து வாங்குகின்றனர்.

- கறவைப் பசுக்களுக்கான காப்பீடு அரசு செலவிலேயே, கொள்முதல் செய்யப்படும் இடத்தில் இருந்தே மேற்கொள்ளப்படுகிறது.

8.1.1.2 தகுதியுடைமைக்கான வரையறைகள்

- ஊராட்சி மன்றத் தலைவர், துணைத் தலைவர், மூத்த தாழ்த்தப்பட்ட / பழங்குடியினத்தைச் சேர்ந்த வார்டு உறுப்பினர், ஊராட்சி நிலை கூட்டமைப்பு ஒருங்கிணைப்பாளர், கிராம வறுமை ஒழிப்புக் குழுச் செயலர் அல்லது சுய உதவிக் குழு பிரதிநிதி, கால்நடை உதவி மருத்துவர் மற்றும் மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்ட கிராம நிலையிலான குழுவால் பயனாளிகள் தேர்வு செய்யப்படுகின்றனர்.

- பயனாளிகளின் இறுதிப் பட்டியல் கிராம சபையின்மூலம் ஒப்புதல் பெறப்படுகிறது. விலையில்லா கறவைப் பசுக்கள் வழங்கும் திட்டத்திற்காக பயனாளியைத் தேர்ந்தெடுப்பதில் கிராம நிலையிலான குழுவில் துணைப் பதிவாளர் (பால் வளம்) அலுவலகத்தில் உள்ள விரிவாக்க அலுவலர் அல்லது முதுநிலை ஆய்வாளரும் உறுப்பினராகச் செயல்படுவர். உள்ளாட்சி அமைப்புகளில், தலைவர், துணைத் தலைவர், மூத்த வார்டு உறுப்பினர் ஆகியோர் இல்லாத சூழ்நிலையில், பொறுப்புக்களை இத்திட்டத்தின்கீழ் தனி அலுவலர்கள் கவனிப்பார்கள்.

- பெண்கள் மட்டுமே பயனாளி ஆவர். விதவைகள், ஆதரவற்றோர், மாற்றுத் திறனாளிகள் மற்றும் திருநங்கைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

- பயனாளி கிராம ஊராட்சியில் நிரந்தரமாக வசிப்பவராகவும், 60 வயதுக்குள் இருப்பவராகவும் இருத்தல் வேண்டும்.

- பயனாளிகள் / அவரது நெருங்கிய உறவினர்கள், மத்திய / மாநில அரசின் அல்லது எந்த ஒரு நிறுவனத்தின்/ கூட்டுறவு சங்கத்தின் பணியாளராகவோ, ஏதேனும் உள்ளாட்சி அமைப்பில் உறுப்பினராகவோ இருத்தல் கூடாது.

- மேலும், விலையில்லா கறவைப் பசு வழங்கும் திட்டத்தின் பயனாளி அல்லது குடும்ப உறுப்பினர் ஒரு ஏக்கர் நிலத்திற்கு மிகாமல் நிலமுடையவராக இருத்தல் வேண்டும்.

8.1.1.3 திட்டத்தின் பயன்கள்

விலையில்லா கறவைப் பசுக்கள் வழங்கும் திட்டத்தின்கீழ், 2011-12 முதல் 2019-20 வரை 99,379 பெண் பயனாளிகளுக்கு 99,379 கறவைப் பசுக்கள் வழங்கப்பட்டுள்ளன.

இக்கறவைப் பசுக்களின் வாயிலாக ரூ.99.31 கோடி மதிப்பிலான 1.99 இலட்சம் கன்றுகள் பிறந்துள்ளன. இதன் வாயிலாக கிராமப்புற ஏழை எளிய பெண்கள் பொருளாதார ஏற்றம் அடைந்துள்ளனர். ஏழைப் பெண்களை பொருளாதார ரீதியில் பலம் மிக்கவர்களாக மாற்றிய தமிழ்நாடு அரசின் இந்த முன்னோடித் திட்டம் 2020-21-ஆம் ஆண்டிலும் 12,000 பயனாளிகளுக்கு 12,000 விலையில்லா கறவைப் பசுக்கள் வழங்கும் வகையில் செயல்படுத்தப்படும்.

8.1.1.4 கன்று மேலாண்மை

கன்று மேலாண்மை, கன்று உருவாகும் முன்பிருந்தே தொடங்கப்பட வேண்டியதாகும். பசுக்கள் சினை பருவத்தில் இருக்கும்போதே அதற்குத் தேவையான சத்தான உணவினை அளிப்பதன்மூலம் வலுவான மற்றும் ஆரோக்கியமான கன்று பிறப்பதை உறுதி செய்ய இயலும். கன்று பிறந்தவுடன் நன்றாக சுவாசிக்க அதன் மூக்கு துவாரத்தில் உள்ள சளி போன்ற திரவத்தை சுத்தம் செய்ய வேண்டும். கன்றின் தொப்புள் கொடியினை இரண்டு சதவிகித திறன்கொண்ட அயோடின் கிருமி நாசினியினால் துடைத்து வெட்டி கட்டவேண்டும்.

கன்றுக்கு சத்தான சமச்சீர் தீவனம் அளிப்பதன்மூலம் அதனுடைய வயிறு வளர்வதற்கு உதவுவதுடன் 12 வார கால வயதில் கன்றினை தாயிடமிருந்து பிரிக்கும் தருவாயில் திரவ உணவில் இருந்து திட உணவிற்கு மாற்ற வேண்டும். தாயிடமிருந்து கன்றினை பிரித்து பராமரிக்கும்போது படிப்படியாக தேவையான நல்ல தரமான பசுந்தீவனம்/ உலர்தீவனம் மற்றும் அடர் தீவனம் அளிக்க வேண்டும்.

8.2. செம்மறியாடு மற்றும் வெள்ளாடு அபிவிருத்தி

மாநிலத்தில் ஏழை எளிய மக்களால் வெள்ளாடுகள் மற்றும் செம்மறியாடுகள், குறைந்த உள்ளீடு தேவைப்படும் பாரம்பரிய முறையில் வளர்க்கப்படுகின்றன. கால்நடைப் பொருட்களின் பயன்பாடு நுகர்வோரின் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டது என்பதை, தேவை மற்றும் விநியோக நிலவரம் காட்சிப்படுத்துகிறது. எதிர்வரும் இருபதாண்டுகளில் கால்நடைப்

2020 மார்ச் 17]

பொருட்களின் தேவை துரிதமாக அதிகரிக்கும் என்பது நிதர்சனமான உண்மை. கால்நடை பராமரிப்புத் துறை ஆட்டிறைச்சியின் தேவை அதிகரித்து வருவதை உணர்ந்து, ஆட்டினங்களின் எண்ணிக்கை மற்றும் அதன் உற்பத்தியை மாநிலத்தில் அதிகரிக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

கால்நடை பராமரிப்புத் துறை, ஆட்டினங்களின் அபிவிருத்தியை மேம்படுத்த, பண்ணைகளில் இறைச்சிக்காக பயன்படும் ஆடுகளின் மரபுத்திறன் அதிகரித்தல், ஊட்டச்சத்து பற்றாக்குறையை சரி செய்வதற்காக தாது உப்புக் கலவையை விவசாயிகளுக்கு வழங்குதல், நல்ல முறையில் உத்திகளை கையாண்டு வளர்ப்பது குறித்து விவசாயிகளுக்குப் பயிற்சி அளித்தல் போன்ற முக்கிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. ஆட்டினங்களின் மரபணு முன்னேற்றத்தை விரைவாகக் கண்காணிக்கும் ஒரு நடவடிக்கையாக, முன்னோடி அடிப்படையில் மேச்சேரி இன ஆடுகளில் செயற்கை கருவூட்டலை இத்துறை செயல்படுத்தவுள்ளது. இந்நிகழ்வு செம்மறி ஆடு வளர்ப்பவர்களுக்கு பொருளாதார இலாபத்தை அதிகரிப்பதற்காக பிறப்பு எடை, எடை அதிகரிப்பு போன்ற உற்பத்தி அளவுருக்களில் உள்ளூர் செம்மறி இனங்களை மேம்படுத்துவதோடு கருவுறாமை தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

அட்டவணை 14 : துறைப் பண்ணைகளில் பராமரிக்கப்படும் ஆட்டினங்கள்

வ. எண்	பண்ணையின் பெயர்	கால்நடை வகை	இனங்கள்
1	மாவட்ட கால்நடைப் பண்ணை, ஓசூர் (கிருஷ்ணகிரி மாவட்டம்)	செம்மறியாடுகள்	மேச்சேரி
		வெள்ளாடுகள்	தலைச்சேரி, கொடியாடு, சேலம் கருப்பு
2	மாவட்ட கால்நடைப் பண்ணை, அபிசேகப்பட்டி (திருநெல்வேலி மாவட்டம்)	செம்மறியாடுகள்	கீழக்கரிசல்
		வெள்ளாடுகள்	கன்னி ஆடு

[2020 மார்ச் 17

வ. எண்	பண்ணையின் பெயர்	கால்நடை வகை	இனங்கள்
3	மாவட்ட கால்நடைப் பண்ணை, புதுக்கோட்டை (புதுக்கோட்டை மாவட்டம்)	செம்மறியாடுகள்	இராமநாதபுரம் வெள்ளை
		வெள்ளாடுகள்	ஜமுனாபாரி
4	மாவட்ட கால்நடைப் பண்ணை, செட்டிநாடு (சிவகங்கை மாவட்டம்)	செம்மறியாடுகள்	இராமநாதபுரம் வெள்ளை
		வெள்ளாடுகள்	ஜமுனாபாரி, தலைச்சேரி
5	ஆட்டுப்பண்ணை, சின்னசேலம் (விழுப்புரம் மாவட்டம்)	செம்மறியாடுகள்	மேச்சேரி, சென்னை சிவப்பு
		வெள்ளாடுகள்	சேலம் கருப்பு, தலைச்சேரி
6	ஆட்டுப்பண்ணை, முகுந்தராயபுரம் (வேலூர் மாவட்டம்)	செம்மறியாடுகள்	சென்னை சிவப்பு
7	ஆட்டுப்பண்ணை, சாத்தூர் (விருதுநகர் மாவட்டம்)	செம்மறியாடுகள்	வேம்பூர்
		வெள்ளாடுகள்	கன்னி ஆடு

2019-20 ஆம் ஆண்டில், துறை பண்ணைகளில் 673 செம்மறி ஆட்டுக் குட்டிகள், 745 வெள்ளாட்டுக் குட்டிகள் பிறந்துள்ளன. 448 செம்மறி ஆட்டுக் குட்டிகள், 408 வெள்ளாட்டுக் குட்டிகள் இனவிருத்திக்காக விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

2020 மார்ச் 17]

8.2.1 விலையில்லா வெள்ளாடுகள் / செம்மறியாடுகள் வழங்கும் திட்டம்

தமிழ்நாடு அரசு, ஊரகப் பகுதிகளில் வாழும் ஏழ்மையிலும் ஏழ்மை நிலையில் உள்ள ஏழைகளுக்கு அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக 'விலையில்லா வெள்ளாடுகள் / செம்மறியாடுகள் வழங்கும் திட்டத்தை' அறிவித்தது.

இத்திட்டத்தை செயல்படுத்தும் போது உற்பத்தி மேலாண்மையை மையப்படுத்தும் அணுகுமுறை கடைபிடிக்கப்படுகிறது. 2011-12 முதல் 2017-18 ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் மக்கள் தொகையில் 1:50 என்ற விகிதாச்சாரப்படி பயனாளிகளின் குறியீடு நிர்ணயிக்கப்பட்டது. 2018-19 ஆம் ஆண்டில் இருந்து கிராம ஊராட்சிக்கென குறியீடு நிர்ணயிக்காமல் அக்கிராமத்தில் தகுதியான அனைத்து பயனாளிகளுக்கும் வெள்ளாடுகள் / செம்மறியாடுகள் வழங்கப்பட்டன. இத்தகைய உற்பத்தித் தொகுப்பு நிறுவப்படுவதால், பயனாளிகள் இருக்கும் கிராம ஊராட்சியில் உள்ள பிற விவசாயிகளும் வெள்ளாடுகள்/ செம்மறியாடுகளை சிறந்த முறையில் பராமரிக்க ஏதுவாக இருக்கிறது.

இதன்மூலம், கிராம ஊராட்சியில் உள்ள குறைவான எண்ணிக்கையிலான பயனாளிகள் பயன்பெறுவதைக் காட்டிலும் மேம்பட்ட பண்ணை மேலாண் முறைகளைக் கையாளுவதால் அதிக எண்ணிக்கையிலான வெள்ளாடுகள் / செம்மறியாடுகள் வளர்ப்போர் உருவாக்கப்பட்டு பயனடைகின்றனர்.

8.2.1.1 முக்கிய அம்சங்கள்

- ஒவ்வொரு பயனாளிக்கும் ஆறு முதல் எட்டு மாத வயதுடைய ஒரு கிடா மற்றும் மூன்று பெட்டை ஆடுகள் வழங்கப்படுகின்றன.
- வெள்ளாடுகள் / செம்மறியாடுகளை பயனாளிகளே உள்ளூர் சந்தையிலிருந்து கொள்முதல் செய்கின்றனர்.
- கால்நடைகளுக்கான காப்பீடு அரசு செலவிலேயே, கொள்முதல் செய்யப்படும் இடத்திலேயே மேற்கொள்ளப்படுகிறது.

[2020 மார்ச் 17

8.2.1.2 தகுதியுடைமைக்கான வரையறைகள்

- இத்திட்டத்திற்கு ஊராட்சி மன்றத் தலைவர், துணைத் தலைவர், மூத்த தாழ்த்தப்பட்ட / பழங்குடியினத்தைச் சேர்ந்த வார்டு உறுப்பினர், ஊராட்சி நிலை கூட்டமைப்பு ஒருங்கிணைப்பாளர், கிராம வறுமை ஒழிப்புக் குழுச் செயலர் அல்லது சுய உதவிக் குழு பிரதிநிதி, கால்நடை உதவி மருத்துவர் மற்றும் மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் ஆகியோர்களை உறுப்பினர்களாகக் கொண்ட கிராம நிலையிலான குழுவால் பயனாளிகள் தேர்வு செய்யப்படுகின்றனர்.

- பயனாளிகளின் இறுதி பட்டியல் கிராம சபையின்மூலம் ஒப்புதல் பெறப்படுகிறது. உள்ளாட்சித் தேர்தல் நடத்தப்படும் வரையிலும் தலைவர், துணைத் தலைவர், மூத்த வார்டு உறுப்பினர் ஆகியோரது பொறுப்புக்களைத் தனி அலுவலர்கள் கிராம நிலையிலான குழுவில் உறுப்பினராக இருந்து இத்திட்டத்தின்கீழ் கவனிப்பார்கள்.

- இத்திட்டத்தில் பெண்கள் மட்டுமே பயனாளி ஆவர். விதவைகள், ஆதரவற்றோர், மாற்றுத் திறனாளிகள் மற்றும் திருநங்கைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

- பயனாளி கிராம ஊராட்சியில் நிரந்தரமாக வசிப்பவராகவும், 60 வயதுக்குள் இருப்பவராகவும் இருத்தல் வேண்டும். வெள்ளாடுகள்/ செம்மறியாடுகள் வழங்கும் திட்டத்தில் ஆடுகளை சிறப்பாக வளர்க்கும் பொருட்டு பயனாளியின் குடும்ப உறுப்பினர்களில் ஒருவராவது 18 முதல் 60 வயதுக்குள் இருக்க வேண்டும்.

- பயனாளிகளில் குறைந்தபட்சம் 30 விழுக்காட்டினர் கட்டாயமாக ஆதி திராவிடர் / பழங்குடியினர் இனத்தை சேர்ந்தவராக இருத்தல் வேண்டும்.

- பயனாளிகள் / அவரது நெருங்கிய உறவினர்கள், மத்திய / மாநில அரசின் அல்லது எந்த ஒரு நிறுவனத்தின் / கூட்டுறவு சங்கத்தின் பணியாளராகவோ, ஏதேனும் உள்ளாட்சி அமைப்பில் உறுப்பினராகவோ இருத்தல் கூடாது.

2020 மார்ச் 17]

- விலையில்லா வெள்ளாடுகள் / செம்மறியாடுகள் வழங்கும் திட்டத்தின் பயனாளி நிலமற்ற ஏழை விவசாய தொழிலாளியாக இருத்தல் வேண்டும்.

8.2.1.3 திட்டத்தின் பயன்கள்

விலையில்லா வெள்ளாடுகள் / செம்மறியாடுகள் வழங்கும் திட்டத்தின்கீழ் 2011-12 முதல் 2019-20 வரை ஏழ்மையிலும் ஏழ்மை நிலையில் உள்ள 11,67,674 பெண்களுக்கு, 46,70,696 வெள்ளாடுகள்/ செம்மறியாடுகள் வழங்கப்பட்டுள்ளன.

வழங்கப்பட்ட ஆடுகள், ரூ.1953.44 கோடி மதிப்பிலான 78.13 இலட்சம் குட்டிகளை ஈன்றுள்ளன. இதன் வாயிலாக, கிராமப்புற ஏழை எளிய பெண்கள் பொருளாதார ஏற்றம் அடைந்துள்ளனர். ஏழைப் பெண்களை பொருளாதார ரீதியில் தன்னிறைவு மிக்கவர்களாக மாற்றிய தமிழ்நாடு அரசின் இந்த முன்னோடித் திட்டம் 2020-21ஆம் ஆண்டிலும் 1,50,000 பயனாளிகளுக்கு 6,00,000 வெள்ளாடுகள் / செம்மறியாடுகள் விலையில்லாமல் வழங்கும் வகையில் செயல்படுத்தப்படும்.

8.2.2 செம்மறியாடுகளின் மரபுத்திறனை மேம்படுத்துதல்

சேலம், திருப்பூர், கரூர் மற்றும் தருமபுரி மாவட்டங்களில் உயர் மரபணு தன்மை கொண்ட மேச்சேரி இன ஆடுகளின்மூலம் ஆடுகளின் மரபுத் திறனை மேம்படுத்த ரூ.5.25 கோடி மதிப்பீட்டில் ஒரு திட்டத்தை தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் வாயிலாக ஐந்தாண்டு காலத்தில் சுமார், 36,117 தரம் உயர்த்தப்பட்ட மேச்சேரி இன ஆட்டுக்குட்டிகள் கூடுதலாகக் கிடைக்கும்.

8.3 கோழியின அபிவிருத்தி

8.3.1 கோழியின அபிவிருத்தித் திட்டம்

நாமக்கல் மற்றும் அதை சுற்றி உள்ள மாவட்டங்களில் கோழிப் பண்ணைத் தொழிலின் முன்னேற்றத்தைப் போன்று பின்தங்கிய மற்ற மாவட்டங்களிலும் பண்ணை முறை கோழி வளர்ப்பை ஊக்குவிக்கும் நோக்கத்தோடு, 2012-2013 ஆம் ஆண்டில் தமிழக அரசு, கோழி வளர்ப்புத் திட்டத்தை ரூ.22.35 கோடி செலவினத்தில் தொடங்கியது. குறிப்பாக, விழுப்புரம் மண்டலத்திற்குட்பட்ட விழுப்புரம், கடலூர்,

[2020 மார்ச் 17

அரியலூர், பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களிலும் மற்றும் சங்கரன்கோவில் மண்டலத்திற்குட்பட்ட திருநெல்வேலி, தூத்துக்குடி, விருதுநகர் ஆகிய மாவட்டங்களிலும் இத்திட்டம் தொடங்கி செயல்படுத்தப்பட்டது.

கோழி அபிவிருத்தித் திட்டத்தின் வாயிலாக, சமூகத்தில் நலிவடைந்த பிரிவினருக்கு வாழ்வாதார வாய்ப்புகளை வழங்குவதற்காகவும், ஊரகப் பகுதிகளில் தொழில் முனைவோரை ஊக்குவிப்பதற்காகவும், 2012-13 ஆம் ஆண்டு முதல் 2017-18 ஆம் ஆண்டுவரை ரூ.141.10 கோடி நிதி ஒதுக்கீட்டில் 2,961 எண்ணிக்கையிலான இறைச்சிக் கோழிப் பண்ணைகளும், 18,545 எண்ணிக்கையிலான நாட்டுக் கோழிப் பண்ணைகளும் 25 மாவட்டங்களில் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

8.3.1.1 விலையில்லா அசில் இன நாட்டுக் கோழிகள் வழங்கும் திட்டம்

தமிழ்நாட்டில் நாட்டுக் கோழி முட்டை மற்றும் இறைச்சிக்கான தேவை அதிகரித்துள்ளதால், புழக்கடை கோழி வளர்ப்புத் தொழில் பெருமளவில் வெற்றியடைந்துள்ளது. எனவே, தமிழ்நாடு கால்நடை பராமரிப்புத் துறையின் மூலமாக 2018-19 ஆம் நிதி ஆண்டில் புழக்கடை கோழி வளர்ப்பினை ஊக்குவிக்கும் விதமாக சென்னை நீங்கலாக, அனைத்து மாவட்டங்களிலும் கிராமப்புற ஏழை பெண்கள் பயன்பெறும் வகையில், கோழி அபிவிருத்தித் திட்டத்தின்கீழ், 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 77,000 கிராமப்புற பெண் பயனாளிகளுக்கு, தலா 50 விலையில்லா நான்கு வார வயதுடைய அசில் இன நாட்டுக் கோழிகள் மற்றும் அவற்றின் பாதுகாப்பிற்காக கூண்டுகளும் வழங்கப்பட்டன.

இத்திட்டத்தின் பயன்களை கருத்தில் கொண்டு நடப்பாண்டில் இத்திட்டமானது 37 மாவட்டங்களிலும் உள்ள பேரூராட்சிகள் மற்றும் கிராம பஞ்சாயத்துகளில் உள்ள பெண் பயனாளிகள் பயன்பெறும் வகையில் ரூ.50 கோடி செலவில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. 4 வார வயதுடைய 60 இலட்சம் அசில் இனக் கோழிகள், 2.4 இலட்சம் பெண் பயனாளிகளுக்கு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இதுவரை 58,255 பெண் பயனாளிகளுக்கு ஒரு பயனாளிக்கு 25 கோழிகள் வீதம் 14,56,375 அசில் இன 4 வார வயதுடைய கோழிகள் வழங்கப்பட்டுள்ளன.

2020 மார்ச் 17]

8.3.1.1.1 பயனாளிகளின் தகுதிகள்

1. தமிழ்நாடு மாநில கிராமப்புற வாழ்வாதார திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட மக்கள் பங்கேற்புடன் கண்டறியப்பட்ட ஏழைகளின் பட்டியல் எண் உடைய (Participatory Identification of poor- PIP) பெண்கள் மற்றும் பேரூராட்சிகளில் வறுமை கோட்டிற்குகீழ் பட்டியல் எண் உடைய (BPL Number) பெண்கள் பயனாளிகளாக தேர்வு செய்யப்படுகின்றனர்.

2. தமிழ்நாடு மாநில கிராமப்புற வாழ்வாதார திட்டத்தின்கீழ் ஏற்படுத்தப்பட்ட மகளிர் சுய உதவிக் குழுக்களில் உறுப்பினராக உள்ள பெண்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது.

3. பயனாளிகள் கிராமம்/ நகரத்தில் நிரந்தர குடியிருப்பில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

4. முந்தைய நிதி ஆண்டுகளில் விலையில்லா கறவைப்பசு, வெள்ளாடு / செம்மறியாடு, கோழி வழங்கும் திட்டத்தின் பயனாளிகளாக இல்லாதவர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

5. கணவனை இழந்த பெண்கள், ஆதரவற்றோர், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் மற்றும் மாற்றுத் திறன் கொண்ட பெண்களுக்கு இந்தத் திட்டத்தில் முன்னுரிமை அளிக்கப்பட்டது.

6. பயனாளிகளில் 30 சதவீதத்தினர் கட்டாயமாக ஆதி திராவிடர் / பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்தவர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

புழக்கடையில்வளர்க்கப்படும்கோழிகளுக்குகுறைந்தஅளவுஅடர் தீவனம் தேவைப்படுவதால் அவைகளை பராமரிக்க ஆகும் செலவு மிக குறைவே ஆகும். கோழிகளின் உற்பத்தி காலத்தில் சராசரியாக 1000 முதல் 1250 முட்டைகள் பயனாளிகளுக்கு கிடைப்பதன்மூலம் ரூ.8000 முதல் ரூ.10000 வரை வருமானம் கிடைக்கும். மேலும், உயிருள்ள கோழிகளை இறைச்சிக்காக விற்பனை செய்வதன் மூலமும் வருமானம் ஈட்டலாம். இப்பயனாளிகள், பெற்ற இலாபத்தின் ஒரு பகுதியை கூடுதலாக கோழிகள் கொள்முதல் செய்வதற்கு முதலீடு செய்வதன் மூலம் தொடர்ச்சியான வருவாய் ஈட்ட வழிவகை ஏற்படுகிறது.

[2020 மார்ச் 17

8.3.2 குறைந்த இடுபொருள் தேவை கொண்ட கோழி (ம) கறிக்கோழி வளர்ப்புக்காக புதுமையான கோழி உற்பத்தி திட்டம்

குறைந்த இடுபொருள் மற்றும் பராமரிப்பு தேவை கொண்ட கிரிராஜா, வனராஜா மற்றும் கிராமபிரியா போன்ற கோழி வகைகள் வளர்ப்பினை துறை ஊக்குவிக்கிறது.

தருமபுரி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் 'தேசிய கால்நடை இயக்கத்தின்கீழ் புதுமையான கோழி உற்பத்தித் திட்டத்தில்' மத்திய அரசின் 60 விழுக்காடு மற்றும் மாநில அரசின் 40 விழுக்காடு நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்ட இத்திட்டத்தில் 400 பயனாளிகளுக்கு (ஒரு மாவட்டத்திற்கு 200 நபர்கள் வீதம்) மொத்தம் ரூ.100 இலட்சம் நிதி வழங்கப்பட்டு, பயனாளி ஒருவருக்கு இருவகை திறன் (இறைச்சி மற்றும் முட்டை) கொண்ட 4 வார வயதுடைய 200 கோழிகள் மற்றும் இரவு கூண்டுகள் கொள்முதல் செய்து வழங்கப்பட்டுள்ளன. முட்டை உற்பத்தி காலமான 72 வார இடைவெளியில் இரண்டாவது தொகுப்பாக பயனாளிக்கு 200 கோழிகள் வழங்கப்படுவதன்மூலம் கோழிப்பண்ணைகளின் ஸ்திரத்தன்மையை உறுதி செய்வதோடு விவசாயிகளின் பொருளாதாரத்தையும் மேம்படுத்தலாம்.

நடப்பாண்டில் பயனாளிகளை தக்க வைக்கும் நோக்கில் குறைந்த உள்ளீடு மற்றும் தொழில்நுட்பத்தில் மேலும் 80,000 கோழிகள் ரூ.40 இலட்சத்தில் இரண்டாவது தொகுப்பாக வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதைத் தவிர திருவண்ணாமலை மாவட்டத்தில் புதுமையான கோழி உற்பத்தித் திட்டத்தில் கறிக்கோழி வளர்ப்பினை ஊக்கப்படுத்தும் நோக்குடன் 200 பயனாளிகளுக்கு, பயனாளி ஒருவருக்கு ஒரு நாள் வயதுடைய 600 கோழி குஞ்சுகள், 150 கோழிகளாக நான்கு முறை கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. கறிக் கோழிகளுக்குத் தேவையான கொட்டகை கட்டுமான நிதியுடன், தீவனம் மற்றும் தண்ணீர் வைப்பதற்கான உபகரணங்கள் மற்றும் தீவனத் தொகையுடன் 1,20,000 கோழிகள் கொள்முதல் செய்ய ரூ.225 இலட்சம் நிதி வழங்கப்பட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் தேசிய கால்நடை இயக்கத்தின்கீழ் மத்திய அரசின் 60 விழுக்காடு மற்றும் மாநில அரசின் 40 விழுக்காடு நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2020 மார்ச் 17]

2019-20 ஆம் நிதி ஆண்டில் விழுப்புரம் மாவட்டத்தில் 200 பயனாளிகளுக்கு ரூ.225 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் திட்டம் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கான பயனாளிகள் தேர்வு நடைபெற்று வருகிறது.

8.3.3 துறைப் பண்ணைகளில் செயல்படும் கோழி அலகுகள்

துறையின் நான்கு பண்ணைகளில் கோழிப்பண்ணை அலகுகள் செயல்பட்டு வருகின்றன. இப்பண்ணைகள் முன்மாதிரி பண்ணைகளாகவும் விஞ்ஞான முறையில் கோழி வளர்ப்பதற்கான செயல்விளக்க அலகுகளாகவும் விளங்குகின்றன.

அட்டவணை 15: துறைப் பண்ணைகளில் பராமரிக்கப்படும் கோழியினங்கள்

வ. எண்	பண்ணையின் பெயர்	இனங்கள்
1	மாவட்ட கால்நடைப் பண்ணை, ஓசூர் (கிருஷ்ணகிரி மாவட்டம்)	அசில்
2	மாவட்ட கால்நடைப் பண்ணை, அபிசேகப்பட்டி (திருநெல்வேலி மாவட்டம்)	வனராஜா, கிரிராஜா
3	மாவட்ட கால்நடை பண்ணை, செட்டிநாடு (சிவகங்கை மாவட்டம்)	அசில்
4	கோழிப்பண்ணை, காட்டுப்பாக்கம் (காஞ்சிபுரம் மாவட்டம்)	வனராஜா, கிரிராஜா, அசில், நிக்கோபாரி, கடக்நாத், வெள்ளை லெகார்ன் மற்றும் கினியா கோழி

8.3.3.1 ஒசூர் மாவட்ட கால்நடைப் பண்ணையில் நாட்டுக் கோழி இனப்பெருக்க வளாகம்

மாநிலத்தில் நிலவும் நாட்டுக் கோழிகளின் தேவையை நிறைவு செய்வதற்காக, கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் மாவட்ட கால்நடைப் பண்ணையில் ரூ.6.74 கோடி ஒதுக்கீட்டில், நாட்டுக் கோழி இனப்பெருக்க வளாகம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது. தீவிர

கோழி வளர்ப்பு முறையின்கீழ் நாட்டுக் கோழிகளை வளர்ப்பதற்கு கட்டமைப்பு வசதிகளை உருவாக்கி ஆண்டுக்கு 10 முதல் 12 இலட்சம் கோழிக் குஞ்சுகள் பொரிக்கும் வண்ணம் நாட்டுக்கோழி இனப்பெருக்க வளாகம் தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் கட்டப்பட்டு வருகிறது.

8.3.3.2 கோழித்தீவனத்திற்கு மக்காச்சோளம் கிடைப்பதை உறுதி செய்வதற்கு மேற்கொண்ட நடவடிக்கைகள்

மக்காச்சோள உற்பத்தியில் பற்றாக்குறை காரணமாக கோழி வளர்ப்போர் எதிர்கொள்ளும் சிரமங்களைத் தணிக்க அரசு முனைப்புடன் நடவடிக்கை எடுத்துள்ளது. மக்காச்சோளம் கோழி தீவனத்தில் ஒரு முக்கிய அங்கமாகும். தமிழ்நாட்டில் மக்காச்சோளம் பயிர் விதைக்கப்பட்ட மொத்த 3.55 இலட்சம் ஹெக்டேரில் 2.20 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவில் பயிரிடப்பட்ட மக்காச்சோளம் பயிர்கள்தமிழ்நாட்டில்“அமெரிக்கன்படைபுழுவால்”பாதிக்கப்பட்டது.

இதன்விளைவாகமக்காச்சோளம்கிடைக்காததால்மக்காச்சோளம் விலை அதிகரித்ததனைத் தொடர்ந்து கோழி தீவனத்தின் விலையும் அதிகரித்தது. இதனால் கோழி பண்ணையாளர்கள் கடுமையான சிரமத்திற்கு உள்ளாகினர். எனவே தமிழக அரசு, 10 இலட்சம் மெட்ரிக் டன் மக்காச்சோளத்தை இறக்குமதி செய்ய கோழி பண்ணையாளர்களை அனுமதிக்குமாறும் அதற்கான இறக்குமதி வரியினை சிறப்பு நிகழ்வாக தள்ளுபடி செய்யவும் மத்திய அரசிடம் கோரிக்கையாக வலியுறுத்தியது.

8.4 செல்லப் பிராணிகளுக்கான சேவைகள்

தெருநாய்களின் எண்ணிக்கையை குறைக்கும் பொருட்டு, சம்பந்தப்பட்ட நகராட்சி நிருவாகத்துடன் இணைந்து தெரு நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்படுகிறது. கடந்த 2019-20 ஆம் ஆண்டில் 80,660 ஆண்மை நீக்கமும் மற்றும் 4,060 கருப்பை நீக்கமும் கால்நடை நிலையங்களின் மூலமாக செய்யப்பட்டுள்ளன.

பொது சுகாதாரத்தை பேணும் வகையில் 58,517 நாய்களுக்கு வெறிநோய் தடுப்பூசி போடப்பட்டுள்ளது. மேலும் 8,867 நாய்களுக்கு டிஸ்டம்பர், லெப்டோஸ்பைரோசிஸ், பார்வோவைரஸ் மற்றும் ஹெப்படைட்டிஸ் நோய்களுக்கான தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளன.

8.4.1 நாய் வளர்ப்புப் பிரிவு, சைதாப்பேட்டை

இராஜபாளையம், சிப்பிப்பாறை மற்றும் கன்னி ஆகிய சிறந்த நாட்டின நாய் இனங்கள் தமிழ்நாட்டில் உள்ளன. இந்த நாட்டின

2020 மார்ச் 17]

நாய்களைப் பாதுகாத்து இனப்பெருக்கம் செய்ய 1980-ஆம் ஆண்டில் சென்னை சைதாப்பேட்டையில் நாய் வளர்ப்புப் பிரிவு தோற்றுவிக்கப்பட்டது. இப்பிரிவிலிருந்து பெறப்படும் குட்டிகள் பொதுமக்களுக்கு பதிவு மூப்பு அடிப்படையில் அரசு நிர்ணயிக்கும் விலையில் விற்பனை செய்யப்படுகின்றன.

8.5 தீவன அபிவிருத்தி

கால்நடைகளின் செயல்திறன், சுகாதாரம் மற்றும் நலனை பாதிக்கும் மிக முக்கியமான காரணிகளில் ஊட்டச்சத்தும் ஒன்றாகும். தீவனம் மற்றும் பசுந்தீவனம் கால்நடை உற்பத்திக்கான மிகப்பெரிய உள்ளீடாகும். இது மொத்த உற்பத்தி செலவில் 65-70 சதவிகிதம் ஆகும். இதனால் தீவனம் மற்றும் தீவன செலவில் எந்த சேமிப்பும் நேரடியாக இலாபத்தை அதிகரிக்க வழிவகுக்கும். கால்நடைகளுக்கு அனைத்து சத்துக்களையும் கொண்ட சரிவிகித உணவை சரியான அளவில் வழங்குதல் அவசியமாகும்.

“பசுந்தீவன பயிரும் பணப்பயிரே” என்ற விழிப்புணர்வை கால்நடை வளர்ப்போரிடம் ஏற்படுத்த இத்துறை பல நடவடிக்கைகளை 2011-12 முதல் மேற்கொண்டு வருகிறது. ஏறத்தாழ 1.07 இலட்சம் ஹெக்டேர் மேய்க்கால் நிலங்கள் தமிழ்நாட்டில் உள்ளன. (ஆதாரம்: பருவம் மற்றும் பயிர் அறிக்கை 2015-16) பசுந்தீவன உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு மாற்று நிலங்களை அதே மாவட்டத்தில் மேய்ச்சலுக்கு உகந்ததாக மாற்றி வழங்கினாலன்றி, மேய்க்கால் நிலங்களை இதர பயன்பாட்டிற்கு வழங்கக்கூடாது என அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

தரம் மற்றும் எண்ணிக்கை அடிப்படையில், பசுந்தீவன உற்பத்திக்கும், தேவைக்கும் இடையே குறிப்பிடத்தக்க இடைவெளி காணப்படுகிறது. பசுந்தீவன உற்பத்தியை அதிகப்படுத்தவும், இருக்கும் வளங்களை சிறந்த முறையில் பயன்படுத்தவும், இந்த இரண்டுக்கும் இருக்கும் இடைவெளியை குறைக்க 2011-12 ஆம் ஆண்டு முதல் மாநில தீவன அபிவிருத்தித் திட்டம் ரூ.215 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

பசுந்தீவன இருப்பு மற்றும் உற்பத்திக்கு இடையேயான இடைவெளியை குறைப்பதற்காக கீழ்க்கண்ட முயற்சிகளை இத்துறை மேற்கொண்டு வருகிறது:

அதிக மகசூல் தரும் கோ-4, கோ-5, தீவனச் சோளம், காராமணி, வேலிமசால் போன்ற பசுந்தீவனப் பயிர்களை விவசாயிகளின் சொந்த

நிலங்களிலேயே பயிரிடுவதை இத்துறை முதன்மைப்படுத்தி வருகிறது. இம்முயற்சியின் பயனாக விவசாயிகளின் 3.96 இலட்சம் ஏக்கர் சொந்த நிலங்கள் பசுந்தீவன உற்பத்தியின்கீழ் கொண்டு வரப்பட்டு, 252.61 இலட்சம் மெட்ரிக் டன் பசுந்தீவனம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. தீவன உற்பத்திக்குத் தேவைப்படும் உள்ளீடுகளான விதைகள் மற்றும் புல்கரணைகள் 100 விழுக்காடு மானியத்தில் துறையால் வழங்கப்படுகின்றன.

மேலும், தீவனம் வீணாவதைத் தடுக்கவும் அதன் செரிமானத் திறனை அதிகரிக்கவும், பசுந்தீவன உற்பத்தியை இயந்திரமாக்கும் நோக்கத்திற்காகவும், பசுந்தீவனம் நறுக்கும் கருவிகளின் பயன்பாட்டினை அதிகரிக்கவும் இத்துறை நடவடிக்கை எடுத்து வருகிறது. இதுவரை, 14,203 பசுந்தீவனம் நறுக்கும் கருவிகள் 75 சதவிகித மானியத்தில் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன. தீவனம் அதிகமாக கிடைக்கும் காலங்களில், உபரி தீவனத்தை சேமித்து, தீவனப் பற்றாக்குறை காலங்களில் தீவனத் தட்டுப்பாட்டைப் போக்கும் வகையில் ஊறுகாய் புல் தயாரித்து சேமிக்கும் தொழில்நுட்பத்தை விவசாயிகள் அறியும் வகையில், இத்துறை மூலம் 250 கிலோ கொள்ளளவு கொண்ட 40,000 ஊறுகாய்ப் புல் பைகள், 10,000 விவசாயிகளுக்கு தலா 4 பைகள் வீதம் இலவசமாக விநியோகிக்கப்பட்டுள்ளன.

நீரின் உபயோகத்தைக் குறைத்து பசுந்தீவன மகசூலை அதிகரிக்கும் நோக்குடன் 10,483 நீர்த் தெளிப்பான்கள் 75 சதவீத மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

உள்ளூரில் கிடைக்கும் இடுபொருட்களைக் கொண்டே குறைந்த செலவில் சத்தான பசுந்தீவன உற்பத்தி மேற்கொள்ளும் தொழில்நுட்பத்தை இத்துறை முனைந்து விளம்பரப்படுத்தி வருகிறது. இதன்படி உற்பத்தி செலவைக் குறைக்கும் மாற்றுப் பசுந்தீவனமான அசோலா பயிர் விவசாயிகளிடையே பயிரிட ஊக்குவிக்கப்படுகிறது. இதுவரை, 30,958 அசோலா அலகுகள் மாநிலம் முழுவதும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதற்கான இடுபொருட்கள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

கால்நடைகளுக்கு மரத் தீவனம் வழங்க வேண்டியதன் அவசியத்தை விவசாயிகளுக்கு தெளிவுபடுத்திடும் பொருட்டு கல்யாண முருங்கை, வெல்வேல், அகத்தி, சுபாபுல், கொடுக்காப்புளி, கிளரிசிடியா போன்ற பல்வேறு வகையான 72.5 இலட்சம் மரத்தீவனக்

2020 மார்ச் 17]

கன்றுகள் துறைப் பண்ணைகளில் வளர்க்கப்பட்டு, விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

மாற்றுமுறை தீவன வளர்ப்பை ஊக்குவிக்கும் நோக்கத்தில், இத்துறையானது நீர்மத் தாவர வளர்ப்புமுறை தொழில்நுட்பத்தை விவசாயிகளிடையே ஊக்குவித்து வருகிறது. மாநிலத்தில் 3,600 நீர்மத் தாவர வளர்ப்பு முறை உற்பத்தி அலகுகள் 75 சதவீத மானியத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேற்கூறிய அனைத்து திட்டங்களும் ரூ.25 கோடி செலவில் 2019-20 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

குறித்த காலத்தில் விவசாயிகளுக்கு பசுந்தீவன விதைகள் கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் துறையின் 7 கால்நடைப் பண்ணைகளில் பசுந்தீவன விதை உற்பத்தி அலகுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இப்பண்ணைகளில் இருந்து பசுந்தீவனம், சான்றளிக்கப்பட்ட விதைகள், புல்கரணைகள், மரத் தீவனக் கன்றுகள் மற்றும் மண்புழு உரம் ஆகியவை உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன. மேலும், மாற்று பசுந்தீவனப் பயிரான புரதச்சத்து மிக்க அசோலா மற்றும் நீர்மத் தாவர வளர்ப்பு முறை உற்பத்தி செயல்விளக்க அலகுகள் அனைத்துப் பண்ணைகளிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

8.5.1 துறைப் பண்ணைகளில் நீடித்த பசுந்தீவன உற்பத்தி முனைப்புகள்

ஓசூர், மாவட்ட கால்நடைப் பண்ணையில் பராமரிக்கப்படும் கால்நடைகளுக்கு தடையின்றி பசுந்தீவனம் கிடைப்பதை உறுதி செய்ய 100 ஏக்கர் புதிய நிலப்பரப்பில் இறைவை சாகுபடியில் பசுந்தீவன உற்பத்தி மேற்கொள்ளவும், 100 ஏக்கர் மானாவாரியில் பசுந்தீவன உற்பத்திக்காக மேய்ச்சல் நிலத்தை புனரமைக்கவும், ரூ.3.509 கோடி செலவில் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

மாநிலத்தில் தரமான தீவன விதைகள் தொடர்ந்து கிடைப்பதை உறுதி செய்வதன் பொருட்டு துறை பண்ணைகளில் உள்ள இடங்களில் உறுதி செய்யப்பட்ட காராமணி விதைகள் உற்பத்தி செய்ய உத்தேசித்துள்ளது.

125 ஏக்கர் பரப்பளவில் ரூ.1 இலட்சம் செலவில் மொத்தம் 1000 கிலோ உறுதி செய்யப்பட்ட காராமணி விதைகளை பெருக்கி விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது. மொத்தம் 16 மெட்ரிக் டன் தரசான்று விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு

ஒரு கிலோ ரூ.92.50-க்கு திரும்ப வாங்கப்பட்டது. இந்த விதைகளை துறை விதை பதப்படுத்தப்படும் பிரிவில் பதப்படுத்தப்பட்டு 2019-20 ஆம்ஆண்டிற்கான மாநில தீவன அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் சான்றளிக்கப்பட்ட விதைகளாக விநியோகிக்கப்பட்டுள்ளது.

துறைப் பண்ணைகளில் பசுந்தீவன உற்பத்தியை அதிகரிக்கும் வகையில், செட்டிநாடு மற்றும் ஓசூர் மாவட்ட கால்நடைப் பண்ணைகளில் தலா 200 ஏக்கரிலும், அபிசேகப்பட்டி மற்றும் புதுக்கோட்டை மாவட்ட கால்நடைப் பண்ணைகளில் தலா 100 ஏக்கரிலும், ஆக மொத்தம் 600 ஏக்கர் பண்ணை நிலங்களில் பசுந்தீவன மரங்கள் சாகுபடி மேற்கொள்ளப்படும். 1.95 இலட்சம் கல்யாணமுருங்கை, வேம்பு, சுபாபுல், கிளரிசிடியா போன்ற பசுந்தீவன மரங்கள் சாகுபடி செய்யப்பட்டு கால்நடைகளுக்குத் தீவனம் வழங்கப்படுவதுடன் சுற்றுச்சூழலும் பாதுகாக்கப்படும்.

அட்டவணை 16 : அரசுப் பண்ணைகளில் தீவன புல் உற்பத்தி மற்றும் விற்பனை-2019-20

வ எண்	பண்ணையின் பெயர்	பண்ணையின் பரப்பளவு (ஏக்கரில்)	தீவன புல் பயிரிடப்பட்ட பரப்பு (ஏக்கர்)	தீவன புல் உற்பத்தி செய்யப்பட்ட அளவு (மெ.டன்)	விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட புல்கரணைகளின் எண்ணிக்கை	விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட தீவன விதைகள் (மெ.டன்)
1	மாவட்ட கால்நடை பண்ணை, அபிஷேகப்பட்டி	1283.64	60	814.705	0	0
2	மாவட்ட கால்நடை பண்ணை, செட்டிநாடு	1560.32	463	3350.560	788200	0
3	ஆட்டுப் பண்ணை, சின்னசேலம்	1866.28	15	926.64	0	0
4	உயரின கால்நடை பெருக்குப் பண்ணை, ஈச்சங்கோட்டை	513.86	122	2544.00	365150	135

2020 மார்ச் 17]

வ எண்	பண்ணையின் பெயர்	பண்ணையின் பரப்பளவு (ஏக்கரில்)	தீவன புல் பயிரிடப்பட்ட பரப்பு (ஏக்கர்)	தீவன புல் உற்பத்தி செய்யப்பட்ட அளவு (மெ.டன்)	விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட புல்கரணைகளின் எண்ணிக்கை	விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட தீவன விதைகள் (மெ.டன்)
5	மாவட்ட கால்நடை பண்ணை, ஓசூர்	1561.41	122	2880.476	.0	0
6	மாவட்ட கால்நடை பண்ணை, கொருக்கை	490.68	48	1458.00	0	0
7	மாவட்ட கால்நடை பண்ணை, உதகமண்டலம்	129.38	31	933.798	0	0
8	மாவட்ட கால்நடை பண்ணை, நடுவூர்	700.00	58.75	1612.85	0	0
9	மாவட்ட கால்நடை பண்ணை, புதுக்கோட்டை	694.08	41	864.00	0	0
10	ஆட்டுப் பண்ணை, சாத்தூர்	151.00	39	212.185	32250	0
11	ஆட்டுப் பண்ணை, முகுந்தராயபுரம்	479.65	14.4	164	0	0
12	தீவன புல் பண்ணை படப்பை	17.00	12	12.86	10000	375
	மொத்தம்	**9447.30**	**1026.15**	**15774.07**	**1195600**	**510**

அரசின் மேற்கூறிய நடவடிக்கைகள், விவசாயிகள் தங்கள் சொந்த நிலங்களில் பசுந்தீவன சாகுபடி மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தை உணர்த்தியுள்ளன. வருங்காலங்களில் இம்முயற்சிகள் தீவன உற்பத்திக்கும் தேவைக்கும் இடையேயுள்ள இடைவெளியை குறைக்க வழிவகுக்கும்.


[2020 மார்ச் 17

9. கால்நடை மருத்துவத்திற்கான உட்கட்டமைப்பு வசதிகள்

கால்நடை பன்முக மருத்துவமனைகள், பெருமருத்துவமனைகள், மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்கள்மூலம் கால்நடைகளின் உடல்நலம் பேணுதல், நோய் கட்டுப்படுத்துதல், மருத்துவ சேவைகள், நோய் ஒழிப்பு மற்றும் இனவிருத்தி சேவைகள் ஆகியவற்றை இத்துறை வழங்கி வருகிறது. நோய்த்தடுப்பு, நோய் கட்டுப்படுத்துதல் மற்றும் நோய் ஒழிப்பு ஆகிய பணிகள் கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள், கோழி நோய் ஆய்வுக் கூடங்கள் மற்றும் நோய் நிகழ்வியல் பிரிவு ஆகியவைமூலம் மேற்கொள்ளப்படுகின்றன. இத்துறையில் எட்டு கால்நடைப் பண்ணைகள், மூன்று ஆட்டுப் பண்ணைகள், ஒரு கோழிப் பண்ணை மற்றும் ஒரு பசுந்தீவன விதை உற்பத்திப் பண்ணை ஆகிய 13 பண்ணைகள் இயங்கி வருகின்றன. விவசாயிகள் வளர்க்கும் கால்நடைகளின் மரபுசார் பண்புகளை மேம்படுத்தி உற்பத்தித் திறனை அதிகப்படுத்தும் உயர் மரபணு வங்கிகளாக இப்பண்ணைகள் செயல்படுகின்றன.

9.1 கால்நடை நிலையங்கள் தோற்றுவித்தல் மற்றும் தரம் உயர்த்துதல்

அரசால் வகுக்கப்படும் திட்டங்கள் மக்களிடையே சென்றடைய கால்நடை நிலையங்கள் தோற்றுவித்தல் அவசியமாகிறது.



2020 மார்ச் 17]

கிராமப்புற கால்நடை விவசாயிகளின் பொருளாதாரத்தை மேம்படுத்த பெரும்பாலான கால்நடை மருந்தகங்களும் கால்நடை கிளை நிலையங்களும் கிராமப்புறங்களில் செயல்பட்டு வருகின்றன.

மாநகராட்சிகள் மற்றும் பெருநகராட்சிகளில் கால்நடை பன்முக மருத்துவமனைகளும் பிரதம மருத்துவமனைகளும் செயல்பட்டு வருகின்றன. நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களில் மருத்துவமனைகள் செயல்பட்டு வருகின்றன.

பருவநிலை மற்றும் தட்பவெப்ப நிலை மாற்றங்களால் ஏற்படும் நோய் தொற்றுகளில் இருந்து கால்நடைகளை பாதுகாக்க கால்நடை பராமரிப்பு துறையின்மூலம் தடுப்பூசி பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதன்மூலம் கால்நடை வளர்க்கும் விவசாயிகளுக்கு ஏற்படும் பொருளாதார இழப்பீடுகள் குறைக்கப்படுகிறது.

மேலும், 56 நடமாடும் கால்நடை மருந்தகங்கள் மற்றும் 51 பார்வை கிளை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. மேற்படி நிலையங்களின்மூலம் கால்நடைகளுக்கு மருத்துவ சிகிச்சை, செயற்கைமுறை கருவூட்டல், மலடு நீக்க சிகிச்சை, குடற்புழு நீக்கம், ஆண்மை நீக்கம் போன்றவை வழங்கப்படுகிறது.

9.2 புதிய கால்நடை கிளை நிலையம் தோற்றுவித்தல்

அரசு வரையறையின்படி ஒரு கால்நடை கிளை நிலையம் தோற்றுவிக்க அப்பகுதியில் குறைந்தபட்சம் 3000 கால்நடை அலகுகளும், அருகில் உள்ள கால்நடை நிலையங்களிலிருந்து குறைந்த பட்சம் 3 கி.மீ இடைப்பட்ட தூரம் இருக்க வேண்டும்.

ஆண்டுதோறும் அரசின் செயற்குறிப்பின்படி புதிய கால்நடைகிளை நிலையங்கள் தோற்றுவிக்கப்படுகின்றன. இதுவரை கடந்த 9 ஆண்டுகளில் மொத்தம் 400 கிளை நிலையங்கள் ரூ.12.45 கோடி மதிப்பில் புதியதாக தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

9.2.1 கால்நடை கிளை நிலையங்களை கால்நடை மருந்தகங்களாக தரம் உயர்த்துவதற்கான வரையறைகள்

- தேசிய வேளாண்மை ஆணையத்தால் நிர்ணயிக்கப்பட்ட 5000 கால்நடை அலகுகளுக்கு ஒரு கால்நடை மருந்தகம் என்ற விதிமுறையைக் கருத்தில் கொண்டு கால்நடை மருந்தகங்கள் தோற்றுவிக்கப்படுகின்றன.

- ஒரு கால்நடை அலகானது ஒரு பசு / எருமை / குதிரை / கழுதை / 10 வெள்ளாடுகள் / 10 செம்மறியாடுகள் / 5 பன்றிகள் / 100 கோழிகளுக்கு நிகரானது.

- ஒரு கிராமத்தில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கையை அலகுகளாக கணக்கில் கொண்டும், அருகில் உள்ள கால்நடை நிலையங்களின் தூரம் ஆகியவற்றை கருத்தில் கொண்டும் கால்நடை கிளை நிலையங்கள் கால்நடை மருந்தகங்களாக தரம் உயர்த்தப்படுகின்றன.

9.2.2 கூடுதல் விதிகள்:

- பேரூராட்சி அல்லது கிராமப்புற பஞ்சாயத்து நிருவாகம் குறைந்தபட்சம் 20 சென்ட் நிலம் நிலையான கால்நடை மருந்தக கட்டடம் கட்டுவதற்கு இடம் வழங்க வேண்டும்.

- தற்காலிக கால்நடை மருந்தகம் இயக்குவதற்கு கிராம ஊராட்சி மற்றும் பேரூராட்சி குறைந்தபட்சம் 3 ஆண்டுகளுக்கு மின்சார வசதியுடன் வாடகை இல்லா கட்டடம் அளிக்க வேண்டும்.

- செயற்கைமுறை கருவூட்டல் எண்ணிக்கை கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும். ஏனெனில் இது அப்பகுதியில் உள்ள இனவிருத்திக்கு உகந்த கால்நடை எண்ணிக்கையை காட்டுகிறது.

இதுவரை கடந்த 9 ஆண்டுகளில் 1,080 கால்நடை மருந்தகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

கால்நடை நிலையம், நோயுற்ற கால்நடைகளுக்கு மருத்துவ சிகிச்சை வழங்கும் மையமாக மட்டுமல்லாது அறிவுசார் மையங்களாகவும் உருமாறியுள்ளது. துறையினால் வழங்கப்படும் எந்த ஒரு சேவையையும் அருகிலுள்ள கால்நடை நிலையத்தில் விவசாயிகள் பெற்றுக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதனால், அனைத்து கால்நடை நிலையங்களுக்கும் தேவைப்படும் உட்கட்டமைப்பு வசதிகள் வழங்கப்படுவது இன்றியமையாததாகிறது. உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி, சிறந்த கால்நடை மருத்துவ சேவைகளை வழங்குவதன் வாயிலாக, கால்நடை உற்பத்தித் திறன் அதிகரிக்கும்.

2020 மார்ச் 17]

ஊரக மேம்பாட்டை முதன்மை நோக்கமாகக் கொண்டு, நபார்டு வங்கியின் ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (RIDF), தேசிய வேளாண்அபிவிருத்திதிட்டம்,மையஅரசின்கால்நடைநிலையங்களை ஏற்படுத்துதல் மற்றும் வலுப்படுத்துதல் திட்டம் மற்றும் மாநில அரசின் நிதிமூலம் துறையில் உள்ள கால்நடை நிலையங்களின் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றின் மூலம் கால்நடை நிலையங்கள் சிறப்பான சேவைகளை வழங்குவதுடன் அறிவுசார் மையங்களாகவும் விளங்குகின்றன

2011-12 ஆம் ஆண்டு முதல் 2018-19 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில், பல்வேறு திட்டங்களின்கீழ் 2,037 புதிய கால்நடை நிலைய கட்டடங்கள் ரூ.614.57 கோடி மொத்த செலவில் கட்டப்பட்டுள்ளன.

இராணிப்பேட்டை கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலையத்தில் செயல்படும் நோய் தடுப்பு மருந்து உற்பத்தி கூடங்கள் உலகத்தரம் வாய்ந்த நல்உற்பத்தி நடைமுறைகள் தரத்திற்கு உயர்த்தப்பட்டு வருகின்றன. இப்பணிகள் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் மற்றும் தேசிய பால் அபிவிருத்தி வாரியம் ஆகியவற்றுடன் கூட்டாக மேற்கொள்ளப்படுகிறது.

மேலும் திருப்பூர் மாவட்டம் பல்லடத்தில், அருகாமையில் உள்ள மாவட்ட கோழி வளர்ப்போர் பயன்பெறும் வகையில் உயிர்பாதுகாப்பு நிலை-2 தரத்தில் கோழி நோய் ஆய்வுக் கூடம் மற்றும் கோழி தீவன பரிசோதனைக் கூடம் ஆகியவை கட்டப்பட்டுள்ளன.

அட்டவணை 17: கட்டமைப்பு மேம்பாடு கட்டுமானப் பணிக்கான மொத்த ஒதுக்கீடு

வ. எண்	திட்டத்தின் பெயர்	கட்டடங்களின் எண்ணிக்கை	மொத்த ஒதுக்கீடு (ரூ. கோடியில்)
1	மாநில நிதி	22	46.51
2	கால்நடை மருத்துவ நிலையங்களுக்குப் புதிய கட்டடம் கட்டும் திட்டம் (ESVHD)	256	25.51

[2020 மார்ச் 17

வ. எண்	திட்டத்தின் பெயர்	கட்டடங்களின் எண்ணிக்கை	மொத்த ஒதுக்கீடு (ரூ. கோடியில்)
3	தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டம் (NADP)	95	16.66
4	நபார்டு (NABARD)	1,664	525.89
மொத்தம்		**2,037**	**614.57**

2011-12-ஆம் ஆண்டு முதல் 2019-20-ம் ஆண்டு முடிய 9 ஆண்டுகளில் 1,460 கால்நடை நிலைய கட்டடங்களில் ரூ.87.20 கோடி செலவில் பழுதுபார்ப்பு மற்றும் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

மேம்படுத்தப்பட்ட உள்கட்டமைப்பு காரணமாக, கால்நடை நிலையங்களில் செய்யப்பட்ட சிகிச்சைகளின் எண்ணிக்கை 2017-18 ஆம் ஆண்டில் 222.45 இலட்சத்திலிருந்தது 2019-20 ஆம் ஆண்டில் 266.56 இலட்சமாக அதிகரித்துள்ளது. மேலும், இதே காலத்தில் செய்யப்பட்ட குடற்புழு நீக்கங்களின் எண்ணிக்கை 258.73 இலட்சத்திலிருந்து 272.42 இலட்சமாக அதிகரித்துள்ளது.

10. விரிவாக்கத் திட்டப் பணிகள்

உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு, விரைவான பொருளாதார வளர்ச்சி, அனைவருக்கும் சமமான வருவாய், வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மை ஆகியவற்றை உறுதி செய்வதற்காக, நமது மாநிலத்தில் வேளாண்மை சார்ந்த பொருளாதாரத்திலிருந்து கால்நடை தொழிலை அடிப்படையாகக் கொண்ட ஒருங்கிணைந்த பண்ணையத்திற்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும். இவை மட்டுமே, வேளாண்மை சார்பைக் குறைத்து விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்க வழிவகுக்கும்.

இந்நோக்கத்தை அடையும் பொருட்டு அதிக எண்ணிக்கையில் கால்நடைகளை வைத்திருக்கும் நிலமற்ற மற்றும் குறு சிறு விவசாயிகளை முறையான கால்நடை வளர்ப்பின்கீழ் கொண்டு வருவதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. கால்நடை வளர்ப்பை மேலும் இலாபகரமான தொழிலாக ஆக்கும் பொருட்டு விவசாயிகளுக்கு தீவனம் அளித்தல், இனவிருத்தி மற்றும் மேலாண்மை

2020 மார்ச் 17]

ஆகியவற்றின் சிறந்த வழிமுறைகள் பற்றிய அறிவு மற்றும் திறன் மேம்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கால்நடை கண்காட்சிகள், கால்நடைகளின் உற்பத்தி மற்றும் உற்பத்தி திறனை பாதிக்கும் குறிப்பிட்ட நோய்களுக்கான கால்நடை நல முகாம்கள் நடத்துவதன் மூலம் இந்த நோக்கங்களை அடையலாம். கால்நடை வளர்ப்பில் சிறந்த வழிமுறைகளை பின்பற்றுவதுடன் விவசாயிகளின் இருப்பிடங்களுக்கு அருகிலேயே முகாம்கள் நடத்தி, கால்நடை மருத்துவ சேவைகள் வழங்குவதால் விவசாயிகளுக்கு அதிக வருவாய் கிடைப்பது உறுதி செய்யப்படுகிறது.

இத்துறையானது ஊராட்சி ஒன்றிய தலைமையிடங்களில் செயல்படும் கால்நடை நிலையங்களில் அசோலா தீவன அலகு மற்றும் நீர்ம தாவர அலகுகளை நிறுவி வருகிறது. இந்தத் தொழில்நுட்பங்கள் செயல்விளக்கமாக செய்து காண்பிக்கப்படுவதால், இவற்றை விவசாயிகள் பின்பற்ற ஏதுவாகிறது. இந்தத் தொழில்நுணுக்கங்களைப் பின்பற்றுவதற்குத் தேவையான தொழில்நுட்பங்களையும் உள்ளீட்டு ஆதாரங்களையும் கால்நடை நிலையங்கள் வழங்குகின்றன. விவசாயிகளின் நலனுக்காக கால்நடை வளர்ப்பு தொடர்பான பல்வேறு பிரச்சினைகள் குறித்து ஆலோசனை வழங்குவதற்கான அலைபேசி செயலி உருவாக்கும் பணியில் இத்துறை ஈடுபட்டுள்ளது.

10.1 கால்நடைகளுக்காக குடிநீர்த் தொட்டி அமைத்தல்

மாநிலத்தில் 24 மாவட்டங்கள் தண்ணீர் இல்லாமல் வறட்சியால் (hydrological drought) பாதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து இத்துறை, முன்னெச்சரிக்கையாக கால்நடைகளுக்குத் தேவையான அளவில் குடிப்பதற்கு உகந்த குடிநீரை வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

இத்துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் ஒத்துழைப்புடனும், தனியாகவும் கால்நடை நிலையங்களில் நீர் ஆதாரத்துடன் கூடிய குடிநீர்த் தொட்டிகளை அமைத்துள்ளது. ஊரகப் பகுதிகளில் உள்ள 1,215 கால்நடை நிலையங்களில் தண்ணீர் தொட்டிகள் கட்டப்பட்டுள்ளன. மேலும் 1,658 கால்நடை நிலையங்களில் குடிநீர் தொட்டிகள் அமைக்கப்பட உள்ளன. இதனால் குடிநீர் குறைவினால் கால்நடைகள் துன்புறுவதையும், அதன் காரணமாக உற்பத்தி மற்றும் வருவாய் இழப்பு ஏற்படுவதையும் தவிர்க்க இத்துறை உறுதி செய்துள்ளது.

[2020 மார்ச் 17

10.2 நீடித்த மானாவாரி விவசாயத்திற்கான இயக்கம்

மானாவாரி நிலப் பகுதிகளில் விவசாயிகளால் வளர்க்கப்படும் கால்நடைகளின் உற்பத்தி மற்றும் இனப்பெருக்கும் திறனை மேம்படுத்தும் நோக்குடன் நீடித்த மானாவாரி விவசாயத்திற்கான இயக்கத்தின்கீழ் கால்நடை பராமரிப்பு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் தாது உப்பு கலவை வழங்கி, உடல் நலம் மேலாண்மை, சினை பிடிப்பு சதவிகிதத்தினை மேம்படுத்திட இனப்பெருக்க மேலாண்மை, தடுப்பு மற்றும் சிகிச்சை பணிகள் மேற்கொண்டு மடிவீக்கநோய் மேலாண்மை ஆகியவை முக்கிய செயல்பாடுகள் ஆகும்.

இத்திட்டம் 2017-18-ல் 25 மாவட்டங்களில், ரூ.19.95 கோடி செலவில் முதல் கட்டமாகவும், 2018-19-ல் 24 மாவட்டங்களில், ரூ.33.19 கோடி செலவில் இரண்டாம் கட்டமாகவும் செயல்படுத்தப்பட்டது. 2019-20-ல் இத்திட்டம் 25 மாவட்டங்களில், ரூ.35.80 கோடி மொத்த ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மொத்தம் 12 இலட்சம் கால்நடைகள் ரூ.88.94 கோடி செலவில் பயனடைந்துள்ளன.

10.2.1 கால்நடைகளின் ஊட்டச்சத்து குறைபாடுகளை களைதல்

மானாவாரி பகுதிகளில் ஊட்டச்சத்து குறைபாடுகளால் பாதிக்கப்பட்டுள்ள உயர் மரபுத் திறன் கொண்ட பசுக்கள் கண்டறியப்பட்டு, அவற்றுக்கு அப்பகுதிக்கு உகந்த தாது உப்புக் கலவை ஒரு பசுவிற்கு ஆண்டுக்கு 14 கிலோ வீதம் வழங்கி அவைகளின் பொது உடல் ஆரோக்கியம் மேம்படுத்தப்படுகிறது.

கட்டம்	பயனடைந்த கால்நடைகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்)
கட்டம் I	2.00
கட்டம் II	3.80
கட்டம் III (தற்காலிகம்)	3.20
மொத்தம்	9.00

10.2.2 இனவிருத்தி குறைபாடுகள்

மானாவாரி பகுதிகளில் இனப்பெருக்க குறைபாடுகளால் பாதிக்கப்பட்டுள்ள பசுக்கள் மற்றும் எருமைகளுக்கு நுண்ணுயிர்

2020 மார்ச் 17]

எதிர்ப்பு மருந்துகள், சுரப்பு நீர் மற்றும் கலவை மருந்துகள் வாயிலாக சரிசெய்யப்பட்டு அவற்றின் சினைப் பிடிப்பு சதவிகிதம் மேம்படுத்தப்படுகிறது.

கட்டம்	பயனடைந்த கால்நடைகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்)
கட்டம் I	0.60
கட்டம் II	1.20
கட்டம் III (தற்காலிகம்)	1.20
மொத்தம்	3.00

10.2.3 மடிவீக்க நோய் சிகிச்சை அளித்தல்

மானாவாரி பகுதிகளில் குறைந்த பால் உற்பத்தி கொண்ட பசுக்கள் மற்றும் எருமைகளுக்கு ஆரம்ப கால மடிவீக்க நோய் ஏதேனும் இருக்குமா என பரிசோதித்து அவைகளுக்கு தேவையான சிகிச்சை அளிக்கப்படுகிறது. இத்துடன் மடிவீக்க நோயால் ஏற்கெனவே பாதிக்கப்பட்ட கால்நடைகளுக்கு தடுப்பு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படுகிறது.

கட்டம்	பயனடைந்த கால்நடைகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்)
கட்டம் I	0.60
கட்டம் II	1.20
கட்டம் III (தற்காலிகம்)	1.20
மொத்தம்	3.00

10.3 ஒருங்கிணைந்த பண்ணை அமைப்பு (Integrated Farming System)

2018-19-ல் தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டம் முன்னோடி திட்டமாக வேளாண் துறை நிதியுதவியுடன் ஈரோடு, மதுரை, தஞ்சாவூர், திருநெல்வேலி மற்றும் விழுப்புரம் ஆகிய ஐந்து மாவட்டங்களில் 2,500 ஒருங்கிணைந்த பண்ணையம் ஏற்படுத்தப்பட்டது.

வேளாண் துறையின் ஒத்துழைப்புடன் செயல்படுத்தப்பட்ட இத்திட்டத்தில் கால்நடைகள் வாங்குதல், காப்பீடு செய்தல் மற்றும்

[2020 மார்ச் 17

நலன் பேணுதல் போன்ற பணிகளுக்கான தொழில்நுட்ப உதவிகள் கால்நடைத் துறையால் மேற்கொள்ளப்பட்டது.

இத்திட்ட வெற்றி காரணமாக இத்திட்டம் 27 மாவட்டங்களில் 2019-20 ஆம் ஆண்டு விரிவுபடுத்தப்பட்டது. 2019-20 ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த பண்ணையம் திட்டத்தில் ரூ.44.50 கோடி மொத்த மானியத்துடன் வேளாண் துறை, தோட்டக்கலை, மலைப்பயிர் துறை, கால்நடை பராமரிப்புத் துறை, சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை ஆகியவற்றின் செயல்பாடுகள் உள்ளடக்கியதாக செயல்படுத்தப்படுகிறது.

5,300 ஒருங்கிணைந்த பண்ணை அமைப்புகள் 28 மாவட்டங்களில் அதாவது காஞ்சிபுரம், கன்னியாகுமரி, அரியலூர் மற்றும் சென்னை மாவட்டங்கள் நீங்கலாக அமைக்கப்பட்டுள்ளது.

கறவை பசுக்கள், ஆடுகள் மற்றும் கோழிகள் மானிய விலையில் விவசாயிகளுக்கு கொடுப்பதற்கான விவரங்கள் கீழ்க்கண்டவாறு:

10.3.1 கறவை மாடுகள்

நான்கு வயதுக்கு மிகாத 2 கறவை பசுக்களுக்கு ரூ.30,000/- மானியம் வழங்கப்படுகிறது. ஒரு கறவை மாட்டிற்கு 15,000/- அல்லது அதன் மொத்த விலையில் 50% இதில் எது குறைவோ அந்த நிதி உதவி அளிக்கப்படும்.

10.3.2 ஆடுகள்

ஆறிலிருந்து எட்டுமாத வயது உள்ள ஆடுகளை (9 ஆடுகள் + 1 கிடா) வெளி சந்தையில் வாங்குவதற்கு ரூ.15,000/- அல்லது 50 விழுக்காடு இதில் எது குறைவானதோ அந்த நிதி உதவி வழங்கப்படும்.

10.3.3 நாட்டுக் கோழிகள்

நாட்டுக் கோழி வளர்ப்பிற்கு உரிய கூண்டு அமைத்து 20 நாட்டுக்கோழிகள் வாங்குவதற்கு ரூ.6,000/- அல்லது மொத்த விலையில் 50 சதவிகிதம் நிதி உதவி அளிக்கப்படும்.

நாட்டுக் கோழி பயனாளிகள் தேர்வு மற்றும் நாட்டுக் கோழி வாங்குதல் ஆகியவை அரசின் முன்னோடி திட்டமான இலவச கறவை மாடுகள் மற்றும் இலவச வெள்ளாடுகள் / செம்மறி ஆடுகள் திட்டத்தின் வழிகாட்டுதலின்படி வேளாண்மைத் துறையுடன் இணைத்து மேற்கொள்ளப்படும்.

2020 மார்ச் 17]

10.4 கால்நடை பாதுகாப்புத் திட்டம் (Livestock Protection Scheme)

கால்நடை பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், கால்நடை மருத்துவ வசதிகள் போதுமான அளவு கிடைக்கப்பெறாத தொலைதூர கிராமங்களில் உள்ள கால்நடைகள் மற்றும் கோழியினங்கள் பயன்பெறும் வகையில் துறையின் விரிவாக்க பணிகளின் ஒரு பகுதியாக தொலைதூர கிராமங்களில் உள்ள விவசாயிகளின் இருப்பிடங்களுக்கே நேரடியாக சென்று முழுமையான உடல்நலம் பேணும் சேவைகளான சிகிச்சை அளித்தல், குடற்புழு நீக்கம், தடுப்பூசி, ஆண்மை நீக்கம் போன்றவை வழங்கப்படுகின்றன.

அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும், ஆண்டு தோறும் 5,500 முகாம்கள், ரூ.2.31 கோடி செலவில் நடத்தப்பட்டுள்ளது. 2018-19-ம் ஆண்டில் மொத்தம் 53.08 இலட்சம் கால்நடைகள் மற்றும் கோழியினங்கள் இத்திட்டத்தின்கீழ் பயன்பெற்றுள்ளன.

2019-20 ஆம் ஆண்டிலும் ரூ.2.21 கோடி செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை 5,500 முகாம்கள் நடத்தப்பட்டு 48.97 இலட்சம் விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

10.5 கால்நடை மற்றும் விலங்கின அறிவியலுக்கான ஒருங்கிணைந்த உயர் ஆராய்ச்சி நிலையம்

சேலம் மாவட்டம், தலைவாசல் கூட்டுரோட்டில் சர்வதேச தரத்தில் ஒருங்கிணைந்த கால்நடை பூங்கா நிறுவப்படும் என மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 13.02.2019 அன்று சட்டமன்றப் பேரவையில் அறிவிக்கப்பட்டது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களது அறிவிப்பினைத் தொடர்ந்து சேலம் மாவட்டம், தலைவாசல் கூட்டு ரோட்டிற்கு அருகில் தேசிய நெடுஞ்சாலை எண் 79-ஐ ஒட்டி அமைந்துள்ள கால்நடை பராமரிப்புத் துறைக்கு சொந்தமான 1102.25 ஏக்கர் பரப்பில் கால்நடை மற்றும் விலங்கின அறிவியலுக்கான ஒருங்கிணைந்த உயர் ஆராய்ச்சி நிலையமானது ரூ.564.44 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படவுள்ளது.

கால்நடை மற்றும் விலங்கின அறிவியலுக்கான ஒருங்கிணைந்த உயர் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் ரூ.196.36 கோடி மதிப்பீட்டில் கால்நடை மருத்துவக் கல்லூரி ஒன்றும் நிறுவப்பட உள்ளது.

[2020 மார்ச் 17

10.5.1 கால்நடை மற்றும் விலங்கின அறிவியலுக்கான ஒருங்கிணைந்த ஆராய்ச்சி நிலையத்தின் குறிக்கோள்கள்

1. இந்த ஆராய்ச்சி நிலையத்தில் நிரூபிக்கப்பட்ட அறிவியல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கால்நடை மற்றும் கோழிப்பண்ணைகள் அமைக்கப்படவுள்ளதால் அவை பண்ணை மாதிரிகளாக அமையும்.

2. கால்நடை மருத்துவ அறிவியல், பால்வளம், கோழியினங்கள் மற்றும் உணவு தொழில்நுட்பங்கள் ஆகியவற்றில் பிரத்யேக மற்றும் மேம்படுத்தப்பட்ட ஆராய்ச்சிகள் மேற்கொள்ள வாய்ப்பாக அமையும்.

3. கால்நடை மருத்துவ அறிவியல், பால்வளம், கோழியினங்கள் மற்றும் உணவு தொழில்நுட்பங்கள் ஆகியவற்றில் முதுகலை மற்றும் முனைவர் பட்ட மேற்படிப்பிற்கான வசதிகள் உருவாக்கப்படும்.

4. இந்த ஆராய்ச்சி நிலையமானது மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் களத்தில் உள்ள விவசாயிகளின் தேவைகளை அறிவதற்கும் அதற்கு தகுந்த தீர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் வாய்ப்பினை உருவாக்கும்.

5. விவசாயிகள் மற்றும் கள கால்நடை மருத்துவர்களின் தேவைக்கேற்ப பல்வேறு பயிற்சிகள் வழங்கப்பட்டு திறன் மேம்படுத்தப்படும்.

6. விவசாயிகள், கால்நடை வளர்ப்போர் மற்றும் தொழில் முனைவோருக்கு தேவைப்படும் பல்துறை சார்ந்த அறிவுரைகள் வழங்குவதற்கும், கால்நடை உற்பத்தி பொருட்களை முறையாக சந்தைப்படுத்தவும் வாய்ப்பாக அமையும்.

கால்நடை மற்றும் விலங்கின அறிவியலுக்கான ஒருங்கிணைந்த ஆராய்ச்சி நிலையத்தில் அமையவுள்ள பிரிவுகள்:

1. கால்நடை பண்ணை வளாகம் –இவ்வளாகத்தில் உள்நாட்டு மாட்டினப் பிரிவு, செம்மறி மற்றும் வெள்ளாட்டினப் பிரிவு, பன்றிப் பிரிவு, உள்நாட்டு நாயினப் பிரிவு, கால்நடை

தனிமைப்படுத்தும் பிரிவு, கால்நடை மருத்துவமனை, ஆய்வகம் மற்றும் கோழியினப் பிரிவுகள் இடம்பெறும்.

2. பால் பதனிடுதல் மற்றும் பால் பொருட்கள் தயாரிப்பு வளாகம் – இவ்வளாகத்தில் கலப்பின கறவை மாட்டுப் பண்ணை பால் பதனிடுதல் மற்றும் பால் பொருட்கள் தயாரிப்பு வசதி, மாட்டுத் தீவனம் மற்றும் தாது உப்புக் கலவை தயாரிப்பு அலகுகள் இடம் பெறவுள்ளது.

3. மீன்வள செயல்முறை வளாகம் – இவ்வளாகத்தில் தீவிர முறையில் காற்றுப் புகுத்திகளைப் பயன்படுத்தி தீவிர முறையில் மீன்குஞ்சு வளர்த்தெடுக்கும் வசதி, நவீன மீன் விற்பனையகம், மீன் வளர்ப்புடன் கூடிய நீர்த் தாவர வளர்ப்பு பிரிவு மற்றும் அலங்கார மீன்வளர்ப்பு பிரிவு அமைக்கப்பட உள்ளது.

4. முதுநிலைக் கல்வி / பட்ட மேற்படிப்பு வளாகம் – இவ்வலுவலகத்தில் நிருவாகக் கட்டடம், கல்வி வகுப்பறை கட்டடங்கள் மற்றும் ஆய்வகங்கள், ஆசிரியர் அறைகள், விடுதிகள் மற்றும் குடியிருப்புகள் ஆகியவை நிறுவப்படும்.

5. விரிவாக்கம் மற்றும் திறன் மேம்பாட்டு வளாகம் இவ்வளாகத்தில் விரிவாக்கம் மற்றும் திறன் மேம்பாடு பயிற்சி மையம், உபகரணங்கள் தயாரிப்பு மற்றும் புனைதல் மையம், கால்நடை பண்ணை மாதிரி அலகுகள் ஒருங்கிணைந்த பண்ணைய அமைப்புகள், மாணவர்கள் மற்றும் விவசாயிகளுக்கான விடுதிகள் ஆகியவை நிறுவப்படும்.

6. ஆராய்ச்சி வளாகமானது கால்நடை இனப்பெருக்கம் மற்றும் தொழில்நுட்பப் பிரிவு மற்றும் ஆராய்ச்சி பிரிவுகள் ஆகியவற்றை உள்ளடக்கியது.

7. தொழில் உருவாக்கம் மற்றும் ஒருங்கிணைப்பு வளாகத்தில் தொழில் உருவாக்கம் மையமும், தொழில் ஒருங்கிணைப்பு மையமும் இடம்பெறும்.

8. இறைச்சி உற்பத்தி மற்றும் பதப்படுத்துதல் வளாகத்தில் செம்மறியாடு, வெள்ளாடு, கோழி மற்றும் பன்றியினங்களுக்கென பிரத்தியேக வசதிகள் ஏற்படுத்தப்படும்.

[2020 மார்ச் 17

9. பசுந்தீவன ஆராய்ச்சி மண்டலம்- இத்தீவன ஆராய்ச்சி வளாகத்தில் இறவை தீவனப்பயிர் உற்பத்தி, மர வகை தீவனப்பயிர்களுடன் கூடிய மேய்ச்சல் நிலம், உலர் தீவன உற்பத்தி, ஊறுகாய்ப் புல் உற்பத்தி மற்றும் தீவன விதை உற்பத்தி ஆகியவற்றிற்கான பரப்புகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

10. பொதுமக்கள் கலந்தாலோசிக்கும் பிரிவு- இப்பிரிவில் குழந்தைகள் பூங்கா, கால்நடை அறிவியல் மற்றும் தொடர்புடைய துறைகளில் பொதுமக்களுக்கு நிகழ்ச்சிகள் நடத்தும் அரங்கு, வாகன நிறுத்தம், போதிய அளவிலான ஓய்வு அறை பொது ஓய்வு அறைகள், வங்கிகள் மற்றும் தானியங்கி பணம் வழங்கும் மையம் ஆகியவை அமைக்கப்படும். மேலும் கால்நடை உற்பத்தி பொருட்கள், விவசாய உள்ளீடுகள், பசுந்தீவன உள்ளீடுகள், உபகரணங்கள் மற்றும் கருவிகளை விற்பனை செய்வதற்கான விற்பனையகங்களும் அமைக்கப்படும்.

10.5.2 பலன்கள்

கால்நடை மற்றும் விலங்கின அறிவியலுக்கான ஒருங்கிணைந்த உயர் ஆராய்ச்சி நிலையத்தின் மூலம் கிடைக்கப்பெறும் நன்மைகள்

10.5.2.1 விவசாயிகளுக்கான பயிற்சி, உயர் மரபுத்திறன் கொண்ட ஜெர்ம்ப்ளாசம் கிடைப்பது, சந்தை தகவல்களை வழங்குதல்

விவசாயிகளுக்கு சிறந்த மரபுத்தன்மை உடைய கால்நடைகள் மிகக்குறைந்த விலையில் கிடைப்பதால் அவர்கள் தங்கள் பண்ணையின் தரத்தை உயர்த்தவும் அதன் வாயிலாக கால்நடைகளின் உற்பத்தி திறனை பெருக்குவதோடு, அதிக இலாபம் சம்பாதிக்கவும் வாய்ப்பு ஏற்படுகிறது.

நவீன வர்த்தக வசதிகளின் விளைவாக இடைத்தரகர்கள் நீக்கப்படுவதால் விவசாயிகளின் உற்பத்தி பொருட்களுக்கு நல்ல சந்தை மதிப்பை பெற்றுத் தர இயலும். அழிவின் விளிம்பில் உள்ள உள்நாட்டு கால்நடை இனங்கள் பாதுகாக்கப்படும். கால்நடை வளர்ப்பில் வணிக ரீதியான முயற்சிகளில் தொழில் முனைவோருக்கான புதிய உத்திகள் உருவாக்கப்படும்.

2020 மார்ச் 17]

கால்நடை உற்பத்தி பொருட்கள் பதப்படுத்துதல் மற்றும் மதிப்பு கூட்டிய பொருட்கள் தயாரிப்பிற்கான புதிய உத்திகள் தொழில்முனைவோருக்கான வியாபார நோக்கில் புதிய திருப்பத்தை ஏற்படுத்தும்.

10.5.2.2 தொழில் முனைவோருக்கான பயிற்சி, திறன் மேம்பாடு மற்றும் சந்தை நுண்ணறிவினை வழங்குதல்

பல்நோக்குடன் கூடிய ஒருங்கிணைந்த பண்ணை வசதிகள் ஆற்றல் மிக்க தொழில்முனைவோருக்கு கால்நடை வளர்ப்பில் தனிக்களத்தினை உருவாக்க வாய்ப்பாக அமையும்.

ஒருங்கிணைந்த பண்ணை முறைகளின் மாதிரிகள் விளக்கப்படுவதன் வாயிலாக கால்நடை வளர்ப்பில் தொழில் முனைவோரை ஈர்ப்பதற்கான சாத்தியங்கள் உருவாகும்.

மாநிலத்திற்குள் மற்றும் மாநிலத்திற்கு வெளியே உள்ள சந்தைகளில் உள்ள பல்வேறு பொருள்களின் விலைகள் குறித்து தொழில் முனைவோருக்கு சந்தை நுண்ணறிவு கிடைக்கும். தொழில் முனைவோருக்கு ஏற்றுமதி வசதியும் செய்து தரப்படும்.

10.5.2.3 மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்கு கற்றலுக்கான உலகத்தர வசதிகளை வழங்குதல்.

ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி பிரிவில் பயிலும் மாணவர்களுக்கு மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்கு புதிய தொழில்நுட்பங்கள் புகழ் பெற்ற தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களில் நல்ல வேலைவாய்ப்பை பெற்றுத்தரும்.

புதிய தொழில்நுட்ப வசதிகளை அறிந்து கொள்வதன் வாயிலாக தங்களது திறனை மேம்படுத்துவதோடு சிறந்த வேலைவாய்ப்பு மற்றும் தொழில் முனைவோராக ஏற்றம் பெறும் வாய்ப்புகளை ஏற்படுத்தி தரும்.

மேலும், மாணவர்கள் புகழ்பெற்ற தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்கள்/ அமைப்புகளில் கூட்டு ஆராய்ச்சிகளில் ஈடுபடவும் வாய்ப்புகள் அமையும்.

10.5.2.4 நுகர்வோர்

நுகர்வோர்களுக்கு தரம் உயர்ந்த சுத்தமான கால்நடை உற்பத்தி பொருட்கள் நியாயமான விலையில் கிடைத்திடும். மின்னணு வர்த்தக

[2020 மார்ச் 17

வசதியானது பலதரப்பட்ட புதிய மற்றும் பதப்படுத்தப்பட்ட கால்நடை உற்பத்தி பொருட்கள் எளிதில் கிடைக்க வழிவகுக்கும்.

தமிழ்நாட்டில் கால்நடை பொருட்கள் உற்பத்தி, பதப்படுத்துதல் மற்றும் சந்தைப்படுத்துதல் உள்ளிட்ட கால்நடை பராமரிப்பு நடவடிக்கைகளுக்கு உற்சாகத்தை அளிக்கும் வகையில் உலகத்தரம் வாய்ந்த வசதிகளை உள்ளடக்கிய இவ்வாராய்ச்சி நிலையத்திற்கு 09.02.2020 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது.

10.6. கால்நடை பொருட்காட்சிகள் மற்றும் கண்காட்சிகள்

அடிப்படை மற்றும் நவீன கால்நடை பராமரிப்பு முறைகள் பற்றிய விவசாயிகளின் செயல்திறன் மற்றும் அறிவாற்றல் மேம்பாட்டிற்கு முக்கியமான கருவியாக விரிவாக்கமும் பிரச்சாரமும் விளங்குகின்றன. இவை பல்வேறு களப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதிலும், விவசாயிகள் எதிர்கொள்ளும் பொருளாதார இழப்பை ஏற்படுத்தும் நோய்களைக் கட்டுப்படுத்துவதிலும் முக்கிய பங்கு வகிக்கின்றன. இவ்விரிவாக்கப்பணி, துறையின்மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களின் அணுகுமுறையை வெளிப்படையாக பொதுமக்களுக்கு விளக்குகிறது.

2019-20 ஆம் ஆண்டில் கால்நடை கண்காட்சிகள் நடத்துவதற்காக கால்நடை பராமரிப்புத் துறைக்கு ரூ.10.50 இலட்சம் ஒதுக்கீடு பெறப்பட்டது.

இத்துறை தேனி, தூத்துக்குடி, வேலூர், விருதுநகர், கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி, சேலம், கரூர், காஞ்சிபுரம் மற்றும் திருச்சி மாவட்டங்களில் நடைபெற்ற அரசு பொருட்காட்சிகளில் பங்கேற்றது.

மேலும், திண்டுக்கல் மாவட்டம் - கொடைக்கானல், வேலூர் மாவட்டம் - ஏலகிரி மற்றும் சேலம் மாவட்டம் - ஏற்காடு ஆகிய இடங்களில் பகுதி சார்ந்த கோடை கண்காட்சிகளிலும், நாமக்கல் மாவட்டம் வல்வில் ஓரி விழா, திருவண்ணாமலை மாவட்டம் தீபத் திருவிழா, நாகப்பட்டினம் மாவட்டம் கோடை விழா மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டம் மாங்கனி விழா ஆகிய நிகழ்ச்சிகளிலும் துறை பங்கேற்றது.

இவை மட்டுமின்றி, 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை சென்னை தீவுத்திடலில்

2020 மார்ச் 17]

நடைபெற்ற 46-வது அரசு பொருட்காட்சி மற்றும் கண்காட்சியிலும் இத்துறை கலந்து கொண்டதோடு, இத்துறையின் அலங்கார ஊர்தி சென்னை குடியரசு தின விழா அணிவகுப்பிலும் கலந்து கொண்டது.

09.02.2020 முதல் 11.02.2020 வரை கால்நடை மற்றும் விலங்கின அறிவியலுக்கான ஒருங்கிணைந்த உயர் ஆராய்ச்சி நிலையம் மற்றும் கால்நடை மருத்துவக் கல்லூரியின் தொடக்க விழாவின் ஒரு பகுதியாக சேலம் தலைவாசலில் விவசாய பெரு விழாவினை இத்துறை ஏற்பாடு செய்து பங்கேற்றது. கண்காட்சியில் 4 இலட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள், தொழில் முனைவோர் மற்றும் மாணவர்கள் கலந்துகொண்டனர். இதில் மீன்வளத் துறைகள், தமிழக கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் கூட்டமைப்பு, வேளாண்மை, வேளாண் பொறியியல், வேளாண் சந்தைபடுத்துதல், தோட்டக்கலைத் துறை, பொதுப் பணித் துறை ஆகிய துறைகள் 214 அரங்கங்களை அமைத்திருந்தன. நேரடி செயல் விளக்கமும் மாதிரி செயல் விளக்கமும் அந்தந்த துறைகள் மற்றும் தனியார் நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்டன.

10.7 உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு பாசன மேலாண்மை நவீனப்படுத்தும் திட்டம்

பல்வேறு துறைகளை ஈடுபடுத்தி உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு பாசன மேலாண்மை நவீனப்படுத்தும் திட்டத்தில், கால்நடை பராமரிப்புத் துறையும் பங்களிக்கிறது. 34 மாவட்டங்களை உள்ளடக்கி 66 உப வடிநிலங்களில் ரூ.38 கோடியில் கால்நடை பராமரிப்புப் பணிகள் 6 ஆண்டு கால அளவில் செயல்படுத்தப்படவுள்ளன.

இதில் முதல் கட்டமாக 22 மாவட்டங்களை உள்ளடக்கி 18 உப வடிநிலங்களில் ரூ. 20.39 கோடியில் 6 ஆண்டு காலத்திற்கு கால்நடை பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள உலக வங்கி ஒப்புதல் அளித்துள்ளது. மேலும், இத்திட்டத்தின் இரண்டாவது பகுதி 16 உப வடிநிலங்களில் 22 மாவட்டங்களை உள்ளடக்கி ரூ.11.81 கோடியில் 5 ஆண்டு காலத்திற்கு செயல்படுத்தப்படும்.

[2020 மார்ச் 17

2019-20-ல், முதல் கட்டத்தில் 18 உப வடிநிலங்களில் ரூ.9.36 கோடியில் கீழ்க்கண்ட கால்நடை பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன:

- 40 புதிய பால் வள ஆர்வலர் குழுக்கள் அமைத்தல்.
- விவசாயிகளின் இருப்பிடத்திலேயே 1.71 இலட்சம் செயற்கைமுறை கருவூட்டல்கள்.
- 6,300 கன்றுகளுக்கு கால முறைப்படி குடற்புழு நீக்கம் மற்றும் தாது உப்பு கட்டிகள் வழங்கி கன்று மேலாண்மை பற்றிய செயல் விளக்கங்கள்.
- 7,560 கறவை மாடுகளுக்கு மடிவீக்க தடுப்பு பெட்டகம் மற்றும் 2,268 கறவை மாடுகளுக்கு சிகிச்சை பெட்டகம் வழங்கி மடிவீக்க மேலாண்மை பற்றிய செயல் விளக்கங்கள்.
- 1,008 மலடு நீக்க முகாம்கள் மற்றும் 10,080 பசு மற்றும் எருமையினங்களுக்கு திட்டமிட்ட இனப்பெருக்கம் மேற்கொள்ளப்பட்டு மலடு நீக்க மேலாண்மை பற்றிய செயல் விளக்கங்கள்.
- தீவன சோளம், தீவன மக்காச்சோளம், தட்டை பயறு மற்றும் அகத்தி விதைகள் இலவசமாக வழங்கி 2,223 ஏக்கர் நிலங்கள் தீவன சாகுபடிக்கு கொண்டு வரப்படுதல்.
- 44 பால்வள ஆர்வக் குழுக்களுக்காக 44 தொடர் ஆய்வுக் கூட்டங்கள் நடத்துதல்.
- அடுக்குமுறை காற்றோட்ட அலகு, அதி அழுத்த கொதி கருவி (autoclave) மற்றும் வெப்பக் கட்டுப்பாட்டுப் பெட்டி (incubator) போன்ற உபகரணங்களை வழங்குவதன் வாயிலாக 4 கால்நடை நோய்ப் புலனாய்வுப் பிரிவு அலுவலகங்களின் புலனாய்வு வசதிகள் வலுப்படுத்துதல்.
- ஆவணப்படுத்துதலை வலுப்படுத்துவதற்காக, 60 அலுவலகங்களுக்கு (மண்டல இணை இயக்குநர் மற்றும் உதவி இயக்குநர்) கணினிகள் மற்றும் அச்சுப் பொறிகள் வழங்குதல்.
- புலனாய்வுத் திறனை அதிகரிப்பதற்காக, 116 கால்நடை மருத்துவர்களுக்கு தொழில்நுட்ப / புலனாய்வு பயிற்சிகள் வழங்குதல்.

2020 மார்ச் 17]

10.8 நடமாடும் கால்நடை அவசர சிகிச்சை ஊர்தி

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் மூலமாக நடமாடும் கால்நடை அவசர சிகிச்சை ஊர்தி, காஞ்சிபுரம், மதுரை, நாமக்கல், திருச்சிராப்பள்ளி மற்றும் தஞ்சாவூர் ஆகிய 5 மாவட்டங்களில் 2015-16 முதல் 2018-19 வரை இயக்கப்பட்டன. மாவட்டத்திற்கு ஒரு நடமாடும் அவசர சிகிச்சை ஊர்தி என்ற வகையில் கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப்பணிகள் துறை மூலமாக இச்சேவைகள் இதர மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டன.

இந்த சேவையை “1962” என்ற கட்டணமில்லா தொலைபேசி மூலமாக பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. கால்நடை வளர்ப்போரின் இருப்பிடங்களிலேயே அவசர மருத்துவ சேவைகள் வழங்கப்படும்.

தொடர் சிகிச்சை தேவைப்படும் நிகழ்வுகளில் கால்நடைகள் அருகில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட அவசர சிகிச்சை மையத்திற்கு கொண்டு செல்லப்படும். துறையின் மூலம் 22 வாகனங்கள் கொள்முதல் செய்யப்பட்டு அவை அவசர ஊர்திகளாக மாற்றியமைக்கப்பட்டது. இத்திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 5.11.2019 அன்று துவங்கப்பட்டது. நடமாடும் கால்நடை அவசர சிகிச்சை ஊர்தியில் இதுவரை 12,258 கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

10.9 மனிதவள மேம்பாடு

நீண்ட நாட்களாக காலியிடங்களாக இருந்த கால்நடை உதவி மருத்துவர் பணியிடங்களை நிரப்புவதற்கு இத்துறை நடவடிக்கை மேற்கொண்டது.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்மூலம் கால்நடை உதவி மருத்துவர்களை பணி நியமனம் செய்வதை இந்திய உச்ச நீதிமன்றம் தடை செய்ததால், அப்பதவிகளில் நிறைய காலியிடங்கள் ஏற்பட்டு, அதனால் விவசாயிகளுக்கு மருத்துவ சேவையை வழங்குவதில் சிரமம் ஏற்பட்டது. இந்தப் பிரச்சினைக்கு தீர்வுகாணும் வகையில் இத்துறை, 818 கால்நடை உதவி மருத்துவர்களை, அதிகபட்சம் 11 மாத கால நியமனம் என்ற ஒப்பந்த அடிப்படையில் நியமித்து நடவடிக்கை மேற்கொண்டது.

[2020 மார்ச் 17

10.10 கால்நடை வளர்ப்பு மற்றும் பால் பண்ணை விவசாயிகளுக்கு கிசான் கடன் அட்டை வழங்குதல்

கிசான் கடன் அட்டை (கேசிசி) வழங்கும் திட்டமானது விவசாயிகளுக்கு குறுகிய கால முறையான கடன் வழங்கும் நோக்கில் 1998 ஆம் ஆண்டு மத்திய அரசினால் தொடங்கப்பட்டது. விவசாயிகள் இந்த திட்டத்தின்கீழ், தங்கள் விவசாய தேவைகளை பூர்த்தி செய்ய கவர்ச்சிகரமான வட்டி விகிதத்தில் கடன்களைப் பெறலாம். மண்டல கிராமப்புற வங்கிகள், கூட்டுறவு வங்கிகள், பொதுத் துறை வணிக வங்கிகள், இந்த கிசான் கடன் அட்டை திட்டத்தினை, வேளாண் விவசாயிகளுக்கு, குறுகிய கால கடன் பெறுவதற்காக இந்தியாவில் செயல்படுத்தியுள்ளன.

கால்நடை விவசாயிகளுக்கும் கிசான் கடன் அட்டை வழங்கும் வசதியை நீட்டிக்கும் பொருட்டு மாநில அளவிலான தொழில்நுட்பக் குழு கூட்டம் (State Level Technical Committee meeting) நடத்தப்பட்டது. மேற்கண்ட கூட்டத்தில் கால்நடை பராமரிப்புத் துறையின் மூலதன தேவை குறித்த பரிந்துரை சமர்ப்பிக்கப்பட்டது. மாநில அளவிலான தொழில்நுட்பக் குழு பின்வரும் பரிந்துரைகளுடன் துறையின் பரிந்துரைகளுக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

- ஏற்கெனவே கிசான் கடன் அட்டை வைத்திருப்பவர்களுக்கு, கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வள செயல்பாடுகளுக்கும், வட்டி வழங்கல் மற்றும் உடனடி திருப்பிச் செலுத்துதல் ஊக்கத் தொகை ரூ.3.00 லட்சம் வரை அனுமதிக்கப்படும். அதே நேரத்தில் புதிய கிசான் கடன் அட்டை வைத்திருப்பவருக்கு அவர்களின் ரூ.2.00 லட்சம் மூலதன தேவைகளுக்கு கடன் வரம்பு இருக்கும்.

- தற்போதுள்ள வழிகாட்டுதல்களின்படி, கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வள விவசாயிகளுக்கு வட்டி வழங்கல் கிடைக்கும். அதாவது, கடன் வழங்கப்படும்போது ஆண்டுக்கு 2% மற்றும் உடனடியாக திருப்பிச் செலுத்தப்பட்டால் “உடனடி திருப்பிச் செலுத்தும் ஊக்கத் தொகை” என்று கூடுதலாக ஆண்டுக்கு 3% கிடைக்கும்.

2020 மார்ச் 17]

11. கால்நடை கணக்கெடுப்பு மற்றும் மாதிரி கணக்கெடுப்புத் திட்டம்

11.1 கால்நடை கணக்கெடுப்பு

கால்நடை கணக்கெடுப்புப் பணி 1919-20 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை கால்நடை கணக்கெடுப்பு நாடு முழுவதும் நடத்தப்பட்டு வருகிறது. இது குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் ஆற்ற வேண்டிய பல்வேறு பணிகளை உள்ளடக்கியது.

தற்போதைய 20-வது கால்நடைக் கணக்கெடுப்பு 2019 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டது. ஐந்தாண்டுக்கு ஒருமுறை நடத்தப்படும் கால்நடை கணக்கெடுப்புப் பணி 100 சதவிகிதம் மத்திய அரசின் நிதி உதவியுடன் நடத்தப்படுகிறது.

மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி நமது மாநிலத்தில் முதன்முறையாக கையடக்க கணினியை கொண்டு 20-வது கால்நடை கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இப்பணிக்கு 3,887 கணக்கெடுப்பாளர்கள், 795 மேற்பார்வையாளர்கள் மற்றும் 130 ஆய்வு அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர். 3,887 கையடக்க கணினிகள், தமிழ்நாடு மின்னணுவியல் கழகம் (ELCOT) மூலம் கொள்முதல் செய்யப்பட்டன.

மாநிலத்தின் தொலைதூர குக்கிராமங்களிலும் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படுவதால் தொடர் இயக்கத்தை உறுதி செய்யும் வகையில் 3,887 எண்ணிக்கை தொடர் மின்விநியோகக் கருவிகள் மற்றும் சிம் கார்டுகள் கொள்முதல் செய்யப்பட்டு கால்நடை கணக்கெடுப்பு பணி நடத்தி முடிக்கப்பட்டது. இப்பணிக்காக மத்திய அரசு முதல் கட்டமாக ரூ. 1.004 கோடி வழங்கியுள்ளது.

திருவள்ளூர் மாவட்டத்தில் பொன்னேரி தாலுகாவில் தண்டல்கழனி வருவாய் கிராமத்தில் மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களால் 1.10.2018 கால்நடை கணக்கெடுப்பு பணி அன்று துவக்கப்பட்டது.

மத்திய அரசின் 20-வது கால்நடை கணக்கெடுப்புப் பணியின் முடிவுகளானது கீழ்கண்டவாறு வழங்கப்பட்டுள்ளது:-

[2020 மார்ச் 17

அட்டவணை 18 : அனைத்து இந்திய 20-வது கால்நடை கணக்கெடுப்பு விவரங்கள் மற்றும் அதனில் தமிழ்நாட்டின் பகிர்வு

வ. எண்	இனங்கள்	அனைத்து இந்தியாவின் 20-வது கால்நடை கணக்கெடுப்பு விவரம்	தமிழ்நாட்டின் 20-வது கால்நடை கணக்கெடுப்பு	சதவிகிதம்
1	அயலின/கலப்பின பசுக்கள்	51356405	7724719	15.04
	நாட்டின பசுக்கள்	142106466	1793941	1.26
	மொத்த பசுக்கள்	**193462871**	**9518660**	**4.92**
2	எருமையினம்	109851678	518795	0.47
3	மிதுன்	386305	0	0.00
4	யாக்	57570	0	0.00
	மொத்த பசுக்கள் மற்றும் எருமைகள்	**303758424**	**10037455**	**3.30**
5	அயலின/கலப்பின செம்மறியாடுகள்	4088133	277650	6.79
	நாட்டின செம்மறியாடுகள்	70172482	4222841	6.02
	மொத்த செம்மறியாடுகள்	**74260615**	**4500491**	**6.06**
6	வெள்ளாடுகள்	**148884786**	**9888746**	**6.64**
7	குதிரைகள் மற்றும் மட்ட கழுதைகள்	342226	5417	1.58
8	கழுதைகள்	123587	1428	1.16
9	கோவேரி கழுதைகள்	84261	305	0.36
10	ஒட்டகங்கள்	251956	7	0.00

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2020 மார்ச் 17]

வ. எண்	இனங்கள்	அனைத்து இந்தியாவின் 20-வது கால்நடை கணக்கெடுப்பு விவரம்	தமிழ்நாட்டின் 20-வது கால்நடை கணக்கெடுப்பு	சதவிகிதம்
11	அயலின/கலப்பின பன்றிகள்	1896944	17106	0.90
	நாட்டின பன்றிகள்	7158544	49666	0.69
	மொத்த பன்றிகள்	9055488	66772	0.74
12	**மொத்த கால்நடைகள்**	**536761343**	**24500621**	**4.56**
13	நாய்கள்	9434039	1296655	13.74
14	முயல்கள்	549941	26513	4.82
15	புழக்கடை கோழிகள்	317073357	21264570	6.71
	பண்ணை கோழிகள்	534736574	99516530	18.61
	மொத்த கோழிகள்	**851809931**	**120781100**	**14.18**

11.2 ஒருங்கிணைந்த மாதிரி கணக்கெடுப்புத் திட்டம்

கடந்த 1977-78 முதல் ஒவ்வொரு ஆண்டும் மத்திய அரசின் 50 விழுக்காடு நிதியுதவியுடன் மாதிரி கணக்கெடுப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில் மத்திய அரசின் கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறையின் வழிகாட்டுதலின்படி பால், முட்டை, இறைச்சி மற்றும் கம்பளி ஆகியவற்றின் உற்பத்தி மதிப்பீடு செய்யப்படுகிறது.

இத்திட்டத்தில் ஒரு ஆண்டானது கோடைக்காலம், மழைக்காலம் மற்றும் குளிர்காலம் என மூன்று பருவங்களாகப் பிரிக்கப்பட்டு, பருவ வேறுபாடுகளால் ஏற்படும் உற்பத்தி மாற்றங்கள் கண்டறியப்பட்டு வருகின்றன. மத்திய அரசின் வழிகாட்டுதல்படி ஒரு மாவட்டத்தில் 15 விழுக்காடு கிராமங்களில் மேற்கூறிய கணக்கெடுப்பு நடத்தப்பட்டு வருகின்றது. கால்நடை வளர்ப்போரின் பொருளாதார முன்னேற்றத்திற்காக, பல்வேறு திட்டங்களை வகுக்கவும், மேற்பார்வையிடவும் மற்றும் மதிப்பாய்வு செய்யவும் அதன் விளைவுகளால் ஏற்படும் தாக்கத்தைக் கணக்கிடவும் மாதிரி

[2020 மார்ச் 17

கணக்கெடுப்புத் திட்டத்தின்மூலம் பெறப்படும் புள்ளிவிவரங்கள் பயன்படுகின்றன.

அட்டவணை 19: பால், முட்டை மற்றும் இறைச்சி உற்பத்தி மதிப்பீடு

பொருள்	அலகு	2018-19	2019-20* (கோடை மற்றும் மழைகால பருவம் மட்டும்)
பால் உற்பத்தி மதிப்பீடு	இலட்சம் மெட்ரிக் டன்	83.62	58.05
முட்டை உற்பத்தி மதிப்பீடு	இலட்சம் எண்ணிக்கை	1,88,422	132252
இறைச்சி உற்பத்தி மதிப்பீடு	மெட்ரிக் டன்	6,33,802	436285

* தற்காலிகம்.

12. ஜல்லிக்கட்டு - தமிழ்நாட்டின் பாரம்பரியம் மற்றும் கலாச்சார அடையாளம்

ஜல்லிக்கட்டுஎன்பதுபொங்கல்திருவிழாவின்போதுதமிழ்நாட்டில் கிராம மக்களிடையே நடத்தப்படுகின்ற பாரம்பரியம்மிக்க கலாச்சார நிகழ்ச்சியாகவும், 5,000 ஆண்டு பழமைவாய்ந்ததுடன், தமிழ்நாட்டின் சமூக பண்பாட்டு பழக்கங்களுடன் வரலாற்றுத் தொடர்பு கொண்டுள்ளதாகும்.

ஜல்லிக்கட்டு நிகழ்ச்சிகள் மாநில அரசிதழில் அறிவிக்கப்படும் இடங்களில் மட்டுமே நடத்தப்படுகின்றன. ஜல்லிக்கட்டு நிகழ்ச்சிகள் தமிழ்நாடு விலங்குகள் வதைத் தடுப்பு (ஜல்லிக்கட்டு நடத்துதல்) விதிகள், 2017-ன் வரையறைகளுக்கு உட்பட்டதாகும்.

ஒரே நேரத்தில் தமிழகத்தின் கலாச்சார உணர்வுகளைப் பாதுகாக்கும் அதே வேளையில், விலங்குகள் வதைத் தடுப்புச் (தமிழ்நாடு திருத்தம்) சட்டம் 2017, பின்பற்றப்படுவது தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுத்ததன்மூலம் உறுதி செய்யப்பட்டது. காளைகள் தேவையில்லாத துன்பங்களுக்கு உட்படுவது முற்றிலும் தவிர்க்கப்பட்டது.

2020 மார்ச் 17]

ஜல்லிக்கட்டு நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் நிகழ்ச்சியுடன் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாக ஜல்லிக்கட்டு நடத்துவதற்கான வழிமுறைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. ஜல்லிக்கட்டு நிகழ்ச்சிகளின்போது செய்யக்கூடிய மற்றும் செய்யக்கூடாதவற்றை காளை உரிமையாளர்கள், மாடு தழுவும் வீரர்கள், நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்கள் ஆகியோர் அறிந்துகொள்ளும்வண்ணம் முக்கிய இடங்களில் சுவரொட்டிகள் மூலமாக விளம்பரப்படுத்தப்படுகிறது.

ஜல்லிக்கட்டு நடத்துவதற்கு முன்பாக, நடத்தப்படும்போது மற்றும் நடந்து முடிந்த பிறகு பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் மிகச் சரியாகப் பின்பற்றப்பட்டன. இந்த நடவடிக்கைகள் காரணமாக மாநிலத்தில் ஜல்லிக்கட்டு நிகழ்ச்சிகளின்போது அசம்பாவிதங்கள் நடைபெறாமல் பெருமளவில் தவிர்க்கப்பட்டது. பிராணிகள் வதைத் தடுப்புச் சட்டம் (தமிழ்நாடு திருத்தச் சட்டம் 2017)-ன்படி ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி முதல் மே மாதம் வரை மாநிலத்தில் நிகழ்ச்சிகள் மாநில அரசிதழில் அறிவிக்கப்படுகிறது. மேலும் அரசு அனுமதி பெறாத இடங்களில் நடத்தப்படும் ஜல்லிக்கட்டு நிகழ்வுகள் மேற்படி சட்டத்திற்கு புறம்பானதாகும்.

2019 ஆம் ஆண்டில் 304 ஜல்லிக்கட்டு நிகழ்வுகளுக்கான அரசாணை வெளியிடப்பட்டது. இவற்றில் 228 ஜல்லிக்கட்டு நிகழ்வுகள் நடைபெற்று முடிந்துள்ளது. பிராணிகள் வதை தடுப்பு சட்டம் (ஜல்லிக்கட்டு நடைமுறை) விதிகள் 2017-ன்படி, ஜல்லிக்கட்டு நிகழ்வுகளின்போது ஏற்படும் விதிமீறல்கள்மீது சட்டப்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து மாவட்ட நிருவாகத்தின்மூலம் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

13. பிராணிகள் நலம் காக்கும் நடவடிக்கைகள்

13.1 தமிழ்நாடு பிராணிகள் நல வாரியத்தின் செயல்பாடுகள்

பிராணிகளுக்கு உணர்வுகளும், உணர்வுகளை வெளிப்படுத்தும் விதமும் நம்மை போன்றே அமையப்பெற்றுள்ளது எனவும் அவைகள் நம்மிடமிருந்து எதிர்பார்ப்பதாகவும் அறிவியல் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இந்திய அரசியலமைப்பு சட்ட விதி 51(A) (g)-ல் “இந்திய நாட்டின் இயற்கை வளங்களான காடுகள், நதிகள், குளங்கள் மற்றும் வன உயிரினங்களைக் காக்கவும், மேம்படுத்தவும் மற்றும்

[2020 மார்ச் 17

அனைத்து உயிரினங்களிடமும் பற்றுதலுடன் நடந்து கொள்வதும் ஒவ்வொரு இந்திய குடிமகனின் கடமை" எனத் தெரிவித்துள்ளதன் அடிப்படையிலும், இந்நாட்டில் பிராணிகள் மனிதத் தன்மையுடனும், இரக்கத்துடனும் நடத்தப்படுவதை உறுதி செய்யும் வகையிலும் தமிழக அரசு "தமிழ்நாடு பிராணிகள் நல வாரியம்" அரசாணை (நிலை) எண் 208, கால்நடை பராமரிப்பு பால் வளம் மற்றும் மீன் வளத் (கா.ப3) துறை, நாள். 24.10.2018-ன் வழி நிறுவியுள்ளது. இவ்வாரியம் தமிழ்நாடு சங்கங்கள் பதிவு சட்டம் 1975-ன்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வாரியமானது தமிழகத்தில் உள்ள பிராணிகளின் நலன் குறித்த பிரச்சினைகளை தீர்க்கும் வகையிலும், அவற்றின் நலனைக் கண்காணிக்கும் வகையிலும் செயல்படும்.

இந்திய பிராணிகள் நல வாரியம், மத்திய மீன் வள, கால்நடை பராமரிப்பு மற்றும் பால் வள அமைச்சகத்தின்கீழ் இயங்கும் ஒரு சட்டப்பூர்வமான அமைப்பு, இவ்வாரியம் பிராணிகள் வதை தடுப்பு சட்டம் 1960-னை மாநில பிராணிகள் நல வாரியத்தின்மூலம் செயல்படுத்துகின்றது. இவ்வாரியத்தின் தலைவராக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், துணைத் தலைவராக மாண்புமிகு கால்நடைபராமரிப்புத்துறைஅமைச்சர் அவர்களும்செயல்படுவார்கள்.

மேலும் இவ்வாரியத்தில் கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை, முதன்மைச் செயலாளர் அவர்களின் தலைமையில் நிருவாகக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. வாரியத்தின் முக்கிய நோக்கமான மனிதாபிமான அடிப்படையில் பிராணிகளை கையாளவும் அவற்றினை பாதுகாக்கவும் பொது மக்களிடம் விழிப்புணர்ச்சி ஏற்படுத்துவதன்மூலம் அடைய முடியும். மேலும், மாநில அரசுக்கு பிராணிகள் நலன் தொடர்பான விதிமுறைகளை கொண்டு சேர்ப்பது. மாவட்ட அளவிலான பிராணிகள் வதை தடுப்புச் சங்கங்களை துவக்கி வரைமுறைப்படுத்துவது, ஜல்லிக்கட்டு நிகழ்வுகளை வரைமுறைப்படுத்துதல், தெரு நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை தொடர்பான தொழில்நுட்பங்களை உருவாக்குதல்.

பிராணிகள் நலம் குறித்து "பிராணிகள் வதை தடுப்புச் சட்டம் 1960"-ன் கீழ் கொண்டு வரப்பட்டுள்ள கால்நடை போக்குவரத்து விதிகள், கால்நடைகளை சந்தைப்படுத்தும் விதிகள், நாய்கள் இனப்பெருக்க விதிகள், செல்லப் பிராணிகள் விற்பனை நிலைய பதிவு செய்யும் விதிகள், விலங்குகள் கருத்தடை விதிகள் போன்ற அனைத்து விதிகளும் பிராணிகள் வதை தடுப்பு சங்கங்களின் செயல்பாடுகளை கண்காணித்தல் மற்றும் கைப்பற்றப்பட்ட கால்நடைகளுக்கான

2020 மார்ச் 17]

பாதுகாப்பு, வசிப்பிடம், கண்காணித்தல் ஆகிய அனைத்து நடவடிக்கைகளும் பிராணிகள் நல வாரியத்தால் செயல்படுத்தப்படும்.

13.2 பிராணிகள் வதைத் தடுப்பு சங்கம்

அனைத்து மாவட்டங்களிலும் விலங்குகள் வதைத் தடுப்பு சங்கங்கள் தோற்றுவிக்கப்படுதல் மற்றும் முறைப்படுத்துதலானது விலங்குகள் வதைத் தடுப்புச் சட்டம் 1960 (1960-ன் 59-வது சட்டம்) பிரிவு 38, உட்பிரிவு 1-ன்கீழ், மத்திய அரசிதழில் வெளியிடப்பட்ட மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தின் சுற்றறிக்கை எண் S.O.271 (E), dated 26.03.2001-ன்படி அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது.

விலங்குகள் வதைத் தடுப்புச் சங்கங்களின் பணிகள், விலங்குகள் வதைத் தடுப்புச் சட்டம் 1960 இன் விதிகளை அமல்படுத்துவதில் அரசாங்கத்திற்கு உதவுவதும், தன் கடமைகளை திறம்பட நிறைவேற்றுவதற்கான துணை விதிகள் மற்றும் வழிகாட்டுதல்களை உருவாக்குவதும், மருத்துவ நிலையங்கள், விலங்கு தங்குமிடங்களை அமைப்பதும் ஆகும்.

உள்ளாட்சி அமைப்புகளால் தோற்றுவிக்கப்பட்டு நடத்தப்படும் அனைத்து வயதான பசுக்கள் காப்பகம் மற்றும் கால்நடை பட்டிகள், விலங்கு வதைத் தடுப்பு சங்கம் அல்லது பிராணிகள் நல வாரியத்தால் கூட்டாக நடத்தப்படும்.

எந்தவொரு சங்கமும் சிறப்பாக மற்றும் திறமையாக நடத்தப்படுவதற்கு வழிகாட்டுவதே இந்திய பிராணிகள் நல வாரியத்தின் பங்கு ஆகும். மாநில அரசு, வாரியத்துடன் கலந்தாலோசித்து, தனக்கு ஒதுக்கப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றுவதற்காக எந்த ஒரு சங்கத்திற்கும் கூடுதல் அதிகாரங்களை வழங்கலாம்.

13.3 விலங்குகள் இனவிருத்தி கட்டுப்பாடு திட்டம்

ஆதரவற்ற நாய்கள் அபரிமிதமாகப் பெருகுவதைத் தடுப்பதற்காகவும், வெறிநாய்க்கடி நோய் நிகழ்வுகளைக் குறைப்பதற்காகவுமே இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. தெரு நாய்களின் எண்ணிக்கையை நகராட்சிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின்மூலம் கட்டுப்படுத்துவதற்கு, மத்திய அரசு பிராணிகள் கருத்தடை (நாய்கள்) விதி (2001) வகுத்துள்ளது.

[2020 மார்ச் 17

இத்திட்டத்தின்கீழ் ஆதரவற்ற நாய்கள் மனிதாபிமான முறையில் பிடிக்கப்பட்டு, கருத்தடை செய்யப்பட்டு, வெறிநோய் தடுப்பூசி போடப்பட்டு அவை பிடித்து வரப்பட்ட பகுதிகளிலேயே மறுபடியும் விடப்படுகின்றன.

நகராட்சி நிருவாகத் துறை, கால்நடை பராமரிப்புத் துறை மற்றும் இந்திய பிராணிகள் நல வாரியம் ஆகியவை ஒருங்கிணைந்து, அனைத்து மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் இத்திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது.

13.4 செல்லப் பிராணிகள் விற்பனை நிலையம்

மாநிலம் முழுவதும் செயல்பட்டு வரும் செல்லப் பிராணி விற்பனை நிலையங்கள் செல்லப் பிராணிகள் விற்பனை நிலைய விதிகள் 2018, அறிவிப்பு G.S.R.844(E), நாள் 06.09.2018, மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட பிராணிகள் வதை தடுப்பு சட்டம் 1960-ன்படி செயல்படும். மேலும் செல்லப் பிராணிகள் விற்பனை நிலையங்கள் மாநில பிராணிகள் நல வாரியத்தால் ஒழுங்குப்படுத்தப்படும்.

செல்லப் பிராணிகள் விற்பனை நிலையம் என்பது செல்லப்பிராணிகள் விற்கப்படும் அல்லது வைக்கப்பட்டுள்ள ஒரு கடை, இடம் அல்லது வளாகம் ஆகும். இதில் செல்லப் பிராணிகள் விற்பனை மற்றும் கொள்முதல் செய்யும் நிகழ்நிலைத் தளங்களும் அடங்கும்.

செல்லப் பிராணிகள் விற்பனை நிலைய உரிமையாளர், விதிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்த பின்னர் ஒரு விண்ணப்பம் மற்றும் பிரமாணப் பத்திரத்துடன் ரூ.5,000 செலுத்தி மாநில பிராணிகள் நல வாரியத்தில் பதிவு செய்ய வேண்டும் என்று விதிகள் குறிப்பிடுகின்றன. இந்த விதிகளின் செல்லப்பிராணிகள் விற்பனை நிலையங்கள் பின்வரும் நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டும்.

செல்லப்பிராணிகள் விற்பனை நிலையங்கள் அங்கீகரிக்கப்பட்ட அரசு கால்நடை மருத்துவரால் பரிசோதிக்கப்பட்ட பின்னர் அவரது அறிக்கையின் அடிப்படையில், உரிமையாளருக்கு அறிவிப்பு கொடுத்தபின் பதிவு தொடரும் அல்லது ரத்து செய்யப்படும். வாரியத்தால் பதிவு செய்யப்பட்ட பின்னரே உரிமம் வழங்கப்படும்.

2020 மார்ச் 17]

எனவே, செல்லப்பிராணிகள் விற்பனை நிலைய உரிமையாளர்கள் தங்களுடைய விற்பனை நிலையங்களை தமிழ்நாடு பிராணிகள் நல வாரியத்தில் பதிவு செய்துகொள்ள வேண்டும் என்று பொது அறிவிப்பு மூலமாக தெரிவிக்கப்படும்.

14. நிலையான வளர்ச்சி இலக்குகள் மற்றும் திட்ட நடவடிக்கைகள்

நிலையான வளர்ச்சி இலக்குகள் என்பது ஐக்கிய நாடுகளின் பொது சபையால் 2030-ஆம் ஆண்டிற்காக 2015-ஆம் ஆண்டில் நிர்ணயித்த 17 உலகளாவிய இலக்குகளின் தொகுப்பாகும். “அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி” என்ற கொள்கையின் அடிப்படையில், உலகின் அனைத்து உயிர்களுக்கும் சமமான வாழ்வாதாரத்தை வழங்குவதே முக்கிய குறிக்கோளாகும். மத்திய அரசைப் போலவே, தமிழக அரசும் 2030-ல் 17 நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கு தேவையான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

நிலையான வளர்ச்சி இலக்குகளான, இலக்கு-1-வறுமை ஒழிப்பு, இலக்கு-2-பட்டினியின்மை நிலை, இலக்கு-3-ஆரோக்கியமான வாழ்வு மற்றும் நல்வாழ்வு, இலக்கு-4-பாலின சமத்துவம், இலக்கு-12-நீடித்த நுகர்வும் உற்பத்தியும் ஆகிய இலக்குகளை அடைய கால்நடை பராமரிப்பு வட்டத்திற்குள் மேலும் அதிக விவசாயிகளைக் கொண்டு வர பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது.

குறியீடு 1.1-அனைத்து இடங்களிலும் அனைத்து வகையிலான ஏழ்மையை ஒழித்தல், குறியீடு 1.2-ஏழ்மையின் அனைத்து பரிமாணங்களின் விகிதத்தை பாதியாகக் குறைத்தல், குறியீடு 1.3- சமூகப் பாதுகாப்பு முறைகளை அனைத்து நிலைகளிலும் குறிப்பாக ஏழைகள் மற்றும் எளிதில் சுரண்டலுக்குள்ளாவோர் பெறும்வண்ணம் நடைமுறைப்படுத்துதல் போன்றவற்றை அடைய இத்துறை பல்வேறு திட்டங்களான விலையில்லா கறவைப் பசுக்கள், வெள்ளாடுகள் / செம்மறியாடுகள், விலையில்லா அசில் கோழிகள் வழங்குதல், கால்நடைகளுக்கான காப்பீட்டினை விரிவுப்படுத்துதல் மற்றும் சிறுபால் பண்ணைகளை ஊக்குவித்தல் போன்ற திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது. இதனால், தனி கால்நடையின் உற்பத்தித்திறன் அதிகரித்து, பால், முட்டை மற்றும் இறைச்சி ஆகியவற்றின் உற்பத்தியை அதிகரிக்க வழிவகை செய்யப்படுகின்றது.

கோழி, செம்மறியாடு மற்றும் வெள்ளாடு வளர்க்கும் விவசாயிகளை ஒன்றிணைத்து “விவசாய உற்பத்தி நிறுவனம்” அமைப்பது, கால்நடைகளில் சினைபிடித்தல் மற்றும் இனப்பெருக்கத்தை அதிகரித்தல் மற்றும் நோய் தாக்குதலை

[2020 மார்ச் 17

குறைத்தல் வாயிலாக நிலையான வருவாயினை ஈட்ட வழிவகை செய்வதன்மூலம் குறியீடு 2.3- நில பயன்பாட்டிற்கான சம உரிமையை பாதுகாத்து, பிற உற்பத்தி வளங்கள் மற்றும் உள்ளீடுகளை வழங்கவும், வேளாண் சாராத வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தித் தர வழிவகை செய்யப்படுகிறது.

குறியீடு 2.5-மரபணு பன்முகத்தன்மை கொண்ட விதைகளை சிறந்த முறையில் பேணுவது, விதைகளின் மரபணு பன்மைத்தன்மையை பேணுதல், பண்படுத்தப்பட்ட தாவரங்களையும், வேளாண்மைக்கு உதவுகின்ற கால்நடைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய வன விலங்குகள் ஆகியவற்றை பேணுதல் என்ற இலக்கினை நாட்டின கால்நடை இனங்களை அவற்றின் மரபுசார் பகுதிகளில் பாதுகாப்பது மற்றும் மேம்படுத்துவதன்மூலம் அவற்றை அழிவிலிருந்து தடுப்பது மட்டுமன்றி உயர் மரபணுவை பாதுகாக்கவும் வழிவகை செய்யப்படுகின்றது. இத்துறை பல்வேறு நாட்டின மாடுகள், செம்மறியாடு மற்றும் வெள்ளாட்டினங்களின் உயிர் மரபணு வங்கிகளை பராமரிப்பதுடன், கள அளவில் மேச்சேரி செம்மறியாடுகளின் மரபணுவை தரம் உயர்த்த நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது. தேசிய விலங்குகள் மரபணு வளங்கள் பணியகத்தில் 4 மாட்டினம், 2 எருமையினம், 3 வெள்ளாட்டினம் மற்றும் 10 செம்மறியாட்டினத்தை தமிழ்நாடு பதிவு செய்துள்ளது. இத்துறை இவ்விலக்கினை எய்திட, திட்டவட்டமான மற்றும் தனித்துவம் கொண்ட புதிய கால்நடை இனங்களை அடையாளம் காணுதல், கூடுதல் உயிர் மரபணு வங்கிகளை மாநிலத்தில் நிறுவுதல் மற்றும் கள அளவில் பதிவு செய்யப்பட்ட இனங்களின் தூய்மைத் தன்மையை பாதுகாத்தல் போன்ற செயல் திட்டங்கள் உள்ளன.

இத்துறை, வருவாய் ஈட்டும் சொத்துக்களை வழங்குவதன் மூலமாக நீடித்த நிலைத்த வாழ்வாதர வாய்ப்புகள் மற்றும் வருவாய் கிடைத்திட வழிவகை செய்து, கிராமப்புற ஏழை குடும்பங்கள் நிரந்தரமாக கல்வி கற்றிட உதவுவதன்மூலம் நீடித்த நிலைத்த வளர்ச்சியின் 4 -ஆம் இலக்கான தரமான கல்வியை அடைய வழிவகை செய்கின்றது.

கால்நடை வளர்ப்பு பெண்களை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் ஒரு தொழிலாகும். பல்வேறு பயனாளிகள் பயன்பெறும் திட்டங்களில் பெண்களை தேர்வு செய்து நீடித்த

2020 மார்ச் 17]

நிலைத்த வளர்ச்சியின் 5-ஆம் இலக்கான பாலின சமத்துவம் அடைய உதவி செய்கின்றது. இதனால் நீடித்த நிலைத்த வளர்ச்சியின் 5-ஆம் இலக்கான முக்கிய குறிக்கோள் பெண்களின் அதிகாரம் அடைய வழிவகை செய்யப்படுகின்றது.

நிலையான வளர்ச்சி இலக்கு-12 நீடித்த நுகர்வும் மற்றும் உற்பத்தியும் இத்துறை பல்வேறு திட்டங்களை செயல்படுத்துவதன்மூலம் தனி கால்நடையின் உற்பத்தித்திறன் அதிகரித்து, பால், முட்டை மற்றும் இறைச்சி உற்பத்தி மேம்படுத்திட வழிவகை செய்யப்படுகின்றது.

அரசாணை (நிலை) எண் 184, கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளம் (த(ம)ஒ) துறை, நாள் 26.12.2019 வழி நிலையான வளர்ச்சி இலக்கு பிரிவுகள் துறையில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இப்பிரிவு திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையின் நிலையான வளர்ச்சி இலக்குகள் அலகு, செயற்குழுக்கள், மாநில, மாவட்ட மற்றும் கள அலுவலகங்கள் மற்றும் நிலையான வளர்ச்சி இலக்குகள் குறித்து பணிபுரியும் இதர நிலையங்களுடன் ஒருங்கிணைத்து செயல்படும்.

நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைந்து, கிராமப்புற ஏழைகளின் பொருளாதார நிலையை மேம்படுத்தி, முதன்மை பிரிவின் வளர்ச்சிக்கு இத்துறை சிறப்பு முக்கியத்துவம் அளித்து வருகின்றது.

15. காலநிலை மாற்றம் மற்றும் நெகிழ்திறன் அமைப்பு

காலநிலை மாற்றம் என்பது உலகில் நீண்ட காலமாக நிலவி வரும் குறிப்பிடத்தக்க நீண்ட மாற்றத்தை குறிக்கின்றது. காலநிலை மாற்றத்திற்கான தமிழ்நாடு மாநில செயல் திட்டம் 2.0-ன்கீழ் தழுவுதலுக்கு கண்டறியப்பட்ட ஏழு பிரிவுகளில், நிலைக்கத்தக்க வேளாண்மையும் ஒன்றாகும்.

கால்நடைகள் மற்றும் கோழியின எண்ணிக்கையில், பால் உற்பத்தியும் மற்றும் முட்டை உற்பத்தியும் கால்நடை வளர்ப்பில் முக்கிய பங்காற்றும் காரணிகள் ஆகும்.

[2020 மார்ச் 17

15.1 காலநிலை மாற்றத்தைத் தழுவிட மேற்கொள்ளப்படும் உத்திகள் பின்வருமாறு:

1. தீவனம் மற்றும் பசுந்தீவனம் ஆண்டு முழுவதும் கிடைப்பதை உறுதி செய்யும்பொருட்டு மாநில தீவன அபிவிருத்தித் திட்டம், தேசிய கால்நடை இயக்கம் மற்றும் தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனமயமாக்குதல் திட்டங்கள்மூலம் பல்வேறு வகையான புல், தானியம், பயறு தீவனங்கள், மரக்கன்றுகள், புல்நறுக்கும் கருவிகள் மற்றும் அசோலா அலகுகள் விநியோகிக்கப்படுகின்றன.

2. குறுகிய மற்றும் நீண்ட காலங்களில் நோய் கிளர்ச்சி பற்றி முன்கூட்டியே அறியவும், வெக்கை நோய் மற்றும் பறவைக் காய்ச்சல் கடுங்கண்காணிப்பு மேற்கொள்ள மற்றும் கோமாரி நோய், சப்பை நோய், தொண்டை அடைப்பான் நோய், ஆட்டுக்கொல்லி நோய் மற்றும் கருச்சிதைவு நோய் ஆகியவற்றை தடுக்கும்பொருட்டு தடுப்பூசிப் பணியும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

3. உள்நாட்டு இனங்களுடன் இனப்பெருக்கத்தை ஊக்குவிப்பதன் வாயிலாக காலநிலை மாற்றம் எதிர்கொள்ளும் திறனை மேம்படுத்திட, வேளாண் பருவநிலை மண்டலத்திற்கு ஏற்றவாறு செயற்கை முறை கருவூட்டல் மற்றும் திட்டமிடப்பட்ட இனப்பெருக்கம் செய்தல்.

4. பால் உற்பத்தியை அதிகரிக்கும்பொருட்டு சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு கால்நடை பராமரிப்புத் துறை, கால்நடை நோய் தெரிவித்தல், ஊட்டச்சத்து மற்றும் பால் கூட்டுறவு சங்கங்களில் பங்கேற்க தேவையான பயிற்சியினை வழங்குதல், விலையில்லா கறவை பசுக்கள் வழங்குதல் மற்றும் தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனமயமாக்குதல் போன்ற திட்டங்களின்மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

காலநிலை மாற்ற செயல்பாடுகளை ஒருங்கிணைக்க மாநில, மாவட்ட மற்றும் கோட்ட வாரியாக காலநிலை மாற்ற பிரிவுகள் துறையில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

TRUTH ALONE TRIUMPHS

2020 மார்ச் 17]

16. துறையின் முக்கிய பலன் பகுதிகள் (Key Result Areas)

இத்துறையில் கடந்த பத்தாண்டுகளில் கால்நடைகளின் உற்பத்தி திறனை மேம்படுத்தி உற்பத்தியை பெருக்கும் அடிப்படையில் கீழ்க்கண்ட முக்கிய பலன் பகுதிகள் கண்டறியப்பட்டுள்ளன.

16.1 கால்நடையின் தனி உற்பத்தி திறனை மேம்படுத்துவது

இத்துறை பால், முட்டை மற்றும் இறைச்சி உற்பத்தியை ஆண்டுக்கு 5 சதவீதம் அதிகரிக்க உரிய முயற்சிகள் மேற்கொள்ளும். இதற்காக பசுக்கள், எருமைகள், செம்மறியாடுகள் மற்றும் வெள்ளாடுகளின் மரபுத் திறன் மேம்படுத்துவது, மலட்டுத் தன்மை மற்றும் மடிவீக்க நோய் குறைப்பது, நோய் எதிர்ப்புத் திறனை அதிகரிப்பது, கால்நடை கொட்டகை சூழலை மேம்படுத்துவது போன்ற பல்வேறு உத்திகள் திட்டமிடப்பட்டுள்ளன.

16.2 பசுந்தீவனம் கிடைத்தல்

கால்நடை பராமரிப்புத்துறை, தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் மற்றும் வேளாண்மைத் துறை அலுவலர்களை கொண்டு மாவட்ட அளவிலான குழு அமைக்கப்படும். இக்குழு மாவட்டத்தின் பசுந்தீவன தேவை மற்றும் கிடைக்கும் அளவை ஆராய்ந்து, பசுந்தீவன அளவு மற்றும் மரபு சாரா தீவன பொருட்கள் அதிகரிக்க மாவட்ட வாரியான உத்திகளை வழிவகுக்கும்.

16.3 முட்டை, முட்டை பொருட்கள் மற்றும் இறைச்சி ஏற்றுமதியை அதிகரித்தல்

கால்நடை பொருட்களின் ஏற்றுமதியை பெருக்கிட நோயில்லா பகுதிகளை மேலும் அதிகரிக்க இத்துறை ஏற்ற சூழலை ஏற்படுத்தும். மேலும் இறைச்சி மற்றும் கோழி பொருட்களை பதப்படுத்திட குளிர்சாதன வசதிகள் ஏற்படுத்தப்படும்.

16.4 விவசாயிகளுக்கு அதிக வருவாய் ஈட்டிட பதப்படுத்துதல் மற்றும் தயாரிப்பு பல்வகைப்படுத்துதலுக்கான வசதிகளை அதிகரித்தல்

அரசு வரம்பிற்குள் தொழில்முனைவோர் பால், முட்டை மற்றும் இறைச்சி பொருட்களை பதப்படுத்துதல் அலகு நிறுவுவதற்கும், வணிக அடைகாக்கும் மையங்கள் மற்றும் திறன் மேம்பாட்டு மையம் நிறுவ இத்துறை வழிவகை செய்யும்.

[2020 மார்ச் 17

16.5 விவசாயிகள் தயாரிப்புகளை சிறந்த முறையில் வர்த்தகம் செய்ய நிலையான இணைப்பினை உருவாக்குதல்

கோழி, செம்மறியாடுகள் மற்றும் வெள்ளாடு விவசாயிகள் குறைந்த உள்ளீடு செலவுகள், தற்போதைய சந்தை நிலவரம், நேரடி விற்பனை/பொருட்களை சந்தையில் விற்பனை செய்தல் மற்றும் சிறந்த பேரம் பேசுதல் திறனின் பலனை அடைந்திட, இத்துறைமூலம் உழவர் உற்பத்தியாளர் அமைப்பு உருவாக்கப்படும். ஆரம்ப நிலையில், கோழி / இறைச்சி கால்நடைகளுக்காக கிராம அளவில் விவசாய விருப்ப குழுக்கள் ஏற்படுத்தப்படும். இரண்டாம் நிலையில், அதே கிராமம் அல்லது அருகாமை கிராமங்களில் செயல்படும் ஐந்து விவசாய விருப்ப குழுக்களை ஒருங்கிணைத்து விவசாய உற்பத்தி குழு அமைக்கப்படும். இறுதியாக, விவசாய உற்பத்தி குழுக்களை ஒருங்கிணைத்து விவசாய உற்பத்தி நிறுவனம் / அமைப்பு ஏற்படுத்தப்படும்.

16.6 கால்நடை நோய் நிகழ்வுகளை குறைத்தல்

கால்நடை நோய்களை கட்டுப்படுத்திட, கண்காணிப்புத் திறனை அதிகரிப்பது இன்றியமையாததாகும். 100 சதவிகிதம் தடுப்பூசி, கள அளவில் நோய் கண்டறியும் சாதனங்கள் பயன்படுத்துதல், உடல்நல மேலாண்மை நடவடிக்கைகள், தடுப்பூசி முன் குடற்புழு நீக்கம், நிலையங்களில் உருவாகும் உயிர்மருத்துவ கழிவுகள் சரியான முறையில் கழிப்பது போன்ற உத்திகள் மேற்கொள்ளப்படும்.

16.7 அடிமட்ட நிலை நிறுவனங்களின் வசதிகளை மேம்படுத்துதல்

பல்வேறு நிலையங்களுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை இத்துறை செய்து கொடுக்கும் நிலையங்களில் விவசாயிகள் மற்றும் கால்நடை மருத்துவர்களுக்கு கருத்தரங்குகள் மற்றும் தொழில்நுட்ப கூட்டங்கள் நடத்த வசதி செய்யப்படும். கால்நடை நிலையங்களுக்கு தேவையான கட்டடங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளான ஆழ்துளை கிணறுகள், அறையணிகள், நோய் கண்டறியும் மற்றும் அறுவை சிகிச்சை உபகரணங்கள் வழங்கப்படும்.

16.8 விரிவாக்கம் மற்றும் மக்களை சென்றடையும் திட்டங்களின் வரம்பை விரிவாக்குதல்

மக்களை சென்றடையும் திட்டங்களுக்கு விரிவான விளம்பரம் செய்யப்படும். தகுந்த படங்களுடன் விளம்பரங்கள் தாய்மொழியில்

2020 மார்ச் 17]

சிறிய புத்தகங்கள் மற்றும் துண்டு பிரசுரங்களாக அச்சிடப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

16.9 உலக தரத்திற்கேற்ப சுகாதார குறிகாட்டிகளை அடைதல்

உலக சந்தையில் போட்டியிட ஏதுவாக சர்வதேச தரத்திற்கு இணங்க கால்நடை பொருட்களின் உற்பத்தியை மேம்படுத்திட துறை வழிவகை செய்யும். தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்துடன் இணைந்து கால்நடைகளுக்கான தீவிர பரிசோதனை மற்றும் கண்காணிப்பு மேற்கொள்ளப்படும்.

16.10 நாட்டின கால்நடைகளை பாதுகாத்தல்

நாட்டின கால்நடை இனங்களை அவற்றின் மரபுசார் பகுதிகளில் பாதுகாப்பதும், விரிவாக்கம் செய்வதும் அவசியமாகும். செயற்கைமுறை கருவூட்டல் தொழில்நுட்பம் ஆடுகளுக்கும் விரிவுப்படுத்த வேண்டும்.

16.11 கால்நடைகளில் சினைப்பிடித்தல் மற்றும் இனப்பெருக்க வழிகளை அதிகரித்தல்

தேவையான இடங்களில் புதிய செயற்கைமுறை கருவூட்டல் நிலையங்கள் ஏற்படுத்தியும் பசுக்களின் இனப்பெருக்க சூழ்நிலையை தகுந்த உத்திகள்மூலம் அதிகரித்தல், மென்பொருள் பயன்பாட்டை கொண்டு இனப்பெருக்கத் திறனை கண்டறிதல், இனப்பெருக்கத்திற்கு உகந்த பசு மற்றும் எருமைகளை கண்டறிதல் மூலமாக இத்துறை செயற்கைமுறை கருவூட்டலை மற்றும் சினை பரிசோதனை சதவிகிதத்தினை அதிகரிக்க வழிவகை செய்யும்.

16.12 முக்கிய பகுதியாக கால்நடைகளின் நலன்

தமிழ்நாடு விலங்குகள் நல வாரியம் பல்வேறு கால்நடை நல விதிகளான கால்நடைகளை சந்தைப்படுத்துதல், நாய் இனப்பெருக்கம் மற்றும் சந்தைப்படுத்துதல் விதிகள், செல்லப் பிராணிகள் விற்பனை நிலையம் பதிவு செய்யும் விதிகள் மற்றும் கால்நடை போக்குவரத்து விதிகள் செயல்படுத்தப்படுவதை கண்காணிக்கும். இத்துடன், தெருநாய் கருத்தடை மற்றும் வெறிநோய் தடுப்பூசித் திட்டத்தை கண்காணிக்கும்.

[2020 மார்ச் 17

16.13 கால்நடைகளின் காப்பீட்டினை விரிவுப்படுத்துதல்

அனைத்து வகையான கால்நடைகள் மற்றும் கோழிகளுக்கான காப்பீடுத் திட்டம் இத்துறைமூலம் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

17. துறைகளுக்குகிடையேயான ஒருங்கிணைப்பு / மாநிலங்களுக்கு இடையில் ஒருங்கிணைப்பு

17.1 மாவட்ட அளவிலான மன்றம்

அனைத்து மாவட்டங்களிலும் கால்நடை பராமரிப்புத் துறை, தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் மற்றும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ மற்றும் அறிவியல் பல்கலைக்கழக அலுவலர்களை கொண்டு மாவட்ட அளவிலான மன்றம் அமைக்கப்பட்டுள்ளது. கால்நடை பராமரிப்புத் துறைக்காக அடையாளம் காணப்பட்ட முக்கிய முடிவு பகுதிகளை எய்துவதற்கான தேவைகள் மற்றும் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து மாவட்ட அளவிலான மன்றம் விவாதிக்கும்.

மேலும் மாவட்டத்தில் எதிர் கொள்ளப்படும் குறிப்பிடத்தக்க பிரச்சினைகள் மற்றும் அதற்காக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து இம்மன்றம் விவாதிக்கும். இக்கூட்டத்தில் தேவைப்படின் வேளாண்மைத் துறை, பொருளாதாரம் மற்றும் புள்ளியியல் துறை, வருவாய்த் துறை போன்ற இதர அரசு துறைகள் கலந்துக் கொள்ள அழைக்கப்படுகிறார்கள்.

17.2 மாநிலங்களுக்கு இடையில் ஒருங்கிணைப்பு

பெரும்பாலான கால்நடை நோய்கள் தொற்று நோய்த் தன்மை உடையவையாகும். இவை கால்நடை வளர்ப்போருக்கு பெரும் பொருளாதார இழப்புகளை ஏற்படுத்துகின்றன, எனவே இதுபோன்ற நோய்கள் பரவாமல் தடுக்க வேண்டியது அவசியம். இந்த சூழலில், அண்டை மாநிலங்களுடன் நெருக்கமான ஒருங்கிணைப்பு அவசியமாகும்.

நிகழ் நேர அடிப்படையில் நோய் கிளர்ச்சி தொடர்பான தகவல்களைப் பகிர்வது, நோய்த்தொற்றின் காரணம், பாதிக்கப்பட்ட கால்நடை இனங்கள், எச்சரிக்கை மற்றும் கண்காணிப்பு மண்டலங்களை வரையறுக்கும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் போன்ற முக்கியமான தகவல்களைப் பரிமாறிக்கொள்ளுதல் ஆகியவை போதிய கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை எடுக்க உதவும்.

2020 மார்ச் 17]

நோயின் நிலை குறித்து தென் மாநில கால்நடை பராமரிப்புத் துறை ஒருங்கிணைப்பு அதிகாரிகளுடன் காலாண்டு கூட்டங்கள் நடத்தப்படுகின்றன.

அடைப்பான் நோயைக் கட்டுப்படுத்துவது தொடர்பான பிரச்சினைகள் குறித்து விவாதிக்க ஆந்திரா, தமிழ்நாடு, கேரளா மற்றும் தமிழ்நாட்டின் எல்லை மாவட்டங்களின் நோய் புலனாய்வு அலுவலர்களுடன் வருடத்திற்கு ஒரு முறை பிரத்யேகமான கூட்டமும் நடத்தப்படுகிறது. மாநிலங்களுக்கு இடையில் பரஸ்பர பிரச்சினைகள் குறித்து விவாதிப்பதற்காக முதன்மை செயலாளர்கள் அளவிலான வழக்கமான தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது.

17.3 மாநில எல்லைகளைக் கடக்கும் கால்நடைகளின் நகர்வு

தனிநபர்கள் / முகமைகள், வர்த்தக நோக்கங்களுக்காக எல்லைகளைக் கடந்து கால்நடைகளை கொண்டு செல்வது குறிப்பிடத்தக்க பிரச்சினை ஆகும். மேய்ச்சல் காரணமாகவோ, கால்நடைகளாகவோ அல்லது பால், இறைச்சி, முட்டை போன்ற கால்நடைப் பொருட்களாகவோ வணிக ரீதியில் மாநில எல்லைகளில் கால்நடைகளின் கட்டுப்பாடற்ற நடமாட்டம் இருப்பதால், எல்லைகளை கடந்து நோய்கள் பரவுவதற்கான அச்சுறுத்தல் இயல்பாகவே உள்ளது.

கால்நடைகளைக் கொண்டுசெல்வது தொடர்பாக தற்போதுள்ள சட்ட விதிகளின் மீறல்கள் பொருத்தமான முறையில் கையாளப்படுகின்றன. அறிவிக்கக்கூடிய கால்நடை நோய் கிளர்ச்சி காலங்களில் மாநிலங்களுக்கு இடையேயான எல்லை சோதனை சாவடிகள் நிறுவப்படுகிறது. கால்நடைகளை நோய்களிலிருந்து பாதுகாக்க, வாகனங்கள், கால்நடை பொருட்கள், மூலப்பொருட்கள் போன்றவை சோதனைச் சாவடிகளில் கிருமி நீக்கம் செய்து போதுமான முன்னெச்சரிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

18. கால்நடை பேரிடர் மேலாண்மை

வெள்ளம், கடலோர மாவட்டங்களில் சூறாவளி மற்றும் வறட்சி போன்ற இயற்கை பேரழிவுகளே மாநிலத்தில் பொதுவாக எதிர்கொள்ளும் பேரழிவுகள் ஆகும். இவை ஒவ்வொன்றிற்கும் பொதுவான ஆயத்தமும் சில குறிப்பிட்ட தேவைகளும் உள்ளன. பேரழிவுகள், வாழ்க்கை வளங்கள், இயக்கம், உரிமையாளர்களின்

உடல்நலம் மற்றும் விலங்குகளின் சுகாதாரம் ஆகியவற்றை பாதிக்கின்றன.

கால்நடைகளின் இறப்பு மற்றும் அவை அனுபவிக்கும் காயங்கள் தவிர, எந்தவொரு பேரழிவும் மன அழுத்தம், கருக்கலைப்பு, கால்நடை நோய்கள் பரவுதல், மருத்துவமனையில் சேர்க்கப்படுதல் மற்றும் உயிர் பிழைத்த விலங்குகளை பராமரித்தல், விலங்குகளின் இறந்த உடல்களை அகற்றுவது போன்றவற்றால் உற்பத்தி / உற்பத்தித்திறன் குறைவுக்கும் காரணமாக அமைகின்றன.

விவசாயிகள் எதிர்கொள்ளும் இழப்புகள் கால்நடைகள் இழப்பு, மேய்ச்சல் நிலங்கள் கிடைக்காததால் உற்பத்தி இழப்பு, தீவன வளங்கள் இல்லாதது, அழற்சி நோய் நிலைமைகளுக்கு உட்படுதல் போன்றவை. இதன் விளைவாக விவசாயிகளின் பொருளாதார நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டு அவர்கள் இன்னல்களுக்கு ஆளாகின்றனர்.

வெள்ளம், சூறாவளி போன்ற பேரழிவுகளின்போது தமிழ்நாட்டின் 12 கடலோர மாவட்டங்கள் மிகவும் பாதிக்கப்படுகின்றன. வெள்ளம், வறட்சி, சுனாமி போன்ற பல்வேறு பேரழிவுகளை அரசு எதிர்கொள்ளும்போது, கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் துறையானது, தீவனக் கிடங்குகளை ஏற்படுத்தி, கால்நடைகளுக்கு தீவனம் வழங்குவதன்மூலம் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் பாதிக்கப்படக்கூடிய கால்நடைகளுக்கு தடுப்பூசி போடுவதன் மூலமும், குடற்புழு நீக்கம் நோய்க் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

முறையான மற்றும் நன்கு சிந்திக்கப்பட்ட நெறிமுறையானது பேரழிவுகளின் விளைவுகளை குறைப்பதுடன் விவசாயிகளும் நன்கு பாதுகாக்கப்படுகின்றனர்.

இயற்கை பேரழிவுகளுக்கான ஆயத்தமானது, இயற்கை பேரழிவுகளின் பல்வேறு வழிமுறைகளைப் பற்றி கால்நடை மருத்துவர்களுக்குத் தெளிய வைப்பது, உள்ளூர் சமூகங்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவது ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். இவற்றைச் செய்துவிட்டால், பேரழிவை எதிர்கொள்ளும்பொருட்டு அமைப்புகளை இயன்றவரை சிறப்பாக தயார்நிலைக்குக் கொண்டு வந்து விட முடியும்.

பாதிக்கப்பட்ட அனைத்து கால்நடைகளுக்கும் தீவனம் கிடைப்பதை உறுதி செய்தல், தடுப்பூசி போடுவதன் வாயிலாக

2020 மார்ச் 17]

தொற்று நோய்கள் பரவாமல் கால்நடைகளைக் காத்தல் ஆகியவை துறையால் மேற்கொள்ளப்படுகின்றன.

போதிய அளவிலான தடுப்பூசிகள் இருப்பு, விரைவான தகவல்தொடர்புக்கு வசதி ஏற்படுத்தித் தருதல் மற்றும் பணியாளர்களை திரட்டுதல் போன்ற நடவடிக்கைகளை துறை உறுதி செய்கிறது.

மேலும், கால்நடைகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதை உறுதி செய்வதற்காக, தண்ணீர் வசதியுடன்கூடிய கால்நடை கொட்டகைகளை துறை ஏற்படுத்தித் தரும்.

19. தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமையின் செயல்பாடுகள்

கால்நடை மேலாண்மை, கறவை மாடு அபிவிருத்தி, உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை மேம்படுத்துதல் போன்ற செயல்பாடுகளுக்கு கறவை இனப்பெருக்கம் இன்றியமையாத பங்கு வகிக்கின்றது. தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை 2002-03 ஆம் ஆண்டு பசு மற்றும் எருமை இனப்பெருக்கத் திட்டங்களை முனைப்புடன் செயல்படுத்த தோற்றுவிக்கப்பட்டு 09.01.2003 முதல் பசு மற்றும் எருமையின இனவிருத்தித் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

19.1 இம்முகமையின் முதன்மை நோக்கம்

பசு மற்றும் எருமைகளின் பால் உற்பத்தி திறன் மற்றும் உற்பத்தி அளவை மேம்படுத்த இனப்பெருக்க வயதிலுள்ள அனைத்து பசு மற்றும் எருமைகளை வரையறுக்கப்பட்ட இனப்பெருக்க திட்டத்தின்கீழ் கொண்டுவருவதே இம்முகமையின் முதன்மை நோக்கமாகும்.

19.2 செயல்பாடுகள்

முதன்மை நோக்கத்தை அடைய செயற்கைமுறை கருவூட்டல் வசதிகளை விரிவுபடுத்துதல், செயற்கைமுறை கருவூட்டல் நிலையங்களில் உட்கட்டமைப்பு, உறைவிந்து மற்றும் இதர இனவிருத்தி உள்ளீடுகள் விநியோக அமைப்புகளை வலுப்படுத்துதல், செயற்கைமுறை கருவூட்டாளர்களுக்கு திறன் மேம்பாடு, திறன் மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்துதல், உறைவிந்து உற்பத்தி

[2020 மார்ச் 17

நிலையங்களுக்கு உயர்ந்த மரபு திறன் கொண்ட காளைகளைப் பெற வழிவகை செய்தல் ஆகியன.

மேலும், உயர்ந்த மரபணு திறன் வாய்ந்த கன்று உற்பத்தியை துரிதப்படுத்த கருமாற்று தொழில்நுட்பத்தை செயல்படுத்துதல், கால்நடைகளை அடையாளம் காணுதல், உள்நாட்டினங்களை பாதுகாத்தல், காளைகளின் மூலக்கூறு ஆய்வு செய்ய வழிவகை செய்தல், அதிக உற்பத்தித் திறன்வாய்ந்த மரபுதிறன் கொண்ட காளைகளிலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட உறைவிந்து பயன்படுத்தி வரையறுக்கப்படாத பசுக்களை மேம்படுத்துதல், இனவிருத்தி கொள்கையின்படி செயற்கைமுறை கருவூட்டல் திட்டத்தை விரிவுபடுத்த கால்நடை வளர்ப்போரின் வீட்டிற்கே சென்று செயற்கைமுறை கருவூட்டல் பணி மேற்கொள்ளுதல், துயர்துடைப்பு மற்றும் இன்னல் மேலாண்மைக்காக கால்நடை காப்பீடு ஆகிய திட்டங்கள் 2019-20 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டன.

19.2.1 செயற்கைமுறை கருவூட்டல் வசதிகளை விரிவுபடுத்தல்

இனப்பெருக்க வயதிலுள்ள அனைத்து பசு மற்றும் எருமைகளை வரையறுக்கப்பட்ட இனப்பெருக்க திட்டத்தின்கீழ் கொண்டு வர ரூ.140.00 இலட்சம் செலவில் 175 ஊரக இளைஞர்களுக்கு ஆ-மித்ரர்களாகப் பணியாற்ற செயற்கைமுறை கருவூட்டல் பணி மேற்கொள்ள பயிற்சியளித்து தேவையான இடுபொருட்கள் வழங்கப்பட்டுள்ளது.

நாளது வரை 85 இளைஞர்கள் பயிற்சி முடித்துள்ளனர், 50 இளைஞர்கள் பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர். மீதமுள்ள 40 இளைஞர்களுக்கு ஜூன் 2020-ல் பயிற்சி நிறைவடையும்.

19.2.2 செயற்கை முறை கருவூட்டல் நிலையங்களை பலப்படுத்துதல்

தரமான செயற்கை முறை கருவூட்டல் சேவை வழங்க, 1000 நிலையங்களுக்கு 0.5லி கொள்ளளவு, 3-4லி கொள்ளளவு, 30-35லி கொள்ளளவு கொண்ட உறைவிந்து குச்சிகள் சேமிப்பு குடுவைகள் மற்றும் செயற்கை முறை கருவூட்டலுக்கு தேவையான இதர உபகரணங்கள் ரூ.250.00 இலட்சம் செலவில் வழங்க பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

19.2.3. உறைவிந்து வங்கிகள் மற்றும் விநியோக வலையமைப்பை பலப்படுத்துதல்

திரவ நைட்ரஜன் மற்றும் உறைவிந்து குச்சிகள் சேமிப்பு மற்றும் விநியோக முறையை வலுப்படுத்த 13 உறைவிந்து வங்கிகளுக்கு,

2020 மார்ச் 17]

உறைவிந்து விநியோகத்திற்காக வாகனங்களும், மூன்று உறைவிந்து வங்கிகளுக்கு 3000லி கொள்ளளவு கொண்ட திரவ நைட்ரஜன் சேமிப்பு கொள்கலங்களும் வழங்கப்பட்டன.

19.2.4. உறைவிந்து உற்பத்தி நிலையங்களுக்கு உயர் மரபணு திறன் கொண்ட பொலிகாளைகளை வழங்குதல்

மாநிலத்திலுள்ள மூன்று உறைவிந்து உற்பத்தி நிலையங்களுக்கு மொத்தம் 50 உயர் மரபணுத்திறன் கொண்ட பொலிகாளைகள் வழங்கப்பட்டன. (மாவட்ட கால்நடை பண்ணை, உதகமண்டலத்தில் கலப்பின ஹோல்ஸ்டின் பிரிசியன்-19, கலப்பின ஜெர்சி-7, ஈச்சங்கோட்டை உயரின கால்நடை பெருக்கப்பண்ணையில் முர்ரா எருமை-5, கலப்பின ஜெர்சி-8, மாவட்ட கால்நடை பண்ணை, ஓசூர்-காங்கேயம்-7, கலப்பின ஜெர்சி- 4)

19.2.5 கருமாற்று தொழில் நுட்பம்

மாவட்ட கால்நடை பண்ணை ஓசூரில் கருமாற்று மற்றும் ஆய்வுக்கூட கருத்தரிப்பு தொழில்நுட்பம் ரூ.454.87 இலட்சம் செலவில் துவங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் மூன்றாண்டுகளில் 84 உயர் மரபணு கொண்ட பொலிகாளைகள் (சிந்தி-34, காங்கேயம்-20, உம்பளாச்சேரி-10, புலிக்குளம்-10, பர்கூர்-10) மற்றும் 85 பொலிகாளை உற்பத்தி செய்ய தாய் பசுக்கள் (சிந்தி-35, காங்கேயம்-20, உம்பளாச்சேரி-10, புலிக்குளம்-10, பர்கூர்-10) மூன்றாண்டுகளில் உற்பத்தி செய்யப்படும்.

கருமாற்று தொழில்நுட்ப பணிக்கு, பால் உற்பத்தி பதிவு செய்யப்பட்ட 5 காங்கேயம், 1 பர்கூர், 2 புலிக்குலம் பசுக்கள் தேர்வு செய்யப்பட்டு கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. மொத்தம் 19 டோனார் பசுக்களிலிருந்து 69 கருமுட்டைகள் (சிந்தி-61, காங்கேயம்-6, புலிக்குளம்-2) சேகரிக்கப்பட்டு, 43 கருமுட்டைகள் (சிந்தி-37, காங்கேயம்-4, புலிக்குளம்-2) மாற்றப்பட்டு, 26 கருமுட்டைகள் சேமித்து வைக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு கால்நடை அறிவியல் பல்கலைக்கழகத்தின்கீழ் நாமக்கல், கால்நடை மருத்துவக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் ரூ.251.00 இலட்சம் செலவில் 105 காங்கேயம் மற்றும் 55 பர்கூர் பசுக்கள் உற்பத்தி செய்ய கருமாற்று தொழில்நுட்பம் செயல்படுத்தப்படுகிறது.

[2020 மார்ச் 17

19.2.6. கால்நடைகளை அடையாளம் காணுதல்

தேசிய மாட்டின உற்பத்தி திறன் இயக்கத்தின் (பசு சஞ்சீவினி திட்டம்) கீழ் ரூ. 893.598 இலட்சம் செலவில் 33.29 இலட்சம் பசு மற்றும் எருமைகளை அடையாளம் காண இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

நாளது தேதிவரை 29.39 இலட்சம் பசுக்கள் மற்றும் எருமைகளுக்கு காது வில்லைகள் பொருத்தி உடல் நல அட்டைகள் வழங்கப்பட்டு 13.81 இலட்சம் கால்நடைகளின் தகவல்கள் கால்நடை உற்பத்தி மற்றும் உடல்நல தகவல் இணைய மென்பொருளில் (INAPH) பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

19.2.7. உதகமண்டலம் மாவட்ட கால்நடை பண்ணையில் பாலினம் பிரிக்கப்பட்ட உறைவிந்து உற்பத்தி வசதி நிறுவுதல்

விவசாயிகள் கிடேரி கன்று பிறப்பதையே அதிகம் விரும்புவதால் அவர்களது தேவைக்கிணங்க ரூ.4,750 இலட்சம் செலவில் மூன்றாண்டுகளில் எட்டு இலட்சம் பாலினம் பிரிக்கப்பட்ட உறைவிந்து குச்சிகள் தயாரிக்கும் வசதி உதகமண்டலம் மாவட்ட கால்நடை பண்ணையில் நிறுவும் பணி துவங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

19.2.8. செயற்கைமுறை கருவூட்டாளர்களுக்கு திறன் மேம்பாடு

மாநில தீவன புல் வளர்ச்சி திட்டத்தின்கீழ் தமிழ்நாடு கால்நடை அறிவியல் பல்கலைக்கழகத்தின் விவசாய ஆராய்ச்சி நிலையம் / கால்நடை பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள் மூலமாக ரூ.17.50 இலட்சம் செலவில் 500 ஊரக இளைஞர்களுக்கு பல்வேறு கால்நடை பராமரிப்பு முறைகள் குறித்த ஐந்து நாள் பயிற்சி வழங்கப்பட்டது.

இப்பயிற்சியில் கால்நடைகளின் இனவிருத்தி, ஊட்டச்சத்து நிறைந்த உணவு வழங்குதல், கால்நடைகளை தாக்கும் முக்கிய நோய்கள் குறித்த விழிப்புணர்வு, அவற்றை தடுக்கும் முறைகள், பாதுகாப்பு நடவடிக்கைகள், இயற்கை சீற்றத்தின்போது பேரிடர் மேலாண்மை, சுத்தமான பால் உற்பத்தி, துப்புரவு மற்றும் சுகாதார முறைகள், நவீன மேலாண்மை முறைகள், குடற்புழு நீக்கம் மற்றும் தடுப்பூசியின் முக்கியத்துவம், கால்நடை மற்றும் கோழியின மேலாண்மை, கன்று வளர்ப்பு, இறந்த கால்நடைகளை அகற்றல், கால்நடைகளின்மூலம் தொற்றும் நோய்கள், கால்நடைகளை

2020 மார்ச் 17]

கனிவுடன்கையாளுதல்,சமநிலைதீவனம்வழங்குதல்,பசுந்தீவனத்தின் முக்கியத்துவம், தற்போதைய தீவன உற்பத்தி முறைகள், தீவன உற்பத்தியில் நவீன முறைகள் (அசோலா, ஹைட்ரோபோனிக்ஸ், மண்புழு வளர்ப்பு) போன்ற பல்வேறு பராமரிப்பு முறைகள் குறித்து பயிற்றுவிக்கப்பட்டது.

19.2.9. உள்நாட்டினங்களைப் பாதுகாத்தல்

உள்நாட்டு கால்நடை இனங்கள் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி திட்டத்தின்கீழ் ஈரோடு மாவட்டம், அந்தியூரில் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் மூலமாக பர்கூர் இன ஆராய்ச்சி மையம் அமைக்க திட்டமிடப்பட்டு இதற்கு ரூ.561.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பணி ஐந்தாண்டுகளுக்கு திட்டமிடப்பட்டுள்ளது.

2018-19-ஆம் ஆண்டு வரை ரூ.328.00 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது. 2019-20-ஆம் ஆண்டில் பர்கூர் கிடேரி கன்றுகள் கொள்முதல், வேலி அமைத்தல், நிலம் சீர்படுத்துதல், நுண்ணீர்பாசன வசதி அமைத்தல், உபகரணங்கள் கொள்முதல் ஆகிய பணிகள் மேற்கொள்ள பல்கலைக்கழகத்திற்கு ரூ.50.00 லட்சம் விடுவிக்கப் பட்டுள்ளது. இந்த ஆராய்ச்சி நிலையத்தில் மொத்தம் 92 பர்கூர் மாடுகள் (69 பசு / கிடேரி கன்று மற்றும் 23 காளை / காளை கன்று) பராமரிக்கப்படுகின்றது.

ஓசூரில் உள்ள மாவட்ட கால்நடை பண்ணையில் காங்கேயம் இன உறைவிந்து குச்சிகள் விநியோகம் செய்ய "கள செயல்திறன் பதிவு (FPRP) திட்டத்தின்" மூலம் பிறந்த 7 காங்கேயம் காளை கன்றுகள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

19.2.10 அதிக உற்பத்தித் திறன்வாய்ந்த உள் நாட்டின காளைகளின் உறைவிந்தினை பயன்படுத்தி வரையறுக்கப்படாத மாடுகளின் மரபணுவை மேம்படுத்த கால்நடை வளர்ப்போரின் வீட்டிற்கே சென்று செயற்கை முறை கருவூட்டல் பணி மேற்கொள்வது

அதிக உற்பத்தித் திறன்வாய்ந்த உள்நாட்டின காளைகளின் உறைவிந்தினைப் பயன்படுத்தி மாடுகளுக்கு செயற்கை முறை கருவூட்டல் மேற்கொள்ளும் பணி 15.09.2019 முதல் 15.03.2020 வரை சென்னை, கடலூர், காஞ்சிபுரம், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சிவகங்கை, சேலம், உதகமண்டலம், திருவள்ளூர்,

திருவண்ணாமலை, விருதுநகர் மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் ஒவ்வொரு மாவட்டத்திலும் 300 கிராமங்களில் ரூ. 907.40 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்மூலம் 2,44,990 (12 மாவட்டங்களில் ஒவ்வொரு மாவட்டத்திலும் 20000 கால்நடைகள், சென்னையில் 4990 கால்நடைகள்) பசு மற்றும் எருமைகளுக்கு செயற்கைமுறை கருவூட்டல் பணி மேற்கொள்ளப்படும். நாளது வரை 1.69 இலட்சம் கால்நடைகள் இத்திட்டத்தின்மூலம் பயன் பெற்று இத்திட்டம் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

19.3. தேசிய கால்நடை இயக்கம்

19.3.1 துயர் துடைப்பு மற்றும் இன்னல் மேலாண்மை

தேசிய கால்நடை இயக்கத்தின்கீழ் கால்நடை காப்பீடு திட்டம் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படுகிறது. நடப்பாண்டில் ரூ.14.31 கோடி செலவில் 2.70 இலட்சம் கால்நடை அலகுகளுக்கு (பசு, எருமை, செம்மறியாடு, வெள்ளாடு மற்றும் பன்றி) அனைத்து மாவட்டங்களிலும் காப்பீடு செய்யும் பணி மேற்கொள்ளப்படுகிறது.

19.3.2 தீவன அபிவிருத்தி

தேசிய கால்நடை இயக்கத்தின்கீழ் ரூ.4.50 கோடி செலவில் 3000 தீவனப்புல் வெட்டும் கருவி கொள்முதல் செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

19.4. நிலையான புஞ்சை நில (விவசாய) வேளாண்மை திட்டம் (MSDA)

நிலையான புஞ்சை நில (விவசாய) வேளாண்மை திட்டத்தின்கீழ் ரூ. 2.26 கோடி செலவில் கறவை பசு மடி பாதுகாப்பு மருந்துகள் தமிழ்நாடு கால்நடை மருத்துவ பல்கலைக்கழகத்தின் TRPVB பிரிவின்மூலம் கொள்முதல் செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

20. தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், கால்நடை மருத்துவ கல்விக்கென உருவாக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஆகும். இப்பல்கலைக்கழகத்தின் நோக்கங்களாவன:

- கால்நடை மருத்துவம், விலங்கினம் மற்றும் உணவு அறிவியலில் இளநிலை, முதுநிலை மற்றும் முனைவர் பட்டப்படிப்புகளுக்கான தரமான கல்வியை அளித்தல்

2020 மார்ச் 17]

- கால்நடை மற்றும் கோழி உற்பத்தி, நலப் பாதுகாப்பு மற்றும் அவற்றிலிருந்து பெறப்படும் மதிப்பூட்டப்பட்ட உணவுப் பொருட்கள் பற்றிய அடிப்படை மற்றும் உயர்மட்ட ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல்
- கால்நடை மற்றும் கோழியின வளர்ச்சிக்கும், பாதுகாப்புக்கும் உரிய தொழில்நுட்பத் தகவல்களைக் கால்நடைப் பராமரிப்புத் துறையைச் சார்ந்தவர்களுக்கும், பண்ணையாளர்களுக்கும் விரிவாக்கக் கல்விமூலம் பரப்புதல்

20.1 பல்கலைக்கழகத்தின் அங்கங்கள்

அட்டவணை 20: பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரிகள்

வ. எண்	**கல்லூரிகள்**	**மாணவர் சேர்க்கை எண்ணிக்கை**
1.	சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி, சென்னை	120
2.	கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், நாமக்கல்	80
3.	கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், ஒரத்தநாடு	80
4.	கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், திருநெல்வேலி	80
5.	கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், சேலம்	40
6.	உணவு மற்றும் பால் வளத் தொழில்நுட்பக் கல்லூரி, கோடுவெளி	60
7.	கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மைக் கல்லூரி, ஓசூர்	40
	மொத்தம்	**500**

20.1.2 சேலத்தில் புதிய கால்நடை மருத்துவக் கல்லூரி

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 13.02.2019 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் சேலம் மாவட்டத்தில் உள்ள தலைவாசல் கூட்டு சாலையில் சர்வதேச தரத்தின்படி ஒருங்கிணைந்த கால்நடைப் பூங்கா நிறுவப்படும் என்று அறிவித்தார். இந்த அறிவிப்பின்படி, சேலம் மாவட்டம் தலைவாசலில் கால்நடை மற்றும் விலங்கின அறிவியலில் நவீன ஒருங்கிணைந்த ஆராய்ச்சி நிறுவனம் (Advanced Institute for Integrated Research on Livestock and Animal Sciences - AIIRLIVAS) நிறுவப்படுவதுடன் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின்கீழ் ஒரு புதிய கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் நிறுவப்பட உள்ளது.

தமிழ்நாட்டின் ஐந்தாவது கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் சுமார் 73.80 ஏக்கர் நிலப் பரப்பளவில் ரூபாய் 196.36 கோடி நிதிச் செலவில் துவக்கப்பட உள்ளது. தற்போது, அலுவலகக் கட்டடம், வகுப்பு அறை, சிகிச்சையியல் பயிற்றுவிப்பு வளாகத்துடன் கூடிய எட்டு கல்விக்கூட கட்டடங்கள், மாணவர் மற்றும் மாணவியர் விடுதிக் கட்டடங்கள், நூலகக் கட்டடம், சிற்றுண்டியகம், கல்லூரி முதல்வர் மற்றும் விடுதி காப்பாளருக்கான குடியிருப்புகள் மற்றும் விருந்தினர் விடுதிகள் கட்டுவதற்கென தமிழக அரசு ரூபாய் 82.13 கோடி வழங்கியுள்ளது.

ஆய்வகங்களுடன் சேர்த்து மொத்தம் 15 துறைகள், பால் மற்றும் இறைச்சிக்கென்றே தனித்தனி உற்பத்தி மற்றும் பதனப்படுத்தும் வசதிகள், கால்நடை உற்பத்தித் தொழில்நுட்பங்களை விளக்குவதற்கென்று கால்நடை பயிற்றுவிப்புப் பண்ணை வளாகம் மற்றும் மாணவர்களுக்குச் சிகிச்சையியல் குறித்து பயிற்சி அளிப்பதற்கென பயிற்றுவிப்பு மருத்துவமனையுடன் கூடிய நவீன சிகிச்சையியல் வளாகம் ஆகியவை இக்கல்லூரியில் நிறுவப்பட உள்ளன.

இப்புதிய கால்நடை மருத்துவக் கல்லூரியில் கால்நடை மருத்துவ அறிவியல் மற்றும் விலங்கினப் பராமரிப்பில் இளநிலைப் பட்டம் வரும் கல்வியாண்டு 2020-21 முதல் நடத்தப்படும். 2020-21ஆம் கல்வியாண்டில் 40 மாணவர்கள், 2021-22-ல் 60 மாணவர்கள் மற்றும் 2022-23ஆம் ஆண்டு முதல் 80 மாணவர்களும் இக்கல்லூரியில் சேர்க்கப்படுவர்.

2020 மார்ச் 17]

அட்டவணை 21: பல்கலைக்கழகத்தின் புறநகர் ஆராய்ச்சி நிலையங்கள், ஆய்வகங்கள் மற்றும் மையங்கள்

வ. எண்	மாவட்டங்கள்	ஆராய்ச்சி நிலையங்கள் / ஆய்வகங்கள் / மையங்கள்
1.	சென்னை	➢ கோழியின ஆராய்ச்சி நிலையம், மாதவரம்
		➢ கால்நடைப் பண்ணை வளாகம், மாதவரம்
		➢ பல்கலைக்கழக மைய ஆய்வகம், மாதவரம்
		➢ நச்சுயிரித் தடுப்பூசி ஆராய்ச்சி மையம், மாதவரம்
		➢ நுண்ணுயிரித் தடுப்பூசி ஆராய்ச்சி மையம், மாதவரம்
		➢ விலங்குவழி பரவும் நோய்கள் ஆராய்ச்சிக் கூடம், மாதவரம்
		➢ மைய சிகிச்சையியல் ஆய்வகம், வேப்பேரி
		➢ ஆய்வக விலங்கினப் பிரிவு, மாதவரம்
		➢ முதன்மைச் செல் ஆராய்ச்சி மற்றும் மறுசீரமைப்பு மருந்தக மையம், வேப்பேரி
		➢ முதன்மைச் செல் ஆராய்ச்சி மற்றும் மறுசீரமைப்பு மருந்தக மையம், வேப்பேரி
		➢ கால்நடைத் தீவனம் மற்றும் உணவுப் பாதுகாப்புக்கான மருந்துக் கண்காணிப்பு ஆய்வகம், மாதவரம்
		➢ கால்நடை மருத்துவ ஆய்வின் பயன்பாடு சார் பரிமாற்றத் தளம், மாதவரம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வ. எண்	மாவட்டங்கள்	ஆராய்ச்சி நிலையங்கள் / ஆய்வகங்கள் / மையங்கள்
		➢ உயிர்ப் பாதுகாப்பு நிலை III ஆய்வகம், மாதவரம்
2.	காஞ்சிபுரம்	➢ கால்நடை அறிவியல் முதுகலை ஆராய்ச்சி நிலையம், காட்டுப்பாக்கம்
		➢ கால்நடை ஊட்டச்சத்தியல் நிறுவனம், காட்டுப்பாக்கம்
		➢ மத்திய தீவன தொழில்நுட்ப மையம், காட்டுப்பாக்கம்
		➢ வேளாண்அறிவியல் மையம், காட்டுப்பாக்கம்
		➢ உழவர் பயிற்சி மையம்
3.	தருமபுரி	➢ ஆலம்பாடி மாட்டின ஆராய்ச்சி நிலையம்
		➢ கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்
4.	விழுப்புரம்	➢ கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்
		➢ உழவர் பயிற்சி மையம்
5.	சேலம்	➢ மேச்சேரி செம்மறியாட்டின ஆராய்ச்சி நிலையம், பொட்டனேரி
		➢ பறவையின நோயாய்வுக் கூடம், தலைவாசல்
		➢ கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்
6.	ஈரோடு	➢ பர்கூர் மாட்டின ஆராய்ச்சி நிலையம், பர்கூர்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

2020 மார்ச் 17]

வ. எண்	மாவட்டங்கள்	ஆராய்ச்சி நிலையங்கள் / ஆய்வகங்கள் / மையங்கள்
		➢ காங்கேயம் மாட்டின ஆராய்ச்சி நிலையம்
		➢ கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்
7.	நீலகிரி	➢ செம்மறியாடு இனப்பெருக்க ஆராய்ச்சி நிலையம், சாந்திநல்லா
8.	நாமக்கல்	➢ கோழியின நோயறி மற்றும் நோய் கண்காணிப்பு ஆய்வகம்
		➢ கால்நடை தீவன பகுப்பாய்வு மற்றும் தர உறுதி ஆய்வுக் கூடம்
		➢ கோழிகளுக்கான பாரம்பரிய கால்நடை மருத்துவ மூலிகை ஆராய்ச்சி மையம்
		➢ வேளாண்அறிவியல் மையம்
9.	சிவகங்கை	➢ புலிக்குளம் மாட்டின ஆராய்ச்சி நிலையம், மானாமதுரை
		➢ வேளாண்அறிவியல் மையம், குன்றக்குடி
10.	புதுக்கோட்டை	➢ மண்டல ஆராய்ச்சி மற்றும் கல்வி மையம்
11.	மதுரை	➢ கால்நடை மருத்துவ பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆய்வு மையம்
12.	தேனி	➢ உழவர் பயிற்சி மையம்
13.	திருவாரூர்	

[2020 மார்ச் 17

வ. எண்	மாவட்டங்கள்	ஆராய்ச்சி நிலையங்கள் / ஆய்வகங்கள் / மையங்கள்
14.	இராமநாதபுரம்	
15.	கன்னியாகுமரி (நாகர்கோவில்)	
16.	செங்கல்பட்டு	
17.	வேலூர்	
18.	திருவண்ணாமலை	
19.	கிருஷ்ணகிரி	
20.	கடலூர்	
21.	பெரம்பலூர்	➢ கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்கள்
22.	திருப்பூர்	
23.	கோயம்புத்தூர்	
24.	கரூர்	
25.	தஞ்சாவூர்	
26.	நாகப்பட்டினம்	
27.	திண்டுக்கல்	
28.	திருச்சிராப்பள்ளி	
29.	விருதுநகர் (இராஜபாளையம்)	

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2020 மார்ச் 17]

20.1.3 நிருவாகக் கட்டமைப்பு

பல்கலைக்கழகத்தின் நிருவாகக் கட்டமைப்பு



TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

20.2 கல்வி

அட்டவணை 22: பல்கலைக்கழகத்தில் நடைபெறும் பட்ட மற்றும் பட்டய வகுப்புகள் / மாணவர் சேர்க்கை

பட்ட / பட்டய வகுப்புகள்	மாணவர் சேர்க்கை எண்ணிக்கை
கால்நடை மருத்துவ அறிவியல் மற்றும் விலங்கினப் பராமரிப்பில் இளநிலைப் பட்டம்	400
உணவுத் தொழில்நுட்பவியலில் இளநிலைப் பட்டம்	40
கோழியினத் தொழில்நுட்பவியலில் இளநிலைப் பட்டம்	40
பால் வளத் தொழில்நுட்பவியலில் இளநிலைப் பட்டம்	20
கால்நடை மருத்துவ அறிவியலில் முதுநிலைப் பட்டம்	120
உணவுத் தொழில்நுட்பவியலில் முதுநிலைப் பட்டம்	10
பால் வளத் தொழில்நுட்பவியலில் முதுநிலைப் பட்டம்	3
பால் வேதியியல் தொழில்நுட்பவியலில் முதுநிலைப் பட்டம்	3
கோழியினத் தொழில்நுட்பவியலில் முதுநிலைப் பட்டம்	3
தத்துவயியலில் முதுநிலைப் பட்டம் (உயிர் தொழில்நுட்பவியல்)	8
உயிர்த் தகவலியல் அறிவியலில் முதுநிலைப் பட்டம்	10
உயிர்ப் புள்ளியியல் அறிவியலில் முதுநிலைப் பட்டம்	3

2020 மார்ச் 17]

பட்ட / பட்டய வகுப்புகள்	மாணவர் சேர்க்கை எண்ணிக்கை
உயிர்த் தொழில்நுட்ப அறிவியலில் முதுநிலைப் பட்டம்	5
மீன் வளம் மற்றும் கால்நடை சார்ந்த வணிக மேலாண்மையியலில் முதுநிலைப் பட்டம்	10
கால்நடை மருத்துவ அறிவியலில் முனைவர் பட்டம்	98
உயிர்த் தொழில்நுட்பவியலில் முனைவர் பட்டம்	5
உணவுத் தொழில்நுட்பவியலில் முனைவர் பட்டம்	5
விலங்கின அறிவியலில் பட்டயப்படிப்பு	17

20.2.1 பட்டமளிப்பு விழா

பல்கலைக்கழகத்தின் இருபத்தொன்றாவது பட்டமளிப்பு விழா சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் அண்ணா கலையரங்கில் 10.12.2019 அன்று நடத்தப்பட்டது. மாண்புமிகு தமிழக ஆளுநர் மற்றும் பல்கலைக்கழக வேந்தர் அவர்கள் இவ்விழாவிற்குத் தலைமையேற்று 356 பட்டதாரிகளுக்குப் பட்டங்களை வழங்கியதுடன் பட்டமளிப்பு விழாவில் நேரில் பங்கேற்காத 210 பட்டதாரிகளுக்குப் பட்டம் வழங்கவும் அனுமதி அளித்தார்கள்.

20.2.2 தனுவாஸ் கல்வி நிலைய மேம்பாட்டுத் திட்டம்

இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் தேசிய வேளாண் உயர் கல்வித் திட்ட நிதியுதவியுடன் “தனுவாஸ் கல்வி நிலைய மேம்பாட்டுத் திட்டம்” ரூபாய் 2495.13 இலட்சம் செலவில் 2018 ஆம் ஆண்டு முதல் இப்பல்கலைக்கழகத்தில் செயல்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின்கீழ், 2019 ஆம் ஆண்டு, இளநிலைப் பட்டம் பயிலும் 16 இறுதியாண்டு மாணவர்கள் இரண்டு மாதங்களுக்கு அமெரிக்காவில் உள்ள வாஷிங்டன் மாகாணப் பல்கலைக்கழகம் மற்றும் ஒக்லஹாமா மாகாணப் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் சிகிச்சையியல் பயிற்சிக்கு அனுப்பப்பட்டனர்; இரு ஆசிரியர்கள் வாஷிங்டன் மாகாணப் பல்கலைக்கழகம் சென்று பன்னாட்டுப் பயிற்சி பெற்றனர்; இரு

[2020 மார்ச் 17

ஆசிரியர்கள் ராயல் கால்நடை மருத்துவக் கல்லூரி, இலண்டன் சென்று ரோபோடிக்ஸ் மற்றும் கற்றல் மதிப்பீட்டு மையம் ஆகியவை குறித்து அறிவைப் பெற்று, அதே போல் இப்பல்கலைக்கழகத்திலும் நிறுவுவதற்கான முயற்சிக்கு உதவ உள்ளனர்.

பல்கலைக்கழகத்தில் இத்திட்டத்தின்கீழ் நடத்தப்படும் பயிலரங்குகளில் ஆசிரியர்கள்/ மாணவர்களுக்கான மேம்பாட்டுப் பயிற்சிகள் மற்றும் ஆய்வுரைகள் வழங்கும் பொருட்டு, அமெரிக்காவில் உள்ள வாஷிங்டன் மாகாணப் பல்கலைக்கழகம் மற்றும் வடக்கு டகோடா மாகாணப் பல்கலைக்கழகம் மற்றும் ராயல் கால்நடை மருத்துவக் கல்லூரி ஆகியவற்றிலிருந்து ஆறு வல்லுநர்கள் இப்பல்கலைக்கழகத்தின் அயல் ஆசிரியர்களாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்; பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கு "கால்நடை மருத்துவக் கல்வியியல்" மற்றும் "கால்நடைசார் சந்தை நுண்ணறிவு" ஆகியவை குறித்துச் சிறப்புப் பயிற்சிகள் அளிக்கப்பட்டன; இளநிலைப் பட்ட மாணவர்களுக்குத் "தகவல் பரிமாற்றத் திறமைகள் மற்றும் மென்பொருள் இயக்குதிறன்" குறித்த பயிற்சியுடன் பல்வேறு தனியார் நிறுவனங்களில் தொழிலகப் பயிற்சிகளும் அளிக்கப்பட்டுள்ளன.

20.3 ஆராய்ச்சி

இப்பல்கலைக்கழகம் வலுவான ஆராய்ச்சி அடித்தளத்தினைக் கொண்டுள்ளது. இப்பல்கலைக்கழகம், பத்து ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் 15 ஆராய்ச்சி ஆய்வகங்களைத் தன்னகத்தே கொண்டு கால்நடை நலம், கால்நடை உற்பத்தி, கால்நடை மருத்துவ உயிரியியல், விலங்குவழி நோய்கள், கால்நடைத் தீவனப் பகுப்பாய்வு, நோயறிதல் மற்றும் கண்காணித்தல், பாரம்பரியக் கால்நடை மருத்துவம், கால்நடை மருந்துக் கண்காணிப்பு ஆகிய பிரிவுகளில் ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொண்டு வருகின்றது. அவ்வகையில் இப்பல்கலைக்கழகம், பல்வேறு தேசிய மற்றும் பன்னாட்டு நிதி முகமைகளின்மூலம் ரூபாய் 2178.07 இலட்சம் மதிப்பீட்டில் 33 ஆராய்ச்சித் திட்டங்களை 2019-20 ஆம் ஆண்டில் பெற்றுள்ளது.

20.3.1 திட்டங்களின் செயல்பாடுகள்

இந்திய அரசு நாட்டினக் கால்நடைகளைப் பாதுகாப்பதற்கு ஊக்கமளித்து வருகின்றது. இதனைக் கருத்திற்கொண்டு, ரூபாய் 80 இலட்சம் செலவில் "செவ்வாடு, இராமநாதபுரம் வெள்ளை மற்றும் கச்சைகட்டிக் கருப்பு ஆகிய தென்தமிழக நாட்டினச் செம்மறியாட்டு இனங்களைப் பாதுகாக்கும்பொருட்டு சிறு அசையூண் விலங்கின

2020 மார்ச் 17]

ஆராய்ச்சி மையம் நிறுவுதல்" எனும் திட்டத்தினைச் செயல்படுத்தத் தமிழக அரசு அனுமதி வழங்கியுள்ளது. அதன்பொருட்டு, தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் சிறு அசையூண் விலங்கின ஆராய்ச்சி மையத்தினைக் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், திருநெல்வேலியில் நிறுவும் பணியினை மேற்கொண்டு வருகின்றது.

கறவை மாடுகளின் இனவிருத்தித் திறனை மேம்படுத்தும் முகமாக, ரூபாய் 208 இலட்சம் செலவில் "பாலினம் பிரிக்கப்பட்ட விந்தணுக்களைப் பயன்படுத்தி இனப்பெருக்க நுட்பங்களைச் செயல்படுத்துதல்மூலம் கறவை மாடுகளில் இனவிருத்தி மற்றும் உற்பத்தியைப் பெருக்குதல்" எனும் திட்டத்தினைத் தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் செயல்படுத்தத் தமிழக அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் திருவள்ளூர், காஞ்சிபுரம், வேலூர், திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் இத்திட்டத்தினைச் செயல்படுத்திக் களநிலையில் பாலினம் பிரிக்கப்பட்ட விந்தணுக்களைப் பயன்படுத்தி மரபியல் தரம் உயர்ந்த கிடாரிக் கன்றுகள் உற்பத்தி செய்து ஒருங்கிணைந்த இனவிருத்தி நலப் பாதுகாப்பினை மேற்கொள்வதன்மூலம் கறவை மாடுகளின் உற்பத்தித் திறன் உயர்த்த உரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

2022-ல் விவசாயிகளின் வருவாயை இரட்டிப்பாக்குவது தொடர்பான மத்திய அரசின் கொள்கையினைச் செயல்படுத்தும் முகமாக ரூபாய் 149 இலட்சம் செலவில் "வெள்ளாட்டு விந்தணுக் குச்சிகளை உற்பத்தி செய்து கால்நடைப் பண்ணையாளர்களின் வருவாயை இரட்டிப்பாக்கும் நோக்குடன் 1000 வெள்ளாடுகளுக்குச் செயற்கை முறைக் கருத்தரிப்பு செய்தல் மூலம் கன்னி ஆடு, கொடி ஆடு மற்றும் சேலம் கருப்பு ஆகிய நாட்டின வெள்ளாடுகளின் மரபியல் திறனை உயர்த்துதல்" எனும் திட்டத்திற்குத் தமிழக அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

சிறு மற்றும் குறு பண்ணையாளர்கள் அறிவியல் ரீதியிலான கோழி வளர்ப்பு மற்றும் மதிப்பூட்டிய கோழி உணவுப் பொருட்கள் உற்பத்தி மூலம் நிலையான வருமானம் ஈட்டச் செய்யும் நோக்குடன், ரூபாய் 87 இலட்சம் மதிப்பீட்டில் "உணவுப் பாதுகாப்பிற்கெனக் குஞ்சுப் பொரிப்பு மேலாண்மை, கோழி இறைச்சிப் பதனம் மற்றும் மதிப்பூட்டல்

ஆகியவற்றில் 200 கோழியினத் தொழில்முனைவோர்களை உருவாக்குதல்” எனும் திட்டத்தினைச் செயல்படுத்த தமிழ்நாடு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் தருமபுரி, கிருஷ்ணகிரி, தஞ்சாவூர், சிவகங்கை மற்றும் தேனி மாவட்டங்களில் திட்டப் பயனாளிகளைத் தேர்வு செய்து நாட்டினக் கோழி வளர்ப்பில் மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்களில் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்க இப்பல்கலைக்கழகம் உரிய நடவடிக்கைகளைத் துவக்கியுள்ளது.

“தமிழ்நாட்டின் வறட்சி மாவட்டங்களில் உள்ள ஏழை கிராமப்புறக் கால்நடை வளர்ப்போர்களுக்கு வழங்குவதற்கெனக் குறைந்த செலவில் எளிதில் பயன்படுத்தக்கூடிய நீர்க்கட்டுத் தீவன உற்பத்திப் பிரிவினை நிறுவுதல்” எனும் திட்டத்தின்கீழ் திருவள்ளூர், திருவண்ணாமலை, காஞ்சிபுரம் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் 320 பயனாளிகளுக்கு நீர்க்கட்டுத் தீவன உற்பத்தி குறித்துப் பயிற்சிகள் அளிக்கப்பட்டதுடன் அவர்களுக்கு நீர்க்கட்டுத் தீவன உற்பத்திச் சாதனங்களும் வழங்கப்பட்டன. இந்த நீர்க்கட்டுத் தீவன உற்பத்திச் சாதனம்மூலம் உற்பத்தி செய்யப்படும் தீவனம், வறட்சி காலங்களில் ஏற்படும் தீவனத் தட்டுப்பாட்டைப் பூர்த்தி செய்வதுடன் நிலையான கால்நடை வளர்ப்பிற்கும் உதவியாக இருக்கும்.

இராஜபாளையம், சிப்பிப்பாறை, கன்னி ஆகிய நாயினங்களைப் பாதுகாப்பதற்கென மாதவரத்தில் உள்ள கால்நடைப் பண்ணை வளாகத்தில் நாயினப் பாதுகாப்பு மையம் நிறுவப்பட்டுள்ளது.

மாதவரத்தில் உள்ள கோழியின ஆராய்ச்சி நிலையத்தில் சிறுவிடை மற்றும் பெருவிடை கோழி இனவிருத்திப் பிரிவுகள் துவக்கப்பட்டுள்ளன. கோழிகளில் இருந்து மனிதர்களுக்குப் பரவும் நோய்களைக் கட்டுப்படுத்துவதுடன் கோழிகளில் இருந்து பெறப்படும் உணவின் பாதுகாப்பினை உறுதி செய்வதற்கான தீர்வுகளை வழங்கும் நோக்கில் “உலகளாவிய சவால்கள் ஆராய்ச்சி நிதியம்” மூலம் ‘இங்கிலாந்து ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க அமைப்பின்’ வழியாக நிதியுதவி பெற்று இப்பல்கலைக்கழகம் ரூபாய் 579 இலட்சம் செலவில் “ஒரே சுகாதாரக் கோழி மையம்” எனும் பல பன்னாட்டு நிறுவனங்களுடன் இணைந்து செயல்படும் திட்டத்தினைப் பெற்றுள்ளது.

2020 மார்ச் 17]

20.4 தொழில்நுட்பங்கள்

நாய்களுக்கான இவான்ஸ் சின்ரோம் ஃப்ளோ சைட்டோமெட்ரி நிறமிடு சாதனம், ஃப்ரோபீட்ஸ், மாட்டின மடிச் சிகிச்சைச் சாதனம், நானோ-மூலிகை மெதிகோன் குழைவு, நானோ சர்காய்டு மருந்து, கால்நடை நலம் மற்றும் நோயறிதலுக்கென காக்சிடியா நோயினை அறிய AMS கிரீன் டீ பீட்ஸ் மற்றும் AMS பீட்ஸ், சூரிய ஒளி உண்ணிப்பொறி மற்றும் மதிப்பூட்டிய பால் பொருட்களான நெய்ப் படிவத்துடன் ஆரஞ்சுத் தோல் சேர்க்கப்பட்ட சாக்கலேட், பால்புரதம் மற்றும் நார்ச்சத்து செறிவூட்டப்பட்ட நூடுல்ஸ், பால் ஊனீரால் செறிவூட்டப்பட்ட குறைந்த விலை கொண்ட பால் புரதப் பொடி, நெய்ப் படிவ சாக்கலேட், பப்பாளி காலாகந்த், சாக்கோ பார் ஆகியன வர்த்தக ரீதியில் பரிமாற்றம் செய்யத் தயாராக உள்ளன.

20.5 திறன் மேம்பாட்டுத் திட்டங்கள்

கால்நடை மருத்துவம், விலங்கினம் மற்றும் உணவு அறிவியல் புலங்களில் ஏற்படும் அண்மைக்கால முன்னேற்றங்களில் அறிவைப் புதுப்பிக்கும் பொருட்டு இப்பல்கலைக்கழகம் மாணவர்களுக்கு மட்டுமல்லாது ஆசிரியர்களுக்கும் திறன் மேம்பாட்டுப் பயிற்சித் திட்டங்களை நடத்த முனைந்துள்ளது.

20.5.1 மாணவர்களுக்கான முயற்சிகள்

- ♣ இப்பல்கலைக்கழக மாணவர்களுக்காகச் செல்லப் பிராணிகள், பண்ணை மற்றும் வனவிலங்குகள் குறித்த முதலாவது சிகிச்சையியல் கருத்தரங்கம் 05.04.2019 அன்று கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், ஒரத்தநாட்டில் நடத்தப்பட்டது. இதில் சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள், நாமக்கல், ஒரத்தநாடு மற்றும் திருநெல்வேலியைச் சார்ந்த இறுதியாண்டு இளநிலைப் பட்டம் பயிலும் 67 மாணவர்கள் சிகிச்சையியல் அறிக்கைகளைச் சமர்ப்பித்தனர்.

- ♣ “கால்நடை மருத்துவ மாணவர்களுக்காகப் பண்ணை மற்றும் செல்லப் பிராணிகள் மருத்துவம்” குறித்த 11-வது சிகிச்சையியல் மாநாட்டினை இப்பல்கலைக்கழகம் 30.08.2019 மற்றும் 31.08.2019 ஆம் தேதிகளில் சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் நடத்தியது. முதுநிலைப்

[2020 மார்ச் 17

பட்டம் பயிலும் மாணவர்களுக்கென்றே "கால்நடை மருத்துவத்தில் சிகிச்சையியல் முன்னேற்றங்கள்" குறித்த பயிலரங்கு மாநாட்டிற்குமுன் 29.08.2019 அன்று நடத்தப்பட்டது.

♣ பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரிகளில் இளநிலைப் பட்டம் பயிலும் நான்காம் ஆண்டு மாணவர்களுக்காக "மாடுகளில் நுண்ணொலி அலை வரைபடப் பயன்பாடு" பற்றிய காணொலிக் கலந்துரையாடல் 12.10.2019 அன்று கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், நாமக்கல்லில் நடத்தப்பட்டது. மொத்தம் 292 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

20.5.2 ஆசிரியர்களுக்கான முயற்சிகள்

- பல்கலைக்கழகமும் ஹைதராபாத்தில் உள்ள தேசிய வேளாண் விரிவாக்க மேலாண்மை நிலையமும் இணைந்து "பண்ணையாளர்கள் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கான புதுமையான விரிவாக்க மேலாண்மை அணுகுமுறைகள்" எனும் பன்னாட்டுக் கருத்தரங்கினை 27.06.2019 மற்றும் 28.06.2019 ஆம் தேதிகளில் சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் நடத்தின. இக்கருத்தரங்கில் தேசிய அளவிலான 220 அறிவியலறிஞர்கள் கலந்து கொண்டனர். அவர்களுடன் பங்களாதேஷ், அமெரிக்கா, எத்தியோப்பியா, இலங்கை மற்றும் நைஜீரியா ஆகிய நாடுகளில் இருந்தும் அறிவியலறிஞர்கள் கருத்தரங்கில் பங்கேற்றனர்.

- பல்கலைக்கழகமும் அமெரிக்காவில் உள்ள வாஷிங்டன் மாகாணப் பல்கலைக்கழகமும் இணைந்து "கால்நடை மரபணுத் திருத்தம்" குறித்த பன்னாட்டுப் பயிலரங்கை 07.08.2019அன்று சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் நடத்தின. இதில் தேசிய அளவிலான 124 அறிவியலறிஞர்கள் கலந்து கொண்டனர்.

- 'தனுவாஸ் கல்வி நிலைய மேம்பாட்டுத் திட்டம்' குறித்த இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் தேசிய வேளாண் உயர்கல்வித் திட்ட நிதியுதவியுடன் "ரோபாடிக்ஸ் சார்ந்த கற்றல் முறைகள்" என்ற பயிலரங்கு, சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் 29.07.2019 முதல் 31.07.2019

வரையிலும், நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 01.08.2019 முதல் 03.08.2019 வரையிலும் நடத்தப்பட்டது. இப்பயிலரங்கில் 60 பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.

- "கால்நடைகள் மற்றும் கோழிகளின் உற்பத்தித் திறனை மேம்படுத்தப் பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் நோய்களைக் கட்டுப்படுத்துதலில் தற்போதைய நிலை மற்றும் எதிர்கால உத்திகள்" குறித்த பன்னாட்டு மாநாடு 20.11.2019 முதல் 22.11.2019 வரை கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், நாமக்கல்லில் நடைபெற்றது. இம்மாநாட்டில் 127 ஆராய்ச்சி அறிவியலறிஞர்கள் கலந்து கொண்டனர்.

20.6 சிகிச்சையியல் பணிகள்

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் சிறந்த கால்நடை மருத்துவமனை வசதிகளைக் கொண்டு கால்நடை மற்றும் செல்லப் பிராணிகளுக்கு 24 மணி நேரமும் சிசிச்சை அளித்து வருகின்றது. 2019-20 ஆம் ஆண்டில் மொத்தம் 2,44,887 கால்நடைகளுக்குப் புறநோயாளிகள் பிரிவின் மூலமும், 3,680 கால்நடைகளுக்கு உள்-நோயாளிகள் பிரிவின் மூலமும் சிகிச்சைகள் அளிக்கப்பட்டன. நுண்ஒலி அலை வரைபடம் (Ultrasonography), உள்நோக்குக் கருவி (Endoscope), இதய துடிப்பலைப் பதிவுக் கருவி (Electrocardiography), எலும்பு முறிவுச் சிகிச்சை (Orthopaedics), இரத்தச் சுத்திகரிப்புச் (Haemodialysis) சாதனம், கண் மருத்துவ இயல் (Opthalmology), தோல் நோய் இயல் (Dermatology), நாயின இரத்த வங்கி ஆகிய மருத்துவ வசதிகளும் உள்ளன. சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், நாமக்கல்லில் சிடி ஸ்கேன் வசதிகள் உள்ளன.

இப்பல்கலைக்கழகம் அம்மா நடமாடும் கால்நடை மருத்துவ ஊர்திகள் ஆறினை கஜா புயலால் பாதிக்கப்பட்ட திருவாரூர், தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய டெல்டா மாவட்டங்களுக்கு அனுப்பி பாதிக்கப்பட்ட கால்நடைகளுக்கு உடனடி மருத்துவ சிகிச்சைகள் அளித்தது. புயலுக்குப் பிந்தைய காலகட்டமான 23.11.2018 முதல் 02.12.2018 வரை, மொத்தம் 12,978 கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

[2020 மார்ச் 17

20.6.1 மண்டல ஒப்பாய்வு பண்ணை விலங்கின சிகிச்சையகம்

நாமக்கல் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கால்நடைப் பண்ணையாளர்கள் நலனுக்காக 24 x 7 மணி நேரச் சேவையை நோய்வாய்ப்பட்ட கால்நடைகளுக்கு வழங்கும் பொருட்டு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், நாமக்கல்லில் நவீன நோயறி சாதனங்கள் மற்றும் சிகிச்சை வசதிகளுடன் ரூபாய் 500 இலட்ச நிதி ஒதுக்கீட்டில் "மண்டல ஒப்பாய்வுப் பண்ணை விலங்கினச் சிகிச்சையகம்" நிறுவத் தமிழக அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

20.7 விரிவாக்கப் பணிகள்

விவசாயிகள், கிராமப்புற மகளிர், கிராமப்புற இளைஞர்கள், பள்ளி இடைநின்றோர், சுய உதவிக் குழுவினர் ஆகியோரது வாழ்வாதாரத்தைக் கால்நடை மற்றும் கோழி வளர்ப்பின்மூலம் மேம்படுத்தும் நோக்கில், கறவைமாடு வளர்ப்பு, வெள்ளாடு மற்றும் செம்மறியாடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு, வெண்பன்றி வளர்ப்பு, பால் மற்றும் பால் பொருட்கள் தயாரிப்பு, கால்நடைத் தீவனம் மற்றும் பசுந்தீவனப் பயிர் உற்பத்தி உள்ளிட்ட தலைப்புகளில் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள், பண்ணைப் பரிசோதனைத் திட்டம், முதல்நிலைச் செயல் விளக்கத் திட்டங்கள் ஆகிய விரிவாக்கப் பணிகளுக்கு பல்கலைக்கழகம் முன்னுரிமை அளிப்பதுடன் அச்சு மற்றும் மின்னணு ஊடகங்கள் வாயிலாகக் கால்நடை மற்றும் கோழியினத் தொழில்நுட்பங்களைப் பரப்பும் பணியினையும் பல்கலைக்கழகம் மேற்கொள்கின்றது.

அட்டவணை 23: 2019 ஆம் ஆண்டு அளிக்கப்பட்ட பயிற்சிகள்

வ. எண்	மையங்களின் இருப்பிடம்	பயிற்சிகளின் எண்ணிக்கை	பயனடைந்தோர் எண்ணிக்கை
	கால்நடை மருத்துவப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்கள்		
1.	கோயம்புத்தூர்	66	2782
2.	தருமபுரி	74	2105
3.	திண்டுக்கல்	50	1344
4.	ஈரோடு	41	941
5.	கரூர்	45	1706
6.	மேல்மருவத்தூர்	59	1268

2020 மார்ச் 17]

வ. எண்	மையங்களின் இருப்பிடம்	பயிற்சிகளின் எண்ணிக்கை	பயனடைந்தோர் எண்ணிக்கை
7.	கடலூர்	64	2065
8.	ராஜபாளையம்	55	453
9.	சேலம்	124	6503
10.	திருச்சிராப்பள்ளி	62	3149
11.	தஞ்சாவூர்	69	3472
12.	திருப்பூர்	41	934
13.	வேலூர்	31	995
14.	நாகர்கோவில்	46	1413
15.	விழுப்புரம்	56	1675
16.	திருவண்ணாமலை	76	2546
17.	கிருஷ்ணகிரி	50	1781
18.	நாகப்பட்டினம்	29	670
19.	பெரம்பலூர்	34	1340
20.	இராமநாதபுரம்	151	3765
21.	கால்நடை மருத்துவ பயிற்சி மற்றும் நோயறி மையம், மதுரை	66	4196
	வேளாண் அறிவியல் நிலையங்கள்		
22.	காட்டுப்பாக்கம்	219	5369
23.	குன்றக்குடி	281	8054
24.	நாமக்கல்	112	5228
	உழவர் பயிற்சி மையங்கள்		
25.	திருவாரூர்	26	289
26.	காஞ்சிபுரம்	103	5054
27.	தேனி	60	1410
	மொத்தம்	**2090**	**70507**

[2020 மார்ச் 17

20.7.1 தொலைநிலைக் கல்வி வகுப்புகள்

கால்நடை மருத்துவம், கால்நடைப் பராமரிப்பு மற்றும் கால்நடை அறிவியலில் உள்ள நவீனத் தொழில்நுட்பங்களைக் களக் கால்நடை மருத்துவர்கள் பெறும் பொருட்டு, 21 பாடப்பிரிவுகளில் முதுநிலைப் பட்டயப் படிப்புகள் தொலைநிலைக் கல்வி இயக்ககம்மூலம் நடத்தப்பட்டு வருகின்றன. இவற்றைத் தவிர, கால்நடை மற்றும் கோழியின உற்பத்தியை அதிகரித்து கிராமப்புற வருவாயைப் பெருக்கும்பொருட்டு 15 தலைப்புகளில் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் மற்றும் 11 தலைப்புகளில் சுய வேலைவாய்ப்பு பயிற்சிகளும் கால்நடை வளர்ப்போர் மற்றும் ஊரக இளைஞர்களுக்கு நடத்தப்படுகின்றன.

அட்டவணை 24: 2019ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட தொலைநிலைக் கல்வி வகுப்புகள்

வ. எண்	பாடத் தலைப்புகள்	மாணவர் சேர்க்கை எண்ணிக்கை
I	**கால்நடை மருத்துவர்களுக்கான முதுநிலை பட்டய வகுப்புகள்**	
1	பாரம்பரிய கால்நடை மருத்துவ முறைகள்	7
2	தீவன உற்பத்தித் தொழில்நுட்பம்	9
3	வர்த்தக ரீதியில் கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மை	3
4	புத்தாக்க மருத்துவம்	2
5	சிறு விலங்கின அல்ட்ராசவுண்ட் நோயறி முறைகள்	10
6	விலங்குவழி நோய்கள்	1
7	மாட்டினங்களில் கருத்தங்காமையும் அதன் மேலாண்மை முறைகளும்	2
8	வனவிலங்கு நோய் மேலாண்மை	4

2020 மார்ச் 17]

வ. எண்	பாடத் தலைப்புகள்	மாணவர் சேர்க்கை எண்ணிக்கை
9	கால்நடை மருத்துவ எண்டாஸ்கோபி	2
10	கால்நடை மாதிரிகளில் நவீன இனவிருத்தி உயிர்த் தொழில்நுட்பம்	8
11	இறைச்சி மற்றும் இறைச்சிப் பொருட்களில் அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்பம் மற்றும் தரநிர்ணயம்	1
II	**திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள்**	
1	பால் மற்றும் பால் பொருட்கள் தரக்கட்டுப்பாட்டு அலுவலர்	6
2	கால்நடைப் பண்ணை மேலாளர்	20
3	கோழிப் பண்ணை மேலாளர்	2
4	கோழி தடுப்பூசியாளர்	9
III	**சுய வேலைவாய்ப்புத் திட்டம்**	
1	கறவை பண்ணையம்	348
2	செம்மறியாட்டு பண்ணையம்	1
3	வெள்ளாட்டு பண்ணையம்	245
4	நொதியூட்டப்பட்ட பால் பொருட்கள் தயாரிப்பு	10
5	முயல் பண்ணையம்	7
6	பன்றி பண்ணையம்	26
7	ஜப்பானிய காடை பண்ணையம்	7
8	நாட்டின கோழி வளர்ப்பு	298
	மொத்தம்	**1029**

[2020 மார்ச் 17

20.8 விருதுகள் / அங்கீகாரங்கள்

- சென்னையிலுள்ள கால்நடைத் தீவனம் மற்றும் உணவுப் பாதுகாப்புக்கான மருந்துக் கண்காணிப்பு ஆய்வகம் மற்றும் நாமக்கல்லில் உள்ள கால்நடைத் தீவனப் பகுப்பாய்வு மற்றும் தர நிர்ணய ஆய்வுக் கூடம் ஆகிய இரு ஆய்வகங்களும் பெற்றுள்ள ISO/IEC 17025:2017 எனும் NABL தரச்சான்றிதழ்களை, இந்திய அரசின் சோதனை மற்றும் அளவுத்திருத்த ஆய்வகங்களுக்கான தேசிய அங்கீகார வாரியம் (National Accreditation Board for Testing and Calibration Laboratories) மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு (2019 - 2021) புதுப்பித்துள்ளது.

- இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் ஒரு பகுதியான தேசிய அளவிலான பருவநிலை மாற்றங்களுக்கேற்ற வேளாண்மை முனைப்புத் திட்டத்தினை (நிக்ரா) நன்முறையில் செயல்படுத்தியதை அங்கீகரிக்கும் வகையில் வேளாண்மை அறிவியல் நிலையம். நாமக்கல்லிற்கு “சிறந்த நிக்ரா வேளாண்மை அறிவியல் நிலையம் 2019” என்ற விருது 06.06.2019 அன்று வழங்கப்பட்டுள்ளது.

- வேளாண் அறிவியல் நிலையம், நாமக்கல் சிறந்த செயல்பாடுகள் மற்றும் சாதனைகளைப் புரிந்தமைக்காக இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் மண்டலம் 10ன்கீழ் செயல்படும் வேளாண் அறிவியல் நிலையங்களில் சிறந்த நிலையத்திற்கான “பண்டிட் தீனதயாள் உபாத்யாய் ராஷ்டிரா கிருஷி விக்யான் புரோஷஹான் புரஸ்கார்-2018” விருதினை 16.07.2019 அன்று பெற்றுள்ளது.

- 2019 ஆம் ஆண்டில் “மேம்படுத்தப்பட்ட முட்டைக்கரு சோதிப்பான்”, “மேம்படுத்தப்பட்ட பறவைக் கூண்டு” மற்றும் “RYZ கிரீம்” ஆகிய பல்கலைக்கழகக் கண்டுபிடிப்புகளுக்குக் காப்புரிமை வழங்கப் பட்டுள்ளது.

- இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் அண்மையில் நடத்திய அனைந்திந்திய நுழைவுத் தேர்வில் தேர்ச்சி பெற்று இப்பல்கலைக்கழகத்தின் 35 பட்டதாரிகள் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் முதுநிலைப் பட்டப்படிப்பு உதவித் தொகையினைப் பெற்றுள்ளனர்.

2020 மார்ச் 17]

20.9 2019-20 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட வளாக வசதிகள்

- பல்கலைக்கழகத் தலைமை வளாகம், மாதவரத்தில் ரூபாய் 1,276 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள "புரட்சித் தலைவி அம்மா அரங்கத்தினை" தமிழகத்தின் மாண்புமிகு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 24.06.2019அன்று காணொளிக் காட்சி மூலம் திறந்து வைத்தார்.

- சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம், மாங்குளம் கிராமத்தில் கட்டப்பட்டுள்ள புலிக்குளம் மாட்டின ஆராய்ச்சி நிலையத்தின் நிருவாகக் கட்டடத்தினைத் தமிழக அரசின் மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன் அவர்கள் 21.11.2019 அன்று திறந்து வைத்தார். தமிழக அரசின் மாண்புமிகு காதி மற்றும் கிராமத் தொழில்கள் வாரிய அமைச்சர் திரு. க.பாஸ்கரன் அவர்கள் "புலிக்குளம் மாடுகள்" எனும் நூலை வெளியிட்டார்.

- ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், பகுத்தம்பாளையம், உப்புப்பள்ளம் கிராமத்தில் காங்கேயம் மாட்டின ஆராய்ச்சி நிலையத்தின் நிருவாகக் கட்டடத்தினை மாண்புமிகு தமிழகப் பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் 25.11.2019 அன்று திறந்து வைத்தார். தமிழக அரசின் மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. கே. சி. கருப்பணன் ஆகியோர் விழாவில் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினர்.

- தருமபுரி மாவட்டம், அனுமந்தபுரம் கிராமத்தில் 28.11.2019 அன்று நடைபெற்ற ஆலம்பாடி மாட்டின ஆராய்ச்சி நிலையத்தின் பூமி பூஜை விழாவில் தமிழக அரசின் மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன் மற்றும் மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டு அடிக்கல் நாட்டினர்.

[2020 மார்ச் 17

- தமிழக அரசின் கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் துறையின் கால்நடை மருந்தகங்கள்/ கால்நடை மருத்துவமனைகளின் பயன்பாட்டிற்கென 500 எண்ணிக்கையிலான நவீன கால்நடை கிட்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

20.10 நிலைத்த முன்னேற்றத்திற்கான இலக்குகள் - தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

நிலைத்த முன்னேற்றத்திற்கான இலக்குகளை அடைவதற்கு இப்பல்கலைக்கழகத்தின் உத்திகள் பின்வருமாறு:

♣ தமிழ்நாட்டின் ஆலம்பாடி மாட்டினம், திருச்சிக் கருப்பு மற்றும் கோயம்புத்தூர் செம்மறியாட்டினங்கள் மற்றும் இராஜபாளையம், சிப்பிப்பாறை, கன்னி மற்றும் கோம்பை ஆகிய நான்கு நாயினங்கள் ஆகியனவற்றை அதன் வாழ்வாதார இடங்களில் பாதுகாப்பு செய்தல்

♣ செயல்பாட்டில் உள்ள மாட்டினம், செம்மறியாட்டினம் மற்றும் வெள்ளாட்டினங்களின் இனப்பாதுகாப்பு நிலையங்களை மேம்படுத்துதல்

♣ நாட்டினக் கால்நடை வகைகளுக்கான "மைய மரபியல் வள வங்கி" நிறுவுதல்

♣ கால்நடைகள் வைத்திருப்போர்களிடையே கால்நடை இனங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல்

20.11 கால்நடைத் துறையில் துவக்க நிலை நிறுவனங்கள்

கால்நடை மருத்துவ அறிவியல் மற்றும் அதன் சார்புத் துறைகளில் துவக்க நிலை நிறுவனங்கள் மற்றும் தொழில்முனைவோர்களை ஊக்குவிக்கும் பொருட்டு, 2019 ஆம் ஆண்டு தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் நிதியுதவியுடன் கால்நடை அறிவியல் தொடக்கநிலைத் தொழில் உருவாக்க அமைப்பினை இப்பல்கலைக்கழகம் நிறுவியுள்ளது. இந்த அமைப்பின் முக்கிய நடவடிக்கைகளாவன:

♣ புதிய கால்நடை மருத்துவப் பொருட்களை உருவாக்கவும் கால்நடைத் துறை சார்ந்த பணிகளை மேற்கொள்ளும் பொருட்டும் ஒன்பது துவக்க நிலை நிறுவனங்கள் கால்நடை

அறிவியல் தொடக்கநிலைத் தொழில் உருவாக்க அமைப்பில் பதிவு செய்து பயனடைந்துள்ளன.

- ♣ கால்நடை அறிவியல் தொடக்கநிலை தொழில் உருவாக்க அமைப்பு மற்றும் கால்நடை மருத்துவப் பயன்பாடுசார் பரிமாற்றத் தளம் ஆகியவை பல்கலைக்கழகத்தின் தொடக்கநிலைத் தொழில் உருவாக்க அமைப்பில் பதிவு செய்துள்ள இல்யூம் ஜீன் இந்தியா எல்எல்பி நிறுவனத்துடன் சேர்ந்து செல்லப்பிராணிகளின் இருப்பிடத்திற்கே சென்று நாய்களில் இரத்த புரோட்டோசோவான் ஒட்டுண்ணிகளைக் கண்டறிவதற்கான நோய் கண்டறிதல் சேவையினை 18.10.2019 அன்று ஆரம்பித்துள்ளன.

- ♣ தொடக்கநிலைத் தொழில் உருவாக்க அமைப்பின் உதவியுடன், இந்த அமைப்பில் பதிவு செய்துள்ள இரண்டு துவக்க நிலை நிறுவனங்கள், தமிழக அரசின் கண்டுபிடிப்பாளர் அறிமுகத் திட்டத்தின் கீழ் தலா ரூபாய் இரண்டு இலட்சம் நிதியுதவி பெற்றுத் தடுப்பூசி மருந்து செலுத்தும் மாதிரி உபகரணங்களை உருவாக்கிட முனைந்துள்ளனர்.

- ♣ தொடக்கநிலைத் தொழில் உருவாக்க அமைப்பானது கால்நடை மருத்துவ தொழில்முனைவோர் நிதி வாய்ப்பு மற்றும் மாணவர்-துவக்க நிலை நிறுவனத் தொடர்புத் திட்டம் ஆகியவைமூலம் கால்நடை மருத்துவ மாணவர்களிடையே தொழில்முனைவுத் திறன் ஊக்குவிக்கப்படுகின்றது. மொத்தம் 11 மாணவர் குழுக்கள் தங்களது புதிய கருத்துருக்களை சமர்ப்பித்ததில், தேர்வு செய்யப்பட்ட கருத்துருக்களுக்குத் 'தொழில்முனைவினை ஊக்குவிக்கத் துவக்கநிலை முன் உதவி (Pre-Incubation Support to Promote Entrepreneurship – PISPE)' அமைப்பின்மூலம் நிதியுதவிகள் செய்யப்படுகின்றன. இந்த PISPEமூலம் உதவி பெற்று நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தினரால் மேம்படுத்தப்பட்ட "ஒருங்கிணைந்த பாலேடு மற்றும் வெண்ணெய்த் தயாரிப்புக் கருவி" பால் தொழில்முனைவோருக்கெனத் தயாராக உள்ளது.

- ♣ 2019-20 ஆம் ஆண்டில் அதிக எண்ணிக்கையில் துவக்க நிலை நிறுவனங்களை உருவாக்க வழி செய்யும் பொருட்டு

ரூபாய் 71.94 இலட்சம் செலவில் கால்நடை அறிவியல் தொடக்கநிலைத் தொழில் உருவாக்க அமைப்பினை மேம்படுத்திடத் தமிழக அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

20.12 தொழிலக-கல்வி நிறுவன தொடர்பு

தொழிலகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களிடையே ஆராய்ச்சி மற்றும் கல்வித் திட்டங்களில் இணைந்து செயல்படும் நோக்குடன் இப்பல்கலைக்கழகம் கீழ்க்குறிப்பிட்டுள்ள நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.

♣ இரு நிறுவனங்களுக்கும் ஏற்ற பொதுவான துறைகளில் ஒருங்கிணைந்து ஆராய்ச்சித் திட்டங்களை ஐந்தாண்டுகளுக்கு மேற்கொள்ளும் பொருட்டு சென்னையில் உள்ள கே.ஜே. ஆராய்ச்சி நிறுவனத்துடன் 25.04.2019 அன்று ஒப்பந்தம்.

♣ உடல் நலக் கல்வி கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சித் திட்டங்களை ஐந்தாண்டுகளுக்குச் செயல்படுத்தும் வகையில் சென்னை, போரூரில் உள்ள ஸ்ரீ ராமச்சந்திரா உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்துடன் 15.05.2019 அன்று ஒப்பந்தம்.

♣ மறுசீரமைப்பு மருத்துவம் மற்றும் உயிர்த் தொழில்நுட்பவியலில் பயிற்சி மற்றும் ஆராய்ச்சித் திட்டங்களை மேற்கொள்ளுதல் மற்றும் நிபுணத்துவத்தினை பகிர்ந்து கொள்ளல் ஆகிய பணிகளை 10 ஆண்டுகள் மேற்கொள்ளச் சென்னையிலுள்ள அரசு ஸ்டான்லி மருத்துவமனையுடன் (ஆதார செல் ஆராய்ச்சி மையம்) 03.06.2019 அன்று ஒப்பந்தம்.

♣ பயிற்சி, விலங்குகள் பராமரிப்பு மற்றும் கல்வி ஆராய்ச்சி ஆகியவற்றில் மூன்றாண்டுகள் செயல்பட, செகந்தராபாத்தில் உள்ள ஜிவிகே அவசர மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்துடன் 25.06.2019 அன்று ஒப்பந்தம்.

♣ கல்வி, ஆராய்ச்சி மற்றும் பரிமாற்ற ஆய்வில் ஒருங்கிணைந்து ஐந்தாண்டுகள் செயல்படுவதற்கெனப் புனேவில் உள்ள பெய்ஃப் (BAIF) அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்துடன் 08.07.2019 அன்று ஒப்பந்தம்.

2020 மார்ச் 17]

- ♣ 11.07.2019 - மாணவர்களுக்கான பயிற்சி / முதுநிலை பட்ட ஆராய்ச்சி மூன்றாண்டுகளுக்கு மேற்கொள்ள கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்துடன் ஒப்பந்தம்.
- ♣ 06.01.2020 - இராணுவத்தில் பணியாற்றும் கால்நடை மருத்துவர்களுக்குப் பயிற்சி அளிக்கவும், இராணுவ கால்நடை மருத்துவ மையம் மற்றும் கல்லூரிகளில் உள்ள நாய் இனப்பெருக்க மையம் மற்றும் குதிரை இனப்பெருக்க நிறுவனங்களை இப்பல்கலைக்கழக மாணவர்கள் பார்வையிட அனுமதிக்க வழிவகை செய்யும் நோக்குடனும் புதுதில்லியில் உள்ள இராணுவக் கால்நடை மருத்துவப் பணிகள் துறையுடன் ஐந்தாண்டுகளுக்கு ஒப்பந்தம்.

20.13 பன்னாட்டு ஒத்துழைப்பு

மாண்புமிகு தமிழகக் கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் திரு. ஏ. ஞானசேகரன், இ.ஆ.ப., இயக்குநர், கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப்பணிகள் துறை, தமிழக அரசு மற்றும் முனைவர் சி. பாலச்சந்திரன், துணைவேந்தர், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் ஆகியோர் இடம்பெற்ற குழுவினர் 06.09.2019 முதல் 15.09.2019 வரை ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்தில் தேர்வு செய்யப்பட்ட கல்வி நிறுவனங்களைப் பார்வையிட்டார்கள்.

ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்துக் கல்வி நிலையங்களில் இப்பல்கலைக்கழகத்தில் செயல்படுத்தப்படும் கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கப் பணிகளை எடுத்துக் கூறுதல்; அக்கல்வி நிலையங்களுடன் ஆசிரியர், அறிவியலாளர் மற்றும் மாணவர் பரிமாற்றம் மற்றும் கூட்டிணைவு ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல்; கால்நடை மருத்துவ அறிவியல் புலங்களில் இருதரப்பு ஆய்வுக் களங்களை அடையாளங்காணுதல்; ஆஸ்திரேலியா, நியூசிலாந்து மற்றும் இந்தியாவில் நீடித்த கால்நடை வளர்ப்பிற்குக் கலப்புப் பண்ணை முறைகளை மேற்கொள்ளுதல் மற்றும் பருவநிலை மாற்றங்களை எதிர்கொண்டு கால்நடை நலமேம்பாட்டிற்குப் புதிய வழிமுறைகளை அடையாளம் காணுதல் ஆகியவை இக்குழுவினரின் முதன்மையான நோக்கங்கள் ஆகும்.

2019-20 ஆம் ஆண்டில் கீழ்க்குறிப்பிட்டுள்ள பல்கலைக்கழகங்களில் இருந்து வந்த மாணவர்களுக்கு இப்பல்கலைக்கழகத்தின் கால்நடை மருத்துவ சிகிச்சையியல் வளாகங்களில் சிகிச்சையியல் குறித்த புறநிலையப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன.

- ♣ 19.06.2019 முதல் 21.07.2019 வரை - ஒக்லஹாமா மாகாணப் பல்கலைக்கழகத்தில் இருந்து ஆறு மாணவர்கள்
- ♣ 19.06.2019 - 19.07.2019 வரை: வங்காளதேசத்தின் சிட்டகாங் கால்நடை மருத்துவ மற்றும் விலங்கின அறிவியல் பல்கலைக்கழகத்தின் 59 மாணவர்கள்
- ♣ 11.08.2019 முதல் 07.09.2019 வரை: வாஷிங்டன் மாகாணப் பல்கலைக்கழகத்தில் இருந்து நான்கு மாணவர்கள்

20.14 2020-21 ஆம் ஆண்டிற்கான முன்னுரிமைகள்

- ♣ தொழிலகங்களின் தேவையறிந்து ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல் மற்றும் புதிய துவக்கநிலை நிறுவனங்களை ஊக்குவித்தலுக்கென தொழிலகம்-பல்கலைக்கழகம் இணைந்த ஆராய்ச்சிக் கூட்டமைப்பினை நிறுவுதல்.
- ♣ கால்நடைத் துறையில் துவக்கநிலை நிறுவனங்களை ஊக்குவித்தல்.
- ♣ ஊட்டச்சத்துமூலம் கால்நடைகளின் உற்பத்தித் திறனைப் பெருக்குதல்.
- ♣ தமிழகத்தில் கறவை மாடுகள் வளர்ப்போர்களிடையே தனுவாஸ் கிராண்ட் எனும் ஊட்டச்சத்தினைப் பிரபலப்படுத்திப் பால் உற்பத்தியைப் பெருக்குதல் மற்றும் மீதேன் உற்பத்தியைக் குறைத்தல்.
- ♣ தமிழ்நாட்டின் கால்நடை மற்றும் கோழியினங்களைப் பாதுகாத்தல்.
- ♣ கால்நடை இனங்களை மேம்படுத்தவும், கால்நடை வளர்ப்போரின் வருவாயை அதிகரிக்கவும், மரபியல் திறன் உயர்ந்த கால்நடை மற்றும் கோழியினங்களை நிறுவனத்திலிருந்து களநிலையில் வழங்குதல்.

2020 மார்ச் 17]

- ♣ தீவன வங்கிகளை நிறுவுதல் மற்றும் விவசாயிகளிடையே தீவன உற்பத்தியை ஊக்குவித்தல்.

- ♣ கால்நடைகளுக்கான கொட்டகை மற்றும் இயந்திரமயமாக்கப்பட்ட பண்ணை அமைப்பு முறைகள் ஆகியவற்றில் எல்லை தாண்டிய கால்நடை மேலாண்மை நடைமுறைகளைப் பின்பற்றுதல்.

- ♣ மாணவர் மேம்பாடு, தொற்றுநோய்க் கட்டுப்பாடு மற்றும் உணவுப் பாதுகாப்பினை உறுதி செய்யும்பொருட்டு சர்வதேச நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுதல்.

- ♣ உலகின் அனைத்து உயிரினங்களின் பாதுகாப்பினை உறுதி செய்வதற்கென 'ஒரே சுகாதார அணுகுமுறை' யினை ஊக்குவித்தல்.

- ♣ வேலையற்ற இளைஞர்கள் மற்றும் ஊரகப் பெண்களுக்குக் கால்நடைப் பராமரிப்பு நடவடிக்கைகளில் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளித்தல்.

- ♣ சிறந்த மேலாண்மை முறைகள் மற்றும் பயனர் செயலிகள்மூலம் மின் ஆளுமையினை மேம்படுத்துதல்.

- ♣ கால்நடை மருத்துவர்களுக்குத் திறன் மேம்பாட்டுத் திட்டங்கள்.


- ♣ கால்நடைகளில் காலநிலை மாற்றத்தால் ஏற்படும் அயர்ச்சியைப் போக்கும் வழிமுறைகள் / தொழில்நுட்பங்களை உருவாக்குதல்.

- ♣ பாலில் பூஞ்சை நச்சின் பாதிப்பினைத் தணிக்க நிலையான செயலாக்க நடைமுறையினை உருவாக்குதல்.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், கால்நடை மருத்துவ அறிவியல் புலத்தில் நவீனக் கல்வி முறையைப் புகுத்தி ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கப் பணிகளை மேற்கொள்வதன்மூலம் நாட்டின் கால்நடை, கோழி மற்றும் உணவு அறிவியல் துறைகளின் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கின்றது.

[2020 மார்ச் 17

பல்கலைக்கழகத்தின் மையங்கள்



2020 மார்ச் 17]

21. துறையின் வருங்கால முனைப்புகள்

கால்நடை பராமரிப்பானது கலாச்சார ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் சமூகத்தோடு ஒன்றிணைந்து விளங்கும் கிராமப்புற பொருளாதாரத்தில் முக்கிய பங்கை ஆற்றுகிறது. கால்நடைப் பராமரிப்பு உணவுப்புரதத்தை வழங்கி, கிராமப்புற ஏழைகளின் வாழ்வாதாரத்தை உறுதி செய்து அவர்களுக்கு இழுவை சக்தியையும் வழங்குகிறது.

வேளாண் உற்பத்தியில் இழப்பு ஏற்படும்போது காப்பீடாக விளங்கி, வாழ்வாதார அதிர்ச்சியிலிருந்து மீள்வதற்கு ஒரு பொறியமைப்பாக கால்நடைகளே விளங்குகின்றன. கிராமப்புற பெண்களே கால்நடை வளர்ப்பில் முக்கிய பங்கை ஆற்றுகின்றனர். கால்நடைகளுக்கு தீவனம் அளித்தல், இனவிருத்தி, மேலாண்மை மற்றும் சுகாதாரப் பராமரிப்பு போன்ற பெரும்பாலான பணிகளை மேற்கொள்வதற்கு அவர்களே பொறுப்பேற்கின்றனர். கால்நடைப் பொருட்களுக்கான தேவை அதிகரித்து வருவது பெண்களைத் தொழில்முனைவோராக்கும் வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருகிறது.

இந்தத் துறையானது கடந்த பல பத்தாண்டுகளில் பால், முட்டை மற்றும் இறைச்சி உற்பத்திகளில் ஒவ்வோர் ஆண்டும் தன்னைத்தானே மேம்படுத்தி வருகிறது. இருப்பினும், பசுந்தீவன வளர்ப்பிற்கான நிலப்பரப்பு குறைவாக இருப்பது கால்நடைகளின் எண்ணிக்கையை பாதிக்கும் ஒரு முக்கிய அம்சமாக விளங்குகிறது. இதனால்தான் மிகப்பெரும் அளவிலான உற்பத்தி அதிகரிப்பை எட்ட முடிவதில்லை.

கால்நடை சார்ந்த பொருட்களைப் பதப்படுத்துதல் மற்றும் சந்தைப் படுத்துதலை மேம்படுத்துதல், உள்நாட்டு இனங்களைப் பாதுகாத்தல், சுகாதார பாதுகாப்பு நிலைய அமைப்புகளில் மேம்பாடு, கணினிமயமாக்கல் ஆகியவை இந்தத் துறையில் முன்னேற்றம் காண்பதற்கு அடையாளம் காணப்பட்டுள்ள பகுதிகளாகும்.

மாநிலத்தில் உள்ள பெரும்பாலான பகுதிகள் தங்கள் வாழ்வாதாரத்திற்காக இந்தத் தொழிலையே நம்பியுள்ளதால், 2022 ஆம் ஆண்டில் விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்கும் இலக்கை எட்டுவதற்காக, கால்நடைகள் வாயிலாக விவசாயிகளின் வருவாயை அதிகரிப்பது மிகவும் அவசியம் ஆகும்.

21.1 கால்நடைத் தொழிலில் உள்ள சவால்கள்

மனிதர்கள் வளர்ச்சி மற்றும் விலங்கினங்கள் வளர்ச்சி ஆகிய அனைத்திற்கும் ஒரே பொதுவான வளமாக நிலமே விளங்குகிறது.

[2020 மார்ச் 17

உணவுக்காக மனிதர்கள் மற்றும் விலங்குகளுக்கு இடையே தொடர்ந்து அதிகரித்து வரும் போட்டியே கால்நடை வளர்ப்பில் ஒரு மிக முக்கிய சவாலாக விளங்குகிறது.

கால்நடை வளர்ப்பில், தண்ணீர் போன்ற இயற்கை வளங்களை முறையின்றியும், அறிவியல் சாரா முறையிலும் பயன்படுத்துவதால், மெய்நிகர் தண்ணீரின் பயன்பாடு ஏற்றுமதி சந்தையில் அதிகரித்துள்ளது.

கால்நடைப் பராமரிப்பு தொடர்பான விரிவாக்க சேவைகள் மிகவும் குறைவாகவே உள்ளது. இதைச் சரி செய்வதற்காக அடிப்படையிலான பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை இத்துறை நடத்தி வருகிறது. கால்நடைகளில் ஊட்டச்சத்து குறைபாடு, மடிவீக்கம் மற்றும் இனவிருத்தி குறைபாடு போன்ற பிரச்சினைகள் இதற்காக நடத்தப்படும் முகாம்களில் சரிசெய்யப்படுகின்றன.

உள்நாட்டு மரபின கால்நடைகளின் குறைந்த உற்பத்தித் திறன் மற்றொரு முக்கிய சிக்கல் ஆகும். மேய்ச்சல் நிலங்கள் அழிப்பு, அதிகரிக்கும் காலநிலை மாற்றங்கள், குறைந்த பருவகால மழைப்பொழிவு ஆகியவையும் கூட கால்நடை வளர்ப்பை பெரிதும் பாதிக்கின்றன.

தொழில்நுட்ப பின்தங்கிய நிலை, நிதி இடர்ப்பாடுகள் மற்றும் மருத்துவ சேவைகள் குறைவு ஆகியவையும் இந்தத் தொழிலின் முன்னேற்றத்திற்கு இடையூறாக அமைந்துள்ள சில பிரச்சினைகள் ஆகும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

21.2 வாய்ப்புகள்

கால்நடை சந்தையில் உள்ள முக்கியமான பிரிவுகள், இதுவரையிலும் உள்ள கால்நடை சந்தைகளின் செயல்பாடுகள் மற்றும் எதிர்காலத்தில் அவற்றின் செயல்திறன் ஆகியவையும் மதிப்பிடப்படும்.

கால்நடைப் பராமரிப்பு தொழில் சங்கிலியின் பல்வேறு நிலைகள் மற்றும் அவற்றின் முக்கிய காரணிகள், போட்டி நிலை மற்றும் சவால்களும்கூட ஆய்வு செய்யப்படும். இதன்வாயிலாக, இந்தத் தொழிலின் சில பிரிவுகளில் வணிகமயமாக்குதலுக்கு உள்ள

வாய்ப்புகள் பற்றிய விவரங்கள் கிடைப்பதோடு, இது அதிவேக வளர்ச்சிக்கும் வழி ஏற்படுத்திக் கொடுக்கும்.

பதப்படுத்தும் தொழிலில் தொழில்முனைவோருக்கு ஏராளமான வாய்ப்புகள் உள்ளன. மாநில அரசின் பல்வேறு முனைப்புகள் காரணமாக பால் உற்பத்தியானது ஒவ்வோர் ஆண்டும் அதிகரித்து வருகிறது.

பால் பொருட்களின் நுகர்வு அதிகரிப்பு பால் பதப்படுத்துதலுக்கான வாய்ப்புகளை அதிகரித்து வழங்குகிறது. வளர்ந்து வரும் உணவு பதப்படுத்துதல் தொழில் வளர்ச்சிக்கு அதிக வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளது. இந்த வாய்ப்புகள் தொழில்முனைவோருக்கு புதிய தொழில்களைத் தொடங்கவும், நடப்பில் உள்ள தொழில்களை அபிவிருத்தி செய்யவும் வழங்குகின்றன.

வளர்ந்த நாடுகளுடன் ஒப்பிடும்போது, இந்தியாவில் தனிநபர் இறைச்சி நுகர்வு மிகவும் குறைவாகும். இதிலிருந்து இந்தச் சந்தையில் பங்களிக்க மேலும் குறிப்பிடத்தக்க வாய்ப்புகள் உருவாவதை அறியலாம்.

உணவுப் பழக்கத்தில் ஏற்பட்டுள்ள மாறுபாடுகளின் காரணமாக, வரும் ஆண்டுகளில் இறைச்சி நுகர்வு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஒட்டுமொத்த இறைச்சித் தொழிலுமே பதப்படுத்தப்பட்ட இறைச்சியின் பங்களிப்பு மிகவும் குறைவு என்றபோதிலும், எதிர்வரும் ஆண்டுகளில் இந்தத் தொழில் மிக வேகமாக வளர்வதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளன என்பதை இது உணர்த்துகிறது.

21.3 திட்டமிடப்பட்டுள்ள கொள்கை முனைப்புகள்

இத்துறை வழங்கும் சேவைகளை நவீனப்படுத்துதல் மற்றும் பரவலாக்குதல்மூலம் கால்நடைத் தொழிலின் வளர்ச்சி மற்றும் நீடித்த தன்மை உறுதி செய்யப்படுகிறது. உணவு பதனிடுதல் மற்றும் மதிப்பு கூட்டுதல் போன்ற உத்திகளின்மூலம் கால்நடைப் பராமரிப்புத் தொழிலை வர்த்தக ரீதியில் ஒழுங்குபடுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும். பசுந்தீவனத் தேவைக்கும், உற்பத்திக்கும் உள்ள இடைவெளியானது, கால்நடைகளின் உற்பத்தித் திறனில் தாக்கத்தை ஏற்படுத்தும் முக்கிய காரணியாக உள்ளது. எனவே, கால்நடை

[2020 மார்ச் 17

வளர்ப்புத் தொழிலில் தீவன உற்பத்தியை முன்னிலைப்படுத்தி ஒருங்கிணைக்கும் நடவடிக்கையை இத்துறை மேற்கொள்ளும்.

கீழ்க்கண்ட முனைப்புகளின்மூலம் இத்துறையின் உள்ளார்ந்த பலவீனங்களையும் பன்முகத் தன்மைகொண்ட அணுகுமுறை தொடரும்:

a. வாழ்வாதாரம் அற்ற வறிய கிராமப்புற மகளிரை அடையாளப்படுத்தி, அவர்களுக்கு வருமானம் ஈட்டும் கால்நடைச் செல்வங்களை வழங்குவதன்மூலம் அவர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்த உறுதி செய்தல்.

b. விவசாயிகள் தங்கள் சொந்த நிலங்களில் பசுந்தீவன அபிவிருத்திப் பணிகளை முழுமையாக மேற்கொள்ளவும், துறையின் பசுந்தீவனப் பண்ணைகள்மூலம் அல்லது அரசு மற்றும் தனியார் நிறுவன பங்களிப்புடன்கூடிய சான்றளிக்கப்பட்ட தீவன விதை உற்பத்தியை மேற்கொள்ளவும் தொடர்ந்து ஊக்குவித்தல்.

c. அனைத்து மாவட்டங்களிலும் கோழி வளர்ப்புத் தொழிலை பரவலாக்க, சிறிய கோழிப் பண்ணைகள் மற்றும் புழக்கடை கோழி வளர்ப்பினை தொடங்குவதன்மூலம் இத்தொழிலை ஊட்டச்சத்தை உறுதி செய்யும் தொழிலாக நிலைநிறுத்துதல்.

d. கடைக்கோடி கிராமங்களிலும் கால்நடை மருத்துவ சேவைகள் மற்றும் இனவிருத்தி சேவைகளைக் கொண்டு சேர்த்தல்.

e. கால்நடைகளின் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் பொருட்டு புதிய மரபுசார் தொழில்நுட்பங்களான கருமாற்றம், சோதனைக் குழாய் கருத்தரித்தல் முறைகள், பாலினம் வாரியாக பிரிக்கப்பட்ட விந்தணு தொழில்நுட்பம் ஆகியன மேற்கொள்ளப்படும்.

f. நல் உற்பத்தித் திறன் கொண்ட தடுப்பூசி மருந்து உற்பத்தி ஆய்வுக் கூடங்களை நிறுவி, உலகத்தரத்தில் ஊநீர் பொருட்கள் உற்பத்தியை மேற்கொள்ளுதல்

g. உலகச் சந்தையில் நமது கால்நடைப் பொருட்களை சந்தைப்படுத்தும் நோக்கத்துடன், கால்நடைப் பொருட்களின்

2020 மார்ச் 17]

உற்பத்தித் தரத்தை உலகத்தரத்திற்கு உயர்த்தும் வகையில் விவசாயிகளை ஊக்குவித்தல். கால்நடைப் பொருட்களை உலகச் சந்தையில் ஏற்றுமதி செய்வதற்கு மிகப் பெரிய அளவிலான வாய்ப்பு உள்ளது. இது விவசாயிகள் தங்கள் வருமானத்தை அதிகரித்துக் கொள்ள வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருகிறது.

கீழ்க்கண்ட முனைப்புகளை முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ளது:

1. வறண்ட நிலப்பகுதிகளில் பராமரிக்கப்படும் கறவைப் பசுக்களின் நுண் ஊட்டச்சத்துத் தேவைகளைப் பூர்த்தி செய்தும், அவற்றின் மேலாண்மை முறைகளை மேம்படுத்தியும் உற்பத்தித் திறனை அதிகரிக்கச் செய்ய முடியும். அத்துடன் இந்தப் பசுக்களின் மடி சுகாதார மேலாண்மை மற்றும் இனப்பெருக்க மேலாண்மை மூலம் பொருளாதார இழப்பை ஏற்படுத்தும் நோய்களான மடிவீக்கம் மற்றும் மலட்டுத் தன்மை தடுக்கப்படுகிறது.

2. தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்துடன் இணைந்து கால்நடை நோய்களை ஏற்படுத்தும் காரணிகளைக் கண்டறிய நோய் கடுங்கண்காணிப்புத் திட்டம் மேற்கொள்ளப்படும். இது நோய் கட்டுப்பாட்டுத் திட்டங்களை சிறப்பாக திட்டமிட்டு செயல்படுத்துவதற்கு வழிவகுக்கும்.

3. மரபின முன்னேற்றம்மூலம் இறைச்சி உற்பத்தி செய்யும் கால்நடைகளான செம்மறியாடுகள், வெள்ளாடுகள் மற்றும் பன்றிகளின் நுண்ஊட்டச்சத்து தேவை மற்றும் மேலாண்மை நடவடிக்கைகள் வாயிலாக அவற்றின் மந்தை சுகாதாரத்தை மேம்படுத்துதல்.

4. நாட்டின கால்நடை மற்றும் கோழியினங்களில் உயர் மரபுப் பண்புகளை அடையாளம் கண்டு insitu மற்றும் exsitu முறைகளில் நாட்டுக்கோழி வளர்ப்பு மற்றும் உள்நாட்டின கால்நடைகளைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதலில் இத்துறை அதிக கவனத்தைச் செலுத்தும்.

5. கால்நடை வளர்ப்போர் பயன்பெற ஏதுவாக தமிழ்நாடு கால்நடை மற்றும் மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின்

[2020 மார்ச் 17

ஆராய்ச்சி மூலமாகக் கண்டறியப்படும் தொழில்நுட்பங்களை பரப்புவதற்கு பொருத்தமான வாய்ப்புகளை இத்துறை ஏற்படுத்தித் தரும். கால்நடைகள் மற்றும் கோழியினங்களின் மேம்பாட்டிற்காக தமிழ்நாடு கால்நடை மற்றும் மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் உற்பத்திப் பொருட்களைத் துறையே நேரடியாகக் கொள்முதல் செய்ய முனையும்.

6. இனவிருத்திக் கொள்கை, தடுப்பூசிப் பணி திட்டமிடல், கால்நடை கொள்முதல் கொள்கை, மருந்து கொள்முதல் கொள்கை, உயிர் மருந்துகள் உற்பத்தி ஆய்வுக் கூடங்கள், நோய் கண்டறிதல் மற்றும் கட்டுப்படுத்துதல், தீவன சான்றளிப்பு போன்ற கொள்கை முனைப்புகளில் தமிழ்நாடு கால்நடை மருத்துவம் மற்றும் அறிவியல் பல்கலைக்கழகத்தின் ஆலோசனை மற்றும் கருத்துக்களின் அடிப்படையிலேயே முடிவுகள் எடுக்கப்படுகின்றன.

7. அதிக அளவிலான செம்மறியாடுகள் மற்றும் வெள்ளாடுகள் உள்ளிட்ட அனைத்து கால்நடைகளையும் காப்பீட்டின்கீழ் கொண்டுவர நடவடிக்கைகள் முனைந்து மேற்கொள்ளப்படும்.

8. கால்நடைகள் மனிதாபிமான முறையில் நடத்தப்படுவதை உறுதி செய்வதற்காக, தமிழ்நாடு கால்நடை நல வாரியம் பாடுபடும்.

9. கால்நடைகளின் சுகாதார மேலாண்மைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும். இனவிருத்தி, தீவனம் மற்றும் கால்நடைகளின் பொது மேலாண்மை ஆகியவற்றின் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கிய தொகுப்பு அணுகுமுறையானது சிறிய உற்பத்தியாளர்களின் சந்தைப்படுத்தும் திறனையும், அதிக வருமானத்தையும் உறுதி செய்கின்றன.

10. இலக்கு நிர்ணயத்துடன்கூடிய கால்நடை சேவைகள், சந்தைகள் மற்றும் மதிப்புச் சங்கிலிகள், தீவனம் மற்றும் பசுந்தீவன வளங்கள், ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சித் திட்டங்கள் ஆகியவற்றை மேம்படுத்தி, இத்துறையின் பொருளாதார ஆற்றலை முழுமையாக அறுவடை செய்வதே இத்துறையின் முக்கியமான வருங்கால முனைப்புகள் ஆகும்.

2020 மார்ச் 17]

11. இத்துறையால், கோழி மற்றும் இறைச்சி உற்பத்தி கால்நடைகள், விவசாயிகள் பயன்பெறும் வகையில் சமமான வாய்ப்புகளை உள்ளடங்கிய விவசாயி உற்பத்தியாளர் அமைப்பு ஏற்படுத்தப்படும். முதல் கட்டமாக கிராமப்புற அளவில் விவசாயி ஆர்வ குழுக்கள் (FIG) ஏற்படுத்தப்படும், இரண்டாம் கட்டமாக விவசாய ஆர்வ குழுக்கள் (FPG) ஒன்றிணைக்கப்பட்டு, விவசாயி உற்பத்தி குழுக்கள் ஏற்படுத்தப்படும். தலைமை நிலையில் பல்வேறு விவசாயி உற்பத்தி குழுக்கள் ஒன்றினைக்கப்பட்டு விவசாயி உற்பத்தி நிறுவனங்கள் (FPC/FPO) ஏற்படுத்தப்படும். இவ்வாறு ஒருமித்த முறையில் இயங்குவதால் உள்ளீடுகள் மொத்த விலைக்கே வாங்கப்பட்டு உள்ளீட்டு செலவினம் வெகுவாகக் குறையும்.

12. கால்நடை பராமரிப்பு முறைகள் ஒருமித்த முறையில் கையாளப்படுவதால் உற்பத்தி குறியீடுகள் நிலை நிறுத்தப்பட்டு உற்பத்தியும் உயர்கிறது. ஒருமித்த சந்தைப்படுத்தலின் மூலமாக உற்பத்தி பொருட்கள் மதிப்பு கூட்டப்பட்டும், நுகர்வோருக்கு இடைத்தரகர் இல்லாமல் நேரடியாக கொண்டு செல்லப்படுவதால் பொருட்களுக்கு சிறந்த விலை கிடைப்பதும் ஏதுவாகிறது.

13. பருவகால மாற்றங்கள் கலப்பின கால்நடைகளில் உற்பத்தித் திறன் குறைத்து மற்றும் பொருளாதார இழப்பையும் ஏற்படுத்தக் கூடியது. அதிக வெப்பமும், குறைந்த தீவன உட்கொள் அளவும், குறைவான பால் உற்பத்தி, வெப்ப அயற்சி, காலதாமதமாக பருவத்திற்கு வருவது, குறைந்த சினைபிடிப்பு, அதிக அளவில் நோய்வாய்ப்படுதல் பிற உண்ணிகளால் ஏற்படும் நோய்கள் போன்றவற்றை ஏற்படுத்தக் கூடியது. ஆராய்ச்சி முடிவுகளின் அடிப்படையில் நோக்கும்போது மாறுபாடு உடைய காலநிலை / சுற்றுப்புற வெப்பநிலை போன்றவை நாட்டின பசுக்களைவிட கலப்பின பசுக்களில் அதிக பாதிப்பை ஏற்படுத்துகிறது. இதுபோன்ற சூழ்நிலையில், கால்நடை பராமரிப்புத் துறையானது, விவசாயிகளுக்கு கீழ்க்கண்ட முறைகளை கையாண்டு இதுபோன்ற இடர்பாடுகளைக் களைய முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

14. கால்நடை வளர்ப்பு துறைக்கான ஏற்றுமதிக் கொள்கை, கால்நடை வளர்ப்புத் தயாரிப்புகளுக்காக வேளாண் சந்தைப்படுத்தல் துறை, APEDA, TANUVAS போன்ற பிற அரசு நிறுவனங்களுடன் கலந்தாலோசித்து உருவாக்கப்படும்.

15. விவசாயிகளை பசுந்தீவனப் பயிர்களான பயறு வகை பயிர்களை வளர்க்க ஊக்குவித்தல் மற்றும் ஒன்றுக்கு மேற்பட்ட தீவனப் பயிர்களைப் பயிரிடுவது போன்ற நடவடிக்கைகள்மூலம் வறட்சி கால மேலாண்மைக்கும், தீவன பற்றாக்குறை காலங்களில் நேர்செய்திடவும், நோய் எதிர்ப்பு மிகுந்த கால்நடைகளை உருவாக்கும் நோக்கோடு, மரபியல் கூர்கள் தொடர்பாக ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல், கால்நடை நோய் கடுங்கண்காணிப்பு மற்றும் நோய்க்கிளர்ச்சி முன் அறிவிப்பு மற்றும் கிராம அளவில் பால்பண்ணைத் தொழிலை ஊக்குவிக்க கிராமப்புற பெண்களுக்கு கால்நடை பராமரிப்பு தொடர்பு நோய் மற்றும் தீவன மேலாண்மைமூலம் வீட்டளவில் அதிக அளவு பால் உற்பத்தி போன்றவற்றை மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

16. வேளாண்மை சந்தைப்படுத்துதல் துறை, வேளாண் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி வளர்ச்சி ஆணையம் மற்றும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் உள்ளிட்ட இதர அரசு முகமைகளுடன் இணைந்து கால்நடை உற்பத்தி பொருட்களுக்காக ஏற்றுமதி கொள்கை வகுக்கப்படும். இறைச்சிக்கான மதிப்பு சங்கிலிகளை ஏற்படுத்துதல், ஊரக இறைச்சிக் கூடங்களை நிறுவுதல், இறைச்சியைப் பதப்படுத்துவதற்கு குளிர்பதன வசதிகளை ஏற்படுத்துதல், இறைச்சி / முட்டை ஆகியவற்றை குளிர்பதன வசதியுடன் எடுத்துச் செல்வதற்கு குறைந்த செலவு வாகனங்களை ஏற்பாடு செய்தல் போன்ற முதலீடுகள் ஊக்குவிக்கப்படும்.

17. இத்துறையின் மனித வள மேம்பாடு ஒரு முக்கியமான அம்சமாகும். தொடர் கால்நடை மருத்துவ கல்வி அல்லாமல், இத்துறையானது, கால்நடை வர்த்தக பொருளாதாரம், கால்நடைப் பொருட்கள் சந்தையைப் புரிந்து கொள்ளுதல்,

2020 மார்ச் 17]

வர்த்தகம் போன்ற அம்சங்களில் போதிய அனுபவம் பெற்று கால்நடை வணிக ஆலோசகர்களாக செயல்படுவதற்கு கால்நடை மருத்துவர்களை தயார் செய்யும். இந்த அனுபவத்தின்மூலம் விவசாயிகள், தொழில்முனைவோர் பயனடைவர். கிராமப்புற கால்நடை வளர்ப்போர்/ தொழில் முனைவோரின் திறன்களை வளர்ப்பதில் கால்நடை பராமரிப்புத் துறை முக்கியமாக கவனம் செலுத்தும். கால்நடை வளர்ப்பில் ஆர்வமுள்ள படித்த தொழில்முனைவோருக்கு கால்நடை வணிக மேலாண்மை குறித்த தொழில்முனைவோர் பயிற்சி வழங்கப்படும். இனவிருத்தி, கால்நடை தீவன மேலாண்மை ஆகியவற்றில் சிறந்த நடைமுறைகள், கால்நடைகளைத் தாக்கும் கொடிய நோய்கள் மற்றும் அவற்றைக் கட்டுப்படுத்தும் முறைகள், உயிர் பாதுகாப்பு முறைகள், பேரிடர் மேலாண்மை முறைகள், சுத்தமான பால் தயாரித்தல் வழிமுறைகள், துப்புரவு மற்றும் சுகாதாரம், நவீன மேலாண்மை உத்திகள் ஆகியவை கால்நடை வளர்ப்போருக்கு வழங்கப்படும்.

18. பொதி சுமக்கும் கால்நடைகளை வெட்டுதல், இயற்கை மேய்ச்சல் நிலங்கள் மற்றும் புல்வெளிகளுக்கு புத்துயிர் ஊட்டுதல், கால்நடை வளர்ப்பு தொடர்பான அவகாசங்களைத் தொடர சரியான கடன் வசதிகளை உறுதி செய்தல், கால்நடை விரிவாக்க சேவைகளை உறுதி செய்தல், கரிம கால்நடை வளர்ப்பில் ஆராய்ச்சியை ஊக்குவித்தல் ஆகியவை மையப்பகுதிகளாக அடையாளம் காணப்படுகின்றன.

22. நிதி - 2020-21 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு

2020-21 ஆம் நிதி ஆண்டுக்கு ரூ.1,678.2697 கோடியை அரசு ஒதுக்கியுள்ளது. அதில் ரூ.1,450.7885 கோடி வருவாய் செலவினமாக இருக்கும் என்றும், ரூ.227.2312 கோடி மூலதன செலவினமாக இருக்கும் என்றும், கடன் ரூ.0.25 கோடியாக இருக்கும்.

23. முடிவுரை

கால்நடைத் துறையானது மாநிலத்தின் பொருளாதாரத்திற்கும் சமூக-பொருளாதார வளர்ச்சிக்கும் ஊக்கம் அளிக்கிறது. பால், கோழி மற்றும் பிற பொருட்களின் உற்பத்தி, மதிப்பு கூட்டுதல் மற்றும்

[2020 மார்ச் 17

ஏற்றுமதி ஆகியவற்றில் கால்நடைத் துறை சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இருப்பினும், நாம் நம்முடைய கால்நடை பொருட்களுடன் உலகளாவிய சந்தையை அணுகும்போது சில சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்கும் இலக்கினைக் கருத்தில் கொண்டு, ஏழை மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக வருவாய் ஏதுமில்லாத ஏழைப் பெண்களுக்கு வருவாய் ஈட்டித்தரும் சொத்துக்களை வழங்கியும், விவசாயிகளின் சொந்த நிலங்களில் தீவன உற்பத்தியைப் பெருக்குவதற்காக அவர்களுக்கு உள்ளீடுகள் வழங்கி தீவனப் பயிர்களை பணப்பயிர்களாக ஆக்கியும், கிராம நிலையில் தொழில்முனைவோரை உருவாக்கி ஊக்கப்படுத்துவதற்காக, கிராம நிலையில் உள்ள கால்நடை நிலையங்களை பல்தொழில், பன்னோக்கு ஆதார வளாகங்களாக மாற்றியும், பொருத்தமான நோய் கட்டுப்பாட்டுத் திட்டங்கள் வாயிலாக கால்நடை சுகாதாரத்தை உறுதி செய்தும், திறன் மேம்பாட்டை உள்ளடக்கிய விரிவாக்கத் திட்டங்கள் மூலமாகவும், இனவிருத்தியை மேம்படுத்தியும், சிறு பிராணிகள் மேம்பாட்டுத் திட்டங்கள் போன்றவற்றின் வாயிலாகவும், இவ்வரசு இந்த முதன்மைத் துறைக்கு சிறப்பு முக்கியத்துவம் அளித்து வருகிறது.

உணவு பதப்படுத்தும் தொழிலுக்கு கால்நடைத் தொழிலின் வளர்ச்சி மிகவும் முக்கியமானது என்பதால், தமிழ்நாடு அரசு, உணவு பதப்படுத்தும் தொழிலை முன்னுரிமை தொழிலாகவும், நான்கு முனைப்புத் தொழில்களில் ஒன்றாகவும் கருதுகிறது.

மூலப் பொருட்கள் அதிகரித்தல் காரணமாக, புதிய தொழில்நுட்பங்கள், கண்டுபிடிப்புகள் மற்றும் இதர மதிப்பு கூட்டும் தொழில்நுட்பங்கள் வாயிலாக உணவு பதப்படுத்துதல், உணவு சில்லறை விற்பனை மற்றும் விநியோக சங்கிலி அமைப்புகளுடன் இலாபகரமான கூட்டு முயற்சிகளை ஏற்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் ஏற்பட்டுள்ளன.

கால்நடை பராமரிப்பு மற்றும் உணவு பதப்படுத்துதல் ஆகியவற்றுக்கு இடையேயான ஒத்திசைவு, உணவு பதப்படுத்தும் சங்கிலியில் முக்கிய பங்காற்றி, கிராமப்புற விவசாயிகளுக்கு அதிக வாய்ப்புகளை ஏற்படுத்தி வருவது தெளிவாக உணர முடிகிறது.


மனித மூலதனம், தொழில்முனைவோருக்கான சாதகமான சூழல், வலுவான பெரும-குறிகாட்டிகள் மற்றும் மூலப் பொருட்களுக்கான

உற்பத்தித் தளம் ஆகியவை தமிழ்நாட்டில் தங்குதடையின்றி கிடைக்கின்றன. பண்ணைகளில் தரமான கால்நடை பொருட்களை உற்பத்தி செய்வதன் வாயிலாக, உணவு பதப்படுத்தும் துறைகளில் ஏற்றுமதிக்கான வாய்ப்புகளை பயன்படுத்திக்கொள்ள முடியும்.


தரமான பொருட்களின் உற்பத்தியை உறுதி செய்வதற்காக, கால்நடை பொருட்களின் வர்த்தகத்திற்குத் தடையாக உள்ள இரசாயன மற்றும் நுண்ணுயிர் எதிர்ப்பான் மிச்சங்கள் ஆகியவற்றை நீக்கி அவற்றை தரமான பொருட்களாக பண்ணை அளவிலேயே தயாரிக்க முடியும். அனைத்து பங்குதாரர்களுக்கும் இவை தொடர்பான திறன் மற்றும் கல்வியை விவசாயிகளுக்கு வழங்குவதன் வாயிலாக பொருளாதார ஆதாயங்கள் கிடைப்பது உறுதி செய்யப்படும்.

[2020 மார்ச் 17

தமிழ்நாட்டில் கால்நடைகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்)




நிதி ஒதுக்கீடு (ரூபாய் கோடியில்)




2020 மார்ச் 17]


சமுதாய அடிப்படையில் விலையில்லா கறவைப் பசுக்கள் வழங்கும் திட்டத்தில் பயனடைந்த பயனாளிகள் எண்ணிக்கை




இனம் வாரியாக விலையில்லா கறவைப் பசுக்கள் வழங்கும் திட்டத்தில் பயனடைந்த பயனாளிகள் எண்ணிக்கை




சமுதாய அடிப்படையில் விலையில்லா வெள்ளாடுகள்/செம்மறியாடுகள் வழங்கும் திட்டத்தில் பயனடைந்த பயனாளிகள் எண்ணிக்கை




இனம் வாரியாக விலையில்லா வெள்ளாடுகள்/செம்மறியாடுகள் வழங்கும் திட்டத்தில் பயனடைந்த பயனாளிகள் எண்ணிக்கை



தீவன அபிவிருத்தி திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ள நிலப்பரப்பு (ஏக்கரில்)




மதிப்பிடப்பட்ட பால் உற்பத்தி (இலட்சம் மெட்ரிக் டன்)




TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2020 மார்ச் 17

மதிப்பிடப்பட்ட முட்டை உற்பத்தி
(இலட்சம் எண்ணிக்கையில்)



மதிப்பிடப்பட்ட இறைச்சி உற்பத்தி
(இலட்சம் கி.கி)



Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai, Chennai-600 002.

©
Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the
Commissioner of Stationery and Printing,
Chennai-600 002.